# ஆதி மார்க்க னீதி மொழி

## ஆண்டு மலர் (2022)

ஆண்டு மலர் (2022)

© AMNA Trust, Chennai

ஆதியே துணை



## மூலமந்நிரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்நோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர நிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்

## மகாசங்ஙல்ப மந்நிரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்நு ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்நு தேவப்பிறப்பிலே பிறந்நு ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம் !



Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே, பரிசுத்த ஆவி தெய்வம் பரம்பொருள் பிரம்மப் பிரகாச மெய்வழிச் சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்துடன், ஆதி மார்க்க னீதி மொழி மின்னணு சஞ்சிகையானது, 2022 ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள ஆதி மார்க்க னீதி அவையின் நிகழ்வுகள் யாவற்றையும் தொகுத்து நினைவு கூரும் வண்ணம் ஆண்டு மலராக மலர்ந்துள்ளது.

தமிழ் கூறும் நல்லுலகில் ஒவ்வொரு மாதமும் விசேஷமான மாதமே. 12 ராசிகளில் முதல் ராசியாகிய மேஷ ராசியில் சூரியன் நுழையும் காலமே சித்திரை மாதம். இதன் அகமிய ரகசியங்கள் யாவும் பொதியப் பெற்ற மலராக மலர்ந்து வருவதே இம்மின்னணு சஞ்சிகை. இதில் உள்ள அவை நிகழ்வுகள், குடும்ப நிகழ்வுகள், நூல் வெளியீடு யாவும் ஒவ்வொரு மனுத் தலைக்கும் வேண்டிய அத்தியா அவசியம் என்பதும், படித்து பயன்பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கமுமே ஆகும்.

ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களாகிய சரவணகுமரன் மற்றும் சிவகாசியைச் சேர்ந்த கணேசன், தாயின் கருவறையில் தான் வாங்கி வந்த வரமாகிய கலைகள், மூச்சு இவற்றின் நிலைகளுடன், **வினைப் போகமே ஒரு தேகம் கண்டாய் வினை தான் தீர்ந்தால் தினைப் போதளவும் நில்லாது கண்டாய்** என பட்டினத்துசுவாமிகள் அருளியுள்ள படி, குறுகிய காலத்திற்குள் மனுவின் கடமை முடித்து அனித்திய ஆக்கை அழிவுடல் விட்டு நித்திய தேகத்தில் குடியேறி அறிவு வடிவாக அனைவர் உள்ளத்திலும் நிறைந்துள்ளதை ஆதி மார்க்க னீதி அவை மக்கள் பிரத்தியட்சமாக அறிவர். அவரவரும் ஒரு நேரத்தில் விட்டுச் செல்லும், அனித்திய ஆக்கையெனும் அழிவுடல் உள்ள போதே பிறவாபேறு பெற்று புண்ணியத்தை விடாது சேர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கான உத்திகளை கூறுவதே இம்மின்னனு சஞ்சிகை.

**புலன்வழி பற்றி யோடிப்**
**போக்கியென் வயதை யெல்லாம்**
**னலன்றர மீட்டித் தந்நென்**
**னாளினை யடியேன் மீண்டும்**
**புலன்வழி யழித்தி டாது**
**புண்ணியம் தனக்கே யீட்டென்**
**றலர்ந்தவாய்த் திகிரி வேந்நே**
**அதிசயம் ஆ௬ தென்னே**



Copyright © AMNA Trust, Chennai

என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள படி, அவர்களின் திருவடி சிறப்பை எடுத்து சொல்லக் கூடிய ஒரு அவையாக, அதன் நிகழ்வுகள் யாவற்றையும் தொகுத்து வழங்கப்பெற்ற ஒரு பொருளாக மலர்ந்து வந்ததுவே இவ் ஆண்டுமலர். இது ஒருவனை பொய்யிலிருந்து மெய்யிற்கும் அறியாமையில் இருந்து அறிவுக்கும் ஆளும் ஆண்டு மலராக திகழ்வது சத்தியமே. எல்லாம் வல்ல பரிசுத்த ஆவி தெய்வம் பரம்பொருள் பிரம்ம பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி வணங்கி, எல்லோரும் இவ் ஆண்டுமலரைப் பார்த்து, படித்து பயன்பெற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

நமஸ்காரம்.

**சாலை ரவி**
**நிறுவனர்,**
**ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

குரு பெருமான் முன்பாக 2022ஆம் ஆண்டு நேர்முகமாகவும், காணொளிக் காட்சியாகவும், நடை பெற்ற மாதாந்திர அவை நிகழ்வுகளும், மற்றும் ஒவ்வொரு தமிழ் மாதத்தின் சிறப்புகளும்:

| **JANUARY-2022: மார்கழி-தை (தனமதி-உண்மதி)** | **19 அவை நிகழ்வுகள் மற்றும் 3 இசை வகுப்புகள்** |
|---|---|
| தை - உண்மதி | |
| | 13.01.2022 - சாலை ஆண்டவர்கள் திரு அவதார திருநாள். போகிப்பண்டிகை. |
| | 14.01.2022 - மெய்வழிச்சாலை கோளரி சாலையர் பொங்கல் திருவிழா.<br>உதித்தெழு உதய சூரியன் தன் உத்தர திசை பயணத்தின் முதல் நாள்.<br>உழவர் திருநாள். |
| | 15.01.2022 - செல்வப் பொங்கல். |
| | தை அமாவாசை - பித்ரு வழிபாடு. |
| | தை கிருத்திகை - முருகப் பெருமான் வழிபாடு. |
| | தைப்பூசம் - காவடி எடுத்து முருகப் பெருமான் வழிபாடு. |
| | வடலூர்- 7 திரைகள் விலக்கி ஜோதி தரிசனம். |
| **FEBRUARY - 2022: தை - மாசி (உண்மதி - உபமதி)** | **10 அவை நிகழ்வுகள் மற்றும் 2 இசை வகுப்புகள்** |
| மாசி - உபமதி | |
| | 12.02.2022 - சாலை ஆண்டவர்கள் கன்னி விராட் தவம் கொண்ட திருநாள் |
| | மகா சிவராத்திரி: ஜீவனாகிய சிவனை அறிவதற்கான இரவுப் பிரகாசம். |
| | மாசிமகம்: பௌர்ணமி மகம் நட்சத்திர, மகாமகம் திருவிழா, கடலாடும் தீர்த்தவாரி திருவிழா: பிறவிப் பிணி தீர்த்து பிறவாமை பெறும் நாள். |
| | சங்கடகர சதுர்த்தி: சங்கடம் தீர்க்கும் விநாயகர் வழிபாடு. |
| | ஹோலி பண்டிகை: நன்மை கொண்டு தீமை விலக்கும் வண்ணத் திருவிழா. |
| | மகாவிஷ்ணு வழிபாடு: நித்திய நிம்மதிக்கான வழிபாடு. |
| **MARCH - 2022: மாசி - பங்குனி (உபமதி-னன் மதி)** | **16 அவை நிகழ்வுகள் மற்றும் 3 இசை வகுப்புகள்** |
| பங்குனி- னன்மதி | |
| | பங்குனி பௌர்ணமி - மெய்வழிச் சாலை- பிறவா நாள் பிறப்புத் திருவிழா. |
| | பங்குனி உத்திரம்: தெய்வத் திருவுடன் மெய் மணம் புரியும் உத்திர நட்சத்திர காலம். முருகப் பெருமான் சன்னதியில் காவடி வழிபாடு. |
| | காரடையான் நோன்பு: கவுரி குண்டலி தாயின் அகமிய ரகசியம் அறியும் நோன்பு. |



Copyright © AMNA Trust, Chennai

| | |
|---|---|
| | ராமநவமி: ராம அவதாரம் உணர்த்தும் மகிமை. |
| | காரைக்கால் அம்மையார் குருபூஜை: அகமியச் செயலான கால் மேலும் தலைகீழ் நிலை உணர்த்தும் பூஜை. |
| **APRIL - 2022: பங்குனி- சித்திரை (னன்மதி - னாதமதி)** | **12 அவை நிகழ்வுகள் மற்றும் 2 இசை வகுப்புகள்** |
| சித்திரை - னாதமதி | |
| | சித்திரை -1- சூரியன் மேஷ ராசியில் நுழையும் நாள் (காலச்சக்கர ரகசியம்) |
| | சித்ரா பவுர்ணமி: ஆசான் அருளால் பாவம் நீக்கி புண்ணியம் பெறும் நாள். |
| | சித்திரை திருவிழா: மதுரை மீனாட்சி அம்மன் திருக் கல்யாணம், வைகையாற்றில் அழகர் இறங்குவது. |
| | அட்சய திருதியை: கற்பகத் தருவாம் அட்சய பாத்திரத்தின் மகிமை உணர்த்துவது. |
| **MAY-2022: சித்திரை - வைகாசி (னாதமதி- விண்மதி)** | **16 அவை நிகழ்வுகள்** |
| வைகாசி - விண்மதி | |
| | வைகாசி பவுர்ணமி |
| | மெய்வழிச்சாலை - சாலை ஆண்டவர்கள் ஆடு மேய்ப்புத் திருக்கோலம் ஏற்ற காட்சி, கங்கண திருக்காப்பு காட்சி, பாசுபத தவக்கோலக் காட்சி, புத்தாடை புனைச்சீர் அணிதல், னன்னம்பிக்கை வைப்பு என்னும் பாவ விமோசனத் திருமந்திரம் ஓதுதல். |
| | அவதாரங்கள்: நரசிம்மர், புத்தர், ஆதிசங்கரர், எமதர்மன், (அகமியத்தில் அறிய வேண்டிய செயல்) |
| | புத்த பூர்ணிமா: புத்தர் ஞானம் பெற்ற நாள். |
| | வைகாசி விசாகம் (முருகப்பெருமான் வழிபாடு) |
| **JUNE-2022: வைகாசி - ஆனி (விண்மதி - வீசுமதி)** | **12 அவை நிகழ்வுகள்** |
| ஆனி - வீசுமதி | |
| | உதய சூரியனின் உத்ராயணப் பயணம் நிறைவு மாதம். |
| | கூர்ம அவதாரம், சபரிமலை நடைதிறப்பு, மாங்கனி திருவிழா. |
| | ஆனி பவுர்ணமி: குருவின் சிறப்பை உணர்த்தும், மகாபாரதம் இயற்றிய வேத வியாச பகவான் பூஜை (குருபூர்ணிமா) |
| | ஆனி திருமஞ்ஞனம்: நடராஜப் பெருமான் மஹா அபிஷேகம். |
| **JULY-2022: ஆனி-ஆடி (வீசுமதி - பண்மதி)** | **18 அவை நிகழ்வுகள் மற்றும் 3 இசை வகுப்புகள்** |
| ஆடி- பண்மதி: | |
| | தரணியொளிர் கதிரவன் தன் தட்சிண திசைப் பயணத்தின் முதல் நாள். |



Copyright © AMNA Trust, Chennai

| | |
|---|---|
| | ஆடி பௌர்ணமி: குருவின் மேன்மை உணர்த்தும் வணக்கத்துக்குரிய நாள். |
| | ஆடி அமாவாசை: முன்னோர்களின் நிலை உணர்த்தும் பித்ரு பூஜை. |
| | ஆடி கிருத்திகை: அறுபடை வீட்டின் அகமிய செயலுக்கான வழிபாடு. |
| | ஆடிப்பெருக்கு (பதினெட்டாம் பெருக்கு): ஆலவாயான் திருநீற்றுப் பெருக்கின் ரகசியம் |
| | அம்மன் வழிபாடு: எண்சாண் உடலின் பிரதான சிரசறியும் வழிபாடு. |
| **AUGUST 2022: ஆடி - ஆவணி (பண்மதி - பாடுமதி)** | **18 அவை நிகழ்வுகள் மற்றும் 3 இசை வகுப்புகள்** |
| ஆவணி - பாடுமதி | |
| | ஆவணி அவிட்டம்: ஆசான் திருமேனியாகிய வேதம் படிக்கும் நாள், உபநயனம் பெற்றவர்கள் கரத்தால் திரிக்கப்படாத பூனூல் புதுப்பிக்கும் நாள். |
| | விநாயகர் சதுர்த்தி: மூலத்திருந்த முழுமுதற் கடவுள் அவதரிக்கும் திருநாள். |
| | மகா சங்கடஹர சதுர்த்தி: அறிவில் தோஷம் நீக்கும் விரத நாள். |
| | கிருஷ்ண ஜெயந்தி: ஐம்புலக் கதவடைக்கும் பகவத் கீதை அருளிய பகவான் பிறந்த தினம். |
| | ஓணம்: பெருமாள் வாமன அவதாரம் கொண்டு அடி முடி நடு ரகசியம் உணர்த்திய நாள். |
| | ஆவணி மூலம்: சுந்தரேஸ்வரர் பிரம்ம முடி சூட்டு விழா. |
| | வரலட்சுமி நோன்பு: சுமங்கலி பூஜை (மனம் அலையாமல் பாதுகாக்கும் அறம்) |
| **SEPTEMBER-2022: ஆவணி-புரட்டாசி (பாடுமதி-மண்மதி)** | **15 அவை நிகழ்வுகள் மற்றும் 4 இசை வகுப்புகள்** |
| புரட்டாசி - மண்மதி | |
| | புரட்டாசி பௌர்ணமி: மெய்வழிச் சாலை பிச்சாண்டவர் திருவிழா. |
| | புரட்டாசி சனி: பெருமாளுக்கு விரதம் இருந்து பெருமாள்தல் அறியும் நாள். |
| | மஹாளய அமாவாசை: மனு னித்தியன் என்பதை உணர்த்தும் பித்ருதான நாள். |
| | நவராத்திரி: முக்குணங்களின் தன்மையறியும் கங்குல் பகலற்ற இடம். |
| **OCTOBER-2022: புரட்டாசி-ஐப்பசி (மண்மதி - மாரிமதி)** | **15 அவை நிகழ்வுகள் மற்றும் 3 இசை வகுப்புகள்** |
| ஐப்பசி - மாரிமதி | |
| | ஆயுத பூஜை: அரக்க குணம் விலக்கும் அறிவெனும் ஆயுதத்திற்கான பூஜை. |



Copyright © AMNA Trust, Chennai

| | |
|---|---|
| | விஜயதசமி: அழியாத அட்சர அப்பியாசம் செய்யும் நாள். |
| | தீபாவளி: கங்கா ஸ்னான சிறப்பு உணரும் நாள். தீபம் பிரகாசிக்கச் செய்யும் "வளி" உணரும் நாள். |
| | கந்தசஷ்டி: முருகப்பெருமான் முக்குண அசுரனை அழித்து சுரனாக மாற்றிய அசுர சம்ஹார நாள். |
| **NOVEMBER-2022: ஐப்பசி-கார்த்திகை (மாரிமதி - தண்மதி)** | **13 அவை நிகழ்வுகள் மற்றும் 2 இசை வகுப்புகள்** |
| கார்த்திகை-தண்மதி | |
| | மெய்வழிச்சாலை கார்த்திகை தீபத் திருநாள். |
| | கார்த்திகை தீபம்: நம்மைக் கார்க்கும் தீயை அறிவதற்காக ஏற்றும் தீபம். |
| | திருவண்ணாமலை தீபம்: ஓசை கொண்ட நடனத்தால் ஒளியேற்றும் தீப ரகசியம். |
| | கிரிவலம்: மந்திர மலையை வலம் வரும் அகமிய ரகசியம். |
| | ஐயப்ப பக்த விரதம்: வழியும் சத்தியமும் ஜீவனுமாய் விளங்கும் ஐயப்ப சாமியை அறிவதற்கான விரதம். |
| **DECEMBER-2022: கார்த்திகை-மார்கழி (தண்மதி - தனமதி)** | **15 அவை நிகழ்வுகள் மற்றும் 2 இசை வகுப்புகள்.** |
| மார்கழி-தனமதி | |
| | தரணியொளிர் கதிரவன் தன் தட்சிண திசைப் பயணத்தின் நிறைவு மாதம். |
| | ஆருத்ரா தரிசனம்: அறிவு கொண்டு அகந்தை அடக்கும் ருத்ர தாண்டவ ரகசியம். |
| | திருப்பாவை: உலகளந்த உத்தமன் குறித்து ஆண்டாள் இயற்றிய பாசுரம். |
| | திருவெம்பாவை: மணிவாசகப் பிரான் தரிசித்த திருவண்ணாமலை சிறப்பின் பாடல் |
| | கோவரத்னகிரி குடை மாதம்: மாதங்களில் "நான்" மார்கழி என்ற கிருஷ்ண பகவான், தன் சுண்டு விரலால் மலையைக் குடையாகப் பிடித்த ரகசியம். |
| | வைகுண்ட ஏகாதசி: ஏகனாயகனாகிய இறைவனுடன் கலந்து அத்வைதமாக இருத்தல். |
| | சொர்க்கவாசல் திறப்பு: பரமனின் இருப்பிடமாகிய பாத வாசல் திறப்பு ரகசியம். |
| | பகல்பத்து, ராப்பத்து: இறைவனின் அருட்கடலுள் ஆழ்ந்த ஆழ்வார்கள் ஓதாமல் பாசுரம் ஓதும் நாட்கள். |
| | கிறிஸ்துமஸ்: இயேசு பிறந்த நாள்: கர்த்தராகிய குரு பெருமான் வழிகாட்ட சத்திய ஜீவன் பிறந்த நாள். |


Copyright © AMNA Trust, Chennai

மேலே கூறப் பெற்றுள்ள அனைத்து மாத சிறப்புகளின் அகமிய ரகசியங்கள் யாவும் ஒரு மெய்க் குரு பிரானின் செழுஞ்ஞீதள மனோ நோக்கிற்கிணங்கி அவர்களின் தனிப் பெருங் கருணையால்தான் அறிந்து உணர முடியும் என்பது சத்தியம், சத்தியம், சத்தியம்.

**அவையின் நிகழ்வுகள்:** 179 அவை நிகழ்வுகளாக, ஆதிமான்மியம், சிவானந்த போதம், அமுத கலைக்ஞான போதம் இரண்டாம் காண்டம், தேவாரம், திருவாசகம், விநாயகர் அகவல், சத்திய வேதம், இஸ்லாமிய நிகழ்வுகளும், மற்றும் 27 இசை வகுப்புகளும்.

**அங்கத்தினர் இல்லங்களின் இனிய நிகழ்வுகள்:** திருமணம், நாமம் சூட்டல், புதுமனை குடியேற்றம், பிறந்த நாள், 40 ஆம் நாள், ஆண்டு பூர்த்தி.

**அங்கத்தினர்களுக்கு வழங்கிய நூல்கள்:** ஆன்மாவிற்கு அமிர்த வர்ஷிப்பு, தமிழ் - அறிவு வடிவினன், பகவத் கீதை, சித்த வேதம், மார்க்க மொழி கீதங்கள், ஞானக் களஞ்சியம், சுப்பிரமணியர் யோக ஞானம் 500, திரு அருட்பா 6 திருமுறைகள், இறப் பொழிக்கும் சன்மார்க்கம், பேசாப் பொருள் எனும் பிரம்ம ரகசியம், ஔவை குறள், காலச்சக்கரம், மணி மந்த்ர ஔஷதம்.

குருவருளால், புது நிலவு, மூன்றாம் பிறை, முழு நிலவு தினங்களில் அங்கத்தினர்கள், சாகாக் கல்வி, மரணமிலாப் பெரு வாழ்வு, யோக முறைகள், பிரம்மவித்தை செயல்கள் யாவற்றையும் குருவின் வித்தில்லா வித்தாகிய இல்மு எனும் மெய்க்கல்வி மூலம் பழகி வருகின்றனர்.

## குரு வாழ்க! குருவே துணை!



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின்
# 2022 ஜனவரி மாத அவை நிகழ்வுகள்


Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் வர்ஷிப்பு


திரு. சாலை ரவி அப்பா அவர்கள்
நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை

**பாழைப் போக்கி பலன்கை குலுக்கிட**
**னாள தாவரு னண்ணியதா முடி**
**வாழும் மாதம் தையா முதற் றேதியே**
**கோளரி சாலையர் திருனாளதே**

ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே, எதார்த்த சற்சன மக்களே, உங்கள் அனைவரையும் இந்த மின்னணு சஞ்ஞிகை மூலம் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. பொங்கலின் சிறப்பைக் கூறும் இப்பாடல் கோளை அரியக்கூடிய நாளாக உள்ள ஒரு **யுகத்தவசு** பாடல். நம்மைப் பிடித்திருக்கும் கோள்களை எல்லாம் மாற்றி அஸ்தமிக்கச் செய்து துகள்களாக்கி அவற்றைக் கிரகிப்பவரே கிரகஸ்தன், குரு, அனுக்கிரகன்.

இவ்வளவு காலமாக சூரிய வழிபாடு, உழவர் திருநாள், மாட்டுப்பொங்கல் என இருந்தவற்றை மாற்றி கோளரி சாலையர் திருநாளே தை மாதத்தின் சிறப்பு என ஆண்டவர்கள் எடுத்து வைத்துள்ளார்கள். மற்றொரு சிறப்பாக சூரியனின் பயணம் தென் திசையிலிருந்து வட திசை நோக்கி மகரசங்கராந்தி எனும் மகர ராசியில் நுழையக்கூடிய நாளாக உள்ளதே தை முதல் நாள். மகாரம் எனும் மகார பீடம் தசதீட்சை எனும் பத்தாவது தீட்சையாக, தமிழ் மெய் எழுத்துக்களில் **"ம்"** எனும் பத்தாவது எழுத்தாக உள்ளது. இதன் ரகசியத்தைத் தெரிந்து கொண்டவனின் வாழ்க்கை காலக் கோள்களன்றி காலனைத் தாண்டி வாழக்கூடிய ஒன்றாக உள்ளது. இவ்வளவு காலம் சாகும் மாதத்தில் வாழ்ந்தவன் உள்ளத்தில் தைக்கக்கூடிய ஒரு விஷயம் உள்ள திருவிழாவாக வரும் மாதமே வாழும் மாதமாகிய தை என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். இத்தனை சிறப்புகளையும் கொண்ட ஜனவரியில் தான்,மார்கழி, தை என்ற மாதங்களும், வைகுண்ட ஏகாதசியும் உள்ளது. **வைகுண்டம் காண வந்த தர்மி எல்லோரும் மெய் குண்டம் கண்டோம் என்று இருப்பார் அவ்வனத்தே** என்ற தீர்க்கதரிசன வார்த்தைகளுக்கு ஏற்ப வைகுண்டநாதனாக சாலை ஆண்டவர்கள் வந்து அவதரித்த நன்னாள் மார்கழி மாத நிறைவு நாளாக உள்ளது.

இத்தனை சிறப்புகளையும் உள்ளடக்கிய இச்சஞ்ஞிகையில் பொங்கல் சிறப்பு பற்றி வடிவேலனும், னித்திய வாழ்வு, ஆவிடையோனி, அடக்கம், பொன்னடிகள், நான், மனு, தேவன் என்பன பற்றி பேசப் பெற்ற பட்டைதீட்டிய வைரமாக மிளிர்கின்ற சத்துவாச்சாரி சபைச் சிறப்பின் தொகுப்பினை நாகலிங்கமும், வாழ்வீர் சாலோக மாமுதல் சாயுச்யம் என்ற பாடலுடன் தொடங்கும் வருடப்பிறப்பு நிகழ்ச்சியை சிவகாசி விஜயகுமாரும், 6 ஆம் தேதி நிகழ்ச்சியை ஜீவிதா, மற்றும் 8 ஆம் தேதி நிகழ்ச்சியில், அனுக்கிரகம் நிக்கிரகம் பற்றிய விஷயத்தை கல்பனாவும், சிறப்பாக தொகுத்து வழங்கி உள்ளனர். சிவகாசியில் நடைபெற்ற பொங்கல் நிகழ்ச்சிகளும், மான்மியம் பகுதியின் வித்தில்லா வித்தின் சிறப்பும், உப்புப்பாண்ட உடலினுள் முச்சகாதிய சொர்க்க மத்திய பாதாளம் பற்றிய விஷயங்களும் மிக நேர்த்தியாக தொகுத்து வழங்கப் பெற்றுள்ளது.

**இசைக்கும் இசை தீந்தமிழது எங்கே இன்னாள்** என்பதற்கேற்ப ஆண்டவர்கள் அருளிய பூங்கிளிக்கண்ணி, பூரணப் புதையல், காலந்நாட்டிய காரணப்பா, இவற்றின் பாடல்களை ராக தாளத்துடன் படிப்பதற்கான இசை வகுப்பினை லாவண்யா நடத்துவதும் மிக சிறப்பாக உள்ளது.


Copyright © AMNA Trust, Chennai

இம்மாதத்தில் நடைபெற்ற 15 சபைகளின் இரத்தினச் சுருக்கமாக, மக்களுக்கு ஒரு வரமாக வரும் இந்த சஞ்ஞிகையைப் படிப்பதோடன்றி வேதசாட்சியாக இதில் கூறப் பெற்றுள்ள பொருள்கள் எப்படி எங்கே கிடைக்கும் என்ற முயற்சியுடன் தேடும் எதார்த்த நன்மன மக்களுக்கு அவர்கள் தேடுவது சத்தியமாகக் கிடைக்கும். தேடி வரும் மக்களுக்கு நல்லாசிகளுடன் கூடிய வாழ்த்துக்கள் !

நமஸ்காரம்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**

னரரை மக்களாக்கி - மக்களைத் தேவர்களாக ஆக்கும் - தடையற்ற முழு தீரத்தை உடையதே மெய்க்கல்வி
**~ சாலை ஆண்டவர்கள்**



Copyright © AMNA Trust, Chennai

# பொங்கலோ பொங்கல்

**கோளரி சாலையர் திருனாள்:**

**பாழைப் போக்கிப்ப லன்கைகு லுக்கிட**
**னாள தாவரு னண்ணிய தாமுடி**
**வாழும் மாதம்தை யாமுதற் றேதியே**
**கோள ரிசாலை யர்திரு னாளதே.**

**சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை.** **(திருக்குறள்)**

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது பழமொழி. தை எனும் சொல் காலத்தை குறிப்பதாக உள்ளது. தமிழ் மாதங்களில் பத்தாவது மாதம் தை மாதமாகும். இம் மாதத்தின் முதல் நாள் பொங்கல் திருநாளாகும். இது தமிழர்கள் கொண்டாடும் பாரம்பரிய திரு விழாவாகும். நாம் வாழும் பூமிக்கு ஒளியாக, நமக்கு உணவாக உள்ள தாவரங்கள் வளர்வதற்கு அடிப்படை ஆதாரமாக உள்ள சூரியனையும், பயிர்களை விளைவிக்கும் உழவுத் தொழிலையும், அதற்குத் துணையாக இருக்கும் காளைகளையும் போற்றி வணங்கக் கூடிய சிறப்பான நிகழ்வே பொங்கல் பண்டிகை ஆகும்.

பொங்கல் திருநாளானது: 1. போகிப் பண்டிகை 2. பெரும் பொங்கல் 3. செல்வப் பொங்கல் (மாட்டுப் பொங்கல்) 4. காணும் பொங்கல் என தொடர்ந்து நான்கு நாட்கள் கொண்டாடும் விழாவாகும். இனி அவற்றின் சிறப்புகளை ஒவ்வொன்றாக காண்போம்.

**1. போகிப்பண்டிகை:** தை மாதத்தின் முந்தைய நாள் அதாவது மார்கழி மாதத்தின் கடைசி நாள் போகி நாளாகும். இன்னாளில் அதி காலை நேரத்தில் பறை வாத்தியம் இசைத்து, வீட்டில் உள்ள தேவையற்ற பழைய பொருட்களை நெருப்பில் போட்டு எரிப்பது வழக்கமாகும்.

**பழையன கழிதலும் புதியன புகுதலும்** என்ற நன்னூல் வரிகளுக்கு ஏற்ப நாம் இந்த மனிதப்பிறவி எடுப்பதற்கு முன் நம் வினைகளுக்கு ஏற்ப பல ஜென்மங்களாக மாறி மாறி பிறந்து இப்பொழுது இந்த மனித உடலில் குடியேறி இருக்கிறோம். இனிமேல் வேறு எந்த பிறவியும் எடுக்காமல் இருப்பதற்கு நம்முடைய பழைய வினைகளை கடக்க வேண்டும். வினைகளை கடக்கக்கூடிய ஓடம் போன்றது தான் இம் மனிதஉடல். உலகில் உள்ள 84 லட்சம் வகையான உயிரினங்களில் எந்த வலிமையான உடல் அல்லது அழகான உடல் எடுத்தாலும் நம் வினைகளை போக்கிக் கொள்ள முடியவே முடியாது.

**கருப்பை கூடிக்க லந்நவி னைத்தொடர்**
**மருப்பொ தியாம்பு லமாயை மாயவே**

என்று ஐவணத்தளிர் பாடலில் ஆண்டவர்கள் அருளியவாறு, ஒரு மெய்குருபிரான் தன் புதுமொழியால் சீடனின் பாழாகிய பழ வினைகளுக்கு காரணமான மும்மலங்களை சுட்டி காட்டி அவற்றை தன் வாக்காகிய தீயில் போட்டு எரித்து அழிக்கிறார்கள். இதையே

**மும்மலம் கருக முச்சுடர் தோன்றும்** என்றும் **எம்முடைய (திரு) வாக்கு ஒரு தீ** என்றும் தெய்வமவர்கள் அருளியுள்ளார்கள்.

**என்னை அறிவித்து எனக்கருள் செய்து**
**முன்னை வினையின் முதலைக் களைந்து**

என்று விநாயகர் அகவலில் அருளியுள்ளார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

பாழைப் போக்கி பலன் கை குலுக்கும் நாளே போகிப்பண்டிகை நாளாகும். தன்னை தேடி நாடி வரும் யதார்த்த னன் மனத்தினரின் வினைகளை களைந்து மெய்ப்பலனை அளந்து கொண்டிருக்கும் பரிசுத்த ஆவித் தெய்வம் **பிரம்மப் பிரகாச மெய்வழிச்சாலை ஆண்டவர்கள்** திருமேனி தாங்கி திரு அவதாரம் செய்த நாளே போகி திரு நாளாக இன்றும் கொண்டாடப்பட்டு வருகிறது.

**2. தை பொங்கல்:** சூரியனின் பயணம் தட்சணாயனத்திலிருந்து மாறி உத்தராயனத்தில் பயணிக்கும் முதல் நாள் தை மாதம் தொடக்கம் ஆகும். இதற்கு புண்ணிய காலம் என்று பெயர். ஆடிப்பட்டம் தேடிப்பார்த்து விதைத்த விதைகளெல்லாம் அறுவடைக்கு தயாராக இருக்கும் காலம் தை மாதமாகும். அறுவடை செய்த நெல்லில் இருந்து புத்தரிசியை எடுத்து புதுப்பானையில் இட்டு, புதிய அடுப்பில் பொங்கல் வைப்பார்கள்.

மேலும் ஓரறிவு உள்ள தாவரங்களான பூமிக்கு கீழ் விளையும் மஞ்ஞள், இஞ்ஞி, கிழங்கு வகைகள் மற்றும் காய் கறிகள், பழம், கரும்பு, இவற்றுடன் சர்க்கரைப் பொங்கல் செய்து படைத்து, புத்தாடை அணிந்து சூரிய பகவானை வழிபடும் நாளே பெரும் பொங்கல் திருநாளாகும்.

கால சக்கரமாகிய சூரியனின் பயணத்திற்கேற்ப பூமியில் நிகழும் பருவ மாற்றத்தின் மூலம் உயிர்கள் பிறந்து வளர்ந்து இறந்து கொண்டே இருக்கிறது. இந்த சுழற்சியானது ஓயாமல் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. இதையே பிறவிச்சுழல் என்று வேதம் கூறுகிறது. சுழலாகிய பிறவிப் பெருங்கடலை கடந்தால் தான் இறைவன் திருவடி நிழலை அடையமுடியும். இது தான் மனிதனின் தலையான கடமையாகும்.

இதையே திருவள்ளுவர்,

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடி சேராதார்** **(திருக்குறள்)** என்று அருளியுள்ளார்.

பிறப்பென்னும் பேதமையை நீக்கி பிறவிப் பெருங்கடலை கடக்கக் கூடிய ரகசியத்தை உள்ளடக்கியதே பொங்கல் பண்டிகை திருநாளாகும். உலகில் உள்ள புற இருளைப் போக்க நகல் சூரியன் இருப்பது போல் மனிதனின் அக உலகில் உள்ள அறியாமை எனும் இருளை போக்க இருளற்ற மொழியுடைய வள்ளலாகிய அசலான ஒரு ஞான சூரியன் இருக்கிறார்.

**இருளறு மொழியோர் இறை குருவாகும்** என்று அறிவு அறி பாடத்தில் தெய்வமவர்கள் அருளியுள்ளார்கள்.

**நந்தவனத்தில் ஓர் ஆண்டி**
**அவன் நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி**
**கொண்டு வந்தான் ஒரு தோண்டி**
**மெத்தக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி**

என்ற கடுவெளி சித்தரின் பாடலுக்கேற்ப மனித உடல் ஒரு பானைக்கு ஒப்பாகவே இருக்கிறது. உடலாகிய இப் பானையை குரு சொன்ன ஆசனத்தில் அமர்த்தி குருபிரானிடம் வேண்டி அவர்களின் திரு ஆலவாயூற்றிலிருந்து வரக்கூடிய ஜீவத்தண்ணீரை பானையில் ஊற்றி, ஞானாக்கினியான னாதத்தீயை மூட்டினால் நம் உள்ளத்தில் னன்னெறிப் புண்ணியமான மெய் உணர்வு **பொங்கலோ (ஓ) பொங்கல்** என்று பொங்கி வரும். இதுவே **ஓ வண்ணம்** ஆனவர்களின் அடையாளம் ஆகும்.

நவ கிரக கோள்களின் அதிகாரத்தில் இருக்கும் வரை நாம் இறைவனை அறிந்து கொள்ள முடியாது. புறத்தில் உள்ள நவகிரகங்கள் நம்மிடத்தில் அசலாக இருக்கிறது. நம்மை இயக்கக் கூடிய பொருட்கள் அனைத்தும் நம் உடலுக்குள் இருந்துதான் செயல்படுகிறது. நாள், நட்சத்திரம், நவகிரகம், ராசி நிலை, அனைத்தும் நம்முள் இயங்கிக் கொண்டிருப்பதை அறியாமல் விதிவசத்தால் இவைகளை தவறாக வழி நடத்துவதால் எமனிடம் மாட்டிக் கொள்கிறோம். ஆகவே **னவகிரக கோள்**



Copyright © AMNA Trust, Chennai 

**மாற்றும் நாத சோதிடராகிய** ஒரு மெய்குருபிரானின் அருளால், நவ கிரகங்கள் மனிதனுக்கு மட்டும் ஏன் இருக்கிறது? எங்கே இருக்கிறது? எப்படி இருக்கிறது? என்பதை அறிந்து குருவின் அனுக்கிரகத்தால் அவற்றை கடந்து இறைவனை அடைய வேண்டும் என்பதை நமது தெய்வமவர்கள், *மெய்ப்பொருள் அடைக்கலப்பாவில்*

**காலக்கி ரகங்னள் சூழ்ந்நவங்நே**
**கோளரி வாளாகி னின்றவரே** எனவும்

**கோள்மலிந்ந பவக்காட்டை யறவிழுங்நு மக்கினியே**
**அருட்குருவே எனன்பே உன்றிருப் பாதத்**
**தாள்மலர்விட்டினியகலே னகன்றாலென் னுயிர்விடுவேன்**
**அபுசாலீ கெனும் தவங்னொண் டெழுந்ந தேவே**

என்று *ஞான அகவல்* பாடலில் அருளியுள்ளார்கள்.

குருபிரான் ஞான சூரியனாக உதயம் செய்து சீடர்களின் உள்ளத்தில் இருக்கும் அஞ்ஞானமாகிய மும்மலக் கிழங்கை அடியோடு பிடுங்கி வேரறுப்பார்கள். பிறகு கீழ் நோக்கமாக னபுசாக பரந்து விரிந்த மனதை ஓரறிவாக மாற்றி பிரம்ம வித்தை செயலைப் பழக்கி மேல் நோக்காக சிபத்தாக வளர்விக்கும் தத்துவ நிலையை, தை பொங்கல் தினத்தில் ஓரறிவின் வகைகளான கிழங்கு மற்றும் கரும்பு வைத்து வணங்கும் நடைமுறையாக வைத்துள்ளார்கள். இச்செயலையே *பூரண வண்ணப் பா* பாடலில்,

**வடவைய னலுமெழக் கெடுமும்ம லக்கிழங்நு**
**விடமுமு றிந்நமுதம் மடையுந்நிறந்நுவிடு - முளவோரே** என்றும்

*மெய்வழினூலில்,*

**சோமனதிக் கரையிருக்கும் கரும்பு தின்றால்**
**சொக்குமடா வுன்றனையும் சுருட்டு முள்ளே**

என்றும் அருளியுள்ளார்கள்.

இவ்வாறாக காலத்தையும் காலனையும் வெல்லக்கூடிய பிரம்மாண்ட அகமிய செயலை குறிக்கும் புற அடையாளமே பொங்கல் பண்டிகை ஆகும். இப் பெருநிலையை வைத்தே **மெய்வழிச் சாலை ஆண்டவர்கள்** ***கோளரி சாலையர் திருனாள்*** என்று னாமம் சூட்டியுள்ளார்கள்.

**3.செல்வப் பொங்னல் (மாட்டுப் பொங்கல்):** தை மாதத்தின் இரண்டாவது நாள் மாட்டுப் பொங்கல் தினமாகும். காளை மாடுகளை ஏரில் பூட்டி ஏர் உழுதல் விவசாயத்தில் முக்கியமான பணியாகும். இதனால் இரண்டாம் நாள் காளை மற்றும் பசு மாடுகளை அலங்காரம் செய்து வணங்கி நன்றி தெரிவிப்பார்கள். மேலும் முரட்டு காளைகளை ஓட விட்டு அதன் முதுகு பகுதியில் லிங்க வடிவாக இருக்கும் திமிலைப் பிடித்து காளையை அடக்கும் ஆண்களுக்கு பரிசுகள் வழங்குவார்கள்.

***மாடு என்பது செல்வம், பசு என்பது ஜீவன், காளை என்பது இடப வாகனம்*** என்று பொருள். செல்வம் என்றால் அழியக்கூடிய பொய்ப்பொருள் அல்ல. அழியாத மெய்ப்பொருள்தான் செல்வம். என்றும் அழியாத ஆசானின் வாய்மைக்குத் தான் மெய்ப்பொருள் என்று பெயர். இதை திருவள்ளுவர்

**யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்**
**வாய்மையின் நல்ல பிற.** (300) எனவும்

**செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்துள் எல்லாம் தலை.** (411)

என ஐந்து நிலைகளாக செல்வத்தின் உன்னதத்தை அருளியுள்ளார். ஆசானிடத்திலிருந்து வரும் தலையான செவிச் செல்வத்தை நாம் பருகினால்


Copyright © AMNA Trust, Chennai

முரட்டு காளையாக அவாவுடன் தாவி தரிகெட்டு ஓடி திரிந்து கொண்டிருந்த பாச மனம் மெள்ள மெள்ள லயமாகும். பிறகு சூட்சக் கயிற்றால் கட்டி அதை ஓரிடத்தில் இருக்கப் பழகவேண்டும். இவ்வாறு பழகப் பழக மனம் சைதன்யமாக, ஜீவனாக, பசுவாக மாறிவிடும். இது தான் அழியாத **ஜீவப்பரிசு**. இதுவே அழியாத செல்வம்.

அறிவாகிய பசுவை வாகனமாக கொண்டு ஆசான் துணையோடு அதன் மேல் ஏறி சவாரி செய்தால் பதியாகிய சிவனை தரிசனை செய்யலாம். இதையே திருமந்திரத்தில்

**பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்**
**பதியினைப் போல்பசு பாசம் அனாதி**
**பதியினைச் சென்றணு காப்பசு பாசம்**
**பதியணு கிற்பசு பாசம் நில்லாவே**

என்று திருமூலர் அருளியுள்ளார். இதுதான் செல்வச்சீர் நபியான ஆசானின் வாய்மைக்குள் ஆவது. வாய்மையே வெல்லும் என்பது, எமன் வசம் இருந்த மனதையும் உயிரையும் மீட்டு எமனை வென்று சீவனை சிவன் வசம் ஆக்கிவைக்கும் வல்லபமுடையதே **ஸ்ரீவித்துனாயகம்** உண்டாக்கி வைத்துள்ள செயலுடைய **செல்வப் பொங்கல்** ஆகும்.

**4. காணும் பொங்கல்:** தை மாதத்தின் மூன்றாம் நாள் காணும் பொங்கலாகும். இன் நாளில் குடும்பதினர் அனைவரும் கோயிலுக்கு சென்று இறைவனை காண்பது, உறவினர்களை காண்பது, பிடித்த இடங்களை காண்பது போன்ற பல நிகழ்வுகள் நடக்கும்.

**கோடாயிதக் கூர்- வாக்கியம் எண் – 6:** மறைமொழி மாந்நரைப் பார்க்கிறதுதான் தரிசனை. அவர்களை அல்லாது வேறு எதைப் பார்த்தாலும் அது தரிசனை ஆகாது. பார்ப்பது தரிசனை என்றால் திருடனைத் தரிசித்தேன், னோயாளியைத் தரிசித்தேன் என்னலாமே.

**மெய்ப்பொருள் காண்பது அறிவு** என்பது வள்ளுவர் வாக்கு. ஆசானிடத்தில் ஆறாவது அறிவை பெற்று நம்முள் இருக்கும் மெய்ப்பொருளை காண்பதே காணும் பொங்கல் ஆகும்.

**கோடாயிதக் கூர்- வாக்கியம் எண் – 60:** வேதம் இருக்கிறது. ஆறாவது அறிவு இருக்கிறது. சூக்குமதேகம் இருக்கிறது. ஆகவே, உனக்கு அவற்றை விளக்கித்தரப் பாரவான்ஙளும் வருவார்கள் என்பது னிச்சயம்.

அவ்வாறு விளக்கித்தர வரும் குருவைப் பார்க்க கோடி நன்மை என்பதே காணும் பொங்கலாகும்.

**துக்கநிவர்த்தி சுகப்பிராப்தி:** ஒவ்வொரு மனிதனும் சுகத்தை நாடியே இருக்கிறான். புற உலக இன்பங்களாகிய சிற்றின்பத்தால் நித்திய சுகத்தை அடையமுடியாது. அக உலகமான தன்னுலகில் குடியேறி வாழும் மெய் உணர்வாகிய பேரின்பத்தால் நித்திய சுகத்தை அடையலாம். இதை அடையக்கூடிய ரகசியக் குறியீடுதான் தைப் பொங்கல் திருனாளாகும்.

**திரு மெய்ஞ்ஞானக் கொரல் வாக்கியம் எண் – 49:** இடருறும் இறுதி னாளில் இத்தூலத்தை விட்டு உன்னைப் புகழுடம்பில் தேற்றி ஏற்றி, மகிழ்ச்சி பொங்ஙச் செய்து வைப்பதுவே பொங்ஙல்.

மனிதர்களின் வயிற்றுக்கு அறுசுவை உணவை விளைவித்து தருபவர்கள் உழவர்கள். *வேதகலை பழகிய ஆதீனச் சென்னெறிச் சீர் - உழவுகோல் கைவர வடைந்த பெருங்ஙுடிப் பிறப்புப் பெரியதனச் சமுசாரியர்களாகிய குரு மகான்மியர், மனிதர்களின் அறிவு வயிற்றுக்கு ஆகாரமாகிய உவட்டா அமுதுணவை விளைவித்து தருபவரே **சொல்ஏர்-உழவர்**. அவர்களே அன்னபூரணி.*

அம் மகான்மியர் இன்று,

**தன்னருங் ஙலப்பை கொண்டு**
**தானுழு பவரா னிற்பர்**
**சென்னெறி மேடை னிற்பர்**



Copyright © AMNA Trust, Chennai

**தடக்கரத் தரிவா ளேந்றிக்**
**கண்களர் பசுக்கள் ஓட்டிக்**
**காட்டிடம் மேய்த்து னிற்பர்**

ஜீவாத்மாவை பரமாத்மாவுடன் சேர்த்து வைப்பவரே தையல் நாயகியான குருபெருமான். அவரே நம்மை கவ்விப்பிடித்திருக்கும் **தைவம்**.

**ஆதி மார்க்க னீதி அவை**யை ஸ்தாபிதம் செய்து பொங்ஙிடும் காம தேனுவாக னின்று ஜீவன் கண்ட சென்ம சாபல்யம் ஓங்ஙும் கங்ஙுல் பகலற்ற செங்ஙமலத்திருப் - பொங்ஙலோ பொங்ஙலை முக்கூறுக் கத்திகொண்டு மகிழ்ச்சி பொங்ங வாரி வழங்ஙி வரும் வள்ளலாகிய எம் குருனாதரின் திருவடிக் கமலங்ஙளுக்கு னமஸ்காரம்.

**01-01-2022 ~ சனிக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஶ்ரீ. நாகலிங்கம்**

*ஜீவசகோதரர் கௌதம்:*

**னித்தியவாழ்வு:** உலகில் பிறப்பெடுத்த அனைவருமே வாழ்க்கையில் சந்தோஷமாக இருக்கவே விரும்புகிறோம். ஆனால் சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தமாகிய ஐம்புல நுகர்ச்சி கொண்டு அனுபவிக்கும் எந்த சந்தோஷமும் ஒரு நிலைக்குப் பிறகு சலிப்பாகவும், துன்பமாகவும் ஆகிவிடுகிறது. நிரந்தர சந்தோஷம் என்பது எட்டாக்கனியாகவே இருக்கிறது. எண்ணாயிரம் கற்ப காலம் சலிக்காத யோக இன்பத்தைத் தரும் நித்திய வாழ்வைப் பெற்றுத்தர வந்ததுவே ஆன்மீகம், தெய்வீகம், ஞானம் என்பனவாகும். அப்பேரின்பத்தை அனுபவிக்கும் கர்த்தாவை அறிந்து அதை அடைவதற்கு உண்டான உளவைக் கற்ற ஒரு மெய்க் குருவை அடைந்தவருக்கு மட்டுமே இது சாத்தியமாகிறது.

**ஆவிடை யோனி:** புழுக்கம், வித்து, அண்டம், சினை என்னப்பெற்ற நால்வகை யோனியில், சினை என்னப்பெற்ற கால்வழி பிறப்பில் நரனாகப் பிறந்த நாம், ஒரு ஆசானின் அன்பிற்குப் பாத்திரமாகி, அவர்களின் வேத நாதத்தின் மூலம் தேவயோனியில் பிறக்க வேண்டியவர்களாக உள்ளோம். சதா சர்வகாலமும் அலைந்து அலைந்து மாற்றமாகவே ஓடிக் கொண்டும், அனைத்து சிற்றின்பங்களுக்கும், துன்பங்களுக்கும் காரணமாக இருக்கும் *மனதின்* இயல்பறிந்து, அம்மனதை செம்மையாக்கி, நிலைப்படா மனதை நிலைபெறச் செய்வதுவே, ஆசானின் அருள்வர்ஷிப்பு. அதுவே ஆவிடை என்னும் தேவயோனி.

**அடக்கம்:** மனமே காலமாகவும், பிரம்மமாகவும் உள்ளது. காலமாகிய மனம் ஒருவருக்கு தன்வசப்படின், காலம் இவனுக்கு உரியதாகவும், வசப்படாமனம் இவனுக்கு காலமற்ற அகால மரணமாகவும் மாறி நிற்கிறது. அடங்காத சண்டிக் குதிரையாகிய மனதை அடக்கி, மடக்கி பிடிப்பதே நிஜ அடக்கமாக உள்ளது. படைப்பு கர்த்தாவாகிய பிரம்மத்தை தன்வசப்படச்செய்து எமனை மிகைத்து, அச்சமற்ற ஆனந்த வாழ்வைப் பெறும் செயலையே மகா சங்கல்ப மந்திரத்தில், *பிரம்ம வித்தை செயல்* என்றும் ***மாநெடுங்காலமாக மக்கள் புழக்கத்தில் இல்லாது மறந்து மறைந்தே போய்விட்ட இப்பழக்கத்தைப் பழகுவதற்கே இதில் சேர்ந்து ஆகிக் கொண்டிருக்கிறோம்*** என்றும் ஆண்டவர்கள் எடுத்து வைத்துள்ளார்கள். இப்படியான வரவை, மாசகற்றும் ஒரு ஆசான் மூலமே அறிந்து பழக முடியும். இதனையே பிள்ளைத்தமிழில் ***மாசில்லாமணி பூரகமோன வரவுகண் டேறுகின்ற*** என்று பாடி வைத்துள்ளார்கள். மேலும் இருள் மலிந்த இவ்வுலகத்தை தன் பிரகாசத்தின் மூலம் இருளகற்றி வெளிச்சமாக்கும் சூரியனைப் போல ஞானசூரியனை அடைந்தவருக்கே அறியாமையாகிய இருள் அகன்று அறிவாகிய வெளிச்சம் உண்டாகும்.

**பொன்னடிகள்:** இவ்வுலகில் ஒருவருக்கு எது இருந்தாலும், இல்லை என்றாலும் அதனால் ஒரு குறையுமில்லை. ஆனால் ஜென்ம சாபல்யமாக்கும் ஒரு ஆசான் இல்லையென்றால் எல்லாமே குறை தான். இதனையே மாணிக்கவாசகரும் ***புல்லாகிப் பூடாய்ப் புழுவாய்***



Copyright © AMNA Trust, Chennai 

***மரமாகி ....எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்! மெய்யே! உன் பொன்னடிகள் கண்டு, இன்று வீடுற்றேன்*** என்று தனக்குக் கிடைக்கப்பெற்ற மெய் ஆசானின் பொன்னடிகளைப் போற்றுகிறார்கள்.

மேலும் ***எண்ணம் பலகோடியதாய் விரிந்தே மன்னும் பல உயிர்களெலாம் னமவாய*** என ஆண்டவர்கள் அருளியபடி, நம் மனம், கீழ்நோக்கு முகமாகவே பாவச் செயலில் அழுந்தி எமனை வலிய அழைத்து வரும் வாகனமாக நிற்கிறது. நடுவாகிய *நான்*, அவாவான மனதோடு சேரும்போது, மாசுற்று, இருளில் மூழ்கி பிறவிச் சூழலில் மாட்டிக்கொள்கிறது. *நான்* மேன்நோக்கு கவனமுடன் சேரும்போது, பிறப்பற்ற இறைநிலையை அடைகிறது. இத்தகைய பாவ புண்ணியத்திற்குக் காரணமாக விளங்கும் நடுவனை *இன்னான்* என்று அறிந்துரைப்பவர்களே சன்மார்க்கராகிய ஆசான். அவர்களின் வழிகாட்டுதலின்படி பழகியவருக்கே பொன்னடியாகிய பொன்னரங்கம் வாய்க்கும். இதற்குச் சான்றாக ***முன்னுரு தங்நுர சிக்குல மாமணி.....செங்ஙமலம் பதமே*** என்னும் பூரணப்புதையல் பாடல் பாடப்பெற்றது. மேலும் இறைவனின் அடையாளம் **ஒலி** ஆகவும் அவ்வொலியை அறிவிக்கும் ஆசானின் நாதமே, அனைவருக்கும் **ஒளி** ஆகவும் உள்ளது. இதனையே *ஓசையொலியெல்லாம் ஆனவரே* என்று ஆண்டவர்கள் அருளியுள்ளது பற்றியும் கூறப்பெற்றது.



***ஸ்ரீலஸ்ரீ. மெய்வழி சாலை ஆண்டவர்கள்***

**னரன்-மனு-தேவன்:** கால்வழியில் பிறந்து, மனவழியில் நடந்து, நாம் ஏன் பிறந்தோம்-நம் கதி முடிவில் என்னவாகும் என்ற தேடல் இல்லாதோரை *னரன்* என்றும்; இத்தேட்டுடையோரை *மனு* என்றும்; இதனைத் தேடி அடைந்தோரை *தேவன்* என்றும் வேதம் சொல்கிறது.

அறிவை அறிந்தோர்க்கு காலன் என்ற பயங்கள் காணாமலே போகும். அப்படி அறிந்தவர்க்கே; அதாவது புலன் இன்பமாகிய அவகாமம் நீக்கி, சிவ காமத்தை அறிந்து அடைந்தவர்க்கே காலன் நீங்கி நற்கதி கிட்டும் என்றும், இது ஆசானின் பேரிரக்கத்தால் மட்டுமே வாய்க்கும் என்ற பகிர்தலுடன் சபை இனிதே நிறைவு பெற்றது.

## 02-01-2022 ~ ஞாயிற்றுக் கிழமை ~ புத்தாண்டு சிறப்பு சபை
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

ஆதி மார்க்க னீதி அவையின் புத்தாண்டு சபை - காணொளிக் காட்சியின் சுவிசேஷ நற்செய்திகள்: இன்றைய தினம் முழுநிலவு (அமாவாசை) இறைவனால் ஆசீர் பதிக்கப்பெற்ற எமன் அணுகாத வாழ்க்கையை உணர்த்தும் நாளாக உள்ளது. ***வாழ்வீர் சாலோக மாமுதல் சாயுச்சியம்.... வாழ்க வாழ்கவிங் ஙென் போலெல்லோருமே.*** என்ற பாடல் படிக்கப்பெற்றது. நம்மிடம் உள்ள காலச் சக்கரமானது தடுக்க வழியில்லாமல் ஓடிக்கொண்டே இருக்கிறது. இதனைத் தடுப்பதற்கே மனிதனுக்கு ஆறாவது அறிவு தரப்பெற்றுள்ளது. ஆதி மார்க்க னீதி அவையின் மக்கள் இதனை அறிந்து, உணர்ந்து, ***சென்ற னாள் சென்றிட்டாலும் செல்லும் னாள் சென்றிடாது*** என்ற ஆண்டவர்களின் திரு வாசகத்தை செயலாக்கி வாழ்கின்றனர்.



Copyright © AMNA Trust, Chennai

**நடந்நறியாப் பெருங்காட்டில் நல்வழியீதென... துணிந்திடுவர்க்கே விடியும் பொன்னுல காமே ...**

**கயிலைனாதன் கதிசிவன் ராவென்றும் ... பயிலும் சாலை கைவந்து பலித்ததே** என்ற பாடல்கள் படிக்கப் பெற்றன.

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு** **(திருக்குறள்)**

அவரவர் நாமமாக இருக்கும் **ஆத்மா** தேகத்தில் இருக்கும் வரை மெய்யாகவும், அது இல்லாதபோது பொய்யாகவும் உள்ளது. மெய், வாய், கண், செவி, மூக்கு என்ற அவையங்களுக்குள் உள்ள **நான்** எனும் பிரம்மத்தை அறிதலே **தன்னை அறிதல்** ஆகும். கோயிலில் தத்துவ வடிவாக உள்ள இறைவனை உணர்த்தும் பொருளாக இருப்பது அவரவரின் **நாமமே**. துக்க உடலுக்குள் நித்திய சந்தோஷத்தை எதிர்பார்த்து நிற்பவன் **ஆத்மன்**. துக்கம் கடந்து, அழியாத, நித்திய சந்தோஷத்தை அடையவே மனிதனுக்கு ஆறாவது அறிவு தரப்பெற்றுள்ளது. அறியாமையின் தொடக்கப்புள்ளி பிறப்பு. இதனை வள்ளுவர் பெருமான் **பிறப்பென்னும் பேதமை** என்கிறார். தான் செய்யும் செயலை இன்னதென்று உணராதவனே பேதை, பைத்தியம்.

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடி சேராதார்** **(திருக்குறள்)**

பிறப்பு ஒழியாதவன் பாவி. செம்பொருள் கண்டு அறிவு வடிவு ஆனவனுக்கு பிறப்பு இறப்பற்ற ஓர் நித்திய வாழ்வின் மூலம் பேதமை நீங்குகிறது. இதனைச் செயலாகக் கொண்டதுவே ஆதி மார்க்க னீதி அவை. நம் அறிவில் ஏற்படும் மாற்றமே புத்தாண்டு. இந்த உணர்வைத் தூண்டவே ஆலய வழிபாடுகள் உள்ளன. அவனன்றி ஓர் அணுவும் அசையாது, அவன் (நான்) என்பதை அனுபவப் பாடமாகப் பெற்றவர்களே ஆதி மார்க்க னீதி அவையின் மக்கள். மனிதனின் நித்திய சந்தோஷத்திற்கே இறைவனால் உலகம் உண்டாக்கப்பெற்றது என வேதங்களில் அருளப் பெற்றுள்ளது. அறிவே (குரு) தூலம் எடுத்து வந்து நரனாக இருப்பவனை மனிதனாக மாற்றும் நாளே புத்தாண்டாக உள்ளது.

பெரியவர்கள் அறிவு சார்ந்த குலத்தை உண்டாக்குவதையே தங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளனர். மனிதனாக படைக்கப் பெற்றவன் "ஈமான் கோட்டை" எனும் ஆறு நம்பிக்கைகளைக் கை கொள்வதின் மூலம் வயது தந்ததின் பிரயோஜனம் ஆகிய மெய்ப்பாலை அறியலாம். வைகுண்ட ஏகாதசி என்பது காலத்தின் ரகசியத்தை கை கொள்வதாக உள்ளது. பரமபத வாசலில் நம்மை புகுத்தாட்டும் செயலைச் செய்பவரே குருபிரான். இறைவனை அடைய மரண வாசலில் பிறந்த நாம் ஜனன வாசலில் பிறக்க வேண்டும். **அல்லல் படும் வாசல் ஓர் ஒன்பது வாசல் தில்லையம்பல சிறு வாசல் பரமபத வாசல்** கழுத்திற்கு மேலுள்ள 9 வாசலும் ஒரு மெய் குருபிரான் மூலமாகவே அறிய முடியும். அழிந்துபோகும் தேகத்தைக் கொண்டு அழியாத நித்திய தேகத்தை பெறுவதற்கு முதலில் மனிதனாக வேண்டும். தோற்றத்தில் மனிதன் ஒன்றாக இருந்தாலும் குணத்தால் பலவாறாக உள்ளான். சாத்வீக குணம் மனிதனுக்கு மட்டுமே உண்டு. உடலுக்கான தேவையை அன்றி உயிருக்கான தேவையை நாம் தேடவே இல்லை. இறைவன் நாத வடிவாக, வேத வடிவாக உள்ளான். வேதமானது புராதனன் நாவில் உள்ளது. தோற்றம் இல்லாத "மனம்" பெரியோர் சொல்படி கேட்கும் போது அறிவாக மாறுகிறது. மாறாக ஓடுகின்ற மனமானது வைராக்கிய மணிக்கம்பத்தில் நிலைத்து நிற்கும் போதே சமரசம் ஆகிறது. பெரியோர்கள் தன்னை அறிவிக்க, "நாம்" நம்மை அறியலாம்.

**ஆதி மார்க்க னாத னீதி சாதிபேதம் தீர்த்த சேதி.** இவை வெறும் சொல்லல்ல, *செயலுடைச் சமரசம்.* உங்களுக்கு சமாதானம் உண்டாகட்டும் அல்லேலூயா என்பது வாழக்கூடிய செயல் உடைய நாமம். பெரியோர்கள் தாயின் மிக்காங் கருணை கொண்டு ஒவ்வொரு முறையும் மெய்யில் இருந்து நாம் விலகும் போது



Copyright © AMNA Trust, Chennai 

நம்மை அணைத்து மீண்டும் நன்மையில் ஆக்குகிறார்கள். தர்மம், புண்ணியங்களுக்கு எல்லாம் மேலானது அறிவுதானம். இதற்கான கைங்கர்யம் புண்ணியமானது. அறம் அனைத்தும் வழங்கும் தர்ம சத்திரமாக ஆதி மார்க்க னீதி அவை உள்ளது. மக்களின் கைங்கர்யம் மக்களுக்கே சென்றுசேரும். மனிதன் உணர்வுக் கயிற்றால் கட்டப் பெற்றவன். சுவாசம் சூக்குமமாகவும், உணர்வு அதிசூக்குமமாகவும் உள்ளது என்று முக்குணங்களற்ற நிர்குணமான குணங்குடியார் அவர்கள் அருளியுள்ளார்கள் எனும் பகிர்தலைத் தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவையின் நிகழ்வுகள் இனிதே நிறைவு பெற்றது.

**06-01-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**வான்மதிக்கொரல் திருவாக்கியம் எண்: 50** - இந்த உடலில் மூச்சு ஓடிக்கொண்டிருக்கும் வரை தான் உலகிலுள்ள பொய்ப்பொருளை அனுபவிக்க முடியும். ஆனால் மெய்ப்பொருள் சாவுடைய சந்திப்பிலும் அதற்கு பிறகும் உனக்கு உதவ னிற்பது. ஆகவே மெய்ப்பொருளை குருபிரான் மூலம் இப்பொழுதே பெற்றுக்கொள்வது மனிதனின் தலையாய கடமையாகும். இச்செயலை சத்தியவேதத்தில், இந்த உலகம் முழுதும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் லாபம் என்ன? என்று கூறப்பட்டுள்ளது.

**காலந் நாட்டிய காரணப் பா பாடல் எண் -08 முன்னர் தோன்றிய மூர்த்தி முனிவர்கள்.** என்று துவங்கும் பாடலுக்கு ஜீவசகோதரி லாவண்யா அவர்களின் புரிதல்:

எம் குருவானவர் முன் காலத்தில் தோன்றிய மூர்த்திகள், முனிவர்கள், மன்னர், தீர்க்கதரிசி மகத்துக்களில் ஒருவர் அல்ல. தனித்துவம் வாய்ந்தவர். உலகிலுள்ள சித்தாந்தம், வேதாந்தம், கலாந்தம், போதாந்தம், நாதாந்தம் அனைத்தும் பறை சாற்றக் கூடிய சைவநிலையாகிய அசையாநிலையில் நம்மை பழக்கி வைத்து, பிறவா னெறியாகிய பெரும் பேற்றை அளிப்பவர். அத்தகைய குருவின் திருப்பாதத்தை விட்டு என்றும் அகலாமல் வாழ வேண்டும் என்பதை,

**அருட்குருவே எனன்பே உன்றிருப் பாதத்**
**தாள்மலர் விட்டினியகலே னகன்றாலென் னுயிர்விடுவேன்**
**அபுசாலீ கெனும் தவங்நொண் டெழுந்ந தேவே**

என்று ஞான அகவல் பாடலில் அருளப்பட்டுள்ளது

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் செத்திலாப்பத்து பாடல் எண்: 07**

**மாயனே மரிக்கடல் விடம் உண்ட.** எனத் துவங்கும் பாடலுக்கான ஜீவ சகோதரி பூர்ணிமா அவர்களின் புரிதல்.

மாயோன் என்பவர் இறைவன். மணிகண்டம் என்பது காலத்தை குறிப்பது. காலமாகிய ஆலகால விஷத்தை உண்டு அமுதமாக மாற்றுபவர் திருநீலகண்டர். அவரே திருப்பெருந்துறையில் மேவி நிற்கும் சிவபெருமான். திருப்பெருந்துறை என்பது மனிதனின் தூலத்துக்குள் இருக்கும் மூன்று தேகமாகிய சூக்கும– காரண- மகாகாரண தேகத்தின் இரகசியத்தை உணர்த்தும் பரிபாஷை சொல்லாகும். (துறை – சூக்குமம், பெருந்துறை – காரணம், திருப்பெருந்துறை- மகா காரணம்)

**திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம் பாடல் எண்: 06**

**புனை அழல் லோம்புகை....** எனத் துவங்கும் பாடலுக்கான ஜீவ சகோதரி உமாராணி அவர்களின் புரிதல்

அழல் நாற்றத்தை பரிசுத்தமாக்கி கொண்டவர்களே குருபெருமான். அவர்களின் வாய்மையே நம்மை நரன் என்ற நிலையிலிருந்து மனிதனாக்கி



Copyright © AMNA Trust, Chennai 

பின் தேவராக்கும். திருமருகல்- செங்காட்டங்குடியும் என்பது தத்துவ ரூபமாகிய சிவபெருமான் நடனமாடும் உருவத்திலும், தவனிலையாகிய அருவத்திலும், லிங்க வடிவாகிய அருவுருவத்திலும் வீற்றிருக்கும் நிலைகள் மனிதனுக்குள் அகமிய செயலாக இருப்பதை உணர்த்தக்கூடியதாகும்.

**ஜீவன் சிவலிங்கம்:** திருவள்ளுவ பிரான் ஞான வெட்டியான்-525 பாடலில்,

**கோலமறியாமல் காலையில் வில்வக்கொழுந்தை முறித்தினி கூகைகள் போலவும்... பூசை செய்தேன் காண் - சிவ பூசைகள் செய்தேன் காண்**

வில்வ மலர் கொண்டு பூசை செய்து, தேங்காய், பூ, பழம், சூடம் வைத்து தீபாராதனை செய்தும் எந்த பிரயோஜனமும் இல்லை. குருவைக் கண்ட பிறகே ஜீவன் சிவலிங்கம் என்று உணர்ந்தேன் என திருவள்ளுவ நாயனார் அகத்தியரிடம் பாடியுள்ளார்.

நாமும் ஆச்சார அனுஷ்டானங்களோடு பூசைகள் செய்துகொண்டு தான் இருக்கிறோம். ஆனால் புற சடங்காக மட்டுமே செய்வதால் நாம் எந்தவித பிரயோஜனத்தையும் அடைவதில்லை. குருபிரானை அடைந்த பிறகு தான் அனைத்து சாங்கிய சம்பிரதாயங்களும் அகமிய செயல் என்பதை உணர்ந்து மெய்யறிவை பெறமுடியும். அப்படியான மெய்யறிவை அளிக்கும் தேவத் திருச்சபையே ஆதி மார்க்க நீதி அவையாக விளங்கிக் கொண்டிருக்கிறது என்ற அருளுரைகளுடன் ஆசானவர்கள் அவையை நிறைவு செய்தார்கள்.

**08-01-2022 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்**

**பொங்கல் திருவிழா சிறப்பு:** ஆண்டவர்கள் திரு வாக்கியத்தில் "இடருறும் இறுதிநாளில் இத்தூலத்தைவிட்டு உன்னைப் புகழுடம்பில் தேற்றி ஏற்றி மகிழ்ச்சி பொங்கச் செய்து வைப்பதுவே பொங்கல்" என அருளப் பெற்றுள்ளது. கோளரி சாலையர் திருனாளானது நவகிரக கோள்களை அரியக்கூடிய னிக்கிரகம், அனுக்கிரகம் என்ற செயலை உணர்த்தும் திருவிழாவாகும்.



*திரு. சாலை ரவி அப்பா அவர்கள்*
*நிறுவனர்: ஆதி மார்க்க நீதி அவை*

**கோடாயிதக் கூர்- வாக்கியம் - 81**. கற்றவரையும் கல்லாதவரையும் ஒரே எல்லையில் வைத்துப் "பெற்ற வா" என்ற குருபிரானின் திருவாய்மொழி எட்டமுடியாத எல்லையாகிய சாவருமுன் சாகப்பழகும் செயலாகிய மெய்க்கல்வியைப் பழக்கி வைத்து, மெய்வணக்கத்தின் மூலம் மெய்யுணர்வையும் மெய்ப்பொருளாகிய அமானிதத்தை தன்னிலறியச் செய்து, நற்றாளைக் கண்டு தரிசிக்கச் செய்து, மெய்யை மெய்யாக்குகிறது.

**காலந் நாட்டிய காரணப் பா: பாடல் எண் - 09 எண்ணு கின்றனல் லெண்ணம னைத்தையும்...** என்ற பாடலுக்கு ஜீவ சகோதரி லாவண்யா அவர்களின் புரிதல்.

எண்ணங்களின் சேர்க்கையே மனம். அகத் தூய்மையானது ஆசானின் வாய்மையால் அமைகிறது. அவர்களின் அருமருந்தாகிய நாத மருந்தை, உட்கொள்ளும் போது நம் சித்தமலம் அறுக்கப்பட்டு சிவமாக்கப் பெறுகிறது. இச்செயலானது தொன்றுதொட்டு உபதேசம், பையத்து, தீட்சை என்ற மூலாதார



Copyright © AMNA Trust, Chennai 

ரகசியங்களை அறியக்கூடிய மெய்க் கல்வியாக குருபாரம்பரியமாக வந்து கொண்டிருக்கிறது. மறுபிறப்பாகிய அறிவுப் பிறப்பு பெற்று பரலோகராஜ்ஜியம் காணுவதும், மரணமிலா பெருவாழ்வு பெறுவதும் அவரவரின் நல்லெண்ணங்கள் மூலமாகத்தான் அமைக்கப் பெறுகிறது. சிந்தையற்ற தனித்தலைமைப் பதியாக பிறவாமை என்னும் நிலையை அருளக் கூடியவர்களே ஞானசித்தர். வந்த ஞான சித்தர் காலமும் அதுவேயாகும்.

**திருவாசகம்- குயில் பத்து- பாடல்-10**- கொந்தணவும் பொழிற் சோலைக் கூவுங்குயிலே... எனத் துவங்கும் பாடலுக்கான ஜீவ சகோதரி பூர்ணிமா அவர்களின் புரிதல்.

அருங்கோடையில் களைப்பாற்றும் சோலையில், கூவும் குயிலான குரு பிரானின் நாதம், மாய மனத்தால் காயப்பட்ட நம் களைப்பை அகற்றுகிறது. அறவாழி அந்தணராகிய குருபிரானவர்கள் மனம் அலைபாயாமல் பாதுகாக்கும் அறச்செயலில் நம்மை பழக்கி, உட்தமர் ஆகிய அறுகுனுனி வாசலுக்குள் சேர்த்து உத்தமர் ஆக்குகிறார்கள்.

**திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம் பாடல் எண்: 08** “பூண்டங்கு மார்பி னிலங்கை வேந்தன்”... எனத் துவங்கும் பாடலுக்கான ஜீவ சகோதரி உமாராணி அவர்களின் புரிதல்

ஆசானின் வாய்மையாகிய அறிவின் ஒளியானது, அறியாமையைப் போக்கும் செவிச்செல்வத்தை வழங்கி எமன் கை சிக்காது நம்மை பாதுகாத்து, மும்மலத்தை கருக வைத்து முச்சுடர் தோன்றச் செய்கிறது. பிரம்ம சொரூபமான மனதை அறியாமல் இருப்பது அஞ்ஞானம். மனதின் நிலையை உணர வைத்து, மூச்சுலயமாகிய மனோலயத்தை குருவின்பால் பெற்றுக்கொள்பவனே மெய்ஞானம் பெற்ற மறுபிறப்பாளன் ஆவான்.

**ஆதி மான்மியம்: ஜீவ சிம்மாசனப் பருவம்**: **வித்தில்லா வித்தின் சிறப்பு**:

எல்லா படைப்புக்கும் மூலமாக நின்று விளங்குவது வித்து. வித்தில்லாத சம்பிரதாயம் மேலும் இல்லை கீழும் இல்லை. இறைவன் வித்தில்லாவித்தாக எல்லா வித்துக்குள்ளும் இருக்கிறான். ஒரு சிறிய வித்தானது விண்ணளாவிய பெரிய விருட்சத்தின் பல தத்துவ சத்துவங்களை உள்ளடக்கி வைத்திருப்பது போலவே, மனிதனுடைய உப்புப்பாண்ட உடலுக்குள்ளே அணுவுக்கு அணுவாகவும் அகண்டத்துக்கு அகண்டமாகவும் நின்று விளங்கும் வஸ்து வித்தே வித்தில்லா வித்தாகும். நால்வகை யோனியாகிய புழுக்கம், வித்து, அண்டம், சினை எனும் பிண்டோற்பத்தி ரகசியத்தை, ஆசான் அவர்களின் அருள் மூலமாகத்தான் அவரவரும் தன்னுள் உணர முடியும். வித்தில்லா வித்தை விதைக்க வந்த வித்தகராகிய தெய்வமவர்கள், வேதங்களில் முத்தர் மூடிமறைத்ததை உடைத்துக் கூறியுள்ளார்கள். மனக்கண்ணாகிய அகக்கண் திறக்கப்பட்டவர்களுக்கன்றி ஏனையோருக்கு இது மறைபொருளாகத்தான் இருக்கிறது. னீதி எனும் பொருளான மனு தான் வித்து. **எந்ந னாளும் எந்நன் குரு னந்நியே**. நந்தியாக நின்று விளங்குவது வித்து. இன்றைக்கு இன்னிலைகளை எல்லாம் உணரக்கூடிய ஒரு மெய்ஞ்ஞான வாழ்க்கையை நமக்கு வழங்கிய பரிசுத்த ஆவி தெய்வத்தின் பொற்பாதங்களை போற்றி வணங்கி குருபிரானவர்கள் அவையை நிறைவு செய்தார்கள்.

**09-01-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ ஜெய்குமார்**

*ஜீவசகோதரி ஜான்சிராணி அவர்களின் புரிதல்*

**சரீரம்:** தந்தையின் எண்ணத்தில் இருந்த னாம் ஐந்து சக்திகளுடன் தாயின் கருவறைக்குள் நுழைந்து பத்து மாதங்கள் தண்ணீரில் இந்த சரீரமானது கட்டப்பட்டு உலகிற்கு வெளிவருகிறோம் என்பதை ஆண்டவர்கள் ஞான முறையீடு பாடலில்

**என்னவே பஞ்ஞாயுத மிதாகவே கலந்துருவெடுத்து வெளிவந்ததிதிலே** என்று அருளியுள்ளார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

நமசிவய என்பதில் **"ய"** என்பது சப்தத்தை குறிக்கும் **சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி** ஓசை வடிவாகிய இறைவனின் சாயலே மனிதன்.மனிதனின் அடையாளம் சப்தம் என வேதம் கூறுகிறது

**பட்டினத்தார் பாடல்**

**மனமாய்க் கனவாகி மாய்கையாய்**
**உள்ளிருந்து னினைவாகி**
**நின்ற நிலை அறியேன் பூரணமே!**

பூரணம் என்பது பரிசுத்த னினைவாக, ஆன்மாவாக, ஏகாட்சரம், ஓங்காரம், சிவமயம், பிரணவமாக இருக்கிறது.

**குருபெருமானின் அமுத வர்ஷிப்பு**:

ஆகாயம் என்பது ஆகாச, பராகாச, சூரியாகாச, மகாகாச, பரமாகாச என்னும் ஐந்து நிலைகளாக உள்ளது. உடலானது, பருஉடல், மனஉடல், வளிஉடல், அறிவுஉடல், ஆனந்தஉடல், எனவும் பஞ்சு கோசங்களாக, பஞ்சு பீஜங்களாக, பஞ்சு பீஜாட்சரங்களாக பஞ்ஞாட்சரமாக, ஓம் எனும் உணர்வாக, பஞ்ஞதத்துவ குணங்ஙளாகவும் உள்ளது. அனாதி என்பது தோற்றமும் முடிவும் அற்ற கூரிய இருள் வஸ்து. அது சுயம் பிரகாச னித்தியானந்த பிரம்ம சொரூபமாகும். அந்ந ஒன்றிலிருந்தே அனைத்தும் உருவாகி, வாழ்ந்து, மீண்டும் அந்த ஒன்றிலே ஐக்கியமாகிறது என உபனிஷத்தில் அருளப்பட்டுள்ளது.

*ஜீவசகோதரர் செந்தில் அவர்களின் புரிதல்*

**இராஜாங்ங யோகம்**-மெய் ஆசானின் வழிகாட்டுதலின் படி இராஜ அங்கத்தை அறிந்து பழகுவதே யோகம். அதன் மூலம் மூச்சோடா நிலையைப் பெறுவதே நிஷ்டை சுத்த சைதன்ய சுகனிலை என்பது, இரவு பகலற்ற ஞான சைதன்ய இடமாகிய வெளி."வெளிக்குள் வெளி கடந்து சும்மா இருக்க சுகம் "என வள்ளல் பெருமான் அருளியுள்ளார்கள். வேதத்தில் அருளியுள்ள சரியை, கிரியை, யோகம், ஞானம், மற்றும் சூத்திரன், வைசியன், சத்திரியன், பிராமணன், போன்ற வர்ணங்களின் படினிலைகள் ஆகும்

*ஜீவசகோதரி ஷண்முகப்பிரியா அவர்களின் புரிதல்*

**பொங்குபல சமயமெனும் நதிக ளெல்லாம்** என்ற திருவருட்பா பாடலின் புரிதல் மெய்ஞானப் பயிர் செழித்து வளர சாதி, சமயம்,மதம், குலம், போன்ற வரப்புகளை பெரியோர்கள் உண்டாக்கியுள்ளார்கள். ஆசானின் பெருங்கருணையே அறியாமை என்னும் களைகளை வேரறுத்து நற்பயிர் எனும் அறிவைக் கொடுக்கிறது. பாவச் சுவாலையில் தவிக்கும் மக்களுக்கு னம் மெய்வழிப் பொன்னரங்ஙம் ஒரு னிழலாக, பிறவி னோய் தீர்க்கக்கூடிய கூடஸ்தமாக உள்ளது.

*ஜீவசகோதரி மஹிமா அவர்களின் புரிதல்*

**ஐந்து கரத்தினை ஆனை முகத்தினை...புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே...**

நிலையில்லாது, இளமையிலிருந்து பிணி, மூப்பு, சாக்காடு என சரிந்து கொண்டே இருப்பது சரீரம். சந்துகள் (ஒன்பது துவாரங்ஙள்) உள்ள தேகம் அனித்திய தேகத்தின் பிறப்பிடம் னாற்ற கருவறை. அது காலத்தின் துணையுடன் செயல்படுவது, சிற்றின்பத்தையே னாடுவது, னித்திய தேகமோ அழியாதது, காலம் கடந்தது, பேரின்பத்தை அளிப்பது, தூங்ஙாமல் தூங்ஙி சுகம் அடைவதில் உள்ளது பேரின்பம். இதையே,

**னின்றதொரு பிரளயத்தி னதிசயங்ஙள்**
**னெடுங்ஙாலம் னீயிருந்நே காண வேணும்** (அமுத கலைக்ஞான போதம்)

காண வேணும் என்பது புறத்தை நீக்கி, அகத்தில் அசலை காண்பதாகும்.

**மறுபிறப்பு**- னம்முள் இருக்கும் இறைவனை அறிய ஆசானின் பரிசுத்த ஆவியாகிய னாதத்தின் மூலம் மறுபிறப்பு பெற்று, உடம்பு இழுக்கென அறிந்து, உடம்பினுள் உத்தமனைக் கண்டு வணங்குவதையே "உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்" என திருமூலர் கூறுகிறார்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரி ஸ்ரீமாவின் அவர்களின் புரிதல்*

நால்வகை யோனி. புழுக்கம், வித்து, அண்டம், சினை, என்பதாகும்.

**புழுக்கம்**- தாயின் கருவறையில் இருந்த காற்றும், அக்னியும், சேர்ந்ததே புழுக்கம் என சத்தியப் பெரு விண்ணப்பத்தில் வள்ளலார் அருளியுள்ளார்கள்.



**வித்து**- **வித்ததில் மரமாய் மரமதில் வித்தாய்** என குருமணி மாலையில் ஆண்டவர்களும், 96 தத்துவங்களைக் கொண்ட வித்தினை ஔவையார் "தத்துவ நிலையை தந்தெனை ஆண்ட விக்ன வினாயகா" எனவும் அருளியுள்ளார்கள்

**அண்டம்**- முட்டையிலிருந்து ஜனித்ததால் பிரம்மாவிற்கு அண்டஜன் என்ற னாமம் உண்டென சித்த வேதத்தில் கூறப்பட்டுள்ளது.

**சினை**- ஆதிமான்மியம் - ஆதியோதயத் தலை பருவத்தில் - தன்னுடைய கஜானா பொருள்களைவெளியாக்கவேண்டி எங்ஙணும் எக்காலத்தும் எவ்விதத்தும் தனக்கு னிகரில்லாத சுத்த சைதன்ய தனிப்பெருங்ஙருணையென்னும் ஒரு தெளிவான னாட்டத்தைக் கொண்டு தனக்குள்த்தானே மல்கராவான தென்னப்பெற்ற கடுங்ஙார - விம்மலென்னும் ஓர் விசும்புதல் உண்டாயிற்று - என்று பிரம்ம பிரகாச சாலை ஆண்டவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள், இதனையே தாயின் சினையில் நான் என கருப்பிடித்து வந்த வித்தானது காலம், னாமம், ஒலி, உருவம், சுவை, நிறம், அசைவு, குணம், எழுத்து, மூலம், ஔி,சுத்தம், இவற்றை தன்னுள் அடக்கி கொண்டு கன்சூல் மகபியா என்னும் கூரிய இருள் வஸ்த்து உண்டாயிற்று என்று அகத்தியர் அருளியுள்ளார்கள் தொடர்ந்து குருபிரானின் ஆசீர்பாதத்துடன் அவை நிறைவேறியது

**13-01-2022 ~ வியாழக்கிழமை ~ போகிப்பண்டிகை சிறப்பு சபை ~ சிவகாசி**
**தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்**

பிரம்ம பிரகாச மெய்வழிச்சாலை ஆண்டவர்களின் திரு அவதாரத் திருனாளான இன்று, *ஆதி மான்மியத்தில் வளர் குழந்தை குமார பருவத்தில்* ***அவதாரம்*** பற்றிய சிறப்பு பகுதியானது சபையில் ஓதப்பெற்றது.

**ஜகத சற்குணா லங்ஙிர்த சன்னதர்**
**அகம்பு றம்புங்ஙண் டாண்டச லாசனர்**
**யுகங்ஙள் னான்ஙுங்ஙை கொண்டகோ டூழியர்**
**மகதி ஆண்டவர் வந்நவ தாரமே**

**ஜவகைப் பொறுப்புடை அண்ணல் பிறந்நார்**
**மெய்வழி வழங்ங மேதினி பிறந்நார்**



Copyright © AMNA Trust, Chennai


ஸ்ரீலஸ்ரீ. மெய்வழி சாலை ஆண்டவர்கள்

ஐவகை பொறுப்பு என்பது ஐங்கரத்தை உடைய கணபதியின் செயல். குரு, கணபதி, சிவம் என்பது வேறு வேறல்ல. கணபதி ஒரு தத்துவ வடிவம். ஐந்து கணங்களுக்கும் அதிபதி கணபதி. அதை அறிவில் காட்டித் தருகின்றவரே காட்டான் (காட்டுகின்ற குரு ஆண்) ஐந்து அறிவையும் இன்னது என்று உன்னுள் இருந்து எது அறிவிக்கிறதோ, அதுவே ஆறாவது அறிவு என்று எளிமையாக விளங்கும்படி குருபிரான் அருளினார்கள். அருள் என்பது யுகாந்த நாட்டுச் செல்வம். எல்லா கோயிலிலும், தெய்வ நாமங்களுக்கு முன் *அருள்மிகு* என்று எழுதியிருப்பதை காணமுடிகிறது. ஆனால் அருள் என்பதன் உண்மைப் பொருளை அறிந்தவர்கள் வெகு சிலரே. ஆசான் கையகத்தான மக்களுக்கு மட்டுமே மெய்யான அருள் கிட்டுகிறது.

**ஆசைக்கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன் கைப்**
**பாசத்தில் அல்லற்பட இருந்தேனை நின் பாதம் என்னும்**
**வாசக் கமலம் தலை மேல் வலிய வைத்து ஆண்டு கொண்ட**
**நேசத்தை என் சொல்லுகேன் ஈசர் பாகத்து நேரிழையே**

என்ற *அபிராமி பட்டரின்* பாடல் வரிகள் உணர்த்துவது - வாசக் கமலமாகிய ஆசானின் வாக்காகிய அருளமுதமே அந்தகனாகிய எமனிடமிருந்து நம்மை காப்பாற்றி, கோள்களின் பிடியிலிருந்து னிக்கிரகித்து, அனுக்கிரகம் என்ற அருளை வழங்குகிறது. *மெய்ப்பொருள் அடைக்கலப் பா* என்ற பாடலில்,

**கோடிக டந்நவி ராட்க்குருவே**
**கோளரி வாளுடன் முன்னடவாய்** என்றும்

**காலக்கி ரகங்ஙள் சூழ்ந்நவங்ஙே**
**கோளரி வாளாகி னின்றவரே**
என்றும் இரண்டு னிலைகளாக அருளப்பெற்றுள்ளது.

காலக் கிரகங்களில் அகப்பட்டுக் கிடந்த நம்மை ஏக வியாழனாகிய குருவின் நாதமே - கோளரி வாளாக நின்று ஒன்பது கிரகங்களின் ஆட்சியை வெட்டிச் சாய்த்து நம்மை கிரகஸ்தனாக மாற்றுகிறது. அன்னாதமே னரன் என்ற னிலையில் இருந்த னம்மை மனிதனாக, தேவனாக மாற்றுகிறது. அனித்திய பிறப்பிலிருந்து னித்திய பிறப்பில் நாம் ஏற்றப்பட்டிருக்கிறோம் என்பதை ஆசான் நமக்குப் பழக்கித்தந்த பிரம்ம வித்தை செயலின் மூலம் தன்னுள் உணரும்போது தான் அவதாரத்தின் உன்னத னிலையை அறிய முடியும். இச்செயலை ஆண்டவர்கள், *மெய்ன்னிலை போதத்தில்*

**சுத்தசை தன்ய னாதர் சொல்லொரு பொருளி னாலே**
**செத்துனீ தினம் பழகத் தெரிந்நிடும் உளவு தானே** என்று அருளியுள்ளார்கள்.

மாயாசரீரமாகிய தூலம் இல்லாமல் எக்காலத்தும் எவரையும் ஞானத்தில் ஏற்றி வைக்க முடியாது. மனிதனை தெய்வீக நிலையில் ஏற்றி வைக்க கட்டாயம் அவதாரம் நிகழ வேண்டும் எனக் கூறி குரு பெருமான் சபையை நிறைவுச் செய்தார்கள்.


Copyright © AMNA Trust, Chennai

**14-01-2022 ~ வெள்ளிக்கிழமை ~ பொங்கல் சிறப்பு சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. பானுமதி குமரேசன்**

அமுத கலைக்ஞான போதம்- இரண்டாம் காண்டம் -**துறந்த மனத் தனியோகர் உளத்திற் பூக்கும்** என்ற பாடலுடன் அவை தொடங்கியது.

**அமலவாழ்வு:** அமலாம் பஞ்ஞாட்சரத்தை பெற்று, அழியாப் பிறப்பில் குடியேறி வாழ்வது.

**கலாம் சரீபு:** ஆசானின் ஓர் எழுத்து மாத்திரைக்கோல் கொண்டு எழுதப்பட்ட வேதத்திற்கு கலாம் சரீபு என்று பெயர். அதுவே குரு தட்சிணாமூர்த்தியிடம் இருக்கும் சின்முத்திரை- சிவமயப் பொருள். ஆறாவது அறிவு கொண்டு தான் அப்பிரகாசப் பொருளை அறிய முடியும் என்பதற்கு சாட்சியாக நம் ஆண்டவர்கள், ஞானச் சங்கு பாடலில்

**கலங்கொண்டு எழுதா எழுத்தது மீமாய்க்**
**காணுமற் றலையுடன் காலாய்**
**இலகிய தலைபார்த் தூதிடத் தொனித்தங்**
**நெழுந்நிடும் வலம்புரிச் சங்கே**

என்று அருளியுள்ளார்கள்.

**கோளரி சாலையர் திருனாள்**:

**பாழைப் போக்கிப்ப லன்கைகு லுக்கிட**
**னாள தாவரு னண்ணிய தாமுடி**
**வாழும் மாதம்தை யாமுதற் றேதியே**
**கோள ரிசாலை யர்திரு னாளதே**

மெய்யானது எப்போது நம் உள்ளத்தில் தைக்கிறதோ அதுவே தை பொங்கலாகும். சூட்சும தேகத்தில் உள்ள ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ராகு, கேது என்ற நவக்கிரக கோள்களானது ஆசானின் வாய்மை மூலம் அறியப்பட்டு காலமற்ற இடத்தில் குடியேற்றி வைக்கிறது. ஆசான் திருவடி னிழலில் படிந்து பிரம்மவித்தையை பழகித் தேர்ந்த பிறகே சர்வவேதங்களின் மெய்ப்பொருளும் நம்முள் மெய்யாக்கப்படும். தீர்க்கதரிசனமும் இதையே தீர்க்கமாக சொல்கிறது. அவ்வாறு அழியாத மெய்ப்பொருளை தேடுகின்ற தேட்டமுடையவனே மனிதன் என்று வேதங்களும் அறுதியிட்டு கூறுகிறது. இதனை மெய்ன்னிலைப் போதத்தில்,

**சுத்தசை தன்ய னாதர் சொல்லொரு பொருளி னாலே**
**செத்துனீ தினம் பழகத் தெரிந்திடும் உளவு தானே** என அருளப்பட்டுள்ளது.

**தனித் தலைமைப் பெரும்பதி:** வந்த வந்த ஞானிகள் போல் அல்லாமல் நம் ஆண்டவர்கள் தன் குருவை சந்தித்தபிறகு தன் குடும்பத்தை விட்டு அவர்பின்னே சென்று சரணாகதி அடைந்து தேவசன்னதங்கள் பெற்று அவதார புருஷராய் னின்று, தன்னை அண்டி வந்த மக்களுக்கும் மெய்யை வழங்கினார்கள். பெண் துணையானது ஞானம் பெற இடைஞ்சல் இல்லை என னீதித் திருமணம் புரிந்து, குடும்ப சமேதர ராய் வாழ்ந்து காட்டினார்கள். மேலும் ஜாதி, மத, ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசமின்றி சமத்துவத்தை ஏற்படுத்தி ஞானத்தை போதித்து, உலக காரியத்திற்கு தெய்வீகம் தேவையற்றது என்பதையும், இறை திருகாரியத்திற்கு எப்போதும் யாவற்றாலும் எவ்வித தடைகளும் வராது என்பதையும் நிரூபித்த நம் ஆண்டவர்கள்- வந்த வந்த தீர்க்கதரிசனங்கள் எதிர்பார்த்திருந்த ஒரு தனித் தலைமைப் பெரும்பதியாகும்.

எண்ணம் மேல் நோக்கமாக இன்றி கீழ்நோக்கமாக இருந்தால் அது வினையில் சிக்கி பிறவிச் சூழலில் சிக்க வைக்கும். குருபெருமானின் வாய்மைக்குள் ஆனவுடன் நம் எண்ணம், சொல், செயல் மூன்றும் மேல்நோக்கமாகி பிறவாமை எனும்


Copyright © AMNA Trust, Chennai

பெரும்பேறு கிட்டும். இதையே நம் தெய்வமவர்கள் **எண்ணு கின்றனல் லெண்ண மனைத்தையும்** என்று காலந் நாட்டிய காரணப் பா பாடலில் அருளியுள்ளார்கள்

**ஆதிச்சா லைனாட்டு-மெய்வழி**
**ஆண்டவர் மக்கள் குலம்**
**னீதிப்பெ ருங்குடி மாலைப்பா னைப்பலி**
**-பொங்கலோ பொங்கல்**

என்ற பானைப்பலி பாடலுக்குள் பொதியப்பெற்றிக்கும் ஜீவனுக்கான இரகசியங்களை குருபிரானவர்கள் அருளிச் செய்து அவையை நிறைவு செய்தார்கள்.

**14-01-2022 ~ வெள்ளிக்கிழமை ~ சிவகாசி ~பொங்கல் சிறப்பு சபை (மாலை)**
**தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்**

**ஜோதி**: மும்மலங்களான ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றையும் சுட்டு எரிக்கின்ற ஆசானின் திருநாவில் இருந்து வருகின்ற வாக்குத் தீயே ஜோதி,

**ஏழு திரை**: னபுசுகளாக உள்ள ஏழு நிலைகளே ஏழு திரைகளாக உள்ளது.

**இசை**: ஒரு பாடல் படிக்கும் போது மூச்சு உள்ளிழுக்கும் மற்றும் வெளிவிடுகின்ற னேர்த்தியான கலையைக் கற்பிப்பதே இசை.

**பிரம்மம்**: சிற்றின்பத்திற்கும், பேரின்பத்திற்கும், காரணமான, முக்காலத்தையும் அறியக்கூடிய மனமாகிய பிரம்மத்தை அறிந்து அதனுடன் இரண்டறக் கலந்தால் மனுவும் பிரம்மம் ஆகலாம். ஜீவ சகோதரி லாவண்யா வாசுதேவன் பாடிய **பானைப் பலி** பாடலை, குருபிரான் விளக்கி அருளினார்கள்.

***ஆதிச்சா லைனாட்டு - மெய்வழி***
***ஆண்டவர் மக்கள் குலம்***
***னீதிப்பெ ருங்குடி மாலைப்பா னைப்பலி***
***- பொங்கலோ பொங்கல்***

***மங்கையர் பொங்கலிட - மாமண***
***வாளர்கள் கூடனிற்கத்***
***தங்கள்பெண் டுபிள்ளை தாமெல்லோ ருங்கூடப்***
***- பொங்கலோ பொங்கல்***

***ஆலயம் சுற்றிலுமே - அடுப்பிட்டுக்***
***கோலமாம் பானையிலே***
***சாலைஜீ வத்தண்ணீர் வேண்டியு லையிட்ட***
***- பொங்கலோ பொங்கல்***

***செல்வமுச் சீரும்பொங்க - சேர்ந்தபேர்***
***சென்மசா பல்யம்ஓங்க***
***கங்குல்ப கலற்ற செங்கம லத்திருப்***
***- பொங்கலோ பொங்கல்***

***அன்னிய பாவம்பொங்கி - இன்னா***
***னலைந்நதை வேரறுத்து***
***னன்னெறிப் புண்ணியம் பொங்கிப்பொங்கிவரும்***
***- பொங்கலோ பொங்கல்***



Copyright © AMNA Trust, Chennai 

***மக்கள்பா னைப்பலிசெய் - ஆண்டவர்
முக்கூருக் கத்திகொண்டு
பக்கப்ப னிமதி னிற்கமக் கள்திரள்
- பொங்ஙலோ பொங்ஙல்***

***ஜகாதியந் நம்விளங்ஙும் - தேவன்
அவாந்நரக் காட்டினிலே
மகாசன மக்கள்தி ரண்டபா னைப்பலி
- பொங்ஙலோ பொங்ஙல்***

***உத்யோவ னக்காட்டிலே - மேமக்கள்
னித்யத்த வத்தேறும்சத்தினி முன்பாக உத்தமர் தங்ஙுலப்
- பொங்ஙலோ பொங்ஙல்***

***னெடுங்ஙலி யுகம்மழிந்நு - பூவண
னடுனீதி யுகம்புரக்கும்
திடதீர்க்கத் தெரிசனம் னடைபெறுங் ஙாட்டிலே
- பொங்ஙலோ பொங்ஙல்***



மெய்வழி ஆண்டவர்கள் முக்கூர் கத்தி கொண்டு பானைப்பலியை எடுத்து நடத்தினார்கள், பானைப்பலி பற்றி பைபிளிலும் கூறப்பெற்றுள்ளது. நாம் உடல் அல்ல என்பதை உணர்த்தி முறை சங்காரம் செய்து, நமது அழியாத சொந்த உடம்பில் குடியேற்றி வைத்து பிறவாமையில் பெரியோர்கள் நம்மை ஆக்கும் செயலே பானைப் பலி அதன் பலனாக மகிழ்ச்சி பொங்ஙுவதே பொங்ஙல். நரசிம்ம அவதாரம் உணர்த்தும் செயலும் இதுவே.

மணவாளர் எனும் ஆசானாகிய ஆண், மங்கையர் (ஆண், பெண்) எனும் சீடர்களிடத்தில் அறிவில் போகம் கொள்ளும் நிலையே சிவபோகம். இதில் பிறப்பெடுக்கும் தேவகுழந்தையே அறிவாகும். ஜீவத் தண்ணீராகிய தேசிகர் வாசகமெனும் தீர்த்தத்தை வெண்டரள பானையிலிட்டு ஆன்மா லயமாகும் இடமாகிய ஆலயத்தில் வைத்து ஆசானின் னாதமாகிய அனல் கொண்டு மூட்ட வேண்டும்.

சாலை ஆண்டவர்களும், வள்ளல் பெருமானும் தமிழ் பஞ்ஞாட்சரம் என்று அருளியுள்ளார்கள். பஞ்ஞாட்சரம் மனிதனிடத்தில் சொந்த உடம்பாக, சூட்சுமமாக, இருக்கிறது.அதனை மாதவராகிய குருபிரானின் இரக்கத்தால் பெற்று மும்மலம் கருகியவர்களுக்கே முச்சுடர் தோன்றும். அதன் அடையாளம் மடை திறந்த வெள்ளம் போல் வருகின்ற அவரது வாய்மையே.

ஆசானின் னாதமே சீர்பாதமாக, னினைவாக, னாவாக விளங்குகிறது,.கங்ஙுல் பகலற்ற அவ்விடத்தில் இருந்து வரும் உணர்வு, அறிவு, அனைத்தையும் பெற்று ஜென்மம் கடைத்தேறுவதே பொங்கல். இதையே



Copyright © AMNA Trust, Chennai

**சென்மந்நோ றும்செய்த கன்மங்கடைத் தேற்றவந்த**
**சன்மார்க்க ரென்னாசான் சீர்பாதம் யான்மறவேன்-** என்று இடப்பாக ஆசாரக் கண்ணியில் நமது தெய்வமவர்கள் அருளியுள்ளார்கள்

இறைவனுடன் இரண்டறக் கலப்பது அத்வைதமாகவும் இதற்கு மாற்றமாக துவைத நிலையும் உள்ளது. குருபிரானை அன்னியமாக எண்ணாமல் இருந்தால் தர்மமாகிய பிரம்மவித்தை செயலை நமக்கு போதிப்பார்கள். இதற்கு தடையாக இருக்கும் நம் மனதை மாற்றக் கூடிய செயலே ரசவாதம். இதுவே னன்னெறிப் புண்ணியம்.

மெய்வழி ஆண்டவர்கள் முக்கூர் கத்தியாகிய "னா" கொண்டு பானைப் பலி எடுக்கிறார்கள். ஆதி அந்தமாகிய முதலுக்கும் முடிவுக்கும் னடுவாக ஜகம் இருக்கிறது. அதைத் தெரிந்தால் தோற்றமும் முடிவும் தெரியும். அதுவே ஜகனாதனாக உள்ளது.

பாவங்களைச் சுடும் காடாக இருப்பது உத்தி ஒவண்ணம். முத்தி பாலிப்பு, முத்தி பூரணம், சுத்தி பாலிப்பு, உத்தியோவன சித்தி கானகம், முத்தி லோகம், இவையாவும் செயலை வைத்து பேசப் பெற்றுள்ளது. புருஷனில் உத்தமர் எனும் புருஷோத்தமராகிய ஆசான் நடத்துவதே பொங்கல்.

இறைவனாகிய மறைக்காடனே குருவாக காட்டானையாக உள்ளார். னீதி யுகம் என்பது பிராணனின் ரகசியத்தை அறிந்து அறிவு நிலையில் நிலைபெற்று இருப்பது. பொங்கல் பொங்க வேண்டிய இடம் அவரவர் முகத்தில் னடு கருவாக வெண்டரளமாக உள்ளது. ஆசானிடத்தில் இருந்து பொங்கி வரும் கங்கையில் நமது மன எழுச்சி அடங்கி அறிவு பொங்கி அதன் மூலம் உணர்வைப் பெற்று இறை பதத்தை அடைய வேண்டும். ஆதி மார்க்க னீதி அவையின் மக்கள் யாவரும் பொங்கல் சீருடனும், சிறப்புடனும் வாழ வேண்டும் என்ற ஆசீர்பாத வார்த்தைகளுடன் குருபிரான் அவர்கள் அவையை இனிதே நிறைவு செய்தார்கள்

## 15-01-2022 ~ சனிக்கிழமை செல்வப் பொங்கல் சிறப்பு சபை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

***அறுக்குமட்டு மாய்கைதனை யறுத்தே விட்டு***... எனும் பாடல் பாடப்பெற்றதை தொடர்ந்து, குரு பிரானவர்கள் மாய்கையை அறுத்து விருப்பமுடன் மனம் ஊணி உறைந்து மெய்ஞானத்தை வெல்லக் கூடிய சாதனங்கள் அனைத்தையும் வேதசாட்சிப்படி அருளினார்கள்.

**பாதம்:**

**வீடான வடமேரு கிரியினிட பாதம்,**
**உபனிடதத் தெளிந்நவொளி மலையின் பாதம்,**
**அருவுருவா யெனையாண்ட விண்ணின் பாதம்.**

வீடு, வடமேருகிரி, கைலாயம், எல்லை திசையற்ற திருத்தலம், செங்கமலத்தாயாம்சின்மயம், சிவமயம், பஞ்ஞாட்சரம், ஏகாட்சரம், எல்லாம் திருச்சிற்றம்பலப் பொருளாகிய ஜீவனையே குறிக்கிறது. அறிவுக்கு அறிவாம் என் ஆசானின் பாதமாகிய னாதம் நம்முள் புகுந்து அறிவெனும் பாதமே நம்மைத் தாங்கிக் கொண்டிருக்கிறது என்பதை உணரவைக்கிறது.

**முக்தி**: பிறக்கமுக்தி, நினைக்கமுக்தி, பார்க்கமுக்தி, சொல்லமுக்தி, இறக்கமுக்தி என்று கூறப்படும் ஐந்து தலங்களின் நிலையானது, நம்முள் பஞ்ஞாட்சரத்தை அறிந்து முக்தி எனும் பிறவாமை அடைவதை உணர்த்தும் தத்துவமாகும்.

**ஆதி மான்மியம்: ஜீவ சிம்மாசனப் பருவம்:**

மனிதனின் உப்புப்பாண்ட உடலுக்குள் நீராதாரமான சுண்ணாம்பு, இரும்பு, செம்பு, துத்தநாகம், கந்தகம், ஈயம், தங்கம், வெள்ளி, தாமிரம்


Copyright © AMNA Trust, Chennai

முதலான பலவகைப்பட்ட தாது உப்புச் சத்துக்கள் ஒவ்வொரு சொட்டு ரத்தத்தின் அணுவுக்குள்ளும் இருக்கிறது. உப்பு அதிகமானால் பலவித நோய்கள் உண்டாகும். மனதின் செயலால், உடலில் உப்பு அதிகமாகும்போது விஷமாகவும், மனம் அறிவாக மாறும்போது லவணமணி மந்திர ஔஷதமாகவும் மாறுகிறது. இதையே ஆண்டவர்கள்

**விடமதுவுண் டமுதமது ஊறிவர லெங்கே**, என்று மெய்ன் னிலைப் போதத்திலும்

**விடமதனைக் கைவாசி மூலிகைச் சார்**
**விட்டாட்டி ஜெயப்பதத்தி லெடுத்தருந்து** என்று குரு முறாதியிலும்

**விடமுமு றிந்நமுதம் மடையுந்நிறந்துவிடு - முளவோரே** என்று பூரணவண்ணப் பா பாடலில் அருளியுள்ளார்கள்.

**உடல்: உடம்பு னற்பலன் உயிர் மதி வாழ்வாம்** உடலுக்குள்ளிருக்கும் சூட்சும உடலின் ரகசியங்களை உணர நம் உடலை பேணி பாதுகாக்க வேண்டும். நோயற்று வாழ, பசி, தாகம், தூக்கம் முதலான உடல் மொழிகளை அறிந்து செயல்பட வேண்டும். பெரியோர்கள் **உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே உடல் வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே** என்கிறார்கள். உடலைக் காக்கும் உணவுகளை உண்டாலும் உடல் வளர்ச்சிக்கான தாதுஉப்புகள், சக்தியைக் கொடுத்து வளர்ப்பது இறைவனே என்ற ரகசியத்தை வள்ளல் பிரான் "திருஅருட்பா" வசன பாகத்தில் நான்கு விண்ணப்பங்களில் அருளியுள்ளார்கள்.

**அறுகூறு சுவை:** மனிதன் அறுசுவையாக உண்ணாவிட்டால் அறிவு மழுங்கி அறிவற்றவன் ஆவான். அறுசுவையில் ராஜசுவை உப்பு. **ஆண்டவர்கள் திருவாக்கு: *உப்பு னாவில் இல்லாவிட்டால் உப்பை உணரமுடியுமா? நம் உள்ளத்தில் தேவஞானம் ஆதியிலே படைக்கப்பெற் றிராவிட்டால் ஞானத்தை இன்று நம்மால் உணர முடியாது*.** நம் எண்ணம் எதை சார்ந்திருக்கிறதோ அதற்கேற்ப நம் னாவில் உப்பின் சுவை அதிகமாகவும், குறைவாகவும் இருக்கும் என்ற தேவ ரகசியச் செயல் வைத்து அருளப்பெற்றதே இத்திருவாக்கியம்.

**தலையின் சிறப்பு**: எல்லா ஜீவராசிகளின் தலையை ஒப்பிட்டாலும், ஒரு மனிதனுடைய தலைக்கு ஈடாகாது. உப்புப்பாண்ட உடலுக்குள் சொர்க்கம், மத்திய, பாதாளம் என்ற மூன்று உலகங்கள் உள்ளது. மனுத்தலையில்தான் கதிர் மதி மின் பனி தாரகை அவனி யாவும் உள்ளடக்கிக் கொண்டு அழியாவஸ்து அணுவாக உள்ளது. "நான் ஆன்மா பசு சிற்றணு வடிவினன்" ஆகிய அணுவினை ஆறாவது அறிவாகிய வாடாத ஓரறிவாய்ப் பாயும் முனைக்கூராகிய மனக்கண் கொண்டுதான் காணமுடியும். நிர்குணராகிய வேதத்தாய் ஆலவாய்ச் சூலில் வைத்து, சொன்னயனக்கலை மூலம் மூன்றாவது கண் திறப்பிக்கும் பிறப்பானது- உபனயனம், உபனிடதமாக உள்ளது. வஸ்து வித்தானது மனிதனுடைய எண்ணத்தின் பிற்புறப்பிடரியில் னிறை னீதியாசன பீடமிட்டிருந்து வருவதை "உருண்டோடிப் படியுந்நல மிதுதாண்டா மகனே" என்று அமுத கலைக்ஞான போதம் 58-வது பாடலில் **16**-நிலைகளாக ஆண்டவர்கள் அருளுகிறார்கள். உருண்டோடிப் படியுந்நலமானது, நாம் தூங்கும்போது அறியாமை நிலையாகவும், தூங்காமல் தூங்கி சுகம் பெறும்போது அறிவு நிலையாகவும் உள்ளது.

**தெய்வத் தேடு கூடகம் - வஸ்த்து துதி:**

வஸ்துவாகிய அகரம், அகமியம், மகான்மியமாக வஸ்துவித்தாக, எழுதாதஎழுத்து, ஓதாமலோதும் வேதம், வித்தில்லாவித்தாக இருக்கிறது. வித்தில்லா வித்தை விதைக்க வந்த சிவக்கொழுந்தாகிய ஆசானின் னாதம் மூலமே, அவரவரின் னாமம் ஆன்மாவிற்கேயன்றி உடலுக்கல்ல என்ற பெருநிலையை உணரவைக்கிறது. பாதனிலை வைத்த வரோதயராகிய ஆசானின் வாய்மையால், அடி முடி னடு இரகசியமாகிய "ஔ" என்பதை தன்னுள் செயலாக அறிந்து, அகரம் தான் முதல், என்பதை நாம் உணர்ந்து பெருவாழ்வு வாழ இறைவன் நல்லருள் பாலிக்கவேண்டி



Copyright © AMNA Trust, Chennai

பரிசுத்த ஆவி தெய்வத்தின் பொற்பாதங்களை வணங்கி குருபிரானவர்கள் அவையை நிறைவு செய்தார்கள்.

**15-01-2022 ~ சனிக்கிழமை செல்வப் பொங்கல் சிறப்பு சபை ~சிவகாசி**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**பாதம்** அறிந்தவர்க்கே வேதம் விளங்கும். சர்வவேதங்களும் புகழும் பாதமானது சிவமயப் பொருளாக, ஏகாட்சரமாக வேகாக்காலாக, அறிவெனும் பாதமாக ஒவ்வொரு மனுத் தலையிலும் வீற்றிருக்கிறது.

**குரு முறாதி-**

**கொழுமுனையாம் கதிர்முனையி லாடும் பாதம் ...**
**....னம்பினவர் குடி திருவங் ஙேறும் வாழ்வே.**

முக்கோணமென்னும் கொழுமுனையின் இரகசியத்தை, ஆதிப்புள்ளியாக இருக்கும் கதிர்முனையை, கோடான கோடி மறை புகழும் பாத னிலையை, தளிர், இலை, பூ, காய், பழமாய் இருக்கும் பஞ்ஞாட்சரத்தை, சகல உயிர் ஜீவனிலும் ஆடும் பாதத்தை, பழுதணுகாத ஆலயமாகிய பக்தரின் உள்ளத்தில் கோயிலாக பூத்திருக்கும் அழியாத திருப்பாதத்தை நம்பினவர்க்கு, குருவைப் போற்றி குடியோங்ஙி வாழும் பெருவாழ்வு கிட்டுகிறது. அதே பாதம் னழுகு மனமாக இருப்பவர்க்கு னாசபாதமாக மாறிவிடுகிறது. இச்செயலை வித்தியா பாதம்-அவித்தியா பாதம் என்று மேல் கீழ் பாதமாக வேதத்தில் அருளப் பெற்றுள்ளது.

**ஆதிமான்மியத்தில்**, ஜீவாத்மா பரமாத்மாவின் இரகசியத்தை பதிமூன்று னிலைகளாக ஆண்டவர்கள் அருளிச் செய்துள்ளதைப் போன்றே, வள்ளல் பிரானும் அகரத்தின் இரகசியமாக- விந்து னாதம், பரவிந்து பரனாதம், அபரவிந்து அபரனாதம், என்ற பதிமூன்று நிலைகளாக அருளியுள்ளார்கள். இத்தேவ இரகசிய செயலை, தேவசன்னத முத்திரை பெற்று வரும் குரு பிரானின் பெருங்கருணையால் மட்டுமே அறிந்தடைய முடியுமே அல்லாது படித்து தெரிந்து கொள்ள முடியாது.



*திரு. சாலை ரவி அப்பா அவர்கள்*
*நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை*

**தௌஹீது மக்காமில்**, ஆண்டவர்கள் அருளியுள்ள, ஹயாத்து முதல் கலாம் வரையுள்ள சிபத்தின் ஏழு நிலைகளும், ஹம்மாறா தொடங்கி காமீலா வரையுள்ள னபுசின் ஏழு நிலைகளும், அவற்றின் குணங்களும் செயல்களுமாக கூறப்பட்டுள்ளதை ஆசான் அவர்கள் பெருங்ஙருணை கொண்டு நம்முள் உணர்த்தி, னபுசை சிபத்தாக்கும் பிரம்மவித்தை செயலை பழக்கி வைத்து கீழ்னோக்கி செல்லும் மனதை மேல் னோக்காக அறிவாக மாற்றி வைக்கிறார்கள். இச்செயலை ஆண்டவர்கள், **பாதமதி லிருந்நு சின்னாட் பழகி வரச் சொல்லி,** என்று அமுதகலைக்ஞான போதம் பாடலில் அருளியுள்ளார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

மனிதனின் தூல, சூக்கும், காரண, மகாகாரண என்ற நான்கு தேகத்தின் சூட்சமங்களும் அமானிதத்துள் பொதித்து வைக்கப் பெற்றுள்ளது. அப்பெரும் சிறப்புடைய அமானிதப் பொருளை மாயையினால் பஞ்ஞுமாபாதகமாக மாற்றிக் கொண்டு துன்பப்படுகிறோம் என்பதை **ஆதி மான்மியம் மூல பண்டாரப் பருவத்தில்,** அமானிதமென்னும் பெருந் தவப் பொருளான வித்தியா தத்துவமாகிய ஏழும்-வாங்கிக் கொண்டுவந்த இங்ஙே இவனது செயல் சீரின்றி பஞ்ஞுமாபாதக விரிவளர் வித்தாக முளையெழச் செய்வித்து விருட்சமாக மாற்றிக் கொண்டு விட்டதினாலே மாயை என்றெழுந்து-இவனைச் சாய்ப்பதற்கென்றே னபுசுகளாகி னிற்கும் அவைகள் ஏழும்- ஒவ்வொருவரின் பக்குவத்திற்கு ஏற்றவாறு ஆசான் ஆலவாயூற்றில் இருந்து பிறங்ஙும் னாதம் மூலம் பரிசுத்தமாக மாற்றப்படுகிறது என்பதை ஏழு னிலைகளாக தெய்வம் அருளியுள்ளார்கள்.

பாதனிலை வைத்த வரோதயராகிய குருபிரானவர்கள் விண்னாட்டிலிருக்கும் இப்பாரப் பெரிய பாத இரகசியங்களை பேரிரக்கம் கொண்டு அருளிச் செய்து அவையை னிறைவு செய்தார்கள்.

**16-01-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி**

*ஜீவ சகோதரர் கௌதம் அசோகன் அவர்களின் உரையாடலின் தொகுப்பு -*

**ஆறிரு சமயத்திற்கும்**
**அறிவுரை தெய்வ மாகி**
**ஆருயிர்க் குடிப்பி றந்நா**
**ரனைவர்க்குந் நந்நை யாகி...**

என்ற பாடலின் புரிதலாக உலகத்தில் உள்ள மதங்கள் யாவற்றிற்கும் அறிவு என்ற பரம்பொருள்தான் பிரதானம். புற சமயம் ஆறு, அக சமயம் ஆறு என மதங்கள் 12 ஆக உள்ளது.

**புறசமயம்-**

1.கணபதி-காணாதிபத்யம், 2.முருகன்-கௌமாரம், 3.சிவன்-சைவம், 4.திருமால்-வைணவம், 5.சக்தி-சாக்தம், 6.சூரியன்-சௌரம்

**அகசமயம்-**

1. **கணபதி**-சகல ஜீவனுக்கும் பஞ்ஞ பூத கணத்தலையரசனே கணபதி

2. **முருகன்**-ஜீவகுகை தோறும் வீற்றிருக்கும் மறுவிலா குகன்

3. **சிவன்**-மூன்று கோடும் இரண்டு இடைவெளியும் சேர்த்து ஐம்மணிப் பொதிகையாக உள்ள பஞ்ஞாட்சரம் எனும் அழியாத னித்திய வேத தலையாக உள்ளது

4. **திருமால்**-னாமத்தை குறிக்கும் செயலான சாகாத்தலை

5. **சக்தி**-தலையான தலையை காக்கும் பத்து வயது கன்னி

6. **சூரியன்**-ஆதித்திய இருதயம் என்ற பிரகாசப்பொருள்

அனைத்து சமயங்களும், உணர்த்துகின்ற ஒரே பொருளின் ரகசியத்தை தன்னில் அறிவதே **தன்னை அறிதல்** இதுவன்றி மற்றவை யாவும்

**புறங்ஙிடந்ந சமயங்ஙளீ ராறிலும் கண் குருடன்**... (அமுத கலைக்ஞான போதம்)
என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**ஆறுவித சமயத் தோர்க்கும்**
**ஆறுமுக சாமி யாகி...** என்று வள்ளலாரும்
அருளியுள்ளார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

அவதார செம்மல்களாக வருகின்றவர்கள் அவரவர் ஜீவகுகைதோறும் வீற்றிருக்கும் மறுவிலாக் குகனைக்கண்டு வணங்கும் வணக்கத்தில் நம்மை ஆக்கி வைத்து, நாளானது வீணாகாமல் காக்கின்ற செயலே கங்காளன் பூசும் மங்காத திருநீறாக உள்ளது. மதங்கள் உடைந்து சிதறினாலும் அதன் மூலமந்திரம் எப்பொழுதும் அழியாத செயலுடையதாக உள்ளது. இதனை ஆண்டவர்கள்

**வந்ந பல**
**மந்நிரப் பலனனைத்தும் தன்திடத்துள் ளாண்டபனி**
**மேரு பாதா**

என்று ஆடலங் ஙன்னி பாடலில் அருளியுள்ளார்கள்.

**ஆதி மான்மியத்தில்** இங்ஙனம் "*கணித்தற்கரிய அரும்பெரும் னிலைகளாகிய கலைகள் அறுபத்து னான்ஙிற்கும் அப்பாற் றாண்டி மேம்பட்ட ஓர் கலையாகிய வேதங் ஙடந்ந செழும்புனற் சலாசன அரசு பீடமாகிய திருவீச்சென்னும் சிவசிகரக் குரசலங்ஙிர்தப் பிழம்பென்னும் - அந்நப் பிரம்மரந்நிர அதிமகோன்னத னிலையை*", சிவசெங்கோல் மூலமாக நம்மை ஐஸ்வரியனாக ஆக்குகின்றார்கள். குரு கொண்டல் அருளால் சீரிய வழியில் சென்றால் தேவாதி தேவனிடத்தில் ஐக்கியம் ஆகலாம்.

**திருவடி**-

**திருவடி யேசிவ மாவது தேரில்**
**திருவடி யேசிவ லோகஞ்சிந் திக்கில்**
**திருவடி யேசெல் கதியது செப்பில்**
**திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே** ***- ( திருமந்திரம் )***

இப்பாடலில் திருவடிதான் சிவமாகிய ஒளி, சிவலோகம், மோட்சம் எனக் கூறுகிறார்கள். அத்தகைய திருவடியை, ஒரு மெய்க் குரு பிரானிடத்தில் சரணாகதி அடையும் போது நம் உள்ளம் தெளிந்து சிவமாகலாம்.

**திருச்சிற்றம்பலம்-** திரு + சித்து + அம்பலம் திரு என்னும் பொருளை அறிந்தவர்கள் சித்தர்கள்.

**சித்தமலம் அறுத்துச் சிவமாக்கி எனைஆண்ட**
**அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே**

என்ற பாடலில், சித்தத்தை தெளிய வைத்த ஆசான் அவர்களே திருச்சிற்றம்பலப் பொருளாக இருக்கிறார்கள்.

**சீவன் எனச்சிவன் என்னவே றில்லை**
**சீவ னார்சிவ னாரை அறிகிலர்**
**சீவ னார்சிவ னாரை அறிந்தபின்**
**சீவ னார்சிவ னாயிட்டு இருப்பரே** ***- ( திருமந்திரம் )***

சீவன் வேறு சிவன் வேறு அல்ல, நம்மை அறிவு சொரூபமாக ஆக்கி வைப்பவர்களே சிவபெருமான். அத்தகைய சிவ பெருமானெனும் குரு கொண்டல் அவர்களே, ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களுக்கு பேரானந்தத்தை அருளுகிறார்கள். என்ற உரையாடலுடன், குரு கொண்டலின் ஆசீர்பாதத்துடன் அவையானது இனிதே நிறைவு பெற்றது.

## 20-01-2022 ~ வியாழக்கிழமை சபை
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

**வான்மதி கொரல் வாக்கியம் எண் 51**:

மெய்ஞ்ஞான சபையில் பல ஆண்டுகளாக நாம் இருக்கிறோம் என்ற மேட்டிமை வரக்கூடாது என்பதை சாணார் குல வேதமான அகிலத்திரட்டு அம்மானை பாடலில், சான்றோர் என்றாலும் சக்கிலியன் என்றாலும்



Copyright © AMNA Trust, Chennai 

மெய்ஞ்ஞான சபையில் ஒரே னீதி கோட்டில் வைக்கப்படுவார்கள் என்று அருளப்பட்டுள்ளது மெய்ப் பாதையில், தாய் தந்தையரின் ஆர்வமும், ஈடுபாடுமே, அவர்களது குழந்தைகளும் இதனைத் தொடர காரணமாக அமைகின்றது என்று தன் மக்களுக்கு உஜார் ஜாக்கிரதையாக ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**ஸ்ரீ மாணிக்கவாசகர் பெருமான் அருளிய திருவாசகம்:- செத்திலாப் பத்து பாடல் எண் 08**

**போது சேரயன் பொருகடற் கிடந்தோன்**
**சீதப் புனல் நிலவிய வயல்சூழ்**

எனத் துவங்கும் பாடலுக்கான ஜீவ சகோதரி பூர்ணிமா அவர்களின் புரிதல்

இதன் விளக்கமாக, "போது" (பொழுது) எனும் காலத்தைப் பற்றிய சிந்தனையற்று இருந்த நம்மை, பெரியோர்கள் தமது சிவராஜ பாட்டையில் வழி கூட்டி நடக்க வைத்து மாதவன் தவமருந்தை நல்கி மரண வறுமையில் இருந்து காக்கிறார்கள். என பகிரப்பெற்றது.

**திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம் பாடல் எண்-09**

**அந்தமு மாதியுந் நான்முகனும்.**
**கந்தம கிற்புகை யேகமழுங் கணபதி**
**யீச்சரங் காமுறவே**

எனத் துவங்கும் பாடலுக்கான ஜீவ சகோதரி உமாராணி அவர்களின் புரிதல்

ஆதியும் அந்தமுமாகிய சிவபெருமான் சாத்வீக குணமாகவும், பிரம்மா அகங்காரமாகிய தமோ குணமாகவும், விஷ்ணு மனமென்னும் ரஜோ குணமாகவும், இருக்கிறார்கள் என்று சித்தவேதத்தில் கூறப்பட்டுள்ளது. இதை நிர்க்குணம் கொண்ட மெய்க் குருபிரானின் னாதத்தின் மூலமே அறிய முடியும்.

**காலந் நாட்டிய காரணப் பா: பாடல் எண்: 10**

**மெய்ய தானருட் பாவின்வி ளைவெலாம்**
**செய்யும் மெய்வழிச் சாலைச்செஞ் ஞொன்மறை**
**அய்யர் மெய்ப்புல மைத்தலை ஆண்டவர்**
**வய்யம் வாழ்சித்தர் காலமும் வந்நதே**

என்ற பாடலுக்கு ஜீவ சகோதரி லாவண்யா அவர்களின் புரிதல்.

வள்ளல்பெருமான் அருளிய புருஷார்த்தங்கள் நான்கையும், கைக்கொண்ட மெய் மேனியராக ஆக மெய்வழி ஆண்டவர்கள் அவதரித்தார்கள். இதனை *வளர் குழந்தை குமாரப் பருவத்தில்* வேதகலைக் கதிபதி என்ற பாடலில் அருளுகின்றார்கள். செஞ்ஞொன் மறையாகிய ஆசானின் னாதம், நம்மை அறியாமை என்னும் இருளில் இருந்து அறிவுப் பிரகாசமாகிய மேலை நாட்டுக்கு அழைத்துச் செல்லும் கயிறாக உள்ளது. ஏழு உலகையும் தன்னுள் காட்டி அருளுகின்ற சாலை என்ற மெய் மேனியரின் தாள் பணிந்து, வாழவேண்டும். இதையே "னூல் வழிப்பற்றிட கால்வழி ஓடிடும்" என்ற பாடலில் நமது தெய்வமவர்கள் அருளியுள்ளார்கள். உலகில் ஞானம் என்பது, பரஞானம் அபரஞானம் என இரண்டு வகையாக உள்ளது. உலகியல் வாழ்வாகிய அபர ஞானத்திற்கு படிப்பறிவு தேவையில்லை என்பதற்கு 1 முதல் 5 அறிவுள்ள ஜீவராசிகளே சாட்சி. பொருளாதாரம், உணவுப் பிரச்சனை, இதனைப் பெரிதாக எண்ணும் மனிதனுக்கு பர ஞானத்தைப் பற்றிய சிந்தனையே இல்லை.

குரான் வேதம் ஜிப்ரேல் என்னும் வஹி மூலமாக இறங்கி இந்த உலக மாந்தர் அனைவரும் செழிக்க வேண்டும், என்ற ஒரே காருண்ய நாட்டத்துடன் அருளப்பெற்றது. இறைவன், அவன், அவள், அது, என்ற நிலையில் இருப்பதையும் அவனுடைய கல்யாண குணங்களையும், ஒரு பெரியோரின் இரக்கத்தால் தன்னைத்தானே அறியும் போதுதான், புரிந்து கொள்ள முடியும். ஆலம், ரூஹு, ரூஹானி என்பது அலிப், லாம், மீம் என்பதாகும், ரூஹு என்பது ஜீவனாகவும், ரூஹானி என்பது ஜீவ தேகமாகவும், ஆலம் என்பது அண்ட சராசரங்களை உள்ளடக்கியதாக மனம் என்ற மாளிகையினுள் அடங்கியுள்ளது. அத்தகைய மனம் கொண்டு தான் நாம் இன்ப துன்பங்களை அனுபவிக்கிறோம்.



Copyright © AMNA Trust, Chennai



*திரு. சாலை ரவி அப்பா அவர்கள்*
*நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை*

ஐம்புல நுகர்வில் வைத்து இறைவன் மனிதனை ஒன்றாகவே படைத்தாலும், மனதினால் வேறு வேறாக ஜாதி, மதம் என பிரித்துக் கொண்டான். அறிவுக்கு, ஜாதி, மதம், கிடையாது. ஆதி சைவமும், இறுதியில் வந்த இஸ்லாமும் நாம் தான் என மெய்வழி ஆண்டவர்கள் அருளுகின்றார்கள். மெய்வழி என்பது மனுமுளை துவங்கிய காலம் முதல் என்றும் மங்காத, மாறாத மணம் வீசிக் கொண்டு இருப்பது. "அங்கமதிடத்தில் ஐம்புலக் கதவை அடைக்கும் பேரறிவு" என்ற பாடலில் ஐம்புலனை அடைப்பது பேரறிவு என்றும், ஐந்து புலனுக்கும் ஒன்பது வாசல் உள்ளது என்றும், இதனை "ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால் ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி" என வேதத்தில் கூறப் பெற்றுள்ளது. ஐம்புலனையும் அடைக்கும் வல்லப வஸ்து மனிதனுள் ஆறாவது அறிவாக விளங்குகிறது. மெய் ஆசானின் திரு ஆலவாய் சூலில் நாம் மறுபிறப்பு பிறக்கும் நாளே பிறந்தநாள். பிறவிப் பெருங்கடலைக் கடக்க குருபிரான் துணை வேண்டும். அவர்களின் ஆசீர் பாதமே நம்மை வினைகளிலிருந்து காக்கின்றது. மெய் வணக்கத்தின் மூலம் வினைகளை அறுக்கும் செயலைப் பெரியோர்கள் நமக்கு வேத சாட்சியாக அருள்கிறார்கள்.

நம்மிடம் அறியாமல் உள்ள "ஒன்றை" அறிவித்து, பயனுள்ள ஓர் அர்ப்பணிப்பு வாழ்க்கையை நம்மை வாழ வைக்கிறார்கள் எனக் கூறி, ஒவ்வொரு பொழுதையும் நன்மையாக நமக்கு ஆக்கித்தரும் பரிசுத்த ஆவி தெய்வத்தின் பொற்பாதங்களை வணங்கி குரு பிரான் அவையை இனிதே நிறைவு செய்தார்கள்.

**23-01-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா**

*ஜீவ சகோதரர் கௌதம் அவர்களின் புரிதல் -*

**தைவம்:** ஆண்டவர்கள் பாட்டையாவைச் சந்தித்த பொழுது, **அம்மையே அப்பா ஒப்பிலா மணியே** என்ற திருவாசகப் பாடலை பாடினார். இதில் **சிக்கெனப் பிடித்தேன்** என்று பாடுகிறார்கள். பிரிக்க முடியாத உறவுக்கு சிக்கு என்பார்கள். அப்படி ஓர் உறவானது ஒவ்வொரு மனிதனின் இருதயத்திற்கும் இறைபொருளுக்கும் இடையில் நடக்க வேண்டும். அது ஆசான் அவர்களின் பெருங்கருணையால் மட்டுமே முடியும். அப்படி சிக்கெனப் பிடித்திருப்பதற்குப் பெயர் தைவம். ஆசான் அவர்களே தன் சோலினா பை மூலம் அறிவுவெனும் மாணிக்கத்தை நம்முள் தைத்து, இரண்டறக் கலக்கிறார்கள். அத்தகைய செயல் தைவம் ஆகும்.

**னித்திய வாழ்வு**: அனித்திய தூலத்தைக் கொண்டுள்ள நம் எண்ணமோ என்றும் அழியாத னித்திய வாழ்வை வாழ வேண்டும் என்பதே. அத்தகைய எண்ணம் வருவதற்கான காரணப் பொருள் நம்முள் வைக்கப்பட்டுள்ளது. அதை அறிந்து அடைவதே மனிதனின் கடமை. இதனை ஆண்டவர்கள்

**தருக்கினம் புள்ளூர்காலி ஜலம்வாழ் ஜெந்தும்**
**தான்பிறந்த வதன்கடமை முடித்து னிற்க...** (தனித் திருப்பாடல்கள்)

என்ற பாடலில் மனுவின் கடமையாக அருளுகிறார்கள். அத்தகைய காரணப் பொருளோ பலவாக விரிந்து *எண்ணம்பல கோடிய தாய்விரிந்நே மன்னும்பல*



Copyright © AMNA Trust, Chennai

*உயிர்களெலாம் னமவாய்க்கு* ஆளாக நிற்கிறது. ஆசான் அவர்களே பல கோடியாக விரிந்துள்ள நம் எண்ணத்தை னெறிப்படுத்துகிறார்கள். அவர்களின் *னாதமே* நமக்கு ஜோதியாக இருந்து இந்த துக்க உடலை நீக்கி சுக உடலைக் கைப்பற்ற வழிகாட்டுகிறது.

**சுத்த இருதயம்:** இந்த உலகத்தில் இருதயம் என்றால் கழுத்துக் கீழே தொட்டுக் காட்டுகின்றனர். ஆனால் இருதயம் என்பது கழுத்துக்கு மேலே தான் உள்ளது. அத்தகைய ரகசியப் பொருளை ஆசானின் அருள் அமிர்தவர்ஷிப்பே சுத்த இருதயமாக்கி இறைவன் தங்கும் இடமாக ஆக்கி வைக்கிறது.

**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிருந் தொழும்** **( திருக்குறள் )**

ஓர் மெய்க்குரு பிரானை சந்திக்காத வரையில் *புலாலை மறுத்தானை* என்றால் உண்ணும் உணவைப் பற்றியது என்றே நாம் எண்ணுவோம். இந்த தேகத்திற்குள்ளே புலனுக்கும் பொறிகளுக்கும் தலைவனாக, அதிபதியாக உள்ள னித்திய தேகத்தை அறிந்து அடைந்து வாழ்வதே புலாலை மறுத்து வாழும் பேரின்ப வாழ்க்கை ஆகும்.

**சுவையை அனுபவிக்கும் கர்த்தா :** மனிதனுக்கு மட்டுமே சுவையை அறிந்து அனுபவிக்க முடியும். ஏனெனில் மனிதனிடத்தில் மட்டுமே அதை அனுபவிக்கும் கர்த்தா உள்ளது. புலன், பொறிகளின் ராஜாவாக உள்ளவரே சுவையை அனுபவிப்பவர். அந்த கர்த்தா நம்மிடம் ஜீவனாக உள்ளது. இதனை ஆண்டவர்கள்

**வாசனை கேள்வி யிருகண்வா யெவைக்கும்**
**வல்லமை யளிக்குமக் கண்ணே ...**
என்று ஞானமுறையீடு பாடலில் அருளியுள்ளார்கள்.

**னாத உடல்:** *ஜெயப் பழுதிலாது தனித் தொளிரு னாதவுடல்.* அது தான் அழிவில்லாத பதி. ஏனெனில் ஆக்கக் கூடிய பொருள் அனைத்தும் அழியும். ஆனால் ஆற்றலுக்கு அழிவில்லை. அறிவே ஆற்றலாக உள்ளது. அதனைக் கைக்கொண்டு வரும் ஆசான் அவர்களே, அதனை நம்முள் புகுத்தி, சரியான சரிநிலையில் நம்மை ஏற்றி, அந்த அழியாத பதியில் குடியேற்றி வைக்கிறார்கள்.

**அனாகதம்:** ஆறு ஆதாரங்களில் ஐந்தாவது பொருளாக விளங்கும் அனாகதம் காற்றினுடைய ரகசியமாக உள்ளது. இதனை அறிந்து, அதன் வல்லபங்களை தன்னகம் கொண்டுள்ள ஆசானின் அருளால்தான், நாமும் அதனை அறிந்து அடைய முடியும்.

**பஞ்ஞாட்சரம்:** பஞ்ஞாட்சரம் தான் எழுதாத எழுத்தாக, ஊமை எழுத்தாக, மோன எழுத்தாக உள்ளது. இந்திரலோகமும் அதற்குள் தான் அடக்கம். இந்த பஞ்ஞாட்சர னாமத்தின் இரகசியத்தை ஓர் மெய்க்குருபிரானின் வேதனாவால் தான் அறிய முடியும் என்ற உரையாடலுடன் சபை இனிதே நிறைவேறியது.

**23-01-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்**

**ஞான அகவல் பாடல்:**

**வந்த வேதம் வரைந்த பயத்தினால்**
**சிந்தை வீணர்கை சிக்கி மெலிந்த னாள்**
**அந்நெழுத்தை யழித்தே யெழுதிய**
**எந்த னாளு மென்றன் குரு னந்நியே**



Copyright © AMNA Trust, Chennai

னந்நியாகவும், ஜீவனாகவும், னான் எனும் ஆத்மாவாகவும், அறிவாகவும் விளங்கி இருப்பதை அனைவரும் தன்னுள் உணர்ந்து அறிவு வடிவாக வேண்டும் என்பதே அவையின் நோக்கமாகும்.

**எழில் பல கலைக ளிலகு செம் மலரே...** என்ற தெய்வ பாடலுடன் ஜீவசகோதரி லலிதா அவர்கள் தன் புரிதலை பகிர்ந்தார்கள். மனம் சலியாது னலியாது இருக்க வேண்டும். உடலில் உயிர் சலித்துக் கொண்டே இருக்கிறது என்பதை ஒரு பெரியோர்கள் மூலம் அறிகிறோம். அவர்களின் னாதமே நம் உயிரை சலியாமல் காத்து இரட்சிக்கிறது. இதையே, **பாதமே மனம் பாவித்தால் பாதுகாத்துனை இரட்சித் தேத்தியே பரமபதத்திற் சேர்க்குமே** என்று மெய்ம்மண ஞானம் பாடலில் அருளப் பெற்றுள்ளது.

**பாதம்:** ஆசானின் வாய்மைக்குள் இரண்டற கலந்து, ஓரறிவாக நின்று, அறிய வேண்டிய இரகசிய னிலையே பாதம். அது மனிதனின் நெஞ்சகமாகிய னடு வீட்டில் புதையலாக உள்ளது. பாதம் என்பது பிள்ளையார் சுழி, சிவமயம், னற்றாள், திருவடியாக இருக்கிறது.

**கோடு:** கோடு என்பது பிராணனாகவும், தமிழாகவும், ஆணிமுத்தாகவும், ஆனி மஞ்சனமாகவும், பொன்னம்பலமாகவும் உள்ளது.

**ஏடு எழுத்தாணி தவறாமலும்**
**என் நினைவின் முன்னே நிற்க வேணும்**

என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். குருவின் நாதமே நம் கோள்களை மாற்றி அனுக்கிரகம் செய்து நம்மை வழி நடத்துகிறது. அதுவே பஞ்ஞாட்சரமாக, குல தெய்வமாக, கணபதியாக உள்ளது.

**பட்டினத்தார் பாடல்:**

**மாதா உடல் சலித்தாள்**
**வல்வினையேன் கால் சலித்தேன்**
**வேதாவும் கை சலித்து விட்டாளே நாதா**
**இருப்பையூர் வாழ் சிவனே**
**இன்னுமோர் அன்னை கருப்பையிலே வாராமல் கா**

மாதாவும் உடலும் என்பது அருஉருவாகவும், ஓசை ஒளியாகவும் உள்ளது. பிறந்தது முதல் நாம் மரணத்தை நோக்கியே செல்லுகிறோம் என்பதை ஆசான் உணர்த்தி, நம் விதியை மாற்றி, ஆறாவது அறிவை அறிவித்து, பிரம்ம வித்தையை கற்பித்து, பிறவாமை எனும் பெரும் பேற்றை அளிக்கிறார்கள். ஏழு திரை நீக்கி எட்டாவதாக ஒளி வடிவில் இருக்கும் இறைவனை தரிசிக்க வைத்து, சாவின் திறமாகிய சாஸ்திரத்தையும் அறிய வைக்கிறார்கள்.

உறக்கம் கடந்து விழிப்பு நிலையில் நம்மை உணர்வுடன் இயக்குகின்ற சக்தியே ஜீவனாக சிவனாக உள்ளது என ஜீவ சகோதரர் கணேசன் அவர்களின் பகிர்தலையும்; கருவில் தொடங்கி கடம் உள்ள வரை நம்மைத் தாங்கும் இறை பொருளை கடம் உள்ள போது அறிவதே மெய்வழி என்ற ஜீவ சகோதரி புன்னகை அவர்களின் பகிர்தலையும் தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் குரு பிரானவர்கள் அவையை நிறைவு செய்தார்கள்.

**23-01-2022 ~ ஞாயிற்றுக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. பவானி மணிமாறன்**

**எம படரடிபடு கோடாயிதக்கூர் - வாக்கியம் எண் 82**: னம் மனைவி, மக்கள் மீது னாம் வைக்கும் அன்பை விடவா இறைவன் னம் மீது வைக்கும் அன்பு குறைவாக இருக்கும்? அழியும் பொருள் மீது மட்டுமே நாம் கொண்டுள்ள அன்பு நம்மை சிவம் ஆக்காது. சித்த மலம் அறுத்து சிவமாக்கும், பரசிவமாக விளங்கும்


Copyright © AMNA Trust, Chennai

பெரியோர்களின் திருவாக்கு ஒன்றே யதார்த்த தேடுதல் உடைய ஒருவனை சிவமாக்கி வைக்கும் இதுவே "அன்பே சிவம்" என்பதாகும்

அறுவகை சமயங்களாவன-
1. சைவம் (சிவன்), 2. வைணவம் (விஷ்ணு), 3. கௌமாரம் (முருகன்), 4. காணாதிபத்தியம் (விநாயகர்) 5. சௌரம் (சூரியன்) 6. சாக்தம் (சக்தி).
இதில் காணாதிபத்தியத்தில் "ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை" என அருளியிருப்பது, குருவைப் பற்றிக் கூறியிருப்பதேயாகும். அழியாத பொருளைப் பற்றி அறிவதற்காக குருவின் மூலம் உண்டானவையே அறுவகை சமயங்களும். நம்மால் முடியாததை நம்மீது கடமையாக இறைவன் சுமத்த மாட்டான். மெய்யான குருவை நாம் தேடிக் கொண்டால் நிச்சயம் எமபடரைத் தாண்டி, னித்திய பேரின்பப் பெருவாழ்வை அடையலாம். மனிதன் இறைவனை அறிய வேண்டும் என்ற கட்டாயக் கடமையை அறியாமல் னழுவ விடுபவன் பிறவிச் சூழலில் மாட்டிக் கொள்ளும் காபீராக இருப்பான் என அருளப்பெற்றது.

**காலந் நாட்டிய காரணப்பா-பாடல் எண்-11 "கட்டியின் கரும்பானதி ருக்கையில்"** என்ற பாடலுக்கு ஸ்ரீமதி லாவண்யா அவர்களின் புரிதல்

கரும்பின் சுவை இனிப்பு. எட்டிக்காயின் சுவையோ கசப்பு. தன்னை அறிவதற்காக தேகம் எடுத்ததை உணராமல் எட்டிக்காய்க்காக ஏங்கிக் கொண்டிருக்கும் நம்மை மாற்ற, கருணையோடு கட்டிக் கரும்பின் ஞானத்தை மெய்க்குருபிரானின் திரு னாவில் இருந்து வரும் அமுத கனிரசத்தைச் சுவைக்காமல், கசப்பினை நாம் சுவைக்க முனைவதையே,

**இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய் கவர்ந்தற்று** (திருக்குறள் -100)

என வள்ளுவர் கூறுகின்றார். குருபிரானாகிய மதியை அறியாமல் விட்டதே விட்டகுறை. அது னீங்க பிறவிப்பிணியை நீக்கவல்ல அழியா அருமருந்தை அளிக்கும் ஜீவபண்டிதர் கட்டாயமாக வேண்டும்.

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்: அடைக்கலப்பத்து பாடல் எண்.24-**
**செழுக்க மலத் திரள நின்** என்ற பாடலுக்கு ஸ்ரீமதி பூர்ணிமா அவர்களின் புரிதல் - சீதகளபச் செந்தாமரைப் பூம்பாதம் திருவடியாகத் திகழ்கிறது. பழுத்த பழத்தில்தான் அடுத்த விதைக்கான வித்தானது இருக்கிறது. இந்த வித்தை அறிந்தவர்களே அடியார்கள். மனம் தான் மாயக் கூத்தாக இருக்கிறது. அதில் அறிவை விளைவேற்றச் செய்யும் வாய்மையே பெரியோர்களிடமிருந்து வருகிறது. அதுவே ஜென்ம சாபல்யத்தை அளிக்கும். பெரியோர்களின் வாய்மை ஒன்றே இறைவனிடம் நம்மை அடைக்கலமாக்கி வைக்கும்

**ஆறாவது அறிவின் சிறப்பு -** தொல்காப்பியரின் பாடலான "ஒன்றறிவதுவே" என்ற பாடலை சாட்சியாக வைத்து ஆறாவதுஅறிவு இன்னது என பேசப் பெற்றது. குரு கீதையில், "ஆச்சாரியனின் அருளால், அந்த மூன்றாவது கண்ணானது திறப்பிக்கப்பட்டால், அந்த இறைவனை நீ பட்டப் பகல் போல் காணலாம்". அதற்கு நாம் முதலில் நம்மையும், நம்மிடம் உள்ள ஆறாவது அறிவையும், அதன் மூலம் நாம் அடையப் போவது என்ன என்றும் தெரிந்து கொள்ள வேண்டும் என அருளப் பெற்றது.

**பிராமணன்-** உண்மையான பூணூல் அணிவதின் இரகசியத்தையும் அதில் அருளப்பட்ட மூலமந்திர வார்த்தைகளின் இரகசியத்தையும் நாம் எப்போது அறிந்து உணர்கிறோமோ, அப்போது தான் நாம் நிஜமான சுத்த அந்தணனாய், துவிஜனாய், பிராமணனாய் ஆவோம்.

**நான்**- நான் என்று சொல்லப்படுவதற்கு GENDER (ஆண்பால் பெண்பால்) இல்லை. இந்த அர்த்தநாரி என்ற இறை தத்துவத்தை வைத்துத்தான் திருவண்ணாமலை தீபம் ஏற்றும் சடங்கு நிகழ்கின்றது.

**ஆதி மான்மியம் முகப்பு- ஒத்தை யான் மறை ஊணிய முத்திய உத்தி யோவனரே ஒது மான்மியம்** என்பதில் "ஒத்தை ஆண்" எனும் ஆண்



Copyright © AMNA Trust, Chennai 

ஆனவர்களால் தான் இதைச் செய்ய முடியும். **ஆணான மெய்ஞ்ஞானக் குருவே வேண்டும்** (அமுத கலைக்ஞான போதம்) அவர்கள் சீடர்களின் நிலை அறிந்து அருள்வதையே 'ஊணிஅழுத்திய' எனக் கூறுகிறார்கள்

**ஜீவ சிம்மாசனப் பருவம்-** "ஏ னம்பர் சதைக்கட்டியே" என்பது, நம் பிறப்பு சான்றிதழ் (Birth certificate) படி நம் அனைவருக்கும் ஒரு னம்பர் உள்ளது. நரனாகப் பிறந்த நாம் அனைவரும் மனிதனாக ஆவதற்கு ஒரு வாசல் உள்ளது. னீதியும், அறிவும் பொதிந்த அவ்வாசலுக்குள் பிறப்பவனே மனிதன். ஆறாவது அறிவே அமானிதம். இந்த அறிவை மனிதன் பெற்றால் தான் அவன் னித்தியன். இப்படியான நிலை வேண்டுமா வேண்டாமா என்பதற்கு "மெய்ஞ்ஞானப் பகுப்புப் பா" பாடலில் ஆண்டவர்கள், "வேதகு லச்சிவேணுமா அல்லது னாசகா லியேவேணுமா" எனக் கேட்கிறார்கள். மற்றும் வள்ளலார் அருளிய ஆறாம் திருமுறையில்- "கனமுடையோம் கட்டுடையோம்" என்ற பாடலும் சான்றாகப் பகிரப் பெற்றது.

ஜீவ சிம்மாசன பருவத்தில், உப்புப்பாண்ட உடலுக்குள் இருப்பவற்றைக் கூறி, அதில் அறிய வேண்டிய முக்கியமான பொருளையும், தவத்துக்குரிய ரகசியங்களைக் கொண்டு அதை பெறுவதற்கான வழிமுறைகளையும் அருளியுள்ளார்கள். வேதங்களில் உள்ள பல மந்திரங்களின் உண்மையான மெய்ப்பொருளைச் சொல்வதற்கும் கைக் கொள்வதற்கும் ஒருவரும் இல்லை. ஒருவன் அந்தஸ்தோடு சுகபோகமாக வாழ்ந்தாலும் கடைசியில் அவன் செல்கின்ற கெடு கேடு எப்படி பயங்கரமாக இருக்கிறது என்று சொல்லும் செயல் உடைய திரு வாக்கியங்களே ஆதி மான்மிய வரிகள். வள்ளலார் அருளிய மரணமிலாப் பெரு வாழ்வாகிய சன்மார்க்கச் செயலை, அறிந்தவர்களாக, அறிந்து கொண்டு இருப்பவர்களாக, அறிய இருப்பவர்களாக, இவ்வுலகில் ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களாக உள்ள மக்கள், ஆண்டவர்களின் ஆசீர்பாதத்தை அனுதினமும் பெறுபவர்களாக இருக்கிறார்கள். இதனை **என்ன காலம் இறைவன் திருவருள்** என ஆண்டவர்களின் திருனாமத்தைப் போற்றி குருபிரானாவர்கள் அவையை நிறைவு செய்தார்கள்.

## 27-01-2022 ~ வியாழக்கிழமை சபை
## தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்

**வான்மதிக் கொரல் - திருவாக்கியம் எண்: 52**

ஒருவன் னரனா, மனிதனா, தேவனா என்பது, அவரவரின் வாய்மை கொண்டே அறிய முடியும். *னிறைமொழி மாந்தர் பெருமை னிலத்து மறை மொழி காட்டிவிடும்.* நம் சொந்த தாயாதி சொத்தாகிய அமானிதமெனும் அறிவிருக்கும் தலத்தை அறிந்து வாழ்வதற்கே, ஐந்தறிவுடைய ஜீவராசிகளைவிட சிறப்பான ஆறாவது அறிவு இறைவனால் மனிதனுக்கு பிரத்யேகமாக வழங்கப் பெற்றுள்ளது.

**கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்** ( திருக்குறள் **2** )

னற்றாளை காணக்கூடிய கல்வியே மெய்க் கல்வி. பத்து வயதான கன்னி சபை, கன்னிமரியம் சூல், உத்தியோவனக்காடு என்ற இத்திருவாக்கியங்கள் நிஜமாகக் கூடிய இடம் - அவரவருக்குள் சொந்த வீடாக இருக்கிறது. அதில் குடியோங்கி வாழக்கூடிய கல்வியே மெய்க்கல்வி.

**காலந் நாட்டிய காரணப்பா - பாடல் எண்: 12**

**கோபத் தோடுகொ டுமைபழிகொலை ...** என்ற பாடலுக்கான ஜீவ சகோதரி லாவண்யா அவர்களின் புரிதல் -

**பாவம் செய்யாதிரு மனமே...** என்று கடுவெளிச்சித்தர் கூறுகிறார். பாவங்களை விளைவிக்கும் கோபமாகிய எமனை சாந்தி செய்வதற்கே பெரியோர்கள் சஷ்டியப்தபூர்த்தி என்ற சடங்கை புறத்தில் எடுத்து



Copyright © AMNA Trust, Chennai 

வைத்துள்ளார்கள். மனிதனுக்குள் உறைந்திருக்கும் கலியாகிய அறியாமையே கோபமெனும் குணமாக, காலமாக, காலனாக உள்ளது. காலத்தை வீணாக்கி எமனின் பிடியில் சிக்கி இருக்கும் நம்மை மீட்டு, காலமற்ற இடத்தில் குடியேற்ற ஒரு மெய் குருபிரானின் கருணை வேண்டும்.

**ஸ்ரீ மாணிக்கவாசகப்பெருமான் அருளிய சென்னிப்பத்து - பாடல் எண் : 09**

**ஞாலம் இந்திரன் நான்முகன் வானவர் ...** என்ற பாடலுக்கு ஜீவ சகோதரி பூர்ணிமா அவர்களின் புரிதல்:

**சுவையொளி ஊறோசை நாற்றமென் றைந்தின்**
**வகைதெரிவான் கட்டே உலகு** (திருக்குறள் 27)

ஞாலம் என்பது உலகு. ஐம்புலன்களைக் கொண்டு மனதின் மூலம் அனுபவிப்பது பாதாளமாகிய கீழுலகம். படைப்புக் கடவுளாகிய "நான்"முகம் உடைய பிரம்மாவும், தேவேந்திரனும் வாழக்கூடிய இடம் தன்னுலகாகிய வான லோகம் என்ற மேலுலகம். இதனை நமது தெய்வமவர்கள் *அறிவு அறி பாடத்தில்,*

**னினைப்பும் மறப்பும் னிலைப்பிடம் காணல்**
**வானவர் ஆக மறுபிறப் பெடுப்பாய்** என்றும்,

*மெய்ம்மண ஞானத்தில்*

**வான னாடர சாண்ட தனிகை**
**வள்ளல் மாதவ னாயகம்**
**சோதி னாயகச் செம்ம லின்பதம்**
**சூழ்ந்து வானவர் போற்றுமென்** என அருளியுள்ளார்கள்.

மண்ணுலகில் விண்ணுலகை படைக்கும் குருபிரானே ரஜோ, தாமச குணங்களில் இருந்த நம்மை தடுத்தாட்கொண்டு சாத்வீக குணமுடையவர்களாக மாற்றி நம் காலம் வீணாகாமல் மாற்றி வைக்கிறார்கள். இதனை *காமீல்கள் னோக்கம்* என்ற பாடலில்,

**சென்றனாட் சென்றிட் டாலும் செல்லுனாட் சென்றி டாது**
**னன்றுள னாளே யின்னாள் ஞானனாளெனத்தேர்ந் நுள்ளம்** என்றும்
*தெய்வத் தேடுகூடகத்தில்,*

**தரைதனில் னரராய்த் தோன்றித்**
**தாம் கெதி அடையா தோரை**
**முறை சங்கார னுக்கிரகம்**
**முடித்துமே மனுவாய் மாற்றி**
**விரைபிரம்மம் அவர்மு கத்தில்**
**வைத்துமே படைத்துப் பின்னும்**
**மறைபடாத் தேவ ராக்க**
**வந்நனர் உலகுக் கம்மே**
என்ற பாடலிலும் அருளிச் செய்துள்ளார்கள்.

**மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்** (திருக்குறள் 3)


Copyright © AMNA Trust, Chennai

அசையா னிலையாகவும், ஓரறிவாகவும் விளங்கும் ஆசானின் னாதமே மலர்க்கையாக இருக்கிறது. ஜலத்தினில் அக்கினி உருவாயும், போகாப்புனல் மேல் வீற்றிருக்கும் பிரம்மமுடி சாகாத்தலையாகவும், ராஜ அங்கமாகவும் விளங்குபவனே ஜீவனாகிய சிவம் என்பதை உணர்த்துவதே திருப்பெருந்துறையாகும்.

**திருஞான சம்பந்தர் அருளிய தேவாரம் திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும் பாடல் எண் -10 இலைமரு தேயழ காகநாளும்...** என்ற பாடலுக்கான ஜீவ சகோதரி உமாராணி அவர்களின் புரிதல் :

மண், பெண், பொன் இவற்றின் இச்சையால் நம் ஜீவனில் படியும் மூவாசையை குறித்து இப்பாடலில் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு இவைகளை உவமையாக வைத்து கூறப்பட்டுள்ளது. மூவாசையானது கறையாக நம்மீது படிவதை மாமருகலாக வரும் குருபிரான் நீக்குகிறார் என்பதை, *தெய்வத் தேடுகூடகத்தில்* ஜீவனில் கறைபடியாத பிரம்ம கூடகர்களிடம், கோகுலர்கள், வெற்றிலை பாக்கு கேட்பது போன்றும், ஆனால் அவர்கள் கறை படியாத வெள்ளையான பற்களுடன் இருப்பதாகவும் வர்ணனை செய்யப் பெற்றுள்ளது. ஜீவனைத் தன்னில் அறிந்து அடைந்த ஆண் குருவின் சுத்த னினைவாகிய பிரம்மரந்திர எல்லையே திருச்செங்காட்டங்குடியாகும்.

குரு - சீடனின் அறுபடாத தொப்புள்கொடியாகிய நினைவின் வல்லபத்தையும், பாட்டையாவும், தெய்வமும் முதன்முறையாக சந்தித்த தருணத்தையும் ஆதிமான்மியம் திருப்பாடல் உணர்த்துகிறது.

**னினைவி லூறிய னினைவிது ஏதென**
**னினைவு கொண்டுபின் னினைவினை யோருற**
**தனிகை னீள்மலை தன்னினை வீசின**
**னினைவி தென்றுக னிவுகொண் டோடிற்றே**

பெரியப்பா என்று அழைக்கப்படும் வடலூர் வள்ளல் பெருமான் அவர்களும் திருஅருட்பாவில்

**எனக்கும் உனக்கும் இசைந்த**
**பொருத்தம் என்ன பொருத்தமோ**
**இந்தப் பொருத்தம் உலகில் பிறருக்**
**கெய்தும் பொருத்த மோ**

என்று குருவுக்கும் சீடனுக்குமான உறவைக் கூறியுள்ளார்கள்.

**கலைமலிந்ந தன்னாத வுடம்பைத் தன்னுட் காணுவதே வாதம்** என்ற அழியாத கற்ப நிலையினை சீடனுக்கு ஆக்கிவைக்கும் கணபதியீச்சரமாக ஆசான் விளங்குகிறார்கள் என்ற பகிர்தலுடன் அவையானது இனிதே நிறைவேறியது.

**29-01-2022 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**அமுத கலைக்ஞான போதம் - இரண்டாம் காண்டம் :**

**எந்நை சுக்கிலாம் பரனாட்டில் வாழும் னாளில்...** என்ற தெய்வத் திருப்பாடலுடன் அவையானது துவங்கப் பெற்றது. தந்தையின் எண்ணத்திலிருந்து தாயின் கருவறைக்குள் னுழைய வைத்து, அழற்காற்று, னெருக்கம், துருசு அவஸ்தையில் னொந்து கொண்டிருந்ந நம்மை காப்பாற்றி, மும்மலக் கணவாயின் துயரத்திலிருத்து மீட்டு, இன்றளவிலும் தோன்றாத் துணையாக னின்று இரட்சிக்கின்ற எம்மானை தொழுதல் செய்வோம்.



Copyright © AMNA Trust, Chennai 

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் : 83**

நாம் இந்த மனித தேகமெடுப்பதற்கு முன் எத்தனை பிறப்புகள் எடுத்தோம் என்பதை காலக்கணக்கோடு தெய்வமவர்கள் இத்திருவாக்கியத்தில் அருளியுள்ளார்கள். இறைவன் மனிதனுக்குள் அமானிதத்தை படைத்து, அதை அனுபவிக்க ஜீவ சுதந்திரத்தையும் கொடுத்து, இன்னிலவுலகிற்கு அனுப்பி வைத்த னோக்கமாவது, மனிதன் பேரின்ப பெருவாழ்வில் குடியேறி வாழ வேண்டும் என்பதற்காகத் தான். இச்செயலை, எமவாதையைத் தடுக்கும் என்திறம் என்ற பாடலில், *குடுத்தான் பரம்பெரியோன் குறித்த பெரும் வாழ்வினுக்கே* என்று அருளப் பெற்றுள்ளது.

**காலந்நாட்டிய காரணப்பா பாடல் எண் : 13**

*ஜீவ ரத்தினச் செழும்புன லாசன...* என்ற பாடலுக்கான ஜீவ சகோதரி லாவண்யா அவர்களின் புரிதல்:

மனிதனின் தூலத்திற்குள் சுயம்பிரகாசமாகவும், னித்தியானந்த பிரம்ம சொரூபமாகவும், செம்பொருளாகவும் இருக்கும் ஜீவரத்தினமானது செழும் புனலாசனத்தில் வீற்றிருக்கிறது என்பதை தேவர் உத்தமராகிய ஆசானின் னாதமே நமக்கு உணர்த்துகிறது. அன் னாதமே கோவரத்ன குடையாக இருந்து நம்மை பிறவிச்சூழலில் சிக்காமல் காத்து பிறவாமையாகிய பிரசாதத்தை அளிக்கிறது.



***ஸ்ரீலஸ்ரீ. மெய்வழி சாலை ஆண்டவர்கள்***

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் - அடைக்கலப்பத்து பாடல் எண் : 2** **வெறுப்பனவே செய்யும் என் சிறுமை...** என்ற பாடலுக்கான ஜீவ சகோதரி பூர்ணிமா அவர்களின் புரிதல் - னீதிக்கு மாற்றமாக மனிதன் செய்கின்ற சிறுமையான செயல்களை குருபிரான் பொறுத்து கொள்கிறார் என்பதை, அருணகிரினாதர் திருப்புகழ் பாடலில், **சடகசட மூட மட்டி பவவினையிலே சனித்த தமியன் மிடியால் மயக்கமுறுவேனோ** என்கிறார். கசடுகளையே னிறைத்து, பதவி, புகழ் போதையால் மயங்கி இருக்கும் மாந்தர்களுக்கு குருபிரான் அறிவு புகட்டி, அடைக்கலம் தருகிறார் என்பதை உணர்த்துவதே அடைக்கலப் பத்தாகும்.

**திருஞான சம்பந்தர் அருளிய தேவாரம் - பாடல் எண் : 11**

*நாலுங் குலைக்கமு கோங்கு...* என்ற பாடலுக்கான ஜீவ சகோதரி உமாராணி அவர்களின் புரிதல் - மெய்ம்மணம் கமழக்கூடிய ஆசானின் னாதமானது சீடனின் உள்ளத்துள் உறைந்திருக்கும் சிவனை உணர செய்கிறது. திருமருகல், திருசெங்காட்டங்குடி, கணபதிீச்சரம் என்ற மூன்றும் - புண்ணிய உருவாக வரும் குருபிரானின் ஆலவாயூற்றிலிருந்து எழும்பி வர்ஷிக்கும் அமுததாரையை குறிப்பதாகும்.

**ஆதி மான்மியம் - ஜீவ சிம்மாசனப் பருவம் :** *ஏ மனிதனே - உன்னுடைய இந்த உப்புப் பாண்ட உடலினுக்குள்ளே ...* என்ற தெய்வத் திருவசனங்களில் அருளப்பட்டிருக்கும் பெருனிலைகள்- மனிதனின் தூலத்திற்குள் சொர்க்க, மத்திய, பாதாளம், கதிர், மதி, மின், பனி, அவனி, ஆகாயம் என்ற தத்துவ விலாசாசன னிலை முளை விளை கோடிகளும்... மகா னுணுகி னுணுகி னுணுகிய வடிவினுக்கும் அப்பால் உற்ற னுட்ப னுணுகிய வடிவில் *ஒஸ்சம்சு, ஓதாமலோதும் வேதம், எழுதாத எழுத்தாக இருக்கும் மந்திரரூபியை,*


Copyright © AMNA Trust, Chennai

*ருத்திராட்சரத்தை, வஸ்து வித்தை, ஊனக்கண் கொண்டு பார்க்க முடியாது, அறிவுக்கண் கொண்டுதான் பார்க்க முடியும்* என்பதையும், அறிவுருவாக வரும் ஆசானிடம் சற்பாத்திரனாக வாழ்பவர்க்கு இத்தகைய பெருனிலை வைப்புகள் அனைத்தும் கைவரவாக்கப் பெறுகிறது என்பதை ஆண்டவர்கள், ***னிலையெழுங் காட்சி கலைக் காண் றொழுகியே***... என்ற பாடலில் அருளியுள்ளார்கள்.

இத் தெய்வீக தேவ ரகசியங்களானது தூல, சூக்கும, காரண, மகாகாரண னிலைகளாக மனிதனுக்குள் விளங்கிக்கொண்டிருக்கிறது. மேலும், இவை உடல் கடந்த அந்தரங்கத்து பாஷையாக, அப்புறத்து நிலையாக இருப்பதால் **அந்தக்கிதாபு** என்று ஓதுவது தான் சரி என்று ஆண்டவர்கள் செயல் னிரூபணையோடு தன்னை அண்டிய மக்களுக்கு னிஜமாக்கி வைத்தார்கள். இன்றளவிலும் இம்மெய்ச் செயலானது, ஆதி மார்க்க னீதி அவையில் சார்ந்த மக்கள் அனைவருக்கும் னிஜமாக்கப் பெறுகிறது என்ற ஆசீர்பாதத்துடன் ஆசானவர்கள் அவையை னிறைவு செய்தார்கள்.

**30-01-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**அரண்டிடு மடத்தாருப தேசம தழிம்பெனக் கண்டக்கினியி லிட்டெடுத்த பின்**.

என்ற ஞானமுறையீடு பாடலுடன் குரு பிரானவர்கள் அவையை தொடங்கினார்கள்.

பிரம்மாவின் நான்கு தலையாக இருக்கும் சதுர்மறையானது சரண கமலாலயத்தில் னின்று விளங்குகிறது என்பதை நாம் அறிவுவடிவு ஆனபிறகு தான் அறிய முடியும். மூலத்திருந்த முதல் ஞான மூர்த்தியராக அவரவருக்குள் வழிகாட்டும் பொருளாக இருக்கும் பதியாகிய இறை பெருளானது பசுவாகிய ஜீவனோடு சேரும் போது பசுபதியாகி பிறவாமை அடைகிறது. இப் பெருனிலையில் நம்மை ஆக்கி வைக்கும் மெய்க் குருபெருமானை தேடி அடைவதே மனுவின் தலையாய கடமை என்று வேதம் கூறுகிறது இச்செயலையே

**னீடாழி உலகில் எனக்கென்று விதித்திருந்து**
**னீதியுடன் எனையாண்ட குருபரன் தாள் காப்பாய்**

என்ற பாடல் உணர்த்துகிறது. னீதியெனும் பொருளானவன் மனு என்பதை உணர்த்தி அறியாமையை அகற்றி அறிவுவடிவாக மாற்ற ஒரு மெய்குருபிரான் வேண்டும். அவர்களின் வாய்மை நம்முள் இருக்கும் சிவன் எனும் வாடாத தீபத்தை ஏற்றி வைத்துவிடும். அதன் பிறகு உன்னுள் அறிவே ஆசானாக னின்று வழிகாட்டும் என்பதையே **துப்புரவாக உன்னுள் துலக்கும் ஆசானைப் போற்றி** என்று வேதத்தில் அருளப் பெற்றுள்ளது. கருப்பை கூடி கலந்த வினைத் தொடராகிய நம்மை ஒரு மெய் குருபிரான் தனது அருளால் அரை நொடிக்குள் காட்டும் விஸ்வரூப தரிசனையை நம் வினையானது அறிய விடாமல் தடுக்கிறது. வினை தீர்க்கும் ஆசானின் னாதமே நம் வினையை நீக்கி சிந்தை தெளிவித்து பரமபத நித்திய வாழ்வில் குடியேற்றி வைக்கும்.

திருமதி சுமதி அக்கா அவர்களின் புரிதல் - **அரியருள் வருகும் அருமறை விதியோன்...** என்ற குருமணிமாலை பாடலுடன் தொடங்கினார்கள். **கு** எனும் அறியாமை இருளை நீக்கி **ரு** எனும் அறிவுப் பிரகாசத்தில் நம்மை ஆக்கி வைக்கும் இறைசக்தியின் வல்லபமும் மானிடரூபமும் தாங்கி வரும் குருபிரானை வணங்குவதே தோத்திரம்.

**குருவின் சிறப்பு**: குருவே பாதம்-சிவன்-நந்தி-அறிவு. குரு பார்க்க கோடி நன்மை. ஜீவன் குடியேறியதன் அடையாளமாகிய மூச்சும் சத்தமுமாகிய நமது வாழ்நாளானது ஐம்புலன்களின் வழியாக வீணாகிறது. இதையே **புலன் வழி பற்றியோடி போக்கியென் வயதையெல்லாம்...** என்ற பாடலில் கூறியுள்ளார்கள். ஆசானின் திருனாவிலிருந்து வரும் அமுத வர்ஷிப்பான


Copyright © AMNA Trust, Chennai

தீர்த்தமே,-வீணாகும் வாழ்நாளாகிய நம் பாவத்தை நீக்கும். குரு பெருமான் அவர்கள் னா கொண்டு நம்மை ஆளும் நாளே நமக்கு நல்ல நாளாக இருக்கிறது.

ஜீவ சகோதரர் ரிஷி அவர்களின் புரிதல்-

**மனுவின் கடமை**: மனுவின் கடமையாகிய மெய்யை உணர முதலில் பொய்யை நாம் உணர்தல் வேண்டும். வந்த வேதங்கள் அனைத்தும் இதையே கூறுகிறது. இது போல் நம் அறிவை அறிய நமக்கு மனமானது வேண்டும். ஞானிகளும் பாரவான்களும் பல இன்னல்களையும் கடந்து இந்த மெய்யை செயலாக்க வந்தது போல், மெய்வழி ஆண்டவர்களும் **மறலி கைதீண்டா சாலை ஆண்டவர்கள் மெய்மதம்** என்பதை உருவாக்கினார்கள் நரனிலிருந்து மனிதனாய் மாறி தேவப்பிறப்பில் பிறந்தால் மட்டுமே எமன் பிடியிலிருந்து தப்ப முடியும்.

ஜீவ சகோதரி சரூபா அவர்களின் புரிதல் **- வண்ணமேனியும் பொன்னிறம் மின்னவே** என்ற பாடலில் - வண்ணமேனி என்பது அங்கமாக, ஆறு ஆதாரங்களாகவும், பொன் என்பது அறிவாகவும் உள்ளது. மனமானது பொன்னாகிய அறிவாக மாறினால் நற்கதியும், புகழும், கீர்த்தியும் நமக்கு கிட்டும். கரிசல் எனும் கனிமப் பொருளாகிய தங்கத்தின் நிறம் கருப்பு. காலகாலமாக நம்மை காக்கும் அறிவாகிய காருண்யமும் கருப்பு நிறமே, செண்பகமலர் சீர்மணம் பொங்கிடும் என்பது வாடாத அறிவின் மணம் கமழும் செயலாகும். செல்வச் சீர் னபி என்ற அமானிதமாகிய அறிவின் மணமானது, மனதை ஒருநிலைப்படுத்தி மெய் உணர்வைப் பெறும் போதுதான் தெரியும். வண்ணம், வாசனை, ஓசையாவும் குருபிரானின் னாவிலிருந்து வரும் அமுத மொழியாக, அறிவு வடிவாக, கூரிய இருள் வஸ்த்துவாக இருக்கிறது. அண்ணல் எனும் அனந்தர் குலத் தந்தையாகிய குருவை விட மேலானது இவ்வுலகில் ஏதுமில்லை.

ஜீவ சகோதரர் சொர்ணமதி அவர்களின் புரிதல் **– அனுபவம் -** மனிதன் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தாலும், தன்னுடைய அடுத்த தலைமுறைக்கு விட்டுச்செல்வது தன் அனுபவத்தை மட்டும் தான். மனம் அறிவாக மாறுவது அனுபவமாகும். அப்படி ஒரு அனுபவத்தையே குருபிரான் நமக்கு சொத்தாகத் தருகிறார்கள். குருவானவர் நம்மை யோகத்தில் பழக்குவதும்,பேசவைப்பதும் அனுபவத்தைப் பெறவே.வாய் திறந்து ஆலம் காட்டுவது என்பது ஒரு மெய்குரு பிரான் தன் திருவாய் திறந்து நம்மிடம் உள்ள ஆலமாகிய உலகத்தைக் காட்டும் செயல். அவர்களின் திருனாவிலிருந்து வரும் பொன் மொழிகளைக் கேட்டு நாம் தேவப்பிறப்பில் பிறப்பதே சிவானுபவமாகும்.

ஜீவ சகோதரி செஜிதாவின் அவர்களின் புரிதல் - **கோடாயிதக்கூர்- 26-வது வாக்கியம்-** இறைவன் மனுக்களுக்கு வயது தந்நதின் பிரயோசனமாகியது-மெய்ப்பாலறியவே. என்பது தெய்வ திருவாக்கு. இதையே பத்தியத்திடத்தில் **தன்னிலை கண்டுணரும் மெய்ஞ்ஞான னாள்** என்ற பாடலிலும், அறிவு அறி பாடத்தில் **பொய்ப்பொருட் பாடோன் மெய்ப்பொருள் மேவான்** என்ற பாடலிலும், மெய்யுணர்தல் பற்றி பல னிலைகளில் கூறியுள்ளார்கள். பழகப் பழக பாலும் புளிக்கும் என்பது, பாலானது மிகவும் சீக்கிரமாக கெட்டுப்போகும். அதிலிருந்து வரும் நெய்யோ கெடாமல் நீண்ட நாட்கள் இருக்கும். இதேபோல் நாம் ஒரு மெய் குருபிரானிடம் சேர்ந்தால், பாலிலிருந்து வரும் நெய் போன்று அழியாமல் இருக்கலாம்.

**பாலுக்குள் மோரைவிட்டதுபோல் - பதம்**
**பார்த்துக்க டைந்து னெய் யாக்கும்சஞ்ஜீவி**

என்ற ஆனந்நக் களிப்பு பாடலுடன் குருபிரானவர்கள் அவையை நிறைவு செய்தார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

**30-01-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஶ்ரீ. பார்த்திபன்**

ஆதி மார்க்க னீதி அவையின் சத்துவாச்சாரி காணொளிக் காட்சியில் ஜீவ சகோதரர் கௌதம் அவர்களின் சபை குறிப்புகள்.

**னற்றாள்:**

**கற்றதனால் ஆய பயனென் கொல் வாலறிவன்**
**னற்றாள் தொழாஅர் எனின்** (திருக்குறள் :2)

மெய் ஆசானிடம் கற்றதின் பயன் னற்றாளை கண்டு தொழுவதாகும். னற்றாளாக வீற்றிருப்பவர்களே குருபெருமான் என்பதை,

**னற்று ணைற்றாள் சித்தரிக்கு ரத்திபெற்ற**
**முத்திரைக்கூ டஸ்தரட்ண ரேறே மேடியா**
என்று ஆடலங்ஙன்னி பாடலிலும்,

**சொற்றுணை வேதியன்.....**
**நற்றுணை யாவது நமச்சி வாயவே**
என்று தேவாரம் பாடலிலும் சாட்சி கூறுகிறார்கள்.

**செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது.** (திருக்குறள் :101)

தம் சொந்த அங்க அவையங்களினால் கூட உதவ முடியாத எல்லையில், அரூபத்தில் வந்து செய்யாமல் செய்து உதவக்கூடிய பொருளே னற்றாளாக விளங்ஙுகிறது. எமன்பதி கடந்து வீர குன்றேறி வாழ வந்த னம்மை வாழவிடாமல் தடுக்கும் அசுரனாகிய மனதை குருபிரான் வேல் கொண்டு ஒரு னிலைப்படுத்தி அறிவாக மாற்றி வைக்கிறார்கள். இச்செயலை சோடச னிலை பாடலில்,

**அண்டியே மோனங் னொண்டங் ஙண்டியே**
**அறித்து வாரத்தில்**
**ஒண்டியொ ரும்மன மாகவு றைத்திட்**
**டோதும் முறையாமே ...**
என்று அருளப் பெற்றுள்ளது.

ஐம்புல னுகர்ச்சியிலேயே வீழும் மனதை சிதற விடாமல் ஆசான் காட்டிய வழியில் ஒண்டி ஒரு மனமாய் னிலைப்பதே பிரம்ம வித்தை செயலாகும். ஆசான் நம் மீது இரக்கம் கொண்டு உள்ளமாகிய மகா மகசூக்கான இருதயத்தில் னற்றாளை காட்டி பழக்கி வைத்து வீணாக்கிய காலத்தை மீட்டுத் தருகிறார்கள்.

**போனனாள் மீண்டங் ஙேறும்**
**பேரின்ப வடிவம் பெற்று**
**ஊனங்ஙள் எனைத்தும் தேய்ந்து**
**உன்புகழ் வானம் பாயும்.**
ஞான முறையீடு



*திரு. சாலை ரவி அப்பா அவர்கள்*
*நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை*



Copyright © AMNA Trust, Chennai

**கொழுமுனையாம் கதிர் முனையி லாடும் பாதம்** என்ற குரு முறாதி பாடலில், கதிர்முனை என்பது ஆசானின் ஓர் எழுத்து மாத்திரைக் கோலாக உள்ளது. கோடி என்பதற்கு அறிவு, புதிது, இறைவன் என்ற பல பொருள் உண்டு. புதியவனாகிய இறைவன் சகல உயிர்களிலும் **னான்** என்ற பொருளாக உள்ளான் என்பதை அறியக்கூடிய அறிவு மனிதனிடத்தில் மட்டுமே உள்ளது.

**கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டை பண்ணுகிறார்கள்** (நீதிமொழி - பைபிள்)

பயம் தோன்றும் போது மட்டுமே பக்தி உருவாகிறது. மனம் னழுகும் போது பிறவிப்பிணிக்குள் மாட்டிக் கொள்கிறோம். ஆசானை நம்பி அவர்களின் வாய்மைக்குள் ஆகினால், பிறவாமையாகிய பேரின்ப வாழ்வில் னம்மை குடியேற்றி சிரஞ்ஞீவியாக வாழ வைப்பார்கள்.

பிள்ளையார் சுழியாகிய **"உ"** என்பது பஞ்ஞாட்சரமாகவும், ஏகாட்சரமாகவும், அலீப், லாம், மீம் ஆகவும் விளங்நுகிறது. சர்வத்திலும் னின்று ஆடும் குஞ்ஞித பாதத்தை ஏழ்னிலைக் கம்பமாய் மூன்றுலகத்திலும் ஊடுருவி னிற்கும் அத் திருப்பாதத்தையே **னற்றாள்** என்கிறார்கள்.

ஏழ்னிலைக் கம்பம் என்பது அமானிதமாகவும், அறிவாகவும் உள்ளது. மூன்றுலகம் என்பது சொர்க்கம், மத்தியம், பாதாளமாக உள்ளது. அறிவின் வழி வாழ்வது சொர்க்கம் என்றும் மனதின் வழி வீழ்வது பாதாளம் என்றும் வேதத்தில் அருளப் பெற்றுள்ளது. ஊமை எழுத்தாகிய னற்றாளை னம் இதயாசனத்திற்குள் கற்பிப்பவரை தூலத்திலிருக்கும்போது பெரியோர், ஆன்றோர், செம்மல், குருபிரான், ஞானி என்ற எத்திற னாமங்நளோடு அழைத்தாலும், தேகம் மறைந்நப்பின் அவர்களைத்தான் தெய்வம் என்று உலகம் கொண்டாடுகிறது.

**ஐவழி விளைவின் அப்பா லாகிய**
**செய்வழி காட்டி உய்வழி கூட்டும்**
**மெய்வழி ஒன்றே வாழியிவ் வழியே.**

மெய்வழியாகிய ஆதி மார்க்க னீதி வழியில் னம்மை வழி னடத்தி பேரின்ப பெருவாழ்வில் ஆக்கியும், ஆக்கிக் கொண்டும் இருக்கும் னம் குருபிரானின் பாதம் போற்றி பணிவோம்.

**இசை வகுப்புகள் ~ தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**
**09-01-2022 ~ ஞாயிற்றுக் கிழமை**

**காலந் நாட்டிய காரணப் பா**

***வேத வேதிய னாதபு ராதன***
***பாத மேவும்ப ருவமெய்ச் சாலையில்***
***சூது வாதுங்னை சூழ்ந்நக லியுகம்***
***ஓதி யோடியு கம்புரண் டானதே***

***ஆவ னவான காலம னைத்துமே***
***சோப னச்சாலை வந்நுதி ரண்டன***
***ஆவ னக்குடி யானஅ னந்நர்க்கே***
***போவெ னக்கலி காலம்பொடிந்நதே***

என்ற பாடல்கள் தாளத்துடன் பாடுவதற்குப் பயிற்சி அளிக்கப் பெற்றது.


Copyright © AMNA Trust, Chennai

**23-01-2022 ~ ஞாயிற்றுக் கிழமை**

**பூங்ஙிளிக் கண்ணி**

*ஆதி பரமகுரு ஐயன்றி ருப்பாதம்*
*ஓதி யடிபணிந்து ரைப்பதுகேள் பூங்ஙிளியே*

*அவ்வலில் தையிப தாத்துசிபத் தானஇல்மை*
*மெய்யிலறிந்நவர்க்கு விண்காப்புப் பூங்ஙிளியே*

*முத்தியெ னுனடன மூலமணிப் பதத்தைச்*
*சித்தமறிந்நசெயல் ஜெயமவர்க்குப் பூங்ஙிளியே*

என்ற பாடல்கள் தாளத்துடன் பாடுவதற்குப் பயிற்சி அளிக்கப் பெற்றது.

**30-01-2022 ~ ஞாயிற்றுக் கிழமை**

**பூரணப் புதையல்**

**காப்பு**

*னேருரைதம் பிஸ்மில்லா ஹிர்ரஹுமா னோடும்*
*னிர்ரஹீமென் றிலங்நும்பரி பூரணமிங் நுரைக்கத்*
*திருமறையோன் யாகௌதல் லஅலமென வழைத்த*
*தீரமுள்ள தீன்முகைய தீன்பாதம் பணிந்து ...* என்ற பாடலும்

*சிரம்பெருந் நுறைவளரும் - வேகாச்*
*சீர்பாத கமலமென் சிரசில்வைத்தே*

*இருமைமுத் தாபமெல்லாம் - போக்கி*
*இதையம் கடல் போல்விரிந் நுதயஞ்ஞெய்ய*

*இறைவனே யறிவானென்ற - அச்சரமூன்*
*றிருத்தியெ மக்கறிய வைத்தவரத*

*குருமலரடி வணங்ஙி - இறைதூதர்*
*குலனரு ளாரணப் பலன்கைவர*

*இறுதினாள் வரும்கசப்புக் - கொடுமரண*
*மிவையணு வுமணுகா வாழ்வீரென்றே ...*

என்ற பாடல்களும் தாளத்துடன் பாடுவதற்குப் பயிற்சி அளிக்கப்பெற்றது.



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின்
# 2022 பிப்ரவரி மாத அவை நிகழ்வுகள்


Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் வர்ஷிப்பு



திரு. சாலை ரவி அப்பா அவர்கள்
நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை

ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே, எதார்த்த நன்மன சற்சன மக்களே உங்களுக்காக, இந்த மாதத்திற்கான மின்னணுச் சஞ்சிகை இந்த நன்னாளில் மலர்கின்றது. இதனை தொகுத்து வழங்கிய பதினோரு நன்மக்களும் மிகுந்த பிரயாசையுடன் னேர்த்தியாக இதைத் தொகுத்து வழங்கி உள்ளார்கள். இதில் இடம்பெற்றுள்ள திருவாசகத்தில் மாணிக்கவாசகர் பெருமான் அருளிய அடைக்கலப்பத்து, செத்திலாப் பத்து இவற்றின் பாடல்களுக்கான தனது புரிதலுடன் திருமதி பூர்ணிமா, மற்றும் தேவாரத்தில் திருநாவுக்கரசர் அருளிய திருநள்ளாறும் திரு ஆலவாயும் என்ற பாடல்களுக்கான தனது புரிதலுடன் திருமதி உமா ராணி, ஆகியோர் பகிர்ந்த விஷயங்களும் மிக நேர்த்தியாக தொகுத்து வழங்கப் பெற்றுள்ளது. இதைப்போன்று சத்துவாச்சாரி சபை வாயிலாக ஆண்டவர்களின் திருச்செயலை ஓங்கி உரத்த குரலில் திரு.கௌதம் உரைக்கின்ற விதம் மிகச்சிறப்பாகவும், அதனை திரு.கிருஷ்ணமூர்த்தி தொகுத்து வழங்கிய பாங்கும் போற்றத்தக்கதாக உள்ளது. ஒவ்வொரு சபை நிகழ்வுகளிலும் காலந்நாட்டிய காரணப் பா பாடலுக்கான தன் புரிதலை கூறுகின்ற திருமதி லாவண்யாவின் விளக்கங்கள் மிகவும் வியந்து போற்றக்கூடிய ஒன்றாக உள்ளது. மேலும் வியாழன், சனி, மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் சிவகாசி, தூத்துக்குடி சபை மற்றும் இசை வகுப்பின் தொகுப்புகளும் மிக சிறப்பாக தொகுத்து வழங்கப்பெற்றுள்ளன. இதில் காணப்பெறும் விஷயங்கள் பலமுறை பேசப் பெற்றிருந்தாலும் அவையாவும் தெவிட்டாத தெள்ளமுதாக உள்ளது என்பதை, யுகந்தோறும் வருகின்ற பாரவான்களின் இரக்கத்தால் அவரவர்களும் தங்கள் அனுபவத்தின் வாயிலாக அறியலாம் என்பது சத்தியமான உண்மை.

வருங்காலங்களில் இந்த மெய்ஞானமானது **தேசமெங்கும் சிறந்து செழிக்கவே** என்ற ஆண்டவர்களின் திரு வாக்கிற்கு இணங்க சீரோடும் சிறப்போடும் இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஒவ்வொரு மாதமும் வருகின்ற இந்த மின்னணுச் சஞ்சிகை, மெய்வழி ஆண்டவர்கள் தங்கள் அமுத நாவு கொண்டு அருளிய வேத வேதாந்தங்களில் உள்ள அள்ள அள்ளக் குறையாத பொக்கிஷங்களையும் அதனை சாட்சியாகக் கொண்டு பேசப் பெறும் மற்ற அருளாளர்களின் பாடல்களையும் அதற்கான விளக்கங்களையுமே அடிநாதமாகத் தாங்கி வருகின்றது. இதில் காணப்பெறும் விஷயங்களை மக்கள் படிப்பதோடு நின்று விடாமல் நிறுத்தி நிறுத்துப் பார்த்து பயன்பெற வேண்டும் என்பதே இந்த அவையின் நோக்கம்.

**கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போக வேண்டும்** என்ற வள்ளல் பெருமானின் தாரக மந்திரத்திற்கு ஏற்ப உலக காரியங்களில் தெளிவும் தெய்வீக காரியங்களில் குழப்பமும் உள்ள கண்மூடிப் பழக்கங்கள் இந்த மெய்ஞானத்தில்


Copyright © AMNA Trust, Chennai

வந்துவிடக்கூடாது என்பதே இந்த அவையின் நோக்கம். இறைவனின் கஜானாவில் இருந்து அருளப் பெறும் புதுமைகளை ஒவ்வொரு மாதமும் தாங்கி வருகின்ற இந்த சஞ்சிகை மேன்மேலும் சிறக்கவும், இதனை பார்த்து படித்து பயன் பெறுகின்ற மக்கள் சீர் சிறப்புடன் வாழவும் நல்லாசியுடன் நல்வாழ்த்துக்கள்.

நமஸ்காரம்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

**03-02-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ.விஜயகுமார்**

**வான்மதி கொரல் வாக்கியம் எண் 53 :**

**குருபிரானின் வர்ஷிப்பு**: நாத்திகரும் ஆத்திகரும் கடவுள் என்றால் நகலான சிலை வடிவை காட்டுகிறார்கள். தன்னைத் தானே காத்துக் கொள்ள முடியாத சிலை வடிவம் நம்மை காக்கும் என்ற கண்மூடித்தனமான நம்பிக்கை வைத்துள்ளனர். சிலை வடிவம் உணர்த்தும் பொருளை அறிவதற்கே பெரியோர்கள் **கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போக** என அருளுகிறார்கள்.

இறைவன் தன் சாயலாகிய சப்தமாகவே மனிதனைப் படைத்தான். **சத்தம் பிறக்குமிடம் அத்தன் இருப்பிடம்.** இறைவனை அடைவதற்கான வழி இதுவே. னாத உபாசனை என்பது அறிவு எனும் னாதத்திற்கு செவி கொடுப்பது. அறிவுக்கு ஆக்கமும் அழிவும் கிடையாது. உலக காரியங்களில் தெளிவாக உள்ள நாம் தெய்வீகத்தில் சிறுபிள்ளைத்தனமான பொம்மை விளையாட்டாகவே அறியாமையில் உள்ளோம். வேத சாட்சியான கேள்விகளுக்கு நம்மிடம் பதில் இல்லை. கிரேக்க ஞானி சாக்ரடீஸ் *எங்கே? எப்பொழுது? எப்படி? ஏன்? என்ற* கேள்வியை கேள் என்று மனுத்தலைக்கு அவசியமான ஒன்றை அருளுகின்றார்கள்.

மனிதன் கடைத்தேறக் கொடுக்கப் பெற்ற ஆறாவது அறிவை அழிந்து போகின்ற பொருளுக்காக உபயோகிக்கும் போது பாவமும் அதற்கான வினைப்பயனும் வருகிறது. அதனாலேயே பிறவிச் சுழலில் சிக்குகிறோம். இதனை ஆண்டவர்கள் **பிறவிப் பெருங்கடலில் பிறப்பொழி யாப் பாவியெனை குறை தவிர்க்க வந்த குல குரு பாதம் யான் மறவேன்** என அருளுகிறார்கள். தேவரகசியங்கள் பொதிந்த இந்த தேகாலயத்தை மனிதன் தன்னுடைய இழி செயல்களால் கேடான நிலைக்கு ஆக்கிக் கொள்கிறான்.

ஆதி மார்க்க னீதி அவை மக்களுக்கு அறிவுப் பேரொளி இன்னதென்று அறிவித்து அவர்கள் முதலில் அறியவேண்டியது *அறியாமையே* என்று தொட்டுக் காட்டி விழிப்புணர்வைத் தூண்டி மூன்றாவது கண் பெற்று, அதில் குடியேறும் அரும்பெரும் தவநிலை இரகசியங்களை எடுத்து வெளியாக்குவதை அடினாதமாக குறிக்கோளாகக் கொண்டு இயங்குகிறது.

**குரு ஸ்தோத்திரம்** பாடலில் **காவலான புராதன வேதியர் ஆவலோங்ங அவாவும் கழன்றன்னாள் ...** என மெய்வழி ஆண்டவர்கள் அருளுவதை

**பற்றுக பற்றற்றான் பற்றை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு** (திருக்குறள் 350) என திருவள்ளுவ நாயனாரும் அருளுகிறார்கள். அழியாத பொருள் மீது நாம் ஆசை, பற்று கொள்ள வேண்டும். இதனையே **ஆவலோங்ங அவாவும் கழன்றன்னாள் பாவம் னீங்கப் படப் பளிங்ஙானதே** என்கிறார்கள். பளிங்கு என்றால் கண்ணாடி அதில் *நான்* என்பது ஒன்றும் இல்லை எனத் தெரிந்து கொள்வதாக உள்ளது. **ஜலால் எனும் கடலும் ஜமால் எனும் கடலும்** என்ற இப்பாடலில் வரும் ஜலால், ஜமால், இலாஹி, இலாஹு, தலாம், மீம், கலாம், யாஹூ என்ற இந்த வார்த்தைகளின் பொருள் இன்னதென்று யதார்த்தமாக தேடுபவர்களுக்கு இதைத் தெரியவைக்க இறைவன் ஒரு தேவ ஆசானை அனுப்புவது நிச்சயம்.



Copyright © AMNA Trust, Chennai 

**காலந்நாட்டிய காரணப்பா பாடல் எண் 14**: **சாதிச் சாதகம் வாழிமெய்ச் சாசனம்** ... என்ற பாடலுக்கு ஜீவ சகோதரி திருமதி. லாவண்யா அவர்களின் புரிதல்.

சாதி என்பது சாவுக்கு தீ வைக்கும் சாதகமான செயல். மும்மலங்களை கடந்து மனதை ஓர் நிலையாக வைப்பதுவே சாதகமாகும். குருவின் திருவார்த்தையே அதற்கான சாசனமாக உள்ளது. சாலை என்ற திருமேனி மூலம் ஓதுவதை அறிந்து மூச்சு துண்டாடப்படும். பாவத்தில் இருந்து தப்பி ஜீவ தேகத்தை பெற்று நித்திய வாழ்வை பெறுவோம்.

**குருபிரானின் வர்ஷிப்பு** : சகல ஜாதிகளையும் திரட்டி ஓர் குலமாக மெய்வழி ஆண்டவர்கள் *மறலி கை தீண்டா சாலை ஆண்டவர்கள் மெய் மதம்* என்பதை ஸ்தாபித்தார்கள். தன்னையறிந்து சிவமான ஜாதியே ஜாதி மற்றவையெல்லாம் ஜாதி அல்ல. புலன்களில், பொறிகளில் வைத்து மனிதன் ஒரே ஜாதியாக உள்ளான்.

**ஆதி மார்க்க னாத னீதி சாதிபேதம் தீர்த்த சேதி**
**சமரச வேதம் சாலை அமரர்கள் னீதம்** என்று நமது ஆண்டவர்களும் அருளியுள்ளார்கள். சாதி பேதம் என்பது இவனுள் அறியமுடியாததாக இருக்கும் ஜீவனில் இருப்பதாக உள்ளது. **இட்டார் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர் பட்டாங்கில் உள்ளபடி** என ஔவையாரும் அருளுகின்றார்.

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் - செத்திலாப்பத்து - பாடல் எண் 10** ***அளித்துவந்தெனக் காவ என்றருளி*** ... என்ற பாடலுக்கு *ஜீவ சகோதரி பூர்ணிமா அவர்களின் புரிதல் :*

மெய்க்குரு பிரான் தங்கள் திருவாக்கால் சீடனின் எமன் அச்சம் தீர்க்கும் செயலை அருளுகின்றார். சீடனானவன் அந்த பிரம்ம வித்தையில் திளைத்து ஆனந்தக் களிப்பில் மூழ்கி அநியாய மரணத்தை தவிர்க்க வலம்புரிச்சங்கு கொண்ட இறை திருவடியின் கீழ் ஏங்குகிறான்.

**திருநள்ளாறு தல வரலாறு** பற்றி *ஜீவ சகோதரி உமாராணி அவர்களின் புரிதல்* :

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் இவர்களால் தேவாரம் பாடப்பெற்ற ஸ்தலம் **திருநள்ளாறு**. நளனின் சுத்தமில்லாத கால் சனீஸ்வரனால் பீடிக்கப் பெற்றது என்பது அவனுடைய மனதையே குறிக்கிறது.

**ஆண்டவர்கள் வாக்கியம் :** *மறதியற்றதற்குப் பெயர் நினைவு. அதுவே பரிசுத்த நிலை. அதில் தீங்காகிய சைத்தான் கலந்தால் மனம். அசுத்த மனம் கொண்ட நளன் குருவின் திருவாக்கால் கிரகத்தின் பிடியில் இருந்து மீண்டான். குரு பிரான் அருளிய பிரம்ம வித்தை மூலம் தூல, சூக்கும, காரண, மகா காரண தேகத்தில் ஏறிப் பழகி எமனிடம் இருந்து தப்பிக்கிறான்.*

**குரு பிரானின் வர்ஷிப்பு :** பாத சனி என்பது அகமியமாக உள்ளது. நவாம்சம், ராசி நிலை, ஜென்ம ராசி, ஜென்ம லக்னம் இவையெல்லாம் இந்த உடல் கடந்து அப்பால் உள்ள சூக்கும, காரண, மகாகாரணத்தில் உள்ளது. குணங்குடியார் அவர்களின் பாடல் - **சூத்திரப்பாவை கயிறற்று விழு முன் சூட்ச கயிற்றைப் பாரடா அதி சூட்ச கயிற்றைப் பாரடா** இப்பாடலில் மூச்சு, சரம் (உடம்பு இயங்க காரணமாக இருப்பது); உடம்பு - இவ்வாறு இயங்குவதை உணர்வின் மூலம் தெரிவது. உணர்வுதான் முதல் அறிவாக உள்ளது. ஐந்து புலன்களும் உணர்வு பொதிந்ததாக உள்ளது. அதன் தலைவன் மனம். மெய் உணர்வு மூலம் இறைவனை அடையலாம். ஆறாவது அறிவின் மூலமாக னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தினை பெறவே நாம்



Copyright © AMNA Trust, Chennai

வந்துள்ளோம். இதை அறியாவிட்டால் நரகமே கதி. ஆசானிடம் தோல்வியடையும் சீடன் இறுதியில் ஜெயப்பதத்தை அடைகிறான்.

இறையருளும் குருவருளும் திருவருளுமாக நின்று இந்த காணொளிக் காட்சி மூலம் புதிய மக்களுக்கு புதிய எழுச்சியையும் புதிய உணர்வையும் தருவதற்கு இவை அனைத்தையும் பேசவைத்த பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் திருவடியைப் போற்றி வணங்கி குருபிரான் அவர்கள் அவையை நிறைவு செய்தார்கள்.

**05-02-2022 ~ சனிக்கிழமை ~ ஆதி மான்மியம் சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**எமபடரடிபடு கோடாயிதக்கூர்** *திருவாக்கியம் எண்-84*

னித்திய சூரியர்கள் வீற்றிருக்கும் இடம் னினைவென்னும் ஆகாயம். அவர்கள் னாம ரூபம் அற்றவர்களாக, அறிவு வடிவாக அழியாத் தேகத்தில் குடியேறி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். னினைவு தேகத்தின் வல்லபத்தை கொண்டு னித்திய சூரியர்களை தரிசித்த பிறகே நாமும் அப்பெரியோர்கள் சென்ற பெரும்பாதையில் நடந்து கொண்டிருக்கிறோம் என்பதையும், னித்திய சூரியராகிய ஆசானே நம்மை வழி கூட்டி அழைத்து செல்கிறார் என்பதையும் உணரமுடியும்.

**காலந்நாட்டிய காரணப்பா - பாடல் எண்-15**
**இல்லை இல்லை யகிலத்தில் லாதது...** என்ற பாடலுக்கு *ஜீவ சகோதரி லாவண்யா அவர்களின் புரிதல் :*

யதார்த்த தேவகுருவாக வருபவர்களின் னாத வல்லபமானது உலகிலுள்ள சர்வ வல்லபத்தையும் தூக்கி விழுங்கும் வல்லமுடையது. அவர்களின் திருவாய் மொழியானது மலையொலி போல் நம்முள் எதிரொலித்து கொண்டே இருக்கும் என்பதை,

**எந்நெந்நக் காலத்தும் எவ்விடத்தும்**
**வந்நென்முன் னிற்கும மலையொலியே**

என்று மெய்ப்பொருள் அடைக்கலப் பா பாடலில் அருளப் பெற்றுள்ளது.
மலையொலியாக வரும் ஆசானின் கையகத்தானவர்களுக்கு சென்ம சாபல்யமானது வரமாக அளிக்கப்படுகிறது.

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் அடைக்கலப்பத்து பாடல் எண்-03**.
**பெரும் பெருமான் என் பிறவியை...**என்ற பாடலுக்கு *ஜீவ சகோதரி பூர்ணிமா அவர்களின் புரிதல்:*

முக்காலம் கண்ட முழுமுதல் ஞானிகள் எல்லா காலங்களிலும் இன் னிலவுலகிற்கு வந்து கொண்டே இருக்கிறார்கள். அவர்களிடம் அடைக்கலம் புகுந்தவர்களுக்கு பிறவாமை என்னும் பெரும்பேறு கிடைக்கிறது. இச்செயலை தெய்வமவர்கள் ஞான அகவல் பாடலில்,

**அடிபடி தீண்டா தாரண னாவும்**
**அடைக்கலம் பட்ட அடிமைக டமக்குத்**
**துடைத்திடும் பாவ னாசமா முதலாய்...**

என்று அருளியுள்ளார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

மண் தீண்டா பாதமாகவும் னிழல் சாயலற்ற னீள் உடலாகவும் னின்றிலங்கும் மெய் உடம்பானது பொய்யுடலுக்குள் எப்படி இலங்கி இருக்கிறது என்பதை பிரித்து அறிவதே தன்னையறிதல் ஆகும்.

**திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம் - திருனள்ளாறும் திருஆலவாயும் பாடல் எண்-01.** **பாடக மெல்லடி பாவை யோடும்...**என்ற பாடலுக்கு *ஜீவ சகோதரி உமாராணி அவர்களின் புரிதல்:*

ஆசானின் திருனாவினின்று ஆடி வரும் னாதம் நம் ஜீவனுக்கு யோக உணவளித்து, ஆற்றுபடுத்தும் திருனள்ளாறாகவும், ஆலமாகிய உலகை காட்டும் அவர்களின் அமுத மொழியானது ஆடக மாடமாகிய சொந்த தேகத்தில் குடியேற்றும் திரு ஆலவாயாகவும் இருக்கிறது.

**ஆதி மான்மியம்**:

**முப்ப திப்படி முக்குணத் திற்குடி** என்ற முகப்புப் பாடல்.

**குணம்** : னன்மையும் தீமையும் குணங்களால் அமைகிறது. னற்குணத்தால் னன்மையும், குணங்கெட்டு போவதால் தீமையும் அடைகிறோம். ரஜோ, தாமசமாகிய கீழான குணத்தில் வாழ்ந்தால் சினம் கொண்ட கூற்றுவன் கையில் சிக்கி தவிக்கும் னிலை ஏற்படும். நன்மை பயக்கும் தெய்வீக னிலையில் ஏற்றிவைக்கும் சக்தியுடைய குருபிரானின் வாய்மையானது, சாத்வீக குணத்தில் நம்மை வாழ வைத்து, கூற்றுவனிடத்தில் சிக்காதபடி ஒலிப்பிடம் தந்து பாதுகாக்கும் என்ற தேவ னிலைகளை ஆசான் அருளிச் செய்தார்கள்

**ஜீவ சிம்மாசனப் பருவம்**:

சிவச்செங்கோல் எனும் ஓரெழுத்து மாத்திரை கோல், என்பது தவனிலையில் மெய் உணர்வு ஏற்றத்தின் மூலம் னாதம் விளைவதால் கைவரவாகும் சன்னத முத்திரையாகும். னாதமது விளைந்தவர் பேர் னாதனாகும் என்ற தெய்வ வாக்கிற்கிணங்க, னாதனாகிய குரு பிரானே தேவர்களுக்கெல்லாம் தேவனாக, இந்திராசனத்திற்கு மேலான ஜீவசிம்மானத்தில் அமரக்கூடியவராக, னாயகனாக இருக்கிறார். அவர்களின் னாதமொழியே வான்மழையாகப் பொழிந்து அனைத்து தோஷங்களையும் னீக்கி எமனணுகா சத்திய சாயுச்சிய பரிசு பதத்தை நம் தலையில் துவஜம் கட்டி ஏறச் செய்கிறது. இப்பெரும் மெய்ச் செயலை அறியாத போலி பாசாண்டியர்கள் சைத்தானாக வந்து இடர்களை ஏற்படுத்துவார்கள். இவர்கள் பெரியோர்கள் அவதரித்து வரக்கூடிய எல்லா காலங்களிலும் வருவார்கள் என்பதை *திருக்குரானில்* **அல்லாஹுத்தாலாவின் பெருமையானது சைத்தானின் தீமையால்தான் விளங்கும்** என்று கூறப்பெற்றுள்ளது. இதையே நமது தெய்வமவர்களும் **மாற்ற முற்ற இருண்மனப் போக்குடைத் தன் உருவக வேசமிட்டலையும் னாச முற்றீன னீசர்கள்** என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

**தேசமெங்கும் சிறந்து செழிக்கவே**
**தோச முற்றும் சுருண்டு தொலையவே**
**ஓசை யோங்நாரப் பையுற வின்மனு**
**ஈச னான மதியெழுத் தேயிது**

இத்தகைய னீசர்கள் குருமொழியை கேட்க மாட்டார்கள் என்று முருகப்பெருமானும் கூறி வைத்துள்ளார்கள். எனவே மெய்ப்பாதைக்கு இடராக வருபவர்களின் தோஷ செயல்களை தூள்தூளாக்கி தேசத்தை சிறந்து செழிக்க வைக்கும் அனுக்கிரனாகிய குரு பிரானின் திருவடிப் போற்றி வாழ்வோம். என்ற ஆசீர்பாதத்துடன் சபை இனிதே நிறைவேறியது



Copyright © AMNA Trust, Chennai 

**06-02-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்**

**வாக்குடைய மலங்நடத்தி வயங்நா னின்று..** என்ற தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவர்கள் அவையை தொடங்கினார்கள்

*ஜீவசகோதரி ஆர்த்தி அவர்களின் புரிதல்*

**இன்ன ணம்பல காரிய காரணம்**
**அன்னெ முத்துஅ றைந்நஅ தன்படிக்**
**கண்ணுங் நாதுனேர் பெற்றம னுக்கெலாம்**
**பண்ணு லாப்பதம் பற்றிப்ப டர்ந்நதே.**

**(காலந் நாட்டிய காரணப் பா)**

நமது எண்ணங்களால் உண்டான முக்குணங்களின் தன்மையால் சீரின்றி இருந்த கண்ணும் காதையும் நேர்பெற வைக்கும் னாத மருந்தின் வாயிலாக குருபிரானவர்கள் நமக்கு நல்ல குணத்தை அருளுகிறார்கள்.

**வஞ்ஞமில் பரமார்த்த தவத்தினர்** என்ற குரு ஸ்தோத்திரம் பாடலுக்கு *ஜீவசகோதரி கனகத்தாய் அவர்களின் புரிதல்*

*1) நம்பிய தன்னுயிர் தற்கொலை செய்வது கொலையாகவும்*
*2) களவு என்பது உறக்கத்தில் கொள்ளை போகும் மூச்சாகவும்*
*3) புகழ் போதை என்பது கள்ளாகவும்*
*4) அழிவுடல் மீது வைக்கும் இச்சையே காமமாகவும்*
*5) பொய் உடலை மெய் என எண்ணுவதே பொய்யாகவும்,* உள்ள அறிவைச் சீரழிக்கும் பஞ்ஞமா பாதகங்களையும், நம்மை வினையில் வீழ்த்திவிடும் மனதையும், ஐம்புலத் தலைவனாகிய மனதை படைப்பு உண்டாக்காமல் அடங்குவதற்கான குருபிரானின் உபதேசத்தின் மூலம் பழகிப் புண்ணியத்தை கைகொள்வதே அறம். பரமார்த்த சொரூபராகிய குருபிரானின் திருவாக்கால் நமது மரண பயம் நீங்கி கிரகங்கள் அஸ்தமித்து புண்ணியம் உண்டாகிறது

*ஜீவ சகோதரர் சோலையப்பன். அவர்களின் புரிதல்*

**கோடாயிதக் கூர் வாக்கியம் எண்-05**.

அணுவிலும் அணுவாக நம்முள் விளங்கிக் கொண்டிருக்கும் ஜீவனே, அறிவாக, நினைவாக, உணர்வாக, கவனமாக, சக்தியாக, னாதமாக, னானாக, சிற்றம்பலப் பொருளாக இருப்பதை நாம் அறிந்து கொள்ள சத்தத்தின் உள்ளே சதாசிவத்தைக் காட்டி அருளக்கூடிய ஆசானின் னாதமே துணை.

**குருபிரான் அமுத வர்ஷிப்பு:**

*நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்* என்ற சத்திய வேதாகம வசனத்தின்படி ஐவழி விளைவுக்கு அப்பாலுள்ள பொருளாகவும், சிரத்தில் அழியாத சத்தியப் பொருளாகவும், வாழ்வின் மூலாதாரமாகிய பிராணனாக, காலமாக, கலையாக நின்று விளங்குவதுமாகிய **நான்** ஆகிய ஜீவனை அறிந்து கொள்வதற்கு மனதை அறிவாக மாற்றும் குருவின் உளவின் படி அவ்வழியில் சென்றால் சத்தியமாக ஜீவனை கண்டு ஜென்ம சாபல்யம் பெறலாம் என்று அருளினார்கள்.


Copyright © AMNA Trust, Chennai

*ஜீவ சகோதரர் கார்த்திகேயன் அவர்களின் புரிதல்*

**சிபத்துகளேழ் வகைமுதல்ஹ யாத்து மாகும்**
**சிறந்நறிவி ராதத்துடன் குதரத் தாகும்..**

**தௌஹீது மக்காம்**

சிபத்துகளானது ஹயாத்து முதல் கலாம் வரை ஏழுவகை அமானிதமாக இருக்கிறது அவை மனதின் செயலால் னபுசெனும் கீழ்னோக்கமாக இருப்பதை, அறிவாகிய சிபத்தாக மாற்ற வேண்டும். எல்லா வழிபாட்டுத் தலங்களிலும் நடைபெறும் தொழுகை என்பது நம்முள் ஆறு ஆதாரங்களில் நடைபெறும் ஓயாத் தொழுகையாக உள்ளது மெய்த் தொழுகையின் மூலம் மனம் அறிவாக மாறக்கூடிய செயலுக்கு மெய்குருபிரானின் னாதமே செவி வழிபுகுந்து துணை புரிகிறது

**வள்ளல்பிரான் அருளிய நான்கு விண்ணப்பங்கள்** *பற்றிய ஜீவசகோதரி சித்ரா அவர்களின் புரிதல்.*

விண்ணப்பம் என்பதை கடிதம், மடல், மனு, வேண்டுகோள் எனக் கூறலாம். வள்ளல் பெருமான் சிவ சக்தியை வணங்கித் தொழுது தனித் தலைமை பெரும்பதியாகிய தன் குருவின் விலாசத்துக்கு தன்னை மிக மிகத் தாழ்மைப்படுத்தி நான்கு விண்ணப்பமாக விண்ணப்பிக்கிறார்கள்.

**1) சத்திய சிறு விண்ணப்பம்:**

சிவானந்த ஒருமைத் திருநடச் செய்கை எனும் மனம் அலைவற்று இருப்பதற்கான செயலைப் பழக சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தில் அங்கமாகிக் கொள்ள விண்ணப்பம் செய்கிறார்கள். எக்காலத்தும் எவ்விதத்தும் தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வை யான் பெற்று வாழ எனக்கு அறிவித்தபடியே என் போன்ற எல்லா ஜீவர்களுக்கும் அறிவித்து வாழ வைத்தல் வேண்டும். ஆசானின் அருளால் மனம் அறிவாக மாறும் திறனாகிய சுதந்திரத்தைப் பெற இந்த சத்திய சுத்த சிறு விண்ணப்பத்தை விண்ணப்பிக்கிறார்.

**2) சத்திய பெரு விண்ணப்பம்**:

ஆன்மாவாக சிற்றணுப் பசுவாக இருந்த தன்னை ஆறறிவு கொண்ட உன்னத, ஊனமற்ற மனிதப்பிறப்பில் புகுத்தாட்டி அறிவை விளங்கச் செய்த தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி ஆசானைப் போற்றுகிறார்கள். தந்தையின் எண்ணத்தில் உதித்து தாயின் கருவறையிலும் பின்னர் குழந்தை, சிசு, குமார, வாலிபப்பருவம், யாவற்றிலும் காத்தருளும் குருவை மிகப் போற்றி வணங்குகிறார்கள். ஆண்டவர்கள் அருளிய *கோடாயிதக் கூர் வாக்கியம் எண்- 83* இதற்கு சான்றாகக் கூறப்பெற்றது.

**3) சத்திய ஞான விண்ணப்பம்**:

சுத்த சன்மார்க்க ஞானிகளின் திருச்சபையில் புகுத்தப் பெற்று, அவர்கள் இரக்கத்தால் இயம்பிய தத்துவங்களைத் தன்னில் அதுவதுவாக அனுபவித்து, விளங்கி, உணர்ந்த பின்னும் பெரும் பதியினைப் போற்றும் தகுதி அற்றவனாக தான் இருப்பதை மிக மிக மிக தாழ்மையுடன் விண்ணப்பிக்கிறார்கள்.

இதனை **சாலை ஆண்டவர்கள்**

**பிரணவனே யுமக்குனா னேது செய்வேன்**
**புழுத்தலைய னெனைவயிரத் தலைய னாக்கி**
**இருத்திவைத்த பெருமுதல்மா முனியே தேவே-**

அமுத கலைக்ஞான போதம் முதற் காண்டத்தில் அருளுகிறார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

**4) சிறு விண்ணப்பம்**:

தனித்தலைமைப் பெரும்பதி பெருங்கருணைக் கடவுளே! தேவரீர் திருவருட் சமூகத்தில் மிகவும் சிறியவர்களாகிய யாங்கள் சிற்றறிவாற் செய்யும் சிறு விண்ணப்பங்களைத் திருச்செவிக்கு ஏற்பித்தருளி எங்களை அங்கீகரித்து இரக்ஷித்தருளல் வேண்டும்.என்று விண்ணப்பிக்கிறார்கள். நால்வகை யோனியில் பிறந்து பிறந்து இளைத்த மனுக்களை தேவயோனியில் பிறப்பித்து தேவராக்க வந்திருக்கும் ஆசானை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை போற்றி வணங்குவதற்கு சான்றாக சாலை ஆண்டவர்கள் அருளிய மெய்வழி னூலில்

**எண்ணமடங் ஙாதசரா சரங்ஙளுயிர் யாவும்**
**இதுவிதுக்கு மிப்படியென் றிருந்நரசா ளிறைவன்**

என்றும்

**சிவபுராணத்தில் புல்லாகிப் பூடாய் மனிதராய்**

என்றும் அருளியுள்ளார்கள்

**விண்ணப்பம்:**

பைபிளில் குறிப்பிட்டுள்ள **மன்னா** என்பதும் திருக்குரானில் குறிப்பிட்டுள்ள **மன்னு** என்பதும் வானத்திலிருந்து வந்த உணவாகிய பரலோக அப்பம் ஆவிக்குரிய இறைச்சி என அறியப்படுகிறது. **நானே** ஜீவ அப்பம் இதைப் புசிக்கிறவன் என்றென்றும் பிழைப்பான் என இயேசுபிரான் அருளிய அதுவே ஆசானின் அருளமுத வர்ஷிப்பாக இறங்கி நம் கீழான எண்ணங்களைத் தூள்தூளாக்கிப் புண்ணிய வாழ்வை வழங்க வரும் விண்ணப்பமாக உள்ளது.

ஜீவனானது ஜீவ விருட்சமாகிட வித்தில்லா வித்தானது மனம் என்னும் நன்னிலத்தில் விழுந்து அறிவாக மாற விண்ணப்பமே காரணம். நேரம், காலம், கோள், யோகம் இவை ஒன்று சேரும் அதிர்ஷ்ட நாளே குருதரிசனை நாளாக உள்ளது. வெவ்வேறு நிலைகளில் செயல்படும் முப்பொருளாகிய அலீப் லாம் மீம் என்பதை அனுபவிக்கும் கர்த்தாவே சாகாத்தலையாகிய ஆன்மா அதை அறிவிக்கும் ஆசானின் னாதத்தை கேட்பதற்கு மிக அவசியமாக உள்ள அமுதகாற்றே ஆகாய தத்துவமாக, சதாசிவபாகமாக, விண்ணப்பமாக, இருக்கிறது என்று அருளி தத்துவ னிலையை தன்னிலறிந்த குருபிரான் அவர்கள் அவையை நிறைவு செய்தார்கள்.

**10-02-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு:ஸ்ரீ. குமரேசன்**

**வான்மதிக் கொரல் திருவாக்கியம் எண்: 54**

**பத்தியம்-நோன்பு:** உலகத்தில் இறை நம்பிக்கை என்ற பெயரில் நாள் முழுவதும் உணவு உண்ணாமல் இருப்பது பத்தியமோ நோன்போ அல்ல. பட்டினியால் கோபமும் உடல் உபாதைகளுமன்றி வேறு பயன் ஏதுமில்லை. மனிதனுக்குள் பொதிந்திருக்கும் சூக்கம, காரண, மகாகாரண தேகத்தின் அகமிய நிலைகளை அறிந்து பேரின்பத்தை அடையவே னிஜமான பெரியோர்களால் பத்தியம் எடுத்து வைக்கப்பெற்றது. சூக்குமத்தில் பிரணவ கலையில் ஏறி அமுதம் உண்டு பசிக்களைப்பின்றி வாழக்கூடிய சித் சொரூப ஜீவ கலையின் இரகசியமே பத்தியம். இப்பெருநிலையை யுகத்தவ நோன்பின் மூலம் அறிந்து அடைந்தவர்களே தவசிரேஷ்டர்கள் என வேதம் கூறுகிறது.



Copyright © AMNA Trust, Chennai

**பிள்ளைத் தமிழ்**:
**நிச்சய மாகவே வுச்சி வழிகண்**
**டூசித் தமர்போட்டால்**
**னேச முடன்பா லமுதமி றங்கும்**
**னீபரு கப்பருகென்**

**பூரணப் புதையல்**:
**பத்தியம்வ ரம்புசா தனைத் - தினமானந்நம்**
**படப்பழக் கழும்மதிப் பாலூறித்**
**ததும்பி மதிப் பால் சுரந்நு - சென்னிவழி**
**தானே வாய் கொண்டு மடை திறந்நிடுமே**

பத்தியத்தின் சிறப்பு குறித்து ஆதி மெய் உதயபூரண வேதாந்நத்தின் பாடல்களின் மூலம் கூறியுள்ள இம்மெய்ச் செயலானது இன்றளவும் ஆதி மார்க்க னீதி அவையின் அங்ஙங்களுக்கு நிறைவேறி வருகிறது.

**காலந் நாட்டிய காரணப்பா பாடல் எண்: 16 கண்ட தில்லைக லியுகம் மாறுதல்**
என்ற பாடலுக்கு *ஜீவ சகோதரி லாவண்யா அவர்களின் புரிதல்*

நான்கு யுகங்களும் மனிதனுக்குள் கால கணக்காகவும் திருமாலின் பத்து அவதாரத்தின் இரகசியங்களாகவும் உள்ளது. நாரத மகாமுனிவர் கல்கி புராணத்தில் எழுதி வைத்துள்ள கலியை மாற்றும் கல்கி அவதாரமும் வீர பிரம்மம் அருளிய காலக்ஞான பத்திரிக்கையில் கல்கியின் வருகையும் கலியுகம் மாற்றும் செயலும் உண்மையில் நான்கு தேக ரகசியமாக உள்ளது. குருபிரான் அருளால் ஒவ்வொரு யுகமாகிய தேகத்தையும் கடந்து காலமற்ற இடத்தில் குடியேற வேண்டும் என்பதை அருணகிரிநாதரும் *இக்கடத்தை நீக்கி அக்கடத்துள் ஆக்கி இப்படிக்கு மோட்சம் அருள்வாயே* என்று தனது குருவாகிய முருகப் பெருமானிடம் வேண்டுகிறார்.

**ஶ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் - செத்திலாபத்து பாடல்களின் இரத்தின சுருக்கம்**: *ஜீவ சகோதரி பூர்ணிமா அவர்களின் புரிதல்*
மனிதனின் வயது வாழ்நாளாகிய பிராணனை வீணாக்காமல் அவரவர் உள்ளிருந்து ஓயாமல் பேசிக் கொண்டே இருக்கும் மனதை நிலைக்க வைத்து அறிவின் உன்னத நிலையை உணர்த்தி மெய்ஞானத்தை அறிய விடாமல் தடுக்கும் பெருமை, வஞ்சகம், சூது, பாசம், மோகம், பாவம் இவைகளில் சிக்கி சவமாக கிடந்த நம்மை ஆசான் தன் னாதத்தால் மீட்டு பிரம்மவித்தையை கற்பித்து சிவமாக்கும் செயலே செத்திலாப் பத்தாகும்.

நமது குலதெய்வம் பிரம்மோதய மெய்வழிச்சாலை ஆண்டவர்களின் அருள் வர்ஷிப்பில் விளைந்த முத்துக்களில் ஒருவரான பிரம்மத்தை அறிந்த மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா அவர்கள் பல னூல்களுக்கு எழுதிய ஆய்வுரையும் முன்னுரையும் மற்றும் கையேடுகளிலிருந்து எடுத்த அற்புத ஆன்ம மீட்பு திருவசனங்களும் தொகுக்கப் பெற்ற **ஞானக் களஞ்சியம்** என்ற னூலானது, ஆதி மார்க்க னீதி அவையின் அங்ஙங்களுக்கு குரு கொண்டல் அவர்களால் வழங்கப் பெற்று அதிலுள்ள பதிமூன்று தலைப்புகளில் உள்ள சிறப்பு பற்றியும் குருபிரான் அவர்களால் அருளப்பெற்றது. இத்தகைய இனிய நிகழ்வுகளுடன் அவையானது இனிதே நிறைவேறியது.


Copyright © AMNA Trust, Chennai

**12-02-2022 ~ சனிக்கிழமை ~ சிவகாசி சிறப்பு சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி கல்பனா விஜயகுமார்**

**ஆத்தாளாய் வந்நெனக்கு அமுத மூட்டி** என்ற தோத்திரப் பாடலுடன் அவை தொடங்கியபோது பிறந்த குருபிரானின் திருவாக்கு அமுதம் -

திருப்பாற்கடலில் உள்ள அமுதகலசத்தில் இருக்கும் பண்டைநாள் அமுதானது, ஆசானின் ஓரெழுத்து மாத்திரைக்கோல் கொண்டு திறப்பிக்கப்பெற்று செவிச்செல்வமாக அருளப் பெறுகின்றது. சீதக்களப செந்தாமரைப் பூம்பாதத்திலிருந்து கலகலவென்று பல இசை பாடும் மறைமணியானது *ஓதி டென்றுரை கேட்டிங் ஙோதிய ஒலிக்கு மெய்ம்மண ஞானமாக ஒளிர்கிறது.* அந்த அருணோதய அருட் பாற்கடலுள் வாய் மடுத்து அந்தத் தெருளமுதத்தை உண்டவர்களே குறை மனத்துப் பிழை ஒதுக்கிப்பழகித் தேர்ந்த குணக்குன்றேறிய குருகுலாதிபர்கள் என்று அருளமுதத்தின் சிறப்பை அருளினார்கள்


***ஸ்ரீலஸ்ரீ. மெய்வழி சாலை ஆண்டவர்கள்***

**வெண்தாமரை-** வெண்சாரையாக சரசுபதித்தாய் ஆவிப்பொருளாக அமர்ந்திருக்கிறாள். குளத்தில் பூக்கும் தாமரைக்கு அதன் சிறப்பு தெரியாதது போல் மனிதனும் தனக்குள் உள்ள சிறப்பு தெரியாமல் இருக்கிறான்.

**இறப்பொழிக்கும் சன்மார்க்கம்-** மரணம் இரண்டு வகையாக நியாய மரணம், அநியாய மரணம் என இந்த உடலிலேயே இருக்கிறது. பிறப்பின் ரகசியம் தெரிந்தால் மரணத்தின் ரகசியத்தை அறிந்து கொள்ளலாம். பிறப்பு இருந்தால் இறப்பு நிச்சயம் உண்டு. பிறவாமல் இருந்தால் இறப்பு இல்லை. **பிறவாமை** என்ற நிலையே ஞானத்திற்கு அடினாதமாக விளங்குகிறது. இந்த தேகம் முக்திக்கு வராது. முக்தி அளிக்கக்கூடிய தேகம். நான்கு தேக ரகசியங்களாக உள்ளது. அதை கைப்பற்றும் பிரம்ம வித்தையை அறிந்து அனுபவித்துப் பழகி வந்த பெரியோர்கள் முன் இச்செயலைப் பழகுவதற்குப் பெயர் இறப்பொழிக்கும் சன்மார்க்கம்.

**ஞானம்-** நிஜமான ஞானம் மனிதனுடைய சுத்தத்துறை இருதயத்தில் உள்ளது. ஈசன் இருப்பிடம் இருதயம். இருதயம் எல்லோரிடமும் உள்ளது.பத்ம பீடத்தில் இருதய கமல வாசனாக அமர்ந்திருப்பவன் ஈசன்.

**பாஷை-** பாஷையெலாம் படைத்தது பரிபாஷை. உலகிலுள்ள எல்லோரும் அறிந்த பாஷை சமிக்ஞை பாஷை. இந்த உடல் பசி, தாகம், தூக்கம், வலி என பலவித சமிக்ஞைகளால் கட்டப்பட்டுள்ளது. அதனைத் தலையிலிருந்து வழிநடத்தும் தலைவன் ஒருவன் உள்ளான். அவன்தான் இறைவன். பரிபாஷை:-பரி என்றால் குதிரை. மனம் சார்ந்ததின் வண்ணமாக குதிரை, காகம், கருடன், யானை என்று வாகனமாக மாறுகிறது. மனதைக் குறித்த ரகசியத்துக்கான பாஷை பரிபாஷை ஆகும். இந்த மன ஓட்டத்தை அறியக்கூடிய பிரதானமான பொருள் ஒவ்வொரு மனுத்தலையிலும் இருக்கிறது.



Copyright © AMNA Trust, Chennai

**வாசி யோகம்-** *வாசி என்றால் மூச்சல்ல* வாசிப்பழக்கம் என மூச்சை அடக்க முயல்வதானது *நரகவாதிகளாகிய பாவியர்க்கு நரகத்திற்கு போக குறுக்குவழிப் பயணம்* ஆகும். வாசி என்றால் நூல் வாசிப்பது, இசைக் கருவிகள் வாசிப்பது என்றிருப்பது போல, நமக்குள் அரியதும் பெரியதும் சிறியதுமாக இருக்கும் விஸ்வத்தை அறிவதே வாசியோகம். திருவடி ரகசியத்தை அறிய வைக்கும் தியானத்திற்குப் பெயர் வாசியோகம். அதுவே நற்றாள் எனும் நற்றிருவாசி. திருவாசியாகிய திருவாச்சி சக்கரத்துள் நடனம் புரிந்து கொண்டிருக்கும். பிராணனுக்கு நாதனாக விளங்கும் சிவபெருமானின் திருச்செயலை அறிந்து கொள்ளும் பழக்கமே வாசிப்பழக்கம். கங்குல்பகலற்ற இடத்திற்கு பெயர் அம்மாவாசி. கங்குல்பகலற்ற இடம் கயிலாயம். *திருவெ னுமிமை யானாடு* திரு எனும் உயர்ந்த னாமம் அல் எனும் கூரிய இருள் வஸ்துவாக இருக்கிறது. அதை அறிந்தவர்களுக்கு சத்தினித் தாயாகவும்,அறியாதவர்களுக்கு அவளே ரண சங்காரியாகவும் மாறுகிறாள்.

**கலிமா மரம்-***பொருள்வளரு மழியாத பாதம்* பொருளாகிய கலிமாப் பொருள் செவி இன்பத்தின் மூலமாக, வித்தில்லா வித்திலிருந்து முளைத்து வளர்ந்து, கலி மாமரமாக விருட்சமாக வளருமாம். *மருந்நெ னும்கலி மாமர னீயென அறிவாயே.* அதை அறிய வைக்கின்ற மூன்று அட்சரங்கள் அலீபு- லாம் -மீம். மனிதன் ஒரு தலைகீழ் மரம். ஆணி வேராக இருப்பது அறிவு. அறியாமையை அகற்றி அறிவை அறிய வைப்பது யுகாந்தநாட்டுச் செல்வமாகிய அருள். அருள் படிந்தால் குருகுலம் அருள் இல்லையென்றால் இருள்குலம் .அருள், இருள் என்பதை அறிவதற்கு ஆறாவது அறிவைக் கொண்டு, அறிவிக்கின்ற அறிவை அறிந்து, அறிவு வடிவைப் பெற்று வாழவேண்டும்.

அறிவு ஈசனுடைய சொத்து .இந்தச்சொத்துக்கு சொந்தக்காரர் மெய்வழி ஆண்டவர்கள் ஒருவரே. இன்றும் னாத னாதாந்தப் போதப்புராதன புதுமொழி னிறையருள் சிந்தும் அப்பெருமானின் திருவாக்கு ஒலித்துக் கொண்டிருப்பதால், பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஆசி பெற்ற மக்களாக அருள்மிகுந்த மக்களாக ஆதி மார்க்க னீதி அவை மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று கூறி குருபிரானவர்கள் அவையை நிறைவு செய்தார்கள்.

**13-02-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ தூத்துக்குடி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்**

**பிஞ்ஞகன்-**ஈசனுக்கு பிஞ்ஞகன் என்ற னாமம் உண்டு. அதாவது பிறப்பறுப்பவன் என்று பொருள். ஒவ்வொரு மனிதனும் ஈசனுடைய ரூபத்தில் படைக்கப் பெற்றுள்ளான். மனுசன் - மனுவே தான் ஈசன். அவரவர் செயலாலே மனு+ஈசன் அல்லது மனு+னீசன் ஆகிறான். மனுவைவிட இறைவனுக்கு னேசமான னெருக்கமான பொருள் வேறு எதுவும் இல்லை. மனு ஈசனாக வேண்டுமென்றே ஞானேந்திரியங்களானது மனிதனுக்குள் வைத்து படைக்கப்பட்டுள்ளது. இப்படைப்பின் இரகசியங்களை ஆசானின் உபதேசம் மூலம் பெற்றவனே ஜீவதேக தெரிசனம், விஸ்வரூப தெரிசனம் பெற்றான், ஈசனுடைய தேகம் பெற்றான் என்று வேதம் கூறுகிறது. இந்த மெய்ச் செயலை எடுத்து விவரித்துச் சொல்வதற்கு ஈசனால் ஆகாது. மனு உடல் தாங்கி வந்துள்ள குருபிரானால் தான் ஆகும் என்பதை, அமுத கலைக்ஞான போதம் இரண்டாம் காண்டம் பாடலில்

**மாசிலான் மறைப்படியும் எண்ணில் கோடி......**
**பிஞ்ஞகன்றன் னோக்கினுக்கே என்னோக் கேக**
**வாசிவா சிவாவரவு கண்டேன் கண்டேன்**
**வள்ளல் திருவடிக் கமலம்வாழ் வென்னெஞ்சே**



Copyright © AMNA Trust, Chennai

என்று ஈசன் என்னும் பிஞ்ஞகனைப் பற்றி சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**இம்மை – மறுமை**- இம்மை என்றால் அனித்தியம் - மறுமை என்றால் னித்தியம் என்று பொருள். மூச்சானது துண்டாடப்பட்டு னஷ்டம் அடையக் கூடிய செயல் இம்மை என்றும், மூச்சோடா தவனிலை செயல் மறுமை என்றும் வேதங்களில் அருளப் பெற்றுள்ளது.

**ஜாதி-** மனிதனின் பிறப்பு மற்றும் அவன் செய்யும் தொழிலை வைத்தே உயர்ந்த, தாழ்ந்த ஜாதி என்று பிரிக்கப்படுகிறது உண்மையில் மனிதனுக்கு ஜாதி என்பது பிறவானிலை எனும் மரணமில்லா பெறுவாழ்வை பெற்று சாவுக்கு எட்டி தீ வைக்கும் செயலாக இருக்கிறது என்று *சிவானந்த போதத்தில்* **தன்னையறிந்து சிவமான சாதியே உலகத்தில் உயர்ந்ந சாதி** என அருளப்பெற்றுள்ளது .
இதையே வள்ளல் பெருமானும் **சாதி சமயச் சழக்கைவிட் டேன்அருட் ஜோதியைக் கண்டேனடி** என பாடியுள்ளார்கள்.

**மனம்:**

**ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்**
**காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை**
**காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்**
**கூற்றை யுதைக்குங் குறியது வாமே** **(திருமந்திரம்)**

காற்றைப் பிடிக்குங் கணக்கறிவாளர் என்பது, பிராணனுக்கு தலைவனாக இருக்கக்கூடிய மனதை குறிப்பது. சுவாசத்திற்கும் மனத்திற்கும் சம்பந்தம் உண்டு. இதையே மூச்சு லயமாகிய மனோலயம் என்று கூறுவார்கள். இறைவன் அளித்த அகக் கருவிகளில் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற அந்நகரண கூட்டத்தில் முதன்மையானது மனம். மனதை அலையாமல் அகமுகமாக திருப்பினால் அறிவாக பிரம்மமாக மாறுகிறது. இதையே *சத்திய வேதத்தில்*, **மனம் திரும்புங்ஙள் பரலோக ராஜ்ஜியம் மிக சமீபமாயிருக்கிறது** என்று கூறப்பெற்றுள்ளது.

**இறை படைப்பின் படி னிலைகள்-** உலக படைப்பில் முதலில் ஆகாயமும், ஆகாய விரிவில் ஜலம், ஜல னுரையில் மண், மண் பரப்பில் ஓரறிவான தாவரங்கள், ஈரறிவு, மூவறிவு, நாலறிவு, ஐயறிவு என்ற வரிசையில் ஆறறிவுடைய மனிதன் படைக்கப்பட்டான். இப்படைப்பின் இரகசியத்தை வேதங்ஙளில் புழுக்கம், வித்து, அண்டம், சினை என்ற னால்வகை யோனி மற்றும் அமரர், மனு, விலங்கு, புள், ஊர்வன, ஜலம் வாழ் ஜந்து, தருக்கினம் என்ற எழுவகை தோற்றங்களாக
அருளப்பட்டுள்ளது.

**வாழ்க வளமுடன்-**வாழ்க என்பதை வா ஆழ்க எனலாம். ஆழ்வார்கள் என்றால் இரண்டற கலத்தல் என்று பொருள். ஆசானின் திரு ஆலவாயிலிருந்து பிறங்கும் அமுதத்தை செவி வாயிலாக உண்டு இன்பத்தில் ஆழக்கூடிய அரும்பெரும் னிலையே வாழ்க வளமுடன் என்ற சொல் உணர்த்துகிறது. இவ்வாறு செயலோடும், அறிவோடும் இருக்கக்கூடியதை உணராமல் வெறும் வார்த்தையில் மட்டும் வாழ்க வளமுடன் என்று கூறுவது முறையல்ல.

**எருவாய் கருவாய்-**மரத்தின் வேர்ப்பகுதியில் எரு இடுவதன் மூலம் மரம் செழித்து வளர்கின்றது. அதுபோல மனிதன் வாயின் மூலம் உணவினை உட்கொண்டு
வளர்கிறான் என்பதை விளக்கும் வகையில் *திருமூலர் பிரான் அவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai

**எருவிடும் வாசற் கிருவிரன் மேலே**
**கருவிடும் வாசற் கிருவிரற் கீழே**
**உருவிடுஞ் சோதியை உள்கவல் லார்க்குக்**
**கருவிடுஞ்சோதி கலந்துநின் றானே**
என்று அருளியுள்ளார்கள்.

எருவிடும் வாயும் கருவிடும் வாயும் கழுத்துக்கு மேலே அமைந்துள்ளது. மெய் குருமார்கள் கழுத்துக்கு மேலே வைத்து மெய்ஞானத்தை போதிக்கின்றார்கள். இதை தவறாகப் புரிந்து கொண்ட சில போலி குருமார்கள் கழுத்துக்கு கீழே (இடுப்புப் பகுதி) இருந்து குண்டலியை மேலே எழுப்பி இறைவனை அறியலாம் என தவறாக பிதற்றிக்கொண்டு இருக்கின்றார்கள்.

**பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு. (350)** என்ற *திருக்குறளுக்கான* மெய் விளக்கம்.

நாம் எதை எப்படி பற்றிக் கொண்டு இருக்கிறோம். விழிப்பு னிலையில் னாம் புலன்களை பற்றிக்கொண்டு இருக்கிறோம். உறக்கத்தில் பற்றற்ற னிலையில் ஓர் இடத்தில் ஒடுங்கி விடுகிறோம். இவ்விரண்டு நிலைகளையும் அறிய வேண்டுமென்றால், முதலில் பற்றற்றானாக வரும் குரு பிரானை பற்ற வேண்டும். அவர்களின் வாய்மையே பற்றற்ற பரம்பொருளை பற்ற வைக்கும் என்ற பகிர்தலுடன் அவை னிகழ்வுகள் இனிதே னிறைவு பெற்றது.

**13-02-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ.கிருஷ்ணமூர்த்தி**

*ஜீவ சகோதரர் கௌதம் அசோகன் அவர்களின் புரிதல்*

ஒவ்வொரு காலங்களில் வரும் பாரவான்கள், அவதார மூர்த்திகள், மகான்கள், ஞானச் செம்மல்கள், மகத்துக்கள் அனைவரும் - னரன் என்ற நிலையில் இருந்தவர்களை மனிதனாக்கி, தேவனிலையை அளிக்கும் மெய்ஞானத்தையும் சாகாக் கல்வியையும் கற்பித்து வான னாட்டிற்கு குடியேற்றி வைக்கிறார்கள் என்பதை,

**அரியது கேட்கின் வரிவடி வேலோய்**
**அரிதரிது மானிடர் ஆதல் அரிது**
**மானிடர் ஆயினும் கூன்குருடு செவிடு**
**பேடு நீங்கிப் பிறத்தல் அரிது**
**பேடு நீங்கிப் பிறந்த காலையும்**
**ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது**
**ஞானமும் கல்வியும் நயந்த காலையும்**
**தானமும் தவமும் தான்செயல் அரிது**
**தானமும் தவமும் தான்செய்வ ராயின்**
**வானவர் நாடு வழி திறந் திடுமே**
என்று ஔவையார் அருளியுள்ளார்கள்.

**மறுபிறப்பு** : சர்வ வேதங்களும் வேதங்களை இறக்கியருளிய பெரியோர்களும் மறுபிறப்பு பற்றி அருளியதற்கான சில சான்றுகள் –


Copyright © AMNA Trust, Chennai

**நீற்றைப் புனைந்தென்ன நீராடப் போயென்ன நீமனமே**
**மாற்றிப் பிறக்க வகையறிந் தாயில்லை ...** என்று பட்டினத்தாரும்

**ஊற்றைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி**
**மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுதில்லை**
**மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுமென்றால்**
**ஊற்றைச் சடலம்விட்டே என் கண்ணம்மா!**
**உன் பாதஞ் சேரேனோ?** என்று அழகணி சித்தரும்

*ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்* **(யோவான் 3:3)** என்று சத்திய வேதத்திலும் அருளப்பட்டுள்ளது.

தந்தையின் விந்து ஜலத்தில் பிறந்த நாம் ஆசானின் வாக்காகிய அக்கினியில் மறுபடியும் பிறக்க வேண்டும். நம் பாவங்களை சங்காரம் செய்து புண்ணியத்தில் ஆக்கும் ஆசானுடைய ஆலவாயில் மறுபிறப்படையும் செயலானது இன்றும் ஆதி மார்க்க னீதி அவையில் முழு தீரத்துடன் னடை பெற்றுக் கொண்டிருக்கிறது.

**முக்தி :**

**திருவாரூர்- பிறக்க முக்தி**
**சிதம்பரம் - தரிசிக்க முக்தி**
**திருவண்ணாமலை - நினைக்க முக்தி**
**காஞ்சிபுரம் - வாழ முக்தி**
**காசி - இறக்க முக்தி**

என ஐந்து தலங்கள் உள்ளன. இத்தலங்களின் உண்மை ரகசியத்தை, மெய்ஞ்ஞான திருவுரு ஏற்று வந்து எமபடரை னீக்கி பரிசுத்த முத்தி வீட்டில் ஆக்கும் காருண்ய பிரானின் னாதத்தால் மட்டுமே அறியமுடியும். அன் னாதமே நம்மை அறிவு வடிவாக்கி, பிரணவ தேகமாகிய முத்தி வீட்டில் குடியேற்றி, அங்கு பொதியப் பெற்றிருக்கும் அண்டரண்ட அகண்டாகாரத் தோற்றங்கள் அனைத்தையும் காண வைக்கும்.

**இனிதான வாழ்வு :**

**இனிது! இனிது! ஏகாந்தம் இனிது !**
**அதனினும் இனிது ! ஆதியைத் தொழுதல்**
**அதனினும் இனிது ! அறிவுள்ளோரைச் சேர்தல்**
**அதனினும் இனிது! அறிவுள்ளோரை**
**கனவிலும் நனவிலும் காண்பதுதானே** - என்ற ஔவையாரின் பாடலுக்கிணங்க,

அறிவை அறிந்து வாழக்கூடிய இனிய வாழ்வினை அளிப்பது குருகொண்டலின் அருளமுதம். னரனாக பிறந்து மனுவாக மாறும் வரை, அழியும் பொருள்களே இன்பம் என இருந்தோம். ஆனால் பொய் இன்ப நுகர்ச்சி மெய்யுணர்வு கொல்லி என்ற தெய்வவாக்கினை உணர்த்தி, மெய்யையும் பொய்யையும் பிரித்துக் காட்டி, எல்லா இன்ப இச்சைகளும் தரக்கூடியதும், இரவு பகல் ஓயாது ஊழியம் செய்து கொண்டிருக்கும் இலஞ்ஞிய லக்ஷிய உயிரை அறிந்தடைந்து வாழக்கூடிய இனிதான பரமபத வாழ்வில் அந்த அருளமுதமே ஏற்றி வைக்கும்.



Copyright © AMNA Trust, Chennai

**குருவும் கோவிந்தனும் : குரு நிற்கிறார் கோவிந்தனும் நிற்கிறார் யார் காலில் விழுவேன்** என்பது கபிர்தாஸர் அவர்களின் திருவாக்கு. கோவிந்தனாகிய இறைவனிடம் நம்மை அழைத்து செல்பவர் குரு பிரான். எனவே குருவின் திருவடியை போற்றி வாழ்ந்து குரு வேறு கோவிந்தன் வேறு இல்லை என்பதை தன்னுள் உணர வேண்டும்.

**கண்ணாடி :**
**அண்டபகி ரண்டமெலாம் தொண்டரித யத்தின்மனக்**
**கண்ணாடிக் குள்ளிருந்த காரணத்தை யான்மறவேன்** எனும் தெய்வ வாக்கிற்கு இணங்க மனக் கண்ணாடியை தெய்வக் கண்ணாடியாக மாற்றும் ஆசானின் அடிநிழலில் அகலாது வாழ்வோம் என்ற புரிதலுடன் அவையானது இனிதே நிறைவேறியது.

**17-02-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**காட்சி யெலாம் எனக்கு அளித்த கருணை வேந்நே**
**பேச்சழினா வனையமுத னாவோனாக்கிப்**
**பெருங்பத்தை யறுத்தெறிந்த பிரணவோனே.**
எனும் அமுத கலைக்ஞானபோதம் பாடலைத் தொடர்ந்து,

எல்லாம் வல்ல பரிசுத்த ஆவித்தெய்வத்தின் நாமத்தை அறிக்கை செய்யும் நாளாக அமைவதற்கான வேண்டுதலுடன் குருபிரான் அவை நிகழ்வுகளைத் தொடங்கினார்கள்.

**வான்மதிக்கொரல்: திரு வாக்கியம் - அறிவைத் தேடு**
போத புராதன புதுமொழி சிந்தும் ஆண்டவர்களின் திருவாக்கு படிப்பதல்ல. அதனை அறிந்து அதனுடன் இரண்டறக் கலந்து வாழ்கின்ற வாழ்க்கையாக உள்ளது. மூளைக்கும், அறிவுக்கும், மூலைக்கும், கோணத்திற்கும், உள்ள வேறுபாட்டை விளக்கி, **முக்கோண முதற் சுழினை கொழுமுனை** என்ற பாடல் வரிகள் அறியாதவர்களுக்கு எழுத்தாகவும் அறிந்தவர்களுக்கு செயலாகவும் வாழ்க்கையாகவும் உள்ளதை அருளிச் செய்தார்கள். கருவில் முதலில் நுழைந்த **அறிவே** மூளையை உண்டாக்கியது. அந்த அறிவே **கலிமா, பரிசுத்த ஆவி, இறைவன், ஆறாவதுஅறிவு.** ஆறாவது அறிவை செயல்படுத்தும் பிரம்மவித்தை பொன் நாட்டு மனுமகன் புரந்தரர் ஏட்டிலே பெயர் பொறித்தவர்களுக்கே கிடைக்கும். இதனை அருளும் குருபிரானிடம் அது **கோடிமனுக் கீந்தாலும் குறையாத சிமிழியின் மையாக, ஆடி அலைத்தாலும் அணுவும் சிதறாத மையாக, யானூரி யானன்மையாக** உள்ளது. அறிவை அறியாத மக்களுக்கு மெய்ஞானத்தை கொண்டு போய் சேர்ப்பதே எல்லாவற்றிற்கும் மேலான புண்ணியமாக உள்ளது.

**காலந் நாட்டிய காரணப்பா- பாடல் எண்-17 –பரிசு ஆள்பழங் ஙாலப்பு ராதனம் …**
*ஜீவசகோதரி லாவண்யா அவர்களின் புரிதல்:*

சா வருமுன் சாகப் பழகும் சன்மார்க்க செயலாகிய பரிசை தன்னை நாடி வந்த அனைவருக்கும் வரமாய் அளித்து வரும் **சாலை ஆண்டவர்களே** பழங்காலப் புராதன பரிசு யுகத்தையே பரிசாக அருளுவதையே காலகால காலம் கடந்த காரிருள் காருண்ய கறுப்பாக பகர்கின்றார்கள்


Copyright © AMNA Trust, Chennai

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் - *ஆசைப்பத்து பாடல்* - கருடக் கொடியோன் காண மாட்டார் கழற் சேவடி** என்னும் பாடலுக்கு *ஜீவசகோதரி பூர்ணிமா* அவர்களின் புரிதல்.

நினைவென்னும் ஆகாயத்திலுள்ள நித்திய அறிவை அறிய விடாமல் தடுப்பது வஞ்சுப் புலன்களால் நம்மை ஆளும் மனம். கருடக்கொடி கொண்ட திருமாலும் காணமுடியாத திருவடியைத் தந்தருளிய இறைவனே, தங்களின் செங்கமலப் பாதத்துணை கொண்டு மாயையாகிய மனதின் செயலை தவிர்த்து, ஜீவனாகிய பொருளை அறிய வைத்த இறைவனே, அடியேன் உங்களிடம் அடைக்கலம். பொல்லாத பிறவிப் பிணியில் அகப்பட்டு, அறிவு மாணிக்கத்தை அறியாமல் இருந்த எனக்கு யுகாந்த நாட்டு செல்வத்தை அருளும் இறைவனே, உங்களை வணங்குகிறேன்

**பரிசுத்த வேதாகமம்-ஆதியாகமம்- வசனம்-(01-05)** *ஜீவ சகோதரர் விஜயகுமார் அவர்களின் புரிதல்.*

பரிசுத்த ஆவி மூலம் மறலி கை தீண்டா பரிசுத்த செயலில் ஆக்குவதற்காக வந்தது பரிசுத்த வேதாகமம். எழுதாத எழுத்தே வேதம் கண், காது, மூக்கு, வாய் இவைகளுக்குள் தான் வேதம் அடக்கம். மனமற்ற பரிசுத்த நிலையை அருளும் தேவத் திரு வாக்கியங்களும், பரிசுத்த சத்தியவேதமும் அகமிய ரகசியங்களைப் பற்றியே கூறுகின்றது.

**ஆதியாகமம்**
**வசனம்-01**-ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.

இறைவனுடைய நாட்டத்தினால் தோற்றமில்லாமை எனும் வடிவத்தில் இருந்து, தந்தையின் **வானம்** என்னும் நினைவின் வழியாக நாம் படைக்கப் பெற்றோம். அதுபோல் ஞானத்தந்தையின் **வானத்திலுள்ள சப்தம்** மூலம் மறுபிறப்பு பூமியில் படைக்கப் பெற்றோம்.

**வசனம்-02**-பூமியானது ஒழுங்கின்மையாய் இருந்ததை சரி செய்கின்றார்.

ஐம்புல நுகர்வில் ஒன்றாக இருக்கும் நாம் குணத்தால், எண்ணத்தால், செயலால் ,மனதால் ஒழுங்கற்ற தன்மையில் இருக்கிறோம். இதை பெரியோர்கள் தங்கள் அமிர்த வர்ஷிப்பின் மூலம் ஒழுங்கானதாக மாற்றுகிறார்கள்.

**வசனம்-03-**வெளிச்சம் உண்டாகக்கடவது.
இதில் புறத்தில் உள்ள சூரியன், சந்திரனைக் குறிப்பிடவில்லை. நாம் உறங்கி விழிக்கும் போது **உணர்வே** வெளிச்சப் பொருளாக உள்ளதை அருளுகின்றார்.

**வசனம்-04-05-**வெளிச்சத்திற்கு பகலென்றும், இருளுக்கு இரவு என்று பெயரிட்டார். பகல் 12 மணி நேரம், இரவு 12 மணி நேரம், என்பது மனிதனின் மூச்சினுடைய ரகசியத்தை வைத்து நொடி, நிமிடம் ,மணி, நாள், காலம் என படைப்பின் முதற் பொருளாக இதனை அருளுகின்றார்.

**குருபிரானின் வர்ஷிப்பு**:- வேதாகமத்தில் உள்ள தீர்க்கதரிசனங்களை ஆண்டவர்கள் அனந்தர்களுக்கு வாழும் வாழ்க்கையாக ஆக்கி வைத்தார்கள். படைப்பின் ரகசியம் ஜாதி, மத, இன வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது. சொர்க்கத்தின் திறவுகோல் மெய் ஆசானின் *ஓர் எழுத்து மாத்திரைக் கோலாக* உள்ளது. உயிர் ஒட்டிய இரகசியமாக உள்ள வளமான வாழ்வை,


Copyright © AMNA Trust, Chennai

ஒரு மெய்க் குருபிரானின் கருணையால் தான் அறியமுடியும். சர்வத்தையும் உண்டாக்குவதே அறிவு என்பதாகும். இறைவனை அடைவதே ஆறாவது அறிவு. அது மனதுடன் சேர்ந்து கீழ் நோக்கமாக செல்வதை மேல் நோக்கமாக அறிவாக மாற்றுபவர்களே நிஜமான பெரியோர்கள். இதை அறியாத மூடர்களே கழுத்துக்குக் கீழே செயலுக்கு வராத அறியாமையை விதைக்கிறார்கள். *அறிவை* அறிந்த பெரியோர்கள் எப்பொழுதும் மேன்மையைப் பற்றியே பேசுகிறார்கள்.

***செவியில் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்***
***அவியினும் வாழினும் என்*** *(திருக்குறள் எண்-420)*

தலையிலுள்ள குண்டலியைப் பற்றிப் பேசுவதே குண்டலியோகம், ஹட யோகம், வாசியோகம், என்பதாகும். எக்காலத்தும் எப்போதும் ஒன்றே ஒன்றாக உள்ள மெய்யை அறியும் ஆறாவது அறிவை அறிவுப் பூர்வமாக தெரிந்துகொள்ளும் மார்க்கமாக ***ஆதி மார்க்க நீதி அவை*** விளங்குகிறது என அருளி குருபிரான் அவையை இனிதே நிறைவு செய்தார்கள்.

**19-02-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

*ஜீவ சகோதரர் கௌதம் அசோகன் அவர்களின் புரிதல்*

உலகத்தில் உள்ள எல்லோருக்கும் தங்களின் நாளை தொடங்க, புதுமுயற்சி, புதுதேடுதல், வேலைகள், அனைத்திற்கும் விடியலானது தேவைப்படுகிறது. ஆனால் அறிவைப் பெற்றமக்களுக்கு மெய்யை அறிவதே விடியலாக உள்ளது. இந்த துக்க உடலில் இருக்கும் இந்திரியங்கள் மூலமாக நாம் அனுபவிக்கும் சந்தோஷம், சலிப்பையும் கஷ்டங்களையுமே தரும். மெய்யை அறியாதவர்களுக்கு அறியாமை என்ற இருளிலிருந்து அறிவெனும் வெளிச்சத்தை அடைவதே விடியலாகும். அது ஞான சூரியனான ஆசான் தொட்டுக் காட்டும் நாள், நேரத்தில்தான் விடியலானது உள்ளது. மனதற்ற பரிசுத்த நிலையில் இருப்பதே நல்ல நாளாகும். குரு அருளால் மட்டுமே கிட்டும் மெய் விடியலில்தான் நம் ஜீவனானது பரிசுத்தம் அடைகிறது.

முகம் கிழக்கு, முதுகு மேற்கு, தலை தெற்கு, கால் வடக்கு என்று வள்ளல் பெருமான் அருளியுள்ளார்கள். உதயமாகும் இடத்தை நம்மில் காட்டித்தரும் ஆசானே நம்மைத் தேர்ந்து எடுப்பவர். இதை அறிந்து ஆன ஜனங்களே, குரு பிரான் வீற்றிருக்கும் ஆசனம்.

ஒரு மெய்க் குருபிரானை சந்தித்த நாள் முதல் அவர்கள் சொற்படி கேட்டு நடந்து செயலாற்றினால் எல்லா நாளும் நமக்கு விடிந்த நாளே ஆகும். இதனை ஆண்டவர்கள் **வினை கொடிய மிடிமையிடர் கெடுமை கவலையிருள் மடியும் உதயமதில் விடியும் சாலைனிலம்** என அருளியுள்ளார்கள். ஆறாவது அறிவை அறிந்தவனே மனிதனாவான். சாலை ஆண்டவர்கள் **தெளிந்நிடுக தன்னுலக மேவிடியும் சாலை துணிந்நிடுவ ருக்கேவிடி யும்பொனுல காமே** என அருளியுள்ளார்கள். இந்த துக்க உடலைக் கொண்டு நாம் விடியலை காண முடியாது. அந்த பொன்னுலகான தன்னுலகில்தான் விடியலைக் காண முடியும். புறவாழ்வை விட்டு அகவாழ்வுக்கான வழி கிடைப்பதே விடியலாகும். குருவே நம் பாவங்களைப் பாழாக்கும் சஞ்சீவி ஆவார். நம் அறியாமையைப் போக்கி அறிவை ஏற்றி வைப்பவரே துப்புரவாளராகிய குருபிரான். இதை வள்ளுவப் பெருந்தகையும்

**துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉம் மழை.** (திருக்குறள் எண் -12) என்று அருளியுள்ளார்கள் .



Copyright © AMNA Trust, Chennai 

நாளுக்குள் நுழைந்து சாமுன் சாகப் பழகும் வித்தையைப் பழகி வருபவர்களே சன்மார்க்கிகள். குருவின் அருளால் அக உலகம் விடிந்நால் மட்டுமே பஞ்ச பூதத்திற்கும் அப்பாற்ப்பட்ட இறைவனை நாம் உணர முடியும். ஓய்வு நாளை இயேசுவிற்காக செலவு செய்யுங்கள் என்பதின் உண்மை விளக்கம், நம்மிடமுள்ள ஓயாத மனம்தான் ஒய வேண்டியதாக இருக்கிறது. சீடனை நாளுக்குள்ளே பிறக்க வைத்து, அறியாமையை விலக்கி வைக்கின்ற குருவே விடியலாகவும் அறிவாகவும் விளங்குகிறார். விடியாமல் விடிந்திருந்த பொன்னில நாடு என்பதன் பொருள் காலகால காலங்கடந்த காரிருள் கறுப்பாக உள்ளது. ஆசானின் பேரிரக்கத்தால் மட்டுமே அதை நாம் அறிய முடியும்.தலையும் காலும் சேரும் இடமாகிய சுழிமுனை என்பது ஏகாட்ச்சரமாக உள்ளது. இதை உணர்பவரே சமாதானம், சமத்துவம், அன்பு, அமைதி, அறிவு என்ற அனைத்தையும் பெற முடியும்.இதையே நம் தெய்வமவர்கள்

**அச்சர மமைத்தோன் அறுந்நுபோ னதுகண்**
**டமைந்நதை யமைத்து அறைந்நதிக் கிரந்நம்**
**அறிவினை யறிந்நோர் அறிவரிவ் வாய்மை**
**பாமரர் அறியார் பண்டிதர் அறிவர்**
**இதனை உணர்ந்நபின் எடுத்தோதிக் கிரந்நம்.**

என்று முகப்பு பாடலில் அருளியுள்ளார்கள். ஆசானின் உத்தியினால் தான் வேதத்தை ஓத முடியும்.வெளிச்சப் பொருளாகிய அருண்மணி விரிந்தால் தான் சீடனுக்கு நாளானது விடியும்.என்ற புரிதலுடன் அவை நிறைவு பெற்றது.

**27-02-2022 ~ ஞாயிற்றுக் கிழமை ~ சிறப்பு சபை**
**குழந்தைசாமி கவுண்டர் ஐயா அவர்களின் 14வது ஆண்டு பூர்த்தி விழா**
**தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்**



*மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா*

**சொல்லறிய னால்வேதம் அங்கம் ஆறும் ...** என்ற பாலுடன் அவை தொடங்கியது. பெரியோர்கள் னித்தியத்தில் ஏறிய நாளை னினைவு கூர்வது என்பது அவர்கள் அடைந்த அந்த னித்தியத்தை நாமும் அடைய வேண்டும் என்பதற்காகவே கொண்டாடப்படுகிறது.

**ஆக்கை நிலையாமை:** நிலையற்ற உடலில் இறைவன் எங்கே என்று தேட வேண்டும். பிறவாமை அடைவதற்கு அறிவு வேண்டும். உள்னினைவு வெளினினைவு என்று இரு னினைவு நம்முள் உள்ளது. நம்மை காத்து இரட்சிக்கும் அந்த உயிரான பரம்பொருளுக்கு உள்னினைவும், இந்த உலக செயலுக்கு வெளினினைவும் கொண்டு வாழ்பவன் சுலபமாக ஞானத்தை அடைய முடியும். பிராணன், ஆறாவது அறிவு, இவற்றை அறிவித்து, நம்மை அன்பு உருவாய் பரசிவமாய் ஆக்கி வைப்பவர்கள் குருபிரான். இதுவே அன்பே சிவம். சிவ யோகம், சிவ போகம், பிரம்ம வித்தை பழகுவதால் வரும் ஆனந்தம், இதுவே சிவானுபவமாக உள்ளது.

*ஜீவ சகோதரர் வடிவேலன் அவர்களின் அன்பு பற்றிய புரிதல்:*



Copyright © AMNA Trust, Chennai

**அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே** ... என்ற வள்ளலாரின் பாடலைத் தொடர்ந்து சிவனை அறியும் அன்பே சிறந்த அன்பு. அன்பை பகிர்வதற்கு வழி மொழியாகும். **நிறைமொழிமாந்தர் பெருமை மறைமொழி காட்டி விடும்** என திருவள்ளுவர் கூறியுள்ளார். மெய் பிறந்தது வேதியர் மொழியிலே என்று கூறுவர். மெய்யை எடுத்துக் கூறும் மொழியே நிறைமொழி. ஒரு மொழியாம் குருமொழி மெய்பால் அறிந்தால் என்று ஆண்டவர்கள் கூறியுள்ளார்கள். குரு மொழி கொண்டு அறிவதுவே தன்னை அறிதல். மெய் பொருளுக்கே அன்பு என்ற னாமம். அந்த மொழியே இயல் மொழி, நிறைமொழி. *பகர்மொழி சுவையும் பசியினில்* உகப்பும் என்பது போல் நம் நிலையறிந்து ஆறாவது அறிவை நம்முள் துலங்கச் செய்பவர்கள் ஆசான். *னாத லட்சணம் னாதன் லட்சணம் னாதன் வாய்மையின் லட்சணம்* என்று *மெய்ம்மண ஞானத்தில்* கூறப்பட்டுள்ளது. உயிரை பிரகாசமாக்கும் அதுவே இருளறு மொழியாக வேதமொழியாக திருவாக்காக அன்பை காட்டும் ஆணிமொழியாக உள்ளது.

**அழியாப்பதி குடியேறிய**
**னாயக மென் குருவின்**
**மொழியாம்படி குடியேறியு**
**பாயம துட்புகவே...**

என்ற ஞான முறையீடு பாடலின்படி மொழி என்பது வெளிச்சப் பொருளாக ஞானத்தமிழாக, **'ம்'** மொழியாக, திரு மொழியாக ஒரு நேரத்தை நமக்கு உணர்த்தும் கனி மொழியாக உள்ளது. துப்புறவாக உன்னுள் துலக்கும் ஆசானாக, வித்தகப்பெருமான் விளக்கி என்றெனக்கு, சொல் ஒரு பொருளாகவும் ஆசானின் னாதமே னிஜமான அன்பு என ஆண்டவர்கள் கூறியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் விஜயகுமார் அவர்களின் புரிதல்:*

இந்த உடல் நாம் அல்ல. நினைவின் உள்ளே காலம் நாள் அனைத்தும் உள்ளது. மனம் இன்னது என்று அறிந்து அதைக் கொண்டு மயிர்ப்பாலம் கடக்க வேண்டும் என ஆண்டவர்கள் கூறியுள்ளார்கள். எவன் ஒருவன் தன் மனதை வெல்கிறானோ அவனே வீரன் என இராமகிருஷ்ண பரமஹம்சர் கூறியுள்ளார். னபுசாக உள்ள மனதை மேல் நோக்காக சிபத்தாக மாற்றுவதே பிரம்மவித்தை செயல். அதுவே சாகாமல் சாவது. மனம் திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபமாக உள்ளது என சத்திய வேதத்தில் கூறப்பட்டுள்ளது. குருவின் மூலம் பிறவிப்பிணி மாற்றி பிறவாமை அடைவதே இந்த அவையின் நோக்கம்.

*ஜீவசகோதரர் நாகலிங்கம் அவர்களின் புரிதல்:*

சோடச னிலை காப்பு செய்யுள் **சொல்லவொண் ணாதபல் லாயிரம் கோடியண் டம்படைத் தாங்நாங்கு ...** பாடலைத் தொடர்ந்து, பல்லாயிரம் கோடி ஜீவராசிகளில் மனிதன் மட்டுமே இறை பொருளை அறிய முடியும். னித்திய ஜீவனை அறிய குரு கட்டாயம் வேண்டும். எல்லா உயிரும் ஒர் உயிராய் பார்க்கவும், நாளின் ரகசியத்தை அறிந்து வாழவும் குருவே துணை என்ற புரிதலுடன், குரு பெருமானின் ஆசியுடன் சபை இனிதே நிறைவேறியது.



Copyright © AMNA Trust, Chennai

## இசை வகுப்புகள் ~ தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்

### 13-02-2022 ~ ஞாயிற்று கிழமை

அண்ட ராலும றியவொண் ணாத்திரு
அண்ட ரண்டப கிரண்டம் பாய்ந்துமே
அண்ட மோரணு வினுள்ளே காட்டிய
தொண்ட ருள்ளத்தொ டுங்கும்த னியரே

என்ற குரு ஸ்தோத்திரம் பாடலுடன் இசை வகுப்பு தொடங்கியது

**பூரணப் புதையல்**
**காப்பு**

னேருரைதம் பிஸ்மில்லா ஹிர்ரஹுமா னோடும்
னிர்ரஹீமென் றிலங்கும்பரி பூரணமிங் நுரைக்கத்
திருமறையோன் யாகௌதல் லஅலமென வழைத்த
தீரமுள்ள தீன்முகைய தீன்பாதம் பணிந்து
வரும்வேத மார்க்கனெறி வாலகுரு விரசூல்
வரும்னபிகள் பெருமான்றன் மலர்ப்பாதம் பணிந்து
தெருளமுத மளித்தவென்றன் குருபெருமான் பாதம்
சிரம்பணிந்நின் னம்பெரியோர் பதம்பணிந்ந காப்பே

**னூல்**

சிரம்பெருந் நுறைவளரும் - வேகாச்
சீர்பாத கமலமென் சிரசில்வைத்தே

இருமைமுத் தாபமெல்லாம் - போக்கி
இதயம்க டல்போல்விரிந் நுதயஞ்ஞெய்ய

இறைவனே யறிவானென்ற - அச்சரமூன்
றிருத்தியெ மக்கறிய வைத்தவரத

குருமல ரடிவணங்ங்கி - இறைதூதர்
குலனரு ளாரணப் பலன்கைவர ...

என்ற பாடல்கள் தாளத்துடன் பாடுவதற்கு பயிற்சியளிக்கப்பட்டது.

### 20-02-2022 ~ ஞாயிற்று கிழமை

இணங்ஙிய சுபாவம் பார்த்து
என்னிரு தயத்தி னுள்ளே
பிணங்ஙிடா தீமா னாறும்



Copyright © AMNA Trust, Chennai

**பெருனிலை யறியக் காட்டி**
**வணங்ஙிடு மிசுலாத் தைந்நும்**
**வகைவிதி யங்ஙே பூட்டி**
**இணங்ஙுதற் குளவு சொல்லி**
**யென்னகம் துறந்ந தேவே**

என்ற தோத்திரப் பாடலுடன் இசை வகுப்பு தொடங்கியது.

**பூரணப் புதையல் - பக்கம் 81**

**னடையெனு முஜூதைக் காண லகுவல்ல தன்னாலாகா**
**திடமுள ஞான னாதத் தேசிக ருளம்க னிந்நு**

**உடலைவிட் டுடலிற் பாய்ந்நு ஒமுடிந் நிடத்திற் றாக்க**
**னடையது தோணித் தோணும் னாட்டனீ யகலா தங்ஙே.**

என்ற பாடல் விருத்தமாக பாடுவதற்கான பயிற்சி அளிக்கப்பட்டது.

**பத்திகொண்டு பசியுடனே சுத்தமாக பாலகனே சாதகத்தினிலைக்கும் போது** என்ற பாடலும் **மாதவத்தின் மதியமுதம் கருவூர் னாட்டில்** என்ற பாடலும் **விண்டுவிண்டு அந்தரத்தோடுருவிப்பாயும்** என்ற பாடல்கள் தாளத்துடன் பாடுவதற்கு பயிற்சியளிக்கப்பட்டது.



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின்
# 2022 மார்ச் மாத அவை நிகழ்வுகள்


Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் வர்ஷிப்பு



திரு. சாலை ரவி அப்பா அவர்கள்
நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை

ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே, எதார்த்த நன்மன சற்சன மக்களே, மாசியும் பங்குனியும் சேர்ந்த மார்ச் மாத மின்னணு சஞ்சிகை இன்று மலர்கிறது. இதில் மாசி மாதத்தின் சிறப்பாக மயான கொள்ளை என்பது பற்றியும் மற்றும் 17 சபைகளின் தொகுப்புகளையும் பதினோரு மக்கள் தொகுத்து வழங்கியுள்ளனர். பொய், மெய் மற்றும் ராகு கேது இவற்றைப் பற்றி விஜயகுமாரும், திருவாசகத்தின் ஆசைப்பத்து, அடைக்கலப்பத்து, இவற்றை அருளிய பெரியோர்களின் திருவுளப்பாங்கிற்கு ஈடான நிலையிலிருந்து ஜீவிதாவும் இதனை மிகவும் சிறப்பாக தொகுத்து வழங்கியுள்ளனர. தந்தை மகற்காற்றும் உதவி மற்றும் பிறந்தநாள் இவற்றைப் பற்றியும், லாவண்யா நடத்தும் இசை வகுப்பும் அதன் தொகுப்பும், மற்றும் சிவகாசி, சத்துவாச்சாரி, உள்ளிட்ட அவை நிகழ்வுகளில் பேசப் பெற்ற செயலாக உள்ள அனைத்து விஷயங்களையும் உயர்ந்த எண்ணங்களுடன் மக்களுக்கு ஷேமம் பாலிக்கக்கூடிய வகையில் எழுத்து வடிவில் இந்த சஞ்சிகையில் தொகுத்து வழங்கப் பெற்றுள்ளது. தக்ஷிணம்+நா+மூர்த்தி எனும் நா வன்மையின் சிறப்பே தட்சிணாமூர்த்தி என்பதனை பெரியோர்களின் அருளால் தான் அறிந்து கொள்ளமுடியும். தன்னை அறியும் வழியாகிய தென் முகம் என்பது பற்றி மிக விரிவாகவும் ஆண்டவர்கள் அருளிய காலநாட்டிய காரணப்பா பாடல்களின் விளக்கங்களை கூர்மதி கொண்டு லாவண்யா தன் புரிதலாக வழங்கியிருப்பதும், பைபிள், திருவாசகம், தேவாரம், இவற்றின் விளக்கங்களை விஜயகுமார், பூர்ணிமா, உமாராணி ஆகியோர் சிறப்பாக வழங்கியுள்ளவற்றையும், மக்கள் படித்துப் பயன் பெறும் வண்ணம், இழைக்க இழைக்க ஒளி விரிக்கும் கசிதம் போல் இந்த சஞ்சிகையானது ஒவ்வொரு மாதமும் தனித்தன்மையுடன் மிளிர்கின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக மகுடம் வைத்ததுபோல் ஆண்டவர்கள் பிரம்மோபதேசம் புனைந்த நாள், பிறவா நாள் பிறப்புத் திருநாள், பங்குனி மாதத்தின் சிறப்பாக கொண்டாடப் பெறுவது, ஒவ்வொருவரும் பிறவா நாள் பிறப்பு பெற்று பிறப்பொழித்து மரணமிலாப் பெருவாழ்வு வாழவேண்டும் எனும் ஒரே நோக்கத்திற்காகத்தான். இத்தனை சிறப்புகளையும் உள்ளடக்கிய இந்த சஞ்சிகையை மக்கள் படிப்பதுடன் நின்றுவிடாமல் அதனை செயலாக தன் உள்ளத்தில் கண்டு அடைய, ஆதியின் நீதி வழி பற்றித் தொடர்ந்திட என் நல் ஆசிகள்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

மெய்க்கல்விக் கலாசாலையில் சர்வ வேதங்ஙளின் உட்பொருள் ஆதார உயிர்ப் பதிப்பும், ஒற்றுமை வேற்றுமைத் துலக்கமும், செயற்கரி பகாப்பதத் துள்ளுலாவும் - பகுபதப் பிரத்தியட்சக் காட்சி கோடாகோடிகளும் - வீடடைக் கூர்ப்பு விழிப்பு னோக்கும், இவை - ஆதி தலைப்பாடமாகக் - குறிப்பு உணர்ந்நு - ரூபில் னிரூபித்து, னிரூபித்துப் - போதிக்கப்பெறும்.

~ **சாலை ஆண்டவர்கள்**



Copyright © AMNA Trust, Chennai

**03-03-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**வான்மதிக்கொரல் திருவாக்கியம் எண் : 56**
**இறுதித்தீர்ப்பு நாள் வந்துவிட்டது** எனத் தொடங்கும் திருவாக்கியத்திற்கான குருபிரானின் வர்ஷிப்பு : அன்னையின் வம்சமாகிய ஹபீப் குல மக்களை கெடுத்து, அவர்களுக்கு மட்டும் புகழ்பெருகுவதை சகிக்காத பொறாமை குபாட உள்ளம் கொண்ட இபுலீசுக்கு இரட்சிப்புத்தருபவன் இறைவனாக இருக்க முடியாது என்று திட்டமாக கூறுகிறார்கள். **பொய்யும் மெய்யும் பிரித்துனக்கோதிடும் மெய்ன்னிலை போதமென்ற விதாகுமே** என மெய்வழி ஆண்டவர்கள் அருளிய பாற்கடலை காய்ச்சி வடித்துத் தெளித்திட்ட ஆதி மெய் உதயபூரண வேதாந்தத்தில் நிறை மொழி, குறை மொழி இவற்றைப் பிரித்துப் பார்க்கின்ற சூட்சுமம் உள்ளது என்பதற்கு மேற்சொன்ன திருவாக்கியமே சாட்சியாகும்.

**னாமம்**- னாமம் என்பது ஆதியில் இறைவனுடையதாக இருந்தது. இவ்வுலகில் இறப்பை நோக்கிய பயணத்தில் உள்ள நமக்கு இறப்பிற்கு பின் மனித தேகம் கிடைக்க எந்த உத்திரவாதமும் இல்லை. எனவே இறப்பை ஒழிப்பது மனிதனின் கடமையாகும். மெய் ஆசானின் கையகத்தில் இருக்கும் னாத மருந்தே நம்மை இறப்பொழிக்கும் சன்மார்க்க வழியில் கூட்டிச் செல்லும்.

**ராகு-கேது**- சார்ந்ததின் வண்ணமாகிய மனமே ராகு-கேது ஆகும். இவ்விரண்டும் ஏழு வீடுகளில் புகுந்து **12** நிலைகளில் செயல்படுகிறான். தசாபுத்தியை கெடுப்பதும் புலன் பொறிக்குத் தலைவனுமாக இருக்கும் மனம் ஓர் சைதன்யப் பொருள். ஒருவனை ஆளாக்குவதும் பாழாக்குவதும் மனமே. மனமெனும் கண்ணாடி உடைந்தால் நம்மை காப்பாற்ற முடியாது. எனவே மனம் எப்போதெல்லாம் கலையாய், காட்சியாய், நிலையாய், பிரம்மமாய் சைதன்யமாய் உள்ளது என்பதில் மிகுந்த கவனம் வேண்டும்.

**பிறந்தநாள்**- தந்தை மகற்காற்றும் கடமை போல் நமக்கு ஓர் கடமை உள்ளது. நாம் பெற்ற ஞானத்தை வேத சாட்சியுடன் பிறரிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டும். கோவில்களில் உள்ள சிலை வடிவங்கள் தத்துவ நிலையை உணர்த்துகிறது. மெய் ஆசானின் நாதத்தினை செவிச் செல்வத்தின் மூலம் உள்வாங்கி நகலை விட்டு, அசலை உணர்கின்ற நாளே நமக்கு பிறந்தநாள்.

**தெட்சிணாமூர்த்தி**- தென்முகக் கடவுளான தெட்சிணாமூர்த்தி னாம ரூபமற்றவர். ஆன்மாவிற்கு உயரம், உருவம், னாமம் ஏதும் கிடையாது . னாமம் குறிக்கும் சொல்லுக்கு பொருள் ஒன்று உள்ளது. முகத்திலிருந்து வெளிச்சம் வருவதால் முகம் கிழக்கு, முதுகு மேற்கு, தலை தெற்கு, கால் வடக்கு, தென்முக கடவுளை அறியும் போது நம்மை நாம் அறிகின்றோம்.

**காலந் நாட்டிய காரணப்பா பாடல் எண்-19**
**வாரண வாம் பரியேறி வலஞ்சுழி** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி லாவண்யா அவர்களின் புரிதல்:

ஆசானின் துணை கொண்டு வாசியெனும் குதிரையேறி, இறைவன் இருக்கும் இடத்தை வலம் வந்து பூரண கும்பமாம் ஜீவனில் பொங்கி வரும் புது புனல் நீரை அமிழ்தத்தை அனுபவிக்க வேண்டும். அப்பழக்கத்தின் மூலமே நாம் போகாப்புனலை அறியமுடியும். **போகாப்புனல் சிந்தும் னாட்டில் வெள்ளி கிளம்ப என்றும், சீதப் புனல் வாவிக்கரை தாண்டியும் வந்நோம் செங்ஙழனி ஊருணி கடந்நுமே விட்டோம்** என்ற தெய்வ பாடல்களுக்கேற்ப அ, உ, ம, விந்து, னாதம் என்ற ஐந்து பாதங்களும், பஞ்ஞுபூதம், பஞ்ஞுகோசம், பஞ்ஞுபீஜம், பஞ்ஞுபீஜாட்சரமாக னின்று அனைத்து உயிர்களையும் உண்டாக்குகிறது எனும் தேவரகசிய செயல்களை அறிய


Copyright © AMNA Trust, Chennai

வைக்கும் ஆறாவது அறிவை ஆசானின் துணை கொண்டு மரணத்தையும் கலி காலத்தையும் வெல்லலாம்.

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய ஆசைப்பத்து- பாடல் எண்-03** **சீவார்ந் தீமொய்த் தழுக்கொடு திரயுஞ் சிறுகுடில்** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி பூர்ணிமா அவர்களின் புரிதல்-

மனிதனின் அனித்திய ஆக்கை குடிலுக்குள்தான் அழியாத னித்திய தேகம் இருக்கிறது. அத்தேகத்தில்தான் இறைவன் முகம் என்னும் னடுக்கருவாக, ஜீவனாக வீற்றிருக்கிறான் என்பதை குருவின் துணை கொண்டு தான் உணர முடியும். நம்முள் பற்றியும் பற்றாமல் இருப்பது **னான்**. விழிப்பு நிலையில் இந்த உடம்பைப் பற்றியும், உறக்க நிலையில் இருளோடும் பற்றியுள்ளது. அழியாத ஒன்றைப் பற்ற நாம் குருபிரானை பற்ற வேண்டும். அவர்களின் மூலம் **னான்** பஞ்ஞாட்சரமாக, ஜீவனாக, சிவமாக இருப்பதை அறிந்து கைக்கொள்ளலாம்.

**திருஞானசம்பந்தர் தேவாரத் திருப்பதிகம்-பாடல் எண்-03** **தண்ணறு மத்தமும் கடலிளமும் வெண்டலை மாலையும்**
என்ற பாடலுக்கு ஜீவசகோதரி உமாராணி அவர்களின் புரிதல்

திரு ஆலவாயாக, திருநள்ளாறாக இருப்பது குருபிரானின் னாதமே. அவர்களிடம் உள்ள னாத மருந்தின் மூலம் நம் பிறவிப்பிணியை தீர்த்துக் கொள்ளலாம்.

**சத்திய வேதம் – ஆதியாகமம் அதிகாரம்-01:** 11 முதல் 15 வரையிலான திருவசனங்களுக்கு ஜீவசகோதரர் விஜயகுமார் அவர்களின் புரிதல் : அகமிய ரகசியமாக முதலில் வித்து, வித்தாக விளைவதற்கு முன்னால் நாம் எப்படி இருந்தோம் என்பதையும் பின்னர் வித்தாக எப்படி விளைந்தது என்பதையும் குறிப்பதாகும். வித்து என்பது னடுவாக உள்ளது. வித்து இல்லாமல் எதுவும் விளைவுக்கு வராது. அந்த னடு என்பது **னான்** என உள்ளது. கோவில்களில் உள்ள தலவிருட்சம் ஓரறிவான தெய்வத்தை குறிப்பதாகும். ஓரறிவான கலிமாப்பொருளே தலவிருட்சமாகும். **மஞ்ஞுஞ்ஞெங்ஙஞ் ஞாவா மூலிகை ...**
**மருந்நெ னும்கலி மாமர னீயென - அறிவாயே** -பூரண வண்ணப்பா.

**சாதி**- அறிவினை அறிந்த சாதி ஒன்று, அறிவினை அறியாத சாதி ஒன்று. சாதிமான் சொல் சாதிமானை உண்டாக்கும். இதனை தேவன் நல்லதென கண்டார். மூன்றாம் நாள், மூன்றாவது அறிவு அதனுடன் மூக்கே என்ற தொல்காப்பியர் கூற்றுக்கு இணங்க ரவி, மதி, சுடரின் இரகசியமாக உள்ளது. மனிதனின் முதலாக உள்ளது காலம். கன்சுல் மகபியத் என்னும் இருளிலிருந்து இறைவன் சூரிய சந்திர நட்சத்திரங்களை உண்டாக்கினார். நினைவென்னும் ஆகாயத்தில் உள்ள சூரிய சந்திரர்களை உணர்வின் மூலமும், அதனுள் உள்ள கவனத்தின் மூலமும் உணரலாம். மனமற்று ஓரறிவாய் விளங்கும் ஜீவனை போல இறைவன் ஓரறிவுள்ள தாவரங்களை உண்டாக்கினார். மனிதனுள் உள்ள காலக்கணக்கின் படி நொடி, நிமிடம், மணி, நாள், வாரம், மாதம் வருடம் என வரையறை செய்யப்பட்டுள்ளது. மனிதனின் காலக்கணக்கு சூரிய சந்திர ,அக்னி கலையாக உள்ளது. இதனை **மூச்சு முளைத்தவிடம் மூலப் பொட்டலுண்டும் காட்சி புடத்திலிடக் காலம நிந்நெடுப்பு** என பத்தியத் திடத்தில் ஆண்டவர்கள் அருளுகின்றார்கள். சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் இருளிலிருந்து ஒளி பெறுகின்றது. சிவன் ரா, லைலத்துல் கதிர் ரா, என்பதில், ரா என்பது பிரகாசத்தை குறிக்கிறது. குரு பெருமானே சிவபெருமான் என்பதை நம் மூன்றாவது கண் மூலம் கண்டு அவர் வல்லமையுள்ள தேவன் என அறிவதே சிவன் ரா. மயான கொள்ளை என்பது இருளை வெட்டும் வெளியில் உள்ள தியானம். ஏதும் இலதாய் யாதும் உளதாய் இருக்கும் இறை பொருளுடன் இரண்டறக் கலப்பதே மயானக் கொள்ளை என்ற அருள் வர்ஷிப்புகளுடன் குருபிரான் அவை நிகழ்வுகளை நிறைவு செய்தார்கள்.


Copyright © AMNA Trust, Chennai

**05-03-2022 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**எமபடரடிபடு கோடாயிதக்கூர்- திருவாக்கியம் எண் : 85**

*உலக காரியத்திற்காக இந்த சபை இல்லை. ஆத்மார்த்தீகமாகிய உள்ளமைத் தெய்வீக வளர்ச்சிக்கே இது இருக்கிறது* என சாலை ஆண்டவர்கள் அருளியபடியே, உலக தேவைக்காக நாம் இறைவனை வேண்டினால் பாவமே வரும். நம் ஆத்மா பிழைக்க வேண்டி குரு அருளை பெறவே ஆதி மார்க்க னீதி அவைக்கு வருகிறோம் என்ற எண்ணத்தை நம் னினைவில் ஊணி வைத்துக் கொள்ள வேண்டும்.

**காலந்நாட்டிய காரணப்பா - பாடல் எண் : 20**

**னீங்ங்ு றுங் ஙலி காலன் னிலையிலே...** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி லாவண்யா அவர்களின் புரிதல்: அறியாமை எனும் இருளில் மூழ்கி இருக்கும் கலியனை முறை சங்கார அனுக்கிரகத்தால் மனுவாய் மாற்றி, தேவ னிலையில் ஏற்றி, தீங்கெலாம் திரண்டு ஓங்ஙும் கீழ் எண்ணங்களை பிரம்மவித்தையின் மூலம் மேல்னோக்காக அறிவு வடிவாக குருபிரான் மாற்றி வைக்கிறார்கள். மேலும் அறம், பொருள், இன்பம், வீடு என்ற பெருனிலைகளை சிவானுபவமாக்கி வைக்கவே **சோங்ஙு சிம்மாசனராகிய** மெய் குருபிரான் கல்கி அவதாரம் தாங்ஙி எல்லா காலங்களிலும் வந்து கொண்டே இருக்கிறார்கள்.



*ஸ்ரீலஸ்ரீ. மெய்வழி சாலை ஆண்டவர்கள்*

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் - அடைக்கலப் பத்து பாடல் எண் : 4** **பொழிகின்ற துன்பப் புயல் வெள்ளத்தில் ...** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி பூர்ணிமா அவர்களின் புரிதல்: தேடி வரும் பொருளாகிய ஆசானின் திருவடியானது அழி அவா கலிப்பிறப்பை வேரறுத்து, கீழ்னோக்கியே பாய்ந்து கொண்டிருக்கும் மனதையும், பல கோடியாய் விரியும் எண்ணத்தையும் மாற்றி, ஒண்டி ஒரு மனமாக, ஓர் நினைவாக்குகிறது. மேலும், ஆசான் தன் னாத வல்லபத்தை கொண்டு முழு காமச் சோம்பேறிகளாக இருந்தவர்களை முழுமனச் சிங்கங்களாக்கி அழியா தேகத்துள் குடியேற்றி அடைக்கலம் தருகிறார்கள்.

**திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம் - பாடல் எண் : 4**

**பூவினில் வாசம் புனலிற் பொற்பு...** என்ற பாடலுக்கு ஜீவ சகோதரி உமாராணி அவர்களின் புரிதல்: **பூவாய் மணமாகி பொன்னாகி மாற்றாகி னாவாய் சொல்லான நயமறியேன் பூரணமே** என்ற பட்டினத்தார் பாடலின்படி, குருபிரானின் அமுத னாவிலிருந்து வரும் சொல்லானது, மாறா மெய்ம்மணம் உடையது. அதுவே திருநள்ளாறாகவும், திருஆலவாயாகவும் னின்று நமக்கும் மெய்ப்பலனை அளக்கிறது என்பதை அறிவு அறி பாடத்தில், மெய்ப்பொருள் **மெய்ப்பயன் மெய்யறி வெல்லாம் மெய்க்குருவாலே விளங்ஙுவா யென்றும்** என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**சத்திய வேதம் – ஆதியாகமம் அதிகாரம்-01:** 16 முதல் 20 வரையிலான திருவசனங்களுக்கு ஜீவசகோதரர் விஜயகுமார் அவர்களின் புரிதல் :

**(ஆதியாகமம் 1:16)** தேவன் பகலை ஆளப் பெரிய சுடரும் இரவை ஆளச் சிறிய சுடரும் ஆகிய இரண்டு மகத்தான சுடர்களையும் நட்சத்திரங்களையும் உண்டாக்கினார்.



Copyright © AMNA Trust, Chennai 

பகலுக்கு சூரியனும், இரவுக்கு சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் படைக்கப்பட்டன. இம்மூன்றும் இருளிலிருந்து ஒளியைப் பெற்றே பிரகாசிக்கின்றன.

**(ஆதியாகமம் 1:17)** அவைகள் பூமியின்மேல் பிரகாசிக்கவும், பூமியில் உதிக்கும் சூரியனின் வெளிச்சம் திசைகளை காட்டுவதுபோல், ஞான சூரியனாகிய குருவின் னாதமே நல்வழிக்கான திசையை காட்டுகிறது.

**(ஆதியாகமம் 1:18)** பகலையும், இரவையும் ஆளவும் வெளிச்சத்துக்கும் இருளுக்கும் வித்தியாசம் உண்டாக்கவும், தேவன் அவைகளை வானம் என்கிற ஆகாய விரிவிலே வைத்தார்; தேவன் அது நல்லது எனக் கண்டார். னினைவெனும் ஆகாயத்தில் தான் உணர்வாகிய வெளிச்சப்பொருள் உண்டாகிறது. ஆசானின் சுத்த னினைவிலிருந்து பிறங்கும் ஒவ்வொரு வார்த்தைகளும், நம் அறியாமையை நீக்கி, மெய்யுணர்வின் மூலம் அறிவெனும் வெளிச்சத்தை உண்டாக்குகிறது.

**(ஆதியாகமம் 1:19)** சாயங்காலமும் விடியற்காலமுமாகி நாலாம் நாள் ஆயிற்று. **நான்கறிவதுவே அதனுடன் கண்ணே** என்ற தொல்காப்பியர் வாக்கின்படி, நான்காவது நாள் என்பது கண்ணாகிய அறிவைக் குறிப்பதாகும். தெளிவாகிய குருவின் திருமேனியைக் கண்ட பிறகே நான்கு தேக இரகசியங்களும் விளங்கும் என்பதை மெய்ன்னிலை போதத்தில்,

**தெளிந்நிடும் அச்சமெல்லாம் தேசிகர் வைப்பே யொன்றில்**
**அழிந்நிடாச் சூக்குமத்துள் ஏடங்ஙினீ பார்க்கப் பார்க்க**
**விளங்ஙிடும் தேக னான்நும் வேதனா வமுதம் சிந்நும்**
**களங்ஙமில் ரவியோ கோடி கைவசம் கயிலை வீடே.** என அருளப் பெற்றுள்ளது.

**(ஆதியாகமம் 1:20)** பின்பு தேவன் நீந்தும் ஜீவஜந்துக்களையும், பூமியின்மேல் வானம் என்கிற ஆகாயவிரிவிலே பறக்கும் பறவைகளையும், ஜலமானது திரளாய் ஜனிப்பிக்கக்கடவது என்றார்.

சிவானந்த போதத்தில், **மனிதரிலும் பறவையுண்டு, விலங்ஙுண்டு...** என்ற பாடலின் படி, மனித சட்டை எடுத்து வருபவர்களின் எண்ணங்களையும் குணங்களையும், மனதின் செயல்களையும் வைத்தே படைப்பினங்களின் வகைகள் பிரிக்கப்பட்டுள்ளது என்பதை அறியலாம்.

**ஆதி மான்மியம் - ஜீவ சிம்மாசனப் பருவம் :** குருபெருமானின் ஓரெழுத்து மாத்திரைக் கோலின் சிறப்பு னாமங்ஙள் :

1. *கன்னெஞ்ஞைப் பிளக்கும் னீண்டுரை வாள்*
2. *மனத்திருள் கடியும் வளைவு வாள்*
3. *மறைமலை பிளந்து வகை தரும் வாள்*
4. *வகை தொகையறுக்கும் வடிவு வாள்*
5. *சாதி சிக்கறுக்கும் வடிவு வாள்*
6. *இருபுறம் கருக்குடைக் கூரான பேசும் வாள்*

இத்தகைய வல்லப வாளாயுதங்ஙளைக் கொண்டு ஆசானின் அமுதனாவிலிருந்து பொழியப்படும் சொன்மாரியானது, சோம்பேறி அழிம்பு எண்ணம் கொண்டவர்களை அழிக்கக்கூடிய பெரு மழையாகவும், யதார்த்த நல் உள்ளங்களுக்கு நல விளைவாகவும் னின்று வழி நடத்தும் என்ற ஆசீர்பாத ஒலிவாயுரையுடன் ஆசான் அவர்கள் அவையை னிறைவு செய்தார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

**06-03-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்**

**வாழ்வனைத்தும் தந்தெனது ...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை தொடங்கப்பெற்றது. *ஜீவசகோதரர் பழனிவேல் அவர்களின் புரிதல்:*

எண்ணத்தின் மூலம் தோற்றமும், மனமும் குணங்களும் வருகிறது. தோற்றமானது அகம், புறமாகும். புறத்தோற்றம் ஓசை, ஒலி, சப்தங்கள் மூலம் அறியலாம். ஆறு அறிவு கொண்ட மனிதர் முதல் பிற ஜீவராசிகளுக்கும் தனித்தனியே சப்தம் உள்ளதை மனிதன் மட்டுமே அறிவான். சர்வத்திற்கும் மூலம் எங்கும் ஏகமாக வியாபித்து நிற்கும் தோற்றமில்லாமை எனும் அரூப வடிவம் கொண்ட காருண்ய கறுப்பாகும். னரன், மனு, தேவர், இவர்களின் நிலைகளை அவரவர் வாக்கின் மூலம் அறியலாம்.

னீதியெனும் பொருளை உணராதவன் னரன் எனவும், மெய் ஆசானால் சீடனாக ஏற்றுக்கொள்ளப்பெற்று னீதி எனும் பொருள் ஆனவனே மனு எனவும், குணங்களற்று நிர்குணமானவரே அமரர் எனவும் **செவியிற் சுவை உணரா வாய் உணர்வின் மாக்கள்** (திருகொரல்- 420) என்று செவிச்சுவை உணர்ந்தவர்களே தேவர் எனவும் வேதங்களில் அருளப் பெற்றுள்ளது.

**குருபிரான் வர்ஷிப்பு:** தோற்றமில்லாததை தோற்றத்திற்கு கொண்டு வந்து சொல்வதற்கு பெயர் னாதம். அதற்கு இல்மு என்றும் மெய்க்கல்வி என்றும் பெயர். இதனைத் தருவது அறிவு ரூபமெடுத்து வரும் ஆசானின் செயல். ஏழ்வகை தோற்றமும், நால்வகை யோனியில் அடக்கம். எட்டாவதாக வரும் அமரர் எனும் தோற்றம் வித்தில்லா வித்தில் இருக்கிறது.

*ஜீவசகோதரி பத்மா அவர்களின் புரிதல்:*

**அரியானை அறியவைத்து...** என மெய்வழி ஆண்டவர்களும்,

**அறிவுஅறி வென்று அங்கு அரற்றும் உலகம்**
**அறிவுஅறி யாமை யாரும் அறியார்**
**அறிவுஅறி யாமை கடந்துஅறி வானால்**
**அறிவுஅறி யாமை அழகிய வாறே**

என திருமூலர் பிரானும் அருளியுள்ளார்கள்.

அறியாமை இன்னதென்று அறிவதே அறிவாக உள்ளது. அழியும் தேகத்தினுள் **நான்** எனும் அழியாத பொருள் உள்ளது. ஞானம் அடையத் தடையாக இருப்பது உன் மாயை. ஞானம் என்பது அறிவு, அறிவு என்பது தன்னையறிவது. இதையே,

**தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை**
**தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்**
**தன்னை அறியும் அறிவை அறிந்தபின்**
**தன்னையே அர்ச்சிக்கத் தான் இருந்தானே**

என திருமூலர் அருளியுள்ளார்.

மனிதனிடம் ஆறாவது அறிவு தனிச்சீதனமாக, மனமாக, சிவமயமாக, சின் முத்திரையாக, தலையும் வாலுமாக, விந்து னாதமாக, திருச்சிற்றம்பலம் என்ற பொருளாக இருக்கிறது.



Copyright © AMNA Trust, Chennai 

**என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்தது இல்லையே**
**என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்து கொண்டபின்**
**என்னிலே இருந்த ஒன்றை யாவர் காண வல்லரோ**
**என்னிலே இருந்திருந்து யான் உணர்ந்து கொண்டெனே**

என சிவவாக்கியர் கூறுகிறார். என்னிலே இருக்கும் திருச்சிற்றம்பலம், சிவமயப் பொருள், திருநீலகண்டம், அருட்பெருஞ்ஜோதியை அறிவதுவே அறிவு. அறியாமையை அகற்றி அறிவுப்பிரகாசத்தில் நம் வாழ்வை மாற்றி அமைக்கும் குருவின் அருளே அறிவு மாணிக்கமாக இருக்கிறது.

*ஜீவசகோதரர் மாதவன் அவர்களின் புரிதல்:* **கோடாயிதக்கூர் வாக்கியம்: 145 எமது வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் ...** ஆசானின் வார்த்தையைக் கேட்டு வாய்மைக்குள் ஆனால் மனமானது அறிவாக மாறும். ஆசானின் வார்த்தையை கேட்டு மனம் திரும்பாமல் போனால் அதுவே பாவத்தின் சம்பளமாக மரணமாக உள்ளது. நினைவு தடுமாறும் போது மூச்சு துண்டாடப்பட்டு வாழ்நாள் நஷ்டமடைவதே பாவத்தின் சம்பளமாக இருக்கிறது.

*ஜீவசகோதரி செல்லம்மா அவர்களின் புரிதல்:* எண்ணம், சொல், செயல் - நமது எண்ணமானது அழிந்து போகிற புறத்திலேயே இருக்கிறது. ஆசானின் வாய்மைக்குள் ஆகும்போது கீழ் நோக்கமான எண்ணத்தை மேல் நோக்கமாக ஆக்குகிறார்கள். ஆசானின் வாய்மையை கேட்க கேட்க நமது எண்ணம் பரிசுத்தமாக மாறுகிறது. எண்ணம் சொல் செயல் இவை மூன்றிலும் நன்மை செய்து வினை அகல்வது ஆசானின் வாய்மைக்குள் ஆகும்போது நடைபெறுகிறது.

*ஜீவசகோதரர் சரவணகுமரன் அவர்களின் புரிதல்:* **தடம்** என்பது வழியாகவும், பாதையாகவும், அடையாளமாகவும், தளமாகவும், இடமாகவும், சுவடாகவும் உள்ளது. நாம் அறிவுப்பாதை என்னவென்று தெரியாமல் பயணம் செய்தோமானால் கடைசியில் நரகத்திற்கே செல்ல நேரிடும். அறிவுப்பாதையில் ஒரு மெய்குருபிரான் நம்மை வழி நடத்திச் செல்லுகிறார்கள். குருபிரானின் அருளால் மனமானது புலனுக்கு ஆட்படாமல், பிரம்மவித்தையின் மூலம் அறிவாக மாறும். **காப்பதற்குக் காட்டானை முன்னால் வேண்டும்** - மெய்வழி நூல். மெய்வழி என்பது மெய்+வழி. இதனையே முகப்பு பாடலில் **வழி வழி என்பார் வழி வேறில்லை** என அருளுகிறார்கள்.

**வாக்கான வாக்கிதுமெய் வழினூல் வாக்கின்**
**வசஞ்ஞேர்த்து விடவெனக்கிங் ஙளித்த வாக்கு**

மெய்யான வழி செல்ல ஆசானின் வாக்கே பாதையாக, பாதமாக இருந்து நம்மை வழி நடத்துகிறது. ஆசானின் அருளமுதமே வெளிச்சம் தரக்கூடிய விளக்காய் இருக்கிறது. இதையே குருமுறாதியில்

**இருளில்வழி தெரியாத இளம்பருவம்**
**அருள்விளக்குன் அன்பளித்தாய் யாதுன்மேல்**

என அருளியுள்ளார்கள்.

**இணக்கறியீர் இதம்அறியீர்**
**இருந்தநிலை அறியீர்**
**இடம்அறியீர் தடம்அறியீர்**
**இவ்வுடம்பை எடுத்த**
**கணக்கறியீர் வழக்கறியீர்** (தனித் திருஅலங்கல்)

என்று நமது அறியாமை பற்றி திருஅருட்பாவில் வள்ளல்பிரான் அருளியுள்ளார்கள். சத்திய வேதத்தில் **உங்களை தடம்புரள செய்த காரியம் உங்களை தேர்ந்தெடுத்த தேவனிடமிருந்து வரவில்லை** என்று கூறப்பட்டுள்ளது. மரணமிலாப் பெருவாழ்வு வாழ ஆசானின் னாதம் எனும் ஆசீர்பாதம் வேண்டும்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் கோபி அவர்களின் புரிதல்:*

பூமி கீழே, ஆகாயம் மேலே, மனு நடுவில் இருக்கிறான். அப்போது மனு (னான்) னடுவாக இருக்கிறான். னடுவை அறிவதுவே உபதேசமாக இருக்கிறது.

**நடுவு நின்றார்க்கு அன்றி ஞானமும் இல்லை**
**நடுவு நின்றார்க்கு நரகமும் இல்லை**
**நடுவு நின்றார் நல்ல தேவரும் ஆவர்**
**நடுவு நின்றார் வழி யானும் நின்றேனே.** (திருமந்திரம்)

**ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு உயர் செல்வமெல்லாம்**
**அன்றென்றிரு பசித்தோர் முகம் பார் நல்லறமும் நட்பும்**
**நன்றென்றிரு நடு நீங்காமலே நமக்கு இட்டபடி**
**என்றென்றிரு மனமே உனக்கே உபதேசமிதே.** (பட்டினத்தார்)

**கர்த்தர் நடுவிலே இருப்பார் நீ சமாதானமாய் இருப்பாய்.** ஜீவனே னடு என்ற இடமாகவும், அறிவு இருக்கும் தலமாகவும், னீதியாகவும் இருக்கிறது. அலீபு லாம் மீம் என்பதில் மீம் னடுவாகவும், உடல், உயிர், ஆன்மா என்பதில் ஆன்மா னடுவாகவும் இருக்கிறது. நாளில் பகல் நடுவாக உள்ளது. அது 12 ஆக/ உயிர் எழுத்துக்களாக, ராசிகளாக, அறிவுகளாக உள்ளது. வள்ளல் பிரானும் அகரத்தைப் 12 ஆக கூறுகிறார்கள்.
**னடுவறிந்து உரைப்பவரே சன்மார்க்கர்,** தென்திசையே னடுவாக இருக்கிறது என்ற ஆசானின் அருளமுத வர்ஷிப்புடன் அவை நிறைவு பெற்றது.

**06-03-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்**

*ஜீவசகோதரர் கௌதம் அவர்களின் புரிதல்:*

**தாகந் தீர்த்த தனிப்பெருங் நடலேயென்**
**மோக மோட்டி முடித்த தவசியே ...**

என்ற குருஸ்தோத்திரம் பாடலின் புரிதலாக, நாம் இந்த தூல தேகத்தை மோகத்தின் மூலமாக எடுத்திருப்பதால், நாம் பார்க்கும் அனைத்து பொருட்கள் மீதும் மோகம் வைக்கிறோம். ஆனால் ஞானமோ பரிசுத்த தலம். அத்தகைய ஞானத்தை அடைய நமக்கு தடையாக இருப்பது கசடுகள் மீது நாம் வைத்துள்ள மோகமே என்பதை நமக்கு ஆசான் அறிவித்து, கசடுகள் மேலுள்ள மோகத்தை ஓட்டி கீழ்நோக்காக உள்ள நமது மனவேகத்தை மாற்றி மதிவேகமாக சிபத்தாக ஆக்கி வைக்கிறார்கள்.

**இறைவனின் ரகசியம்:** வேதத்தில்தான் இறைவனைப் பற்றிய அனைத்து ரகசியங்களும் உள்ளது. ஆனால் ஆசான் இல்லாமல் நாம் வேதத்தை எத்தனை முறை படித்தாலும் அது நிரூபிக்கப்படாத மூடநம்பிக்கையாகவே இருக்கும். இதனையே நம் தெய்வமவர்கள் பிள்ளைத்தமிழில்,

**உருமிக்கொண் டேனாய் முழுத்தேங் நாய்தனை**
**யுருட்டுத லென்செய்யும்**
**பித்தர்கள் ஞானம் எமனாக் கினைமுன்**
**பொடிப் பொடி யாகிவிடும்**



Copyright © AMNA Trust, Chennai 

என அருளியுள்ளார்கள். அறிவு ரூபமாகிய ஆசான் வேதத்தை நம்முள் விளக்கி, சாகாக்கல்வியை பழக்கி வைத்த பிறகுதான் வேதங்கள் கூறுவது இறைவனைப் பற்றியதல்ல, மனுவின் ரகசியம் என உணர முடியும். தன் ஜீவனை அறிந்து வழிபடுவதே சிவலிங்க வழிபாடாகும்.

**பட்டயம்**: இருபுறமும் கூரோங்ஙிய பட்டயம் என்பது ஆசானுடைய ஒரெழுத்து மாத்திரைக் கோலாகும். பட்டயம் தான் அறியாமை எனும் அரக்கனை அழித்து, அறிவெனும் பிரம்மத்திற்குள் நம்மை ஆக்குகிறது.

**இருதயம்:** ஜென்ம சாபல்யத்தை அடைவதற்காக எல்லா உளவுகளும் கொடுக்கப் பட்டுள்ள ஒரே இடம் மனிதனின் இருதயம்.

**முச்சந்நி தனிலே வைத்தார்**
**முழுச்சுமார் வந்து கூடும்**
**னிச்சயச் சபைக்கூட் டத்தில்**
**னடுவினில்க் கிடத்தி னெஞ்ஞில்**
**பிச்சுவாக் கொண்டு கீறிப்**
**பிளந்நுபித் தெடுத்து வாயைத்**
**தைத்துமே வடுவுங் ஙாணாச்**
**சாதகம் செய்திட்டாரே** - ஆதிமான்மியம்

என்ற செயலை நம் இருதயத்தில் பதிப்பித்து, தன்னுடைய ஒரெழுத்து மாத்திரைக்கோல் கொண்டு, அகக்கண்ணான மூன்றாவது கண்ணைத் திறந்து, **பாப்பானை யென்னுள் பார்த்திரு வென்று ஆப்பா யறைந்நா ரசையா னிலையயில்** எனும் ஞான அகவல் பாடலின் படி, ஆயிரத்தெட்டு அண்டங்களும் பட்டப்பகல் போல் தெரிய வைக்கிறார்கள். இதனை

**நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி**
**உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம்**
**பற்றுக்குப் பற்றாய்ப் பரமன் இருப்பிடம்**
**சிற்றம்பலம் என்று சேர்ந்து கொண்டேனே**

என திருமந்திரத்திலும் அருளப்பெற்றுள்ளது.

**அனுபவம்:** வேதத்தைப் பழகுவதன் மூலமே இறைவனைக் கண்டு அடையமுடியும். இதனை நம் தெய்வமவர்கள், கோடாயிதக்கூர் 80-வது திருவாக்கியத்தில், *உன் மனம், ஒன்றைப் பார்த்த பின் தான் அந்த ரூபத்தை னினைக்கும். அதேபோல இறைவனை, அந்நக் கோடி சூர்யப் பிரகாசத் திருவல்லபப் பிரபுவை ஒரு தடவையாவது சந்நித்திருந்நால்தான் உன் மனம் அந்நத் திருச்சன்னிதிக்குப் போகும் என்றும், இதனை உணர்ந்நபின் எடுத்தோதிக் கிரந்நம்* என்றும் ஆதிமெய் உதய பூரண வேதாந்நத்தில் அருளியுள்ளார்கள். ஆசானின் னாதமே பிறவிப்பிணியை தீர்த்து, ஜென்மசாபல்யத்தை அருளும் மருந்தாக உள்ளது என்பதை, அவர்களின் ஓசை கொண்ட நடனத்தின் மூலம் நாம் உணரலாம். அறிவு வேறு ஆசான் வேறில்லை. வேதங்கள் எல்லாம் புகழும் பஞ்ஞாட்சரத்தை கைவசமாக்கிக் கொண்டவருக்கே இறைவன் வசமாகும். அத்தகைய பஞ்ஞாட்சரத்தை, ஆசானின் னாதத்திற்குள் நாம் குடியேறி வாழ்வதன் மூலம் பெறக்கூடிய சிவா அனுபவத்தின் மூலம் அறியலாம். இதனையே,

**தூங்கிக் கண்டார்சிவ லோகமும் தம்உள்ளே**
**தூங்கிக் கண்டார்சிவ யோகமும் தம்உள்ளே**
**தூங்கிக் கண்டார்சிவ போகமும் தம்உள்ளே**
**தூங்கிக் கண்டார்நிலை சொல்வதெவ் வாறே**



Copyright © AMNA Trust, Chennai 

என திருமூலர் பிரானும் அருளியுள்ளார்கள். அத்தகைய சிவானுபவத்தை அடைவதே மெய்வழியாகவும், மெய்ஞானமாகவும், அறிவாகவும் ஆனந்தமாகவும் உள்ளது. *னீங்ஙள் ஐந்நாவது அறிவுதாண்டி ஆறாவது அறிவுக்கு வராமல், இடையில் இருக்கிறீர்கள் என்று னாம் னிரூபித்துக் காட்டுவோம்* என்ற தெய்வத் திருவாக்கியத்தின் புரிதலாக, நம் தேகத்திற்கு தோற்றமும் முடிவும் உண்டு. ஆனால் நம் நாமத்திற்கு தோற்றமும் முடிவும் இல்லை என்பதை ஆசான் மூலம் அறிவதே ஆறாவது அறிவு. நம் நாமத்திற்குரிய பொருள் உருவமற்று, நிறங்களற்று, நிஜரூபமாக உள்ளதை அடைவதே நிஜரூப தரிசனம். அப்படியான தரிசனத்தைப் பெற்றவனே மனு என்ற பதத்திற்கு உரியவனாகிறான் என்ற புரிதலுடன் அவை இனிதே நிறைவு பெற்றது.

**10-03-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்**

**வள்ளால் உன்னை பாடப் பாட னா மணக்குதே**
**வல்வினைகள் எனை விட்டு அகன்று ஓடுதே ...** என்ற பாடலுடன் சபை தொடங்கியது.
திருப்புகழைப் பாடப் பாட னா மணக்கும் என்பது தெய்வீக மெய்ம்மணம் வீசக்கூடிய ஆசானின் னன் னாதத்தைக் குறிப்பதாகும்.

**வான்மதிக் கொரல் திருவாக்கியம் எண் : 57**
**பாசம்:** தெய்வ ஆசானிடம் ஒருவன் வைக்கும் அன்பிலிருந்து அவனைத் தடுத்து தன்னறிவில் சாய வைப்பது பாசம். பாச வேரறுப்பதற்கான உளவானது மெய்ம்மண ஞானம் பாடலில் அருளப் பெற்றுள்ளது.

**அறுக்குமட்டு மாய்கைதனை யறுத்தே விட்டு**
**அருமறையி னெறிவழியே ஆசான் பின்னே ...**


ஆசான் சொல்லை வெறுக்காமல் மனதை வெறுத்து நின்றால் வெளிக்குள் வெளி கடந்து சும்மா இருக்க சுகம் என்ற மெய்ஞ்ஞான வாழ்க்கை எளிதாகிறது. இறைவன் மனிதனுக்குள் திருவடியாக, னற்றாளாக, அறிவெனும் பாதமாக விளங்கிக் கொண்டிருக்கும் நிலைகளை எழுத்து ரூபத்திற்கு கொண்டு வந்து அருளப்பெற்றதே வேதம் என்றும் வேதத்தின் அந்தத்தை பேசுவதே வேதாந்தம் என்றும் திருமறைகளில் கூறப்பெற்றுள்ளது.

**காலந் நாட்டிய காரணப்பா பாடல் : 16 மிகுந்த வேதம தங்ஙள்ப லவெலாம் ...** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி லாவண்யா அவர்களின் புரிதல் : சர்வ வேத வேதாந்தங்கள் அனைத்தும் ஆசானின் சோலினாப்பை எனும் திருவாயினின்றும் வெளியானவைகளே. மக்களின் ஆன்மாவை சுத்தப்படுத்தி அழியாத சொர்க்கபதி முத்தி செயலில் ஏற்றி வைக்கவே கலியுக கடையில் மைத்ரேய புத்தராக சாலை ஆண்டவர்கள் வருவார்கள் என்ற தீர்க்கதரிசனத்தின் படியும், சதுர் யுகங்களிலும் சர்வ மதங்ஙளுக்கும் கூறியவாறே கல்கி, மகதி என்ற னாமத்தில் அவதரித்த சாலை ஆண்டவர்களின் சீடரான மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா அவர்களிடம் மெய்ஞ்ஞானம் பெற்று, இன்று ஆதி மார்க்க னீதி அவையிலுள்ள மக்கள் அனைவருக்கும் வழங்கிக் கொண்டிருக்கும் நமது சற்குருவின் பாதம் போற்றி பணிகிறேன்.

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் - ஆசைப்பத்து பாடல் எண் : 04 மிடைந்தெலும் பூத்தைமிக் கழுக்கூறல்...** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி பூர்ணிமா அவர்களின் புரிதல்: கிருமிக் கோடிகளால் சூழப்பட்ட தூய்மையற்ற உடலை, சிவபுராணத்தில் புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி, மலம் சோரும்


Copyright © AMNA Trust, Chennai

ஒன்பது வாயிற் குடிலை என கூறுகிறார்கள். இன்பம் துன்பம் இரண்டிற்கும் உடன்படுவதே உடம்பு. இந்த அழிவுடல் இருக்கும் போதே மனிதனுக்கு தனிச் சீதனமாக தரப் பெற்ற ஆறாவது அறிவு கொண்டு ஒரு தேவபிரானை தேடி அடைந்து அவர்கள் மூலமாக அழியாத பொன்னுடம்பாகிய சூக்கும உடலில் குடியேறி, பேரின்ப வாழ்வை வாழ ஆசைப்பட்டேன் இறைவா.



திரு. சாலை ரவி அப்பா அவர்கள்
நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை

**திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம் - திருநள்ளாறும் திருஆலவாயும் பாடல்: 05 செம்பொன்செய் மாலையும்...** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி உமாராணி அவர்களின் புரிதல் :

ஆசானின் உதவியால் வாசி என்ற நினைவில் ஏறி செம்பொன்னாகிய அறிவை மாலையாக தொகுப்பதையே ஆண்டாள் வரலாறு உணர்த்துகிறது. இதனை கோடாயிதக்கூர் திரு வாக்கியத்தில், *வேதத்தில் எட்டமுடியாத பாரதூரமாகிய மறைப்பு ஒளிப்புக்களுக்கிடையில் சிதறியிருந்த முத்துக்களை ஞானிகள் திரட்டிச் சேர்த்து, வேதாந்தமென்று ஓதிவைத்திருப்பார்கள்.* அதுவே பரிசுத்த ஆவியான ஆசான் அவர்களின் மாறாத வாக்காகவும், திருநள்ளாறாகவும், திருஆலவாயாகவும் உள்ளது.

**சத்திய வேதம் – ஆதியாகமம் அதிகாரம்-01:** 21 முதல் 25 வரையிலான திருவசனங்களுக்கு ஜீவசகோதரர் விஜயகுமார் அவர்களின் புரிதல் :

**(ஆதியாகமம் 1:21)** தேவன் ஜலத்தில் மகா மச்சங்களையும் தங்கள் தங்கள் ஜாதியின்படியே திரளாய் சகலவித நீர் வாழும் ஜந்துக்களையும், சிறகுள்ள ஜாதி ஜாதியான சகலவிதப் பட்சிகளையும் சிருஷ்டித்து, அது நல்லது என்று கண்டார்.

**(ஆதியாகமம் 1:22 )** தேவன் அவைகளை ஆசீர்பதித்து நீங்கள் பலுகிப் பெருகி சமுத்திர ஜலத்தை நிரப்புங்கள் என்றும் பறவைகள் பூமியில் பெருகக்கடவது என்றும் சொன்னார்.

னரன், மனு, தேவனின் குணங்களை அடையாளம் காணவே எழுவகைத் தோற்றத்தை இறைவன் படைத்தான். ஒரு தேவபுருஷரை அடைந்து தேவ நிலையை அடைந்தவர்களே எழுவகை தோற்றத்தில் முதலிடமாகிய தேவர்கள், அமரர்கள், சித்தர்கள், ஞானிகள் என்ற னாமத்திற்குரியவர்கள் என்கிறது வேதம். இறைவனின் பத்து அவதாரங்களின் வாயிலாகவும் படைப்பின் ரகசியத்தை அறிய முடிகிறது. இதனையே

**தேவ ரகசியம் தேடுஉன் னுடம்புள்**
**னால்வகை யோனி எழுவகைத் தோற்றம்**
**அனைத்தும் உன்னுள் அறிந்துவாழ் வதற்காய்**

என அறிவுஅறி பாடத்தில் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**(ஆதியாகமம் 1 : 23)** சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஐந்தாம் நாள் ஆயிற்று.

ஐந்து என்பது பஞ்ஞாட்சரம் - நமசிவய. ஐந்தெழுத்து மந்திரம் உன் இல்லமாமே. ஐந்தாவது அறிவின் கருவிக்குலம் காது. செவியின் சிறப்பை வள்ளுவபிரானும் ***செல்வத்துளெல்லாந் தலை*** எனக் கூறுகின்றார். சத்திய வேதத்திலும்



Copyright © AMNA Trust, Chennai 

***காதுள்ளவன் கேட்கக்கடவன்*** என 13 இடங்களில் கூறியுள்ளார்கள். எனவே சீடனின் அறியாமை விலகி பஞ்ஞாட்சரத்தின் விடியலை ஆசான் மூலம் பெறுவதன் இரகசியமே ஐந்தாம் நாள் என்பதாகும்.

**(ஆதியாகமம் 1:24)** பின்பு தேவன் பூமியானது ஜீவ ஜந்துக்களாகிய நாட்டு மிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், காட்டுமிருகங்களையும், ஜாதிஜாதியாகப் பிறப்பிக்கக்கடவது என்றார் அது அப்படியே ஆயிற்று.

**(ஆதியாகமம் 1:25)** தேவன் பூமியில் அப்படி உண்டாக்கிய அது நல்லது எனக் கண்டார்.

படைத்தான் படைப்பனைத்தும் மனுவுக்காக, மனுவைப் படைத்தது தன்னை வணங்க. படைப்பினங்கள் அனைத்தையும் மனிதன் ஆளுவதற்கு காரணம் ஆறாவது அறிவே. **அறிவினை அறிந்தோர் அறிவரிவ் வாய்மை** என்பது மெய்வழி ஆண்டவர்களின் திருவாக்கு. ஒவ்வொரு ஜாதி உயிரினமும் வகைக்கேற்ப தனித்தனியே இறைவன் படைத்ததாக வேதத்தில் கூறியவற்றை பார்க்கும் போது, டார்வின் கோட்பாடு தவறு என நன்கு அறியலாம். பாவத்தில் பெரிய பாவமாகிய அறியாமையில் இருக்கும் மனிதன் முதலில் அறிய வேண்டியது ஆறாவது அறிவு என்பதை வள்ளுவபிரானும்,

**அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்**
**என்னுடைய ரேனும் இலர்.** என குறிப்பிட்டுள்ளார்.

மக்களை அறிவு வடிவாக்கும் அரும்பெருஞ்செயல் ஆதி மார்க்க னீதி அவையின் வாயிலாக முழு தீரத்துடன் னிகழ்ந்து கொண்டிருக்கிறது என அருளி குருபிரான் அவர்கள் அவையை நிறைவு செய்தார்கள்.

## 12-03-2022 ~ சனிக்கிழமை சபை
## தொகுப்பு: ஸ்ரீமதி கல்பனா விஜயகுமார்

**பூமியின் பாரந் நீர்க்க புதுப்புது நாமம் பூண்டு** என்ற பாடலுடன் பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடி போற்றி குருபிரானவர்கள் அவையைத் தொடங்கினார்கள்.

**எமபடரடிபடு கோடாயிதக் கூர்- வாக்கியம்-8 :** பூமியானது அவஸ்தையான நிலைக்கு வந்துவிட்டது என்பது புற உலகில் ஏற்படும் பூகம்பங்கள், எரிமலைகள் வெடிப்பது, கடல் கொந்தளிப்பு, நோய்களின் தாக்கம், மத இனப் போர்களை குறிப்பதல்ல. மனித உடலாகிய பூமியையும், பிறவிப் பிணியாகிய அவஸ்தையையும் குறிப்பதாகும். மனிதனுக்கு மட்டுமே இறைதேவையும் இறைபக்தியும் உண்டு.பெரியோர்கள் இறைவனைக் கண்டதாகவும், பேசியதாகவும், இறைவனுடன் இரண்டறக் கலந்ததாகவும் வேதங்களில் அருளப்பெற்றுள்ளது. சத்திய வேதத்தில் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டதாகவும், நபியே கூறுவீராக என திருக்குரானிலும் உள்ளது. இயேசுபிரான், நபிபெருமான், சிவபெருமான் என்ற அனைத்து கடவுள் நாமங்களும் குரு பெருமானையே குறிக்கிறது. *குரு வேறு சிவன் வேறு என்று எவன் விகற்பத்தைச் செய்கின்றானோ, அன்னரன் மகா சண்டாள னாகின்றான் குருவே பிரம்மா விஷ்ணு மகேஸ்வரன் ஏகமாகிய பரப்பிரம்மம்* என குருகீதையில் அருளப்பெற்றுள்ளது.

**காலந் நாட்டிய காரணப்பா- பாடல் எண்-22.**
**சீறி னின்று செங்கோல் களொன்றோடொன்று** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி லாவண்யா அவர்களின் புரிதல்-

நினைவெனும் ஆகாயத்தில் அறியாமை எனும் இருள் மேகமாக சூழ்ந்துகொள்கிறது. நம்மை ஆட்கொண்ட மெய்க் குருபிரானின்



Copyright © AMNA Trust, Chennai

சிவச்செங்கோலானது அறியாமையை நீக்கி, அழியாத பொன்னில நாட்டில் நம்மைக் குடியேற்றி வாழ வைக்கிறது என்பதை, *அழியாத் திருனாட்டில் ஆளும் திருவாக்கு* என்று ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் - அடைக்கலப்பத்து பாடல் எண்-05** **சுருள் பூரி கூழையர் சூழலில் பட்டு** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி பூர்ணிமா அவர்களின் புரிதல்-

மனித சட்டை தாங்கி இவ்வுலகிற்கு வந்து தன் கடமையை மறந்து மனதின் வசப்பட்டு அறியாமை எனும் இருளில் நிர்க்கதியாய் இருப்பவர்களுக்கு குருபிரானவர்கள் அடைக்கலம் காவற்பாடு தந்து அருளாகிய யுகாந்த நாட்டுச் செல்வத்தை வழங்கி பாதுகாக்கிறார்கள். தஞ்ஞமென்று அகதிகளாக வந்த மக்களுக்கு லோக ரட்சகத்தன்மை மாறாது பூத்து விளங்கக்கூடிய ஞான சைதன்யம் பெற்றுவந்த பெரியோர்கள் அருட் செல்வத்தை வழங்கி ஆதரிக்கிறார்கள் என்பதை உணர்த்துவதே அடைக்கலப் பத்தாகும்.

**திருஞான சம்பந்தர் அருளிய தேவாரம்- முதல் திருமுறை பாடல் எண் : 06**
**பாகமுந் தேவியை வைத்துக் கொண்டு**
என்ற பாடலுக்கு ஜீவசகோதரி உமாராணி அவர்களின் புரிதல்-

சக்தியை இடப்பாகத்தில் வைத்து பாதிமதி சூடிநின்று பழம்பொருளாக வீற்றிருப்பவர் சிவபெருமான். *குருவே சிவன் எனக் கூறினன் நந்தி* என்பது திருமூலர் வாக்கு. ஆசானின் ஆலவாயில் இருந்து வரும் னாவின் மெய்மண னாதமானது, சனியன் குடியிருக்கும் நம் புண்னாவை, வேதத்தாய் கலைவாணி குடியிருக்கும் வேத னாவாக நீட்டி அகட்டிப் பழக்கி வைக்கிறார்கள். பெரியோர்கள் பேரின்ப நிலையாகிய சிவபோகத்தை அனுபவித்து, ஓரெழுத்து மாத்திரைக்கோல் என்னும் திறவுகோலைத் தன்சொந்தப் பொருளாகப் பெற்றுவந்து நம்மையும் அந்த அனுபவநிலையைப் பெற வைப்பது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் தனிப்பெரும் கருணையே ஆகும்.

**சத்திய வேதம் – ஆதியாகமம் அதிகாரம்-01:** 26 முதல் 31 வரையிலான திருவசனங்களுக்கு ஜீவசகோதரர் விஜயகுமார் அவர்களின் புரிதல் :

தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார். நரன், மனு ,தேவனுடைய சாயலை னாதத்தின் மூலமே அறிய முடியும். ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது என்பதை ***சப்த சப்தாதிய சாயல்களும்*** என ஆதிமான்மியத்தில் அருளப்பட்டுள்ளது. குருதேவரின் னாதத்தொனி அருவுருவாக செவி வழியாக உள்ளத்தில் நுழைந்து நரனைச் சங்காரம் செய்து, மனுவாக்கி பின் தேவனாகவே ஆக்குகிறது.
தேவ வசனத்தை பெற்றுக் கொண்டவர்கள் தேவர்கள். ஆறாம் நாள் என்பது ஆறாவது அறிவைக் குறிக்கிறது. தொல்காப்பியர் ***ஆறறிவதுவே அதனுடன் மனனே*** என்று கூறுகிறார். மனிதனுக்கு மட்டும் இறைவனால் தனிச் சீதனமாகக் கொடுக்கப் பெற்றுள்ள வித்தியாதத்துவம், அமானிதம் எனும் மெய்ப்பொருள் ஆறாவது அறிவாக நம்முள் உள்ளதை அறிந்து அடைந்தவர்களே மனுஈசன் என்ற பதத்தில் ஆகிறார்கள்.

**ஆதிமான்மியம் - ஜீவ சிம்மாசனப் பருவம்**

ஆதிமான்மியத்தை ஆண்டவர்கள் பரிசுத்த தலத்திலிருந்து தவவேள்வி கொண்டு, தன் ஐயனை சந்தித்தது முதல் தங்கள் குரு பிரானைத் தொடர்ந்து வந்த வழிகள், தாங்கள் பெற்ற பெரும்பேற்று நிலைகள் அத்தனையும் தங்கள் திருக்கரத்தால் எழுதி அருளியுள்ளார்கள். **முகப்புப் பா** பாடலில் எட்டு வரியில் அகரப்பொருளின் ரகசியம் பொதியப்பெற்றுள்ளது. சாகாக்கலையின் மூலம் சாகாக்கல்வி பயின்று சாகாநிலையாகிய பிறவாமை பெற்று வாழவேண்டும் என்பதை அடினாதமாக



Copyright © AMNA Trust, Chennai

வைத்து ஆதிமான்மியம் அருளப் பெற்றுள்ளது என்ற தேவ னிலைகளை அருளமுதத்தின் மூலமே அறிய முடியும். *அருளமுதினையுண்டு பெருகிய குருகுலம்* என்ற தெய்வ வாக்கின்படி, குருகுலாதிபர்களாக விளங்கி, தெய்வ னாமத்தை உரத்த குரலில் அறிக்கை செய்வதற்குக் காரண கருவியாக்கி வைத்துள்ள பரிசுத்தஆவி தெய்வத்தின் திருவருளைப் போற்றி வணங்கி குருபிரானவர்கள் அவையை நிறைவு செய்தார்கள்.

**13-03-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்**

**வேதம்:** மனிதனை மகான்களாக்கும் மந்திர ஆராதனைகள் செயல் வடிவில் நிஜமாக்கப்பட்டு, ஆறாவது அறிவை அறிவிக்க வந்த புனித னூல்களே வேதமாகும்.

**ஆசை:** மனதை புறமுகமாக செலுத்தி உலகப் பொருள்களின் மேல் ஆசை கொண்டு சிற்றின்பத்தை நாடாமல் மனதை திருப்பி அகமுகமாக நோக்கி பேரின்பத்தை நாட ஆசைப்பட வேண்டும்.

**வினை:** **வினைப் போகமே ஒரு தேகம் கண்டாய் வினைதான் ஒழிந்தால் தினைப் போதளவும் னில்லாது கண்டாய்** என்ற பட்டினத்தார் பாடலின் படி குருபிரானின் பேரிரக்கத்தால் வினை அறுக்கும் பிரம்மவித்தை செயலைப் பழகித் தேர்ந்தவருக்கே பிறவாமை எனும் பெருவாழ்வு கிட்டுகிறது.

**முக்திக்கு வழி:**

**வான்பொருளை மிகவுமகாத் தெரிந்த வன்போல்**
**தாய் போன்ற சித்தர்களின் னூலுக் கப்பா**
**தான்படித்த இலக்கணங்னொண் டருத்தம் பண்ணி** ...

என்ற மெய்வழி னூல் பாடலுக்கிணங்க, இன்று போலி குருமார்கள் வேத நூல்களை படித்து, அதற்குரிய அர்த்தங்களை தவறாக அனுமானம் செய்து முத்தி என்பதன் மெய்ச்செயலை சிறிதும் அறியாத பேடிகளாய், தன் மனம் போன போக்கில் பிதற்றுகிறார்கள். நாம் அவர்களிடம் சிக்காமல், மெய்க் குருவின் சத்தத்திற்கு செவி கொடுப்பதே முக்திக்கு வழிவகுக்கும்.

*ஜீவசகோதரி செல்வி அவர்களின் புரிதல்:*
**சூத்திரர்:** இறை சிந்தனையற்ற மிருகங்களுக்கு இணையான ஒரு வாழ்வினை மேற் கொண்டு மீண்டும் மீண்டும் பிறவிச் சூழலில் சிக்கித் தவிப்பவர்கள் சூத்திரர்கள்.
**வைசியர்:** இறைவன் உண்டு என்பதை குருமுகமாக தன்னுள் உணரும் உபாயத்தை தேடுபவர்கள் வைசியர்கள்.
**சத்ரியன்:** மெய்ஞானத்தை அடைய வேண்டும் என்ற வைராக்கியத்துடன் புலன் ஐந்தும் வென்ற வீரனாக நிற்பவனே சத்ரியன்.
**பிராம்மணர்:** மெய்ஞான வைராக்கியத்தை கொண்டு குருபிரானின் பேரிரக்கத்தால் இத்தூலம் கடந்து னிற்கும் சூக்கும ஆரூர்சுலாம் எனும் பெருவாழ்வில் குடியேறிய சௌபாக்ய ஜெயசீலனே பிராம்மணன்.

*ஜீவசகோதரர் தாமோதரன் அவர்களின் புரிதல் :* அக்னி - தீ, வெளிச்சம், பிரகாசப் பொருள், ஒளி, ஜோதி. சுவாச கலைகளில் சூரிய, சந்திர, சுழிமுனை என்பதில் சுழிமுனை அக்னிகலையை குறிக்கின்றது. இவையனைத்தும் செயல் வடிவில் சிவன் என்னும் வாடாத தீபமாக தன்னுள் விளங்குவதை அறிந்திடல் வேண்டும். இத்தீயே வணக்கத்திற்குரிய தீபாராதனை, தீபஒளி, கார்த்திகை தீபம் என்னும் நன்மை பயக்கும் தீயாக மனித பாவங்களைச் சுட்டெரித்து பிறவா நிலையைக் கைக்கொள்ளக் கூடியதாக


Copyright © AMNA Trust, Chennai

உள்ளது. தீ என்பது ஆதிசக்தியாக மஹமூதாக நம்முள் விளங்கிக் கொண்டுள்ளதை அறிந்தடைந்தவனே தேவன் என வேதம் கூறுகிறது.

*புறச்சடங்கு சம்பிரதாயங்களில் அக்னியின் பங்குகள்:* அக்னியை சாட்சியாக வைத்து திருமணங்கள், கற்பூரச் சுடர் கொண்டு இறைவனுக்கு தீபாராதனை, திருஷ்டி மற்றும் தீட்டு கழிப்பது என்ற சம்பிரதாயங்கள் செய்யப்படுகிறது. இச்செயல்கள் அழியாத உண்மையை, அணையா தீபத்தை நம்முள் தொட்டுக்காட்டக் கூடியதாக உள்ளது.

*மனிதனும் அக்னியும்:* பஞ்சு பூதங்களில் மனிதன் நெருப்பை கண்டு மட்டுமே அஞ்சினான். கற்கால மனிதன் ஆகாயத்தில் மின்னலின் மூலம் ஏற்படும் வெளிச்சத்தைக் கண்டு பயந்தான். பின்னர் இரு பொருள்களின் உராய்வில் நெருப்பைக் கண்ட மனிதன், அதை அணையாமல் பாதுகாக்கவும், தனது வணக்கத்திற்கு உரிய பொருளாகவும் மாற்றிக் கொண்டான். ஒரு மெய்யான குருபெருமானின் பொற்பாதங்களை பணிந்த மனுவுக்கே அது நன்மை பயக்கும் தீயாக - நந்தி என்னும் காக்கும் பொருளாகிறது.

*பிரகாசப் பொருளை உணர்த்தும் வேதசாட்சிகள்:* பைபிளில் இருதய பிரகாசமாகவும், ஒளியாகவும் உள்ளேன் எனவும், குரானில் கல்புபிரகாசம் மற்றும் நூரொளி என்றும், பௌத்த மதத்தில் ஓம் பத்மனீ என்றும், இந்து மதத்தில் இருதயத்தில் ஈசன் இருப்பிடம் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. இதையே வள்ளல் பெருமான் அவர்களும், அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி என அருளியுள்ளார்கள். இதில் ஜோதி என்பது மின்னல் கிரணமாகிய ஜீவ தேகத்தின் இரகசியமாகும். திருமந்திரத்தில், விளக்கைப் பிளந்து.... விளக்குடையான் கழல் மேவலுமாமே என்றும், நம் தெய்வமவர்கள் பாத பூஜையில் சுயம்பிரகாச நித்தியானந்த பிரம்ம சொரூபம் என்றும் அருளியுள்ளார்கள்.

*ஐந்தெழுத்து மந்திரத்தில் அக்னி :* ந ம சி வ ய என்பதில் சி என்பது நடுவாக - அக்னியாக - நடராஜ தத்துவமாகவும் உள்ளதை அறிவுக்கண் கொண்டு உணர்ந்தவர்களே சன்மார்க்க நாதர். ஆதி மார்க்க நீதி அவை என்பது உலக காரியங்களை பூர்த்தி செய்வதற்காக அல்ல. சாகாக்கல்வி என்னும் மரணமிலாப் பெருவாழ்வு பெற்று தேவப் பிறப்பை அடைந்து வாழ்வதற்காக சன்மார்க்க னாதரால் ஸ்தாபிக்கப்பெற்ற அவையாகும் என்ற புரிதல்களுடன் அவை னிகழ்வுகள் இனிதே னிறைவு பெற்றது.

**17-03-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ விஜயகுமார்**

**திங்க ளென்குலத் தெய்வத்த னிப்பிரான்**
**பங்கு னிமாத மாம்பவு ரணையில்**
**பொங்கு பிரம்மோப தேசம்பு னைந்தனாள்**
**எங்கும் மெய்வழி ஏர்குல னோன்பிதே**

என்ற பிறவா நாள் பிறப்பு திருநாள் பாடலுடன் அவை நிகழ்வுகள் மலர்ந்தன. இன்னாள்- இனியும் நீ நாளில் வந்து பிறக்க கூடாது என்ற அழியாத வாழ்க்கைக்கு ஆளாகக் கூடிய பிறவா நாள் பிறப்பு திருநாள்.

**வான்மதி கொரல் வாக்கியம் – 58**: வள்ளலார் நூற்றாண்டு விழா நாள் கொண்டாடப் பெறுவது பற்றி: பெரியோர்களின் காலத்திற்குப் பின் அவர்கள் உத்தரவின் பேரில் நடத்தும் திருவிழாக்கள் செயல் இல்லாத நகலாக, பலன் தராத ஒன்றாக உள்ளது. பெரியோர்கள் அகமிய



Copyright © AMNA Trust, Chennai 



இரகசியத்தை ஆகம விதிகளாக வகுத்து கோவில்களை நிர்மாணித்தார்கள். சத்ய தர்ம சாலையில் ஒளியை வைத்து, ஏழு திரைகள் போட்டு முன்னும் பின்னுமாக சிற்சபை, பொற்சபை வைத்துள்ளார்கள். தீபமேற்ற ஒருவர் வேண்டும். ஏற்றுபவர் பெரிதா? ஏற்றியது பெரிதா என்றால் ஏற்றுபவரே பெரியவர்.

**திரு** விழாமல் இருக்கும் செயலை அறிந்தால்தான் அறிவில் மாற்றம் நிகழும்.
கேட்டு திருந்தி உடனெழும் திறத்தில் திகழ்வார் ஒருவரேனும் தேறிலர் கடை விரித்தோம் கொள்வாரில்லை கட்டிவிட்டோம் என்றே வள்ளல் பெருமானும் கூறியுள்ளார்கள்.

**காலந் நாட்டிய காரணப்பா- பாடல் எண்-23.**
**கால மக்கள் முகங்கள் கருகிடும் ...** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி லாவண்யா அவர்களின் புரிதல்: காலத்தினுள் அகப்படும் மக்களின் முகம் கருகும், தன்னையறிய கொடுக்கப் பெற்ற வயது வாழ்நாள் வீணாவது சற்குரு பிரானின் திருப் பார்வைக்கு ஆளாகும் போதுதான் தெரியவரும். அவர்களின் நாதமே கலியனாகிய எமனை வென்று நம்மை காக்கின்றது. **கு** என்னும் இருளில் இருந்து மாறி கொண்ட தேவகுமாரன் நம்மையும் அவ்வாறு ஆக்குகிறார்.
**குருபிரான் வர்ஷிப்பு:** திருவிழா, சடங்குகள், அசலை நினைவூட்ட ஏற்படுத்தப் பெற்ற நகல். **கு**-விலிருந்து மாறிக்கொண்ட தேவ குமாரனின் தொனியானது **கு**-விலிருந்து மாறி கொண்டவர்களுக்கு கேட்கும். **அறிவு வடிவென்று அறியாத என்னை அறிவு வடிவென்று அருள்செய்தான் நந்தி** என்ற திருமந்திர பாடலின் படி, அவர்கள் அறிவு வடிவு என்பதை, நாம் அறிவு வடிவமாகும் போது தான் அறியலாம்.

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் - ஆசைப்பத்து பாடல் எண் 6:**
**அழிப்புண்ணகத்து புறத்தோல் மூடி...** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி பூர்ணிமா அவர்களின் புரிதல்: புண்கள் நிறைந்த தோல் மூடிய உடல் அழியக்கூடியது. இதனுள் **நான்** என்ற பொருள் புளியம்பழமும் ஓடும் போன்று ஒட்டாமல் இருக்கிறது. இதனை ஐம்மணிப்பொதிகையில் **ஒட்டியொட்டா தேயுடம்புள் ஓங்கும்பஞ்ஞாட் சரமே** என அருளியுள்ளார்கள். இப்பரந்த உலகில் மெய்ஞானமானது உலக ஒட்டாகிய பற்றை விடும்போது குருவின் அருளால் அவர்கள் திருப்பாதம் பணிவதால் கிடைக்கும்.

**குருபிரான் வர்ஷிப்பு: நான்** இத்தேகம் என அபிமானித்துக் கொண்டிருப்பதை துறப்பது துறவறம். நம்மிடத்தில் உள்ள நான் என்பது ஆணவமாகும். அந்த நான் குருவினிடத்தில் சரணாகதி அடைந்து, அறியாமை அகன்று ஆணவமற்ற செயலைக் கைக் கொள்ளும்போது நாம் ஆகின்றது. இதுவே துவைதத்திலிருந்து அத்வைதம் ஆகும் ரகசியம். நித்திய ஜீவனாகிய நான் எனும் பஞ்ஞாட்சரத்தை அறிவதே தன்னையறிதல். அந்த **நான்** என்பதை பவரோக நிவாரணியாக வரும் ஆசானின் னாதம் மூலமே அறிய முடியும்.

**ஸ்ரீ திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம் திருநள்ளாறும் திருஆலவாயும் பாடல் - 7**
**கோவண ஆடையும் நீரும்...** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி உமாராணி அவர்களின் புரிதல்: வேதத்தைப் பழகிய பெருமானே கோவண ஆடை தரித்தவராகிறார். ஆசானின் னாதமே பஞ்ஞாட்சரமாக உள்ளது. **கோ** வணங்கும்படி **கோ** வணமாகி என்பது ஒரெழுத்து மாத்திரை கோலால் அருளியதை குறிப்பதாகும். ஆசானின் வாய்மைக்குள் கூடிக்கொண்டால் கலியனாகிய காலனிடம் இருந்து நாம் தப்பித்துக் கொள்ளலாம்.


Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் வர்ஷிப்பு:** கோவணம் என்பது மாறாமணம் வீசக்கூடிய ஒன்று. **ஓதிடென்றுரை கேட்டிங் ஙோதிய ஒலிக்கு மெய்ம்மண ஞானமே** என்றும், **சொன்னவர் ஆதி அருட்பெருஞ்ஜோதி** என்றும் உள்ளது. வேதத்தை சாட்சி வைத்து பேசுவதையே இந்த ஆதி மார்க்க னீதி அவை செயல்படுத்துகிறது.

**சத்திய வேதம் – ஆதியாகமம் அதிகாரம்-02:** 01 முதல் 05 வரையிலான திருவசனங்களுக்கு ஜீவசகோதரர் விஜயகுமார் அவர்களின் புரிதல் :

இவ்விதமாக சகலவித சேனைகளும் உண்டாக்கப்பட்டுத் தீர்ந்தன. தான் செய்த கிரியைகளை எல்லாம் நிறைவேற்றி **ஏழாம்** நாளில் ஓய்ந்திருந்தார். சர்வ சம்பத்தும் உள்ள நினைவெனும் ஆகாயத்தில் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டன. ஆறறிவு கொண்ட மனிதன் மெய் ஆசானின் தயவால் மறுபிறப்பு எடுப்பது ஏழாம் நாள். ஓய்வு நாள் என்பது மனம் அற்ற பரிசுத்த நிலையாகிய அறிவின் நிலை. மெய் ஆசானின் அமிர்த வர்ஷிப்பாகிய கொண்டல் வாய்மையே சொல்லேர் உழவனாக இருந்து நரனைப் பண்படுத்துகிறது.
**குருபிரான் வர்ஷிப்பு:** என்றென்றும் மாறாத வாக்குகளை உடையதால் சத்தியவேதமாகின்றது. இதுவே வாக்குதத்தம். தத்தம் பண்ணுவது என்றால் குருபிரான் கங்கணம் பூண்டு கொடையாக அருள்வது. மெய்வழி ஏறித் துலங்கிடவே தங்களின் னாதமருந்தின் மூலம் பிறவாமை என்ற நிலையில் ஆக்கி வைக்கவே அவதாரம் செய்கிறார்கள்.

**சிவ வழிபாடு:** வாசிதான் சிவா. வாசியோக வழிபாட்டை அறிந்தவரே சிவ வழிபாட்டில் இருக்க முடியும். மூச்சை இழுத்துவிடுவது வாசியோகம் அல்ல. உலகில் உள்ள கோயில்களில் நடக்கும் சடங்குகள் எல்லாம் பிறவா நாள் பிறப்பு என்ற ஒன்றை கைக்கொள்ளவேயாகும். ஆறாவது அறிவை அறிந்து இத்தேகம் உள்ள போதே இதை கைக்கொள்வது உன்னதம். *இந்த உடலை நான் என நினைப்பவன் நரன். அவனின் அகம் நரகம்.* இத்தேகத்திலிருக்கும் சரியை, கிரியை, யோகத்தை அறிந்து அதன் மூலம் இந்த உடலை விட்டு இன்னொரு உடலில் பாய்ந்து, அதற்கு அடையாளமாக மூச்சு ஓடாத ரகசியத்தை கைக்கொள்வது சொர்க்க வாழ்க்கை, பரமபத வாழ்க்கை. செத்த பின்பு மானிட தேகம் கிடைக்கும் என்ற நிரூபனைக்கு வராத அறியாமையை பொய்க்குருமார்கள் விதைக்கிறார்கள். தெளிந்த அறிவோடு தெளிந்த நோக்கத்தோடு நாம் வாழவே இந்த ஆதி மார்க்க னீதி அவை உள்ளது.

வேதங்களில் சொல்லப்பெற்ற உட்பொருள் ஆதார உயிர் பதிப்பு இன்னதென்று தெரிந்தால் பிற மதம் என்ற பேதம் கிடையாது. இந்த அவையானது மனிதனுக்குள்ளே இருக்கும் வேற்றுமைகளைக் களைந்து, உண்மைப் பொருள் இன்னதென்று தொட்டுக்காட்டி அந்த உண்மைப் பொருளுக்கான ஒருவனாக சர்வ வேதங்களையும் அறிந்துகொள்ளும் மகனாக ஆக்கி வைக்கும் செயலை அடினாதமாக கொண்டுள்ளது. ஒரு தனிமனிதன் தன்னை அறியும் போது சர்வ வேதங்களின் இருப்பிடமாக இருக்கக்கூடிய உயிரின் ரகசியத்தை அறியும் போது, அவன் பெயர் துவிஜன், அமரன். இது வாழும் போதே அடையும் நிலையாக உள்ளது, செத்த பின்பு அல்ல, என்று அருளி குருபிரான் அவர்கள் அவையை நிறைவு செய்தார்கள்.

**19-03-2022 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**எமபடரடிபடு கோடாயிதக் கூர்- வாக்கியம் 87:** வைரம், வைடூரியம் விற்கும் வியாபாரி, மற்றும் கருவாடு விற்கும் வியாபாரி, இவர்களின் குணமும், வரவு செலவும் வெவ்வேறாயிருப்பது போல, பொய்யிலே புழங்குபவர்களின் கீழ் எண்ணமும், அழியா மெய்யுடம்பில் குடியேறிய ஆசானின் பரிசுத்த மேலெண்ணமும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசமாக இருக்கும் என்பதை, ஆண்டவர்கள் மெய்ன்னிலைப் போதத்தில்,


Copyright © AMNA Trust, Chennai

**மெய்வழிக் குருமார் சொல்மே னோக்கமும்
பொய்வழிக் குரு போதங்கீழ் னோக்கமும்
பொய்யும் மெய்யும் பிரித்துனக் கோதிடும்
மெய்ன்னிலை போதமென்ற விதாகுமே** என அருளியுள்ளார்கள்.

**காலந்நாட்டிய காரணப்பா - பாடல் எண்: 24 னீலகால மதாக னிலந்தனில் …** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி லாவண்யா அவர்களின் புரிதல்: ஆதியிலே உண்டான சைவ மதம் முதல் இறுதியாக வந்த இஸ்லாம் வரை, சர்வ மதங்களின் செயல் கோட்பாடுகள் அனைத்தும் அகம் பிரம்மாஸ்மி என்பதை உணர்த்தவே வந்தன. மெய்குருபிரானின் ஒரு மொழி கீதைக்குள் தான் மதங்களின் உயிர்ப்பானது உள்ளது. நம் ஆண்டவர்கள், **தன் தன் மதத்தில் தவறாதிருத்தி** என்ற செயலுக்குள் மக்களை இறுத்தி வைத்து அவரவரின் மதத்திற்கு உரியவர்களாக வாழவைத்தார்கள். இன்று அதே மெய்ச்செயல் ஆதி மார்க்க னீதி அவையில் முழு தீரத்துடன் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பது சத்தியமே.

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் - அடைக்கலப் பத்து பாடல் எண்: 6 மாழை மைப்பாவிய கண்ணியர்…** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி பூர்ணிமா அவர்களின் புரிதல்:
ஆழி கடல் எனும் பிறவிப்பெருங்கடலுக்குள் சிக்கியிருந்த நம்மை மீட்க குருபிரான் பருமரக்கலனாக வருகிறார். அவர்களின் னாதத்திற்குள் நாம் அடக்கமாக வேண்டும் என்பதை உணர்த்துவதே அடைக்கலப் பத்து. இச்செயலை தெய்வமவர்கள் மெய்ப்பொருள் அடைக்கலப்பா பாடலில்,

**வீடகம் சேர்ந்நிட வேண்டுமையா
வெற்றி விராட்பதியின் பிரம்மமே** என பாடியுள்ளார்கள்.

**திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம் பாடல் எண்: 8 இலங்கை இராவணன் வெற்பெடுத்த …** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி உமாராணி அவர்களின் புரிதல்: பத்து தலை இராவணன் என்பது, ஐம்புலன்களைக் கொண்டு - இரண்டு (நன்மை, தீமை) எண்ணங்களாக வாழ்பவரைக் குறிப்பது. நல்வினையும் தீவினையும் அறுக்கவேண்டும் என்ற பெரியோர் வாக்கின்படி அவதார மூர்த்திகள் வேலாயுதத்தை கொண்டு நம் பத்து தலைகளையும் வெட்டி வீழ்த்திய பிறகே அறியாமை அடியோடு அகன்று நாம் அறிவு வடிவாக்கப் பெறுகிறோம். ஆசானின் ஆலவாயின்கண் அமர்ந்தவர்க்கே இம்மெய்ச்செயல் கைவரவாக்கப் பெறுகிறது.

**சத்திய வேதம் - ஆதியாகமம் அதிகாரம்: 2 (6 முதல் 10 வரையிலான) திருவசனங்களுக்கு ஜீவசகோதரர் விஜயகுமார் அவர்களின் புரிதல்:**

**திருவசனம்–6:** மூடுபனி என்பது பாவத்தை குறிப்பது. மூச்சு துண்டாடப்பட்டு னஷ்மடைவது பாவம் என்பது தெய்வத்திருவாக்கு.

**திருவசனம்–7:** கர்த்தராகிய குருபிரான் பரிசுத்தஆவி மூலம் ஜீவசுவாசத்தை ஊதி, புதிய ஜீவனை தந்து நம்மை உயிர்ப்பிக்கும் செயலே மறுபிறப்பு.

**திருவசனம்–8:** ஏதேன் தோட்டம் என்பது கிழக்கு திசையில் இருப்பது. (முகம் கிழக்கு) அங்கிருந்துதான் இறைவன் மனிதனை தன் சாயலாக படைத்தான்.

**திருவசனம்–9:** ஜீவவிருட்சம், கற்பகத்தரு, கலிமாமரம், விஸ்வச்சுலா விருட்சம் என அனந்நம் திருநாமங்களுடைய தெய்வீகமாமரத்தின் இரகசியமானது இத்திருவாக்கியத்தில் அருளப் பெற்றுள்ளது.

**திருவசனம்–10:** ஜீவனதியாக வரும் குருபிரானின் திருஅமுத ஊற்றானது நம் ஜீவனை காண வைக்கும் வல்லபமுடையதாகும்.



Copyright © AMNA Trust, Chennai

**ஆதிமான்மியம்:** ஆதியின் சிறப்பை மெய்வழி னூலில், **ஆதி அனாதியென்றும் ஜோதி யென்றும் ...** என ஆண்டவர்கள் பலனிலைகளாக அருளிச் செய்துள்ளார்கள். ஆதத்தின் சூரத்தைக் கொண்டு வெளியானதே ஆதி முதல்மறை.

**பருவங்கள்:** பருவங்கள் என்பது வளர்வதாகும். நாம் ஒவ்வொரு படி னிலைகளாக மெய்யின் மேனிலையில் ஏறுவதைக் குறிப்பதாகும். னீதியைத் தலையாக கொண்டு வந்து ஆதி மார்க்க னீதி அவையிலுள்ள அங்ஙத்தினர்களை ஒவ்வொரு பருவங்களாக வளர்த்து வரும் தெய்வத்தந்தையாகிய நம் குருபிரானின் பொற்பாதம் போற்றி பணிவோம்.

**20-03-2022 ~ ஞாயிற்றுக்கிழமை சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி**

*ஜீவசகோதரர் கௌதம் அவர்களின் புரிதல்:*

**திவ்ய திருவடி:** திவ்யம் என்ற அழகு பொருந்திய திருவடி, யாரும் செதுக்க முடியாத பொருளாக சுயம்புலிங்கமாக உள்ளது. இதையே

**வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம்
இறையாத தீர்த்தம் யார்க்கும் எட்டாத புட்பம்
இனி முடித்து கட்டாத லிங்கம் கருதாத நெஞ்சம்
கருத்தினில் முட்டாத பூஜையன்றோ குருநாதன் மொழிந்ததுவே**

என பட்டினத்தார் அருளியுள்ளார்கள்.

**கருமை:**

**அரியும் அல்ல அயனும் அல்ல அப்புறத்தில் அப்புறம்
கருமை செம்மை வெண்மையைக் கடந்து நின்ற காரணம்
பெரியதல்ல சிறியதல்ல பற்றுமின்கள் பற்றுமின்கள்
துரியமும் கடந்து நின்ற தூர தூர தூரமே**

என்ற சிவவாக்கியர் அவர்களின் பாடலில் மெய்ப்பொருள் விஷ்ணுவுமல்ல, பிரம்மாவும் அல்ல. விஷ்ணுவாலும், பிரம்மாவாலும் அடிமுடி காண முடியாமல் அப்பாலுக்கப்பாலாய் நிற்கின்ற ஈசனை, அவன் அதுவாகி அப்புறத்தில் அப்புறமாய் கருமை செம்மை வெண்மை நிறங்களைக் கடந்து நின்ற சோதியாகி காரணப்பொருளாய் அனைவருக்குள்ளே இருக்கிறது. அச்சிவனே சீவனாக கருமையிலும் சிகப்பு வெள்ளை அணுக்களிலும் கலந்து நின்று உயிரும் உடலும் இயங்க காரணமாக இருக்கின்ற திருவடியாக இருப்பதே யாவிலும் நடுவாய் இருப்பது.

**மாயை:** *கோடாயிதக் கூர் வாக்கியம் எண்: 241 ஞானம் அடையத் தடையாக இருப்பது உன் மாயை. அது உன் அறிவிலேயே கலந்து தடை செய்கிறது. அம் மாயையை வெல்வதற்கு ஒரே உபாயம், உன்னை ஆண்டுகொண்ட குருபிரானவர்களின் திருவாக்கில் னீ னம்பிக்கை வைத்து னடப்பதுதான்.*
மாயை என்பது மனமாக இருக்கிறது, மனதை அறிவாக மாற்றி பேரின்பத்தை அனுபவிக்கக் கூடிய பிரம்மவித்தை செயலை குருகொண்டல் எதிர் முகத்திலிருந்து பழக்கி வைக்கின்றார்கள்.

**ஆலவாய்:**

**சுவைஒளி ஊறுஓசை நாற்றமென ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு (குறள்-27)**



Copyright © AMNA Trust, Chennai



*திரு. சாலை ரவி அப்பா அவர்கள்*
*நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை*

உலகின் ரகசியத்தை எல்லாம் அறிந்து பிரம்மமாக வருகின்ற குரு பிரானுக்கே ஆலவாய் எனப் பெயர்.

**திருவாவினன் குடி (பழனி):** ஜீவகுகை தோறும் வீற்றிருக்கும் மாசுமறுவிலாக் குகன் இருக்கும் தன் ஆலயத்திற்குள் கூட்டிக்கொண்டு போய் அங்கு குடியேற்றி வைக்கின்ற ஒரு தெய்வ ஆசானின் னோக்கிற்கு இணங்கி நடப்பதே புண்ணியம்.

**தொடக்கம்:** ஒவ்வொருவரிடத்திலும் ஜீவன் குடியேறியதன் அடையாளமாக சத்தமும் மூச்சும் உண்டாகிறது. இதையே சத்திய வேதத்தில் **ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. (யோவான் 1)** என அருளியுள்ளார்கள்.

**காலதோஷம்:** காலத்திற்குள் வாழும் போது சனீஸ்வரனாகவும் காலம் கடந்து நிற்கும் போது ஈஸ்வரனாகவும் உள்ள செயலை அறியும் போது இரண்டும் ஒன்றாக இருப்பதை அறியலாம். ஒவ்வொருவரும் வாழும் போதே காலமற்ற இடத்தில் வாழப் பழக வேண்டும். இதையே திருப்புகழ் அம்ருதம் பாகத்தில் –

**கால னிடத்தணுகாதே**
**காசி னியிற்பிறவாத**
**சீல அகத்தியஞான**
**தேன முதைத் தருவாயே**
**மால யனுக் கரியோனே**
**மாத வரைப் பிரியானே**
**நாலு மறைப்பொருளானே**
**நாக கிரிப் பெருமாளே**

என அருளப்பெற்றுள்ளது. காலன் என்னை அணுகாமலும், பூமியில் இனிப் பிறவாமலும், சீலரான அகத்தியருக்கு உபதேசித்த ஞான மொழியை அடியேனுக்கும் தந்தருளுக. திருமாலும், பிரம்மனும் காண முடியாத, 'மா' தவசிகளை விட்டுப் பிரிக்க முடியாத நான்கு வேதங்களுக்கும் பொருளாய், அனைத்திலும் வீற்றிருக்கும் பெருமானே எங்கள் தலை செழிக்க ஞான உபதேசத்தைத் தந்து அருள வேண்டுகின்றேன்.

**கண்திருஷ்டி: கல்லடி பட்டாலும் கண்ணடி படக்கூடாது** என்பது பழமொழி. திருஷ்டி என்பது பார்வை. இயல்பாகப் பார்க்கப்படுகின்ற பார்வை எந்தவிதக் கெடுதலையும் ஏற்படுத்தாது. அதே பார்வை தீய எண்ணம் கொண்டு பார்க்கும் போது தீமையை விளைவிக்கிறது. இதனைப் போக்க ஆதி காலத்திலிருந்து மனுவின் இன்னல்களை தீர்க்க **குரு பார்க்க கோடி புண்ணியம்** என்பார்கள். என்றென்றும் வாழையடி வாழையாக வருகின்ற ஞான மகத்துக்களிடம் முழு சரணாகதி அடையும் போது அவர்களுடைய பார்வையில் அனைத்து திருஷ்டிகளும் நிவர்த்திக்கப்படுகின்றன. **ஆ-மனு என்றதோர் அடிமுடி நடுவனை** என்ற பாடல் பாடப்பெற்று குரு கொண்டலின் ஆசீர்பாதத்துடன் அவை இனிதே நிறைவு பெற்றது.


Copyright © AMNA Trust, Chennai

**20-03-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. பானுமதி குமரேசன்**

**அந்த னாளில் அணைத்தெனை யாட்கொண்டு**
**விந்தை வீசும்வி ரிகதிர் ஏற்றியே**
**கந்தம் வீசுங்ந லாபமெ னவந்த**
**தந்தை தாயேத னிகையென் னாதரே**

என்ற குரு ஸ்தோத்திரப் பாடலுடன் அவை தொடங்கியது.

*ஜீவசகோதரர் மகேஷ் அவர்களின் புரிதல்:* மெய்வழியில் அறிமுகமாகி வெகுகாலம் ஆனாலும் மெய்ப்பொருள் இன்னதென்று அறியும் பக்குவமும், மெய்யான ஞான வழி இதுவே என்பதையும் ஒரு மெய்க் குருபிரானை சந்தித்த பிறகே அறிய முடியும். **னற்று ணைற்றாள் சித்தரிக்கு ரத்திபெற்ற முத்திரைக்கூ டஸ்தரட்ண ரேறே மேடியா...** என்ற பாடலைத் தொடர்ந்து, நம் தலையை கட்டிய தலையாக சாகாத்தலை இருக்கிறது. தாய் என்பவள் அதற்கு ஒரு கருவியாக இருக்கிறாள். இவ்வுலகிற்கு வந்த பின் சூட்டப் பெறும் தெய்வீக நாமம் இந்த தூலத்திற்கு அல்ல, ஜுவனுக்குரிய னாமம் என்பதை ஓர் ஆசானின் துணை கொண்டே அறிய முடியும். தன்னுடைய னாமத்தை நேருக்கு நேர் சந்திக்கும் செயலைக் கற்றுத் தேர்வதே மனுவின் தலையாய கடமையாகும்.

**புனற்றுறைக் கோயில்:** புனற்றுறைக் கோயிலாக விளங்கும் மனம் ஜலஅம்சமாக, சார்ந்ததின் வண்ணமாக, போகாப்புனலாக, ஆத்ம மர்ம ஜலக்கடலாக இருக்கும். அதன்மேல் வீற்றிருப்பதே சாகாத்தலை. மனம் ஏழு வகை னிலைகளாக - ஹயாத்து, இராதத்து, குதரத்து, ஜம்ஹுு, இல்மு, பஜர், கலாமாக இருக்கிறது. ஒருவன் மெய்க்குரு பிரானின் உதவி கொண்டு மெய்யான வணக்கத்தின் மூலமாகவே இறைவனை சந்திக்க முடியும்.

**யதார்த்தம்:** யதார்த்தமானது தேவகுருவிடம்தான் உள்ளது. யதார்த்த பரமாத்மா யாரென அறிந்து கொண்டு, அந்த பரமாத்மாவின் செயலை இன்னதென்று அறிவிப்பதே யதார்த்தம். துரியம் கடந்த துரியாதீதம் தான் சுத்தயதார்த்தம் என்பதை

**துரியனி லையிலுரைப்ப - தரிதப்பப்பா**
**துரியாதீதப் பிரணவ சுத்தெதார்த்தம்**

என பூரணப்புதையல் பாடல் மூலம் குறிப்பிடுகிறார்கள். இதனை **மான்மியம்-101ம்** பக்கத்தில், 13 நிலைகளாக ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். வேதநூல்களில் பொதிந்துள்ள பொக்கிஷங்ஙள். ஓர் பெரியோரின் இரக்கத்தால் அகமியமாகத் தொட்டு காண்பித்த பிறகுதான் புரியுமேயன்றி, தன்னறிவு கொண்டு ஒரு போதும் புரிந்து கொள்ள முடியாது. **வான்மதிக் கொரல் வாக்கியம் 211:** *ஒரு மனிதனின் இறுதித் தருவாயில் அவனுடைய கடைசி மூச்சு னின்றதும், இறந்து போய் விட்டான் என்று எல்லோரும் அழுகிறார்கள் ...... அருமையான சொத்தாகிய தன் மூச்சை வீண்பாட்டில் செலவு செய்து, அழிந்து போகும் மனிதன், என்ன மதியற்றவன் என்று பார்.*

வணக்கத்தின் உச்சம் மூச்சானது வெளியே ஓடாமல் உள்ளடங்கி இருப்பதாகும்.

*ஜீவசகோதரி வைஷ்ணவி அவர்களின் புரிதல்:*

**பற்றிய பற்றாய் பரந்துலகெங்கும்**
**பற்றியும் பற்றிலா தோங்கிப் ...** என்ற குருமணிமாலை பாடலின் புரிதல்

**பற்று:** பற்று என்பது ஆசை, ஈர்ப்பு, ஈடுபாடு, பிடிப்பு என பொருள்படும். உலகில் மனிதனுக்கு பலவகையான பற்று உண்டு. அதே போல் மற்ற ஜீவராசிகளுக்கும் பற்று இருந்தாலும் அவை குறுகிய காலத்தில் அகன்று விடுவதாகவே இருக்கிறது. மற்ற ஜீவராசிகள் போல் இணை, இரை, இருப்பிடம் என இல்லாமல் தன்னை சிவமாக்கக்கூடிய பற்று ஒன்று மனிதனிடத்தில் உண்டு. அதனை ஒருவன் பற்ற வேண்டும். பற்றியும்



Copyright © AMNA Trust, Chennai

பற்றாமல் இந்த உடலுக்குள் இருக்கும் உயிரை ஓர் ஆசானின் துணையோடு இத்தூலவாழ்வை துச்சமென எண்ணி, அவரவர் ஜீவன் மீது பற்று வைத்து ஜீவவாழ்வில் திடம்பட ஏறினால் அதுவே நம்மை சிவமாக்கி வைக்கும். ஆண்டவர்கள் மந்திர ஸ்திரங்களாகக் கூறியுள்ள 1. முறையான வணக்கம் 2. மாசற்ற இரக்கம் 3. வருங்கால தீர்க்கம் இம்மூன்றையும் உறுதியாக கைக்கொண்டால் னித்திய வாழ்வான ஒளிமயமான எதிர்காலத்தை நாம் எல்லோரும் நிச்சயமாக அனுபவிக்கலாம்.

*ஜீவசகோதரி புன்னகை அவர்களின் புரிதல்:* **வாழ்வனைத்தும் தன்நெனது குலமுழுதும் ...** என்ற பாடலுக்கான *புரிதல்.* நாம் வாழ்வது வாழ்வா அல்லது சாவா என்பதற்கு விடையாக ஆண்டவர்கள் -

**எமபயத்தை தாண்டாத எவ்வாழ்வும் வாழ்வல்ல**
**எமபயத்தை கடந்திடிலோ எவ்வாழ்வும் வாழ்வாகும்**

என அருளியுள்ளார்கள். இறப்பை நோக்கி பயணித்து கொண்டிருக்கும் நம் உயிரை குருவானவர் காத்து இரட்சித்து பிறவானிலைக்கு ஆக்கி மரணமிலாப் பெருவாழ்வு அடையச் செய்கிறார்கள். மனதுடன் வாழ்வது மரணம், மனதற்று அறிவுடன் வாழ்வதே மரணமிலாப் பெருவாழ்வாகும். உலகியலில் எல்லோருக்கும் குலவழிபாடு ஒன்று உண்டு. அவ்வாறு நம் வேதத்திலும் தேள் கொடுக்காம் குலதெய்வம், பிள்ளையார்சுழி, னற்றாள், சிவனடிபாதம், ஆதம்பாதம் எனக் கூறியுள்ளார்கள். மெய்ம்மணஞானத்தில், **ஆதி யந்நமும் தான்கடந்நெனை ஆண்ட என்குல னாயகம்** என அருளப்பெற்றுள்ளது. எது நம்மை ஆண்டு கொண்டிருக்கிறதோ அதுவே குலதெய்வமாகும். அதை ஒருவன் வழிபடுவதற்கு, ஒரு மெய் ஆசான் துணை கொண்டு இதயத்தை திறந்து அங்கிருக்கும் இறைபொருளுடன் இரண்டறக் கலக்க முடியும். அதுவே மெய்வழியாகும்.

**அன்பு: எமபடரடிபடு கோடாயிதக்கூர் திருவாக்கியம் – 228** நீ அழியாத அந்த னித்திய தேகத்தை அடைய வேண்டுமென்று உன் மீது ஆசான் வைக்கும் அன்பு ஒன்றே சிவமாக்கி வைக்கும் நிஜமான அன்பு.

**அறம்: எமபடரடிபடு கோடாயிதக்கூர் திருவாக்கியம் – 241** நம் மனதை அலைபாயாமல் பாதுகாக்கும் செயலாகிய அறம் என்பதை ஆசான் பழக்கி வைத்த பின்புதான் நம் மனம் லயமாகிறது, கலையாகிறது, காட்சியாகிறது.

*ஜீவசகோதரர் கவனமணி அவர்களின் புரிதல்:* **பாய்மன வீட்டிற் பேய்குடி யிருக்கும் பேரறி வடிமையங் நாகும்.** நம் மனமானது ஓயாமல் அலை பாய்ந்து கொண்டும், ஓர் நிலையில் இல்லாமல் தாவிக்கொண்டும், அசைந்து கொண்டும் இருப்பதால் அது பேய் எனப்படுகிறது. நம் அறிவை, மனதுடன் கூடிய ஐம்புலன்களும் ஆட்சி செய்வதால் பேரறிவானது அடிமையாகிறது. எப்படி வண்டானது பூவிலிருந்து தேனெடுக்கும்போது ஒரே எண்ணமாக இருக்குமோ அதுபோல் நாம் ஒரே எண்ணமாக இருந்தால் மூச்சு லயமாகும். இதைத்தான் வேதத்தில் **மனோலயமாகிய மூச்சுலயம்** என ஆண்டவர்கள் கூறுகிறார்கள். அவ்வாறு ஆசானின் துணை கொண்டு நம்மை மனமானது ஆட்சி செய்யாமல், அறிவானது ஆட்சி செய்தால் கைலாய வீட்டில் குடியேறலாம் என்ற புரிதலுடன் அவை நிறைவேறியது.

**24-03-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்**

**சத்திய பரிசுத்த வான்மதிக் கொரல், வாக்கியம் எண்-59**
*ஜீவசகோதரர் கௌதம் அவர்களின் புரிதல்:* சாலை ஆண்டவர்கள் சர்வ மதங்களில் உள்ள சடங்குகள் அத்தனையும் நகலாக முன்னோர்கள் ஏற்படுத்திய அசலுக்கான காரண காரியமும் நோக்கமும் விளங்க எடுத்துரைத்து, நித்திய மெய்வழி எனும் மேட்டில் பல்லாயிரக்கணக்கான



Copyright © AMNA Trust, Chennai 

மக்களைப் பிரட்டி பிறப்பித்து னரனாகக் கிடந்தவனை மனுவாக்கி பின் தேவனாக மாற்றி வாழவைத்தது போல் இன்று நம்மையும் முறையான வணக்கம், மாசற்ற இரக்கம், வருங்கால தீர்க்கம் என்ற மந்திர ஸ்திரத்தை நம் மனந்தனில் அழுத்தி நமது சற்குருபிரான் இங்கே செயலாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

**காலந்நாட்டிய காரணப்பா பாடல் எண்: 25**
**எத்தி சையுமி யங்கும்ம தமெலாம்...** என்ற பாடலுக்கு *ஜீவசகோதரி விஜயசித்ரா அவர்களின் புரிதல்:* அறுவகை சமயத்தோர்க்கும் அறுமுக தெய்வமாகி.... அறுவகை சமயங்கள் மற்றும் இஸ்லாம், ஜைனம், சீக்கியம் போன்ற பல மதங்களும் வந்ததின் நோக்கம் மனிதன் தன் இருதயத்தில் இறைவனை கண்டு வழிபட்டு முக்தி அடையவே. இதனை அறியாதவர்களே மததூஷனை செய்கிறார்கள். சர்வ மதங்களின் அடி நாதமாக விளங்கும் **மறலி கை தீண்டாமை** என்பதையே **மறலி கை தீண்டா சாலை ஆண்டவர்கள் மெய்மதம்** என ஆண்டவர்கள் எடுத்து வைத்துள்ளார்கள். நம் தேகம் இறைவனுடைய ஆலயம். ஒரு மெய்ஞானியின் உதவியின்றி, புறச்சடங்குகளால் அதில் இறைவனை நாம் காணமுடியாது. பெரியோர்கள் தூலத்துடன் உள்ள போதே அவர்களை அண்டி தன் தன் மதத்தில் தவறாது ஆகி, அவரவரும் தன் ஜீவ குகையில் வீற்றிருக்கும் மறுவிலா குகனைப் போற்றி வாழ்வோமாக.

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் - ஆசைப்பத்து பாடல் எண்: 6 எய்த்தேன் நாயேன் இனியிங்கிருக்க...** என்ற பாடலுக்கு *ஜீவசகோதரி பூர்ணிமா அவர்களின் புரிதல்:* இந்த தூல உடல் நான் அல்ல என்றும் சூக்கும உடலே நான் எனவும் அறிந்து கொண்டேன். அறிவுஅறி பாடத்தில் **தூல வாழ்க்கையைத் துச்சமாய் எண்ணிச் சீவ வாழ்க்கையைத் திடம்படச் செய்தல்** என்றும் அமுத கலைக்ஞான போதம் (முதற் காண்டம்) - **தூலத்துக்குள் ளேயிருந்ந சூக்குமம்கை காட்டி** என்றும் ஆண்டவர்கள் கூறியுள்ளார்கள். வள்ளுவபிரானும்

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது**

என கூறியுள்ளார். **இல்** எனும் வீடாகிய அழியாத சூக்கும வீட்டில் குடியேறி வாழக்கூடிய அறிவை அறிய வைத்தாய் எனவும், வானோர் அறிய முடியாத அடி-முடி-நடு என்பதை ஆசானின் பூம் பாதத்தின் மூலம் அன்பர்கள் அறிந்து கொள்ளலாம் எனவும், முத்திக்கு வித்தான முதல்வனின் னாதத்தால் அம்மணியான தாய்மடியில் சேர்ந்து இருக்க ஆசைப்பட்டேன் இறைவா என்பதும் இப்பாடலின் புரிதலாக உள்ளது.

**திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம் - திருநள்ளாறும் திருஆலவாயும் பாடல் எண்:09**
**பணியுடை மாலும் மலரினோனும் பன்றியும்...** என்ற பாடலுக்கு *ஜீவசகோதரி உமாராணி அவர்களின் புரிதல்:* பன்றியாகவும், அன்னப் பறவையாகவும் மாறி சிவபெருமானின் அடியையும் முடியையும் காண முற்பட்டு தோல்வி அடைந்தனர் விஷ்ணுவும் பிரம்மாவும். சித்தவேதத்தில் பிரம்மா அகங்காரம் எனவும், விஷ்ணு மனம் எனவும் கூறப்பட்டுள்ளது. வள்ளல்பிரான் விஷ்ணு பசு எனவும் பிரம்மா பாசம் எனவும் கூறுகிறார்கள். அங்காரத்திற்கும், மனதிற்கும் நடுனாயகமாக நிற்கும் சற்குருவானவரின் னாதமே மனிதர்களை தேவர்களாக மாற்றுகிறது. இதனை காமீல்கள் நோக்கத்தில் **உருமுர சறைந்து காட்டி யுன்னிதம் காட்டல் போலே** என அருளியுள்ளது போல் உன்னதப் பொருளாக விளங்கும் திருஆலவாயானின் நாதத்திற்குள்ளாகி மனம் அலைவற்று இருப்போமாக.

**சத்திய வேதம் - ஆதியாகமம் அதிகாரம்: 2 (11 முதல் 15 வரையிலான) திருவசனங்களுக்கு** *ஜீவசகோதரர் விஜயகுமார் அவர்களின் புரிதல்:*
இங்கு பைசோன், கீகோன், இதெக்கேல், ஐபிராத்து நான்கு ஆறுகளை உவமானமாக வைத்து நம்மிடத்தில் உள்ள அகமியத்தை உணர்த்துவதாக உள்ளது. ஆறு என்பது வழியாக உள்ளது. நானே சத்தியமும் வழியும் ஜீவனுமாய் இருக்கிறேன் என்று கூறுகிறார்கள். நான் என்பது நான்மறையாக, நான்முகனாக, கண், மூக்கு, வாய், காது இவற்றை இயக்கிக் கொண்டிருக்கும் வேதப் பொருளாக உள்ளது. அந்தகரணங்களாகிய மனம், புத்தி, சித்தம் அகங்காரம் என்ற நான்கு ஆறுகளாக ஓடிக் கொண்டிருப்பது ஆசானின் பிரம்மவித்தை செயலின் மூலமாக அறிவாக மாறி விளைவதையே மதிப்பு மிக்க



Copyright © AMNA Trust, Chennai 

மாணிக்கங்களாகக் கூறியுள்ளார்கள். பொன்னாட்டு மனுமகன், பொன்னிலனாடு, பொன்னாட்டுத் தங்கம், பொன்னிலவளம், பொன்னரங்கம், இவை யாவும் அறிவு வடிவான ஆசான் என்பதும், அவர்களின் நாதம் மஞ்சள் வர்ண பழத்தில் உள்ள விளைவைத் தரவல்ல வித்தைக் குறிப்பதாகவும் உள்ளது. ஏதேன் தோட்டமாக இருப்பது நம் மனமே. **மனமது செம்மையானால் மந்திரம் ஜெபிக்க வேண்டாம்** ... என அகத்தியரும், **மயங்னா திருமனமே** என ஆண்டவர்களும் அருளுகிறார்கள். ***என்றும் பொய்யகத் துறைந்துள மனத்தை மெள்ள மெள்ள மெய்யறிவு உதயங்னாட்டிக் காட்டி, அகவிளைவு குடியேற்றி, உள்ளும் புறம்பும் சிறக்கச் செவ்வீடடைய வைப்பனவாகிய - னரரை மக்களாக்கி - மக்களைத் தேவர்களாக ஆக்கும் - தடையற்ற முழு தீரத்தை உடையதே மெய்க்கல்வி.***

*ஜீவசகோதரர் வடிவேலன் அவர்களின் புரிதல்:* **கருப்பை கூடிக்க லந்நவி னைத்தொடர்** என்ற பாடல் புரிதலாக வினையின் மூலமே பிறப்பு அமைகிறது. வினைக்கு காரணம் மனம். நல்வினையும், தீவினையும் அகற்ற வேண்டும். அதற்கு ஆசான் நல்வழி காட்ட நாம் அதன் படி கேட்டு நடக்க வேண்டும். மனிதன் தேட வேண்டிய தேட்டு நிஜமான சற்குரு என்றே எல்லா வேதங்களும் போதிக்கிறது. சிற்றம்பலப் பொருளாகிய ஜீவனை அறிந்தவர் ஜீவபண்டிதர். சிவசின்னங்கள், *உ, சிவமயம், விபூதி, உருத்ராட்சம், நெற்றிக்கண், சடாமுடி, சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள், கங்கை, பானதீர்த்தம், தோடு, குண்டலம், திருநீலகண்டம், பூணூல், தண்டை, சங்கு, உடுக்கை, மான் மழு, தூக்கிய திருவடி, திருவாச்சி சக்கரம், பாம்பு, சிவலிங்கம் (அடி, முடி, னடு என்ற நிலை).* ஆலய வழிபாட்டு முறைகள், ஆராதனைகள், மந்திரங்கள் அனைத்தும் ஆசானைப் பற்றிக் கூறும் அடையாளச் சின்னங்களே. அறிவு வடிவாக விளங்கும் ஆசானின் இரக்கத்தால் அனைத்தும் அறிந்து வாழ்வாங்கு வாழ்வு வாழ்வோம்.

### 26-03-2022 ~ சனிக்கிழமை சபை
### தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்த ஆவி தெய்வம் பிரம்மோதய மெய்வழிச்சாலை ஆண்டவர்களின் பொற்பாதங்களை வணங்கி அவை தொடங்கியது.

**எமபடரடிபடு கோடாயிதக் கூர்- வாக்கியம் 88:** ஜீவசகோதரர் கௌதம் அவர்களின் புரிதல்: மாறாக ஓடுகின்ற மனதின் செயலால் மாறி மாறிப் பேசும் குணமுடைய மனிதர்களை என்றும் மாறா மணமாகிய ஆசானின் மெய்மண னாதமானது நித்திய செல்வமாகிய அறிவைக் கொடுத்து நிறைமதியாக மாற்றி மெய்க்கல்வியைப் போதித்து நித்திய வாழ்வில் குடியேற்றி வைக்கிறது.

**காலந்நாட்டிய காரணப்பா பாடல் எண் - 26 முத்தர் மூர்த்திமு னிவர்ம கத்துக்கள்...** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி லாவண்யா அவர்களின் புரிதல்: முத்தர், மூர்த்தி, முனிவர் மகத்துக்கள், அறிவு வடிவைப் பெற்று காலத்தைக் கைக்கொண்டு காலமற்ற கங்குல் பகலற்ற இடத்தில் வாழ்பவர்கள். வித்தகராம் குருபிரான் அவர்கள் பிரம்மவித்தையின் மூலம் நம்மையும் அச்செயலில் பழக்கி அறிவு வடிவாக ஆக்கி வைக்கும்போது முத்திநிலை அடைந்த மகத்துக்கள் நம் உள்ளத்துள்ளிருந்து கிளம்பி வரும் நாளைக் குறிப்பதாக **னீங்குறா னேர்மை யாளர் னினைவிலென் னாளும் னிற்பர்** என்று ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் அடைக்கலப்பத்து பாடல் எண்-7** ஜீவசகோதரி ஜீவிதா அவர்களின் புரிதல்: மூன்றாவது கண்ணாகிய அறிவுக்கண்ணே ஒளிர்வுடைய கண்ணாகவும், இதயமலர் விரிந்நெழும்பக் கூடிய செயலில் நுழைவதற்கான முதல் வாசற்படியாகவும், வேத வீடு வாயிலுக்குள் நுழைய வைக்கும் மெய்ப் பொருளாகவும் உள்ளது. குரு பெருமானின் திருவடி நிழலில் தஞ்சுமடைந்து



Copyright © AMNA Trust, Chennai 

அடைக்கலமாகும் போது அழல் உருவாம் குரு பெருமானின் திருனாதம் அறியாமையை எரித்து, அறிவெனும் வாடாத தீபத்தை நம் உள்ளத்தில் ஏற்றி வைக்கிறது.

**திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம் - முதல் திருமுறை பாடல் எண்-10:** **தடுக்குடைக் கையருஞ் சாக்கியருஞ்...** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி உமாராணி அவர்களின் புரிதல்: (குரு ஸ்தோத்திரம்) *வாவிண் மேகக்கு டைச்சைவ மேனியர் கோவ ரத்னகு டைக்கொடைக் கொண்டலென்* ஆசானின் திருவடியாகிய குடையின் கீழ் தஞ்சுமடைந்தவர்களை இருவினைகளும் தாக்காமல் பாவம் நீங்கப் பெற்று சாதிமான்கள் ஆகிறார்கள்.

**சத்திய வேதம் – ஆதியாகமம் அதிகாரம்-02:** 16 முதல் 20 வரையிலான திருவசனங்களுக்கு ஜீவசகோதரர் விஜயகுமார் அவர்களின் புரிதல் :

**(ஆதியாகமம் 2 : 16,17)** தேவனாகிய கர்த்தர் சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கலாம். நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்கவேண்டாம். அதைப் நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். மனமே நன்மை தீமை அறியும் விருட்சமாக உள்ளது. மனதின் செயலால் மனிதனுடைய வயது வாழ்நாளாகிய காலம் வீணாவதையே அதை புசிக்கும் நாளில் நீ சாவாய் என்கிறார்கள்.

**(ஆதியாகமம் 2:18)** மனிதன் தனியாக இருப்பது நல்லதல்ல. ஏற்ற துணையை உண்டாக்குவேன் என்றார். துணையோடு அல்லது நெடுவழி போகேல் என்பது பெரியோர் வாக்கு. ஆதி துணை ஆதியே துணை ஆதியை அறிய குருவே துணை. தேவ குருவின் துணையுடன் உயிரையும் அறிவையும் அறிந்து வாழவேண்டும்.

**(ஆதியாகமம் 2:19-20)** தேவனாகிய கர்த்தர் சகலவிதமான பறவைகளையும் மிருகங்களையும் மண்ணினாலே உருவாக்கி ஆதாமிடத்தில் கொண்டுவந்து தந்தார். ஆதாம் அவைகளுக்குப் பேரிட்டான். மற்ற ஜீவராசிகளுக்கு வைக்கப்படாத அமானிதம் என்னும் சீரை தனிச்சீதனமாக வாங்கிவந்த உன்னதம் உடையவன் மனிதன். அவைகளுக்குப் பேரிடவும் அவைகளை ஆளக்கூடிய தகுதியும் பெற்றவன். அதனால் தன் நாமத்தை அறிந்து நாமத்துக்கு உரியவன் ஆகின்ற கடமையும் மனிதனுக்கு உண்டு.

**குருகீதை (வாக்கியம்: 1-5)** ஜீவசகோதரர் வடிவேலன் அவர்களின் புரிதல்: குருகீதை பார்பதிதேவியாருக்கு சிவபெருமான் குருவின் மகிமையை எடுத்து அருளியது. இங்கு குருவானவர் தனிகைமணிப்பிரான் ஆகவும், குருவின் திருவருளால் உலகை உய்விக்கும் செயலை ஏற்று நடத்த வந்த சோதிப் பெண்ணாகிய ***மார்க்கக்காரியான*** ஆண்டவர்கள் பார்பதியும் ஆவார்கள். நிஜமான பக்தியானது, மரணபயம் மூலம் குருபக்தி உண்டாகி குருபக்தி மூலம் தெய்வபக்தி உண்டாகிறது. குருபிரான் ஆறாவது அறிவை சீடனுக்கு காட்டி மரணபயம் மாற்றும் பிரம்மவித்தைச் செயலில் பழக்குகிறார்கள். குருவே சிவன் என நினைப்பவன் மனிதன். மாற்றமாக நினைப்பவன் னரன். அழகிய முகத்தினையுடைய பார்பதி விழியழகு காட்டி விளைந்த காமமே மெய்வழியின் ஆரம்பமாகும். இது அழகு, இது அழகில்லை எனக் காட்டும் கண்ணாடியானது, அவரவர் எண்ணத்தின் பிற்புறப்பிடரியில் னிறைனீதி ஆசனமிட்டிருந்து வரும் வஸ்து வித்தானது ஜீவனாகவும் பார்பதியாகவும் உள்ளது.

நிஜமான ஜபம், தவம், விரதம், தீர்த்தம், யாகம், தானம் என்பது

**ஜபம்**: உருளும் தஸ்பீஹு மணியானது ஒவ்வொரு மனுத்தலையிலும் உள்ளது.
**தவம்**: சுவாசம் வெளியே ஓடாமல் மூக்களவே ஓடுவது.
**விரதம்**: வெற்றி தரும் ரதமாகிய ஆசானின் வாக்கைப் பற்றி நடப்பது.
**தீர்த்தம்**: தீர்த்தமாவது தேசிகர் வாசகம். கற்பூர வாடை கமழும் ஆசானின் திருவாய் அமுதம்.



Copyright © AMNA Trust, Chennai

**யாகம்**: ஆசானின் வாக்காகிய தீயில் பாவத்தை போட்டு எரித்தல்.
**தானம்**: அறிவு தானம் மெய்ப்பொருள் தானம் பெறுதல்.

னாத னாதாந்தப் போதப் புராதனப் புதுமொழி சிந்தும் குருபரர் மெய்வழிச்சாலை ஆண்டவர்களின் பொற்பாதங்களைப் போற்றி **காவலான புராதன வேதியர்...** என்ற குரு ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவேறியது.

**27-03-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்**

**அத்திமாபுரம் அண்ணல் பராபர...** என்ற பாடலுக்கு *ஜீவசகோதரி நாகமணி அவர்களின் புரிதல்:* அசைவற்ற மனம் சிவனாகவும், அசைவுள்ள மனம் சக்தியாகவும் உள்ளது. சத்தமே னாதமாக தொனியாக ஜீவனின் அடையாளமாக போக்குவரத்தாக உள்ளது. குருவின் னாதம் மூலம் இதனை அறியலாம். இறைவனின் வடிவாகிய ஒளியும் ஒலியும் கோவிலில் தீபம் ஏற்றி மணியாட்டும் ஐதீகமாக உள்ளது. கருவறையில் உள்ள இறைவன் தோற்றம் இல்லாமை எனும் காருண்ய கறுப்பாக உள்ளான். நான் உடல் அல்ல என்பதை குருவின் திருவருளே அறிவிக்கிறது. அழிவற்ற ஆன்மா வினைக்கேற்ப ஓர் உடல் எடுக்கின்றது. **வினை போகமே ஒரு தேகம் கண்டாய்** என பட்டினத்தார் அருளியுள்ளார்கள். வினை முதல்வன் இறைவன். வினைக்கு காரணம் நம் மனம். மனம் கீழ்நோக்காக இல்லாமல் மேல் நோக்கமாக இருப்பதே நன்மை. மூச்சு லயமாகிய மனோலயம். மனம் அறிவாக மாறும் போது பிறப்பற்ற நிலையாகும்.

*ஜீவசகோதரி சாந்தினி அவர்களின் புரிதல்:* நம் தலைக்குள் அழியாத இறை வஸ்து ஒரு தலைமுறைக் காலம் இருப்பது பேரின்ப நித்திய வாழ்வைக் கைபோடவே. தாய், தந்தை, குரு, தெய்வமாக இருந்து குருவே நம் ஜீவனை அறிவிக்கிறார்கள். அவர்களின் அன்பால் மட்டுமே கால், காலம், காலன், காலாதீதனை அறியலாம். **நாம் உம்மிடம் பதித்து வைத்துள்ள பிரணவ கலையின் கிரண வீச்சே அறிவாக உள்ளது** என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். ஒரு புள்ளியில் இருந்து விரிந்த இந்த தேகம் மீண்டும் அதில் ஒடுங்குவதே அடக்கம். இதுவே ஜீவபிரயாணமாக முத்தர்களின் பாதையாக உள்ளது. இதனை புலிப்பாணி சித்தர் நம் நாடியில் உள்ள நவ கோள்களின் பீடிப்பையும் அதற்கு ராஜாவாக உள்ள மனதையும் நமது குருவானவர்கள் அனுக்கிரகிப்பார்கள் என்பதையும் அருளியுள்ளார்கள். செத்த இடம், பிறந்த இடம், இனி சாகாத இடம் அறிந்தவன் மரணமில்லா பெருவாழ்வு பெற்றவன். அவனே உஜூது னடை மூலம் கைலாயம், பரமண்டலம், மெகராஜ் செல்பவன் ஆகிறான். வித்தில்லாத வித்தாகிய குருவின் அருளால் இதனை நாம் அறியலாம்.

*ஜீவசகோதரி அனுஷா அவர்களின் புரிதல்:* மனிதன் நித்தியத்தை அடைவது இறைவனின் திட்டம். நிலையற்ற உடல் உள்ளபோதே நாம் இதை அடைய வேண்டும். நம்முள் உள்ள தங்க உடலாகிய சூக்கும உடலில் வாழப் பழக வேண்டும் அதுவே அழியாத வாழ்வு என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். திருவள்ளுவர் **வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்** என கூறியுள்ளார்கள்.

னினைவு என்பது சுத்த னினைவாகவும் மனமாகவும் உள்ளது. னினைவெனும் ஆகாயத்தில் தான் சொர்க்கலோகம் கட்டப்படுகிறது. நினைவெனும் ஆகாயத்தில் தான் சர்வ சம்பத்தும் இருக்கிறது. ஆசானின் னாதமே அறிவுக்கு ஆதாரமாக உள்ளது. தந்தையின் னினைவிலிருந்து தாயின் கருவறையில் தங்கி இன்றளவும் நம்மை வழி நடத்தும் இறை சக்தியை உணர வைத்தது குருபிரான் அருளிய பிரம்மவித்தை செயல். எமன் எல்லையில் காத்து இரட்சிப்புத் தரவே சர்வ வேதமும், மதமும் வந்தது. எமவாதையைத் தடுக்கும் என்திறம் எனும் பாடலில்,



Copyright © AMNA Trust, Chennai 

**வல்லமையும் சீர்சிறப்பும்**
**வாழ்வினுக்கே வந்தமனு**
**பரமபத வாழ்வினுக்கே**
**பாரில்ப டைத்தமனு ...**
**னித்தியவாழ் வுக்கென்றே**
**னிலத்தில் படைத்தமனு** என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரி இன்பலதா அவர்களின் புரிதல்:* குருவின் பிரம்ம பிரகாசத் தீ நம் தீவினையை சுட்டு சிவன் என்னும் வாடாத தீபத்தை ஏற்றி மெய்ஞானம் பெற்று பேரின்பத்தில் நம்மை ஏற்றும் வல்லபமுள்ளது. குருவின் முகத்தில் பிரம்மம் இருக்கிறது. ஜீவனை மாசு அண்டாமல், புலன் வழி செல்லாமல் விழிப்புணர்வு கொண்டு நித்தியத்தை உணரச் செய்து ஓதாமல் ஓதி அறநெறியில் குருனெறி பற்றி சிவனெறியில் பேரின்பம் கொள்ள செய்கிறது.

விபூதி என்பது எமன் எல்லையில் காக்கும் ஆசானின் னாதமாகும். சுயம்புலிங்கத்தின் ஜோதி தரிசனை ஆசானின் அருளேயாகும். **அறிவு ஒளிர ஆசானைத் தேடு**. அவர்கள் சொல்லே விளக்காகவும் விளக்கமாகவும் உள்ளது. இருளை சங்நாரம் செய்து ஜீவகிரணோதயத்தை நம் உள்ளத்தில் ஏற்றி வைக்கும் அகமிய குரு ஒருவனுக்கு கட்டாயம் வேண்டும். சுயம்பிரகாச நித்தியானந்த பொருள் ஜீவனாக, சிவனாக, அறிவாக, ஆத்மாவாக, **நான்** ஆக, நம்முள் இருக்கின்றது. இதனை நாம் ஒரு ஜீவ பண்டிதரின் திருமணிசூலில் பிறந்த பிறகு அறியலாம்.

*ஜீவசகோதரர் வடிவேலன் அவர்களின் புரிதல்:* சைவர்கள் ஆழ்வார்கள் என வெவ்வேறாக இருந்தாலும் அவர்கள் பெற்ற ஞானம் ஒன்றே தான் என்பதை நாமும் நம் அனுபவங்களைக் கொண்டு அறியலாம். எத்தனையோ மதங்கள் இருந்தாலும் அதனை வெளிப்படுத்தும் குருபிரான் இல்லாமல் சிறப்பு பெறாது. திருக்கடையூரில் வாழ்ந்த சுப்ரமணிய ஐயர் எனும் அபிராமி பட்டர் அமாவாசை தினத்தை பௌர்ணமி எனக் கூறியவர். அமாவாசை பூரண முழு நிலவாக உள்ளதை குருபிரான் அளித்த அறிவின் மூலம் பழகுவது பிரம்மவித்தை செயல். அபிராமி அந்தாதி போன்று தெய்வமவர்களும் மெய்வழி னூல், அமுத கலைக்ஞான போதம், தௌஹீது மக்காம் இவற்றை அந்தாதி தொடரில் இயற்றி உள்ளார்கள். ஆதியும் அந்தமும் உணர்ந்து நடுவில் உள்ள ஜீவனாகிய தாயைத் தரிசித்தவர்களால் மட்டுமே இவ்வாறு இயற்ற முடியும். தூல, தேவ ரகசியங்களை நகலாக கோவிலில் உண்டாக்கியுள்ளார்கள். மெய் ஆசானின் னாதமே ஜீவ ரகசியத்தை உணர்த்துகிறது. நமக்கு தலையான செல்வமாகிய செவிச்செல்வத்தின் மூலம் ஆசானின் அருளால் பிரம்ம வித்தையைப் பழகி பிறப்பெனும் பேதமை நீங்கி பிறவாமை பெறுவோம்.

## 27-03-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை
## தொகுப்பு: ஸ்ரீமதி.ஹேமலதா தியாகராஜன்

*ஜீவசகோதரர் கௌதம் அவர்களின் புரிதல்:*

**ஆறாம் அறிவு:** உலகத்தில் மனிதனுக்கு மட்டும் மற்ற ஜீவராசிகளை விட மேலாக ஆறாம் அறிவு கொடுக்கப்பட்டுள்ளது. அத்தகைய ஆறாம் அறிவானது எவ்வாறு உள்ளது என்பதை தொல்காப்பியத்தில்

**ஒன்றறி வதுவே உற்றறி வதுவே**
**இரண்டறி வதுவே அதனொடு நாவே**
**மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே**
**நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே**
**ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே**
**ஆறறி வதுவே அவற்றொடு மனமே**
**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே**



Copyright © AMNA Trust, Chennai 

என அருளப்பெற்றுள்ளது. அத்தகைய ஆறாவது அறிவை அறிந்து அதனோடு வாழ பழகுவதே நிம்மதி.

**நிம்மதி:** நிம்மதி என்பது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக உள்ளது. ஒருவருக்கு நிம்மதியாக உள்ள விஷயம் மற்றொருவருக்கு நிம்மதியாக இல்லை. ஆனால் அனைவருக்கும் உறங்கும் பொழுது நிம்மதியாக உள்ளது. அந்த நிம்மதியோ, தான் யார் என்னும் னிலையே தெரியாத அறியாமையில் உள்ளது. அப்படியென்றால் தான் யார் என்று தெரிந்த ஓர் உண்மையான நிம்மதி உள்ளது. அதனை ஓர் மெய் குருபிரான் அவர்களே, ஆறாவது அறிவு இன்னது என அறிய வைத்து, தூங்காமல் தூங்கி சுகம் காணும் நிம்மதியில் நம்மை ஏற்றிவைக்கிறார்கள்.

**நமசிவய:** ந – மண்ணாக, ம - தண்ணீராக, சி- நெருப்பாக (சத்து), வ - காற்றாக (சித்து)
ய-சத்தும், சித்தும் சேர்ந்து ஆனந்தமாக உள்ளது.

**சத்து, சித்து, ஆனந்தம்:** மனிதனிடத்தில் சத்தாக இருப்பதைக் காட்டிக் கொடுப்பவர்களே குரு. **சத்தான இதன்விபரக் கணக்கறிந்நோ ரெல்லாம் சத்தியமெய்த் தேவகுல மக்களாவ ராமே.** என **விஸ்வச்சுலா விருட்சம்** என்னும் தலைப்பில் அருளியுள்ளார்கள். அப்படியென்றால் சத்து என்பது கணக்காக உள்ளது. தமிழில் மட்டுமே ஒரு நொடிப் பொழுதை இமைப்பொழுது, கணப்பொழுது என்றெல்லாம் கூறுவார்கள். ஏனெனில் எத்தகைய பொருளோ, பணமோ கொடுத்தாலும் இழந்த நேரத்திற்கு ஈடாகாது என்னும் கணம் அறிந்ததினால் கணப்பொழுது என்று கூறுகிறார்கள். ஒரு மெய் குருவின் பெருங்கருணையால் மட்டுமே அந்த இழந்த பொழுதையும் சம்பாதிக்க முடியும். இதனை நம் தெய்வம் அவர்கள்

**போனனாள் மீண்டங் ஙேறும்**
**பேரின்ப வடிவம் பெற்று**
**ஊனங்ங எனைத்தும் தேய்ந்நு**
**உன்புகழ் வானம் பாயும்.**

என ஞானமுறையீடு பாடலில் அருளியுள்ளார்கள்.

நமசிவய என்னும் மந்திரத்திலுள்ள (சி) என்பது நமது உடலில் நெருப்பாக, உஷ்ணமாக, ஜீவனாக, ஆன்மாவாக இருந்து, சில்லிட்டு எமன் கை வசம் போகமால் காத்து வருகிறது. அதுவே சத்தாக நம்மிடத்தில் இருக்கிறது. சித்து என்பது நமசிவய எனும் மந்திரத்தில் உள்ள (வ) காற்றாக உள்ளது. அது தான் ஜோதியாக, மஹமூது தாயாக, கற்பமாக உள்ளது. இந்த சத்தான நெருப்பும், சித்தான காற்றும் சேர்ந்தால்தான் (ய) என்னும் ஆனந்தம் என அருளியுள்ளார்கள். இத்தகைய ஆனந்தத்தை தட்சணாமூர்த்தியான, கற்பக விநாயகரான ஆசானின் அருளமுதவர்ஷிப்பின் மூலமே சத்து-சித்து-ஆனந்தத்தை அடைய முடியும். இதனை நம் தெய்வம் அவர்கள்

**வழிமறையோன் குருனாத ருளவின்படி**
**வழிபுகுவான் வழியறிவான் அவனின்சான்**

என குருமுறாதியில் அருளியுள்ளார்கள்.
வார்த்தையானது மனதில் இருந்து முளைக்கிறது. ஆனால் மனமானது தாவிக் கொண்டே உள்ளதால் வார்த்தையானது நிலையில்லாமல் உள்ளது. பாரவான்கள் மனம் பிரளாத, நிலையான இடத்தில் இருந்து வார்த்தைகளை கூறுவதால் அவர்களின் வாக்கு எக்காலத்திற்கும் அழியாத செல்வாக்காக உள்ளது. இதனை நம் தெய்வம் அவர்கள்
*மனிதர்கள் மாறி மாறிப் பேசுவார்கள். னாம் அப்படிப் பேச மாட்டோம். ஏன்? உலகத்தை உய்விக்கின்ற ஒரே தொழில்தான் எமக்குத் தெரியும்; ஆகவே அதையே அன்றும் பேசினோம், இன்றும் பேசுகிறோம், என்றும் பேசுவோம், செய்வோம்* என கோடாயிதக்கூர் வாக்கிய எண் 88ல் அருளியுள்ளார்கள். நாமும் நம் நாவைக்



Copyright © AMNA Trust, Chennai 

காக்க வேண்டுமெனில் மனம் பிரளாத என்றும் மாறாத சத்தியமான இடத்தில் இருந்து வார்த்தைகளைக் கூற வேண்டும். அத்தகைய மாறாத மனதை ஆசானின் அருளமுதவர்ஷிப்பின் மூலம் அடைய முடியும்.

**யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு** (குறள் எண்:127)

என திருவள்ளுவர் பிரான் அருளியுள்ளார்கள்.

**மெய்வழிச்சாலை:** இந்த உடலுக்கு தூக்கம் என்பது அமைதி தரும் இடமாக உள்ளது. அதுபோல் ஓயாமாரியாக உள்ள மனதினை சாந்தப்படுத்தி நிம்மதியை கொடுப்பதற்கான ரகசியங்கள் உள்ளடக்கியதே மெய்வழிச்சாலை. அத்தகைய மெய்வழிச்சாலையை நம் தெய்வம் அவர்கள் இந்த வேதத்திற்குள் சுருட்டி மடக்கி வைத்துள்ளார்கள். அத்தகைய வேதத்தை நாம் அறிய அறிவுதான் அடித்தளமாக உள்ளது. நம் தெய்வம் அவர்கள் இதனையே ஆதிமெய் உதய பூரணத்தில் **அறிவினை யறிந்நோர் அறிவரிவ் வாய்மை** என அருளியுள்ளார்கள். அத்தகைய அறிவு நம்மிடம் ஆறாவது அறிவாக, மனமாக உள்ளது. அதனை அறிந்து, அறியாமையை நீக்கி அறிவாக மாற்றும்பொழுது அதுவே பிரம்மம் என்றும், அதனை அறியவைத்த ஆசான் அவர்கள் பிரம்மம் என்பதையும் அறியலாம் என்ற புரிதலுடன் சபை நிறைவுற்றது.

**31-03-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**அரியருள் வருகும் அருமறை விதியோன்...** என்ற குருமணிமாலை பாடலுடன் சபை இனிதே தொடங்கியது.

**வான்மதிக்கொரல் திருவாக்கியம் எண் - 60 :** இவ்வுலக வழக்கத்தில் இருந்து வருகிற சாப்பாடு என்பது சாவுக்கான பாடு என்றும் குழம்பு என்றால் குழம்பிப்போவது என்றும் சோறு என்றால் சோர்ந்துபோவது என்பதே பொருள். ஆண்டவர்கள் இப்படியான அபசகுணமான பெயர்களை மாற்றி, அன்னம் என்றும் ஆணம் என்றும் வைத்தார்கள். சோர்வு என்றால் உடற்சோர்வு மட்டுமல்ல எத்தனை பிறவி எடுத்து புல்லாகி பூண்டாய் மரமாகி சோர்ந்து போவதை குறிக்கிறது. சோர்வாகிய மரணத்தை மாற்றி வைக்க னாதம் எனும் மாமருந்தை தந்து, ஜென்ம சாபல்யத்தை அளப்பவரே ஆசான்.

**காலந்நாட்டிய காரணப்பா - பாடல் எண் : 27** **அண்ணல் தீர்க்கதரிசி மற்றாகியோர்..** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி லாவண்யா அவர்களின் புரிதல்: பூமி புல்லுள்ள நாளெல்லாம் தீர்க்கதரிசி வருவார் என்பதை பைபிள், ஈப்ரு, கிரேக்கம், அராபிய மொழியில் வந்த வேதங்களிலும் மற்றும் நம் பெரியப்பாவான வள்ளல் பிரானின் திருவருட்பாவிலும் கூறப்பட்டுள்ளது. னித்திய தேகமாகிய ஜீவனை நாம் உணராமல் தர்மமானது நழுவும் போது அதை உணர்த்த யுக யுகந்தோறும் நான் வருவேன் என்று கீதையில் கிருஷ்ணபரமாத்மா கூறியிருக்கிறார்கள்.
ஸ்ரீலஸ்ரீ சாலையுகவான் அவர்களும் மாலையில் மறைந்த சூரியன் காலையில் எழுந்த போது வேறு என்று கூறி குழம்பி எதிர்வாதம் செய்யாதே மாலையில் மறைந்ததே மீண்டும் காலை வருகிறது என்கிறார்கள்.

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் - ஆசைப்பத்து பாடல் எண் : 7** **பாரோர் விண்ணோர்...** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி ஜீவிதா அவர்களின் புரிதல் : தெய்வச் சிரோண்மணியை நம் சிரசில் சூட்டுபவரே பாரோர் என்றும், நம் தலைவிதி எழுத்தை மாற்றி மதி எழுத்தை பதிப்பிப்பவரே விண்ணோர் என்றும் வேதத்தில் அருளப் பெற்றுள்ளது. ஆசானின் பாதமென்னும் வாசக்கமலமே ஆசை


Copyright © AMNA Trust, Chennai

உண்டாகும் இடத்தையும் ஆசை தீரும் இடத்தையும் அறிவித்து நம்மை தெளிவான பாதையில் வாழ்விக்கும். ஜீவன் அவாவோடு தாவும் போது மனமாகி ஆசை எனும் பிடிக்குள் மாட்டிக் கொள்கிறது. குருவின் ஆசியால் அது அறிவாக சிவமாக மாறி சிற்றின்ப ஆசைகளை தீர்த்து பேரின்ப பெருவாழ்வை அடைவதற்கான ஆசையை உண்டாக்குகிறது என்பதை உணர்த்துவதே ஆசைப்பத்தாகும்.



*திரு. சாலை ரவி அப்பா அவர்கள்*
*நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை*

**திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம் - பாடல் எண் : 11 அன்புடை யானை யரனைக்கூடல்....** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி உமாராணி அவர்களின் புரிதல் : அரண் என்பது பாதுகாப்பது எனப்படும். நம்மை எமனிடமிருந்து பாதுகாக்கும் அரணாக இருப்பது ஆசானுடைய அன்பாகும். **பொன்மேனி மின்வீசும் புகழுடம்புச் செய்கை சொல....** என்பதற்கேற்ப குருவே பாவத்தை போக்கும் திருனள்ளாறாக உள்ளார்கள். **திருஆலவாய்:** ஆசானின் திருனா னடனமே அறத்தை உணர வைத்து மெய்ப்பொருளை கைக்கொள்ள செய்து வீடுபேற்றை அடையச் செய்கிறது.

**சத்திய வேதம் – ஆதியாகமம் அதிகாரம்-02:** 21 முதல் 25 வரையிலான திருவசனங்களுக்கு ஜீவசகோதரர் விஜயகுமார் அவர்களின் புரிதல் :

**(ஆதியாகமம் 2:21)** அயர்ந்த நித்திரை என்றால் தூங்காமல் தூங்கும் பிரம்மவித்தை என்று பொருள். மாம்சம் என்பது மா+அம்சமாகிய - எட்டிரண்டு பத்தான இடமாக உள்ளது. திருமூலரும், அவ்விடத்தில் தான் சிவானந்தம் இருக்கிறது என்பதை,

**தூங்கிக் கண்டார் சிவலோகமும் தம்உள்ளே**
**தூங்கிக் கண்டார் சிவயோகமும் தம்உள்ளே**
**தூங்கிக் கண்டார் சிவபோகமும் தம்உள்ளே**
**தூங்கிக் கண்டார் நிலை சொல்வதெவ்வாறே**

என்ற பாடல் மூலம் அருளியுள்ளார்கள்.

**(ஆதியாகமம் 2:22,23,24)** மனுஷி என்பவள் கன்னியாகவும், சக்தியாகவும், ஹபீப் பாத்திமாவாகவும், உலக அன்னையாகவும் எல்லா ஜீவகோடிகளையும் தன் சூலில் வைத்து பெற்றெடுத்த தாயாகவும் அறிந்து கொள்ளலாம். ஐம்மணிப் பொதிகையில் *ஆணும்பெண்ணும் தோணுமங்கே ஆண்பெண்ணற்ற னிலையும் அனைத்தும் தரிசனமா மெங்ஙள் இனத்தின் பஞ்ஞாட் சரமே* என்று அருளுகிறார்கள்.

**(ஆதியாகமம் 2:25)** மனித உடலானது தோலை ஆடையாக போர்த்தி கொள்வதாக உள்ளது. ஆதாமும் ஏவாளும் இறைவனுடன் இருந்தபோது எந்தவித பற்றும் இல்லாமல் இருந்தார்கள். அது நிர்வாணம், மோட்சம், முத்தி நிலை என கூறப்படுகிறது. பற்றற்றிருப்பதும், முக்குணம் அற்று நிர்குணமாக இருப்பதுவே நிர்வாணம். நாம் நிர்வாணத்திற்கு சென்றுவிட்டால் பிறவாமை என்கிற நிலையை அடையலாம்.

*ஜீவசகோதரர் வடிவேலன் அவர்களின் உரை :* அபிராமி பட்டர் வாழ்ந்தது 16-ம் நூற்றாண்டு. இன்று நம் குருபிரானவர்கள் நமக்கு அமாவாசையை முழுநிலவு (பௌர்ணமி) நாளாக்கிய செயலே அன்று அவராலும் சொல்லப்பெறுகின்றது.



Copyright © AMNA Trust, Chennai

ஒவ்வொரு பாடலின் முடியும் வார்த்தையை கொண்டே அடுத்த பாடல் துவங்குவது அந்தாதி ஆகும். அபிராமி அந்தாதி பாடலில் மறலி என்ற வார்த்தை உள்ளது. நம் தெய்வமவர்கள் தம் மதத்திற்கு **மறலி கை தீண்டா சாலை ஆண்டவர்கள் மெய்மதம்** என பெயர் சூட்டி உள்ளார்கள். அதேபோல் பெரியம்மாவின் பெயரான பனிமதி என்ற பெயரும் அபிராமி அந்தாதியில் இடம்பெற்றுள்ளது. மேலும் எழுதாமறை, மலர்தாள், அம்மே போன்ற பல வார்த்தைகள் ஒற்றுமையாக இரண்டிலும் இருப்பது ஆச்சரியமே. நமது ஆடலங்ஙன்னியில் எப்படி ஆண்ட வாகுவா, மேரே னற்றவா போன்ற வா என்று சொல்லிப்பாடும் பாடலைப் போல அபிராமி அந்தாதியிலும் பூட்டியவா, ஒட்டியவா காட்டியவா என்றெல்லாம் அருளியிருக்கிறார்கள்.

**மணியே மணியின் ஒளியே ஒளிரும்மணி புனைந்த**
**வணியே அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப்**
**பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெரும் விருந்தே**
**பணியேன் ஒருவரை நின் பத்ம பாதம் பணிந்த பின்னே**

என்ற 24-வது பாடலும்,

***ஆசைக் கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன் கை***
***பாசத்தால் அல்லல் பட இருந்தேனை நின் பாதம் எனும்***
***வாசக் கமலம் தலை மேல் வலிய வைத்தாண்டு கொண்ட***
***நேசத்தை என் சொல்லுவேன் ஈசர் பாகத்து நேரிழையே***

என்ற 33-வது பாடலும்

மிக உன்னதமான பொருள் பொதிந்த பாடல் என்பதை ஆசான் நம்மிடம் தொட்டுக் காட்டிய பிறகே உணர முடிகிறது. அமாவாசை, பிறை, பௌர்ணமி என்ற மூன்று நாளுமே நாம் மெய் அறிவை உணர்வதற்காக இறைவனால் படைக்கப்பெற்ற சிறப்பான நாளாகும் என்ற பகிர்தலுடன் சபையானது இனிதே நிறைவுபெற்றது. குரு வாழ்க! குருவே துணை!!

**இசை வகுப்புகள்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**06-03-2022 ~ ஞாயிற்றுக்கிழமை**

**சிரந்நனியே உடல்வேறு பிரித்துப் பார்த்துச்**
**சிவஞான சிவபுரத்தோர் செழிப்புங் ஙண்டேன்**
**னிரையான இருகாலுங் ஙரங்ஙள் வேறாய்**
**னின்றிலங்ஙு தவமுனெஞ்ஞின் னிலாவுந் நோன்ற**
**முறையான வேதவே தாந்ந மெல்லாம்**
**முன்னுதிப்பி லூறிவந்ந மூதா ரேற்றுங்**
**ஙுறியிதற்குக் காரணமா மென்ற னாசான்**
**குருபிரான் தனிகைவள்ள லையன் பேறே**

என்ற தோத்திரப் பாடலுடன் சபை தொடங்கியது.

**பூரணப் புதையல்:**

**ஆமீனாய் னின்றிலகு மூமீ னாடு**
**ஆனசென்னி னாடுவள னாடு மாகும்**
**தேமாவோ டெக்கனியும் சுரந்த னாடு**
**தேங்ஙாத கருணைவெள்ளம் தேக்கு னாடு**
**ஈமானை யறிந்தவர்க ளிருக்கு னாடு**
**இகபோக விபரீத மணுகா னாடு**



Copyright © AMNA Trust, Chennai

**கோமானாம் குதரத்தி லாஹி னாடு**
**குருனாடு குடனாடு குடியென் னாடே**

என்ற பாடலும்,**ஏறுதுறை மறைவுலக்கப் பாடல்கள்**:

**ஆட்டிவெந்து சாம்பலாய்ப் போன வித்து**
**அப்புறமு முளைத்துக்கனி யருந்து மாறும்**
**ஏட்டிலெழு தியவெழுத்தைக் குறுக்கு மாறும்**
**எழுந்துசிற கிழந்தபட்சி பறந்த வாறும்**
**பூட்டடங்நாச் சாவிகொண்டு திறக்கு மாறும்**
**புலியின் மேற் பசுபாய்ந்து சாய்த்த வாறும்**
**னாட்டியவீ தனைத்தும் தன்னு ளறிந்த பேரை**
**ஞானகுரு பெருமானென் றுரைக்கலாமே**

என்ற பாடல் விருத்தமாக பாடுவதற்கான பயிற்சியளிக்கப் பெற்றது.

**13-03-2022 ~ ஞாயிற்றுக்கிழமை**

**தேகம்னம்போ லுள்ளஎம்குரு னாதருக்கு னாமமெதும்**
**செப்புதற்கொப் பனையுளதோ**
**ஏகன்முதல் யாரையுமி றைஞ்ஞினோமி வர்தொழில்வி**
**யந்துரை செயப்படில் காணோம் ...**
என்ற தோத்திர பாடலுடன் சபை துவங்கியது.

**பூரணப் புதையல்:**

**ஒன்பதுக்கொன் பதுமூன்று லட்ச லக்கம்**
**ஒருமிக்கக் கூட்டவா றான வாறும்**
**ஐம்பத்தோர் தொகைப்பதமா மதிற்க ழிக்க**
**ஆனமிச்ச மொன்றாகக் கண்ட வாறும்**
**தன்பாலந் நர்முகமாம் பிரண வத்தின்**
**தனிப்பொருளாம் பதப் பிரிவை யறிதல் வேண்டும்**
**ஒண்பொருளிற் பிரிவறியார் பாவி யென்று**
**ஓதிவரும் திருமறையின் பாடம் தன்னில்**
என்ற பாடலும்,

**ஆமெனவு மீராறி லக்கத் தோடு**
**அப்புறமு மீரைந்நோ ராறும் கூட்ட**
**வாமதுகை யிரண்டேகா லான வாறும்**
**வைத்ததனி லீரைந்நீர் கழித்துப் பார்க்கத்**
**தாமொன்றே காலாக மீந்த வாறும்**
**தன்னிடத்தி லறிந்துகணக் குரைத்த பேர்கள்**
**மூமீனாம் ஞானபிதா மகனு மாவான்**
**முன்னிலறு சுவை யொளிக்கும் பொருளைக் கூடும்**

என்ற பாடலும் தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப்பெற்றது.



Copyright © AMNA Trust, Chennai 

**27-03-2022 ~ ஞாயிற்றுக்கிழமை**

**னம்பிய தன்னுயிர் தற்கொலை செய்வான்** என்ற ஞான முறையீடு பாடலுடன் தொடங்கப்பெற்று, பூரணப் புதையலிருந்து

**பொருளறிந்து பெருமையும்பொய் வஞ்ஞுகங்க ளறவே**
**போக்கினின்று சாதகத்தி னிலைத்ததுகண் டாசான்**
**அருள்சுரந்து தீட்சைபெற்று லகிரிகொண்டங் ஙேறி**
**அறிந்நவரும் பொருள் னிலையி லிருந்தவரும் கோடி**
**அருள்மனத்தோன் போலுனடித் துபதேசம் பெற்றளவே**
**அறிந்துகொண்டோ மெனுமகந்நை கெருவங் னொண்டு மேலும்**
**குருனிந்தைசெய் குருத்துரோகிக் குலம்புழுக்கக் குருடர்**
**கொடுமை கொண்டிங் னொழிந்நனரே குருமார்க்கீ துரைத்தேன்**

என்ற பாடலும்,

**கோடிபல கோடிபொரு ளேயொறுங்நம் கோடி**
**கொடிமுனையா மாங்ஙக்கரக் கோடியதென் கோடி**
**கோடிகடக் கோடிகன்னி யாகுமரிக் கோடி**
**கோடியொளி ஞானமதி வீசுமறைக் கோடி**
**கோடியெழு கோடிவலஞ் துழன்றதிடம் கோடி**
**கோடிகாமக் குடிபீடம்பூ ரணப்பொருளும் கோடி**
**கோடான வறுபுரினூ லறுத்திங்ஙின்னூ லுரைத்தோர்**
**னாதருந்நன் னிலக்கணமிங் ஙறைவார்**

என்ற பாடலும் தாளத்துடன் பாடுவதற்கு பயிற்சி அளிக்கப்பெற்றது.



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2022 ஏப்ரல் மாத அவை நிகழ்வுகள்


Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் வர்ஷிப்பு

ஆதி மார்க்க நீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே 02-04-2022 முதல் 28-04-2022 வரை 12 சபைகளின் நிகழ்வுகளை உள்ளடக்கிக் கொண்டு வெளிவரும் இந்த ஏப்ரல் மாத மின்னணு சஞ்ஞிகையின் உதயமாக ஆண்டவர்கள் ஆசீர் பாதமாக வழங்கிய "*வாழ்வீர் சாலோக மாமுதல் சாயுச்சியம்*" என்ற பாடலுடனும், புதிய அங்கத்தினர்களின் சேர்க்கையும் மார்க்க மொழி கீதம் எனும் நூல் வெளியீடும், தமிழ்ப்புத்தாண்டு மற்றும் மேஷ ராசியில் சூரியன் சஞ்ஞரிக்கும் இம்மாத சிறப்பையும் கொண்ட ஆதி மார்க்க னீதி மொழி சஞ்ஞிகை உதயமாகிறது. இதுவரை வந்த ஞானிகள் யாரும் கூறாத, தமிழ் மாதங்களின் சிறப்புகள் யாவற்றையும் அறிவின் திருநாமங்களாக னன்மதி முதல் உபமதி வரை சூட்டியுள்ள ஆண்டவர்களின் மேன்மை அளவிடற்கரியது.



***திரு. சாலை ரவி அப்பா அவர்கள்***
***நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை***

இந்த சஞ்ஞிகையில், தன்னிலக்கண முணர்த்தல், நம்பிய தன்னுயிர் தற்கொலை செய்வான், உரு முரசறைந்து காட்டி,போன்ற பாடல்களை இசை வகுப்பின் மூலமாக இசையுடன் பாடுவதற்கான பயிற்சிகளை திருமதி லாவண்யா சிறப்பாக வழங்கியுள்ளார். சுருதி மாதாவாக விளங்கும் கேட்கும் திறனும், லயம் பிதாவாக விளங்கும் அதற்கேற்ற நடையும், நடையே தமிழில் கதியாக ஜதியாக உள்ளதையும் இசையின் மேன்மையையும் மெய்ஞானத்தை பெற்ற மக்கள் அறிவர்.

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது.**

அறம், இல்வாழ்க்கை, அன்பு இவற்றின் சிறப்பு பண்பாக, பயனாக, மனுவின் சிறப்பாக, உள்ளதை ஆண்டவர்கள் னீதி எனும் பொருள் ஆனவன் மனு என அருளியதை மக்கள் சிறப்பாக தொகுத்து வழங்கியுள்ளனர், *பத்தோடிரு கலையாகிய பனிரெண்டினினாலும் பாழ் போகிடா மீண்டே வரும்* என்ற மணிவாசகப் பிரான் அருளிய பாடல் வரிகள் மக்கள் யாவரும் சிந்தித்து செயல் பெற வேண்டும் எனும் உயர்நோக்குடன் *மார்க்க மொழி கீதங்கள்* நூலில் திருஞானத் தாழிசைப் பாடலாக வழங்கப் பெற்றுள்ளது. சிவகாசி சபையின் நிகழ்வுகளில் *அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்* என்ற திரு மந்திரப் பாடல் விளக்கமும், *ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான் மற்றவை செத்தாருள் வைக்கப்படும்* என்ற குறளுக்கான விளக்கமும், மேலும் கிரகதுரை, பழனிகுமார், ராஜமகேஷ், பிரபு, கணேஷ்வரன், செல்வம் மற்றும் அவரைச் சார்ந்த புதிய மக்களின் மெய்ஞான உணர்வின் புரிதல்களும் மிகவும் சிறப்பாக உள்ளன.



Copyright © AMNA Trust, Chennai

தேவாரம் திருவாசகம் இவற்றின் சிறப்பு விளக்கங்களும் சத்துவாச்சாரி சபையில், புவனமும் அது உண்டான விதமும் அதை உண்டாக்கியவரும் அவரின் இருப்பிடமுமாகிய தொண்டரின் உள்ளத்தையும், ஆதியிலே வார்த்தை இருந்ததையும், அது தேவனிடத்தில் இருந்ததையும், அதன்மூலமாக மனம் திரும்புவதும், பரலோகராஜ்யம் சமீபமாக இருப்பதையும், மிகவும் சிறப்பாக யாவர்க்கும் புரியும் வண்ணம் கௌதம் மூலமாக விளக்கப் பெற்றுள்ளது.

இந்த மின்னணு சஞ்ஞிகையில் உள்ள சுவிசேஷ நற்செய்திகளை தெளிவாக மக்களிடத்தில் கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் அரும்பாடுபட்டு இதனை தொகுத்து வழங்கிய மக்கள் "பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழிச்சாலை ஆண்டவர்களின் பரிபூரண ஆசீர் பாதத்துடன், நீடிய ஆயுளும், நல்லறிவுடன் கூடிய ஒழுக்கத்துடன் இருந்து "பாத்திரமாயுள்ள வென்றன் கோத்திரர்க்கே பகிர்ந்திடும் சொல் பலித்திடும் கை பலித்திடுமே" என்ற ஆசானின் பகர்ந்திடும் சொல் கைபலிதமாக வேண்டும் என எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவடியைப் போற்றி வணங்குகிறேன்.

வேதத்தின் உட்பொருள் ஆதார உயிர்ப் பதிப்பு செயல்களையெல்லாம் உள்ளடக்கிய தோத்திரப் பாடல்களும், ஆண்டவர்களின் திரு அவதார வாழ்க்கை வரலாறும், னீதித்திருமண ரகசியங்களையும், அடக்கத்தை நடத்துகின்ற சிறப்புகளையும் அதற்கான ஆச்சார அனுஷ்டான சடங்குகளையும் சாங்கியங்களையும், மார்க்க நாதப் பெருமான் அருளிய னீதித்திருமணமும் ஓதும் ஒரே குலமாக நின்று விளங்கும் சத்திய தேவ பிரம்மகுல சிறப்புகளும் மார்க்க மொழி கீதங்கள் மூலமாக வழங்கப் பெற்றுள்ளதை மக்கள் யாவரும் பார்த்து, படித்து,பயனடைய வேண்டும் என்ற நன்மாராயமாக உங்கள் செவித் துளைக்குள் புகுத்தாட்டி பஞ்ஞாட்சர நிலைகளை எல்லாம் நீங்கள் பெற்று வாழ்வாங்கு வாழ்வு வாழவேண்டும் எனக் கூறி வாழ்வாங்கு வாழ நமக்கு வாழ்வளிக்கும் வாக்மி மார்க்கனன்னாதர் அருளிய

**வாழ்வீர் சாலோக மாமுதல் சாயுச்யம்**
**வாழ்வீர் அச்சமற்றானந்த வாழ்விலே**
**வாழ்வீர் யான்பெற்ற பேறனைத்தும் பெற்று**
**வாழ்க வாழ்கவிங்கென் போலெல்லோருமே**

என்பதற்கேற்ப எல்லா சிறப்புகளும் பெற்று

**சிரித்து சிரித்து திருத்தி பொருத்தி சேமனிதிக் கணை**
**விரித்துப்பெருத்து இனித்து விடுதீ வீடும் விடிந்நதே**

அறியாமை எனும் இருள் வீடானது விடிய வேண்டும் எனும் நன்மாராயத்துடனும் நல்லாசிகளுடனும்

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

ஆதி மார்க்க னீதி அவையின் நூல் வெளியீடாக **மார்க்க மொழி கீதங்ங்ள்** என்ற நூல் வெளியிடப்பட்டது

**இடம்:** சென்னை

**நாள்:** 14-04-2022




*னரனாக இருக்கிற ஒருவன் மனிதனாகிப் பிறகு தேவன் ஆக வந்நவன் என்று னிரூபித்து, அவனை அந்ந மெய் னிலையில் குடியேற்றுவிக்க எழுந்நதுவே கல்வி. எத்தனைகோடியாக உன் மெய்யறிவு வளர்ந்நாலும் அவ்வளவையும் வளைத்துத் தன்னகத்து அடக்கிக்கொள்ளுகிற சலாசன பீடமாகிய சந்நிரவட்ட சிலாசனமே கல்வி. அந்நக் கல்வி இங்ஙு முளைகண்டு இருக்கிறது. கல்வியென்ற அந்ந உண்மைப் பெட்டகம் எழுவகைப் பொருள்கள் னிறைந்நதாக இருக்கிறது.*

~ **சாலை ஆண்டவர்கள்**



Copyright © AMNA Trust, Chennai

**02-04-2022 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**வாழ்வீர் சாலோக மாமுதல் சாயுச்யம்**
**வாழ்வீர் அச்சமற் றானந்த வாழ்விலே**
**வாழ்வீர் யான் பெற்ற பேறனைத்தும் பெற்று**
**வாழ்க வாழ்கவிங் னென் போலெல் லோருமே**

என்ற ஆசீர்பாதத்துடன் குருபிரான் அவர்கள் அவையை துவக்கினார்கள்.

**அறம்:** னீதி வழுவா னெறிமுறையில் வாழ்வதே அறம். அறம் சார்ந்து வாழக்கூடியதே மெய்ஞ்ஞானம் என்பதை திருவள்ளுவ பிரானும், **அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது** என்ற திருக்குறள் மூலம் உணர்த்தியுள்ளார்கள். மனம் அலையாமல் பாதுகாக்கும் செயலாகிய அறத்தை கைக்கொண்டு மனுத்தலை செழிக்க வேண்டும் என்பதே வேதத் தீர்ப்பாகும். கோவில்களும் ஆகமவிதிகளும் அறம் சார்ந்த செயலை வலியுறுத்தவே கட்டமைக்கப்பட்டுள்ளது. அறம் சார்ந்த வாழ்கையை வாழ்வதற்கு மதமோ, குலமோ, கோத்திரமோ, சாதியோ தடையில்லை. தடையற்ற முழுத்தீரத்தை அளிக்கும் மெய்க்கல்வியை பெற்று பலனடைய வேண்டும் என்பதையே சர்வ வேதங்களும் பறைசாற்றுகிறது. னாம ரூபமற்றவனாக, ஆவிப் பொருளாக அவரவருள் விளங்கிக் கொண்டிருக்கும் இறைவனை அறிந்தடைந்து, **யான் பெற்ற இன்பம் பெறுக வையகம்** என்ற சொல்லுக்கு ஒவ்வொருவரும் இலக்காகி நிற்க வேண்டும் என்பதை உணர்த்தி, ஜீவன் கண்ட சென்ம சாபல்ய குலமாக்க வேண்டுமென்பதற்கே ஆதி மார்க்க னீதி அவையானது இன்று கங்கணம் பூண்டு வந்துள்ளது.

ஜீவசகோதரர் மணிவண்ணன் அவர்களின் புரிதல் :
**பயணம் :** தந்தையிடமிருந்து பயணித்த னாம் தாயின் கருவறையில் தங்கி கருவாகி, உருவாகி இத்தேகம் எடுத்தோம்.

**விண்ணின்று இழிந்து வினைக்கீடாய் மெய்க்கொண்டு**
**தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து**
**உண்ணின்று உருக்கியோர் ஒப்பிலா ஆனந்தக்**
**கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே.**

என தேகம் எடுத்ததின் காரணத்தை திருமூலர் பிரானும் இப்பாடலில் அருளியுள்ளார்கள். ஆகாயமானது இப்பூமியைத் தாங்கிப் பிடித்திருப்பது போலவே, மண் தத்துவத்திலான இத்தேகத்தை நம் நினைவென்னும் ஆகாயம் தாங்கிப் பிடித்திருக்கிறது என்பதை ஆசான் மூலம் அறியும் போது தான் மனிதப் பிறப்பின் பயனை அடைகிறோம்.

**மனுவின் சிறப்பு :**
**னீதியெனும் பொருளான மனு**
**அரிய பிறப்பான மனு**
**வல்லமையும் சீர் சிறப்பும் வாழ்வினுக்கே வந்த மனு**
**பரமபத வாழ்வினுக்கே பாரில் படைத்த மனு**
**வரமான செர்க்கபதி வாழ்வினுக்கே வந்த மனு**
**னெடுங்கால வாழ்வினுக்கே னிலத்தில் படைத்த மனு**
**குடுத்தான் பரம்பெரியோன் குறித்த பெரும் வாழ்வினுக்கே.**
**படைத்தான் படைப்பனைத்தும் மனுவுக்காக மனுவை படைத்தது தன்னையறிய**



Copyright © AMNA Trust, Chennai 

என மனுவின் சிறப்பானது வேதங்களில் பல நிலைகளாக கூறப்பெற்றுள்ளது. மனிதனின் மேன்மையையும் தேகம் எடுத்ததின் கடமையும் சித்தர் முத்தர்கள் தங்கள் பாடல்களின் மூலம் உலகிற்கு பறை சாற்றியுள்ளதை உணரவேண்டுமானால், புண்ணிய உரு தாங்கி வரும் குருபிரான் வாய்க்க வேண்டும். அவர்களின் அருளமுதமாகிய னாத மொழிகளுக்கு நாம் செவிமடுப்பதின் மூலமே அறிவுத் தெளிவு பெற்று, வாழ்க்கைப் பயணத்தின் லட்சியத்தை அடைந்து பயன் பெற முடியும்.

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருஞானத்தாழிசை** பாடலுக்கு ஜீவசகோதர் அருண் அவர்களின் புரிதல் :

**பத்தோடிரு கலையாகிய பனிரெண்டினில் நாலும்**
**பாழ்போகிட மீண்டேவரும் பதியின் றலை காலும்**
**பெற்றோடிவந் திங்ஙேறிய பேர்மைந்தனைக் கண்டு**
**பேசுங்கலை யோடும் உறவாகிப் பிணக்கற்றாய்**
**கற்றோருடன் கற்றோமெனும் விஸ்தாரமும் அற்றாய்**
**கானற்புன லோகப்பிடி மானத்தையும் அற்றாய்**
**சித்தோடிரு சித்தாகிய சிற்றம்பலம் மீதே**
**சேர்ந்தாய் குறை தீர்ந்தாய் இனி வாழ்ந்தேயிரு மனமே.**

இப்பாடலில் சித்து என்பது சிற்றம்பலப் பொருளை குறிக்கிறது. அம்பலவாணராகிய குருபிரான் வந்து சித்தாகிய அறிவை அளிக்கிறார்கள். அதன் பிறகே கலையின் இரகசியத்தை அறிந்து, குறையற்ற வாழ்வை வாழ முடியும். குறை என்பது இத்தேகம். குறைவிலா னிறைவானது இத்தேகத்துக்குள் இருக்கும் மெய்பொருள். அம்மெய்ப் பொருளை அறிவித்து, அழியா னித்திய வாழ்வளிக்கும் பேரியக்கமே ஆதி மார்க்க னீதி அவையாகும் என்ற பகிர்தலுடன் அவையானது இனிதே னிறைவு பெற்றது.

**03-04-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்**

**வானெலாம் சிறப்போனாகி வருகுவேன் என வாக்கீந்து...** என்ற தெய்வத் தேடு கூடகம் பாடலுடன் குருபிரானவர்கள் சபையை தொடங்கி வைத்தார்கள்.

**காவலான புராதன வேதியர்...** என்ற குருஸ்தோத்திர பாடலுக்கு ஜீவசகோதரர் ராஜமகேஷ் அவர்களின் புரிதல் :

**காவல்:** காவல் என்றால் பாதுகாப்பு. நாம் தூலம் எடுத்த நாளிலிருந்து நம் தாய் தந்தையர் நம்மை பாதுகாத்து வருவதுபோல், நம் உயிருக்கு பாதுகாப்பு அளிப்பவர் மெய்குருபிரான் என்பதை வள்ளல்பிரான் அவர்கள் ஆறாம் திருமுறை சத்திய பெருவிண்ணப்பத்தில் தாய் தந்தை நினைத்தோ அல்லது நாம் நினைத்தோ நம் பிறப்பு அமையவில்லை. சித்திர குரத்தியின் அருளினாலே குழந்தை பிறப்பு அமைகிறது. எல்லாம் வல்ல இயற்கை உண்மை கடவுள் எப்படி நம்மை சுக்கிலத்தில் இருக்கும் போதும் தாயின் கருவறையை அடையக்கூடிய பயணத்திலும் கருபிடிக்கும் காலத்திலும் பிண்ட உற்பத்தி காலத்திலும் ஆவி உருவாய் உள்ளொளியாய் இருந்து நம்மை காத்து தாயின் கருவறைக்குள் அழற் நாற்றத்தையெல்லாம் சகித்து காத்து வந்தது என்பதை பகுதி பேரணு உரு, பூத பேரணு உரு, பவுதீக பிண்ட வடிவு என்று மூன்று நிலைகளாக அருளியுள்ளார்கள். மெய் குருபிரானவர்களே நமக்கு காவலாக வந்து நம் உயிர் வீணாகாமல் இருக்க பழக்குகின்றார்கள். காவல் என்பது திருவடியாக பாதமாக இருந்து நம் மனக் கவலையை மாற்றக்கூடிய மருந்தாக இருக்கிறது. அத்திருவடியே ஆசானின் னாதமாக, தனக்குவமை இல்லாதான் தாளாக உள்ளது.



Copyright © AMNA Trust, Chennai

**குருபிரானின் அமுத வர்ஷிப்பு :** காவலான புராதனம் என்பது பண்டை காலம் தொட்டு *சென்மந்நோறும் செய்த கன்மங்கடைத் தேற்றவந்த* ஆசானின் சீர்பாதமாக உள்ளது. *வேதவேதிய னாதபுராதன* னாதம் தான் புராதனமாக இருந்து வருகிறது. சத்திய வேதத்தில் *ஆதியிலே வார்த்தை இருந்தது. அது தேவனிடத்தில் இருந்தது. அது தேவனாகவே இருந்தது.*
மனுவை தேவனாக மாற்றக் கூடிய செயலை செய்வது ஆசானின் னாதம். அது மெய்வழி ஆண்டவர்களின் னன்னாதமாக மார்க்கனாதமாக இருக்கிறது.

குருவின் சிறப்பு பற்றி ஜீவசகோதரர் கிரகதுரை அவர்களின் புரிதல் : கு என்பது இருள் ; ரு என்பது பிரகாசம், அறியாமையாகிய இருள்-உலகிலிருந்து மீட்டு அறிவு என்ற பிரகாச உலகிற்கு ஏற்றி வைப்பவரே குரு. கல்வியை கற்பதன் பயன் னற்றாளை காண்பது. னற்றாளை கற்றுத் தருகின்றவர்களையே பெரியோர், ஆன்றோர், குருபிரான் என அழைக்கிறோம். ஒரு மெய் குருபிரானை சந்தித்து அவர் நம்மை சரி என ஏற்றுக் கொள்வது சரியையாகவும், பின் அவர் திருவார்த்தைக்கு இணங்கி னடப்பது கிரியையாகவும், குருவின் இரக்கத்தால் நம் நாமத்துக்குரிய மெய்ப்பொருளை அறிந்து பழகுவது யோகமாகவும், யோகம் மூலம் மெய் உணர்வு பெற்று நாம் பெறும் சிவானுபவமே ஞானமாகவும் உள்ளது. இச்செயலையே

**கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்.** என திருவள்ளுவர் பிரான் அருளியுள்ளார்கள்.

**குருபிரானின் அமுத வர்ஷிப்பு :** *தலைவிதி யெழுத்தைத் துடைத்தெழு துமதே தன்பயன் முரீதென்பர் விண்ணோர்.* வினையை அறுக்கும் செயலை செய்து வைப்பவரை மெய்குருவென அறியலாம்.

ஜீவசகோதரர் பழனிகுமார் அவர்களின் புரிதல்: முப்பாழ் என்பது இருள்-ஒளி-வெளியாக இருக்கிறது. முப்பால் என்பது அறம்-பொருள்-இன்பம். முப்பாலை அறிந்து வீடு அடைய வேண்டும் என்பதை நான்கு புருஷார்த்தங்களாக ஏமசித்தி, சாகாக்கல்வி, தத்துவ நிக்கிரகஞ் செய்தல், கடவுள் நிலையறிந்து அம்மயமாதல் என வள்ளல்பிரானும் அருளியுள்ளார்கள். கடவுள் நிலையறிந்து அம்மயமாதலே வீடடைதல். இம்மெய்ச் செயலையே

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்தி ருப்பாரே.** என திருமூலர்பிரானும் அருளியுள்ளார்கள்.

மெய்க்குரு பிரான் நம் மீது வைக்கும் அன்பே நம்முடைய வினைகளை நீக்கி சாகாக்கல்வி எனும் மரணமிலாப் பெருவாழ்வில் வாழ வைக்கிறது.

ஜீவசகோதரர் கணேஷ்வரன் அவர்களின் புரிதல் : **கர்மா:** கர்மா என்றால் வினை என்பதாகும். ஒருவருடைய கர்மா தான் பிறப்பிற்கு காரணமாக அமைகிறது. கர்மாவை *பிராரர்த்தம்-சஞ்சிதம்-ஆகாமியம்* என மூன்று வகைகளாக பெரியோர்கள் பிரிக்கிறார்கள். கர்மவினையின் பயனாக எடுத்த இத்தேகத்திற்கு மரணம் நிச்சயம். குருபிரானே மரணத்திலிருந்து மீட்டு சவமாய் இருந்த நம்மை சிவமாக்கி மரணமிலா பெருவாழ்வில் வாழ வைக்கிறார்கள்.

ஜீவசகோதரர் பிரபு அவர்களின் புரிதல் : **மனம்:** மனம் அடங்கும் செயலாகிய அடக்கம் என்பதற்கு குருபிரானின் அருளமுதம் தேவை. குருவின் வாய்மைக்குள் ஆனவர்களே னரன் என்ற னிலையிலிருந்து மனிதராக மாற்றப்படுகிறார்கள். மனம் திரும்புங்கள் பரலோகராஜ்ஜியம் மிக சமீபமாக இருக்கிறது என சத்திய



Copyright © AMNA Trust, Chennai

வேதமும் கூறுகிறது. நம் ஆண்டவர்களும் மனதைப் பற்றி கோடாயிதக்கூர் 241-வது திருவாக்கியத்தில், *ஞானம் அடையத் தடையாக இருப்பது உன் மாயை. அது உன் அறிவிலேயே கலந்து தடை செய்கிறது. அம் மாயையை வெல்வதற்கு ஒரே உபாயம், உன்னை ஆண்டுகொண்ட குருபிரானவர்களின் திருவாக்கில் னம்பிக்கை வைத்து அவர்கள் எல்லையில் னம் யூகம் பயன் தராது என்ற எண்ணம் உனக்குத் திட்டமாக வர வேணும்* என அருளியுள்ளார்கள்.

**குருபிரானின் அமுத வர்ஷிப்பு :** மனம் என்பது சுயம்பிரகாச னித்தியானந்த பிரம்ம சொரூபமாக இருக்கிறது. மெய்ஞ்ஞானத்தின் அடிப்படை நோக்கம் மனம் சைதன்யமாக வேண்டும் என்பதே. ஆசான் கையகத்தில் இருக்கும் வாளாயுதமே மாசுள்ள மனதை மாசற்றதாக மாற்றி அறிவு வடிவாக்கும் அதீத வல்லமை உடையதாகும் என்ற அருளமுத வர்ஷிப்புடன் சபை இனிதே நிறைவேறியது.

## 07-04-2022 ~ வியாழக்கிழமை சபை
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

**வான்மதிக்கொரல் - திருவாக்கியம் எண் : 61**

**இடும்பைகூரே ராட்சஸ வயிரே உன்னுடன் வாழ்வது அரிதே** என நீதி நெறியில் ஔவையாரும், **ஊண் இச்சை உறக்கம் உயிருக்கு ஆனியே** என்று நம் தெய்வமும் அருளியுள்ளபடி, புலனுக்கு அடிமையாவதே சகல துன்பத்திற்கும் நோய்க்கும் காரணம். புலனுக்கு அடிமையாகாமல் காப்பது ஆசானின் னாதமே.

**காலந்நாட்டிய காரணப்பா : பாடல் எண் : 28**
**காதியாவெனும் மார்க்க சிற்றூரங்ஙண்...** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி லாவண்யா அவர்களின் புரிதல்: நானே சத்தியமும் வழியும் ஜீவனுமாய் இருக்கிறேன். சத்தியத்தின் உருவாகிய குருபிரான் காலம் கடந்த பொருளை கைக்கொண்டு வந்து, தன்னைச் சார்ந்தவர்களுக்கு காலத்தின் ரகசியத்தை உணர்த்தி, நின்றதொரு பிரளயத்தின் அதிசயத்தை காண வைக்கிறார்கள்.

**குருபிரானின் அமுத வர்ஷிப்பு :** 75 வருட வைவஸ்சிய தவப்பாடுடன் இம் மெய்ச்செயலை மெய்வழி சாலை ஆண்டவர்கள் நடத்தி வந்தார்கள். 40 ஆண்டு என்பது நாற்பத்து முக்கோண வழியின் நேர்மையாக நாவைப் பற்றி வரக்கூடியதாக, முக்கோணத்தின் இரகசியமாக உள்ளது. மெய்வழியே இன்று ஆதி மார்க்க னீதி அவை என்ற னாமத்திலேறி மெய்யை வழங்கி கொண்டிருக்கிறது என்பதற்கு அங்கத்தினர்களே சாட்சி.

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் - ஆசைப்பத்து - பாடல் எண்: 8**
**கையால் தொழுதுன் கழற்சேவடிகள் கழுமத் தழுவிக்கொண்டு...** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி ஜீவிதா அவர்களின் புரிதல் : உள்ளமாகிய மகா மகசூக்கான இருதயத்தில் நின்று வணங்கக்கூடிய மெய் வணக்கத்தின் மூலமே ஆசானின் கழல் சேவடியை தொழ முடியும். ஆசானின் னன்னாதமே கழல் சேவடியாகிய சுத்தத் திருவடியாகும். அத்திருவடியே சாகாத்தலையின் இரகசியத்தையும், சாகாத்தலை வீற்றிருக்கும் பெருந்துறையையும் உணரச்செய்து, நமக்கு சர்வ வலதும் ஆண்மையும் தருகின்ற உயிரின் மீது பற்று வர வைக்கும்.

*எவனுக்குத் தெய்வத்தினிடத்து மேலான பக்தியிருக்கின்றதோ, தெய்வத்தினிடத்திற்போலக் குருவினிடத்தும் அந்த பக்தி இருக்கின்றதோ, அந்த மகாத்மாவிற்கே னாம் சொல்லிய இவ் வர்த்தங்கள் பிரகாசிக்கும்.*

~ குரு கீதை


Copyright © AMNA Trust, Chennai

அழியாப் பொருளைப் பற்றவே ஆசை வர வேண்டும் என்பதை உணர்த்துவதே ஆசைப்பத்தாகும்.

**குருபிரானின் அமுத வர்ஷிப்பு :** கழல் என்பது நம்மை அறியாமையிலிருந்து, பொய்யிலிருந்து கழற்றுவது என்று பொருள். இதையே **சுத்தத் திருவடி பற்றித் தொழுதிட சொந்த வீடு காண வாருமம்மா** என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். ஓர் எழுத்து மாத்திரை கோலிலிருந்து வெளியாகும் சுத்த திருவடி, பிறவிப் பிணியிலிருந்து உன்னை கழட்டி எடுக்கின்றது. இதனை **அத்தா ஆசைப்பட்டேன்** என மான்மியத்திலும், **பத்துப்பத்தாயஞ்சு பத்து முக்கவியும் சொன்னேன்** என்ற மெய்வழி னூல் பாடலிலும் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். எண்டிசைக்கும் நான் என முன் நிற்கும் பஞ்சாட்சரமாகிய சொந்த தேகத்தில் குடியேற ஆசைப்பட வேண்டும்.



*திரு. சாலை ரவி அப்பா அவர்கள்*
*நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை*

**ஆவூர் பசுபதீச்சரம் ஸ்தல வரலாறு** - ஜீவ சகோதரி உமாராணி அவர்களின் புரிதல் : இறைவன் பசுபதீஸ்வரர் - இறைவி மங்களாம்பிகை. இத்தலம் பதி பசுவோடு இணைந்து பாசம் நீங்கப் பெற்ற ஸ்தலமாக நம்முள் உள்ளதை அறிவிப்பதாக உள்ளது.

**குருபிரானின் அமுத வர்ஷிப்பு :** நாம் அறிவு விளக்கத்தை பெற வேண்டும் என்ற அடினாதத்தை வைத்தே இப்புராணக் கதைகள் கூறப்பட்டுள்ளது. நாகம் என்பது அரவு. காலசர்ப்பமாக இருப்பது காலனாகிய எமன். கொடிய விஷமுள்ள 8 வகை நாகத்தை அமுதம் சுரக்கும் ஒன்றாக மாற்றித் தருவது சாலையம்பதி. 118 சாஸ்திரங்களாகிய வேர் மேலும் தலை கீழ் ரகசியம் அறிந்தவர்களே சத்தியமெய் தேவகுல மக்கள். கற்பக விருட்சத்தின் ரகசியம் அறியாதவர்களே சபிக்கப்பட்டவர்கள்.

**அங்கத்தினர் மற்றும் சற்சன நன்மனத்தினர் சந்திப்பின்போது வெளியான குருபிரானின் அருள் வர்ஷிப்பு :** ஹயாத்து, உஜுது, கேசரி னடை, அலிப்-லாம்-மீம், சிபத்து, திக்கீர், மக்காம், இவற்றை மெய்வழி ஆண்டவர்கள் பல பாடல்களில் அருளியுள்ளதை கூர்மதி கொண்டவர்களுக்கே விளங்கும். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பதை முறையாக அறியாமல், அறியாமையை வளர்ப்பதற்கே பெரிய பெரிய இயக்கங்கள் பல பெயர்களில் இயங்கி கொண்டிருக்கிறது. மக்களுக்கு அறிவு இன்னது அறியாமை இன்னதென பிரித்துகாட்டி, தெளிந்த அறிவை அளிக்கவே ஆதி மார்க்க னீதி அவை இயங்கிக்கொண்டிருக்கிறது என்று அருளி குருபிரான் அவர்கள் சபையை நிறைவு செய்தார்கள்.

## 09-04-2022 ~ சனிக்கிழமை சபை
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

**அருட்பிரகாச வள்ளலாரின் சன்மார்க்க நெறி பற்றி குருபெருமானின் அருள் வர்ஷிப்பு:**

வள்ளலார் மீதுள்ள பக்தியால் முக்தி கிடைக்குமா?
ஜீவகாருண்யம் என்பது உயிர்க்கொல்லாமையா; அல்லது உயிர்களுக்கு உணவளிப்பதா?



Copyright © AMNA Trust, Chennai

பசிப்பிணி அகற்றினால் பிறவிப்பிணி அகலுமா?
உணவளிப்பதால் அறிவு வளருமா, சோம்பேறித்தனம் வளருமா?
அசைவம் உண்ணாமல் இருந்தால் சைவமா?
இந்த உடலே புலால் தேகம் எனும்போது எது சைவம்?
சைவம், அசைவம் உணவில் உள்ளதா?

நால்வகை ஒழுக்கங்களில் ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் என்றால் என்ன?

ஏமசித்தி, சாகாக்கல்வி, தத்துவ நிக்கிரகம் செய்தல், கடவுள் நிலையறிந்து அம்மயமாதல் என்னும் **புருஷார்த்தங்கள் நான்கின்** மூலம் அடையும் மெய்ச் செயலாகிய மரணமிலாப் பெருவாழ்வு எங்கே?

சன்மார்க்கத்தின் நான்கு படிநிலைகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பதில் முதல் மூன்று நிலைகள் தாண்டாமல் சன்மார்க்க னிலையாகிய ஞானனிலையைக் கைப்பற்ற முடியுமா?

இவை அனைத்திற்கும் விடை தந்து நல்வீடு-அடைய வைக்கும் இடமாகத் திகழ்வதே **ஆதி மார்க்க னீதி அவை.**

**கோடாயிதக்கூர் வாக்கியம் எண்: 89** வேத சாஸ்திரங்கள் படித்து வேத விளக்கம் எவ்வளவு கேட்டாலும் முத்தி நெறியை அறிந்திட முடியாது. நம் போல் தேகம் எடுத்து வந்துள்ள ஒரு சற்குருபிரான் நம் மேல் இரக்கம் கொண்டு தொட்டுக் காட்டாத வரை அதன் உண்மைப்பொருள் விளங்காது. வேத சாஸ்திரங்கள் கற்றவர்களுக்கு மனம் சம்மதிக்க வேதசாட்சியாக ஞான போதனைகளை பெரியோர்கள் வழங்குகிறார்கள்.

**சத்தியவேதம் – ஆதியாகமம் அதிகாரம் - 03:** 1 முதல் 5 வரையிலான திருவசனங்களுக்கு ஜீவசகோதரர் விஜயகுமார் அவர்களின் புரிதல் : சர்ப்பம் சாத்தானின் அம்சம். வஞ்ச மனமாக கீழ்நோக்கி பாயும் நபுசாக உள்ளது. வஞ்சக சதி செய்யும் புலன்களுக்கு உதவி தரும் வாகனமாக உள்ளது. நித்திய அறிவை ஒட்டாது தடுத்து அறிவைப் புலன்கள் வென்று காலனிடம் சிக்க வைப்பதே தந்திரமான சர்ப்பத்தின் செயலாக உள்ளது. அழி அவாவாகிய மனமே சர்ப்பமாக, மது செவிதனில் விஷப் பாம்பாக உள்ளது. மனதிற்கு நல்ல உணவு கெட்ட உணவு தர கண்ணும் காதும் இருக்கிறது. மனமாகிய வயிறு கோளாறு அடையும் போது சுகம் தரும் வைத்திய நாத மருந்து அந்த விஷத்தை முறிக்கிறது.

**குருபிரானின் அமுத வர்ஷிப்பு :** பைபிள் காலத்திற்கு முன் வந்த வேதங்களிலே சைத்தானின் அம்சமான இரட்டை நாக்குள்ள பாம்பை இரண்டு நிழல் கிரகங்களான ராகு, கேது என முன்னோர்கள் கூறியுள்ளார்கள். காளிங்கநர்த்தனத்தின் மூலமாகத்தான் காளிங்கன் எனும் விஷப்பாம்பின் விஷம் முறியும். இச்செயலையே ஆண்டவர்கள் **தாவள்ய மாங் காளிங்ஙன் மடுவோரம்** என்ற பாடலிலும், **எங்ஙுனடமிடு ரண்டுபாதமி லொன்றுயர்த்தியே ஒன்றினா லெங்வு மொருசெவி டால்மிதித்த "வா"** என பீர்முகம்மது அவர்களும் அருளியுள்ளார்கள். ஏதேன் தோட்டத்தில் நன்மை தீமை எனும் வினைக்குள் போனதால் மனிதன் சாவிற்கு போய்விட்டான். வினையினால் தான் பிறப்பு, இறப்பு உண்டாகிறது. வினை அற்றுப்போகும் போது தான் சாகாமை எனும் பிறப்பற்ற நிலை கிட்டும்.

**ஆறாவது அறிவு:** ஐந்தறிவு இன்னதென்று அறிந்து அதை அறிவிக்கக்கூடிய வல்லமையாக இருக்கக்கூடியது ஆறாவது அறிவு. அவரவரிடத்தில் உள்ள அறிவு இன்னதென்று அறிவிக்கின்ற பொருளைத் தொட்டுக்காட்டி அதில் ஆக்கி வைக்கும் செயலே பிரம்மவித்தை. அறிவை அறிந்தால் அறம், தர்மம் என்னவென்று தெரிந்து வினையை அறுத்து பிறவானெறி பெறலாம். பொய் இல்லாமல் மெய் ஜொலிக்காது. நாம் உண்டாக்கிய தெய்வம் நகல். நம்மை உண்டாக்கிய தெய்வம்தான் அசல். பொய் மூலம் மெய்யை உணர ஏற்படுத்தப் பெற்றதுவே கோவில்கள். *விரதம்-நோன்பு-பத்தியம்* இவற்றின் உண்மையான


Copyright © AMNA Trust, Chennai

பொருள் யாருக்கும் தெரியாது. பசியுடன் இருந்தால் கோபம் தான் வரும். உடலில் மாற்றம் இருக்கும். அறிவில் மாற்றம் இருக்காது. ஆசான் மூலமாக அறிவுத்தெளிவு பெற்று உண்மைகளை உணரும் போதுதான் பத்தி கொண்டு பசியுடன் பத்தியம் இருப்பதன் காரணம் தெரியும்.

**ஆதிமான்மியம்:** ஆண்டவர்கள் மூன்று வருடங்கள் ஊண், உறக்கம் இல்லாமல் தவ வேள்வியில் இருந்து தங்கள் திருக்கரத்தால் எழுதிய ஆதிமான்மியம் 27 பகுதிகள் (வால்யூம்கள்). அத்தனையும் தீக்கிரையானது. இன்று உள்ள மான்மியம் அனந்தர்கள் நினைவிலிருந்ததையும் அதற்கப்பால் உள்ளதை ஆண்டவர்கள் அருளியதையும் வைத்து உண்டாக்கப் பெற்றது. ஆண்டவர்கள் தங்களின் 27 வயதில் தனிகைமணிப்பிரானை சந்தித்து, அவர்களின் அருளால் யாவரும் பெறுதற்கரிய சன்னதங்கள் பெற்று, 1901-வது வருடம் தங்களின் 40-வது வயதில் மக்களுக்காக இறங்கி வந்தார்கள். ஆதிமான்மியத்தில் அருளப்பெற்றுள்ள அத்தனை ரகசிய பொக்கிஷங்களும் ஒரு பிரம்ம நிஷ்டரின் இரக்கத்தால் விரிக்கின் பெருகும். **புதையலான பெருந்நவக் குன்றது இதயம் மேவஇ ருள்கிழித் தோங்கிடும்** என்ற பாடலுடன் பரிசுத்த ஆவி தெய்வத்தின் பொற்பாதங்களை வணங்கி குரு பிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

**10-04-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி**

ஜீவசகோதரர் கௌதம் அசோகன் அவர்களின் புரிதல் :
**குரு ஸ்தோத்திரம் :**

**அண்ட ராலும றியவொண் ணாத்திரு**
**அண்ட ரண்டப கிரண்டம் பாய்ந்துமே**
**அண்ட மோரணு வினுள்ளே காட்டிய**
**தொண்ட ருள்ளத்தொ டுங்கும்த னியரே**

தன்னுலகை அறிந்த பெரியோர்களே அணுவுக்குள் அண்டத்தை காட்டும் வல்லபம் உடையவர்கள். அண்டம் என்பது உலகம். உலகம் என்பது தன்னுலகை குறிப்பதே அன்றி புற உலகை குறிப்பது அல்ல என்பதை திருவள்ளுவபிரானும்,

**சுவைஒளி ஊறுஓசை நாற்றமென ஐந்தின்**
**வகைதெரிவான் கட்டே உலகு** என அருளியுள்ளார்கள்.

**மெய்ம்மணம் :** ஆசானின் னாதமே மெய்ம்மணம். அதில் வாசம் செய்வதின் மூலமே மெய்ப்பொருளான ஜீவனை அறிந்து சொந்த தேகத்தில் குடியேற முடியும் என்பதை உணர்த்தும் தெய்வத் திருவாக்கியம் - **எமபடரடிபடு கோடாயிதக்கூர் : 96**

*னமது சொந்த தேகம் அழியாதது, அனாதியானது. அதைப் பெறவே னாம் பிறந்நோம். உன் ஊனக் கண்ணுக்கு அறிய முடியாத பொருளாக உன்பால் அது வைக்கப்பெற்றிருக்கிறது. அதையே மூல மந்நிரம், பஞ்ஞாட்சரம், அஷ்டாட்சரம், பிரணவம், கலிமா என்பர். அதைப் புனற்றுறைக் கோயிலாக இதயாசனத்தில் போய்ச் சந்நிப்பதையே வேதம் பிரம்ம வித்தை என்று கூறுகிறது.*

**தொண்டர்:**

**பெரிது பெரிது புவனம் பெரிது**
**புவனமோ நான்முகன் படைப்பு**
**நான்முகன் கரியமால் உதிரத்தில் உதித்தோன்**
**கரிய மாலோ அலைகடல் துயின்றோன்**
**அலைகடல் குறுமுனி கலசத்தில் அடக்கம்**
**கலசமோ புவியிற் சிறுமண்**



Copyright © AMNA Trust, Chennai 

**புவியோ அரவினுக்கு ஒரு தலைப்பாரம்**
**அரவோ உமையவள் ஒரு சிறுமோதிரம்**
**உமையோ இறைவன் பாகத் தொடுக்கம்**
**இறைவனோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்**
**தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே** - என்ற ஔவையார் பாடலுக்கிணங்க, தொண்டராகிய குருபெருமானின் இருதயத்தில் தான் ஈசன் விளைந்து விளைவேறி இருப்பான் என வேதங்கள் கூறுகிறது.

**வேதம் :** எழுதாத எழுத்தாகவும், ஒதாமலோதும் மெய்ச்செயலாகவும் இருப்பதே வேதம். அம் மெய்ச்செயலில் பழகி வைப்பவரே வந்த வேதமாகிய ஆசான். அவர்களின் னாதமே பாஷையெலாம் படைத்த பரிபாஷையாகும். ஆண்டவர்களும் ஆதி மான்மியத்தில், சமிக்ஞை முதலாவதாகிய பாஷைகளினின்றும் சகல பாஷைகளையும் படைத்தான் என அருளியுள்ளார்கள்.

***வேகம் வெகுமதி வேகம் அறிவின் முனை*** என்ற தெய்வ வாக்கின்படி, மனவேகத்திலிருந்து மாற்றி அறிவின் முனையில் இருத்தும் ஆசானின் ஆசீர்பாதத்துடன் அவை இனிதே நிறைவேறியது.

**10-04-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்**

**தெய்வத் தேடு கூடகம் :**

**வந்நது னிஜந்நான் அய்யா**
**வளர்கயி லாயந் நன்னைத்**
**தந்நது எங்ஙட் கென்று**
**தானதை இறக்கி வைத்து**
**மந்நிர ஸ்திரத்தை எங்ஙள்**
**மனந்நனி லழுத்தி னாளும்**
**பந்நுலாம் பூமி யெங்ஙும்**
**பரப்பவென் றிருக்கு தையா**

முறையான வணக்கம், மாசற்ற இரக்கம் வருங்ஙால தீர்க்கம் ஆகிய இம்மூன்றும் மந்நிர ஸ்திரமாகும். இதை அவரவர் மனந்தனில் அழுத்தி நித்தமும் வாழக்கூடிய ஒரு மெய்ஞான வாழ்க்கையை நமக்கெல்லாம் யுகப்பரிசாக அளித்த தெய்வத்தைப் போற்றி வணங்குவோம் எனக்கூறி குருபிரான் அவையைத் தொடங்கினார்கள்.

**மௌன வைப்பின்வ கைவிரித் தேயெனைக் ...** என்ற குருஸ்தோத்திர பாடலைத் தொடர்ந்து ஜீவசகோதரி அன்னலட்சுமி அவர்களின் புரிதல்: நான் என்பது பிரம்மம். மனம் என்பது எண்ணங்களின் தொகுப்பு. கவனம் என்பது புத்தியும், சித்தமும் ஒன்றாக இணைவது.

**னாதம்வி ளங்கும்சஞ் ஜீவி – னல்ல னடுனிலை னாயக மானசஞ் ஜீவி ...** என்ற ஆனந்தக் களிப்பு பாடலைத் தொடர்ந்து ஜீவசகோதரி பொன்பிரியா அவர்களின் புரிதல்: குருபிரானின்

*குரு எவரோ அவர் சிவனெனப்படுகின்றார். சிவன் எவரோ அவர் குருவெனக் கருதப்படுகின்றார். குரு வேறு சிவன் வேறு என்று எவன் விகற்பத்தைச் செய்கின்றானோ, அன் னரன் மகா சண்டாளனாகின்றான்.*

~ **குரு கீதை**



Copyright © AMNA Trust, Chennai

வாக்காகிய பிராணவ னாதமே நம்மை படைத்து காத்து இரட்சிக்கும் ஓங்காரத் தொனியாகும். வேதத்திற்கு னாதனாகிய ஆசான் வந்த பின்தான் வேதத்தாய்க்குச் சந்நதிகள் உண்டாகிறது என்பதனை வைத்தே *சமரஸ வேத னாதாவே* என்ற திருனாமம் வைக்கப்பெற்றது. ஓங்கார நாத தொனியிலிருந்து வெளியான பஞ்ஞுபூதங்களின் வரிவடிவமாகிய நமசிவய என்பதே சைவ சமயத்தின் மூலமந்திரமாகும். உலகின் அனைத்து மத மூலமந்திரங்களும் ஒரே மெய்ப்பொருளையே குறிக்கின்றது என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

ஜீவசகோதரர் பழனிக்குமார் அவர்களின் புரிதல்:

**சித்திரமும் கைப்பழக்கம்**
**செந்தமிழும் நாப்பழக்கம்**
**வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் – நித்தம்**
**நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்**
**கொடையும் பிறவிக் குணம்** என்ற ஔவையார் பாடலில், புறத்தில் அலையும் மனதினை அகமுகமாக திருப்ப நாம் பழகுவதே கல்வி எனும் மனப்பழக்கம். ஆசானிடம் இதைப் பழகும் பொழுது வைராக்கியம் அவசியம். வைராக்கியமற்ற மக்கள் கூறுவது யாதெனில் தங்களின் சவுகரியப் பாட்டு இஷ்டங்களுக்குப் பொருத்தமில்லை எனவும், குறுகிய வட்டத்தினுள் நினைவை வைத்து இப்படி இருந்நால் தேவலை எனவும், விதியின் மேல் பழியைச் சுமத்துவதேயாகும். இதயப் பிரகாச மகாமந்நிரப் பிரேரணையாகிய பெரிதைப் பெரிதெனக் கூறாமல் ஈனப் பேடிமனம் படைத்து தன்னைத் தானே அவமானபடுத்திக் கொண்டவர்களும் உண்டு. மெய்வழி குருமார் சொல் மேல்நோக்கு என்பதை ஆசானின் அருளால் வேத சாட்சியாக நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஜீவசகோதரி அஞ்ஞனா அவர்களின் புரிதல்:

**உயர்வு அற உயர் நலம் உடையவன் எவன்? அவன்**
**மயர்வு அற மதி நலம் அருளினன் எவன்? அவன்**
**அயர்வு அறும் அமரர்கள் அதிபதி எவன்?**
**அவன் துயர் அறு சுடர் அடி தொழுது எழு , என் மனனே!** என்ற நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி பாடலுக்கான புரிதல்: உலகிலுள்ள உயர்வுக்கெல்லாம் அப்பாற்பட்டு பொய்-மெய், நல்லது-கெட்டது, பாவ-புண்ணியம் எது என்பதை அறியாமல் மறந்து மறந்தே போய் விட்டு மயக்க நிலையில் உள்ளவர்களை தன் னாதத்தால் மெய்யான நிலைக்கு மாற்றுபவரே குருபெருமான்.

**குருபிரானின் அமுத வர்ஷிப்பு :** பசித்தவருக்கு உணவளிப்பது ஜீவகாருண்யம் அல்ல. பசியால் மெய்ஞான இச்சையற்றுப் போவதைத் தடுக்கவே பசியாற்றுவது. வாழ்நாளாகிய மூச்சு விரயமாகாமல் மெய் ஆசானிடம் பழகுபவனே சன்மார்க்கி.

ஜீவசகோதரி வாசுகி அவர்களின் புரிதல்: மாதா, பிதா, குரு, தெய்வமும் சேர்ந்து ஓர் உருவாக விளங்குபவரே ஆசான். ஜீவன் வேறு சிவன் வேறல்ல என்பதை அறிவு சம்மதிக்க அருளி பூரண நிலைக்கு ஏற்றும் புண்ணிய உருவே குரு.

**அன்னைபி தாவுமா னின்றரன்னாள்**
**முன்னறி தெய்வ னம் தந்நை இன் னாள்.**

**னீதியெனும் பொருளான மனுக்கு லத்தை ...** என்ற பாடலைத் தொடர்ந்து ஜீவசகோதரர் கருப்பசாமி அவர்களின் புரிதல்: ஆதி மெய் உதய பூரண வேதாந்நம் என்ற ஐந்து வாக்கியங்கள் நம்முள் பஞ்ஞாட்சரமாக விளங்குவதை உணர்ந்தவர்களே தேவர்கள். இருளில் வழி தெரியாமல் தவிப்பவர்களின் அச்சங்களை அருள் விளக்கின் மூலம் அகற்றுபவரே குருபெருமான். *இருளில் வழி தெரியாத இளம்பருவம் அருள் விளக்குன் அன்பளித்தாய் யாதுன் மேல்* என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

ஜீவசகோதரர் சுந்தரவடிவேல் அவர்களின் புரிதல்: மக்கள் அகத்தினுள் இறைவனை அறியாமல் உலகெங்கும் வெளியில் தேடி அலைகிறார்கள். வாசியாகிய நினைவை அறியாமல், பொய் குருமார்கள் மூச்சை அடக்குவதே வாசி யோகம் என்ற அறியாமையை மக்களிடத்தில் விதைக்கிறார்கள். வாசியைப் பற்றி
**அன்னமயில் வாசியென்ற குதிரை யேறி**
**அகிலமண்ட மரைனொடியில் வரவு மாகும்** என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

ஜீவசகோதரர் பாண்டி அவர்களின் புரிதல்: னாற்றக் கருவறையில் இருந்து நம்மைக் காத்து இரட்சித்த, பெற்ற தாயின் அன்பை விட கோடி சூர்யப்பிரகாசமான கஸ்தூரி களபம் மணக்கின்ற கருவறையில், ஒரு க்ஷண னேரமாவது வைத்துப் பெற்றெடுத்த உன் ஆசானாகிய தேவ அன்னைக்கு உன்மேல் எவ்வளவு அன்பிருக்கும். உலகத்தில் சகல சம்பத்துகளையும் தன் மகனுக்காக செய்த தந்தை கடைசியாக அவனைக் கொல்வதற்கு அவர் ஒரு கத்தி தயார் செய்து வைப்தில்லை. அது போல இறைவனும் எண்ணிறந்நகோடி உயிரினங்பளை மனிதனுக்காகப் படைத்து, னரகமென்னும் வல்லிடும்பைப் பேராயுதத்தை முன்னமே தயார் செய்தது ஏனெனில் மனிதன் இறைவனின் படைப்புகளை மட்டும் அனுபவித்து தன் கடமையை மறந்ததன் தண்டனையாகவே இதை செய்தது. அக் கடமையை மனிதன் நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவே இறைவன் தேகமெடுத்து இவ்வுலகிற்கு அவதாரம் செய்வதை அவரின் செயலால் தான் நாம் உணர முடியும் என்பது ஆண்டவர்கள் திருவாக்கு.



*திரு. சாலை ரவி அப்பா அவர்கள்*
*நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை*

**பரவிரதாச் சாரியென்று மேசமயாச் சாரினானென்...** என்ற ஐம்மணிப் பொதிகை பாடலுக்கு ஜீவசகோதரர் முனியாண்டி அவர்களின் புரிதல்: இறைவனின் அற்புதப் படைப்புகளை வெறும் வேடிக்கையாகக் காணும் வினோத மக்களுக்கு, மேலான பரத்திற்கான விரதங்களை அனுஷ்டிப்பதாக கூறுபவர்களையும், சமயங்களைப் பற்றி அறிந்ததாகக் கூறி போதிக்கும் அறமில்லாத உபதேசங்களையும் ஒழித்து, ஒரெழுத்திலிருந்து விரிந்த வரம்பில்லா மெய்ஞானத்தை ஒரு மொழியில் நான்கு மறைகளையும், அங்கம் ஆறும் துலங்க அவரவர் தலையில் வழங்க வந்தவர்களே சாலை ஆண்டவர்கள்.

ஜீவசகோதரர் ஆனமலையான் அவர்களின் புரிதல்: ஒரு இடத்திற்குச் சென்று மீண்டும் கிளம்பிய அதே இடத்திற்கு வருவதே பயணமாகும். அது போல தினமும் உறக்க உலகிற்கு சென்று வரும் மனிதனுக்கு அது கடந்து விழிப்பு உலகமான சந்திர சூரியனற்ற இடத்திற்கு ஆசானின் அருளால் அகத்தில் சென்று வரக்கூடிய செயலே நிஜமான பயணமாகும்.
இதையே ஆண்டவர்கள் மனிதனுடைய தேக ஆலயத்திற்குள் பிரயாணம் செய்வதே மெய்த்தொழுகை என அருளியுள்ளார்கள்.

ஜீவசகோதரர் செல்வம் அவர்களின் புரிதல்: புறத்தில் நிலையில்லாமல் துன்பம், குழப்பம் சஞ்சலமாக அலைகின்ற மனதை நிலை நிறுத்துபவரே குரு. அவரே *னிலைனிற்கா மனந்நன்னை னிறுத்தி வைப்பார்.* பிறப்புக்கு காரணமாகிய வினை அற்றுப்போகச் செய்யும் செயலைப் பழக்கி வைப்பரே ஆசான். *மயங்நா*



Copyright © AMNA Trust, Chennai

*திருமனமே – மயிர்ப் பாலம் கடத்தும் குரு னாதரருகிருக்க* என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

சபையின் நிறைவாக ஜீவசகோதரர் திருமூர்த்தி அவர்கள் *அம்மையே அப்பா ஒப்பிலாமணியே* என்ற திருவாசகப் பாடல் படித்த பின் அவை இனிதே நிறைவேறியது.

**21-04-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**குருபிரானின் அமுத வர்ஷிப்பு :**

**என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்தது இல்லையே**
**என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்து கொண்டபின்**
**என்னிலே இருந்த ஒன்றை யாவர் காண வல்லீரோ**
**என்னிலே இருந்திருந்து யான் உணர்ந்து கொண்டேனே**

என்ற சிவவாக்கியர் பாடலுடன் அவை நிகழ்வுகளை தொடங்கினார்கள். தேடுகின்ற பொருள் இன்னதென்று தெரிந்து தேடவேண்டும். இறைவனின் உயர்ந்த படைப்பான மனிதனை அறிந்து கொண்டால் இறைவனின் ரகசியத்தை அறிந்து கொள்ளலாம். சர்வ படைப்புகளின் ரகசியத்தை அறியும் பொருள் ஒன்று மனுத்தலையுள் உள்ளதை மெய்க்குருபிரானின் இரக்கத்தால் அறியலாம்.

**வான்மதிக் கொரல் வாக்கியம் எண் 62 :** மெய்வழியைச் சார்ந்த அனந்தகி தன் நித்திய தேகத்தில் குடியேறிய நிகழ்வு பற்றியது. சுத்த நினைவுடன் ஆண்டவர்கள் மேல் கொண்ட அன்பினால் அந்தப் பலனை அளக்கிறார்கள். தந்தையின் எண்ணம் மூலம் வந்த நாம் மீண்டும் எண்ணத்தின் மூலமாகவே செல்ல வேண்டும். ஆனால் நம் எண்ணமோ, ஆகாயமளவு விரிந்துள்ளது. *காரிடியெமனுன் மேற்கை கலந்திடும் நேரந் நன்னிற் கூறுகெட்டுறு முகின்ற செயலே தீட்டாக உள்ளது.* அது வரை நாம் போற்றி வந்த மதிப்பு எங்கே போயிற்று என ஆண்டவர்கள் கேட்கிறார்கள். சாகாக்கலை பெற்றுக் கொண்டவர்கள் தங்கள் ஜீவப்பிரயாண நேரத்தில் ஜீவனைக் கண்ட மகிழ்ச்சியும், அவர்களின் தூலத்திலிருக்கும் பத்து அடையாளங்களும் அதனை அளக்கும் பெருமானின் திருச்செயலாக உள்ளது.

**காலந்நாட்டிய காரணப்பா பாடல் எண் : 29 - மக்கள் நம்பர் பெயரும் முழு லாசமும்...** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி லாவண்யா அவர்களின் புரிதல்: செவியில் சுவை உணர்ந்தவர் மக்கள். நம்பர் என்பது எண்ணாக, எட்டாக, அகரப் பொருளாக, ஜீவனாக உள்ளது. தன் அச்சு போல் அறிவு வடிவாக ஜீவவிலாசம் தந்து நம்மை எமன் கையில் சிக்காமல் மெய் ஆசான் காக்கின்றார்கள். இப்பாடல் ஒரு தீர்க்கதரிசனப் பாடலாக அமைந்துள்ளது என குருபிரான் அருளினார்கள்.

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் - ஆசைப்பத்து - பாடல் எண்: 9**

**செடியா ராக்கை திறமா வீசி ...** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி ஜீவிதா அவர்களின் புரிதல்: நம் தேகமாகிய அனித்திய ஆக்கை குடிலே செடியார் ஆக்கை. நான் இத்தேகம் அல்ல, நம்முள் இருக்கும் நித்திய தேகத்தில் குடியேறி வாழவே நம் பிறப்பு என ஆக்கி வைப்பவரே சிவபுரத்து அரசராகிய குருபிரான். இதனை, *அனித்திய ஆக்கைக் குடிலையை விடும்போது ரூகானி என்னும் ஜீவ தேகத்தில் புகுத்தாட்டி வைக்கவேண்டும் ஆண்டவரே* என பாவ விமோசனத் திருமந்திரத்தில் அருளப்பெற்றுள்ளது. அருள் எனும் யுகாந்த நாட்டு செல்வமே, அருட்பெருஞ்ஜோதி. மூன்றாவது கண் கொண்டு மெய் உணர்வின் மூலமாகக் காணும் அறிவு பிரகாசமே கதியான ஜோதி கண்டேன் என்பது. இதையே **கண்டேன் தேவஆவியை கடைத்தேற என்கிறோம்**. பழஅடியார் என்பது மூலப்பழம்



Copyright © AMNA Trust, Chennai 

பண்ணாரமணி உண்டைப்பெட்டகம் சுமந்துவரும் குருபிரான். அவர்களே படியாகிய உலகு.

**குருபிரானின் அமுத வர்ஷிப்பு : தெளிந்திடுக தன்னுலகமே விடியும் சாலை.** புறத்தில் பார்ப்பது உலகமல்ல, மூன்றாவது கண்கொண்டு பார்த்து தன் சொந்த தேகமாகிய அகமிய உலகில் குடியேறி வாழ்பவர்களைப் பார்க்க ஆசை கொள்வதே ஆசைப்பத்து.

**தேவாரத் திருப்பதிகம் - திருஆவூர் பாடல் 1**: **புண்ணியர் பூதியர் பூதநாதர்** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி உமாராணி அவர்களின் புரிதல் : ஜீவனை பாதுகாக்கும் செயலைப் பழக்கி வைப்பவர்களே புண்ணியர், பூதநாதர் எனும் குருபிரான். புண்ணியத்தின் உரு உன்ஆசான். அவர்கள் சொற்படி நடந்தால் உன் மூச்சு வீணாகாது. வேர் மேலும் தலை கீழாக உள்ள எக்கின் மரத்தின் ரகசியத்தை குருபிரானின் அருளால் அறியலாம்.

**குருபிரானின் அமுத வர்ஷிப்பு :** மேற்படி பாடலின் இரத்தினச் சுருக்கம் வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல் என்பதாகும். ஒரு மொழி கீதை, ஓரிதழ்தாமரை, ஓரெழுத்து மாத்திரைக்கோல் என்பது ஆசானிடத்தில் உள்ள முக்கூர் கத்தியாக உள்ளது. *மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய்த் தொடங்கினோர்க்கு ஓர் வார்த்தை சொல்லும் சற்குரு வாய்க்கும் பராபரமே.* உறக்கம் அணுகாத, அறியாமை நுழையாத, அந்தரத்தில் துந்துமி முழங்குமிடமே தரணியில் இல்லாத தனிச் செயற்பதி எனும் மெய்வழிச்சாலை. கண், காது, மூக்கு, வாய், உடம்பு என்ற இந்த ஐவழிக்கு அப்பால் நின்று விளங்கும் ஒரு பொருளாக இருப்பதே மெய்வழி. ஜீவகாருண்யம் என்பது உன் மூச்சு நஷ்டம் அடையாமல் காக்கும் செயல். இறைவனைப் பற்றிய தத்துவ வடிவங்களும் அவரவர் எண்ணப்படி இருப்பதும் இறைவன் அல்ல. ஒரு மெய்ஆசானின் அறிவான வார்த்தை கொண்டு அறிவை அறிந்து துலக்கத்திற்கு வருவதே நிஜமான இறைவனாகும்.

**சத்தியவேதம் – ஆதியாகமம் அதிகாரம் - 03:** 6 முதல் 10 வரையிலான திருவசனங்களுக்கு ஜீவசகோதரர் விஜயகுமார் அவர்களின் புரிதல் : மனுவின் தனிச்சீதனமாகிய அமானிதம் எனும் பெருந்தவப் பொருளானது, இவனது செயல் சீரின்றி மாரணச் செயலாக, மாயையாக உள்ளது. இதனால் கர்த்தரால் விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியை ஏவாள் புசித்தாள். இந்த வெறிகொண்ட மனதையே வேதம் பேய் என்கிறது. மேலும் கீழ் நோக்கமான மனதின் செயலால், புற உலகைக் கண்டு தன் புறவுடல் நிர்வாணமாக இருப்பதைக் கண்டார்கள். அறிவு வடிவான தேவனின் நாதத்தை கேட்டபோதும், மனதின் கீழ் நோக்கத்தால் அவர் முன் வருவதை தவிர்த்து தீமைக்கு ஆளாகினார்கள். அழி அவாவாகிய மனம் மது செவிதனில் விஷப் பாம்பாக நின்று மெய் ஆசானின் நாத மருந்தை உட்புக விடாமல் தடுத்து இறுதியில் எமனிடம் சிக்க வைக்கிறது.

**குருபிரானின் அமுத வர்ஷிப்பு :** கடவுளும் கர்த்தரும் ஒன்றா எனில் இல்லை. கடவுளைக் காண்பித்துக் கொடுப்பவரே கர்த்தர். குருவின் வார்த்தையைக் கேட்காமல், பெண் சொல் கேட்பவன் நரகத்திற்கு ஆளாவான் என்ற எச்சரிப்பு வசனமே ஆதியாகமத்தின் இரத்தினச் சுருக்கம் ஆகும்.

**அகரம்**: **அகர முதலவ்முத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு.** அகரம் என்பது அறிவாக ஜீவனாக உள்ளது. பிள்ளையார், சிவன், முருகன் ஆகியோர் அகரமுதல்வன். அனைத்து உயிரினங்களிலும், இரை, இருப்பிடம், இணை எனும் நினைவுடன் அறிவாகிய அகரப்பொருள் இருந்தாலும், அது கடந்து அப்பால் அறியக்கூடிய அறிவு மனுவுக்கு மட்டுமே உள்ளது. மூச்சு இயங்குவதற்கு காரணப் பொருளாக இருப்பது ஜீவன். மனம், மூச்சு, கவனம், உணர்வு இவற்றிற்கு ஒரு தொடர்பு உள்ளதை அறியும் அறிவை மெய்க்குருவின் மூலம் அறியலாம். இறைவன் அறிவு வடிவு, அதுவே ஜோதி. ஜோதி வழிபாடு என்பது பஞ்சபூதத்தில் ஒன்றான நெருப்பை வழிபடுவது அல்ல. சுடாத தீயாக, புகையாத கனலாக பெரியோர் சொன்ன ரகசியமே, **எண்ணென்ப ஏனை எழுத்தென்ப**



Copyright © AMNA Trust, Chennai 

**இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு** என்பது. *அகரமுதலவ்ழுத்தெல்லாம்* எண்ணாகிய அகரப் பொருள் இன்னதென அறிவதற்கான விடை ஆதி மார்க்க னீதி அவையில் உள்ளது. சர்வ காலத்துக்கும் பொருந்தும் ஒன்றாக, எதார்த்தத்தை, உள்ளதை உள்ளபடி, வேத சாட்சியாக பகர்வதே ஞானிகளின் பண்பு. என்ற சீர்மேவும் திருவாக்கியங்களுடனும், தோத்திரப் பாடலுடனும் அவை நிகழ்வுகள் இனிதே நிறைவேறின.

**23-04-2022 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஶ்ரீமதி. கல்பனா விஜயகுமார்**

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் : 90** எமனுடைய ஆயுதத்தை எரித்து மனிதர்களை மீட்பிக்கும் மெய்ச்செயலே சர்வ மத வேதங்களின் அடினாதமாகும். எமனுடைய ஆயுதமான பாசக்கயிறு காலத்தின் ரகசியமாகும். பாசவேரறுத்து, எமபலத்தை முறியடிக்கும் தவராஜராகிய குருபெருமானின் அருளால் அறிவைப்பெற்று அதன் மூலம் எமனை வெல்லும் மெய்ச்செயலை அறிவிக்கவே சர்வ மதங்களும் வந்தன.

**காலந்நாட்டிய காரணப்பா : பாடல் எண் : 30**
**வந்நு ஓர் பள்ளத் தாக்குவ னத்திலே...** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி லாவண்யா அவர்களின் புரிதல் : பள்ளத்தாக்கு என்பது (கானகமாகிய) காண் அகமாகிய னன்னிலமாக உள்ளது. அறு னான்நு மூப்பரென்பது 24 அட்சரமாகிய கலிமாப்பொருளை கைக்கொண்டு, ஊண் சுவை இருதயத்துள் உறைந்ந னன்னிலத்தில் குடியேறி னாதம் விளைந்த னாதராகிய குருபிரானை குறிக்கிறது.

**குருபிரானின் அமுத வர்ஷிப்பு :** தீர்க்க தரிசனத்தில் திருமேனி தாங்கி வந்து மெய்ச்செயலை நடத்தி வரும் எல்லையின் செயல் அடையாளங்கள் புறத்தை வைத்து சொல்வதாக இருந்தாலும், **தேவ ரகசியம் தேடு உன்னுடம்புள்** எனும் திருவாக்கிற்கேற்ப அறிவை அறிந்த மக்களுக்கு அவை அகச்செயலாக இருக்கும். தரணியில் இல்லாத ஒரு தனிச் செயற்பதியான கங்குல் பகலற்ற இடத்தில் வாழும் னிலையான அரும்பெரும் செயலைக் குறித்தே அருளப்பெற்றுள்ளது.

**ஶ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் : அடைக்கலப்பத்து - பாடல் எண் : 8** **மாவடு வகிரென்ன கண்ணிபங் காநின் ...** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி ஜீவிதா அவர்களின் புரிதல் : மாவடு என்பது ஒரு பரிபாஷை சொல். குருபிரானின் திருநாவினால் சீடனுக்கு மெய்ப்பொருளைத் தொட்டுக் காட்டும் அடையாளமே மாவடு ஆகும். **தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு** என தெய்வப்புலவரும்,

**முச்சந்நி தனிலே வைத்தார்**
**முமூச்சுமார் வந்து கூடும்**
**னிச்சயச் சபைக் கூட்டத்தில்**
**னடுவினில்க் கிடத்தி னெஞ்ஞில்**
**பிச்சுவாக் கொண்டு கீறிப்**
**பிளந்துபித் தெடுத்து வாயைத்**
**தைத்துமே வடுவுங் ஙாணாச்**
**சாதகம் செய்திட்டாரே.**

என ஆண்டவர்களும் பிரம்மோபதேச ரகசியத்தை அருளியுள்ளார்கள். குருபிரானின் கூவும் குரலோசையாகிய னாதத்திற்குள் தஞ்ஞமாகும் செயலை உணர்த்துவதே அடைக்கலப் பத்தாகும்.

**திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம் : திரு ஆவூர்ப்பசு பதீச்சரம் - பாடல் : 2**
**முத்தியர் மூப்பில ராப்பினு ள்ளார்...** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி உமாராணி



Copyright © AMNA Trust, Chennai 

அவர்களின் புரிதல் : **நான்** எனும் அகங்காரத்தில் இருந்து விடுபடுவது முத்தி. முத்தி மழை பொழியும் முகில் வண்ணராம் ஆசானின் பூரண அன்பைத் தேக்கிய சௌபாக்கியர்களே பிறவிச் சூழலில் இருந்து விடுபட்டு பிறவாமை எனும் முத்தியை அடைய முடியும்.

**குருபிரானின் அமுத வர்ஷிப்பு :** சீடனானவன் குருவிடம் பெற்ற அறிவினால் வள்ளல் பிரானின் திருஆலவாயாகிய கோபுரவாசல் வழியாக உள்நுழைந்து, உள்ளம் பெரும் கோயிலாகவும், ஜீவன் சிவலிங்கமாகவும் இருப்பதை தன்னில் உணர்வதே பசுபதியீச்சரம். சத்தியவேதம் - ஆதியாகமத்தில் **சரீரமே தேவாலயம்** என்றும், தேகாலயத்திற்குள் கடவுள் இன்னார் என்று காட்டுபவர் கர்த்தர் எனவும் அருளப்பெற்றுள்ளது.

**சத்தியவேதம் - ஆதியாகமம் அதிகாரம் : 03** (11 முதல் 15 வரையிலான) திருவசனங்களுக்கு ஜீவசகோதரர் விஜயகுமார் அவர்களின் புரிதல்: சீராகிய அமானிதத்தைச் சுமந்து வந்தும் விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியை ஆதாமும் ஏவாளும் புசித்ததால், கீழ் நோக்கமான செயலால் தேவனுடைய சப்தத்திற்கு செவிசாய்க்காமல் சிற்றின்பத்தில் மூழ்கி பாவத்திற்கு ஆளாகினர். மனதின் பாவச்செயலால் வயது வாழ்நாள் நசுக்கப்பட்டு மரணத்தை சந்திப்பதையே இவ்வாறாகக் கூறப்பெற்றுள்ளது.

**ஆதிமான்மியம் : குருபிரானின் அமுத வர்ஷிப்பு :** ஜோதி கன்மலைத் தாயாகிய வேதத் தாயினுடைய மான்மியமானது, மாண்ட மனுவனைத்தும் மண்ணிலிருந்து எழுப்பும் சாகாக்கல்வியைப் போதித்தருளும் பாரதியும், முக்கலைவாணியுமான வாக்தேவியின் ரகசியமாக உள்ளது. கூத்தனூர் என்பது அத் தாய் திருநடனம் புரியக்கூடிய இடமாக உள்ளது. அத் தாயின் திருநடனம் மூலமே உயிர்ப்புடைய ஓதுதலைப் பழகித் தேற முடியும். *எல்லாண்டு எல்லாண்டு* என்பது அணு அண்டமாகவும், அண்டம் அணுவாகவும் இருந்த காலத்தைக் குறிப்பதாக உள்ளது. ஆசானின் அம்பலமானது பல்லாண்ட பழமைப் பரிசே அவதாரமாக வந்தருளுகிறது. படைப்பின் ரகசியம் ஓசை. ஓசை மூலம் பாஷையும், பாஷை மூலம் பரிபாஷையும் உண்டானது. அப்பரிபாஷை மூலம் தன்னிலை அறிந்தவர்களுக்கு அன்றி ஆண்டவர்கள் அருளிய இன்னூல் ஏனையோருக்கு நீர்மேல் எழுத்தே. தெய்வீக மாமரமாகிய கற்பகத் தருவைக் கண்டு தரிசிக்க, பாசமாகிய நெருப்பாறு மயிர்ப்பாலம் கடந்து, சுருதி முடிவான சிவமயப் பொருளை அறிந்தடைய, மெய்ஞ்ஞான ஓர் சிவகுருபிரானை ஆய்ந்து தேடி அவர்களின் செழுஞ்சீதள மனோ னோக்கிற்கிணங்கி விளங்கிக் கொள்ள ஆண்டவர்கள் ஆசீர்பாத ஒலி வாயுரை தந்து அருளியுள்ளார்கள்.

**புதையலான பெருந்நவக் குன்றது ...** என்ற பாடலுடன், சிதைவிலா மனச்செல்வராக வேண்டி ஆண்டவர்களின் பொற்பாதங்களை வணங்கி குருபிரான் அவர்கள் அவையை நிறைவு செய்தார்கள்.

**24-04-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்**

ஜீவசகோதரர் கௌதம் அவர்களின் புரிதல் :
**மனக்கவலை:** மனிதனுக்கு மட்டும் சீதனமாக கொடுக்கப்பட்டதே ஆறாவது அறிவான மனம். அந்த மனதை கொண்டு நாம், தன்னை அறியவில்லை எனில் மனக்கவலை ஓயாது. மனதை அறிவாக மாற்றினால் பரலோகத்தை அறியலாம். இதனை சத்திய வேதத்தில் **மனம் திரும்புங்கள் பரலோக ராஜ்ஜியம் சமீபமாக உள்ளது** என்றும், **மண்ணிலுள்ள போதேயெண்ணித் தன்னையறியார் மனக்கவலை ஓயாரென் றூதிடுஞ்ஞங்நே** என நம் தெய்வமவர்கள் அருளியுள்ளர்கள். வந்த வந்த பெரியோர்கள் தங்களின் நூல்களில் தன்னை அறிந்து இன்புற்று வாழவேண்டும்


Copyright © AMNA Trust, Chennai

என்றே உணர்த்துகிறார்கள். தன்னையறிந்து சுகமாக வாழும் வாழ்க்கையை நம் ஆசான் அவர்கள் நமக்கு பழக்கி வைக்கிறார்கள்.

**மூடநம்பிக்கை:** நாம் உலக காரியங்கள் அனைத்தையும் மிகுந்த அறிவுடன் செய்தாலும் தெய்வீக காரியங்களை மட்டும் நம்பிக்கையின் அடிப்படையில் செய்கிறோம். நிரூபணைக்கு வராததே மூட நம்பிக்கை.

**நிரூபணை:** ஒரு பொருளை நாம் பார்க்காத வரையில் அந்தப் பொருளைப் பற்றி எப்படி விவரித்தாலும் தெரியாது. அது போல் அறிவைப் பற்றி நாம் அறியாத வரையில் அது நிரூபிக்கபடாதவையே. அத்தகைய அறிவை நம் ஆசான் அவர்கள் நமக்கு அறிய வைத்து, அறிவாகவே நம்மை மாற்றி, ஜீவன் கண்ட ஜென்ம சாபல்யத்தை அடையச் செய்கிறார்கள். இதனையே நம் தெய்வமவர்கள் ஆதி மெய் உதய பூரண னூலின் முகப்பில்

... **சாதிமனுக் குலமனைத்தும் ஜீவன் கண்ட**
**சென்மசா பல்யகுல மாக வென்றே**
**ஆதிமெய் யுதயபூ ரணவே தாந்நம்**
**அறிந்நடைந்ந உயிருடலம் தேவ ராமே** என அருளியுள்ளார்கள்.

**நான்:** அனைத்து ஜீவராசிகளிடத்திலும் நான் எனும் பொருள் உள்ளது. ஆனால் அந்த நான் எனும் சத்திய பொருளை அறியும் சக்தி மனிதனிடத்தில் மட்டுமே உள்ளது. இந்த தேகத்தை நான் என நினைக்கிறோம். ஆனால் இந்த தேகமோ மாறிக்கொண்டே உள்ளது. சத்திய வேதத்தில் **நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்** என உள்ளது. அப்படியென்றால் நான் எனும் பொருள் என்றும் மாறாத னிச்சய பொருளாக உள்ளது. அத்தகைய னிச்சயப் பொருளை, தன்னை அறிந்த குருபிரான் அவர்கள், தன் னாதத்தின் மூலம் இந்த தேகம் தாண்டி சாகாத்தலையாக உள்ளதை நமக்கு காட்டி, அதனை அறிந்து அடையச் செய்கிறார்கள்.

**எமன்:** அரூபமாக அவரவரிடத்தில் உள்ள மனமே எமனாக உள்ளது. இறைவனிடம் தனிச் சீதனமாக வாங்கிய பொருளின் பயனை அறியாவிட்டால் அதுவே நமக்கு எமனாக மாறி மீண்டும் இந்த பிறவிச் சூழலில் மாட்டிவிடும். ஆனால் அப்பொருளின் தன்மையை ஓர் மெய் குருபிரானின் மூலம் அறிந்து அதை அறிவாக, பிரம்மமாக மாற்றினால் ஜீவன் கண்ட ஜென்ம சாபல்யத்தை அடையலாம்.

**முக்தி:** நாம் மனமாக உள்ளவரை கவலை ஓயாது. மனக்கவலையில் இருந்து விடுதலை அடைந்தால் முக்தி. அத்தகைய முக்தியை நாம் இந்த மண்ணில் உள்ள பொழுதே அடைய வேண்டும். இதையே நம் ஆசான் அவர்கள் மனதின் தன்மையை நமக்கு அறிய வைத்து சைத்தானாக உள்ள மனதை மாற்றி சைதன்யமாக ஆக்கி முக்தி அடையச் செய்கிறார்கள்.

**அடையாளம்:** ஒருவருடைய சத்தத்தை கொண்டே அவர்களை நாம் அனுமானிக்க முடியும். அதுபோல் இறைவன் இருக்கும் தலத்தையும் சத்தத்தின் மூலம்தான் அறிய முடியும். இதனை அவ்வைபிராட்டி **சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச் சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி** என்றும், சத்திய வேதத்தில் **ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது** என்றும், நம் தெய்வம் அவர்கள் **ஆதியிலே பிறந்நசத்த மிருந்நுவந்ந தெங்ஙே அப்புப்பும் கலந்நுனின்ற அறுபுரினா**

*வேதசாஸ்திர புராணங்களும், இதிகாச முதலியனவும், மந்திர யந்திர வித்தை முதலியனவும், மோகனம் உச்சாடன முதலியனவும், சைவசாக்தாகமங்கள் முதலியனவும், மற்றுமுள்ள அனேக (சாங்கியாதி) மதங்களும் குருவுண்மை தெரியாத மயக்க உள்ளத்தினைப் பெற்றுள்ள சகல ஜீவர்களுக்கும் தவறுடையனவேயாம்.*

~ **குரு கீதை**



Copyright © AMNA Trust, Chennai

**லெங்னே** (மெய்ன்னிலைப் போதம்) என்றும் அருளியுள்ளார்கள். தேவனிடத்தில் இருந்து வரும் வார்த்தையே ஆசானின் னாதம். அதுவே நமக்கு இறைவன் இருக்கும் தலத்தைக் காட்டி, இறைவனுடன் இரண்டற கலக்கச் செய்யும் என்ற புரிதலுடன் சபை நிறைவுற்றது.

**24-04-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்**

**மெய்வழி னூல் :**

**வீடுவெளி யாமுன்னே பட்ட பாட்டை**
**விபரமாய்ச் சொல்லவென்றால் வெகுனா ளாகும் ...** ஆண்டவர்கள் பட்ட பாடுகள் அனைத்தும் நம் தலை செழிக்க வந்தது என்பதை நம் னினைவில் ஊணி வைத்து கொள்ள வேண்டும் என அருளி, குருபிரான் அவர்கள் அவையை துவக்கினார்கள்.

ஜீவசகோதரி அருணா அவர்களின் புரிதல் :

**ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்**
**செத்தாருள் வைக்கப் படும்**

என திருக்குறளில் கூறப்பெற்றுள்ளது. ஒத்த பொருளாகிய உயிரை அறிந்தவனே அறிவு வடிவானவன். அறிவே ஜீவனாக, பிராணனாக, ஆவியாக உள்ளது என்பதை சிவானந்த போதத்தில் **உயிரான பிராணனே ஆவியாகும்** என்று கூறியுள்ளார்கள். இறைவன் நமக்கு ஆறாவது அறிவையும், அவ்வறிவை அடைவதற்கான அருமையான வயதையும் இனாமாகத் தந்து, பரிசுத்த ஆவியின் மூலம் - தூல, சூக்கும, காரண, மகாகாரணம் என்ற னான்கு தேகத்திற்குள் னுழைந்து, எழில் ஒளிர்தேக இன்பப் பூப்பானது வளரச்செய்து நித்திய வாழ்வில் குடியேறி வாழ்வதே நோக்கமாகும்.



தாயின் கருவறையில் இருக்கும் போது நமக்கு உயிர் இருந்தது; ஆனால் மூச்சு இல்லை. வெளியே வந்ததும் உள்ளிருந்த நாதம் மூக்கில் வந்து மோதி தொனி கிளம்ப மூச்சு ஓட ஆரம்பிக்கிறது. அதுபோல் மறுபிறப்பு எடுக்கும் நேரத்திலும் பிரணவ கருவில் கொண்டு போய் மூச்சு ஆடாமல் ஒரு அணு நேரமோ, ஒரு யுகமோ அங்கு இருக்க வைத்து நம் அங்கங்குலங்களை மாற்றி மறுபடியும் தேவனாக படைக்கப் பெறுகிறோம். இப்பார பெரிய மெய்ச் செயலினால் நம் மூச்சு ஒடுங்கி, உயிர் உள்ளே அடங்கி, ஜீவப்பிரயாணம் எனும் அடக்கத்தை உடலில் உள்ளபோதே அனுபவிப்போம். அடக்கம் பற்றி திருவள்ளுவ பிரான், **அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்** என்றும், நம் ஆண்டவர்கள்,

**சாவருமுன் சாப்பழக்கம் பழகுவது மெளிதோ**
**சாவந்நிடில் சமர்த்துமுன்றன் படிப்புமங்னே செலுமோ**
**சாவருமுன் சாப்பழக்கம் பழகுவதிங் னெளிதே**
**சற்சனர்க்கே ஆகுமன்றிச் சண்டாளர்க் காகா** எனவும் அருளியுள்ளார்கள்.

ஜீவசகோதரர் விஜயகுமார்: மனை என்பது இடம்; அதாவது அறிவிருக்கும் தலம். ஆசானின் அருளால் அத்தலத்தில் குடியேறி வாழ்வதே புதுமனை விழா ஆகும்.



Copyright © AMNA Trust, Chennai

ஜீவசகோதரர் கணேசன்: பங்கஜம் என்பது தாமரையாகவும், மதி என்பது அறிவாகவும் உள்ளது. ஆசானின் ஓரிதழ் தாமரையிலிருந்து பிறங்கும் மதிச்சொல்லே நம்மை மாயையிலிருந்து விலக்கி மரணமிலாப் வாழ்வை அளிக்கும். இதுவே பங்கஜ மதி ஆகும்.

ஜீவசகோதரர் காளிதாஸ்: நின்றதொரு பிரளயம் என்பது ஆசான் முன்னிலையில் மனம் அசையாமல் மூச்சு லயமாகிய மனோலயத்தில் இருப்பதாகும்.

ஜீவசகோதரி ஆனந்தி: ஆசானின் னாதமாகிய வித்தில்லா வித்தானது நம்முள் விதைக்கப்பட்டதின் பலனை, மெய்வணக்க வழிபாட்டு முறையை இடைவிடாது னாள்தோறும் கடைப்பிடிப்பதின் மூலம் உணர முடியும். மனமானது பொய் வழியாக கீழ் நோக்கமாக உள்ளதை, மேல் நிலையாகிய மெய்வழியில் ஏற்றிவைக்கும் குரு பெருமானை போற்றி வணங்குவோம் எனும் புரிதல்களுடன் சபையானது இனிதே னிறைவேறியது.

**28-04-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்**

**குருபிரானின் அமுத வர்ஷிப்பு :**
**வான்மதிக்கொரல் - திருவாக்கியம் எண் : 63** மனிதன் உய்வதற்காகவும், அறம் சார்ந்த வாழ்க்கை வாழ்வதற்காகவும் பெரியோர்கள் வேதங்களை உண்டாக்கி, அவ்வேதத்தின் மெய்ப்பொருளையும் அறிவித்து, மெய்ச்செயலையும் பழக்கி வைக்கிறார்கள். இச்செயலை மெய்வழி னூலில்,

**சொல்லக் கேள் ஞானவழி சுருக்க மின்னூல்**
**சோதித்து னேர்வழிகை முறையாய்ச் சொன்னேன்**
**பொல்லாத கள்முதலாம் விபசா ரர்க்குப்**
**பிடுங்ஙுபடும் ஞானனிலை யென்னா ளேனும்**
**சொல்லப்பே ரின்பம்கைப் பற்ற வென்று**
**சொன்னதல்லாற் குட்சியின்பி ழைப்புக் கல்ல**
**சொல்லொன்றும் தப்பாது தாக்கு தாக்கு**
**சுந்தரமாய்ச் சொல்லுகிறேன் கேளு கண்ணே**

என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். ஆசான் சொற்படி கேட்டு அவர்கள் இட்ட கட்டளையை சிரம் மேல் தாங்கி வாழ்பவர்களுக்கு பேரின்ப பெருவாழ்வாகிய யுகப்பரிசானது வழங்கப்பெறுகிறது.

**அடக்கம் :** அடக்கம் என்பது புலன், பொறி, மனம், சித்தம், அகங்காரம் அடங்குவதாகும்.
**அடக்கம் மடக்கிப் பிடிக்க தெரிந்நோர னந்நரானதே** எனும் இரகசியத்தை ஆதி மார்க்க னீதி அவையிலுள்ள ஞானத்தமிழ் பெற்ற மக்கள் வேத சாட்சியாக உணர்ந்தவர்கள் என்பது சத்தியமே.

**ஆதிமான்மியம்:** ஓங்ஙார இரகசியம் அறிந்து ஓ வண்ணமானவர்கள் ஓதுவதே மான்மியம்.

**ஆதிமு தல்மறையும்**
**அவ்வல்க்கி ரந்தங்ஙளும்**
**பாதினடு னிலையும்**
**ஓதும்மு டிவுபலன்**



Copyright © AMNA Trust, Chennai

*ஆதிமுதல்மறை* என்பது சதாசிவ பாகமாகிய தோற்றமில்லாமை எனும் அரூப வடிவமாகும். அது ஒரு தோற்றத்தைக் கொண்டு தந்தையின் சுக்கிலாம் பர னாட்டிலிருந்து தாயின் கருவறைக்குள் எழுகணுக் கோர்வையாக வருகிறது. இச்செயலை ஆண்டவர்கள் முரீது சுருக்கத்தில்,

**கலிமாவெ னும்பெரு முத்தொன்றி லங்கியே**
**காணுதின் சானுக்குள்ளே - அது**
**காணுவிந் துவினிற் கூடவே வந்துக**
**ருக்கூட கத்துள்ளே ....** என அருளியுள்ளார்கள்.

தாயின் வயிற்றில் எவ்வித வலி, வேதனை, அழற் நாற்றம் தெரியாமல் நம்மை வளர்த்த நற்றாய் *குருமுடிப்பானது,* குழவி முதல் தெரிவை பருவம் வரையிலும் காத்து, ஏழாம் பிறப்பாகிய தேவப்பிறப்பில் *அதுவே* வாலகுரு வடிவில் தொடர்ந்து வந்து இன்றளவிலும் நம்மை காத்து னிற்கிறது.

**வாலகு ருசந்திப்பின்**
**மூலபண் டாரம் பெற்றுக்**
**கீழாம்மூ வாசைவிட்டக்**
**காலந்து றவுபூண்டு**

காலத்தின் இரகசியத்தை உரைத்து காலம் கடந்த பொருளுக்குள் ஆக்கி வைப்பவரே மெய்க்குரு. **இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டி, சொல்லாமல் சொன்னவரை நினையாமல் நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்** என்ற பரஞ்சோதி முனிவரின் வாக்கை மெய்யாக்கிய மெய்வழி ஆண்டவர்களின் பெருங்கருணை பேரிரக்கப் புரட்சியினால் இப்பாரப்பெரிய மெய்ச்செயலானது குருபிரான் மூலம் ஆதி மார்க்க னீதி அவையிலுள்ள மக்களுக்கு அசலாக்கப்பட்டுள்ளது.

**மாறாஅ திசயத்தின்**
**பேரும்சன் னதம்பெற்றுக்**
**கூறும்மக் களின்பிர**
**வாகம்எ டுத்துவரும்**

இச்செயலையே காகபுசுண்டர்பிரான் ஜீவமந்திரத்தில் முப்பத்து முக்கோடி தேவர்களும் பெறாத **மார்க்கனாதர்** என்ற தனித்துவமான திருனாமம் கொண்டவர்கள் பரிசுத்த ஆவி தெய்வம் பிரம்மோதய மெய்வழிச் சாலை ஆண்டவர்கள் என தீர்க்க தரிசனமாக குறிப்பிட்டுள்ளார்கள்.

**மாண்டம னுவனைத்தும்**
**மண்ணிலி ருந்தெழுப்பித்**
**தோன்றும்தீர்ப் பினிலேற்றிச்**
**சொர்க்கன ரகமென்றும்**

தூலம் கடந்து னிற்கும் சூக்குமத்தை வைத்து அருளப்பெற்றிருக்கும் இத்திருப்பாடலின் உள்ளமை இரகசியமானது குருமுகமாக அறியவேண்டிய அரும் பெருநிலைகளாகும் என்ற ஆசீர்பாதத்துடன் அவையானது இனிதே னிறைவேறியது.

*அழகிய முகத்தினையுடைய பார்வதி! மூன்று உலகங்களிலும் அடைதற்கரியது யாதோ அதனைச் சொல்லுகின்றேன் கேள். குரு, பிரம்மத்தைவிட அன்னியமில்லை. இது சத்தியம், சத்தியம்.*

~ **குரு கீதை**



Copyright © AMNA Trust, Chennai

**30-04-2022 ~ சனிக்கிழமை ~ தூத்துக்குடி சபை**
**தொகுப்பு: ஶ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**குருபிரானின் அமுத வர்ஷிப்பு :** இறைவன் ஜீவ காரியத்திற்காக அன்றி ஜீவன காரியத்திற்காக அல்ல என்ற தெளிவை முதலில் நாம் பெற வேண்டும். சிலா ரூபங்ஙளின் மீது வைக்கும் தெய்வ பக்தி, தெய்வ நம்பிக்கை என்பது பொய் உணர்வு என அறியாதவரை அறிவுத் தெளிவு உண்டாகாது. சிலா ரூபங்களின் மெய்ப்பொருளை அறிவித்து அவரவருள் மெய்யுணர்வை மெய்க்குருபிரான் உண்டாக்கிய பிறகே இறை பொருளை உணர முடியும். *இறைவன், தொண்டெழு மனிதன் சுத்தத்துறை இருதயத்தில் அன்றி விண்டெங்கும் வெளியாவதில்லை* என்ற தெய்வ வாக்கின் படி, குருபிரானின் சொற்படி கேட்டு சாகாக்கலையை பழகி *ஒதுங்ஙியடா னாலு கலை பாழ் போகாமல் உள்ளடங்ஙும் கைவாசி குமிழி பாயும்* என்ற மெய்ச்செயல் கைவரவாகியதும் இருதயத்துள்ளிருக்கும் இறைவனின் தரிசனை கிட்டும்.

சிவதத்துவம் பொதியப் பெற்ற மனித உடலின் இரகசியத்தை திருமூலர் பிரான்,

**மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்**
**மானுடர் ஆக்கை வடிவு சிதம்பரம்**
**மானுடர் ஆக்கை வடிவு சதாசிவம்**
**மானுடர் ஆக்கை வடிவு திருக்கூத்தே** என அருளியுள்ளார்.

லிங்கம் - ஆவிடை - பீடம் என்ற சிவதத்துவமானது நம்முள் விளங்கிக் கொண்டிருப்பதை தத்துவம் கடந்த தயானிதி கடலாக வரும் குருபிரானின் அன்பெனும் கருவறையில் ஆவிடை எனும் தேவயோனியில் மறுபிறப்படைந்த பிறகே அறிய முடியும். எழுவகை தோற்றங்ஙளும் மனிதனுக்குள் குணங்களாக இருப்பதை அறிவித்து, குணங்ஙளாலும் செயல்களாலும் கீழ்னிலையில் உழன்று கொண்டிருப்பதை மாற்றி மேலாம்பரமான வாழ்க்கை வாழ்வதற்கான னற்குணத்தை விதைப்பவரே னிர்க்குணராகிய ஆசான் என்பதையும், குணத்தின் இரகசியத்தையும் பற்றி ஆண்டவர்கள் அருளிய ஆதிமான்மியம் முகப்புப் பாடல் மூலம் அறியலாம் :

**முப்ப திப்படி முக்குணத் திற்குடி**
**னிற்ப திப்படி னிர்க்குணா லங்ஙிர்த**
**சிற்ப திப்படி சொற்குணா உற்பரன்**
**விற்ப திப்படி வேதத்தாய் மான்மியம்**

காலச்சக்கரத்தின் இரகசியத்தை தன் உள்ளத்தில் தனது மெய்ஆசான் மூலம் உணர்ந்ததை

**புலன் வழி பற்றி யோடிப்**
**போக்கியென் வயதை யெல்லாம்**
**னலன் றர மீட்டித் தந்நென்**
**னாளினை யடியேன் மீண்டும்**
**புலன் வழி யழித்தி டாது**
**புண்ணியம் தனக்கே யீட்டென்**
**றலர்ந்தவாய்த் திகிரி வேந்தே**
**அதிசயம் ஆ ஈ தென்னே**

என ஆண்டவர்கள் அருளிச் செய்துள்ளார்கள்.

புண்ணிய வாழ்வளிக்கும் மெய்க்கல்வி கலாசாலை இன்று ஆதி மார்க்க னீதி அவையாக முளையெழுந்து முழு தீரத்துடன் முழங்கிக் கொண்டிருக்கிறது என்ற அருளுரைகளுடன் சபையானது இனிதே னிறைவேறியது.



Copyright © AMNA Trust, Chennai

## இசை வகுப்புகள்
## தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்

**03-04-2022 ~ ஞாயிற்றுக்கிழமை**

**னம்பிய தன்னுயிர் தற்கொலை செய்வான்**
**னமசிவ இருப்பறியான்**
**தம்பிரான் றவசிதி காம்பர னென்பான்**
**சைவனெ னச்சொல்வான்**
**கெம்பீர மாகவே யறுசுவை கெர்வக்**
**கேடர்கள் னேசம்விட்டே**
**தம்பிரா னேயா னும்மிடம் காவற்**
**பாடது தேடுகின்றேன்**

என்ற **ஞான முறையீடு** தோத்திரப்பாடலுடன் இசை வகுப்பு தொடங்கியது

**பூரணப் புதையல்: தன் இலக்கணம் உணர்த்தல்**

**அறங்ங ளொருங்ஙுதி ரண்ரடொரு வீடுவ**
**ரங்ஙொடை யின்பெருமான்**
**பரங்ஙிள ரங்ஙொளி யூசர ரங்ஙிதி**
**ரண்டுற விண்ணுறவின்**
**உரங்ஙுர வங்ஙுனெ ருங்ஙவ ருங்ஙுரு**
**வங்ஙமு ழுங்ஙுளிரும்**
**சரங்ஙுனெ ருங்ஙிரு பாகர ரென்ஙுரு**
**செங்ஙம லம்பதமே**

**முன்னுரு தங்ஙுர சிக்குல மாமணி**
**என்னித யப்பெருமான்**
**குன்னெனுங் ஙன்சுல் தன்னில றிந்நகு**
**ணக்கடல் மாமணிகள்**
**என்னையு மன்னவர் தன்னில றிந்நுற**
**வென்னித யம்திறந்நே**
**சொன்னவ ராதிய ருட்பெருஞ் ஞோதி**
**செங்ஙம லம்பதமே**

என்ற பாடல்கள் விருத்தமாக பாடுவதற்கான பயிற்சி அளிக்கப்பட்டது.

**10-04-2022 ~ ஞாயிற்றுக்கிழமை**

**முடியாகிய மூமீனென**
**வுளனாள் வீண்போக்கி**
**இடியாகிய எமன்கைப்பட**
**எரிபொறி யேபறக்கக்**
**கடிதாகிய கசப்பேவரும்**
**கயவர்க டனைவிட்டே**
**அடியேனிறை யானும்மிட**
**மானிதம் தேடுகின்றேன்**

என்ற **ஞான முறையீடு** தோத்திர பாடலுடன் இசை வகுப்பு துவங்கியது.



Copyright © AMNA Trust, Chennai

**காமீல்கள் னோக்கம் :**

**உருமுர சறைந்து காட்டி யுன்னிதம் காட்டல் போலே
கருவிகள் பலதும் காட்டிக் காட்சிகள் காட்டு வார்கள்
மருவிய கணிதம் காட்டி வாழுனாட் காட்டல் போலும்
திருவினைக் காட்டும சீவ முத்தரின் னோக்க மென்னே**

**இசைமொழி காட்டிமேலா மின்பொருள் காட்டுவார்போல்
திசையினைக் காட்டிக் காட்டித் திருப்பள்ளி காட்டு வார்கள்
விசும்பிலங்ஙுறிகள் காட்டி வெண்பிறை காட்டல் போலும்
திசையிலாத் தவத்துச் சீவ முத்தரின் னோக்க மென்னே**

**சென்றனாட் சென்றிட் டாலும் செல்லுனாட் சென்றி டாது
னன்றுள னாளே யின்னாள் ஞானனாளெனத்தேர்ந் நுள்ளம்
என்றுள னாய னுக்கே யிணையொரு னாளில் லாதாற்
குன்றில்வாழ் பவன்பே ரின்பம் கொள்ளுத லெவர்க்கும் வேண்டும்**

என்ற பாடல்களை  தாளத்துடன் பாடுவதற்கு பயிற்சி அளிக்கப்பட்டது.



Copyright © AMNA Trust, Chennai

### அவை னிகழ்வுகள்:

| தேதி | னிகழ்வுகள் |
|---|---|
| **14th April 2022** | ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர்களானவர்கள்:<br>1. மனோகரன்<br>2. பூங்கோதை<br>3. யுவராஜ்<br>4. லோகநாயகி<br>5. கவிதா திருத்தணி<br>6. கஸ்தூரி<br>7. மோகன்<br>8. சித்ரா<br>9. வெங்கடேசன்<br>10. சிரஞ்சீவி சேகர்<br>11. அசோக்<br>12. வைஷ்ணவி<br>13. லோகநாதன்<br>இடம்: சென்னை |
| **16th April 2022** | ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர்களானவர்கள்:<br>1. சசிகுமார்<br>2. திலகபதி<br>3. குரு பிரசாத்<br>4. குபேர்<br>5. ஜனார்த்தனன்<br>6. ஓம்வள்ளி<br>7. சுசிலா<br>8. வரலக்ஷ்மி<br>இடம்: சென்னை |



Copyright © AMNA Trust, Chennai





Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2022 மே மாத அவை நிகழ்வுகள்


Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் வர்ஷிப்பு



*திரு. சாலை ரவி அப்பா அவர்கள்*
*நிறுவனர்: ஆதி மார்க்க நீதி அவை*

ஆதி மார்க்க நீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே, மே மாத மலராக மலரும் இந்த மின்னணு சஞ்ஞிகையை தொகுத்து அளித்த ஆதி மார்க்க நீதி அவையின் அங்கங்களுக்கு என் ஆசீர்பாதங்ஙள். பழனிவேல் அவர்களின் முயற்சியால் தூத்துக்குடியில் உள்ள திருமண மண்டபத்தில் நடைபெற்ற அவை போற்றுவதற்கு உரியதாகவும், அதில் பழனிவேல், விஜயகுமார், வடிவேலன், இவர்களின் புரிதலும் சிறப்புரைகளும் அவை நிகழ்ச்சிதனை மேலும் மெருகூட்டிய ஒன்றாகவும் உள்ளது. சத்துவாச்சாரி அவையின் பகிர்வுகளான, குருவின் சிறப்பும், முத்திநிலை பற்றியும் இன்னது இன்னதென, இன்னதுக்கு இன்னதென சிறப்பாக இச்சஞ்ஞிகையில் தொகுத்து வழங்கியுள்ளனர்.

சிவகாசியில் நடைபெற்ற சிறப்பு அவையில், குருவார தினத்தில் நடைபெற்ற ஆதி மான்மியத்தில் இதுவரை யாரும் தொடாத நிலைகளாகப் பேசப்பெற்ற சிறப்பினை மக்கள் யாவர்க்கும் எளிமையாக புரியும் வண்ணம் தன்னுடைய மேலான புரிதலுடன் விஜயகுமார் தொகுத்து வழங்கியுள்ள சிறப்பும், மேலும் ஸ்ரீமா, மஹிமா என்ற குழந்தைகளின் புரிதல் இந்த ஞான பாதையில் மிகவும் வியப்பிற்பிற்குரியதாகவும், அவர்களின் வயதிற்கு மீறிய ஆர்வமே இதன் காரணம் என்பது நிரூபணையாகவும் உள்ளது. மெய்யை அடைய பல வழிகள் உண்டு என என்னுடன் வாதிட்ட தாய் லலிதாவின் புரிதல் இன்றோ, இம் மெய்வழியை விட்டால் வேறு வழியே இல்லை என்ற உணர்வுடன் பகிர்ந்து கொண்ட விஷயங்களும் மிக அழகாக தொகுக்கப் பெற்று இம்மாத சஞ்சிகையாக உங்கள் கைகளில் தவழ்கிறது. இம்மாத சிறப்பாக பொருளாளர் மணிமாறனின் தொகுப்பும், மான்மியத்தில் வளர் குழந்தை குமார பருவம் மற்றும் அகிலவலம் வரும் பருவத்தில் உள்ள **புகர் சமய ஜகத சத்துவ** என்னும் தமிழின் உச்சபட்ச வார்த்தைகள் கொண்டு ரகசிய குறியீடுகளாக அருளப்பெற்றுள்ளதை குமரேசன் விவரித்து இருக்கும் விதமும் மிகவும் அருமையான ஒன்றாகும். சென்னை, சிவகாசி, சத்துவாச்சாரி, தூத்துக்குடி ஆக 16 அவைகளிலும் பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடி பெருமைகளை எடுத்து பேசக்கூடிய வாய்ப்பை நமக்கு அருளியும் அருளிக் கொண்டும் அருளவும் இருக்கும் பரம்பொருளின் பெரும் கிருபையால் இது நடந்தேறிக் கொண்டிருக்கிறது. உலக மக்கள் எல்லோரையும் சென்றடையும் விதமாக இதன் பணிகள் தொடரும் என்பதுடன் இதனை பார்த்து படித்துக் கொண்டும் படிக்கவும் இருக்கும் மக்கள் அனைவருக்கும் என் நல்ஆசீர்பாதங்ஙள்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க நீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

*இந்த உலகத்திலுள்ள சர்வத்தையும் மனிதன் ஒருவனுக்கென்றே இறைவன் படைத்தான். மனிதன் னித்திய னன்மை அடையவேண்டும் என்ற ஒரு பெருங்நுண அழியா மகிழ்ச்சிக் குறிக்கோள் வைத்தே அவ்வளவும் படைக்கப்பெற்றது. எல்லா மனிதர்களும் ஏற்றத்தாழ்வு வித்தியாச மில்லாமல்* ***னித்திய னன்மை*** *அடையவேண்டும் என்பதுவே இறைவனின் பெருங்நருணை பேரருள் எண்ணம். ஒருவன் னன்மை அடையவும் மற்றொருவன் தீமை அடையவும் படைக்கப்பெறவில்லை. அந்த னித்திய னன்மை என்ன? தெரிகிறதா? சாவுடைய னேரத்திலே அலகைத் தேகம் எடுத்து, முடிவில்லாத னெடுங்நால அவஸ்தைக்குள் னுழையாது, என்றென்றைக்கும் னீங்நாத மகிழ்ச்சிகரப் பேரின்பம் அனுபவிக்கின்ற னித்திய தேகம் -* ***மறலி கை தீண்டா வைரமணித் தேகம்*** *- எடுப்பதே, அந்த னித்திய னன்மை. அந்த ஒரு தனித்த னன்மை அடையவே இறைவன் மனுக்குலத்தைப் படைத்தான்.*

**~ சாலை ஆண்டவர்கள்**



Copyright © AMNA Trust, Chennai

**01-05-2022 ~ தூத்துக்குடி சிறப்பு சபை ~ ஞாயிற்றுக்கிழமை**
**தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்**

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

அனுபவம் என்பது குரு வடிவாக வந்து நம்மை மெய்வழியில் தொடரச்செய்கிறது. இறைவனுக்கு ஆனவர் ஆனமலை என்றும், எமன் மனு மீது கொண்ட கோபத்தை தணித்ததினால் தனிகையர் என்றும், தூங்காமல் தூங்கி சுகம் பெறக்கூடிய இடத்திற்கு பள்ளி என்றும், இரண்டறக் கலந்து இருக்கும் இடத்திற்கு பள்ளியறை என்று அருளி குருபிரான் அவையை மலரச் செய்தார்கள்.

**ஜீவசகோதரர் விஜயகுமார் அவர்களின் புரிதல்:** தன்னையறியும் மேன்மையான செயலை செய்யும் நாளெல்லாம் மே-தினமாகவே இருக்கிறது. தாய் வயிற்றிலிருந்து பிறந்த தினத்தை பிறந்த நாளாக உலக மக்கள் கொண்டாடி வருகின்றனர். ஆனால் குருவின் திருமுகத்தில் பிறந்த பிறப்பின் மூலம் மேன்மையான செயலை பழகும் நாளெல்லாம் **மே தினமாக** இருக்கிறது.

**சன்மார்க்க மரபு:** சாகாதவனே சன்மார்க்கி என்கிற மரபினை வள்ளலார் கொண்டு வந்தார்கள். அதுவே இன்று **சாகாக்கல்வி - மரணமிலாப் பெருவாழ்வு** எனும் மரபாக, ஆதி மார்க்க னீதி அவையின் குரு கொண்டலின் தயவால் செயலாக உள்ளது. அறிவுத் தெளிவின் மூலம் மெய்யான உணர்வைப்பெற்று இகவாழ்விலும் புறவாழ்விலும் சன்மார்க்கியாக வாழலாம். இந்த தேகம் *நான்* எனும் அறியாமையானது மெய்யான குருபிரானின் இரக்கத்தால் அறிவுத் தெளிவு பெற்ற பின்னரே விலகுகிறது. அறிவு சம்மதிக்க நுதற்கண் எனும் மூன்றாவது கண்ணை திறந்து காட்டுபவரே மெய்குருவாக இருக்கிறார். அவரே மெய்க்கல்வி எனும் சாகாக்கல்வியில் நம்மைப் பழக்கி சன்மார்க்க மரபாகிய மரணமிலாப் பெருவாழ்வில் வாழ வைக்கிறார்.

**ஜீவசகோதரர் வடிவேலன் அவர்களின் புரிதல்:** தூத்துக்குடி நகருக்கு துறைமுக நகரம், முத்து நகரம், திருமந்திர நகரம் என்ற சிறப்பு பெயர்களும் உண்டு. இந்த நகரத்தில் உள்ள சிவன் கோயில், பனிமலை மாதா கோயில் மற்றும் வைபாறில் உள்ள சம்சுதீன் அவர்களின் அடக்கஸ்தலம் ஆகியவை சிறப்பு வாய்ந்ததாக உள்ளது.

**ஆதி மார்க்கம்:**

**ஐவழி விளைவின் அப்பா லாகிய**
**செய்வழி காட்டி உய்வழி கூட்டும்**
**மெய்வழி ஒன்றே வாழியிவ்வழியே**

என்பது இன்று ஆதி மார்க்க னீதி அவையின் செயல் வடிவாக உள்ளது.

ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு செல்ல மார்க்கம் எனும் வழி மிகவும் அவசியம். இறைவனால் படைக்கப்பட்ட ஐம்புலன்களின் வழியாக நன்மை-தீமை பிரித்தறியும் கர்த்தா மனிதனிடத்தில் உள்ளது. இதை அறிவதற்கே கோவில்களும் அதனை உணரவே மூன்றாவது கண் எனும் அறிவுக்கண்ணும் அதனைத் திறக்க ஒரு மெய்யான ஆசானும் வேண்டும். அந்த அறிவுக்கண் கொண்டே இப்பிறவிப் பெருங்கடலை நீந்திக்கரை சேர முடியும் என்பதை

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்** - என திருவள்ளுவரும் கூறியுள்ளார்.


Copyright © AMNA Trust, Chennai

ஆசானின் அன்பு ஒன்றே நரனை மனிதனாக்கி மனிதனை தேவனாக்கி இறைவனடி சேர வைக்கிறது. இறைவனடி சென்று சேரும் மார்க்கமே ஆதி மார்க்கமாக இருக்கிறது.

**ஜீவசகோதரர் பழனிவேல் அவர்களின் புரிதல்:** தன்னை அறியவும், தன் வினையைத் தீர்க்கவுமே ஒவ்வொரு மனிதனுக்கும் இந்த தேகம் கொடுக்கப்பட்டுள்ளது. *மேதினியில் இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்* என்பது ஔவையார் வாக்கு. மேன்மையான வாக்கினால் மேலாம்பர வாழ்வில் ஏற்றி வைப்பவர்களே மேலோர்கள். அழியாத ஆன்மாவை கொண்டுள்ள மனிதன், அழியும் கீழான மூவாசை மீதே தன் கவனத்தை செலுத்துகிறான். இறைவன் அளித்த செல்வமாகிய என்றும் அழியாத ஆன்மாவை அறிவதே மரணமிலாப் பெருவாழ்வு என பெரியோர்கள் அருளியுள்ளனர்.

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு.**

இறைவன் செய்த நன்றியை மறந்தால் உனக்கு உய்வில்லை என வள்ளுவரும் அருளியுள்ளார்.

இயற்கை தத்துவத்தின் முதல் பொருள் இந்த மனித உடல். மனிதனுக்கு மட்டுமே தரப்பெற்றுள்ள மூன்றாவது கண் எனும் அறிவுக்கண்ணை ஒரு மெய்க்குருவின் இரக்கத்தால் திறக்கப் பெற்றவர்களுக்கு மட்டுமே மெய், பொய், கடவுளின் நிஜமான வடிவம், கோவிலின் ரகசியங்கள் இவையாவும் தெளிவாகத் தெரியும். அவர்களுக்கே கல்வி என்பது படிப்பதல்ல, பழகுவது என்பதும் தெரியவரும். அறிவுக்கண் என்பது ஆறுமுகமாக, ஆறுபடைவீடாக, அறுபுரி நூலாக, மூன்றாவது கண் எனும் மனக்கண்ணாக இருக்கிறது.

ஆறாவது அறிவை அறியும் வரை தன்னை மனிதன் என்று யாராலும் நிரூபிக்க முடியாது. அழியும் செயலை செய்வது அறிவல்ல. அறிவுள்ள செயலைச் செய்து அழிவற்ற வாழ்வை எல்லோரும் வாழ்ந்து உய்ய வேண்டும் என்ற ஒன்றே ஒன்றுதான் பெரியோர்களின் நோக்கமாக உள்ளது என்ற ஆசீர்பாதத்துடன் குருபிரான் அவர்கள் அவையை நிறைவு செய்தார்கள்.

**01-05-2022 ~ சத்துவாச்சாரி ~ ஞாயிற்றுக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி**

**ஜீவசகோதரர் கௌதம் அவர்களின் புரிதல்:**

**நாமம் :** பிரம்ம சொரூபராகிய ஆசான் தன் கைப்பந்தாகப் பெற்றுள்ள ஞானத்தைக் கொண்டு மனுவிடம் அழிந்து கொண்டு இருக்கின்ற நாமத்தை அழியாமையில் ஆக்கி நித்தியமாக நிலவும்படிச் செய்கிறார்கள். நித்திய வாழ்வைப் பெற்றுக் கொண்டவர்கள், ஆசானின் திருச்செயலை உலகிற்கு பறை சாற்றுபவர்களாகவும் தேவபதத்திற்கு உரியவர்களாகவும் வாழ்வார்கள் என வேதம் கூறுகிறது.

**மூலமந்திரம்:** ஆதி மூலத்தின் இரகசியமே மந்திரமாக உள்ளது. மூல மந்திரத்தைப் பிரகாசப் பொருளாகக் கண்டவர் தேவர். மூலமந்திரத்தை வாயால் மட்டும் சொல்லிக்கொண்டும் தேடிக்கொண்டும் இருப்பவர் மனு. மூல மந்திரத்தை வாயால் சொல்வதை அல்லத் தட்டுபவர் நரர். இம் மூவரையும் ஒரே நிலையாக, பிரகாச ரூபமாகவே ஆக்கும் செயலே ஆதி மார்க்க நீதி அவையின் நோக்கமாக உள்ளது.

*பிரியமுள்ளவளே! குருவுண்மையை அறியாததினால் ஜபம், தபம், விரதம், தீர்த்தம், யாகம், அவ்வாறே தானம் என்பவை யாவும் வியர்த்தமாகின்றன.*

~ **குரு கீதை**



Copyright © AMNA Trust, Chennai 

**தெளிவு :** குளத்தில் இருக்கும் தெளிந்த நீரை பாசி, குப்பை, கூளம், அழுக்குகள் மூடி தெரியாவண்ணம் மறைப்பதுபோல், நம்முள் சுயம்பிரகாசமாய் விளங்கிகொண்டிருக்கும் இறை பொருளை அறியவிடாது செய்யும் குழப்பமுடைய மனதை தெளிவாக்குபவரே குருபிரான். இதனை திருமூலர் பிரானவர்கள்,

**தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திரு வார்த்தை கேட்டல்**
**தெளிவு குருவின் திருநாமம் செப்பல்**
**தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.** என திருமந்திரத்தில் அருளியுள்ளார்கள்.

**முத்தி :** ஆசானின் னாதமாகிய வாளாயுதத்தின் துணை கொண்டு மறலியாகிய எமனுடைய அதிவல்லபப் படரை தாண்டி பிறவிப்பிணியிலிருந்து விடுதலை அடைவதே முத்தி.

**சொத்து :** மரணமிலாப் பெருவாழ்வை பெருவதே முழுமுதல் சொத்தாகும். அப்பெரு வாழ்வை பெறுவதற்கு குருகொண்டலின் அமுதமொழிக்கு செவிமடுத்து அவர்களின் பரிசுத்தமான னினைவில் கலந்து அழியா சொத்தாகிய பேரின்ப பெருவாழ்வு வாழ குருவருள் வேண்டி சபை இனிதே னிறைவு பெற்றது.

## 03-05-2022 ~ செவ்வாய்க்கிழமை ~ சிவகாசி சிறப்பு சபை
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

குருபிரான் அவர்கள் சேவடிச் சேகரம் பாடலுடன் அவை நிகழ்வுகளை மலரச் செய்தார்கள். **அண்ணல்சீதன மின்னதின்னதென்றே டுத்தேடுத் தேவுபதேசம் – பின்னடுத்தடுதே சாட்சி வேதம்**. மேலான ஞான விஷயங்களை, நம் அறிவில் சாயாமல் சாஸ்திர அறிவு கொண்டு அருளிய பெரியோர்களின் பாடல்கள், நூல்களின் சாட்சியுடன் சொல்வது நன்மை பயக்கும். நீண்ட பிறவியின் பெருங்கடல் தாண்டுவதற்கே வேதவாக்கியங்கள் இறக்கி அருளப்பெற்றுள்ளது. **பண்டை னான்மறை பேசும் பரிசையன் அண்டர்ப திக்கெனை ஏற்றியே - முன்னாள் கொண்ட களைப் பெலா மாற்றியே.** சற்குருபிரானே பரிசாக வருகின்றார்கள். உயிர் காக்கும் மருந்துகள் பிறவிப்பிணியைத் தீர்ப்பதில்லை. பிறவிப்பிணி தீர்க்கவல்ல நாதமருந்து மெய்ஆசானிடம் உள்ளது. மெய்ஞானத்துடன் இந்த பௌதீக உலகியல் நடப்புகளை தெரிந்து வாழ்ந்தால் எளிதாக நம் வாழ்க்கையை வாழலாம்.

அகமிய விஷயமாக **னின்றதொரு பிரளயத்தின் அதிசயத்தை னெடுங்ஙாலம் னீ இருந்நே காண வேண்டும்** என ஆண்டவர்கள் அருளியதை புறத்தில் நாம் காணும் உலக அழிவு என நினைத்து மக்கள் ஏமாந்து போவது அறியாமையின் உச்சமே. ஆண்டவர்கள் தங்களுடைய மெய்ஞான நிலைகளை உலக மக்களுக்கு ஞான நிலையின் மேலான உண்மையைக் கொண்டு சேர்க்கும் ஒர் உளவாக இவ்வித யுத்திகளைக் கையாண்டார்கள்.

அழிவது உலகல்ல; அதில் வாழும் உயிரினங்கள்தான் அழிகின்றன. இந்த அழி உடலை அழிப்பதற்கு பிரளயம் தேவையில்லை என்பது வேதசாட்சியாக உள்ளது. புறஉலகம் அழிவது போல் கூறி இறுதியில், **இப்படிக்கு சத்துவங்கள் எல்லாம் முடிவடைந்து… சத்திய னடையை இன்று தானெ டுத்திங் ஙேனுரைத்தேன் மெத்தனாள் உண்டென்றெண்ணி மாட்டிக் கொள்வீரே** என அருளுகிறார்கள். பிரளயம் என்பது **தேவரகசியம் தேடு உன்னுடம்புள்** என்ற நிலையில் உள்ளது. இவை அனைத்தையும் இறக்கியருளி நம்மை ஆண்டு கொண்டிருக்கும் பரிசுத்த ஆவி தெய்வம் இன்றளவிலும் தோன்றாத் துணையாக நம்முடன் இருப்பதை உணர்ந்தால் வேதம் கற்பனையல்ல நிஜச் செயல் உடையது என்பதை அறியலாம். *வாயின் உள்ளே செல்வதல்ல, வாயில் இருந்து வெளியே வருவதே*



Copyright © AMNA Trust, Chennai 

*தீட்டு* என்பது பைபிள் வசனம். ஆறாவது அறிவை தனிச்சீதனமாக கொண்டுள்ள மனிதனின் அடையாளம் அவனுடைய வாக்காக உள்ளது.

பெரியோர்கள் உண்டாக்கிய நகல் வடிவமான கோவில்கள், பூஜைகள் இவையெல்லாம் **உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்** என்னும் அசலை நினைவூட்டும் அடையாளங்களாகும். அவைகள் உணர்த்தும் மெய்ப்பொருளை பெரியோர்களால் மட்டுமே எடுத்துக்கொடுக்க முடியும். அறிவில் நடப்பதே பரிணாம வளர்ச்சியன்றி, விலங்கிலிருந்து மனிதன் வருவது பரிணாம வளர்ச்சியல்ல. ஆறாவது அறிவு உலகில் புதுமைகளை உண்டாக்க மனிதனுக்கு தரப்படவில்லை. மற்ற உயிரினங்கள் யாவும் தலைவணங்கி நிற்கும் பேராற்றல் கொண்ட மனிதன்தான் தன் மனம் என்னும் குரங்கின் முன் மண்டியிட்டு, கரணம் போட்டு ஈனமாக வாழ்கின்றான். இறைவன் நிர்ணயித்த நீதிக்கோட்டில் இருந்து மற்ற உயிரினங்கள் விலகுவதில்லை. ஆனால் ஆறறிவு கொண்ட மனிதன் அதிலிருந்து பிறழ்பவனாகவே உள்ளான். இறைவன் வகுத்த பேரின்ப வாழ்வு வாழ்வதற்கென தனிச்சீதனமாக வழங்கப்பெற்ற ஆறாவது அறிவின் விழிப்புணர்வைத் தூண்டவே பெரியோர்கள் வேத சாஸ்திரங்கள் மூலம் உலகிற்கு இதனைப் பறை சாற்றுகிறார்கள். இக்கால மக்கள் பெரியோர்கள் அருளிய பாடல்களை கேட்டாலே, படித்தாலே போதும் என நினைப்பதே மிகப்பெரிய அறியாமையாக உள்ளது.

வள்ளல் பெருமான் அருளிய அருட்பெருஞ்ஜோதியாகிய அறிவை அறியாமல், பஞ்சுபூதத்தில் ஒன்றான நெருப்பை, ஜோதியாக ஏழு திரைகளை விலக்கி வணங்கி அறியாமை என்னும் இருளில் ஆழ்ந்து கிடக்கின்றனர். **கண்டேன் தேவ ஆவியை கடைத்தேற** என்பது மெய்வழி ஆண்டவர்கள் தன் மக்களுக்கு செயலாக பழக்கி வைத்த விஷயமே அன்றி, வெறும் வார்த்தைகளல்ல. ஆண்டவர்கள் உண்டாக்கிய மெய்யெனும் பொருப்பு, என்றும் எக்காலத்தும் ஒன்றே ஒன்றுதான். நாமத்திற்கான பொருளாக நம்முள் வீற்றிருக்கும் ஆன்மா எனும் மெய் நம்மை விட்டுப் போய் விட்டால் எல்லாம் பொய்யாகிவிடும். சுத்த நினைவோடு இருப்பது வணக்கமாகும். ஆறாவது அறிவிற்கான அகமிய ரகசியங்கள் அத்தனையும், வேத சாட்சியாக நிரூபிக்கக் கூடிய எல்லையாக இன்று ஆதி மார்க்க நீதி அவை விளங்குவது சத்தியம். ஒவ்வொரு சத்சங்கமும் தெளிவை நோக்கிய விழிப்புணர்வை தூண்டும் பயணமாக உள்ளதை அறிவித்து தோத்திர பாடலுடன் அவை நிகழ்வுகளை குருபிரான் இனிதே நிறைவு செய்தார்கள்.

**07-05-2022 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**சத்திய பரிசுத்த வான்மதிக் கொரல் திருவாக்கியம் எண் : 65**

காதிர் பாட்ஷா என்ற திருநாமத்துடன் அவதரித்த அதிகாரண கர்த்தருக்கு தன் குரு பெருமான் தனிகைமணி பிரானவர்கள் சூட்டிய திருநாமமே **மார்க்கனாதர்**. மெய்வழிச் சாலையை ஸ்தாபித்து மக்களுக்கு ஞான நிலைகளை அருளிய காலங்களில் நிகழ்ந்த திருச்செயல்களின் நிரூபணையாக *காமீல்பாவா, தெய்வம், குருனாதர், கல்கி, மகதி, ஈசா, ஆண்டவர்கள், பொன்னரங்கர்* என பல திருநாமங்கள் கொண்டு தம் மக்கள் அன்புடன் அழைத்தார்கள்.


இச்செயலை குறித்து தெய்வகுல னாயகம் சாலை ஆண்டவர்கள், னாம் அவர்கள் தான் என்பது எமக்குத் தெரியவில்லை. ஆதலால் மெய்யாக மெய்யாகவே எம் மக்கள் எல்லோரும் னம்புங்னள் - எம்மை எமக்குத் தெரியவில்லை. ஆனதினாலே மெய்ம்மைக்குத் தக்கவை அனைத்தையும் கொண்டு எம்மை னீங்னள் பரீட்சித்து உங்களை னீங்னளே திருப்தி செய்துகொள்ளுங்னள். உங்னள் பரிசீலனைக்கு னாம் சம்மதிக்கிறோம் என அருளியுள்ளார்கள்.


Copyright © AMNA Trust, Chennai

பரீட்சித்து பார்க்கக்கூடிய அறிவு னம்மிடத்தில் இல்லை என்பதையும், ஏக பராபர அழியா வஸ்துவானது பூமி பாரம் தீர்க்க, தூலம் தாங்கி வந்து அந்தந்த சமயத்திற்கான தவ விளைவில் ஏறி விளங்கி னின்ற பலவாம் பதனிலைகளை குறிப்பதே னாமங்கள் என்பதையும் நம் னினைவில் ஊணி வைத்து கொள்ள வேண்டும்.

**ஆதி மான்மியம் - ஆதியோதயத் தலைப்பருவம் :**

**ஆதி பராபர பூரணமே சேதி எவ்வாறோ தெரிந்நிலமே** என்ற தெய்வத் தேடு கூடகம் பாடலுக்கிணங்ங, சேதி அடையாளத்தையும் ஆதியின் இரகசியத்தையும் னாமம் புள்ளி மூலம் தெரிந்து கொள்ளலாம். அப்புள்ளியே **ஆதி அசல் புள்ளி** - **ஆதியே துணை**. அப் புள்ளியிலிருந்தே ஆதி உதயமாகிறது.


*திரு. சாலை ரவி அப்பா அவர்கள்*
*நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை*

**அருண்மணி விரிந்து பெருந்நுறை சிறந்ந** - அருண்மணி என்பது சுத்த பிரம்மப்பிரகாச மணியாகும். அம்மணி விரிந்தால் தான், இதயப் பிரகாசமெனும் உள்ளமாகிய பெருந்துறையும் விரியும்.

**ஆதியின் மேனாள் னீதியின் தலையாய்** - அறிவெனும் பாதம் அறிவுக்கு அறிவாம் என் ஆசான் பாதமாக னின்று விளங்கும் பெருனிலையாகும்.

**இருங்ஙுணப் பழமை ஒருங்ஙது சமைந்நு** - னீ னான் என்றிரண்டிலாக் கடலே என்ற மெய்ச்செயலைக் குறிப்பதாகும்.

**ஈடொன்று மிலவாய் இருந்ந வனாதி** - அசைவற்ற குணக்குன்றாகிய பிரம்மத்துள் பொதிந்திருக்கும் அதிசயமாகும்.

**உறைந்நவக் கோளம் னிறைந்ந வல்லிருளாய்** - தவக்கோளத்தில் உறைவது என்றால் இரண்டறக் கலப்பது என்பது பொருள்.

**ஊமையாய் னின்று யுகம் பல பலவாய்** - உருவாமுன் னாமிருந்ந ரூபத்தை, ஆசான் தொட்டுக் காட்டும் நிலையாகும்.

**எண்ணருங் ஙாலம் வண்ண கூடஸ்த்தமாய்** - எட்டு வகை பிரம்மத்துள் ஒன்றான கூடஸ்தபிரம்மத்தை குறிப்பதாகும்.

**ஏதுமில் யாதும் ஓதும் புராதனம்** - புராதனப் பொருப்பாகவும், புதையலாகவும் நம்முள் இலங்ஙிக் கொண்டிருக்கும் ஜீவனின் இரகசியமாகும்.

**ஐக்கிய பதியும் அசைவிலாக் குன்றாய்** - சர்வத்தையும் உள்ளடக்கியிருக்கும் **ம்** எனும் மூலம்.

**ஒரு வஸ்த் துவதெனும் பரவஸ்த் ததுவாய்** - எதிலிருந்து சர்வமும் வெளியானதோ, மீண்டும் எதில் போய் ஒடுங்குகிறதோ அதுவே பரவஸ்த்தாகிய பிரம்மம்.



Copyright © AMNA Trust, Chennai

**ஓங்கு னிராமயம் பாங்குறு கருமை -** இருதயமெனும் சிமிழிலிருக்கும் கருமையாகிய திருக்கலிமா மையின் சூட்சும னிலையாகும்.

**ஔவலா மோரறி வாகிய தெய்வ -** அகரமும் உகரமும் சேர்ந்து **ஔ** எனும் ஓரறிவாகி னிற்கும் செயலாகும்.

**ஃகெனும் பிரம்மத் தருளொளிப் பெருக்கால் -** குருபிரானின் அருளொளியின் மூலம் நம்முடைய அக் (ஃ) கண்ணாகிய அறிவுக்கண் திறப்பிக்கும் செயலாகும்.

அகர வரிசையில் அ முதல் ஃ வரையிலான தமிழின் அதிசூட்சும னிலைகளை நம்முள் உண்மையாக்கவே உதயமாகியுள்ள தனித்தலைமை பெரும்பதியாகிய னம் குருபிரானின் திவ்ய திருவடிகளைப் போற்றி வணங்குவோம்.

**08-05-2022 ~ சிவகாசி சபை ~ ஞாயிற்றுக்கிழமை**
**தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்**

**ஆத்தாளாய் வந்நெனக்கு அமுத மூட்டி**
**அனைத்தடிமை கொண்டஎன்றன் அம்மா அம்மா ...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை தொடங்கியது.

**ஜீவசகோதரி ஜான்சிராணி அவர்களின் புரிதல்:**
**காற்று :** *அருங்கோடை பாலைவனம் கானகத்தி லகப்பட்டு ...* என்ற ஆண்டவர்களின் பாடலுக்கிணங்க ஆசானின் கருணையால் இளங்காற்று வீச உடல், உளம் குளிர நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பிரபஞ்சம் காற்றினால் நிரம்பி உள்ளது. தாயின் கருவறையில் இருக்கும் குழந்தைக்கு காற்று தான் உணவு. குழந்தை பிறந்ததும் காற்று உள்ளே நுழைந்து குவா என்ற சத்தம் வந்த பின்னரே அக்குழந்தை உயிர் பெறுகின்றது. குவா என்ற சத்தம் பிறக்கும் இடத்தை அறிந்தவர்களே மெய்ஞானிகள்.

**ஜீவசகோதரர் செந்தில் அவர்களின் புரிதல்:** ஆதி மார்க்க னீதி அவையின் சின்னம் (LOGO) : **கரும்புள்ளி -** இருதயமெனும் சிமிழிலிருக்கும் திருக்கலிமா மையின் இரகசியம். **கத்தி மற்றும் வாள் -** குருபெருமானின் னாத வல்லபம். **வட்டம் -** காலச்சக்கரத்தின் குறியீடு. மேலும் அனேக இரகசிய பெருனிலைகள் ஆதி மார்க்க னீதி அவையின் சின்னத்தில் பொதியப்பெற்றுள்ளது.

**ஜீவசகோதரி ஷண்முகப்பிரியா அவர்களின் புரிதல் :**
அருணகிரிநாதர் அருளிய **குருவாய் உருவாய் அருவாய் அருள்வாய்...** என்ற பாடலின் புரிதல்: **குண்டலி -** மனோன்மணி, பத்து வயதான கன்னி, இடப்பாக ஆசாரக் கண்ணி, பூங்விளிக் கண்ணி, இவை பார்பதித்தாயின் நாமங்களாகும். மேன்மை பொருந்திய குண்டலி சக்தியானது இடுப்பின் கீழ்பகுதியில் உள்ளது என உளறும் அறியாமைக் கூட்டத்திலிருந்து நம்மைக்காத்து, எண் சாண் உடம்புக்கு சிரசே பிரதானம். அந்த சிரசில் உள்ள குண்டலி தாயின் இரகசியத்தை அருள்பவரே மெய்யான ஆசான்.

**ஜீவசகோதரி மஹிமா அவர்களின் புரிதல் :**

**மறதி -** சித்தமும் புத்தியும் அற்ற நிலை மறதியாகும். மறதியுடன் செய்யும் செயலில் காலம் விரையமாகி காலனிடம் நமக்கு நெருக்கம் அதிகமாகிறது. ஆகவே மறதி என்பது மறலி எனும் எமனைக் குறிப்பதாக இருக்கிறது.


Copyright © AMNA Trust, Chennai

**பாசம் -** கால் வழியில் பிறந்து பாசக்கயிற்றால் கட்டப்பட்டுள்ளவர்கள் நரனாகிய சூத்திரர்கள்.

**அன்பு -** குருபெருமானின் திருப்பார்வையும், அவர்களுடைய அனுக்கிரகமாகிய அன்புக்கு பாத்திரமாகாதவர்களும் நடமாடும் பிணத்திற்கு சமமானவர்கள். இதையே *அன்பில்லாத உள்ளத்தை மயானம் என்று அறி* என கபீர்தாசர் அவர்கள் அருளியுள்ளார்கள்.

**உறக்கம் -** மனிதனானவன் மயக்கமாகிய உறக்க நாடகத்தில் நடித்துக் கொண்டே இருக்கின்றான் என்பதை உணர்த்தி, **பசித்திரு-விழித்திரு-தனித்திரு** எனக் கூறி நம்மை உறக்கத்திலிருந்து எழுப்புகிறார்கள். இச்செயலே மாண்டவர்களை மீட்டெடுத்தல் எனும் மறுபிறப்பின் ரகசியம் ஆகும். இதனையே

**உறங்குவது போலுஞ் சாக்காடு உறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு.** என திருவள்ளுவபிரானும் அருளியுள்ளார்கள்

**ஜீவசகோதரி ஸ்ரீமா அவர்களின் புரிதல் :**

**உலகம் -** ஆதி பரமகுருவால் படைக்கப்பட்டது உலகம். ஐந்து தொழிலையும் செய்யக் கூடிய பொருளாக இருப்பதே உலகு. இவை ஐந்திற்கும் காரணமாக இருக்கக் கூடிய ஆவிப் பொருளுடன் இரண்டறக்கலந்து வாழ்வதே உலகத்தோடு ஒட்ட ஒழுகுதலாகும். இச்செயலையே

**சுவை ஒளி ஊறு ஓசை நாற்ற மென்றைந்தின்**
**வகை தெரிவான் கட்டே உலகு** என திருவள்ளுவபிரான் அருளியுள்ளார்கள்.

**ஓதுதல் -** பாவச்செயலால் விளைந்த ஒழுங்கற்ற உலகத்தை உய்விக்க நாம் ஓத வேண்டும். ஓதுவதால் நம் பாவங்கள் நீங்குகின்றது. இதையே ஆண்டவர்கள், **பாவ விமோசனத்திற்காக நாங்கள் எல்லோரும் ஓதுகின்றோம் ஆண்டவரே** என அருளியுள்ளார்கள்.

**சத்தியவேதம் – ஆதியாகமம் அதிகாரம்-03 :** 16 முதல் 20 வரையிலான திருவசனங்களுக்கு ஜீவசகோதரர் விஜயகுமார் அவர்களின் புரிதல் :

**திருவசனம் - 16 :** தீவினைக்கு காரணமாகிய மனதைப் பற்றி வள்ளல் பெருமான் குடும்ப கோரம் என்ற தலைப்பில் அருளியதாவது : ஏழையாக இருக்கும் குடும்ப தலைவனுக்கு ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மனைவிகளும், ஆணவம் என்கின்ற மனைவிக்கு அஞ்ஞானமாகிய மகனும், கன்மம் என்கின்ற மனைவிக்கு மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கு மகன்களும், மாயை என்கின்ற மனைவிக்கு ரஜோ, தாமச, சாத்வீக என்கிற மூன்று மகன்களும் உள்ளனர். மூன்று மனைவி, எட்டு பிள்ளைகளுடன் தலைவன் வாழும் வாடகை வீட்டின் சொந்தக்காரர்கள் வாதம், பித்தம், சிலேத்துமம் என்பவர்கள். இப்படியான உடலாகிய வீட்டிற்கு நாள்தோறும் வாடகையாக வசூலிக்கப்படுவது உணவாகும். அந்த எட்டுப் பிள்ளைகளுக்கான காரணம் ஏழை தலைவனின் ஆசையே என்பது இத்திருவசனத்தின் புரிதலாகும்.

**திருவசனம் - 17 :** *ஊத்தைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி* **...** என அழுகணி சித்தர் பாடலிலும் *ஊற்றைச் சரீரத்தை ஊன் பொதிந்த பீற்றல்* ... என பட்டினத்தார் பாடலிலும் அருளப்பெற்றுள்ளது.

**திருவசனம் - 18 :** *மனிதனுக்கு வயது தந்ததின் பிரயோஜனம் மெய்ப்பால் அறியவே* என்பதை மறந்து உயிருடன் இருக்கும் நாளெல்லாம் மனதின் கீழ்நோக்கத்தால் நரகத்தை தழுவுகின்றான்.



Copyright © AMNA Trust, Chennai 

**திருவசனம் – 19** : முகம் என்பது நான். நான் எனும் உணர்வின் மூலமே பஞ்சுபுலன்களும், பொறிகளும் இயங்குகிறது என்பதை அறிவதே தன்னையறியும் செயலாகும்.

**திருவசனம் – 20 :** ஏவாள் என்பவள் சக்தியாகவும், பத்துவயது கன்னியாகவும், வாலைத் தாயாகவும் மனிதனுள் வீற்றிருக்கிறாள் என்பதை உணர்த்துவதாகும்.

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:** மாற்றங்கள் நிறைந்த இவ்வுலகில் என்றும் மாறாதிருப்பது நித்திய தன்மையுள்ள இறைபொருள் மட்டுமே. மாறாத இறைபொருளை மாற்றங்கள் நிறைந்த னரஜென்மம் கண்டு அனுபவிக்க இயலாது. **நான்** என்பது மனிதனின் வாழ்நாளில் ஒவ்வொரு மாற்றங்களையும் தன் நினைவில் பதித்து இறுதியில் அற்றுப் போகின்றது. நான் என்பது அனைத்து உயிரினங்களில் இருந்தாலும் அதனை இன்னது என அறிந்து கொள்ளும் திறன் மனிதனுக்கு மட்டுமே உள்ளது. இதையே, **னினைவுட் பதியும் னாதமின் னுடல்** என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். மாற்றமில்லாத ஆன்மாவை அறிவிப்பவரே அறிவு வடிவாகிய குருபெருமான் ஆகும். ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர்கள் என்றும் மாறாதிருக்கும் னித்திய பொருளையும், மாற்றத்திற்குரிய அனித்திய பொருளையும் தன்னுள் அறிந்தவர்களாக உள்ளனர் என்ற ஆசீர்பாதத்துடன் குருபெருமான் அவையை நிறைவு செய்தார்கள் .

**08-05-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்**

ஜீவசகோதரர் கௌதம் மற்றும் அங்கத்தினர்கள் உரையாடலின் சிறப்பு அம்சங்கள் :

**மனிதன் :** ஐயறிவு நுகர்ச்சியில் உழன்று கிடக்கும் நம்மை குருபிரான் மீட்பித்து, ஆறாம் அறிவு இன்னதென அறிவித்து அவ் அறிவின் செயலையும் அதன் மூலம் அடையும் பலனையும் அளித்து மனிதன் என்னும் பதத்தில் ஏற்றி வைக்கிறார்கள்.

**அறிவு :** அறிவெனும் மெய்ப்பொருள் மனிதனுள் பொதியப் பெற்றிருப்பதை அறிய விடாமல் தடுக்கும் மனமென்னும் மாயையிலிருந்து தெளிய வைத்து அறிவாக, பிரம்மமாக மாற்றி வைக்கும் மெய்ச்செயலை னம் தெய்வமவர்கள்

**தெளித்துத் தெளித்து வடித்துத் தெளித்த தேவத் திருச்சபை**
**திருக்கயிலா சத்தின் வாசத் தேவன் சபையின் னாள்**

என சாலை னடன விழாவில் அருளியுள்ளார்கள்.

**னாதன் :** னாதம் என்பது அறிவு. அறியாமையாகிய பாவ னாசத்திலிருந்து நம்மை மாற்றி அறிவுப் பாதையாகிய புண்ணியத்தின் வசத்தில் ஆக்குபவரே னாதன். னாதனுடைய லட்சணத்தை ஆண்டவர்கள், **னாதமது விளைந்நவர் பேர் னாதனாகும்** என மெய்வழி னூலில் அருளியுள்ளார்கள்.

**விசுத்தி :**

**எண்ணம் பல கோடிய தாய் விரிந்நே**
**மன்னும்பல உயிர்களெ லாம் னமவாய்**

இதில் னமவாய் - னமசிவய என்பதற்கு இடையில் உள்ள ஓர் எழுத்தாகிய **சி** என்பது விசுத்தியாகிய நெருப்பைக் குறிப்பதாகும்.

**அஞ்செழுத்திலே பிறந்து அஞ்செழுத்திலே வளர்ந்து**
**அஞ்செழுத்தை ஓதுகின்ற பஞ்சபூத பாவிகாள்**



Copyright © AMNA Trust, Chennai

**அஞ்செழுத்தில் ஓரெழுத்தை அறிந்து கூற வல்லீரேல்**
**அஞ்சல் அஞ்சல் என்று நாதன் அம்பலத்தில் ஆடுமே**

என ஓரெழுத்தின் இரகசியத்தை சிவவாக்கியர் அருளியுள்ளார்.

**அனாகதம் :** அனாகதம் என்பது பிராணனின் இரகசியமாகும்.

**தேக்குமந்த னாகதத்தைத் தொட்டு ஊணிச்**
**சேருமதி யமுதகலை பொங்கிச் சிந்தும்**
**வாக்குடைய வாக்கருளும் வாணி சத்தி**
**வளர்ஞானத் திருனடனம் வயங்கும் காப்பே**

என தரணியில் இல்லாத ஒரு தனிச்செயற்பதியில் அனாகதத்தின் அகமிய செயலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**ஆக்ஞை :** நிலம், நீர், காற்று, நெருப்பாகிய நான்கையும் தன்னகத்தில் வைத்திருக்கும் ஆகாய பெருவெளியே ஆக்ஞை.

**ஏழ்நிலைக் கம்பம் :** ஏழ்நிலைக் கம்பம் என்பது உணர்வெனும் கம்பமாக நம்முள் உள்ளது என்பதை, ஆசான் மூலம் தெளிந்து துலங்கினால் சிரஞ்ஜீவி என்னும் பட்டத்துடன் பரமபத வாழ்வை அடையலாம்.

**மாறாக வோடுகின்ற மனத்தை மைந்நா**
**மரணபயச் சவுக்குகொண்டு மாறி மாறி**
**னேராக வைராக்ய மணிக்கம் பத்தில்**
**னீயிறுக்கிக் கட்டிப்பார் னிலைத்தே னிற்கும்**
**பேராதே பெரும்பெருவான் கடைனீ கொண்டால்**
**பேச்சற்று மூச்சற்றுப் போவென் றூணே**

என்பதை உணர்த்தும் முரீதுச் சுருக்கம் பாடல் மூலம் அறியலாம்.

**குணம் :** குணங்களின் மூலம் மனம் வெளிப்படுகிறது. ஆசானின் துணையுடன் மனதை அறிந்து, தெளிந்து நல்வழியில் பழகி வரும் பொழுதுதான் நாம் சாத்வீக குணத்தை அடைய முடியும்.

**ஏதும் இலதாய் யாதும் உளதாய் :** ஆக்கல் இருந்தால் அழிவும் இருக்கும். ஆனால், ஆக்கலும் அழிவும் இல்லாத பொருளே ஏதும் இலதாய் யாதும் உளதாய் இருக்கும் பரம்பொருளாகும் என்ற புரிதல்களுடன் சபை இனிதே நிறைவேறியது.

*பார்வதீ! குருமூலம் பெறும் ஞானத்தைவிட ஆத்மாவிற்குத் தேவையானது வேறொன்றில்லை. இதுசத்தியம். சத்தியம். அதனைப் பெறுதற் பொருட்டுப் பிரயத்தினம் விவேகிகளால் செய்யத்தக்கதாம்.*

~ **குரு கீதை**



Copyright © AMNA Trust, Chennai

**12-05-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**வான்மதிக் கொரல் திருவாக்கியம் எண் 66 :** மனிதனை உய்விப்பதற்காக உலகம் தோன்றிய காலம் முதல் தீர்க்கதரிசிகள் அவதாரம் தாங்கி இன்னிலவுலகிற்கு வருகிறார்கள். அவத்தை தரித்து வருகின்ற அத்தீர்க்கத் தெரிசியர்களின் திருக்கரத்திலிருக்கும் செயலை வைத்து நாம் அடையாளம் காணமுடியுமே அல்லாது அவர்களின் திருவுருவத்தை வைத்து அல்ல என்பதை,

**சத்திரியன் போல் வடிவுத்**
**தோற்றமுன்னால் காண்பீர்**
**சாயுச்சிய பிரம்மமெனப்**
**பின்தெரிவீ ரம்மே** என தெய்வத் தேடு கூடகத்தில் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

சாலை என்ற மெய்மேனி இதோ வந்து உலாவுது பார்; அதன் மீது உன் கவனம் முழுவதும் இருக்கட்டும் என குருபிரான் உத்தரவிட்டார்கள். மேலும் ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களுக்கு, இன்னது இன்னதென, இன்னதுக்கு இன்னதென, அனைத்தையும் நிரூபணையுடன் நிரூபிக்கும் செயல் இங்கு கைக்கொண்டேறி வருவது பரிசுத்த ஆவி தெய்வத்தின் பரிபூரண ஆசீர்பாதம் என அருளிச் செய்தார்கள்.

**ஆதி மான்மியம் முகப்பு பா:**

**அத்திமாபுரம் அண்ணல் பராபர**
**சுத்த வான்துரை சொன் னயனக் கலை**
**ஒத்தை யான்மறை ஊணியழுத்திய**
**உத்தியோ வனரேஒது மான்மியம்**

**சுத்தவான் துரை :** குருபெருமானே சுத்தவான் துரை என்ற திருநாமத்திற்கு உரியவர். அவர்களின் அரசு செங்கோல் ஓச்சுகின்ற துரைத்தனம் கொண்ட மெய்ச்செயலை சொன்னயனக் கலையின் மூலம் அருளி மூன்றாவது கண்ணை திறந்து நம் உத்தியை ஓ வண்ணமாக ஆக்குகிறார்கள். தோற்றமில்லாமை எனும் அரூபவடிவத்தில் சுருட்டி மடக்கி திரட்டி தனதிடத்தில் அடக்கி வைத்திருந்த பிரம்ம குன்றென்னும் சூல்புடைத்த பூர்வ புராதன குடையிருட் கோலமாகிய காலகால காலங்கடந்த காரிருள் காருண்ய கறுப்பானது மனிதனுக்குள் சூட்சாதி சூட்சமமாக பொதியப் பெற்றிருக்கும் இரகசியத்தையும், ஃ எனும் பிரம்மத்து அருளொளிப் பெருக்கால் உதயமாகிய தனித்தலைமைப் பெரும்பதிக்குள் இருக்கக்கூடிய மதி, கதிர், மின், பனி, தாரகையின் ரகசியங்களையும் மௌனமொழியின் மூலம் வெளியாக்குபவரே **மௌனகுரு**.

இறைவனிடத்திலிருந்து வெளியானதால் இறைசூலி, திரிசூலியென நாமம் படைத்திருக்கும் மகமூது தாயின் நிலைகளை சோடச னிலையில் **ஸல் அல்லா யிறசூல் குரு காப்பாய்** என்றும் மெய்வழி னூலில், **கருவமைக்கும் இட மாதி சூட்சமென்றும்** ஆண்டவர்கள் அருளிச் செய்துள்ளார்கள். பிறந்ததினி இறவாத பேசும் பஞ்ஞாட்சரமாகிய ஆசானின் னன்னாதமானது நரனை மனுவாக்கி மனுவை தேவனாக்கும் அரும்பெரும் செயல் கொண்டதாகும்.

**னித்தியசூ ரியர்களை**
**உத்தியோவ னத்துண்டாக்கி**
**னீதித்தி ருமணமும்**
**ஓதும்ஒ ரேகுலமும்**



Copyright © AMNA Trust, Chennai

னித்தியராகிய குருபிரான், னித்திய சூரியர்களை உத்தி ஓ வண்ணத்தில் உண்டாக்கி, அறிவைத் திருமணம் செய்து வைத்து, தீட்டு துடக்கு ஒன்றும் இல்லாது தீப தூப மகா அலங்காரத்துடன், மகா வாசனையுடன் தேவப் பிறப்பளித்து எல்லோரையும் ஓர் குலமாக்கி வைக்கிறார்கள்.

**னீதமெனும் போதமொழி னிதம் னிதம் வேரேற**
**னிலை வேகாக்கால துவும் சாகத் தலையும் தோண**

னீதம் எனும் போத மொழியைப் பழகி வந்த பெரியோர்கள் அருளுவதே வேதம்.

**ஆதியிறை ஆலனபிக் குரைத்த வேதம் -** உலகத்தில் உடலெடுத்து வந்தவருக்கு, உடல் எடுத்து வந்தவரால் வெளியாக்கப் பெற்றதை **அன்றின்றும் என்றும் ஒன்றாவதாரப் பொன்றாத உதயமாக** ஆசானுக்கும் சீடனுக்கும் நடந்த விஷயமாக அருளுகின்றார்கள். ஆதி மான்மியத்தின் பருவங்கள் மெய்ஞான உபதேச நிலைகளின் ரகசியங்களை வைத்து அருளப்பெற்றதாகும்.

**தேவரகசியம் தேடு உன்னுடம்புள் –** உடம்பு என்பது தூல சரீரம் அல்ல. அறிவினுடைய சரிதம், இறைவனுடைய சரிதம். அந்த இறைவனுடைய காப்பான ஆதி தேவ ரகசியங்களைக் கண்டு அறிந்த தேவர்கள் மட்டுமே தன் பெருவெளியாகிய சாலையில் குடியிருப்பார்கள்.



*திரு. சாலை ரவி அப்பா அவர்கள்*
*நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை*

**ஆதியோதய பருவம்:**

**ஆக்கி யோனந்ந வல்லிரு ளுள்ளிருந்**
**நூக்கி யேவெளி யாக்கிய னாள்த்தலை**

மண்ணில் நெளியும் புழு அல்ல மலத்தில் நெளியும் புழுவை எடுத்து நரனாக்கி, மனுவாக்கி, தேவனாக்கும் செயல் செய்பவரே **ஆக்கியோன்.** அறியாமை எனும் இருளில் இருந்த நம்மை தூக்கி வெளியாக்கிய நாள்தான் எட்டாம் நாள், சிவராத்திரி, வைகுண்ட ஏகாதசி, லைலத்துல் கதிர். அந்த தலை நாளிலிருந்து தான் நம் தலை நமக்கு தெரிய வந்தது. இதனை ஆண்டவர்கள் **தலையான தலையறிந்து தலையைக் கண்டு தாக்கி நின்று காப்பனுக்கு காப்பதாச்சு** எனவும், சிவபுராணத்திலும் **நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே** என அறிவிக்கிறார்கள்.

னோக்கம் எண்ணத்தால் அமைகிறது. எண்ணம் நல்லெண்ணமாக இருக்க வேண்டும். னீதியான பிரளயச் செம்மலாக வருகின்ற ஆசானவர்கள் அஞ்ஞானத்தை மாற்றி சக்கரம், அயப்பட்டா, கும்பமாகிய சாகாத்தலை, வேகாக்காலின் ரகசியத்தை அறிவிப்பதே ஆதியோதயப் பருவம்.

மனிதனுடைய இதயதடாகமெனும் புனலூறிய புனற்றுறைக் கோவிலில் அரூபவடிவத்தில் பதித்து வைத்திருக்கும் ஆறு, ஐந்து, ஒன்று, ஒன்று, ஒன்றான இருபாக முக்கூர் நிலையங்களை பற்றிய ரகசியப் பூட்டிற்கான சாவியை தங்களின் தெரிசியர்கள் கையில் கொடுத்து வைத்துள்ளார்கள். **பிரம்மப்பிரகாச மெய்வழிச் சாலை ஆண்டவர்கள்** முன்னர் வந்த மூர்த்திகள், சித்தர்கள், ஞானிகள், யோகிகளில் ஒருவர் அல்ல. இவர் **தனித்தலைமைப் பெரும்பதி** என்பதற்கான சான்றானது - தான் பெற்று வந்த


Copyright © AMNA Trust, Chennai

அரும் பெரும் தவ நிலைகளை எல்லோரும் போதுமானவரை அணிந்து கொள்ளுங்கள் என்ற ஆசீர்பாதமானது இன்றளவிலும் நமக்கு செயலுடன் அனுபவமாகிக் கொண்டிருப்பதன் மூலம் அறியலாம்.

**அழி கலிப்பருவம்:**

**சத்தியங் நடந்நு தலைதடு மாறி**
**சாதிகெட் டழிவெறி மீறி**

ஞானம் பெற்று, மீண்டும் ஈனத்தனமான செயல் செய்பவனாய், அன்பே சிவம் என்பதை அறியாதவனாய், குலம், கோத்திரம், சாதி என்பதன் உண்மை அறியாதவனாய் திரிந்து கொண்டிருப்பவர்களின் மூடத்தனத்தைப் பற்றிய விழிப்புணர்வை அளிப்பதே அழி கலிப்பருவம். கலியை அழித்து புதுயுகத்தை படைக்கும் குருபிரானின் திருச்செயலானது ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களுக்கு பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஆசீர்பாதத்துடன் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்ற ஆசீர்பாதத்துடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

**14-05-2022 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்**

**னீதி யானபி ரளையச் செம்மல்கள்**
**சேதி யாரும் தெரியவி பரமாய்**
**ஜாதி மேங்நுல மக்களுக் கோதவென்**
**றாதி மான்மியத் தோதியிங் நாகுமே** என்ற பாடலுடன் குருபிரான் அவர்கள் அவையைத் தொடங்கினார்கள்.

**ஆடு மேய்ப்புத் திருவிழா:** ஆறறிவு ஆடுகளாக அறியாமை எனும் இருளில் வீழ்ந்து கிடந்த மக்களை மீட்பதற்காக மீட்புடைக்கோலென்னும் ஒரெழுத்து மாத்திரைக் கோலெடுத்து **நானே நல்ல மேய்ப்பன்** என்றெழுந்து வந்த திருநாளாகும்.

**வைகாசிப் பவுர்ணமி:** ஆண்டவர்கள் சர்வ சன்னதாலங்நிர்தராக இறங்கி வந்து, கொடியேற்றி அறிவில் குடியேற்றும் மறுபிறப்பு பெற்ற செயலைப் புத்தாடை புனைந்து, கோடித்திருவிழா என்னும் குடிக்காட்சி திருவிழாவாக நினைவூட்டும் திருநாளாகும்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண் : 91** பொல்லாப்பிணி நீக்கும் பெருந்தவப் பள்ளியான, ஜீவப்பிணி நீக்கும் வைத்திய சாலையில் ஜீவபண்டிதர் கொடுக்கும் மாதவன் தவமருந்தை உட்கொண்டு பிறவி தொலைத்தவர் நாவிலிருந்து வரும் வாக்கு எக்காலத்துக்கும் மாறாத நித்திய வார்த்தைகளும், வேத வேதாந்தங்களுக்கு பொருத்தமானதாகவும் இருக்கும்.

**ஆதி மான்மியம் :** ஆசான் மூலம் ஞான உபதேசம் பெற்று சீடனின் உள்ளம் அகிலாண்ட கோடி பிரம்மாண்டமாக விரியக்கூடிய **இதயம் கடல்போல் விரிந்நுதயஞ் ஞெய்ய** எனும் இதயத்தின் சிறப்புகளை அகமிய ரகசியங்களை ஒன்பது பருவங்களாக விவரிக்கிறார்கள்.

**முகப்புப்பா :** மெய் உணர்வைப் பெற்று ஜீவனுடைய ரகசியம் அறிந்து **உத்தி ஓ வண்ணம்** ஆனவர்கள் ஓதுவது மான்மியம். பிரம்ம சொரூபமான வேதத்தரசன் (வேதத்தாய்) செயலின் உன்னதத்தை முகப்பு பாடலில் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.


Copyright © AMNA Trust, Chennai

**ஆதியோதயத் தலைப் பருவம் :** அ முதல் ஃ வரையிலான பனிரெண்டு அட்சரங்கள் தமிழின் சிறப்பாகும். ஃகெனும் பிரம்மத்து அருளொளிப் பெருக்கால் தனித்தலைமை உதயமதாகி படைப்புகள் உண்டாகி தன் உலகம் விடியும் தேவப்பிறப்பின் ரகசியமே ஆதியோதயத் தலைப்பருவம்.

**ஆதியோதயப் பருவம் :** சாகாத்தலை, வேகாக்கால், போகாப்புனல் நிலைகளும், இறைவனானவன் மனிதனின் புனற்றுறைக் கோயிலெனும் இதயதடாகத்தில் அரூபவடிவத்தில் குடியேறியிருப்பதையும், **தொண்டெழு மனிதன் சுத்தத் துறையிரு தயத்தி லன்றி விண்டெங்கும் வெளியாகாத இறைவனை** அறியவைப்பதற்கான, மேலும் பல ரகசியத்திற்கான சாவி தீர்க்க தெரிசியர்கள் கையில் இருப்பதையும் விவரிக்கப் பெற்றுள்ளன.

**அழி கலிப்பருவம் :** ஞானம் பெற்றவன் சத்தியம் கடந்து, தலை தடுமாறி அழிவெறியால் பிரம்மராட்சஷனாக மாறி, மெய் செயலுக்கு இடையூறு உண்டாகும் செயல் பற்றி விவரிப்பது அழி கலிப்பருவம். பிரளயம் என்பது புறஉலக அழிவல்ல. ஒவ்வொரு மனிதனும் ஒரு உலகம் என்ற தெய்வவாக்கின் படி, மனுவின் அறியாமை அழிக்கப்பட்டு அறிவுப் பிறப்பில் குடியேறும் பெரும் செயலை குறித்து பேசப்பட்டதே பிரளயம்.

**முதுமொழி உதயபருவம் :** முதுமொழியானது தனிகைவள்ளலின் அகத்துறை உறைந்திருந்து வதனத்தில் வெளிவந்ததாகும். முதுமொழி உதயத்திற்கு ஏற்ப ஒரு அவதாரமானது தனி மாமுதலாக உடல் தாங்கி வருகிறது. அழித்தல், படைத்தல், காத்தல், மறைத்தல், அருளல் எனும் ஐவகைப் பொறுப்புடை அண்ணலாக, ஆறாவது அறிவு இன்னது, அதன் கருவிக்குலம் இன்னது, பெறக்கூடிய பயன்-பலன் இன்னது எனத் தொட்டுக் காட்டும் மெய்வழி வழங்கு அறிவுப் பிழம்பெனும் கிரணர், சர்வத்திற்கும் வித்தான வித்துனாயகம் பிறந்தார்.

**வளர் குழந்நை குமார பருவம்:** அறியாமை இன்னதென்றும் அறிவு இன்னதென்றும் னீதித்தீர்ப்பு நடத்த **கு** மரித்து மாறிக் கொண்டவரான குமாரரான பருவம் அறிவைப் பெற்றவர்களுக்கு மின்னும். குழந்நைப்பருவம் மாறி குமாரப்பருவம் தாண்டி வாலிபப்பருவத்தில் ஆசானை சந்திக்க வழிகாட்டியாக அருட்பாவில் உள்ள திருப்பாடலில் அப்பன், அன்னை, தேசிகனாகவும், தெய்வநாயகமாகவும், உயிர்த்துணைவராகவும் தனிகைவள்ளல் வருகிறார்கள் என அருளப்பெற்றுள்ளது. இறை திருவசனங்களை சுமந்து கொண்டு மெய்ஞ்ஞானத்தை பரிசாக, அருட்கொடையாக வழங்கிவரும் திருமேனியைப் பின்பற்றித் தொடர்ந்து மேலாம் பதமான நாலாம் பதத்தை பெற்று வாழ பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடியைப் போற்றி வணங்கி குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

**15-05-2022 ~ சிறப்பு சபை ~ ஞாயிற்றுக்கிழமை**
**தொகுப்பு: ஸ்ரீ. மணிமாறன்**

ஆதி மார்க்க னீதி அவையின் வைகாசி மாதம் பௌர்ணமி சபை னிகழ்வுகள்:

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோமா அல்லது இறந்து கொண்டே இருக்கிறோமா என்பதே ஞானத்தின் அடிப்படை கேள்வியாகும். நாளுக்கு நாள் வயதாகி, தோற்றத்தில் முதுமை அடைந்து, சிறுத்து, அழிந்து போவதால் நாம் இறந்து கொண்டே இருக்கிறோம் என்பதே சரியாகும்.

தோற்றம்-மறைவு என்ற குறியீடு மனிதனுக்கு மட்டுமே வைத்து சொல்லப் பெறுவதின் தேவரகசியத்தை ஆண்டவர்களும் **இறப்பும் பிறப்பும் எங்கே என்று ஆய்தல்** என அறிவுஅறி பாடத்தில் அருளியுள்ளார்கள். **ஆய்தல்** என்ற செயலானது



Copyright © AMNA Trust, Chennai	

**மனுவைப் படைத்தது தன்னை அறிய** எனும் மனுவின் பிரதான கடமையோடு தொடர்புடையதாகும். இச்செயலையே,

**தன்னைத் தானறியும் திருத்தலமதுவு மெங்ஙே**
**தன்னுக்கு ளஷ்டதிசைத் தலைவரெங்ஙே யெங்ஙே**

என மெய்ன்னிலைப் போதம் பாடலில் ஆண்டவர்கள் அருளியுள்ளது இங்கே செயலாக்கப் பெறுகிறது.

**காட்டகத் தேறி னாட்டுனன் னாட்டம்**
**வீடுகண் டெடுக்கப் பாடுனற் பயனே**
**திருமதி ஆட்சி உறுமதி ஓம்பும்**

என அறிவு அறி பாடத்தில் அருளப்பெற்றுள்ள தெய்வ வாக்கிற்கிணங்க சுத்த சைதன்ய நாதர் சொல் ஒரு பொருளாகிய அந்த அகப்பொருளின் மேல் நாட்டம் வைக்கும் போது மனம் வீடு கண்டடைந்து திருமதி ஆகிய குருபிரானின் மூலம் தன்னுள் பாதனிலை அறிந்து சைதன்யமாகிறது.

**மேல சுழிமூல வட்டம் காலூன்றி**
**மூலனாடி ஊடழுத்த மூச்சாடா** என்ற பாடல் செயலாகும்போது மூச்சு பிரண்டு அகமுகத்தில் ஓடுகிறது. ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும் காற்றைப் பிடிக்கும் கணக்கு அறிவித்து கூற்றை உதைக்கும் குறியாக மறலி கைதீண்டா செயல் நடைபெறும் இடமாக ஆதி மார்க்க னீதி அவை உள்ளது.

மௌனவைப்பு, பேசாதபெரிது, ஊமைஎழுத்து, எழுதாமறை, கூறாத அட்சரம், பிள்ளையார் சுழி, சிவமயம், திருசிற்றம்பலம் எனப்படும் மூலப்பழம்பண் ஆரமணிக்கே பழனி என்று பெயர். அந்த பழனியை ஆண்ட பழனியாண்டியாக ஒவ்வொருவரையும் பிரம்மவித்தை செயல் மூலம் பழக்கி, பழனியாக ஆக்கி வைக்கும் மௌன தேசிகரின் செயல் நடக்கும் இடமே இந்த அவை ஆகும்.

சர்வ மூலமந்திரமும் மக்களிடத்தில் உள்ளது. **மந்திரம் ஆவது நீறு சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு திருஆலவாயான் திருநீறு**. அத்திருநீறை குருபிரான் எடுத்து பூசவேண்டும்.

**அண்ணல் அருளால் அறைந்த ஆகமம்**
**எண்ணிலா கோடி நூல்கள் தொகுப்பினும்**
**அண்ணல் அறைந்த அறிவு அறியாவிடில்**
**எண்ணிலா எழுத்தும் நீர்மேல் எழுத்தே**

அந்த அண்ணல் அருளும் அறிவே ஆறாவது அறிவு. ஓரறிவாக விளங்கும் போதி மரமாகிய ஆசான் வந்த பின்னரே ஐயறிவு உள்ள நரன், ஆறு அறிவு பெற்ற மனிதனாக மாறுகிறான். இதுவே வீண்மனுவை ஈசனாக்கிவிடும் பஞ்ஞாட்சரமாக, சித்தமலம் அறுத்து சிவமாக்கும் செயலாக உள்ளது.

மூலமந்திரம், பாதபூஜை, மகாசங்கல்ப மந்திரம் இவற்றை செயலாகக் கொண்டது –
*ஆதி மார்க்க னீதி அவை.*

அறுகோணக் கதவதுனாலறிந்து சென்று அடைத்திருந்நுள் ளிருந்நு கொண்டு யாதுடனே
சுத்த நினைவுடன் வாழ வைப்பது - *ஆதி மார்க்க னீதி அவை.*

தேவரகசியம் தேடு உன் உடம்புள் எனும் செயல் நிஜமாக்கப்பெறும் இடம் –
*ஆதிமார்க்க னீதி அவை*



Copyright © AMNA Trust, Chennai 

அவரவரிடத்தில் உள்ள தெய்வநாமத்தை அறிந்து வாழும் சன்மார்க்க செயலை நிஜமாக்குவதே - *ஆதி மார்க்க னீதி அவை*

பூமியின் பாரம் தீர்க்க புதுப்புது நாமம் பூண்டு என்னும் தேடுகூடக பாடலுக்கு ஏற்ப, புழங்காத பேச்சை இவ்வுலகில் புழங்கி, செயல் வடிவம் பெற்று நிற்பது - *ஆதி மார்க்க னீதி அவை.*

குருபெருமானின் ஓங்காரத் தொனியே னாதமாகிய அறிவு வடிவாகும். உருவம் அடையாளம் அல்ல என்பதை நிரூபிப்பதே - *ஆதி மார்க்க னீதி அவை.*

*ஜீவசகோதரர் வடிவேலன் அவர்களின் புரிதல் :*

**மன்னுயி ரனைத்தும் மற்றுவிண் ணுயிரும்**
**கண்ணுயி ரெனக்களி கூர்ந்நு**

எனும் குருமணிமாலை பாடலுடன் தொடங்கி, நாம் பழகும் பிரம்மவித்தைச் செயலானது நம் வயது எனும் காலத்திற்குள் பிரயாணம் செய்வதாக உள்ளது. பஞ்சபூதங்களாலும் எதனாலும் அழிக்கமுடியாத ஒருபொருள் மனிதனிடத்தில் உள்ளது. இருதய ஆசனத்தில் ஒளிந்திருக்கும் அப்பொருளை குருபிரானின் அருளால் திறந்து, உள்ளம் பெருங்கோயிலாகி, அந்த இருதயாசனத்தொளிர் கடலில் போய் கலக்கும் செயலுக்கு அவர்களின் முதுமொழியாகிய திருவமுத வர்ஷிப்பே காரணமாக உள்ளது. அந்த முதுமொழி உதயமே அவதாரமாக அறிவு உருவாக வருகிறது. அதுவே உகந்த காலமாக, மக்களின் அறியாமை அகலும் பூரண நாளாக உள்ளது. இச்செயலையே ஆறாம் திருமுறையில்,

**காற்றாலே புவியாலே ககனமதனாலே**
**கனலாலே புனலாலே கதிராதியாலே**
**கூற்றாலே பிணியாலே கொலைக் கருவியாலே**
**கோளாலே பிற இயற்றுங் கொடுஞ்செயல்களாலே**
**வேற்றாலே எஞ்ஞான்று மழியாதே விளங்கும்**
**மெய்யளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்தான் எனக்கே**
**ஏற்றாலே யிழிவென நீர் நினையாதீர் உலகீர்**
**எந்தையருட் பெருஞ்ஜோதி இறைவனைச்சார் வீரே**

என வள்ளல் பெருமான் அருளியுள்ளார்கள். குருபெருமான் ஆசீர்பாதத்துடன் அவை இனிதே நிறைவேறியது.

**15-05-2022 ~ சிவகாசி சபை ~ ஞாயிற்றுக்கிழமை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. பானுமதி குமரேசன்**

**அரியருள் வருகும் அருமறை விதியோன்**
**யாதாபூ செனும்கலா மயிலே...** எனும் குருமணி மாலை பாடலுடன் அவை நிகழ்ச்சிகள் தொடங்கின.

*ஜீவசகோதரி லலிதா அவர்களின் புரிதல் :*

***எங்ஙும் மெய்வழி யேறித்துலங்ஙிட...*** எனும் கோடித்திருனாள் பாடலை பாடினார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

உடல் மூலாக்கினியாக, உயிர் காலாக்கினியாக, ஆன்மா தவாக்கினியாக உள்ளது.

**உடல்:** காயமே இது பொய்யடா வெறும் காற்றடைத்த பையடா. உடல் என்பது பொய்யாக, துக்கவுடலாக, அனித்திய ஆக்கைக்குடிலாக, இன்பத்திற்கும், துன்பத்திற்கும் உட்பட்டதாக உள்ளது. சித்தர்கள் குறிப்பிடும் இந்த மண்பாண்ட உடலுடன் ஓர் குரு ஆச்சாரியரை அடைந்து மூன்றாவது கண்ணாகிய அறிவுக்கண் திறக்கப் பெற்றால் இந்த துக்கவுடலை சுகவுடலாக மாற்றிக்கொள்ளலாம்.

**உயிர் :** வேதத்தின் தலை உயிர். இதுவே சுகமளிக்கும் மந்திரவாசமாக, **உ** என்னும் உகாரமாக, **லாம்** எனும் வேகாக்காலாக உள்ளது. உயிருக்கு மிஞ்ஞிய தௌலத்து இல்லை என்றும், இரவுபகல் ஓயாது ஊழியம் செய்யும் இலஞ்ஞிய லக்ஷிய உயிர் என்றும் ஆண்டவர்கள் வேதத்தில் குறிப்பிடுகிறார்கள். மேலும் புலன், பொறி, கரணங்கள் நான்கும் சேர்ந்த இந்திரஜாலமாக உள்ளது. உடலுக்குள் ஒரு தலைமுறை காலம் இருந்து நாற்றம் தெரியாமல் நம்மை காப்பதும் இதுவே. இந்த உயிரானது தூல, சூக்கும, காரண, மகா காரணம் என்ற பாதனிலைகளாக நம்முள் உள்ளது. உடல் உயிர் இரண்டும் காலத்திற்கு உட்பட்டது. சுவாசம் என்ற கயிற்றால் உடலும், ஆன்மாவும் கட்டப்பெற்றுள்ளது. உயிரே விந்து-னாதமாக, சிவன் - சக்தியாக, வேகாக்கால்-சாகாத்தலையாக செயல்படுகிறது. உயிராகிய ஜீவனுக்குத்தான் அந்தந்த மதங்களிலும் பஞ்சாட்சரம், அஷ்டாட்சரம், பிரணவம், காயத்ரி, கலிமா எனப் பெயர். தன் உயிரின் னிலையை தெரிந்தவர்களுக்கே தெய்வம் எனப் பெயர். அவர்களே சற்குருபிரான். எமபடரை நீக்கி பரிசுத்த முக்தி வீட்டில் ஆக்கும் கண்கண்ட தெய்வம் அவர்களே.

**ஆன்மா :** பரிசுத்த முக்திவீடே ஆன்மா. வேதமுடிவான பொருள் என்றும் வேதத்தாய் என்றும் குறிப்பிடுகிறார்கள். அதுவே னிச்சயமான மகிழ்ச்சி அனுபவம். அதுவே மகான்மியம்.
முப்பொருள் கோலமாக அலிபு-லாம்-மீம், அடி-முடி-னடு, அகரம்-உகரம்-சிகரம், அகது-உகது-வாகிது, ஆலம்-ரூஹு-ரூஹானி, உடல்-உயிர்-ஆன்மா, போகாப்புனல்-வேகாக்கால்-சாகாத்தலையாக இன்னும் பல்வேறு னாமங்களாக உள்ளது. உயிர் ஊமை எழுத்தாகிய முப்பொருட் கோலமாக னிற்கும் இவ்வுள்ளமை உஜூதினை அந்த வடிவு குறி அடையாள கிரந்நத்தை வாக்கு ரூபத்திற்கு இழுத்துகொண்டு வந்து வெளியாக்கும் ஒலிவடிவு விரிப்பின் பிரவாகத்திற்கே இல்மு என்றும் கல்வியென்றும் பெயர். அவ்வித்தில்லா வித்து கொண்டு துக்கவுடல் மாற்றி சுகவுடலில் பூட்டி வைப்பவரே குரு. தன்பயமொன்றில்லாத சரீரமாகிய ஆன்மாவிற்குள் பயணிக்கையில் அதுவே சத்து, சித்து, ஆனந்தம் எனும் சச்சிதானந்தம் ஆகும். அதுவே நானாக அதிசூக்குமமாக ஒளி உடலாக னினைவுட்பதியும் னாதமின்னுடலாக, அலிபு லாம் மீம் என்னும் தாலிக்கல் கித்தாபாக திகழ்கிறது.

**தாலிக்கல் கித்தாபு:** மூலப்பழம் பண்ணாரமணி உண்டைப்பெட்டகம் அட்சரமாகிய மாமுதலாக நான் எனும் பொருளாக உள்ளது. அ, உ, ம் எனும் அட்சரங்கள் மூன்றும் அக்கானிய முச்சுடராக, கோடாணி ரூபமாக, ஓம் என்னும் சுழினையாக உள்ளது. தன் ஜீவனை உணர்தலே தன்னை அறிதல் எனும் வீடுபேறு ஆகும்.

**பிராமணன்:** மூலமந்நிரமாகிய ஜீவனை தன் இதயலோகத்தில் காட்சியாகத் தரிசிப்பவரே பிராமணன். தன் ஜீவனை அறிவதே ஆறாவது அறிவாகிய ஆன்மாவை அறிதல், இல்லறம், பேரின்ப வாழ்க்கை என்பதாகும்.

**ஹஜ் யாத்திரை :** உடலும் உயிரும், ஜீவாத்மா என்ற நிலையிலிருந்து பரமாத்மா நிலைக்கு மாறுவதே யாத்திரை. இதுவே திருவடினிலை, ஆன்மனிலை. திருவடினிலை அடையும்போது அங்கே காலம் இல்லை. அதுவே அருங்காரண துரியனிலை.


Copyright © AMNA Trust, Chennai

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது** **(திருக்குறள்)**

அன்பும் அறனும் என்பது அரியும் சிவனுமாக, உடலும் உயிருமாக, சிவ சக்தியாக வாழ்வதே இல்வாழ்க்கை. அதுவே ஆன்ம வாழ்வு. இதனை வாலைக்கும்மி இயற்றிய சித்தர்,

**உடலில் நின்ற அட்சரத்தில் உறுதி காண வேண்டும்**
**ஆணாகி நின்று திருவாசி காண வேண்டும்**
**அமர்ந்து நின்று வாசி திருநயனம் காண வேண்டும்**
**வானாகி நின்ற அடிமுடியும் காண வேண்டும்** எனவும்,

சுப்பிரமணியர் யோகஞானத்தில், **தேகத்தில் ஓரெழுத்தைக் காண்பவன் ஞானி** என்றும் கூறுகின்றனர். இவ்வாறு **உடல் கண்டு உயிர்வழி பற்றியோடி ஆத்ம வீடடைவதுவே** ஆதி மார்க்க நீதி அவையின் நோக்கமாகும் என்ற பகிர்வுகளுடன் அவை நிறைவுற்றது.

## 19-05-2022 ~ வியாழக்கிழமை சபை
## தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

**எமனை அணுகவிடாது காக்கும் சத்திய பரிசுத்த வான்மதிக் கொரல் திருவாக்கியம் எண் : 67** உன்னத பிறப்பாகிய மனிதனின் அழிதேகத்துள் தங்கஉடலாக, வைரஉடலாக அழியாத தேகமாக விளங்கிக் கொண்டிருக்கும் சூக்கும, காரண, மகாகாரண தேகங்களை சற்குருபிரானின் பேரிரக்கத்தால் பெற்று, அதில் னாள்தோறும் நுழைந்து பழகும் பழக்கமே பிரம்மவித்தை செயலாகும்.

**ஓதுவதே தெழுதாத எழுத்ததை ஒருனான் ஙதையிருத்தி...** என்ற சோடச னிலை பாடலுக்கிணங்க, எழுதாத எழுத்தாக, ஓம் உருவாக, பிள்ளையார் சுழியாக, னற்றாளாக, சிவமயமாக, ஊமை எழுத்தாக, திருவடியாக விளங்கும் வேதத்தை நம் நெஞ்சகத்தில் வைத்து ஓதக்கூடிய செயலே பிரம்மவித்தை.

**ஆதிமான்மியம் - வளர் குழந்நை குமார பருவம் :** மாயா சரீரம் தாங்கி வந்துள்ள மனு சதளங் ஙோடிகளின் பிறவி இருளை விலக்கி கோடேறுந் நேடுடை ஏற்றுவான் வேண்டி, அதே மாயா சரீரம் தாங்கி ஜீவதேகத்தை கையகத்தே பெற்ற ஆன்ம சுத்த ஆவிப்பிரான் காலங்கள் தோறும் வருகிறார்கள் என்பதை அறிவைப் பெற்ற மனிதன் உணர வேண்டியது கடமையாகும். வேத நூலறிவு சிறிது தெரிந்து கொண்டு பெரியோர்கள் போல் வேடமிட்டுத் திரியும் போலிகளின் இன்றைய நிலைகளை அனந்நானந்நம் எடுத்துக்காட்டுகள் மூலம் ஆண்டவர்கள் இப்பருவத்தில் அருளிச் செய்துள்ளார்கள்.

**புகர் சமய ஜகத சத்துவ ...** *என்ற மந்திர சொற்களில் பொதியப்பெற்ற பெருனிலைகள் :*

**புகர் சமயம் :** அக சமயம், புற சமயம் மற்றும் ஜைனம், சீக்கியம், புத்த சமயங்களாகிய சர்வமும் உயிரைக் குறிவைத்து வந்ததே அல்லாது உடலை வைத்து வந்தது அல்ல. னூற்றீரேழு சாஸ்திரங்களும், திருக்குரானின் 114 அத்தியாயங்களும் னூரொளியாகிய இறைவனையும் அவன் மூலம் உண்டான ஈரேழு பதினான்கு உலகங்களையும் குறிப்பதாகும். ஆயிரத்தெட்டு

*உலகமாயை கூடமான அவித்தை என்றும், தேகம் அஞ்ஞானத்தாலாகியது என்றும் அறியும் மேலான ஞானம், எவரது கிருபையால் உண்டாகின்றதோ அவரே குருவென்னும் னாமத்தால் அழைக்கப் பெறுகின்றார்.*

~ **குரு கீதை**



Copyright © AMNA Trust, Chennai

அண்டங்கள், புவனங்கள் என சர்வத்திற்குள்ளும் இலக்கணமாகவும், எண் மற்றும் எழுத்தின் இரகசியமாகிய இலக்கியமாகவும் இருப்பது இறைவனின் இரகசியமே.

**பூத பூதாதிய :** வெளித் தோற்றத்தில் பஞ்சுபூதங்களாக இருப்பதே மனிதனுக்குள் பூதியங்களாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

**ஜீவ ஜீவேச :** ஜீவனின் இரகசியத்தையும், ஜீவன் இருக்கும் ஸ்தானத்தையும் குறிக்கிறது.

**இசையாதிய :** ஏழு ஸ்வரத்தின் (அமானிதம்) னிலையாகும்.

**சப்த சப்தாதிய சாயல் :** மனிதனின் அடையாளம். சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி என்ற ஆகாயத் தத்துவமாகும்.

**துருவுலாவு :** அணுவைக் குறிப்பது. ஏழு அணுக் கோர்வை எனும் தனிச்சீதனம்.

**விந்து னாதாதி :** விந்ததனில் னாதம் னின்று விளங்கும் னிலையை தன்னுள் அறியும் இரகசியம்.

**சுவை சுகியாதி :** அறுசுவை ஒளியும் இடமாகிய சுகிசுத்த சூதானத்தின் சூட்சுமம்.

**மதம் மதாதி கண் :** தன் தன் மதத்தில் தவறாதிருத்தும் செயல்.

இன்னும் இப்பகுதியின் அனேக சொற்கடங்கா சுவை மிகுந்த அருளமுத னிலைகளையும், னவனீதங்களின் இரகசியத்தையும் ஆசான் அருளினார்கள். ஆறறிவு உடலெடுத்து ஐயறிவு னுகர்ச்சியிலேயே கிடந்து உழன்று ஆறூர்ச் செல்லுவதற்கு வழி தெரியாதிருந்த னம்மை ஆறூரென்னும் குருக்ஷேத்திரம், திருவரங்கம், திருச்சுவர்ணத்தில்லை, திருச்சிற்றம்பலத்தை அறிவித்து அறிவிருக்கும் தலத்தில் அமர்த்தி அழியா வாழ்வளிப்பவரே அருட்குரு என்ற ஆதிமான்மிய பகுதிகளுடன் அவையானது இனிதே னிறைவு பெற்றது.

**21-05-2022 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் 92 :**
மனித வாழ்க்கையானது விதி மதி இரண்டினுள் அமைந்துள்ளது. இறைவனின் கையேடாகிய விதிக்குள் நம் ஆயுள், அழகு, ஆஸ்தி, சந்ததி என அனைத்தும் னிர்ணயிக்கப் பெறுகிறது. கரு பிடித்தவுடன் விதியின் விளையாட்டு ஆரம்பமாகிறது என்பதை, *கருப்பைக் கூடிக் கலந்த வினைத் தொடர்* என்ற தெய்வ பாடல் உணர்த்துகிறது. விதியோனாகிய இறைவன் நவக்கிரகங்களை தன் கையாட்களாக வைத்து விதிகளை நடத்துகிறான். மனித ஜென்மமும் விதிவசத்தால் நவக்கிரகத்தின் பிடிப்பில் சிக்கி தவிக்கிறது. அனுக்கிரகனாகிய குருபிரான் வந்து, கிரகத்தின் வல்லமை அணு கூட அணுகாமல் சங்கரித்து, விதி எழுத்தை மாற்றி, மதி எழுத்தை பதிப்பிக்கிறார்கள். இம்மெய்ச் செயலை முரீதுச் சுருக்கத்தில்,

**தலைவிதி யெழுத்தைத் துடைத்தெழு துமதே**
**தன்பயன் முரீதென்பர் விண்ணோர்** என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**ஆதி மான்மியம் - மூல பண்டாரப் பருவம் :**

**சீலங் னொண்டறி செம்பொருள் விண்டரன்**
**காலங் னண்டோன் கையிற்கிரே தாயுகம்**
**னீள வேதமு னீதர னுப்பினோன்**
**மூல பண்டாரக் கோலமு ழக்குவாம்**



Copyright © AMNA Trust, Chennai

சீலம் என்பது பரிசுத்தம். கிரேதாயுகத்தை கைக்கொண்டு, மகா பரிசுத்தவானாக வரும் குருபிரானே திருவடியாகிய செம்பொருளை நமக்கு அளிக்கிறார். மனு முளை துவங்கிய காலம் முதல் செம்பொருளாகிய மூலபண்டார கோலமானது தனுவினுடைய னாணியினிடத்திலிருந்து வீறிட்டெழுந்து, இப்பூவுலகில் னீதி மொழியாக முழங்கிக் கொண்டிருக்கிறது.

**கோலமாஞ் ஜீவ கோள**
**கோலத்துள்ளிருந்ந மெய்ம்மைக்**
**காலமும் இடமும் னேரம்**
**கணிதமும் கூடிச் சேர்ந்து**
**சாலையென் றொருமெய் மேனி**
**ஜகந்தனில் பிறங்ங எல்லாம்**
**ஏலவல் லவரும் வந்து**
**இணைந்நனர் அக்கா லத்தே**

முடிவற்ற உலகை குறிக்கும் கோலத்தையும், அக்கோலத்திற்குள் வீற்றிருப்பது மெய்ம்மையாகிய ஜீவன் என்பதையும், தன் பெருவெளியில் அறிந்தவர்களே சாலை என்ற னாமத்திற் குரியவர்கள். சாலை என்றொரு மெய்மேனி ஜகந்தனில் பிறங்ஙும் பாரப்பெரிய மெய் செயலுக்குரிய காலம், இடம், னேரம், கணிதம் கூடிச் சேர்ந்ததால், தனிகை மணிப்பிரானவர்களும், ஆண்டவர்களும் இணைந்த சம்பவ அதி தீர்க்க தெரிசனையானது அக்காலத்தில் னிகழ்ந்தது.

ஆண்டவர்களின் ஆசீர் பாதத்தால், ஆதி மார்க்க னீதி அவையிலுள்ள மக்களுக்கு இன்றும் அத்தெய்வீக னிஜ ரூப தெரிசனையானது குருபிரானின் அருளால் னிதர்சனமாகி கொண்டிருக்கிறது என்ற திருமொழிகளுடன் அவையானது இனிதே னிறைவு பெற்றது.

**22-05-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. மணிமொழி மஞ்சுநாதன்**

**திருவளர் திருவே ஷெய்குகள் ஷெய்கே**
**ஜீவபண் டிதருள்பண் டிதமே**
**திருவளர் தீன்தீன் தீன்முகம் மதுவே**
**செவ்வியுன் பதமலர்ப் பொருப்பே**
**திருவள ரிடத்தே யிதையுணர்ந் நோதும்**
**சிந்நனை யரும்பதங் னொடுக்க**
**அருள்வளர் வருக லாஞ்ஞனை யிலங்ஙும்**
**யாமுகம் மதுமதிக் கடலே**

என்ற குருமணி மாலை பாடலுடன் சபை துவங்கியது.

ஜீவசகோதரர் கௌதம் மற்றும் அங்கத்தினர்கள் உரையாடலின் சிறப்பு அம்சங்கள் :

**லாஞ்ஞனை :** லாஞ்ஞனை என்பது ஆசானவர்கள் திருக்கரத்தில் விளங்கும் முத்திரையாகும். வில், வாள், சூலம், டமரகம் என்னும் தேவ ஆயுதங்கள் மனிதனின் மும்மலத்தை வேரறுக்கும் தேவ சன்னதங்களாகும். மேலும், அஞ்ஞானக்கிழங்கு களைந்தெடுத்து உபனிடத மழை பொழியும் அருள் னாவாகும். சுத்த னினைவாக, பிரம்மமாக, ஜீவனாக, சூக்கும தேகமாகவும் னின்று விளங்குவதாகும்.



Copyright © AMNA Trust, Chennai

**ஆறாவது அறிவு :** மனிதனுக்கு மட்டும் இறைவனால் அளிக்கப்பட்ட தனிச்சீதனமாகிய அமானிதமென்னும் ஆறாவது அறிவை அறிந்து அடைவதே மனிதனின் கடமையாக உள்ளது என்பதை,

**அறிவு அறிவென்று அங்கு அரற்றும் உலகம்**
**அறிவு அறியாமை ஏதும் அறிகிலர்**
**அறிவு அறியாமை கடந்து அறிவானால்**
**அறிவு அறியாமை அழகியவாறே** என திருமூலர் பிரான் அருளியுள்ளார்கள்.

அறிவு அறியாமை கடந்த அறிவை அளிக்கும் மெய்க்கல்வி எனும் சாகாக்கல்வியானது, குரு பிரானின் அருளால் ஆதி மார்க்க நீதி அவையில் வேதபாடமாக ஓதப்பட்டு வருகிறது.

**தெளிவு :** ஆறாவது அறிவின் உன்னதத்தை அறியும் வரை நாம் ஐயறிவு கொண்ட விலங்கினை ஒத்தவர்களாகவே உள்ளோம் என்பதை உணர்த்தி தெளிவை அளிப்பவரே ஆசான். இச்செயலையே,

**தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குருவின் திரு நாமம் செப்பல்**
**தெளிவு குரு உரு சிந்தித்தல் தானே**

என திருமூலர் பிரான் அருளியுள்ளார்கள்.

தெளிவு குருவின் மூலமே, னீதி எனும் பொருளானவன் மனு என்பதையும், மனுவுக்குள் எழுதாத எழுத்தாக, னற்றாளாக, திருவடியாக, பாதமாக னின்று இலங்கும் அறிவின் னிலைகளையும் அறிய முடியும்.

**ஞானக்கண் :** புறத்துக் கண் கொண்டு பார்க்கின்ற மூடர்களாக, னபுசின் செயலில் மாட்டிக்கொண்டிருந்த நம்மை மீட்டு, அகத்து கண்ணாகிய ஞானக்கண்ணைத் திறந்து வைப்பவரே குருபிரான்.

**ஐம்மணிப் பொதிகை :**

**உண்டுறங்கும் ஊனக்கண்கா**
**ணாதபஞ்ஞாட் சரமே**
**உள்ஞானக் கண்கொண்டது**
**காணும்பஞ்ஞாட் சரமே**

முக முகத்தில் தந்தையாகவும், அக முகத்தில் தாயாகவும் இருந்து, பிரம்ம வித்தையின் மூலம் உள் ஞானக்கண்ணின் வல்லபத்தை உணர்த்தும் உத்தம சொரூபரே ஆசான்.

**காலம் : காலங்ஙள் கண்ட தனிகை வள்ளல் கண்டெடுத்த முத்துப் பெட்டகமே**

மனிதனுக்கு நாள் (காலம்) தான் தலையாக, னீதியாக, அறிவாக பிரம்மமாக உள்ளது. காலத்தின் ரகசியத்தை அறிந்தவர்களுக்கு நாட்கள் வரும் நாளெல்லாம் நலனாளாக திருனாளாக உள்ளது என்பது வேதவாக்கு.

*எவரது பாததாமரைகளிரண்டும் த்வந்த்வ - சுகதுக்காதி இருமைத்தாபத்தை – னீக்குவனவாயும், பவக் (பிறவிக்) கடலைக் கடப்பிப்பனவாயு மிருக்கின்றனவோ, அத்தன்மைய குருவைப் பணிகின்றேன்.*

**~ குரு கீதை**



Copyright © AMNA Trust, Chennai

**பிறப்பு :**
**பிறப்பென்னும் பேதமை நீங்க சிறப்பென்னும்**
**செம்பொருள் காண்பது அறிவு**

வினையினால் பிறப்பு அமைகிறது. வினையை போக்க பேதமையாக உள்ள மனமானது அறிவாக மாற வேண்டும். எண்குணத்தனாகிய ஆசானின் னாத னாதாந்நமே நம்மை அறிவுப் பிறப்பில் பிறப்பித்து, முக்குணத்திலிருந்து மாற்றி நிர்க்குணமாக்கும். இச்செயலையே காமீல்கள் னோக்கத்தில், **உருமுரசறைந்து காட்டி உன்னிதம் காட்டல் போலே கருவிகள் பலதும் காட்டி காட்சிகள் காட்டுவார்கள்** என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள், என்ற புரிதலுடன் சபையானது இனிதே னிறைவேறியது.

**22-05-2022 ~ சிவகாசி சபை ~ ஞாயிற்றுக்கிழமை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்**

**சத்தியம் திரண்ட சாயுச்சியக் கடலே..** என தொடங்கும் குருமணி மாலை பாடலுடன் அவை தொடங்கியது.

*ஜீவசகோதரி ஆர்த்தி அவர்களின் புரிதல்:* பெரியோர்களிடம் நீதித் தீர்ப்பைப் பெற வேண்டிநிற்பதே ஞானமுறையீடு. ஆசானின் திசை னாதமானது விஷமாகிய உப்பை அமிர்தமாக, லவணமணிமந்திர ஔஷதமாக மாற்றுகிறது. அதுவே னவமணி மாடத்துள் ஏற்றி பிறவிப்பிணியைத் தீர்க்கும் மாமருந்தாகவும் உள்ளது.

*ஜீவசகோதரி கனகத்தாய் அவர்களின் புரிதல்:* **அளவிலா வெகு காலமிப் பூமியில்**.. என்ற குரு ஸ்தோத்திர பாடலைத் தொடர்ந்து, மனிதனாகப் பிறந்த பின்னும் குணங்களால் பறவையாய், பாம்பாய் கீழ்னோக்கமாக சைத்தானாக மாறியிருக்கும் மனதை, மேல்னோக்காக சுல்தானாக ஆசான் அவர்கள் தனது அருள்வர்ஷிப்பால் மாற்றி வைக்கிறார்கள். சதாசர்வகாலமும் ஆசானின் னாதம் நம்முள் இருந்து காக்கும் செயலையே **தலையில் என்குரு தாள் வாழி வாழியே** என்கிறார்கள். சர்வ சம்பத்தையும் உள்ளடக்கிய நினைவில் தான் சொர்க்க லோகம் கட்டப்பெறுகிறது. அதை வாழும்போதே கைக்கொண்டு அடைய வைப்பது ஆசானின் பெருங்கருணையே ஆகும்.

**வாக்குத்தத்தம்**: நாம் சுமந்து வந்த அமானிதக் கடனை, புராதனராகிய சற்குரு பிரானின் திருவாக்கால் தன் உள்ளத்தில் அறிந்து, அந்த கடமையை னிறைவேற்றும் செயலாகும்.

*ஜீவசகோதரர் சோலையப்பன் அவர்களின் புரிதல்:* பரிசுத்தமான நினைவில்தான் சொர்க்க லோகத்தை கட்ட முடியும். நினைவு பரிசுத்தமாக இருப்பதற்கு

*ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்.*
*ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.*
*மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.*
*வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்.*
*போகாத இடந்தனிலே போக வேண்டாம்.*
*போகவிட்டுப் புறஞ் சொல்லித் திரிய வேண்டாம்*

என ஔவைப்பிராட்டியார் கூறியுள்ளார்கள். ஓதுவது என்பது மெய்க்குருவின் இரக்கத்தால் வாய்மூடி ஓதப்பழகும் மெய்க்கல்வியாகவும், மாதா என்பது பத்து வயது கன்னியாகத் திகழும் நற்றாளைக் குறிப்பதாகவும் உள்ளது. வஞ்ஞனை செய்யும் மனதோடு இணங்கி மூச்சு துண்டாடப்பட்டு பாவச்செயல் புரியவேண்டாம் என்கிறார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

ஆண்டவர்களும் எது வேண்டும்? என்பதை அமுதகலைக் ஞானபோதம் முதற்காண்டத்தில்,

**தானேதான் பழுதில்லாத தேகம் வேண்டும்**
**தன்மைதரும் சரிகையதி னொழுக்க வேண்டும்**
**ஆணான மெய்ஞ்ஞானக் குருவே வேண்டும்**
**அரை னொடிக்குள் மலமகற்றும் தீட்சை வேண்டும்**
**தேனான அன்பதிகம் வேண்டும் நாளும்**
**தெய்வபதித் தேவர்கோன் தெரிய வேண்டும்**
**பானமெனும் காமதே னருந்த வேண்டும்**
**பதறாமற் பரமபதம் வேண்டி னாடே**

என அருளியுள்ளார்கள். மெய்ஞ்ஞானம் பெற பழுதில்லாத தேகம் வேண்டும். நம் போல் தேகமெடுத்து வந்துள்ள மெய்க்குருபிரான் அரை நொடிக்குள் மலம் அகற்றும் தீட்சையை அளித்தாலும் அதை அறியும் தகுதி நமக்கு வேண்டும். குருபிரானின் தேனான பானமுதமாகிய வர்ஷிப்பை அருந்தி பரமபத வாழ்வை வேண்டி அடையவேண்டும்.

*ஜீவசகோதரி விஜயசித்ரா அவர்களின் புரிதல்:* ***ஜீவாத்மா-பரமாத்மா:***

ஒரு கோடி நூல்களுக்குப் பொருளாக, சர்வ நாமங்களின் இருப்பிடமாக விளங்கும் ஜீவனின் ரகசியத்தை ஆண்டவர்கள் ஆதிமான்மியத்தில் ஜீவாத்மா பரமாத்மா பற்றி 101ஆம் பக்கத்தில் அருளியுள்ளார்கள்.

**னடமாடு ஜீவாத்மா - யதார்த்த பரமாத்மாவெனக்கூறும் தாத்து - சிபத்து**:



திரு. சாலை ரவி அப்பா அவர்கள்
நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை

நடமாடும் உடலாகிய தத்துவக் கூட்டமே மூச்சு ஆடிக்கொண்டிருக்கும் ஜீவாத்மா. எதார்த்த தேவகுருவாக வரும் பரமாத்மாவிற்கு மூச்சு ஆடாது. சிபத்துகள் ஏழும் நபுசுகளால் நாசமாகாமல் தாத்தோடு சேர்ந்து விண்ணிடமாக ஆகுவதற்கு ஒழுக்கமும், கவனமும் குருவின் துணையும் கட்டாயம் வேண்டும். *மனிதனிடத்தில் தனிச் சீதனமாக அமைந்திருக்கும் ஜீவாத்மாவுடன் பரமாத்மாவும் இருக்கின்றது. பரமாத்மா தூலம் எடுத்துவந்து தூலத்திற்கு அப்பால் உள்ள ஜீவாத்மாவை அறிவிக்க அதை அறியமுடியும். ஜீவாத்மாவின் மூச்சு அடங்குவது பரமாத்மாவைச் சார்ந்த நிலையில் தான். வார்த்தையளவில் நிற்பது தூல தேகம். நினைவு என்னப் பெற்றது ஜீவதேகம். ஆத்மா என்னப் பெற்றது காரணதேகம். ஜீவாத்மா நீ; சீடன்-பெண். பரமாத்மா நாம்; குரு-ஆண்* என்பதை ஆண்டவர்களின் வேதவாக்கியங்கள் மூலம் அறிகிறோம்.

**உணர்வு - உணர்வுகார ரகிதம்:** உணர்வுகார ரகிதமானது இறைவனின் அருள் சக்தியாக எங்கும் வியாபித்துள்ளது. அறிவை அறியாத வரை உணர்ச்சி மயமாகவே இருக்கிறோம். மூன்றாவது கண்ணாகிய நெற்றிக் கண்ணால் உணர்வதே உணர்வுகார ரகிதம். ஆறாவது அறிவின் செயல்பாடு தெரியும் போது தான் உணர்ச்சி உணர்வாக மாறுகிறது.



Copyright © AMNA Trust, Chennai

**காய - காயத்திரி:** *காயமே இது பொய்யடா* என பெரியோர்கள் எடுத்துக் கூறினாலும் இந்த தேகம் நான் அல்ல என்ற உணர்வு மாறுவதில்லை. தன்னைத்தான் அறியும்போது தான் நம்மைக் காப்பது காயத்திரியே என அறிய முடியும்.

**சத்து - சத்தினி:** கதியாக போக்குவரத்தாக இருக்கும் பிராணனே சத்தாக இருப்பது. அறுவகைப் பாய்ச்சலாக உஜூது நடையாக இருக்கும் இந்த காற்றைப் பிடிக்கும் கணக்கைத் தெரிந்தவர்களே கதிகண்டார். இலாஹி-இலாஹு இவை ஒன்றுசேரும் நிலையே சத்தினி ஆகும்.

**ஆவி - சுத்தாவி:**

**சேகர கோடியு டாவியு லாவிய**
**வாகன வான்முக டேறினீ டோடிய**
**மாகதி யாயம னோகர லாயன**

சேவடியில் சேர்க்கும் வாகனமாக இருப்பது சுத்தாவி. மூக்கில் இருக்கும் வரை காற்றாக இருப்பது தலைக்குள் போகும்போது பிராணனால் சுத்தாவியாக மா-கதியாக மாற்றப் பெறுகிறது.

**அவ்வு - அகரம்:** பரமாத்மாவும் ஜீவாத்மாவும் சேர்ந்த நிலை அவ்வாக இருக்கிறது .

**ஔவெலா மோரறி வாகிய தெய்வ**
**ஃகெனும் பிரம்மத் தருளொளிப் பெருக்கால்**

அது மேல் நோக்காக மாறும்பொழுது அவ்வுக்கு அப்பால் அகரமாக மாறுகிறது. தன்னகரப் பொருள் கைக் கொண்டோரே தேவராவார்.

**வேகாக்கால் - சாகாத்தலை:** வேகாக்கால் அறிவின் ரகசியமாகவும், அதன் அசைவினால் பிராணன் இயங்குவதால் வேகாக்காலின் தலையே சாகாத்தலை என்பதாகவும் உள்ளது.

**குணம் - குணானயன்மி:** இன்ப துன்பங்களை சமமாக் கருதுபவன் குணங்கள் கடந்த குணாதீதன். குணமற்ற நிலையிலிருந்து வந்ததுவே குணானயன்மி. அப்படி ஆக்கி வைப்பவர்களே னிர்க்குணாலங்கிர்தர்.

**கலை - கலாமலி:** சொன் னயனக்கலை மூலம் கலை இன்னதென்று அறிந்து கம்பம் ஏற வேண்டும். குருபெருமானின் பிரணவக் கலையாகிய கிரணவீச்சு எனும் அருள் அமுதத்தை உண்டு கலையை கலாமலி ஆக்கிக் கொள்ளலாம்.

**சிற்சபை - பொற்சபை:** மனிதனை உயிர்ப்பிக்கும் சிற்றணு விளங்கும் சிற்சபை சிரத்தின் நடுவே விளங்குகிறது. தூலம், சூக்குமம், காரணம் என குருபிரான் ஒவ்வொரு தேகமாக ஏற்றிப் பழக்கி வைக்கும் பொழுதுதான் பொற்சபையாகிய பொன்அரங்கத்தில் விளங்கும் அரங்கநாதனைத் தரிசிக்க முடியும்.

**அறிவு - அறிவாகாரம்:** அறிவு கீழ் நோக்கமாகப் போவதே மனதின் செயல். ஜீவனாய், அறிவாய், தான் தானாய் இருக்கும் உண்மைப் பொருளை குருவின் இரக்கத்தால் அறியும் போதே மனுவானவன் ஜீவாத்மா ஆகின்றான். அறிவுக்கு ஆகாரமாய் விளங்கும் குருவின் நாதம் மூலமே மரணமிலாப் பெருவாழ்வை அடைந்து பேரறிவைக் கைக்கொள்ள முடியும்.

**கவனம் - கவனாதி:** அற்பப் பொருட்களில் கவனம் கொண்டுள்ள மனம் மெய்ஞ்ஞானத்தில் இச்சை இல்லாது உள்ளது. தெள்ளத் தெளிந்த தேசிகரின் வாக்குகளைக் கவனத்துடன் ஆய்ந்து பற்றிக் கொண்டால் கவனம் கவனாதி எனும் பரமாத்ம நிலையாக மாறும். ஐயறிவும் சேர்ந்து ஓர் அறிவாக இயங்கும் போதே நாம் கவனத்துடன் செயல்படுகிறோம்.



Copyright © AMNA Trust, Chennai

ஜீவாத்மா-பரமாத்மா, தாத்து-சிபத்து - இது கடந்து அனீதமாக உள்ள நவனீதங்களையும் னீதமாக ஆக்கிக் வைப்பதற்காக உருத்தாங்கி குருமுகூர்த்தமாக வருபவர்களே மெய்க்குருபிரான். அவர்கள் புறநோக்காக இருக்கும் நம்மை பிரம்மவித்தைச் செயல் கொண்டு அகத்தில் இருக்கும் பரமாத்ம நிலையை பேரிரக்கம் கொண்டு அறிய வைக்கிறார்கள்.

*ஜீவசகோதரர் கார்த்திகேயன் அவர்களின் புரிதல்:* பெரியோர்கள் உண்டாக்கிய புராதனக் கோயில்கள், மனிதன் அடைய வேண்டிய உன்னதத்தை உணர்த்தவே உள்ளன. கோயில் கருவறையில் உள்ள சிலையை இறைவன் என நினைத்து வணங்குகிறார்கள். **கருவான கருவை அறியாமல் காலமெல்லாம் வீண்காலமாகுதே அல்லாஹூ**. கருவைத் தெரியவில்லை என்றால் நீ இருந்த காலம் வீண்காலம்தான் என பீர் முகம்மது ஒலியுல்லா அருளுகிறார்கள். தனக்குள் அழிவற்ற காருண்யமாக நின்று தன்னைக் காக்கும் இறைபொருளைத் தெரிந்து கொள்ளவே கோயில்கள் உள்ளன. துய்யனாகிய இறை பொருள் நம்முள் இருக்கும் வரைதான் நமக்குத் தூய்மை. மரணத்திற்குக் காரணமாக இருக்கும் உயிர் நாடியை அறிவித்து மரணமிலாப் பெருவாழ்விற்கான அகவணக்கத்தைப் பழக்கி வைப்பவர்களே சற்குருபிரான். அவர்களே கதி கண்டவர்கள். அவர்களைக் காணாதவர்களுக்கே விதி வந்துவிடுகிறது. விதியை வெல்வதற்கு குருபிரானின் நாத வர்ஷிப்பபைக் கேட்க மதி அதிகம் வேண்டும். இதுவே மரணத்தை வெல்வதற்கான ஒரே வழி என்ற பகிர்வுகளுடன் அவை இனிதே நிறைவுற்றது.

## 26-05-2022 ~ வியாழக்கிழமை சபை
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

**வான்மதிக்கொரல் வாக்கியம் எண் 68:** இந்துமதம் என்பது மருவி வந்த ஒரு சொல்லாகும். ஆதி மதமாகிய சைவம் முதல் சர்வ மதங்களும் அறிவை வைத்து உண்டாக்கப் பெற்றவையே. அவ்வுண்மையை உணராத மக்களே தங்களின் அறியாமையால் மத துவேஷம் செய்கின்றனர். அவரவர் ஜீவனே மதமாக உள்ளது. மதத்தின் கூராகிய அறிவே அம்மதங்களின் மூல மந்திரங்களாக உள்ளது. எனவே தன் ஜீவனை அறிபவன் சர்வ மதங்களையும் அறிந்தவன் ஆகிறான். ஐம்புல நுகர்வில் மனிதனை இறைவன் சமமாகப் படைத்தது போன்றே மதங்களைப் படைத்தும், அறியாமையால் மக்கள் மத வேறுபாடு கொள்கின்றனர். சுவாமி சிவானந்த பரமஹம்சர், உலகில் இரண்டே மதங்கள் உள்ளன என்றும், அவை 1. அறிவை அறிந்த ஈஸ்வர மதம் 2. அறிவை அறியாத நீரீஸ்வர மதம் என குறிப்பிட்டுள்ளார்.

**ஆதிமான்மியம்:** னீதியானது ஆதியின் உருக்கொண்டு மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் என்ற திருநாமத்தில் விளங்கி நின்ற அரும்பெரும் செயலையும், சாலை என்ற மெய்மேனியாக, தன்பெரு வெளியே சாலை என்பதாக உள்ளதையும் குறியீடாக வைத்து கூறப்பெற்றதே ஆதிமான்மியத்தின் மூல பண்டாரப் பருவம். இதில் ஆண்டவர்கள் தங்கள் குருபிரானைச் சந்தித்ததும், அவர்கள் சுமந்து வந்த செயல்களை தன்னிடத்தில் இறக்கி வைத்ததையும் வர்ணிக்கிறார்கள்.

**கோலமாஞ் ஞீவ கோள கோலத்துள் ளிருந்த மெய்மை**. அறிவு பிறப்பில் நாம் அனைவரும் பிறக்க வேண்டியவர்களாக உள்ளோம். ஒரு ஆணிடத்திலுள்ள குழந்தையைப் பெண் பெற்றெடுப்பது போல், ஆசானிடத்திலுள்ள ஜீவ குழந்தையைப் பெற்றெடுக்க சீடன் எனும் பெண் தேவை. ஜீவகோளமாகிய கருவிலிருந்த மெய்மை, காலம், இடம், நேரம் கூடி வரும்போது தேவ குழந்தையானது அறிவுப்பிறப்பு எடுப்பது போன்றே, மெய்வழி ஆண்டவர்களின் அவதாரமும், அதன் பலனாக நாம் இன்று


Copyright © AMNA Trust, Chennai

இம்மெய்ஞானத்தைப் பெறுவதுமாக உள்ளது. கருக்குழியாகிய பிரேதக்குழியிலிருந்து மாற்றி **காணா கருவூல நாட்டிற்குள் வைத்து உன்னைப் பெற்றெடுத்தும், இறுதியில் கள்ளர் குகை ஆகிவிட்டது** என்பது ஆண்டவர்கள் தீர்க்கதரிசனம்.

**மெய்வழியின் வித்து:** அழியாத மெய்ப்பொருளும், வெகுமதி சுமையும் ஆகிய இறக்கிவைக்கொணா இவ்விரு பெரிய சுமைகளையும் தூக்கி சுமந்து கொண்டு ஒரு தனி முதல் மணி விம்ப உருவானது முன்வளைவு நடை, எண்குணத்து இருப்பு, பின் கவன வீச்சு, நிறையறிவு குடி பெரியாரவர்களாக, அவர்களின் எண்ணத்தில் நான் தூரமாக போவதற்குள் நீ என்னை கூப்பிடு என மதி வாடை வீசும் விழி ஜாடை மாமணத்தார் நினைத்துக்கொண்டே செல்கிறார்கள் என திட்டமான தோற்றம் பொட்டென ஆண்டவர்களின் நினைவில் ஊறி ஊர்ந்து ஓடிற்று. ஆதிமான்மியத்தில் உள்ள ஒவ்வொரு பருவத்திலும் தமிழுக்கு சிகரம் வைத்தது போல் தன் ஐயனை ஆண்டவர்கள் வர்ணித்து அருளியுள்ளார்கள். நினைவு, நான், எண்ணம், மனம், கவனம் எனும் ஐந்து பொருட்களை **னினைவிலூறிய னினைவிது ஏதென** எனும் பாடல் வாயிலாக அருள்கிறார்கள்.

னோக்கிய னோக்கால் விளையும் சிவகாமத்தின் நகலாகவே அவகாமமும் இன்றளவும் உள்ளது. தனிகை மணிப்பிரான் ஆண்டவர்களிடம் *நீ இருந்த ரோஸ் மீதாக்குடைய காலத்திலே அமானிதம் என இறைவனிடம் நீ வாங்கி வந்த சீதனம் அது உன்னுள் எங்கே* என்ற கேள்வியும் அதன் பதிலாக ஆண்டவர்கள் கூறிய பின் நடந்த நிகழ்வுகளுமே மெய்வழியின் வித்தாக உள்ளது. மெய்ஞான மகத்துக்களுக்கிடையில் புழங்கும் ஒரு சொல்லே அமானிதம். பல ஞானியரும் இதன் சிறப்பை தங்கள் பாடல்களில் பரிபாஷையாக அருளியுள்ளனர்.

**மெய்ப்பொருள் சுமை:** எதற்கும் முதற் பொருளான ஹயாத்து எனும் அகரப்பொருளை தனிகை மணிப்பிரான் மெய்வழி ஆண்டவர்களிடம் இறக்கி வைத்ததன் பின், மெய்ஞான மகத்துக்கள் சவாரி செல்லும் அதிமகோன்னத நிலைகளும் அதற்கான வாகனங்களும் நிஜமேதான் என மொழிந்தார்கள். புத்தெழில் பிறங்கும் பூந்துறை நாட்டின் அந்தப் புது பழமொழி செவியில் புகுந்ததும், அண்டசராசரங்களையும் விழுங்கி தன்னுள் அடக்கிக் கொண்டு எதிரே சிந்தனையற்று அமர்ந்திருக்கும் பெரியார் என்னும் பிரம்ம பீடத்தை நோக்கி உவகை பொங்க ஆத்திரம் மட்டற ததும்பி *அம்மையே அப்பா ஒப்பிலா மணியே* என்ற மணிவாசக பிரான் பாடலைப்பாடி, தனக்கு சன்மார்க்க வழியை கூட்டி நடப்பிக்க வேண்டுவது தாங்களே என்றதும், பல காலங்களாக சீடன் சேர்த்து வைத்திருந்த அறியாமையை அப்பெரியாரவர்கள் தங்களின் முன் வளைவு அரிவாளாகிய பட்டயம் கொண்டு வெட்டி வீழ்த்தினார்கள். ஆசானின் பேருதவியால் மேல்நிலைக்கு தூக்கிவிடப் பெற்றதை தவிர இன்னொருவரை ஏற்றிவிடுவதற்கான பொறுப்பை பெறாத ஞானிகள் இப்பாரதூர செயலை முண்டாதாரமாகப் பேசுவதும் உண்டு. எனினும் அதனைக் குறைகூற வேண்டியதில்லை என்பதும் அறியக்கிடக்கிறது. தங்கள் குருபிரானைச் சந்தித்த பின் பெற்ற ஜீவ ஏற்ற ரகசியங்களை, நவமணிப் பதியாக, முப்பொருள் கோல விளக்கமாக, அமானிதம் எனும் சீராக, அச்சீரானது சீர் இன்றி பஞ்சமா பாதக வளர்வித்தாக வளர்ந்துள்ளதை பலவித நீரினால் கழுவியதையும் ஆண்டவர்கள் விவரிக்கிறார்கள்.

**மறுபிறப்பு:** சாலை என்ற மெய்ம்மேனி ஜெகந்தனில் பிறங்க ஐவழி விளைவின் அப்பாலாகிய செய்வழிகாட்டி உய்வழி கூட்டும் மெய்வழி எனும் மேடு கண்டு தெய்வ ஆவிடை யோனியின் வழியே வந்தனரையா வானிளவரசு, தந்தன தனிகை தவத்திளவரசு, அந்தணர் தலைமை அவரிளவரசு, செந்திருநாட்டின் சிவக்கொழுந்தரசு பாண்டி தென்தேசத்து பழந்தவத்தரசு, பரிசுத்தம் மாறா வடிவு செயல் பேறு விளங்கித் துலங்க மறுபிறப்பு ஜெனனம் பெற்று *தாம் பிறந்தனர் தீர்ப்பு னெறிக்கென்றே.*

எல்லோரிடத்திலும் உள்ள தீர்ப்பு மைதானம் எனும் மறுபிறப்பு பூமியில் முதலில் நாம் சாகவேண்டும். *கர்த்தர் உன் நாமத்தைக் கொன்றுபோட்டு புதிய நாமத்தை*



Copyright © AMNA Trust, Chennai 

*தரிப்பிப்பார்* என்பதற்கிணங்க சாவருமுன் சாகப்பழகி அதிலிருந்து பிழைத்து வரும் நிலைகளையெல்லாம் மறுபிறப்பு பூமியில் வைத்து குருபிரான் நமக்கு அருள்கிறார்கள். ஆதிமார்க்க னீதி அவையானது அறிவில் தெளிவையும், உணர்வுபூர்வமாகவும், வேதசாட்சியின் படியும், அவரவர் நாமமாக நின்றிலங்கும் ஆன்மாவைப் பற்றி போதிக்கின்றது என்ற பகிர்வைத் தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகளை இனிதே நிறைவு செய்தார்கள்.

**28-05-2022 ~ சத்துவாச்சாரி சபை ~ சனிக்கிழமை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்**

**ஜீவசகோதரர் கௌதம் அவர்களின் புரிதல்** :

**அறிவு வடிவு:** நாம் ஐம்புலன்களின் வழியாக அறியும் அறிவு அனைத்தும் அறியாமையாக உள்ளது. இதனை ஆண்டவர்கள் **பாடும்செவி ரூபகந்த மும்பரிச மஞ்ஞினைக் கொண்டேயறிவ தெவ்வறிவதே** என முரீதுச் சுருக்கத்தில் அருளியுள்ளார்கள். அத்தகைய அறியாமை விலக அறிவுருவாக உள்ள ஆசானிடம் நாம் தஞ்சம் அடைந்து இரண்டற கலக்கும் பொழுது நாம் அறிவு வடிவாக மாற்றப்படுகிறோம்.

**இல்லறம்:**

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது. (திருக்குறள்)**

இல்வாழ்க்கை, அன்பும் அறனும் நிறைந்ததாக உள்ளது என்பதை ஆசான் அவர்களே நமக்கு அருளுகிறார்கள். அதன்பிறகு தான் **அது** எனும் அனாதி பொருளே பண்பும் பயனும் உடையது என்பது நமக்கு தெரியும். **அது** எனும் பொருளே நம்முள் எல்லை திசையற்ற இடமாக, ஏதுமிலதாய் யாதும் உளதாய், ஐக்கிய பதியாக, தலையாக, நிறங்களற்ற உருவமற்ற சுத்த உடம்பாக உள்ளதையும் அறிய முடியும். இதையே,

**இல்லறத்தைக் கேட்டயெழில் மகனே கேளாய்**
**இந்நவெளி இல்லமதில் இருந்து கொண்டு**
**எல்லைதிசை யற்றது ஓர்னிலமும் உன்னுள்**
**இருக்குதுபார்னியறஞ்ஞெய் வீடாம் ஜீவன்**
**னல்லவர்க ளுபதேசத் தலம தாகும்**
**னமோ வென்ற மோனசபா னிலையதாகும்**
**செல்லாத பொய்யுடம்பினுள்ளே தோன்றித்**
**துலங்குமொரு சுத்தவுடம் பதனைக் கேளாய்**

என அமுத கலைக்ஞான போதம் (இரண்டாம் காண்டம்) பாடலில் சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**கிரகஸ்தன் :** காலம் அற்ற காலாதீதன் உள்ள இடமே இல்லறமாக உள்ளது. அந்த இடத்தில் கிரகங்கள் அற்றுப் போகும். அதில் குடியேறி வாழ்பவர்களே கிரகஸ்தன்.

**துறவறம் :** நாம் பிறந்ததிலிருந்து ஒவ்வொன்றின் மேல் வைக்கும் பற்றுகளும், நாம் உறங்கும் பொழுது இல்லாமல் போவதுடன் நம்மால் வேறெதுவும் அறிய முடியாமல் போகிறது.
ஆனால் தூங்காமல் தூங்கி சுகம் பெறும் வித்தையின் மூலம் நம்முள் பற்றற்ற நிலையை அறிந்து அடையும் வழியை ஆசான் அவர்களே அறிவிக்கிறார்கள். பற்றற்ற நிலையைப் பற்றுவதே துறவறம். இதை திருவள்ளுவபிரான் அவர்களும்



Copyright © AMNA Trust, Chennai 

**பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு** என அருளியுள்ளார்கள்.

**பிரம்மச்சரியம் :** மனைவி மக்கள் இல்லாமல் வாழ்வது பிரம்மச்சரியம் அல்ல. நம்முள் இருக்கும் சூக்கும தேகத்தை கடந்து காரண தேகத்தை அடைந்து, பிரம்மத்தை சார்ந்து வாழ்வதே பிரம்மச்சரியம் ஆகும்.

**எழுதாமறை:** வேதங்களில் கூறப்படும் பொருள் அவரவரிடத்தில் எவ்வாறு உள்ளது என்பதை எழுதா மறையாக வரும் ஆசான் அவர்கள், நம்மிடத்தில் உள்ள எழுதாத எழுத்து, பேசாத மந்திரத்தை தொட்டுக் காட்டி அதில் பழக்கி வைக்கும் பொழுதுதான் மறைகடந்து எழுதாமறையாக நாம் எவ்வாறு உள்ளோம் என அறிய முடியும்.

**சுகம்:** ***இந்நப் பொன்னரங்நம் னமது மனைவி; இறுதிச் சுகம் தருகிறவள் இவள்தான்*** என கோடாயிதக்கூர் வாக்கியம் எண் 267ல் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். நமக்கு நிம்மதி தருவதையே சுகம் என்கிறோம். பொன்னரங்கம் என்பது நமது சொந்த தேகமாக உள்ளது. அதுதான் நமக்குள் இருந்து நம்மை காத்து வருகிறது. அதனுடன் நாம் இரண்டறக் கலந்து அத்வைதமாகும் நிலையே நித்திய சுகமாகும் எனும் உரையாடலுடன் சபை நிறைவுற்றது.

குரு வாழ்க! குருவே துணை !!




Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2022 ஜூன் மாத அவை நிகழ்வுகள்


Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் வர்ஷிப்பு



திரு. சாலை ரவி அப்பா அவர்கள்
நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை

ஆதி மார்க்க னீதி அவையின் அங்ஙங்ஙளே, எதார்த்த நன்மன சற்சன மக்களே, எமவாதையை விலக்கிக் காக்கும் பரிசுத்த ஆவித்தெய்வம் பிரம்மப்பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி வணங்கி 02.06.2022 முதல் 30.06.2022 வரை நடைபெற்ற பன்னிரண்டு அவைகளின் நிகழ்வுகளை விஜயகுமார், ஜீவிதாவடிவேலன், தியாகராஜன், குமரேசன், கல்பனாவிஜயகுமார், ஹேமலதா தியாகராஜன், பானுமதி குமரேசன் ஆகிய என் ஞான செல்வங்களாகிய ஏழு பேர் இரத்தின சுருக்கமாக தொகுத்து அளித்த ஆதி மார்க்க னீதி அவையின் பன்னிரண்டாவது மின்னணு சஞ்சிகை நமது கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கிறது. இதில் சொல்லப்பெற்றிருக்கும் உயர்ஞான தேவ ரகசியங்கள் அகில உலக ஞானத் தேட்டம் உள்ள மக்கள் அனைவருக்கும் நாத மருந்தாக உள்ளது. இதனை ருசித்து புசிப்பதற்கான பேரறிவுதனை நேர்முகமாகப் பெற வாருங்ஙோ, வாங்ஙோ என அழைப்பதே ஆதி மார்க்க னீதி அவையின் உன்னத நோக்கமாகும். பொன்னாட்டு மனு மகன் புரந்தரர் ஏட்டிலே பெயர் பொறித்திருக்கும் பேர்கள் அனைவரும் பெறுதற்கரிய பேரறிவைப்பெற்று வாழ்வாங்கு வாழ்வு வாழ, எல்லாம் வல்ல பரிசுத்த ஆவி தெய்வமாக விளங்கும் சுத்த அறிவை வேண்டி வணங்கி வாழ்த்துகிறேன்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

*உன் கண்ணுக்கு எட்டியதை எவ்வாறு தகப்பன் உனக்கு உரிமையாக்குகிறானோ அவ்வாறே, உன் கண் கொண்டு பார்க்க முடியாத, ஆனால் உன் இதயக் கண்கொண்டு பார்க்கக்கூடிய அழியாத செல்வத்தை உனக்குப் பங்கிட்டுக் கொடுத்து உரிமை யாக்குகிறவர்களே* ***குரு (கு = இருள், ரு = பிரகாசம்).*** *இருள் உலக்கத்திலிருந்து பிரகாச உலகத்திற்கு ஏற்றி வைப்பவர்கள் குரு என்று அந்நச் சொல்லுக்குப் பொருள்.*

***மறைமொழி மாந்நர் பெருமை னிலத்து***
***னிறைமொழி காட்டி விடும்***.

*என்று சொல்லும்போது, மெய்ஞானச் செம்மல்களையே மறைமொழி மாந்நர் என்று வேதம் சொல்லுகிறது. மற்றவர்கள் உலக மாந்நர். இவர்களுக்கு அந்நப் பெயர் கிடையாது. மறை மொழி மாந்நரைப் பார்க்கிறதுதான் தரிசனை. அவர்களை அல்லாது வேறு எதைப் பார்த்தாலும் அது தரிசனை ஆகாது. பார்ப்பது தரிசனை என்றால் திருடனைத் தரிசித்தேன், னோயாளியைத் தரிசித்தேன் என்னலாமே.*

~ **சாலை ஆண்டவர்கள்**



Copyright © AMNA Trust, Chennai

**02-06-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

*போதையயா லிங்குள்ள தெல்லாம றந்துவுன்*
*பின்னாலே யேதொடர்ந்நேன்*
*பொற்கிண்ணத் தின்பாற்கஞ் ஞாவுங்ங லந்நந்நப்*
*போதையென் றேதெரிந்நேன்*

உலக மயக்கமான போதை ஆசானின் அருளமுதத்தின் மூலமாகத்தான் தெளியும். *வைகுண்டம் காண வந்த தருமி எல்லோரும் மெய்குண்டம் கண்டோமென்றிருப்பார் அவ்வனத்தே.* பெரியோர்கள் தங்கள் திருக்கரத்தில் தாங்கி வரும் மெய்ம்மை திருச்செயலை வைத்தே தீர்க்கதரிசனங்கள் அருளப்பட்டுள்ளன. **தேவரகசியம் தேடு உன்னுடம்புள்**. உயிருக்கான தேவையைக் குறித்தே தீர்க்கதரிசனங்கள் வெளியாக்கப் பெற்றுள்ளன. குழப்பமுற்றிருக்கின்ற உலகத்தை தெளிவிக்கப் போகிறார் என ஸ்ரீபுத்த பகவான் அவர்கள் தீர்க்கதரிசனம் கூறியது தன்னுலகைக் குறிப்பதே ஆகும். செயல்தான் மெய்ச்செயலின் அடையாளம்.

***பகவனும் வரக்கூடாதோ பார் குரு வந்திட்டாரே.*** பார் குரு என்பவர் அறிவுக் கண்ணைத் திறக்க கூடியவர். அரை நொடிக்குள் மலம் அகற்றும் தீட்சையானது குருபிரானால் அருளப் பெற்றாலும், அதனை விளங்கிக் கொள்ளும் காலம் சீடனின் பக்குவத்தைப் பொறுத்தே உள்ளது. ஆதி மார்க்க னீதி அவை அறிவுக்கான சபையாகவும், சாகாக்கல்வி-மரணமிலாப் பெருவாழ்வு - இவற்றை செயலாகவும் கொண்டது. மனம் அலையாமல் இருப்பதுவே நிம்மதி. நிறைவான ஒன்று தன் தலையினுள் இருப்பதை அறியாமல், நிம்மதியை மனிதன் புறத்தில் தேடுகிறான். மெய்யறிவும், தேடும் பொருளும் அவரவர் தலையில் உள்ளதை அறியவே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர் சேர்க்கை நடைபெறுகிறது.

***மந்திரம், இறைவன், அருள், ஜோதி, புகையாதகனல், சுடாத தீ, நுதற்கண்*** - இந்த சொற்களுக்கு உரிய பொருள் ஒரு மெய் ஆசானின் இரக்கத்தால்தான் அறிய முடியும். மனிதனின் சுத்தத்துறை இருதயத்திலன்றி விண்டெங்கும் வெளியாகாத இறைவனை, அங்கனம் வெளியாகாமல் பிடித்து வைப்பதுவே *அடக்கம்*. உணர்வுகளால் கட்டப்பெற்றதுவே *மெய்ஞானம்*. தாயும் பிள்ளையும் போன்று, ஆசான் சீடன் உறவாக, பழகி வரும் செயலாக மெய்ஞானம் உள்ளது.

**ஆதிமான்மியம் - முகப்புப்பா :** குணம் கொண்டவர்கள் பெயர் குணபாலன். ஓங்கார நிலையை பெற்றவர்களால் தான் ஒருவனை நிர்குணமாக்க முடியும். நிர்குணன் என்ற நிலையில் தான் சொற்குணா உற்பரன் சொன்ன வேதத்தின் ரகசியம் அறிய முடியும். ரஜோ, தாமஸ, சாத்வீக எனும் முக்குணங்கள் ஆணவம், கன்மம், மாயையாக மாறிக்கிடக்கின்றது. *உபனிடத வைப்பெனும் மூன்றாவது கண் ரகசியம்* மூலபண்டாரப் பருவத்தில் சொல்லப் பெற்றுள்ளது. மனிதனின் அடாத பவத்திமிரேற்ற செயல் ஒன்றே தாங்கொணா பளுவாக பூமிக்கு இருப்பதேயன்றி மற்ற ஜடப்பொருளோ உயிரினமோ அல்ல. ஏனெனில், படைத்தான் படைப்பனைத்தும் மனுவுக்காக மனுவைப் படைத்தது தன்னை வணங்க என்பதை அறியாத காரணத்தால்தான். இறைவனை அறிவது மனுவுக்கு மட்டுமே கடமையாக வைக்கப்பட்டுள்ளது.

னீதியான பிரளயச் செம்மல்கள் நரனை சங்காரம் செய்து, மனுவாக மாற்றி தேவன் என்ற நிலைக்கு ஆக்கி வைக்கிறார்கள். பிரளயத்தை நடத்த வந்த செம்மல்கள் யாவரும் மனிதனின் அறியாமையை அகற்றும் செயலைச் செய்தார்கள். நின்றதொரு பிரளயத்தின் அதிசயத்தை, மூன்றாவது கண்ணாகிய அறிவுக் கண்கொண்டு காண முடியுமே அன்றி ஊனக்கண்



Copyright © AMNA Trust, Chennai

கொண்டு காண முடியாது. அறியாமையினால் தன்னுலகம் அழிவிலிருப்பதை உணர்த்தி, அறிவு நிலைக்கு ஆக்குவதே னீதிப் பிரளயமாகும். ஆதிமூல விதியானது நம்முள் நடன தோற்றத்தில் உள்ளது. பெரியோர்கள் தன்னுள் நடக்கும் பிரளய அதிசயத்தை தன் ஆசான் மூலம் காணுகிறார்கள். நாளுக்குள் கோளும், கோளுக்குள் விதியும் உள்ளதைத் தெரிந்து விதியை மாற்றும் பிரம்மவித்தை செயலையும் கைக் கொள்கிறார்கள். *தேவாதி தேவனாகிய குருபிரானின் ஆசனம் அவ்வகர ஆசனம்.* ஆதி மார்க்க னீதி அவை தன் மக்களாகிய அங்கங்களை அறிவுத் தெளிவுடன் ஜீவ சிம்மாசனத்தில் ஏற்றி வைத்திருப்பது சத்தியம் என அருளி தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

**04-06-2022 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**
**எமபடரடிபடு கோடாயிதக்கூர்- திருவாக்கியம் எண் : 93** ரத, கஜ, துரக, பதாதி என்ற நால்வகை சேனா சைன்யங்கள் கொண்ட வல்லரசர்களாலும் தடுக்க முடியாத காலத்தை தடுத்தாட்கொண்டு, மீட்டுத் தருபவர்களே மெய்ஞானிகள் என்பதை ஆண்டவர்கள் காமீல்கள் னோக்கத்தில், *சென்றநாட் சென்றிட்டாலும் செல்லும்நாட் சென்றிடாது* என அருளியுள்ளார்கள். காலத்தின் சூட்சுமமாகிய னாள், கோள்களின் இரகசியத்தை அறிந்து பஞ்ஞாட்சரமாக விளங்கும் பிரணவ சொரூப கொழுந்தை மதிக்கரத்தில் கைப்பந்தாக பெற்று வாழ்வதே நிஜமான மெய்ஞான வாழ்க்கையாகும்.

**ஆதி மான்மியம் - மூல பண்டாரப் பருவம் :**

**கண்டுடலம் பொடிந்து பொடிந்துமே**
**காட்சி பொங்கும் கள்ளிமுது காட்டிலே**
**அண்டர் கோன்னிலை அவ்வக ராசன**
**ஆதி மூலக்கருவுருக் கோலத்தை**

இப்பாடலில் மூன்றாவது கண்ணின் இரகசியத்தை அமுது காடனாகிய குருபிரான் அறிவித்து, ஔவகராசனமாகிய ஜீவசிம்மாசனத்தில் நம்மை ஏற்றிவைத்து, அழிகரு வருவழியில் வந்ததை தெறிக்கச் செய்து மாறா தெரிசனையில் ஆக்கும் தேவ செயலை உணர்த்தியுள்ளார்கள்.

**தீர்க்க தரிசனம் :** அழியாத் தேகத்தை பற்றிய அகமிய செயலை கூறுவதே தீர்க்க தரிசனம். இதயாசனத்தில் வீற்றிருக்கும் இறைபொருளை தன்னுள் உணர்ந்து அறிவு வடிவானவர்களுக்கே தீர்க்க தரிசனம் உயிர் பெறும்.

**முப்பொருள் கோல மெய்ம்மை விளக்கம் :** பதிணென் சித்தர்கள், அறுபத்துமூன்று னாயன்மார்கள், பனிரெண்டு ஆழ்வார்கள், இருபத்தேழு தீர்த்தகர்கள், லட்சத்து இருபத்து னான்காயிரம் னபிமார்கள் எழுதிய கிரந்தங்களில் முப்பொருளின் இரகசியமானது பொதித்து வைக்கப்பட்டிருந்தாலும், தனித்தலைமை பெரும்பதியாகிய பரம்பொருள் பிரம்ம பிரகாச மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் பெருங்கருணையால், முப்பொருளின் முழு ஆதார உயிர்ப்பு நிலைகளும் இன்னது இன்னதென ஆதிமான்மியத்தில் விவரித்துள்ளார்கள். உடல் - உயிர் - ஆன்மா என்ற மூன்று அட்சரங்களாவும், சிவமயப் பொருளாகிய ஒரே அட்சரமாகவும், ஐந்து பாதங்களை உள்ளடக்கிய ஓம் எனும் பல அட்சரங்களாகவும் னின்று விளங்கும் எழுதா எழுத்தை - எழுத்து ரூபமாக ஆண்டவர்கள் விளக்கியுள்ள இம்மெய்ச்செயலை
தன்னுள் அறிந்தவர்களே தன்னையறிந்த மகத்துக்கள்.



Copyright © AMNA Trust, Chennai

**சந்தியா வந்தனம் :** சந்தியாத வந்தனமாக போய் விடாமல் சந்தேகமற மெய்யாகவே சந்தித்து வந்தன வணக்கம் செய்பவர்களுக்கே கல்பெனும் இருதயபிரகாசம் உண்டாகும். அந்தி சந்தி என்பது சூரியன், சந்திரனைக் குறிப்பதாகும். சந்திரனும் சூரியனும் இல்லாத இடத்தில் னின்று சந்தித்து வணங்கும் மெய் வணக்கமே சந்தியா வந்தனம் என கூறப்பெறுகிறது. உடல் கண்டு உயிர்வழிப் பற்றியோடி ஆத்ம வீடடையும் இரகசியத்தை அறிந்தவர்களே அனந்தர்கள் என்ற அருளுரைகளுடன் ஆசான் அவையை னிறைவு செய்தார்கள்.

**05-06-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்**

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

*திருவாரூர்* - பிறக்க முக்தி, *திருவண்ணாமலை* - நினைக்க முக்தி, *சிதம்பரம்* - பார்க்க முக்தி, *காசி* - இறக்க முக்தி. காசி என்பது புனலாகிய கங்கையெனும் ஆசானின் னாதம். அதில் மூழ்கியெழ நம் பாவங்கள் நீங்கும்.

ஜீவசகோதரி கல்பனா அவர்களின் புரிதல் : **அழியாப்பதி குடியேறிய னாயக மென்குருவின்...** எனும் தோத்திரப் பாடலைத் தொடர்ந்து, அழியாப்பதி குடியேறிய குருவின் திருமொழியே நம்மையும் அழியாப்பதியில் குடியேற்றுகிறது. ஆசானிடம் நாம் வைக்கும் வஞ்சுகமற்ற எதார்த்த அன்பு ஒன்றே பிறவா நிலை பெறும் வழி. எமன் அணுகா பரிசுத்த செயலே சர்வ மத வேதங்களின் அடிப்படை னோக்கம். ஆதி மார்க்க னீதி அவையின் னோக்கமும் இதுவே.

**மரணம்:** நியாய, அநியாய மரணம் என இரு வகையாக பெரியோர்கள் வகைப் படுத்தியுள்ளனர். பிறவாமையே ஞானத்தின் அடி னாதமாக விளங்கும் சன்மார்க்கமெனும் மரணமிலாப் பெருவாழ்வு. மறலி கை தீண்டா மெய்ம்மதத்தை உண்டாக்கிய சாலை ஆண்டவர்களின் வேதாந்த வேத னூல்கள் - **ஆதி மெய் உதய பூரண வேதாந்தம், ஆதி மான்மியம், எமபடரடிபடு கோடாயிதக் கூர், எமன்படரடிபடு திரு மெய்ஞ்ஞானக் கொரல்**.

**காலம்:** நமது வயது வாழ்நாளாக இருக்கும் காலம், புலன்களின் தலைவனாகிய மனம் அடங்காத போது எமனாகவும், அடங்கி அறிவாகும் போது சிவனாகவும் விளங்குகிறது.

**பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு**
**மேய்ப்பாரு மின்றி வெறித்துத் திரிவன**
**மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்**
**பார்ப்பான் பசுஐந்தும் பாலாய்ப் பொழியுமே** - திருமந்திரம்.

நல்ல மேய்ப்பராக வரும் குருபிரானே நம் மனதின் வெறியினை அடக்கி அறிவாக மாற்றுகிறார்கள். எமவாதையில் இருந்து நம்மைக் காப்பது ஆசானின் திருவடி நிழல். எமனின் ஆயுதமாகிய பாசக்கயிறு காலத்தின் ரகசியமாக இருக்கிறது. இதனை சூத்திரப் பாவையின் அதிசூட்சுமக் கயிறாக பெரியோர்கள் கூறுகிறார்கள்.

**அடக்கம்:** மின்னல் கிரணமாகிய ஜீவதேகத்தைக் காட்டித் தருகிறவர்கள் காட்டித் தந்து, பெறுகிற வண்ணம் பெற்று அழிந்திடா சூக்குமத்துள் அடங்கிப் பார்ப்பதே அடக்கமெனும் சன்மார்க்கம்.

**பூமியடங்குலுக்கும் ஓதும்பு**
**ராதனங் நூறுவது**
**ஆ - மனு ஈசன்வந்து தேவர்க்க**
**ருளமு தம்தந்நது.**



Copyright © AMNA Trust, Chennai 

புராதனமாகிய பண்டைநாள் அமுதை உண்டால்தான் பூமியாகிய தேகத்தில் அடங்காமல் இருக்கும் மனம் அடங்கும். முக்தி அடைவது நினைவென்னும் ஆகாயமேயன்றி தேகம் அல்ல. நினைவெனும் ஆகாயத்தில் அசைவது மனம், அசையாதது அறிவு. நாம் தூங்கும்போது அனுபவிக்கும் அசையாநிலை அனுபவத்தை தூங்காமல் தூங்கி சுகம் பெறும் அனுபவமே பிரம்ம வித்தை. இதனை திருமூலர் பிரான், *தூங்கிக் கண்டார் சிவலோகமும், சிவயோகமும், சிவபோகமும் தம்உள்ளே* என அருளியுள்ளார். அங்ஙமதிடத்தில் ஐம்புலக் கதவை அடைப்பதே பேரறிவாகிய உபதேசம் என்பது ஆண்டவர்கள் திருவாக்கு. மனதை அறிவாக மாற்றும் பிரம்மவித்தையின் மூலம் வயது வாழ்நாளை மீட்பதும், சாகாக்கல்வி, மெய்க்கல்வி, இவற்றை பழகுவதற்கும் ஆசானின் அன்பு ஒன்றே மூலதனம். ஆசானின் மெய்ம்மணமாகிய னாதமே நம்மை அடக்கத்துள் ஆக்கும்.

மனம் அடங்கும் உபாயம் தௌஹுது மக்காமில் னபுசெனும் ஏழு அவித்யாபாத நிலைகளிலுள்ள மனதை, சிபத்தெனும் ஏழு வித்யாபாத நிலையாகிய அறிவாக மாற்ற, தீக்கீர் எனும் வணக்க முறையில் உபாயத்தை ஏழு மக்காம்களாக ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

| வித்யாபாதம் | அவித்யாபாதம் |
|---|---|
| அடக்கம் | அடங்காமை |
| புண்ணியர்க்கு வாய்ப்பது | பாவியர்க்கு வாய்ப்பது |
| சாவருமுன் சாக பழகுவது | நம்பிய தன்னுயிர் தற்கொலை செய்வது |
| புலன்வழி பற்றி ஓடாதிருப்பது | புலன்வழி பற்றி ஓடுவது |
| ஆசானின் மெய்ம்மண னாதத்துக்குள் புகுவது | கலி புருஷனின் பிடியில் சிக்கிக்கொள்வது |
| செவிச் செல்வமாகிய னாத மருந்தை உண்பது | மது செவிதனில் விஷத்தை உண்பது |
| ஆசானே அருட்கதியென மாள்தல் | மீளா நரகில் அதோகதியாவது |
| தூங்காமல் தூங்கி சுகம் பெறுவது | உறங்குவது போல் சாக்காடு |
| மனமற்ற பரிசுத்தம் | அலைபாயும் மனம் |
| ஆவிக்குரிய சிந்தனை | மாமிச இச்சையாகிய மரணம் |
| னீதி வழியாகிய அறிவின் வழி நடப்பது | தன்னறிவில் சாய்வது |
| மந்திரத்தில் குடியேறுவது | பாய்மன வீட்டில் குடியேறுவது |
| பிறவாமை பெறுவது | பிறப்பென்னும் பேதமையில் சிக்குவது |

ஜீவசகோதரர் விஜயகுமார் அவர்களின் புரிதல் : **நம்பிய தன்னுயிர் தற்கொலை செய்வான்** என்ற பாடலுக்கான புரிதல் - **உணர்வு:** சகல உயிர்களும் விரும்புவது துக்க னிவர்த்தி சுகப்ராப்தி. மாறாத ஒன்று உணர்வாகவும், மாறிக் கொண்டே இருப்பது உணர்ச்சியாகவும் இருக்கிறது. ஐம்புலன்களின் செயல்களை உணர்வின் மூலமாகவே நாம் அறிகிறோம்.

**சுவைஒளி ஊறுஓசை நாற்றமென் றைந்தின்**
**வகைதெரிவான் கட்டே உலகு** (குறள் எண் – 27 )

இவை ஐந்தையும் உணரும் உணர்வே உலகாக இருப்பது. உடல், உயிரை அறிவது வெளிச்சப் பொருளாகிய உணர்வின் மூலமே. மனம், அறிவாக மாறி மெய்யுணர்வைப் பெற ஒரு மெய்யான சற்குருவின் துணை வேண்டும். ஓம் என்ற உணர்வெனும் இறை பொருளாகிய பிரணவக் கயிற்றால் இந்த தேகம் கட்டப்பட்டுள்ளது. ஆசானின் னாதம் மூலம் பெறும்

*எக்காரணத்தினால் தேகி சர்வபாவங்ஙளி னின்றும் விசுத்தவடிவனாய்ப் பிரம்மமாவானோ, அதனை னினக் கருளாற் கூறுகின்றேன்.*

*~ குரு கீதை*



Copyright © AMNA Trust, Chennai

செவியுணர்வே இறைவனை அறிவதற்கான வழி என்பதை அறிந்தவர்கள் மக்கள், அறியாதவர்கள் மாக்கள் என பெரியோர்கள் அருளுகிறார்கள். ஆதி மார்க்க னீதி அவையில் நடைபெறும் நிகழ்வுகளின் தொகுப்பு உலக மக்களின் நன்மை கருதி மின்னனு சஞ்ஞிகையாக மாதந்தோறும் மலர்கிறது. குரு மொழியான இருளறு இயல் மொழியுடன் **வாக்மி மார்க்கனன்னாதர்** மெய்வழி சாலை ஆண்டவர்களின் திருவடி பெருமைகளையும், மெய்யான திருச்செயலையும், வருகின்ற ஈரேழு தலைமுறைகளுக்கும் சேர்க்கும் பாரதூர நோக்கமே ஆதி மார்க்க னீதி அவையின் செயல் வடிவமாகிய இச்சஞ்ஞிகை.

**குருபிரான் அருளமுத வர்ஷிப்பு:** வஞ்ஞப் புலன்களின் மூலமாக வயது வாழ்நாள் வீணாகுவதே பிரளயம். இதனை நின்றதொரு பிரளயமாக்கும் செயலே தலை காக்கும் அறமாகிய தர்மம். மெய்யான உணர்வை மனுத் தலைக்கேற்றும் செயலே இந்த அவையின் நோக்கம் என்கிற அமுத வர்ஷிப்புடன் அவை இனிதே நிறைவுற்றது.

**05-06-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிறப்பு சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

**கழல் :** மனிதனை அறியாமை என்னும் இருளிலிருந்து கழற்றும் ஆசானின் மந்திர னடன ஓசையே கழல். அவ் ஓசை கொண்ட னடனமே னம் செவிகளில் னுழைந்து மந்திரமாகிய பொருளை தொட்டுக் காட்டி ஜபம் எனும் யோகத்தை செய்விக்கிறது.

**ரோஸ்மீதாக்குடைய காலம் :** மனிதன் அமானிதமாகிய தனிச்சீதனம் பெற்று வந்த இடம். உறக்கத்தில் மனமற்று, னினைவற்று, ஜீவன் மட்டுமே சாட்சியாக னின்று சுகமளிக்கும் எல்லையைக் குறிப்பதே ரோஸ்மீதாக்குடைய காலமாகும்.

**ஓசை - ஒலி :** இரண்டும் ஒரே பொருளைக் குறிப்பதாகும். ஓசை ஒலியெலாம் ஆனவராகிய குருபிரானின் சத்தம் (ஓசை) நம்முள் னுழைந்து னாதமாக (ஒலி) மாறும்போது ஞானக்கரு உண்டாகிறது. அதன் பிறகே மனு - ஈசன் என்ற பதத்திற்கு உரியவனாகிறான். இச்செயலை ஆண்டவர்கள் **ஓசை கொண்ட னடனத்தாலே மனு ஈசனாகும் இயல்பெடுத் தோதுவாம்** என்ற பாடல் மூலம் அருளிச் செய்துள்ளார்கள்.

**மங்களம் - மனைமாட்சி :** மங்கள னாயகராகிய குருபிரான் இல்லற தர்மத்தை போதித்து இறைவனிருக்கும் இடத்தில் குடியேற்றி வைக்கும் செயல். ஆசான் சொல்லுக்கிணங்கி பிரம்மவித்தை செயல் பழகியவர்களுக்கு இல்லறம் னல்லறமாகும் என்பதை உணர்த்தும் அமுதகலைக் ஞான போதம் இரண்டாம் காண்டம் பாடல்,

**னந்தி முதல் யுகங்நோடி வாழ்ந்நோ ரெல்லாம்**
**னல்லறமென் றில்லமிதே னயந்து காணே.**

**முத்தி - விடுதலை :**
**முத்தியெனு னடன மூல மணிப்பதத்தைச்**
**சித்தமறிந்த செயல் ஜெயமவர்க்குப் பூங்கிளியே**

மூலமணிப்பதி என்பது சுத்த பிரம்ம பிரகாசம் பொருந்திய மணியாகிய சுப்பிரமணியைக் குறிப்பதாகும். சுப்பிரமணியின் இரகசியத்தையும், ராக ரகமான சப்தங்களுக்கு மூலமாகிய உன்மணியின் இரகசியத்தையும்



Copyright © AMNA Trust, Chennai 

கைக்கொண்டுவரும் சிவகுருபிரானே னம்மை ஜென்மப் பிணியிலிருந்து விடுவித்து பிறவாமை என்னும் முத்தியை அளப்பவர்கள்.

**தூலமுத்தி :** இம்மனித தூலத்தோடு இருக்கும்போதே பிறவிச் சூழலிலிருந்து விடுபட்டு பிறவாமைக்குரிய இரகசியத்தை அறிந்து அடையும் அகமியச் செயலாகும்.

**ஜீவமுத்தி :** முத்திக்கு மூலமாகிய ஆசானின் னாதத்திற்குள் ஆகி, ஜீவன் வேறு சிவன் வேறல்ல என்பதை உணர்ந்து அறிவு வடிவாகும் செயல்.

முத்தியைப் பற்றி ஜீவசகோதரர் கௌதம் அவர்களின் புரிதல் : முத்தி என்பது ஜென்மசாபல்யம். முத்திக்கு மூலம் னீதியெனும் பொருள். னீதிச் செங்னோல் கைப்பற்றி வரும் பெரியோர்களின் னாதம் மூலம் ஜீவன் கண்ட சென்மசாபல்ய குலமாவதே முத்தி அடைதலாகும். நாம் உபயோகிக்கும் எல்லா பொருள்களுக்கும் அட்டவணை (Catalouge) இருக்கும். அதில் பொருளின் பயன்பாட்டு முறைகளும் குறிப்பிடப்பட்டிருக்கும். அதுபோல எல்லா பொருள்களையும் உண்டாக்கிய மனிதனுக்கு அட்டவணை (Catalouge) உண்டா என்றால் னிச்சயம் உண்டு. *அதுவே வேதம்.* மனிதன் முத்தி அடைவதற்கான வழி வகைகள் வேதத்தில் அருளப்பட்டிருந்தாலும் வந்த வேதமாகிய ஆசான் இரக்கம் கொண்டு அறிவித்த பிறகே முத்தியின் இரகசியத்தை அறிந்து அடைய முடியும் என்ற புரிதலுடனும், ஆசானின் ஆசீர்பாத ஒலிவாயுரைகளுடனும் அவையானது இனிதே னிறைவுபெற்றது.

**09-06-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்**

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

**வான்மதிக் கொரல் திருவாக்கியம் எண் : 70** ஆசான் விருப்பம் சொர்க்கம், ஆசான் வெறுப்பு னரகம் என வேதம் கூறுகிறது. சொர்க்க வாழ்வு வாழ்வதற்காக தரப்பெற்ற ஆறாவது அறிவை கொண்டு நிஜமான இறைவனை தேடாமல் நகல் வழிபாட்டிலேயே வாழ்வதால் மனிதன் னரகம் என்னும் தண்டனைக்கு ஆளாகிறான். ஆனால், சற்குரு பெருமான் மூலம் ஆறாவது அறிவின் செயலை அறிந்து அசலான தெய்வ வழிபாட்டினை பின்பற்றி தன்னை அறிந்தவன் சொர்க்கத்திற்கு உரியவனாகிறான்.



*திரு. சாலை ரவி அப்பா அவர்கள்*
*நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை*

**தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை**
**தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்**
**தன்னை அறியும் அறிவை அறிந்தபின்**
**தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே**

என்ற திருமந்திரப் பாடலுக்கிணங்க, தன்னை வணங்கும் தவமுறையில் யோக ஞானத்தை பழகி சூக்கும, காரண, மகாகாரண தேகங்களைப் பெற்று ஆரூராகிய சொர்க்கத்தை அனுபவித்து வாழ்வதற்கான வழிவகைகளை அருளுவதே வேதம்.


Copyright © AMNA Trust, Chennai

**முப்பொருள்க்கோல மெய்ம்மை விளக்கம்:** அலீபு-லாம்-மீமாகவும், அடி-முடி-னடுவாகவும், அகர-உகர-சிகரமாகவும், அகது-உகது-வாகிதுவாகவும், ஆலம்-ரூகு-ரூகானியாகவும், உடல்-உயிர்-ஆத்மா, உயிர் ஊமை எழுத்தாகிய முப்பொருட் கோலமாக னிற்கும் இவ்வுள்ளமை உஜூதினை அறிந்து கொள்ளாமல் வேத பதிக்குள் நுழைய முடியாது. உடல் உயிர் ஆத்மாவின் இரகசியமானது சிவானந்த போதத்தில்

**உடலென்றாற் சடாதார உடலே யாகும்**
**உயிரான பிராணனே ஆவியாகும்**
**திடமாக விரண்டையுந்நா னெனதென் றுற்ற**
**ஜீவனே சிற்றம்பலப் பொருளதாகும்** என அருளப் பெற்றுள்ளது.

ஆண்டவர்கள் முப்பொருளின் இரகசியத்தை ஆதியோதயப் பருவத்தில், ஆண்ட குருவென்னும் அயப்பட்டா, ஆரக்கால், வட்டை என்றும் ஞானனூற் பொருளறிதல் பாடலில், **அருணிலைகால் தலையும்பரி பாஷை கல்லார் ஆயுளெலாம் படித்தும்பொரு ளறியப் போகார்** என்றும், வேதமுடி என்ற தலைப்பில், அலீபு-லாம்-மீம் தாலிக்கல் கித்தாபு என பல நிலைகளாக அருளியுள்ளார்கள்.

**வினாயகர் :** வினைகளை அகற்றுவதும், வினா விடையின் மூலம் அறியாமையை அகற்றுவதுமே வினாயகர் (வி-னா-அகம்) என்ற தெய்வனாமத்தின் சிறப்பாகும்.

**கலியன் :** வினைகளை விதைக்கும் மனமே கலியன். அழி அவாவினன், திமிரறா இருளன், பவமூகை ஆண்மையன், பரீட்சித்து அரசனின் காலம் முதல் வீறு கொண்டு நின்ற கலியனை விண்ணாட்டுச் செயல் வாழ்வேற்றங் கொண்டு அழியாத தவப்பேற்றுக் கூரோங்கிய **னாவாஸ்திரக் கோடாயிதம்** பெற்று வரும் பெரியோர்கள் காலந்தோறும் மக்களின் உள்ளத்தில் வெங்கலியை மாற்றி புதுயுகம் பிறப்பிக்கச் செய்து நன்னெறியில் ஏற்றி தர்மத்தை நிலை நாட்டுகிறார்கள் என அருளிச் செய்து ஆசான் அவையை நிறைவு செய்தார்கள்.

## 11-06-2022 ~ சனிக்கிழமை சபை
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

**கோடாயிதக் கூர் திருவாக்கியம் எண் : 94 - சிவமயப் பொருள் :** கோடான கோடி நாமங்கள் இருந்தாலும் தனக்கென்று எந்த நாமமும் இலதாய் விளங்கும் பிள்ளையார் சுழியை ஏட்டின் தலையில் போட்டுவிட்டு நேர் கீழே சிவமயம் என எழுதுவார்கள். பேசாத எழுத்து, ஊமை எழுத்தாகிய பிள்ளையார் சுழியே னம் நெஞ்சகமாகிய னடு வீட்டில் வைத்திருக்கும் புதையல், புராதனச் சொத்து. இதை அறியாதவர்கள் கல்லாதவர்கள் என வேதம் கூறுகிறது. பிள்ளையார் சுழியாகிய ஏகாட்சரத்தையே குர்ஆன் சரீபில் வேதத்தின் தலைமீது அட்சரம் 1-2-3 அலீபு- லாம்-மீம் என சூட்டப் பெற்றுள்ளது. இதை அறிந்தாலன்றி வேதப்பகுதிக்குள் நுழைய முடியாது.

**பொருணி றைத்தவர் பெட்டகப் பூட்டுக்கென்**
**குறள்கைச் சாவிகொ டுக்கவு டைக்குமால்**

என்ற ஞானக்கொரல் படி, ஆசானின் னாதமாகிய சாவி கொண்டு அறிவு மாணிக்க பெட்டகமானது திறக்கப்பட்டு அழியாச் செல்வமானது ஆதி மார்க்க னீதி அவையிலுள்ள மக்களுக்கு வாரி வழங்கப் பெறுகிறது.



Copyright © AMNA Trust, Chennai

**ஆதிமான்மியம் :** ஆதியாகமத்தில், தேவன் மனு முதலான அனைத்து படைப்புகளையும் ஆறு நாட்களில் உண்டாக்கி ஏழாம் நாள் மண்ணாலான ஒரு உருவத்தை தன் சாயலில் படைத்து ஜீவசுவாசத்தை ஊதி, ஜீவாத்மாவாக மாற்றினார் என்ற திருவசனத்தில், ஏழாம் நாள் என்பது எழுவகைத் தோற்றத்தையும், தூங்காமல் தூங்கி சுகம் பெறக்கூடிய ஓய்வு நாளையும் குறிப்பதாகும்.

**சமிக்ஞை :** தன் சாயலாக மனிதனை உண்டாக்கி சமிக்ஞை முதலான சகல பாஷைகளையும் படைத்தான் என்ற தெய்வவாக்கின் படி, சமிக்ஞை என்பது கூறாத அட்சரமாகும். சமிக்ஞை பாஷையிலிருந்து தான் சகலபாஷைகளும் வந்தன. வேத முதல்வனாகிய பிரம்மமே சர்வ விஞ்ஞை வரங்களைக் கைக்கொண்டு மௌன குருவாக வந்து சமிக்ஞை பாஷை மூலம் உடல் கடந்து அப்பால் உள்ள சூக்கும, காரண, மகாகாரண தேவரகசியங்களை சொற்குணா உற்பனராக எடுத்து அருளுகின்றார்கள்.

**மூலபண்டாரப் பருவம்:**

**கோலமாஞ் ஞீவ கோள**
**கோலத்துள் ளிருந்ந மெய்ம்மைக்**
**காலமும் இடமும் னேரம்**
**கணிதமுங் நூடிச் சேர்ந்நு**
**சாலையென் றொருமெய் மேனி**
**ஜகந்நனில் பிறங்ங எல்லாம்**
**ஏலவல் லவரும் வந்நு**
**இணைந்நனர் அக்கா லத்தே**

மூல பண்டாரப் பருவத்தில் முக்கியமான மூன்று பகுதிகள் :

1. பாட்டையர் சந்திப்பு - பாட்டையர் மூலம் ஆண்டவர்கள் மூலபண்டாரம் பெற்றது.
2. அலீப் லாம் மீம் என்னும் முப்பொருள்க்கோல மெய்ம்மை விளக்கம்.
3. கலியனுடைய அழிவு.

காலமும் இடமும் நேரமும் கணிதமும் கூடிச் சேர்ந்து சாலை என்ற ஒரு மெய்மேனி ஜெகந்நனில் பிறப்பது தான் கலியனுடைய இறப்பாகக் கொண்டாடப்படுகிறது. தௌஹீது மக்காமில் ஆண்டவர்கள் அருளியபடி, ஹம்மாறா, லவ்வாமா, முல்கிமா, முத்மயின்ன, றாலியா, மறலியா, காமீலா எனும் ஏழு நபுசுகளை வெட்டிப் புதைக்கப்படும் செயலே கலியனை பலியிடும் ரகசியமாகும்.

**அகிலவலம் வரும் பருவம் :** தன்னை ஆட்கொண்ட குருபிரானே அகிலம் என்பதையும், அவர்கள் தனக்களித்த பேரின்ப நிலைகளையும் ஆண்டவர்கள் பலவாறாக இப்பருவத்தில் வர்ணனை செய்துள்ளார்கள். அசைவற்ற பிரம்ம பீடமாகவும், முச்சகத்தையும் தனக்குள் வைத்திருக்கும் கலைமந்நிர கிரியாகவும் வரும் ஆசானே அருட்கதியென பின் தொடர்ந்தார்கள்.

**பாட்டையர் திருவசனம் :** இவ் விரிபுவனமாகிய மண்பரப்பினிடத்தே ஓரறிவு முதலாகிய சர்வ சராசரப் பொருள்கள் அனைத்தையும் ஆய்ந்து ஆளும் அறிவினைப் பெற்று மனிதகோல மெடுத்து வளர்ந்து வருவது எதற்காக? என்ற கேள்வியைக் கேட்டு அதற்குப் பதிலாக ஆறாவது அறிவின் சிறப்பை, பேரின்பத் திருவசனமாக அருளியுள்ளார்கள். மேலும் பிரானவர்களின் உத்தரவின்படி இட்ட பணியெல்லாம் தன் தலைக்கேற்றும் கிரீடமென, மெய்வழி சட்ட தொழுவகத்தே வையம் முழுதும் மாட்டி வைக்க வேண்டி ஆறறிவு ஆட்டினை மேய்க்க வந்த ஆதி மூல வளனாட்டு மேய்ப்பர் ஐயறிவு ஆட்டினை


Copyright © AMNA Trust, Chennai

மேய்க்க கோல் பிடித்து எழுந்தார்கள். ஓராண்டு காலம் ஆடு மேய்ப்பு பணியாற்றியதும் திருப்பரங்கிரி வந்தார்கள்.

**சன்னதம் பெறு பருவம்:** திருப்பரங்கிரியில் குருபிரானின் உத்தரவின் படி, பெரியோர்கள் தவத்திற்காகத் தேர்ந்தெடுத்த சிக்கந்தர் மலையில் உள்ள குகையில் தவத்தில் அமர்ந்தார்கள். அந்தகாரக் கலியனைப் பலியிட இதுவரை யாரும் பெறாத அரிய கிள்னாம சன்னதமும் பெற்று மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் வந்தார்கள்.

**பட்டயம் :** மறலி கை தீண்டா சாலை ஆண்டவர்கள் மெய்மதம் என்பது தான் பட்டயம். இவ்வார்த்தையே வாளாயுதமாக சர்வ சன்னதங்ஙளுக்கும் அடினாதமாக உள்ளது.

**மந்நிரங்ஙள் :** இந்திரகிரண ஒளியில் இளனீல மோடும் அந்நர்மாமுக எந்திரபானு மந்திரங்கள் தொடங்கி சகல மந்திரங்களிலும் திருமதி னகார, வகார, சிகார எனும் மண், காற்று, நெருப்பு பற்றிய ரகசியங்களானது அவரவருள் அகமிய மெய்ச்செயலாக விளங்கிக் கொண்டிருக்கிறது. ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர்கள் பரிசுத்த ஆவி தெய்வத்தின் பரிபூரண ஆசியுடன் இம்மெய்ச்செயலை அறிந்து வருகிறார்கள் என்ற ஆசீர்பாத ஒலிவாயுரையுடன் ஆசான் அவையை னிறைவு செய்தார்கள்.

**12-06-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்**

*ஜீவசகோதரர் கௌதம் அவர்களின் புரிதல்:*
**பிறவிப்பிணி :**

**சிரம்பெருந் நுறைவளரும் - வேகாச்**
**சீர்பாத கமலமென் சிரசில்வைத்தே** **(பூரணப் புதையல்)**

ஓர் மெய் குருபிரான் அவர்கள் தன் நாதத்தின் மூலம், நம்மிடமுள்ள இருமை முத்தாபத்தை எல்லாம் போக்கி, பிறவிப்பிணி என்னும் நோயில் இருந்து விடுவித்து, சுடர் தேகத்தை கைக் கொண்டவர்களாக நம்மை ஆக்குகிறார்கள்.
**உயிர் :** மனிதனை எது உயிர்பிக்கின்றதோ அதுவே உயிர். அதுதான் அறிவாக, பஞ்ஞாட்சரமாக, காவற்பாடாக இருந்து நம்மை காத்து வருகிறது. இதனை ஆண்டவர்கள்

**னம்பிய தன்னுயிர் தற்கொலை செய்வான்**
**னமசிவ இருப்பறியான்**
**தம்பிரான் றவசிதி காம்பர னென்பான்**
**சைவனெ னச்சொல்வான்**
**கெம்பீர மாகவே யறுசுவை கெர்வக்**
**கேடர்கள் னேசம்விட்டே**
**தம்பிரா னேயா னும்மிடம் காவற்**
**பாடது தேடுகின்றேன்**

என ஞான முறையீடு பாடலில் அருளியுள்ளார்கள்.

**அருள் :** அருள் என்பது யுகாந்த நாட்டு செல்வம். அதுதான் ஆசானின் நாதமாக உள்ளது. அத்தகைய அருளின் மூலமே அவரவர்களின் தன்னுலகம் விடிந்து, அந்த பேரின்பம் னிறைந்த பெட்டகமான, புகழான வாழ்க்கையை அடையமுடியும். இதனை ஆண்டவர்களும்


Copyright © AMNA Trust, Chennai

**அரியருள் வருகும் அருமறை விதியோன்**
**யாதாபூ செனும்கலா மயிலே**
**பெரியபே ரின்பம் பொதிந்நபெட் டகமே**
**புகழவுன் பெருமையைப் பெரியோர்**
**சிறியனான் புகழல் செல்லுமோ சொல்லாய்**
**திருவாய்கொண் மறுமொழி புகல**
**அருகனா னுனது தவிசின்முன் னணுக**
**அயின்முகம் மதுமதிக் கடலே**

என குருமணிமாலையில் அருளியுள்ளார்கள்.

**சௌகரியம் சகதி கடல்:** ஐம்புலன், பொறிகளின் வழியாக தனது சௌகரியத்தை தேடும் மனம் சகதி கடலாக உள்ளது. அது நம் காலத்தை வீணாக்குகிறது. அத்தகைய மனதை மேலவரின் அருளமுத வழியில் செலுத்தி கவனமாக வைராக்கியத்துடன் இருந்தால் அதே மனம் அறிவாக மாறி அந்த வான னாட்டை அடையச் செய்யும். இதனை ஆண்டவர்கள்

**வீணது வாகி டாமல்**
**மேலவ ரிடத்திற் சார்ந்நா**
**லூண்சுவை யிருத யத்துள்**
**ளுறைந்நனன் னிலமும் காட்டிப்**
**போனனாள் மீண்டங் ஙேறும்**
**பேரின்ப வடிவம் பெற்று**
**ஊனங்ங ளனைத்தும் தேய்ந்நு**
**உன்புகழ் வானம் பாயும்**

என ஞான முறையீடு பாடலில் அருளியுள்ளார்கள்.

**சுழிமுனை :** சுழியாகிய முனையில்தான் அனைத்து வேத ரகசியங்களும் வைத்து பூட்டப்பட்டுள்ளது. அத்தகைய சுழிமுனையின் நிலை அறிந்தால் மோட்சம்.

**வெட்டவெளி :** இருளை வெட்டினால் வெளி. அதுவே அவரவருள் தன் பெருவெளியாக, எட்டாம்னாள் ரா ஞான ஸ்தானமாக, லைலத்துள் கதிராக, சிவராத்திரியாக உள்ளது. அத்தகைய வெட்டவெளியை தூங்காமல் தூங்கி சுகம் கண்டு அடையலாம்.

**பிரம்மச்சாரி :** பிரம்மத்தை அறிந்தவர்களே பிரம்மச்சாரி. இதனை ஆண்டவர்கள், இத் தூலத்தை விட்டு பிரம்மரந்நிர னிலைக்கு மேற்சொன்ன வாசியாகிய குதிரையில் ஏறிச் சவாரியராகிப் போய்க்கொண்டிருக்கும் போது அவரை *பிரம்மச்சாரி* என வேதம் கூறுகிறது. என கோடாயிதக்கூரில் அருளியுள்ளார்கள்.

**உஜூது :** மனம் தன்னுடைய உற்பன தாயான அந்த ஆகாய கங்கையை சென்று அடையும் வழியே உஜூது.

**மூலாதாரம்:** பஞ்ச பூதங்களையும் தன்னகத்துள் வைத்து ஏதும் இலதாய், யாதும் உளதாய் உள்ள அந்த ஓர் பொருளே மூலாதாரமாக உள்ளது. அதுதான் அவரவர்களின் நாமமாக உள்ளது. அத்தகைய மூலாதாரத்தை வந்தவந்த பெரியோர்களே நமக்கு அறிய வைக்கிறார்கள்.

**பிரம்மம்:** மனதின் வழியாக செலுத்தி நபுசாகவே வைத்துள்ள நம் நினைவை ஆசான் அவர்களே தங்களின் நாதத்தின் மூலம் சுத்தநினைவாக, சிபத்தாக, பிரம்மமாக மாற்றுகிறார்கள் என்ற புரிதல்களுடன் அவை நிகழ்வுகள் நிறைவேறியது.



Copyright © AMNA Trust, Chennai

**16-06-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

**விண்டுவிண்டு அந்நரத்தோ டுருவிப் பாயும்**
**விளங்கும்கா ரணதேகம் காவி யேறும்**
**கண்டகூக் குமம்தாண்டித் தூலந் நன்னில்**
**காஷாய மணிவதற்கிங் ஙருக னாகும்**

பௌர்ணமி நாளில் மெய்வணக்கம் செய்பவர்களுக்கு ஒவ்வொரு பௌர்ணமியிலும் காவி ஏறும் ரகசியம் மாறிக் கொண்டே வருவது தெரியும். ஆதி மார்க்க னீதி அவையின் மக்கள் காவியேறும் பூம்பட்டணம் என்பதை உணர்ந்த உணர்வுடைய மக்களாக ஆகியும், ஆகிக்கொண்டும், ஆகிக்கொள்ளவும் இருக்கிறார்கள்.


*திரு. சாலை ரவி அப்பா அவர்கள்*
*நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை*

**வான்மதிக்கொரல் வாக்கியம் எண் 71:** *வீணதுவாகிடாமல் மேல வரிடத்திற் சார்ந்தால்...* எனும் பாடலில், உறைந்த நன்னிலம் என்பது அசைவற்றது. ஊண்-சுவை-இருதயம் என்பது அசையும் தன்மை கொண்டது. வேதம் என்பது படிப்பதில்லை, பழகுவது. பிராணனுக்குள் இருக்கும் வயது வாழ்நாளை பிடித்து வைத்திருப்பது பிரணவம். இது ஆதி மார்க்க னீதி அவையின் மக்களுக்கு செயலாக உள்ளது. ஜீவன் இன்னதென்று ஆதிமான்மியம் 101 ஆம் பக்கத்தில் அருளுகிறார்கள். மனம் அறிவாக மாறுவது ஆறாவது அறிவு. இதற்கு முதலில் மெய் ஆசான் மூலம் மனம் இருக்கும் இடம் தொட்டுக்காட்டப் பெற வேண்டும். பரமாத்மாவைப் பற்றி 13 நிலைகளில் மான்மியம் 6ஆம் பக்கத்தில் அருளுகிறார்கள். அவரவர் தாயாதி சொத்தாக இருக்கும் தன் பெருவெளியாகிய சாலையை மெய்க்குருவின் அறிவு கொண்டே அறியமுடியும்.

**ஜாதி மனுக்குலம்:** கண், காது, மூக்கு, வாய், பல் என்பவை சகல மனிதருக்கும் ஒரே மாதிரியாக இருந்தாலும் அறிவும், மனமும் வேறு வேறாக உள்ளது. எதைப் பற்றியும் நினைக்காமல் போகிறவன் நரன். தன்னைத்தான் தேடுகிறவன் மனிதன். தன் அகரப்பொருள் கைக் கொண்டவன் தேவன். ஜீவன் இருக்கும் நாடு பிரணவ நாடாகும். போக்குவரத்தாக உள்ள ஜீவனின் வாகனம் தொனி.

**ஆதிமான்மியம் - முகப்புப்பா :** *சொற்குணன்* - குணம் கெட்டவனை, குணங்களுக்கு உரிய வித்தகராக ஆக்குபவர் சொற்குணன். சொற்குணா உற்பரனின் நிலையைத்தான் ஆதி மான்மியம் முழுவதிலும் வெளியாக்கி உள்ளார்கள். சொற்குணா உற்பரனின் சூட்சுமத்தை அறியாதவர்களுக்கு வேதம் புரியாது.

**ஆதிமான்மியம் பக்கம் 217 இல் உள்ள மந்திரங்கள் பற்றி ஜீவசகோதரர் விஜயகுமார் அவர்களின் புரிதல்:** பிறந்ததினி இறவாது பேசும் பஞ்சாட்சரமாக உள்ள ஆசானின் நாவில் இருந்து வரும் அனைத்துமே மந்திரங்களாகும். குரு கீதையில், *குரு ஆதியும் அனாதியும் ஆவார், குரு மேலான தெய்வமாவார். குரு*



Copyright © AMNA Trust, Chennai 

*மந்திரத்திற்குச் சமானமான தில்லை. குருவெனும் இரண்டு எழுத்து உள்ள மந்திரம் ஒன்றே சர்வத்திற்கும் மேலானதாம்.*

**அமுதகலைக்ஞான போதம் இரண்டாம் காண்டம்:** *மாசிலான் மறைப்படியும் எண்ணில் கோடி மந்திரங்ங ளனைத்து மொரு மொழிக்குள் வைத்து தேசிகனென் துக்கஉடல் நீக்கி* என்றும், *ஐந்தெழுத்து மந்திரம் உன் இல்லமாமே* என்றும், அறிவுஅறி பாடத்தில் *தேவராய்ப் பிறக்க தேரைந்து மந்திரம்* என்றும் அருளுகிறார்கள். அவ்வு, ஃ எனும் பிரம்மத்தின் ரகசியம் பற்றிய மந்திரங்கள், சூரியகலை 12, சந்திரகலை 16, ஜீவன், வேகாக்கால், சாகாத்தலை, வெண்னீரான ஆலவாயன் திருநீறு, பஞ்சாட்சரம், கவனக்குளிகை, அலிபு, லாம், மீம் எனும் வேதமுடி ரகசியம் பற்றியே மேற்சொன்ன மந்திரங்கள் அமைகின்றன.

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:** இந்திர ஜாலத்தினால் வந்த உரு, சியாமள ரூபம், சூரியகலை, நாவேணிப்பிழம்பு, இரவு பகலற்ற நிலை, மனுத்தத்துவம், ஆறு ஆதார ரகசியம், அகரம் எனும் எட்டு நிலைகளைப் பற்றிய ரகசியமும் ஆகும். மேலும் வளர் குழந்தை குமார பருவத்தில் வரும் **புகர் சமய ஜகத சத்துவ...** என்பதில் குழந்தை வடிவெடுத்து உள்ளது, இன்னும் விசிறிப் படராத நிலையையும், பக்கம் 152ல் அகிலவலம் வரும் பருவத்தில் , **புகர் சமய ஜகத சத்துவ...** என்பதில், அக்குழந்தை எவ்வுலகங்களுக்கும் எட்டி ஏறி சுக நீதி நியமம் பிறங்க அறிவு பரிசுத்த ஆவியானது வலுக்கொண்டு விசும்பி எழுந்து தளிர்த்து ஓங்கிப் பெருக்கமாக பணர் வீசி செழித்து வளர்ந்து விரிந்து மூல புருஷனாயகமாக ஏறிநின்று எங்களிடம் நெடுங்காலமாக தொடர்ந்து வந்துள்ள ஜாதி, மத, சமய வேற்றுமைகளை அகற்றி, எதார்த்த சுத்த சமரச மேம்பாட்டு வாழ்விலே இப்போது இங்கே ஆக்கி, ஆகியும், ஆக்கிக்கொண்டு இருப்பதையும் அருளுகிறார்கள். மெய்வழியின் பாசுபத கங்கண வரம் வாங்க வருகின்றவர்களாகிய எங்கள் சங்காத ஆர்வ மங்காத கூர்மை மெய்வழிக்குல னாயகம் அவர்களைக் குறித்து வரும் தீர்க்கதரிசனங்களாவன - *தாகமாக இருக்கிறவனுக்கு ஜீவத்தண்ணீர் ஊற்றில் இலவசமாக கொடுப்பேன்* என்றும், *தாகமாக இருக்கிறவன் வரக்கடவன், விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாக வாங்கிக் கொள்ளக் கடவன்* என்றும் *கோலமாம் பானையிலே சாலை ஜீவத்தண்ணீர் வேண்டி உலையிட்ட* என்பதில் தண்ணீர் மளமளவென்று கொதிக்கும் செயல் அகமியத்தில் நடக்கும் பிரளயமன்றி, புறத்தில் அல்ல.

ஆதியின் ரகசியத்தை வெளியாக்குவது ஆதி மான்மியம். பிரளைய நீதியின் சிறப்பு அகத்துறைந்துள்ள அஞ்ஞான இருளை அகற்றுவதாகும். அதற்கான இடமாக தென்னாட்டில் உள்ள சிறிய திட்டை ஆசான் மூலமாக அறிந்து கொள்ளலாம். ஆசியாக்கண்டம் என்பது உள்ளமாகிய மகாமகசூக்கானது. மேலும் தேவன் தன் சாயலாகவே ஒருவனைப் படைத்து தன் ஜீவசுவாசத்தை ஊதி அவனை ஜீவாத்மா ஆக்கினார் என்பது - ஏழு எக்காளமும், 7 ஆவியின் ரகசியமுமாகும். மகதியின் ஆட்சி நம்பினோர்க்கு நாலாம் பதம் கொடுக்கும் செயலாக இன்றளவிலும் அப்பெரிய திருவுள்ளம் நிறைவேற்றிக் கொண்டிருப்பதின் மூலம் அறியலாம். என்றும் பொய்யகத்து உறைந்துள்ள மனதை மெல்ல மெல்ல மெய்யறிவு உதயம் காட்டி அகவிளைவு குடியேற்றும் செயலை உள்ளடக்கிக் கொண்டு பேசப்பெற்றதுதான் அருள் வித்து. சன்னதம் பெறும் பருவத்தில் தன் அய்யனைப் பிரிந்த துயரத்தை ஆண்டவர்கள் வர்ணிக்கும் விதம் எவர் நினைவிற்கும் எட்டாத ஒன்றாகும் என அருளி தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

> *குருவின் பாதோதகத்கதைப் பருகி, மிஞ்ஞியதைச் சிரசிற்றெளித்துக் கொண்டு, அதனால் னரன்சகல தீர்த்தங்ஙளிலும் மூழ்கியதன் பயனை யடைகின்றான்.*
>
> *~ குரு கீதை*



Copyright © AMNA Trust, Chennai

**18-06-2022 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**பரமனே உருவெடுத்து பாரிடைக் குருவாய் வந்த ...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை இனிதே துவங்கியது.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் : 95** குருபிரானின் உளவின் படி பொருத்தி னின்று தூலம் உள்ள போதே சாகாக் கல்வியை பழகித் தேர்வதன் மூலம் அடையும் பேரின்ப னிலையே அடக்கம். செத்த பின் அடைவதல்ல என்பதை உணர்த்தும் மெய்வழியே இன்று ஆதி மார்க்க னீதி அவை எனும் னாமத்திலேறி ஜெயம் கொண்டு விளங்குகிறது.

**ஆதி மான்மியம் - சன்னதம் பெறு பருவம் :**

**னினைகுவன் னினைவி லோடி**
**னினைவு கோட்டினில் னின் றாய்வன் ...** குருபிரானிடத்தில் தம்மை தாண்மைபடுத்தும் குணத்துடன் நடக்கும் சீடனின் உள்ளத்தில் மேட்டிமை எனும் கொடிய தரித்திரம் தொடாது. மேலும் ஆசானின் அனுக்கிரகத்திற்கு உரியவனாகிறான்.

**னிக்கிரகம் - அனுக்கிரகம் :** குருபிரான் கோளரி வாளாக னின்று நம்மை கிரகத்தின் பிடியிலிருந்து மீட்கும் செயலே னிக்கிரகம். னிக்கிரகித்த பின்னும் தொடர்ந்து னின்ற எம்மானாக காத்து கோளரிவாளுடன் முன்னடவாய் எனும் திருச்செயலை நிகழ்த்துவதே அனுக்கிரகம்.

**னாவலன் தீவில் னாட்டமுற் றாய்ந்து - கண்ணகன் பூமியில் பன்னாள் அலைந்து ...** இந்திய தாய் னாடாகிய பரதகண்டத்தின் மறுபெயரே னாவலன் தீவு என்பதாகும். மெய்ஞ்ஞான பாரம்பரியத்தின் வித்தில்லா வித்து முதலில் முளை கண்ட இடம் னாவலன் தீவு என்பதை அகமியச் செயலாக உணரவேண்டும்.

**பண்பாடு :** நாம் வாழும் இடத்தையும், உண்ணும் உணவையும், உடுத்தும் உடையையும் சார்ந்ததல்ல பண்பாடு. பண் என்றால் பெரியோர்கள் அருளிய பாடல்கள். அப்பாடலுக்குள் பொதிந்துள்ள மெய்ஞ்ஞான னிலைகளை உணர்ந்தவர்களே பண்பாடுடையவர்கள் என வேதம் கூறுகிறது.

**னாராயணன் :** அருள் விளக்காக வரும் ஆசானின் திருனாவிலிருந்து பிறங்கும் சொல் நம் உள்ளத்துள் நுழைந்து அறியாமை எனும் இருளை அகற்றி, அறிவுப் பிராகாசத்தை உண்டாக்கும் செயலாகும். மனிதன் உள்ள காலம் வரை இம் மெய்ச்செயலின் பயணம் தொடரும் என்பதையே னாராயணன் எனும் திருனாமம் உணர்த்துகிறது.

**ஜீவசிம்மாசனப் பருவம் :**

**சேரும் பொன்பதிச் சீருடை யாதிலே**
**ஆறும் ஐந்து மூன் றொன்றான யாதினர்**
**னேரம் யாவுமே யா தேறி னிற்றலான்**
**கூறும் வாக்கெல்லாம் யாதின்குன் றேற்றத்தாய்.**

ஜென்மப்பிணி கிரகக் கோளினால் அமைகிறது. ஆசான் அனுக்கிரகத்தால் கோளானது சங்கரிக்கப்பட்டு பிறவானெறி என்னும் மரணமிலாப் பெருவாழ்வு பெறுவதே திருவடிப்பேறு. வினை முதல்வனாகிய இறைவன் தன் கையேட்டின் படி வினைக்கேற்ப தேகம் தந்து நம்மை இப்பூவுலகிற்கு அனுப்புகிறான். அதே இறைவன் தூலம் தாங்கி குருபிரானாக வந்து பிரம்மவித்தையை பழக்கித்தந்து வினையற்ற



Copyright © AMNA Trust, Chennai 

மெய்ச்செயலையும் அருளுகிறார்கள். எவரொருவர் அம் மெய்ச்செயலை அறிந்து அடைகிறார்களோ அவர்களுக்கு பேரின்ப தேகம் தந்து தன் சொந்த கைப்பொருளாக திருவடி கீழ் அமரச் செய்கிறார்கள்.

*ஜீவ சிம்மாசனமேறிய சிவராஜ சன்னதா லங்ஙிர்தராகி* னின்று விளங்நுகின்ற பரிசுத்த ஆவி தெய்வம் இன்று ஆதி மார்க்க னீதி அவையிலுள்ள மக்களுக்கு ஆசான் அருளால் திருவடி பேற்றை வழங்கிக் கொண்டிருக்கிறது என்ற ஆசீர்பாத ஒலிவாயுரையுடன் அவையானது இனிதே னிறைவு பெற்றது.

**19-06-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. பானுமதி குமரேசன்**

*ஜீவசகோதரி திருமதி. செல்வி அவர்களின் புரிதல் :*
**சத்தியம் திரண்ட சாயுச்சிய கடலே…** என்ற குருமணிமாலை பாடலைத் தொடர்ந்து, **எமன் படர் அடிபடு திருமெய்ஞ்ஞானக் கொரல், திரு வாக்கியம் எண் 19 :**
*தேவ குலத்திலிருந்து னம்முடைய இந்நச் சத்திய தேவ பிரம்ம குலம் பிறந்நது…* மேற்படி வாக்கியத்தின் இரத்தினச் சுருக்கம்: அறிவில் பூப்பு ஏற்படும்போது ஒரு வேலைக்காரனின் அறிவில் புது மாற்றம் கண்டு எஜமானன் திகைப்பதையும், குருவானவர்கள் ஏற்றிய அறிவு ஜோதி கொண்டே அவனுக்கு அசல், நகல், நன்மை, தீமை, மெய், பொய் இவற்றை தீர்மானிக்க முடிகிறது என அருளுகிறார்கள். குருவானவர் அறிவைப் புகட்டியதால் நம் அங்ஙக்குலங்கள் யாவும் அறிவு வடிவாகி தங்க உடலாக மாறுகிறது.

ஜீவசகோதரர் திரு. தாமோதரன் அவர்களின் புரிதல் :

***கூவுதையா சேவல் கூவுதையா …*** என்ற காகபுசுண்டர் பிரானின் தீர்க்க தரிசனப்பாடல், புற உலக விடியலை சேவலானது கூவி உணர்த்துவது போல் குருபிரான் மனிதனின் அக இருளாகிய அறியாமை நீங்கி அறிவெனும் விடியலை உணர்த்திட தன் னாவாஸ்திர னாதம் கொண்டு அழைக்கிறார்கள்.

**பயணம் :** மனித வாழ்வே ஒரு பயணம் தான். அது இறப்பை நோக்கியே செல்கிறது. அதை மாற்றி முக்தி பயணமாவதற்கு யுகந்தோறும் பாரவான்கள் அவதரித்து நம்மை அழைத்துச் செல்கிறார்கள். இதை **சாவாது பிறவாது தனி முதலாய் இருந்ந னான் ஒவாது வந்து பிறந்திடுவேன் யுகந்தோறும் யுகந்தோறும்** என கீதையில் கூறப்பெற்றுள்ளது. ஒரு புள்ளியில் இருந்து புழுவாய் - நரனாய் வந்து ஓர் ஆசானின் கையகத்தாகி மனுவாகி தேவபதத்தை அடைவதுவே பயணம். ஆசானின் அன்பெனும் ஒரே விசேஷத்தால் இது நடைபெறுகிறது. ஏகனாயகனாகிய இறைவன் பஞ்சபூதங்களை ஏவிப் படைத்த இப்பிரபஞ்ஞமும் அதன் அளவிடற்கரிய ஆற்றலும் சுருட்டி, மடக்கி, திரட்டி மனுவினிடத்தில் வைத்து படைக்கப் பெற்றுள்ளது. அதைக் கொண்டு மூலப்பிரகிருதியாகிய இறைவனை அடைய பஞ்ஞேந்திரியங்களின் துணையுடன் ஒரு மெய்க்குரு பிரானைத் தேடி அடைய வேண்டியது மனுவின் கடமையாக உள்ளது.

**சிவலிங்க தத்துவம் :** தன்னுடைய ஜீவனாகிய சிவனை சந்திப்பதுவே மனுவின் தலையாய கடமையாகும். குருவருளால் பெற்ற ஆறாவது அறிவை கொண்டு மரண வாசலில் இருந்து ஜனன வாசலில் குடியேறி வாழ்வதே, ஐந்தாவது யோனியாக, ஆவிடையாக, சிவலிங்க தத்துவமாக கோவில்களில் அமைக்கப் பெற்றுள்ளது.

**அரிது அரிது மானிடராதல் அரிது…** மனிதன் மட்டுமே நால்வகை யோனியிலும், எழுவகை தோற்றத்திலும் பிறப்பெடுத்து வருகிறான்.


Copyright © AMNA Trust, Chennai

எண்பத்துனான்கு நூறாயிரம் ஜீவபேதங்களும் மனிதனுடைய இன்னொரு தோற்றமாகவே இருக்கிறது. ஓர் ஆசானாகிய னித்தியர் நம்மை மனுவாக மாற்றும் வரை நாம் னரனாகத்தான் இருக்கிறோம். இதைத்தான் தெய்வமவர்கள் முகப்புப்பாவில் **னீதியெனும் பொருளான மனுக்கு லத்தை னித்தியனும் னித்தியத்திற்கே படைத்தான்...** என அருளியுள்ளார்கள். மேலும் *தீதும் நன்றும் பிறர்தர வாரா* என்பதற்கேற்ப மூக்குக்கு வெளியே மூச்சு ஓடுவது தீமையாகவும் பாவமாகவும், மூச்சு ஓடாமல் இருப்பது நன்மையாகவும் புண்ணியமாகவும் உள்ளது. நாம் மெய்வணக்கத்தில் இருக்கும் போது தான் புண்ணியம் பாவம் இன்னதென்று அறிய முடியும். ஆறாவது அறிவை அறிந்து பேரின்பம் அடைவதுவே மெய்வணக்கத்தின் பலன்.

**இறைவனின் செயல் : வினைப்போகமே ஒரு தேகம் கண்டாய்...** வினைக்கேற்ப தேகம் தருவதும், வினை தீர்ந்ததும் பிறவாமை தருவதும் - இது ஒன்றுதான் இறைவனுடைய செயல். ஓர் பெரியோரை சந்தித்து, அவர்களின் மனோ னோக்கிற்கு இணங்கினால் மட்டுமே இவ்வுடம்பெடுத்தல் எதற்கென என்பதை அறிய முடியும்.

**பயணத்தின் குறிக்கோள்:** ஆறறிவு கொண்ட மனிதப் பிறப்பு ஐயறிவு நுகர்விலேயே வாழ்ந்து இறந்து போவதற்காக அல்ல. இறைவனை வணங்கி அவன் திருவடியை அடைவதுவே மனிதப் பிறப்பின் நோக்கம் ஆகும். இந்த பயணமானது சீர்மேவு மெய்ஞான பயணமாக வேண்டும் என்பதே ஆதி மார்க்க னீதி அவையின் நோக்கமாகும். குருபிரான் ஆசீர்பாதத்துடன் அவை நிறைவேறியது.

**23-06-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்**

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

**வான்மதிக் கொரல் திருவாக்கியம் எண் : 72** கலாமலியேறு கவன லக்கண ககன்வித்தை கற்றுத் தேர்ந்த ஒரு கதிசஞ்ஜீவியர் வந்து, அகத்திலுள்ள குறைபாடுகளை ஆய்ந்துகண்டு சீர் செய்யவேண்டும். அப்படி அகம்புறம் கண்டு, அவற்றின் குறைபாடுகளை அறிவு சம்மதிக்க னீக்கி ஆண்டுகொண்டவர்களே ஆண்டவர்கள். பொய்யகத்துறைந்துள்ள மனத்தை மெள்ள மெள்ள மெய்யறிவு உதயம் காட்டிக் காட்டி, அகவிளைவு குடியேற்றி, உள்ளும் புறம்பும் சிறக்கச் செய்கின்ற முழு தீர ஜீவ ஆட்சி ஆண்மை உடையவர்களே ஆண்டவர்கள்.

**காலந் நாட்டிய காரணப் பா - பாடல் எண் : 30 சுத்த வாக்கெலாம் சூழ்ந்துத யஞ்ஞெய ....** என்ற பாடலுக்கான ஜீவசகோதரி லாவண்யா அவர்களின் புரிதல் : மகா மகசூக்கான இருதயமாகிய சித்தத்தில் சிவத்தை அறிந்தவர்கள் வாக்கே சுத்த வாக்காகும். ஞான சித்தராகிய ஆண்டவர்கள், தன்னை அண்டி வந்த மக்களை மறுபிறப்பெனும் புனர்ஜென்மத்தில் பிறக்கச்செய்து அனந்நர் என்ற தீட்சா னாமமும் சூட்டினார்கள். மறுபிறப்பு பற்றி சத்திய வேதத்தில், ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாக மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என அருளப்பெற்றுள்ளது.

**ஆதிமான்மியம் :** ஆசான் திருனாவின் உன்னத னாமங்ஙளாவன : *னாக்கூருக்கொழு உழவேறுகோல், செங்கரத்து வாள், ஓர் எழுத்து மாத்திரை கோல், சோல்னா பை, ஓரிதழ் தாமரை, செங்கதிரின் னாவின் முனை.* அவர்கள் தங்களின் சொல்லேர் உழவு கொண்டு எழிலோங்ங்கு சம்பூரண உயிர்க்களிப்பின் வாய்மை துலங்ஙா னின்ற பன்னலங்ஙார னன்னலந் நவமும் அழகொளிர் ஒலிப்பிழம்பின் தற்பராபர னிச்சலாதிய சிற்சபா னடன சுவிசேஷகாரச் சுவையினாலே செந்தூர பொடி கொண்டு ஜெகத்து மக்களை ஜென்ம சாபல்யத்தில் ஏற்றுகிறார்கள்.



Copyright © AMNA Trust, Chennai 

**ஆதியோதயத் தலைப்பருவம் :** இறைவனிடத்திலிருந்து வெளியாகி பிறந்துவிட்ட படியினாலே இறைசூலி திரிசூலியென்றும் னூறொளி வென்னும் தெய்வீக ஏக ரூபக்கிரணப் பிழம்பென்றும் வெளியாகிய திருச்செயலை உள்ளடக்கியதே ஆதியோதயத் தலைப் பருவமாகும்.

**ஆதியோதயப் பருவம்:** சாகாத் தலை என்ற கும்பம், வேகாக்கால் என்ற ஆரக்கால், போகாப்புனல் என்ற ஆண்டகுரு வெனும் அயப்பட்டா என்ற நிலைகளை வட்டையை போன்ற அடிமையான சீடனுக்கு போதிக்கும் பகுதியும், ஆறு ஐந்து ஒன்று ஒன்று ஒன்றாக இருபாக முக்கூறு - நிலையங்களைப் பற்றிய இரகசியங்களையும், ஆறும் ஐந்தும் பதினொரு காரியங்களை தன்னில் அகமுகத்தில் அறிந்து வணங்கும் மெய்வணக்க செயலையும் உள்ளடக்கியதே ஆதியோதயப் பருவம்.

**அழிகலிப் பருவம்:** மெய்ஞ்ஞான நிலைகளை பெற்ற பிறகும் பிரம்ம ராட்சனாக மாறுகின்ற நிலையையும், பிரம்ம நிலையை அறியாத போலி சாமியார்களின் பொய்ச் செயல்களையும், ஞான வாழ்வுக்கு மாற்றமான மக்களின் மன ஓட்டத்தையும் கூறுவது அழிகலிப் பருவம்.

**முதுமொழி உதய பருவம்:** மாயாசரீரமாகிய தூலமின்றி எங்கும் எவரும் எக்காலத்தும் எவரையும் திருத்தி ஜீவ ஏற்றத்தில் ஆக்கியதே இல்லை - இனி அப்படி ஆக்கப்போவதுமில்லை என்ற னீதியை நிலை னாட்ட எழுந்த ஆண்டவர்களின் அவதார பெருமைகளையும், சிறப்புகளையும், மெய்வழிச்சாலையில் எடுத்து வைத்திருக்கும் அக-புற செயல் அடையாளங்கள் அடங்கியது முதுமொழி உதய பருவம்.

**வளர் குழந்தை குமாரபருவம்:** தெய்வக் குழந்தையின் சிறப்பு **புகர் சமய ஜகதசத் துவ சத்து … கலாமலி யேறு கவன லக்கணத் தொடர் …** என்ற னவனீதங்களின் சிறப்புடன் பிறந்த குழந்தைக்குரிய சிறப்பு பாடல் -

**றாரிராறோ றாறாரோ -**
**ஆறறிவு னேரேறே**
**பேரூர்பி றந்நபசும்**
**பொன்னேனீ கண்வளராய்.**

**மூலபண்டாரப் பருவம்:** னீள வேதமும், மூலப்பழம் பண் ஆரமணியுமாகவும் வந்த தனிகைமணிப்பிரான் அவர்கள் ஜீவ கோலத்துள் இருந்த மெய்ப்பொருளும் வெகுமதி சுமையையும் சுமந்து வந்து மெய்வழி கைமுதலாகிய மனோ வாக்கு காயத்தை ஆண்டவர்களிடம் சோதித்து பின், உன்னுள் சீதனமும் அதன் திருத்தலமும் எங்கே? என்ற வினா விடையின் மூலம் அவர்களை ஆட்கொண்ட சம்பவத்தைக் கூறுவது மூலபண்டாரப் பருவம்.

**அகில வலம் வரும் பருவம்:**

**தொடர்ந்நுமே சென்றார் பின்னே**
**தொன்பழ வினைகை விட்டே**
**அடர்ந்நுதன் ஆசான் ஒன்றே**
**அருட்கதி யெனவே மாண்டார்** என்பதற்கிணங்க பனிரெண்டு வருடங்கள் அகில வலம் வந்து தன் ஆசான் உத்திரவுக்கு பணிந்து ஆறறிவு ஆட்டினை மேய்க்க அன்றே ஐயறிவு ஆட்டினை ஒரு வருட காலம் மேய்த்து அதன்பின் திருப்பரங்குன்றத்தில் தவம் பூண்டார்கள், என்பதை விவரிப்பது அகில வலம் வரும் பருவம்.

*பாதோதகம் செவ்வையாய்ப் பாபச் சேற்றை உலர்த்துவதும், ஞானதேஜஸ்ஸை விளக்குவதும், சம்சார சமுத்திரத்தைக் கடத்துவதுமாகவும் உள்ளது*
*~ குரு கீதை*


Copyright © AMNA Trust, Chennai

**சன்னதம் பெறு பருவம் :** குருதேவ ரன்றிக் கருமார்களின் உலைக்கூட மறியாத சூலம், வேல், பராங்குசம் முதலிய எல்லா சன்னதங்களும், ஆசீர்பாதக் கங்கணமும் ஆண்டவர்கள் பூண்டார்கள் என்பதையும், நாம் இதுவரை உலகத்தில் புழங்கிக் கேட்டறியாத தாரகா மணிப் பெட்டகத்திலுள்ள மந்திரங்களின் அதிசூட்சும நிலைகளையும் அதன் செயல்களையும் விவரிப்பது சன்னதம் பெறு பருவம்.

**ஜீவசிம்மாசனப் பருவம்:** ஜீவ சிம்மாசனம் ஏற்றிவைக்கும் வாலகுருவாக வந்து நம்மை ஜீவன் கண்ட ஜென்ம சாபல்ய குலமாக வாழ்வதற்குரிய ஆசீர்பாதத்துடன் குருபிரான் அவையை னிறைவு செய்தார்கள்.

**30-06-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**
**வரமாகிய மானிதமது வாங்கிய வணக்கம தேதேடா**... என்ற தோத்திரப் பாடலைத் தொடர்ந்து, அமானிதத்தின் ரகசியம் அறிந்தவன் வரம் வாங்கியவன். அமானிதம் இன்னதென அறியாமல் இருப்பதே பெரிய அறியாமையாகும்.

**வான்மதி கொரல் வாக்கியம் எண் 73:**

**பொய்மையும் வாய்மையிடத்த புறை தீர்ந்த**
**நன்மை பயக்கும் எனின்**

என்ற திருவள்ளுவ பிரானின் திருமொழிக்கு ஏற்ப, ஆண்டவர்கள் தாம் ஒரே இரவில் பணக்காரர் ஆன விஷயத்தை கூறுகிறார்கள். பிரம்மவித்தை, சாகாக் கல்வி, தனக்கெல்லாம் வாய்க்குமா? என்ற மனநிலையில் அன்று ஆண்டவர்களை சந்தித்த நீதிபதி போன்று இன்றும் பலர் உள்ளனர். சன்மார்க்க மரபு அறியாமல், பக்தி மட்டுமே கொண்ட அறியாமை மிகுந்த கூட்டமே மிக அதிகமாக உள்ளது. எதார்த்தமாக தேடுபவர்களுக்கு நிஜமான சன்மார்க்கம் விடிகிறது

**காலந் நாட்டிய காரணப் பா - பாடல் எண் 32 : புதியோ தயப்பெருங்குல மக்கட்குக் கதிபொற் கச்சுகாண் மார்பரு கேற்றியே ...** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி லாவண்யா அவர்களின் புரிதல் : சுத்தவாக்கு கொண்டவர்களால் மறுபிறப்பு பூமியில் பிறந்தவர்கள் அனந்தர்கள். விதியை மதியால் மாற்றி, நல்ல கதியை அருள்பவர் மெய்க்குருபிரான்.

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:** மதி சிரம்மணி என்பது மும்மணி கோவையாகிய கருமணி, ஞானமணி, சிரோன்மணி மூன்றையும் ஒன்றாக கோர்ப்பது. ஆண்டவர்களும் இதனை ஆமணியே, அம்மணியே, தாய்மணியே என அருளுகிறார்கள். அறிவுப் பிரகாசத்தின் அடையாளமாகிய காஷாயம் துணியைக் குறிப்பதல்ல. **விண்டு விண்டு அந்நரத்தோடு ஊடுருவிப் பாயும் விளங்கும் காரணத்தேகம் காவியேறும்.** அணுவின் ரகசியத்தை அறிந்த மனுமகனே விதிவிலக்கும் செயலை செய்கிறார். இவை எல்லாம் அறிவை சார்ந்த ஒன்றாகும்.

**ஆசைப்பத்து பாடல் எண் 10 : நெஞ்சே வயன் தன்னார்...** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி பூர்ணிமா அவர்களின் புரிதல் : சேல் எனும் மீன் போன்ற விழியாகிய மனதின் செயலை மாற்றி அமைப்பவர் மெய்க்குருபிரான். பிரணவமும், பிராணனுமாக இருக்கும் சிவசக்தியை சிவமாக ஆக்கிக் கொண்டவர்கள் தங்களின் பாத தாமரையால் நம்மை எமபயத்தில் இருந்து விலக்கிக் காக்கிறார்கள்.
**திரு ஆவூர்ப்பசுபதீச்சரம் பாடல் எண் 3 : பொங்கி வரும் புனல்...** என்ற பாடலுக்கு ஜீவசகோதரி சண்முகப்பிரியா அவர்களின் புரிதல் : ஆசானின்


Copyright © AMNA Trust, Chennai

வாக்காகிய தீ எனும் நாதத்தின் மூலம், நினைவு எனும் பிடரியில் சூடேற்றி அறியாமை நீங்கி, மூச்சு வீணாகாத புண்ணிய நிலைக்கு ஆளாகலாம். மனதை ஆளக்கூடிய மணவாளராகிய ஆசானின் ஆவூர் என்னும் திருனாவு உயர்ஞானமேற்றி பிறவிப்பிணியை நீக்குகிறது.

**ஆதி மான்மியம்:** எழுதாத எழுத்தாக உள்ள வேதம் ஒவ்வொருவரின் நாமத்திற்குரிய பொருளாக, அறிவிருக்கும் தலமாக, கங்குல் பகலற்ற இடமாக உள்ளது. சர்வத்திற்கும் ஆதிமூலமாக உறைந்திருக்கும் அசைவற்ற அப் பரம்பொருளிலிருந்தே, சர்வ வேதமும் வெளியாகிறது. அதிலிருந்து அசைவுக்கு வருவதே **ஜீவன்**. ஒன்பது கிரகங்களை அஸ்தமிக்க செய்து அனுக்கிரகமாக ஆக்கும் செயல் கைவரப்பெற்றவர் குருபிரான். ஞானத்தின் அடிநாதமாகிய ஜென்ம சாபல்ய செயலை, சாப விமோசனம் பெற்று கைப்பற்றுவதை விவரிப்பதே நவக்கிரக கோயில் விசேஷம்.

கலாமலியேறு, கவன லக்கணத்தொடர் என்பதை காலம், காலச்சக்கரம் என்ற தவநிலை ரகசியமாக வளர் குழந்தை குமார பருவத்திலும், அகிலவலம் வரும் பருவத்திலும் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். மெய்மதத்தை உண்டாக்கி மச்சமுனி கோத்திரத்திலிருந்து, ஆங்கிரச கோத்திரமாக மாற்றி தேவப்பிறப்பில் பிறந்து ஆகிக் கொள்ளும் ஆசீர்பாத ஒலிவாயுரையை முக்காலங்களுக்கும் பொருந்துமாறு தன்னிலை விளக்கமாக ஆதிமான்மியத்தில் ஒன்பது பருவங்களாக அருளியுள்ளார்கள். தொண்டெழு மனிதனின் சுத்தத்துறை இருதயத்துள் வெளியாகாமல் உள்ளடங்கி இறைவன் இருப்பதை அறிபவனே மனிதன். இதனை மதிப்பளு சுமையாகவும், வெகுமதி சுமையாகவும் சுமந்து கொண்டு வந்த தனிகைமணிப்பிரான் பொற்பாதம் பணிவோம்.

பண்டிதற்கெல்லாம் அதிபண்டிதராயும், கற்றோருக்கெல்லாம் அதிகற்றோராயும், தொண்டருக்கு தொண்டராயும், அவரவர் உருவத்தினை அதிக தெளிவுபடுத்தி பிரதிவிம்பமாகக் காட்டும் தெய்வக் கண்ணாடியாய் விளங்கும் தெய்வ தீபமாகிய எங்கள் நாயகம் அவர்கள் கல்வியை படித்து வரவில்லை, பழகி வந்துள்ளார்கள். **வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்** என்பதை உணர்ந்தவர்கள் ஆதிமார்க்க னீதி அவையின் அங்கத்தினர்கள். **யோக்கிய பூரணனன்பு தேக்கிய சௌபாக்கியர்க்கு ஆக்கை மரண பயம் அழிந்நொழிந்து போனதடி.** இவ்வாறான அன்பின் மூலமே மரணபயம் அழியும். அழியாத மெய்ப்பொருள் தொட்டு காட்டப் பெற்று அதன் மீது உன் அன்பு சாய்ந்து மூச்சானது ஒரு நிலைப்பட நின்று வணங்கும் வணக்கமே மெய்வணக்கம் ஆகும். ஒழுக்கம், வைராக்கியம், பத்தியம் மிகுந்தவனாக இருந்தால், தெய்வீகக் கண்ணாடி நம்மை அழகாகக் காட்டும். மாற்றமாக இருக்கும் போது நம் அறிவே நம்மை எட்டி உதைக்கும். **அண்ட பகிரண்டமெல்லாம் தொண்டரிதயத்தின் மனக்கண்ணாடிக்குள் இருந்த காரணத்தை யான் மறவேன்**. ஆதிமான்மியத்திற்கான கிரயம் நம் தலை தான் என்றும், தீர்க்கதரிசனச் செயலாக, வையகத்தையும் வானகத்தையும் சர்வ கால காலங்களையும் சர்வ காலத்திற்குள் அடங்கிய அழிவில்லாத நித்திய பூரண மேம்பாடுகளாக உள்ளவற்றை உத்தி **ஒ** வண்ணர் என்ற தகுதி கொண்டவரே படிக்கத் தகுதியானவர். அப்படியான ஜீவேசத்தகை வாழ்விற்குரிய மக்களாக ஆதிமார்க்க னீதி அவையின் அங்கத்தினர்கள் வாழ வேண்டும்.

**சிவானந்த போதம்:** போதம் எனும் உபதேசத்தை மனமாகிய சீடனுக்கு அறிவாகிய ஆசான் போதிப்பது. **அறுசுவைகொண் டொளித்தவிடம் விதமாய்க் கேட்க** என்ற ஞானனூற் பொருளறிதல் பாடல், சிவானந்த போதம் னூல் பயன் பற்றி கட்டியம் கூறும் பாடலாக உள்ளது. அறுசுவை ஒளித்த இடம் அறிந்து அமரனாக, தேவாதி தேவனாகக்கூடிய ஒன்றை உணர்ந்தவர்களால் தான் இந்த னூல் பயனை அடைய முடியும். இதை உணராத மக்கள் ஜீவன் இருக்கும் தலமாகிய சித்தத்தை அறிய முடியாது.

**சன்மார்க்க மரபு:** சாகாத்தலை-வேகாக்கால்-போகாப்புனல் என்பது, அலீப்-லாம்-மீம் எனும் திருவடியாக உள்ளதை அறிவிக்கின்றார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

**நூல் பயன்:**

**சந்நேக மாதிகளைச் சாராம லேயகற்றிப்
பந்நபா சங்ஙளைப் பாழாக்கும் - இந்நனூல்
எந்நனா ளும்மழியா ஏகாந்ந வீடதனைச்
சொந்நமாக் கும்மெனவே சொல்**

இப்பாடல், நாம் வாழ்வது மனதுடனா அல்லது அறிவுடனா என நம்மை நாமே சீர்தூக்கிப்பார்க்க அருளியது. என்னாளும் நிலைத்து நிற்கும் பொருள் இன்னதென அறிந்து அனுபவித்து, பேரானந்த சுகம் பெறுவதையே சிவானந்த போதமாகிய இன்னூல் முழுமையாகப் பேசுகிறது என அருளி குருபிரான் அவையை இனிதே நிறைவு செய்தார்கள்.

குரு வாழ்க! குருவே துணை !!

*அஞ்ஞானமாகிய மூலத்தைக் கெடுப்பதும், பிறப்பிற் கேதுவான கர்மத்தை யொழிப்பதுமாகிய குரு பாதோதகத்தை ஞான வைராக்கியம் பெறுதற் பொருட்டுப் பருகுக*

*~ குரு கீதை*



Copyright © AMNA Trust, Chennai

**ஜூன் மாத பயணங்கள்:**

| தேதி | னிகழ்வுகள் |
|---|---|
| **12th June 2022** | ஆதி மார்க்க னீதி அவையின் பொதுசெயலாளர் திரு. மணிவண்ணன் அவர்களின் பேத்தி **அத்விக்கா** வின் பிறந்தநாள் விழாவிற்கு குருபிரான் அவர்கள் எழுந்தருளி குழந்தையை ஆசீர்பதித்து அருளினார்கள் |
| **19th June 2022** | குருபிரான் அவர்கள் **மிட்டபள்ளி** மற்றும் **காஞ்சிபுரம்** ஊர்களில் உள்ள அங்கத்தினர்கள் மற்றும் புதியவர்களை சந்தித்தார்கள். |
| **24th – 26th June 2022** | குருபிரான் அவர்கள் நவகிரகங்களின் நிக்கிரக அனுகிரக செயலை அங்கத்தினர்கள் அறிவு தெளிவு பெறும் வண்ணம், புற அடையாளங்களாக உள்ள **கும்பகோணம்** நவகிரக ஸ்தலங்களுக்கு அழைத்து சென்றார்கள். |
| **30th June 2022** | குருபிரான் அவர்கள் 30.06.2022 வியாழக்கிழமை அன்று K.பார்த்திபன் - பாரதி தம்பதியர்களின் பெண் குழந்தைக்கு **அம்பிகாஸ்ரீ** என நாமம் சூட்டி ஆசீர்பதித்தார்கள். ஊர்: வேலூர் - சத்துவாச்சாரி |


Copyright © AMNA Trust, Chennai

**ஆதி மார்க்க னீதி அவையின் பொதுசெயலாளர் திரு. மணிவண்ணன் அவர்களின் பேத்தி — அத்விக்கா வின் பிறந்தநாள் (12.06.2022) விழாவிற்கு குருபிரான் அவர்கள் எழுந்தருளி குழந்தையை ஆசீர்பதித்து அருளினார்கள்**











Copyright © AMNA Trust, Chennai

**குரு பிரான் அவர்கள் ஜூன் மாதம் மேற்கொண்ட கும்பகோணம் நவகிரக சன்னதி விஜயம். உடன் அங்கத்தினர்கள் மற்றும் எதார்த்த னன்மனத்தினர்**











Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் அவர்கள் மிட்டபள்ளி மற்றும் காஞ்சிபுரம் ஊர்களில் உள்ள அங்கத்தினர்கள் மற்றும் புதியவர்களை சந்தித்தார்கள்.**











Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் அவர்கள் 30.06.2022 வியாழக்கிழமை அன்று K.பார்த்திபன் - பாரதி தம்பதியர்களின் பெண் குழந்தைக்கு அம்பிகாஸ்ரீ என நாமம் சூட்டி ஆசீர்பதித்தார்கள்.**

**ஊர்: வேலூர் - சத்துவாச்சாரி**





Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2022 ஜூலை மாத அவை நிகழ்வுகள்


Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் வர்ஷிப்பு



திரு. சாலை ரவி அப்பா அவர்கள்
நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை

ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே, எதார்த்த நன்மன சற்சனர்களே, அனைவருக்கும் நமஸ்காரம்.

ஆடி மாத மின்னணு சஞ்ஞிகை, 19 அவை னிகழ்வுகளாகவும், மற்றும் 3 இசை வகுப்பின் னிகழ்வுகளுடனும், நா ஆடி, மக்களை நாடி வந்துள்ளது. ஆடி மாதத்தின் சிறப்பு, மாரிஅம்மனாகிய இறைவனிடத்தில் மாரியாகிய மழைக்காக வேண்டி பிரார்த்தனை செய்யும் மாதமாக உள்ளது. தியாகத் திருநாள் என்னும் பக்ரீத் பண்டிகையும் இம்மாதத்தின் சிறப்பாக உள்ளது. எதை தியாகம் செய்ய வேண்டும்? பலியிட வேண்டும்? என ஐந்து கடமைகளாக இஸ்லாத்தில் கூறப்பெற்றுள்ள ஒன்று, இஸ்லாமிய குலத்திற்கு மட்டுமின்றி ஒட்டுமொத்த மனுத் தலைக்கும் உரிய சட்டம் என்று தான் சொல்ல வேண்டும். தொழுகை என்பது ஐந்து வேளையாக, தொழுகைக்கு முன்னும், பின்னுமாக ஐந்து கடமைகளாக உள்ளது. தொழுகைக்கு முன் ஒலு எனும் சுத்தம் செய்து சுத்திகரிக்கப் பெற்றபின் சுன்னத்து செய்த பின்னரே தொழ வேண்டும் என்பது வேத சட்டம். தொழுகைக்குப் பின் ஜக்காத் என்னும் தான தர்மங்கள் செய்வதும், அதன் பின் பக்ரீத்தின் சிறப்பாகிய குர்பானி என்னும் பலியிடுதலும் வேண்டும். பின்னர் நோன்பு முடித்து ஷவ்வால் எனும் ரமலான் மாதத்தில் ஹஜ் யாத்திரையாக மக்காவிற்கு பயணம் செல்ல வேண்டும். மக்கமா நகரின் சிறப்பாக பக்ரீத்தின் அசலான ஓயா தொழுகைக்குரிய நகல் சடங்கானது, அசலான செயலை அறிவதற்காக நடைபெற்று வருவதை, அசலான குருவின் மூலம் அறிய வேண்டும். குறிப்பிட்ட காலங்களில் வரும் தீபாவளி நவராத்திரி ஆடி கிருத்திகை போலன்றி, வெயில், மழை, பனி, இளவேனில் என எல்லா காலங்களிலும் நோன்பு வைத்து ரம்ஜான் பண்டிகை வருவதின் தேவ ரகசிய செயலை குரு முகமாகவே அறிய முடியும். ஆதி மார்க்க னீதி அவையின் அத்தனை சிறப்புகளும், அறிவை முதன்மையாக வைத்து பேசப் பெற்ற தேவ ரகசியங்களும், அதற்கான வேத சாட்சிகளும், இம் மின்னணு சஞ்சிகை மூலம் வெளியாக்கப் பெற்றுள்ளது. அவையின் சிறப்பாக சிவானந்தபோதமும், போதத்தின் சிறப்பை ஆறு வகையாக வள்ளல் பெருமான் அருளியுள்ளதும், அதனைத் தாங்கி வரும் போதனாச்சாரியரே ஆசரியர் என்பது வேத தீர்ப்பு என்பதும் இச்சஞ்ஞிகையில் உள்ள சிறப்பாகும்.

இந்த ஆடி மாதத்தில் நா ஆடியவர்களின் பட்டியலாக, சிவகாசி அவையின் மக்களுக்கு ஊன்றுகோலாக, முதன்மையாக இருந்து சங்கர், அவையை சிறப்புற நடத்திய விஷயங்களும், சத்துவாச்சாரி சபையை சிறப்பாக நடத்திய (கௌதம்), இசை வகுப்பினை மிகவும் திறமாக சிறப்புடன் நடத்தி வருவதுடன், காலந்நாட்டிய காரணப்பா பாடலுக்கான புரிதலாக (லாவண்யா), திருவாசகத்தின் ஆசைப்பத்து அதிசயப்பத்து பாடலுக்கான, போற்றுதற்குரிய புரிதலாக (பூர்ணிமா), பசுபதியீச்சரம் பாடலுக்கான சிறப்பான புரிதலாக (சண்முகப்பிரியா), இவர்களின் நா ஆடிய விஷயங்கள் யாவும் சிறப்பாக தொகுத்து வழங்கப் பெற்றுள்ளன.



Copyright © AMNA Trust, Chennai

சிவகாசி அவையின் நிகழ்வுகளுள், பழனிவேல் தன் புரிதலாக சிறப்பாக தொகுத்து வழங்கியதை சிரஞ்ஞீவி படித்து வாசித்ததும், பத்மாபதி, செல்லம்மா இவர்கள் இறை நிலையைப் பற்றி தான் உணர்ந்து கொண்ட விஷயங்களைப் பகிர்ந்ததும், புள்ளி விபரங்களுடன் கோபிநாத் தொகுத்து பேசிய அறிவுக்கான விஷயங்களும், தமிழ் ஆசரியரின் திருக்குமாரனான ஜெயக்குமார், நவகிரகங்களை- கதிரவன், சோமன், னிலமகன், அறிவன், சீலன், கங்னன், காரி, கருநாகன், செந்நாகன் என தமிழ்ப் பெயர்கள் கொண்டு தொகுத்து வழங்கியதின் சிறப்பையும் இம் மின்னனு சஞ்சிகை மூலமாக மக்கள் பார்த்து பயன் பெற வேண்டும். இந்த ரகசியங்களை ஒருவன் தேடி உணர்ந்து கொண்டால் அவன் தன்னிலக்கணம் கற்றவனாக, தமிழின் சிறப்பை அறிந்தவனாக, சர்வ வேதங்களின் லட்சணங்களை உணர்ந்தவனாக இருப்பான் என்பது சத்தியம். மேலும் மகேஷ், புன்னகை(மதுரை) மற்றும் ராஜமகேஷ், பழனிக்குமார், கிரகதுரை, கணேஸ்வரன், இன்பலதா, நாகமணி, கணேசன், இவர்கள் சிறப்பாக பேசிய விஷயங்களும் தமிழில் நாம் வெளியாக்கிய ரகசியத்தை அஷ்டாங்க யோக விளக்கமாக சங்கர் இதில் தொகுத்து வழங்கியுள்ள விஷயங்களையும் மக்கள் பார்த்து பயன்பெற வேண்டும். மென் மேலும் நன்னெறியாகிய இச்சென்னெறி திருமார்க்கத்திற்கு இவர்கள் எல்லோரும் சிறப்பு சேர்க்க வேண்டி எல்லாம் வல்ல பரிசுத்த ஆவி தெய்வம் பரம்பொருள் பிரம்ம பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் திருவடிகளை போற்றி வணங்கி இவர்கள் எல்லோரும் எல்லா நற்பாக்கியங்களும் பெற்ற மக்களாக வாழ வேண்டி வாழ்த்துகிறேன்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

***சிவாயனம வென்று சிந்நித் திருப்போர்க்கு அபாயம் ஒரு னாளுமில்லை*** *என்றது, சிவாயனம என்று வாயில் சொல்லிக்கொண்டிருப்பதையா? இல்லை. சிந்நித்து இருப்பது என்றல்லவோ சொல்லி யிருக்கிறது. அனுபவித்து ருசித்த பிற்பாடுதானே சிந்நிக்க வரும். ஆகவே சர்வாங்நமும் தழுவப் பரிசுத்த ஆவியைக் கவர்ந்து சுவைக்க இருப்பதன்றோ சிந்நித்திருப்பது. இந்நத் தவ ஏற்றம், இத் தேக வல்லபமும் அதோடு இத்தேகம் கடந்து னிற்கும், அதாவது புலன் பொறி கடந்து னிற்கும், அழியாச் சுவர்ண தேக வல்லபமும் பெற்று விளங்நும் ஒரு தெய்வ ஆசரியர் அவர்களின் உதவியால்தான் கை கூடும்.* ***தேகமில்லாத அந்ந இறைவனை*** *னீ போய் அடைவதாக இருந்நால், உன்னுடைய இந்நக் குறை தேகத்தைக் கொண்டு அதை அடைய முடியுமா? முடியாது. னீ யார்? ஒரு அழி தேகி. உன்னோடு அவ் விறைவன் கூடிப் பழகுவதாக இருந்நால் தேகமற்ற இறை சொரூபத்தின் வல்லபமும் தேகமுடைய பிரானின் வல்லபமும் சேர்ந்ந ஓர்* ***அதிவல்லபர், தீர்க்கர்*** *உனக்கு வாய்க்க வேண்டும். மனோ வாக்குக் காயங்நளுக்கு எட்டப்படாத அந்ந எல்லைக்கு னீ போக வேண்டுமானால், மனோ வாக்குக் காயம் கடந்ந ஒருவர் உன்பால் இரக்கப்பட்டு, உன்னைப்போல் ஒரு தேகியாக உன் உலகுக்கு வந்நிருக்கவேண்டும். வந்நு உன்னைக் கை போட்டு வழிகூட்டி னடத்த வேணும். அதல்லாது வேறு எந்ந வழியில் னடப்பவர்களும் மாயை தரும் புத்தியில், வழியில் னடப்பவர்களே ஆவார்கள்.*

**~ சாலை ஆண்டவர்கள்**


Copyright © AMNA Trust, Chennai

**02-07-2022 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

**அறுபுரினூல் பிரானிலை யறியான் யான் பிராமண னென்று...** என்ற ஞானமுறையீடு பாடலுடன் அவை இனிதே துவங்கியது.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் : 96** அனித்திய ஆக்கை குடிலாகிய இத்தூல தேகத்துள் அழியாத னித்திய சுத்ததேகம் இருக்கிறது. அதுவே நம் சொந்த தேகம், மூலமந்நிரம், பஞ்ஞாட்சரம், அஷ்டாட்சரம், பிரணவம், கலிமா, காயத்ரி, புகழுடம்பு, தங்கஉடல், வைரமணித்தேகம் என அனேக திருனாமங்ஙளாக வேதத்தில் அருளப்பெற்றுள்ளது. ஆசானின் அனுக்கிரகத்தால் மூன்றாவது கண் திறக்கப்பட்டவர்களால் மட்டுமே அவரவரின் சொந்த தேகத்தை காண முடியும்.

ஆதி மார்க்க னீதி அவையின் புதிய சீடர் ஒருவர் வேதத்திலுள்ள,

1. வாசி
2. நந்தி
3. கலிமா
4. உஜூது
5. சுழிமுனை
6. அமானிதம்
7. அடி, முடி, னடு
8. காயாபுரிக் கோட்டை
9. னெருப்பாறு மயிர்ப்பாலம்
10. சாகாத்தலை, வேகாக்கால், போகாப்புனல்
11. முச்சுடர், முப்பாழ், முப்பால், முக்கோணம், அறுகோணம்
12. மகம்மேரு, சபாத்துவாரம், துளசி, ஊசிமுனைத் தமர்வாசல்

இவற்றை தனக்கு விளக்கியருள குருபிரானிடம் வேண்டியபோது –
குருபெருமான் பெருங்ஙருணை பேரிரக்கம் கொண்டு வேதசாட்சிகளின் மூலம் அரூப உருவமாக னின்றிலங்கும் ஆத்ம னிலைகளை குருமுகமாக சிவா அனுபவமாக மெய்யுணர்வாக பெற வேண்டுமே அன்றி கேள்வி பதிலாக கேட்டு உணர முடியாது என்பதனை

**அறிவினை அறிந்நோர் அறிவரிவ் வாய்மை**
**பாமரர் அறியார் பண்டிதர் அறிவர்**

என்ற தெய்வ வாக்கின் மூலம் தெளிவுபடுத்திய பின் அவர் கேட்ட அனைத்து கேள்விகளுக்கும் இன்னது இன்னதென இன்னதுக்கு இன்னதென ஆண்டவர்கள் அருளிய ஆதி மெய் உதய பூரண வேதாந்நத்தின் பாடல்களை சாட்சி வைத்து அருளி சீடனின் ஐயத்தை போக்கினார்கள்.

**காலந் நாட்டிய காரணப் பா - பாடல் எண் - 33 மனுமகன் றலைப் பாறை மலையின் மேல்...** எனத் தொடங்கும் பாடலுக்கு ஜீவசகோதரி லாவண்யா அவர்களின் புரிதல் : அடி முடி னடுவின் இரகசியத்தை உணர்ந்தவர்களே ஆதி மனுமகன். இதையே, *ஆதி மனுமகன் என் தெய்வமே ...* என்றும் *ஆமனு என்றதோர் அடி முடி னடுவணை ...* என்றும் அருளியுள்ளார்கள்.
பனிமலையாகிய இமயத்தை குறிக்கும் மெய்ப்பொருளின் இரகசியத்தை அருளுபவரும் னடுவாகிய காரண தேகத்தை விளங்க வைப்பவருமாகிய குருபிரானே ஆதி மனுமகன். அவரின் னாமமே துணிவன்னாமம். பிரம்ம



Copyright © AMNA Trust, Chennai 

பிரகாச சாலை ஆண்டவர்களின் இடைக்கச்சத்திலும் ***மகரிஷி மார்க்கனாத ஆண்டகை*** எனும் திருநாமம் பதிக்கப் பெற்றுள்ளதை அன்றே தீர்க்க தரிசனம் கூறியுள்ளது.

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் - அடைக்கலப்பத்து - பாடல் எண் : 10**
**வழங்குகின் றாய்க்குள் அருளார்...** எனத் தொடங்கும் பாடலுக்கு ஜீவசகோதரி பூர்ணிமா அவர்களின் புரிதல் : ஆசானின் திருவாய் மொழியே அமுதம். நம் விதி எழுத்தை துடைத்து மதி எழுத்தாக மாற்றும் வல்லமையுடைய ஆசானின் அருளமுதத்தை உட்கொள்ள விடாது தடுப்பது வினை. வினையால் மறதி உண்டாகி தெய்வீகத்தை உணர முடியாமல் துன்பத்தில் ஆழ்த்துகிறது. குருவின் ஜீவத்தண்ணீராகிய னன்னாதமே மறதியற்ற பரிசுத்த னினைவை அளித்து அழியா தேகத்தில் குடியேற்றி அடைக்கலம் தரக்கூடியதாகும்.

**திரு ஞானசம்பந்தர் அருளிய தேவாரம் - திரு ஆவூர்ப்பசுபதியீச்சரம் - பாடல் எண் : 4**
**தேவியொர் கூறின ரேறதேறுஞ் ...** எனத் தொடங்கும் பாடலுக்கு ஜீவசகோதரி சண்முகப்பிரியா அவர்களின் புரிதல் : தேவியர் எனும் னாமம் வேதத்தாயைக் குறிப்பதாகும். தெய்வீக கருவறையில் பெற்றெடுத்து, மெய்ப்பால் ஊட்டி, னரன் என்ற னிலையிலிருந்து மனிதனாக மாற்றி பின் தேவப் பதத்தில் ஏற்றி வைக்கும் குருபிரானே தேவியர். அவர்களின் திருனாதமே ஆவூர்ப்பசுபதியீச்சரம் ஆகும்.

**சிவானந்த போதம் னூல் பயன் - குருபெருமானின் அருளமுத வர்ஷிப்பு :**
சிவானந்த போதம் மனிதன் பேரானந்தத்தை அனுபவிப்பதற்காக வான னாட்டிலிருந்து இறக்கப்பெற்ற பெருனூல். சைவத் திருமுறைகளில் மெய்கண்டார் உடன் இருந்த பனிரெண்டு பெரியோர்களில் ஒருவர் இயற்றியதே இன்னூல். மாணிக்க சுவாமிகளின் திருவடி போற்றி வணங்கி அறிவாகிய குரு - மனமாகிய சீடன் என னாடகத்தமிழ் மூலம் எளிமையாக மெய்ஞ்ஞானத்தை அருளும் சிறப்புடையது இன்னூல்.

**னிறைந்த பரிபூரணமாய் னிர்க்குணமாய் னிர்மலமாய் னித்தனாகி ...** எனத் தொடங்கும் பாடலில், பிரம்ம சொரூபரின் பரிசுத்த வாய்மைக்குள் ஆகி பிரம்மவித்தையை பழகித் தேர்ந்து பூரண னிலையை பெற்றவர்களால் மட்டுமே எங்கும் னிறைந்த இறைபொருளாகவும் ஏகனாயக தத்துவாதீத மாகவும் னின்றிலங்கும் பரிபூரணத்தை உணரமுடியும் என்ற ஆசீர்பாதத்துடன் ஆசான் அவையை னிறைவு செய்தார்கள்.

**03-07-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ தூத்துக்குடி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்**

**ஆறிரு சமயத்திற்கும் அறிவுரை தெய்வமாகி...** எனும் தோத்திரப் பாடலைத் தொடர்ந்து *ஜீவசகோதரர் பழனிவேல் அவர்களின் புரிதல்:*

**உண்மை:** பேரின்பத்தை தரும் உண்மையெனும் மெய்ப்பொருள் அனைவரிடமும் உள்ளது. உண்மை என்பது உணர்வாக உள்ளது. இதையே ஆண்டவர்கள் மெய்யாக மெய்யாகவே என மூலமந்திரமாக அருளியுள்ளார்கள். மெய் என்பது உணர வேண்டிய மெய்யுணர்வாக இருக்கிறது. அது ஓங்காரமாக, உணர்வாக, கவனமாக இருந்து நம்மை காத்து வருகிறது. இச்செயலையே ஞான அகவல் பாடலில் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

*குருவின் பாதோதகத்தைப் பருகலும், குருவின் உச்சிஷ்டத்தைப் புசித்தலும், குருவடிவை எப்போதும் தியானித்தலும், குருவின் னாமத்தை எப்போதும் ஜபித்தலும் செய்தல் வேண்டும்.*

*~ குரு கீதை*



Copyright © AMNA Trust, Chennai

**மெய்யென் றெவர்களும் வாய்புலம் புவதலா லறியார்**
**மெய்யெனும் பொருப்பீ தெனமனம் தெளிந்நவ ருலகில்**
**மெய்யை மெய்யென மேவிடார் மெய்யரா குவரேல்**
**பொய்யை மெய்யெனும் புலையரேன் புண்ணிய ராகார். (ஞான அகவல்)**

**கல்வி:** கசடற கற்பதுவே கல்வி. உலக கல்வியை கொண்டு அழி வேலைகளையே செய்து அழிந்து போகிறோம். அழியாத கல்வியான மெய்க்கல்வியை அறிய அதை கற்றறிந்த பெரியோர் வந்து கற்பிக்கும் போதே அறிய முடிகிறது. மெய்க்கல்வியே உயிர் காக்கும் கல்வியாக உள்ளது.

**அறிவு இருக்கும் தலம்:** போகாப்புனல் மேல் வீற்றிருக்கும் பிரம்மமுடி சாகாத்தலையே அறிவு இருக்கும் தலம். மனமாகிய போகாப்புனல் மேல், நெருப்பான சாகாத்தலையும், அதன் மேல் வேகாக்காலும் இருக்கிறது. அறிவு இருக்கும் தலமாகிய ஆசானின் வாய்மையின் மூலம் ஜலமான மனம் சுண்டி அறிவாக மாறுகிறது.

**அகரம்:** பஞ்ஞுபூதங்கள், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய எட்டு பொருளும் சேர்ந்தது அகரம். அகரத்தை அறிந்தால் இறைவனை அறியலாம். அகரத்திற்கு முதலாக இருப்பது ஔ. (அ+உ ) ஔ என்பது எட்டிரண்டும் பத்தான ஓர் அறிவாக விளங்கும் இடம். இதனை அறிந்தவர்களே ஔவையார்.

**அகர முதல் அவ்வெழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு** என்பது திருவள்ளுவர் வாக்கு.

*ஜீவசகோதரி பத்மாபதி அவர்களின் புரிதல்:* **கோடாயிதக் கூர் வாக்கியம் எண் 19 :** தேவரகசியத்தை அறிய தேவப்பிறப்பில் பிறக்க வேண்டும். தேவரகசியமாகிய பஞ்ஞாட்சரத்தை சதா நம் நினைவில் வைக்க வேண்டும். தேவ ஆவியில் பிறப்பவர்கள் பிறவானிலையை பெறுவர். மனிதன் இறைவனின் ரகசிய பெட்டகம். ஏகாட்சரமாகிய பிள்ளையார் சுழியே பஞ்ஞாட்சரம், சிவமயம், னற்றாள், பாதம், நான், கவனம், உணர்வு, ஜீவன் என பல நிலைகளாக உள்ளது. பஞ்ஞாட்சரத்தை தன்னில் அறிபவரே மரணமிலாப் பெருவாழ்வு பெறுகின்றார். வேதங்கள் எல்லாம் புகழும் பஞ்ஞாட்சரம் தன் கை வசத்தில் இருந்தால் இறைவன் தன்வசம் என்பது ஆண்டவர்கள் திருவாக்கு. மறுபிறப்பு பூமியாக, சொந்த பூமியாக இருக்கும் னீங்கா னன்னிலம் என்பதை தன்னில் அறிவதே தேவரகசியத்தை அறிவது.

**பஞ்ஞாட்சரமேனி படிந்நகுல தெய்வமதை**
**னெஞ்ஞாரக் கண்டுதொழ ணீனிலத்தில் வாச்சுதிங்நே**
- **(இடப்பாக ஆசாரக் கண்ணி)**

*ஜீவசகோதரர் கோபிநாத் அவர்களின் புரிதல்:*

**அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே**
**அன்பெனும் குடில் புகும் அரசே**
**அன்பெனும் வலைக்குட்படு பரம் பொருளே**
**அன்பெனும் கரத்தமர் அமுதே**
**அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே**
**அன்பெனும் உயிரோளிர் அறிவே**
**அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே**
**அன்புருவாம் பர சிவமே! - வள்ளலார்.**



Copyright © AMNA Trust, Chennai 

பிறப்பு இருந்தால் இறப்பும் இருக்கும். மா- ரணமாக இருக்கும் மரணத்தின் எச்சரிப்பை அறிந்தால் மட்டுமே சாகாக்கல்வி எனும் மரணமிலாப் பெருவாழ்வை அறிய முடியும்.

**புனரபி ஜனனம், புனரபி மரணம்** என ஆதிசங்கரர் அருளியுள்ளார்.

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம் கசப்பு தீட்டு... என சாலை ஆண்டவர்கள் அருளிய மகா சங்கல்ப மந்நிரத்தில் அவமான அவஸ்தையாக இருக்கும் மரணத்தை எச்சரிக்கிறார்கள்.

**ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்**
**பேரினை நீக்கிப் பிணம் என்று பேரிட்டுச்**
**சூரைஅம் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு**
**நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே.**

என திருமூலர்பிரானும் மரணத்தைப் பற்றி எச்சரிக்கிறார்.

வள்ளல்பிரானும் இன்று வருமோ நாளைக்கே வருமோ அல்லது மற்று என்று வருமோ அறியேன் எங்கோவே! – என மரணத்தைப் பற்றி எச்சரிக்கிறார்.

மாமிசமாகிய இவ்வுடலைப் பற்றிய சிந்தனை மரணம் என சத்தியவேதம் கூறுகிறது.

மரணத்தை மாற்றக் கூடிய பிரம்மவித்தை செயல் ஒரு மெய்க்குருபிரானின் கையகத்தில் உள்ளது. வெளிக்குள் வெளிகடந்து சும்மா இருப்பதே செத்து தினம் பழகும் உளவாக உள்ளது. அருட்சோதியானால் மரணத்தை தவிர்க்கலாம் என வள்ளல் பிரான் ஆறாம் திருமுறையில் அருளியுள்ளார்கள்.

**அருட்சோதி ஆனேன் என்று அறையப்பா முரசு**
**அருளாட்சி பெற்றேன் என்று அறையப்பா முரசு**
**மருட்சார்பு தீர்ந்தேன் என்று அறையப்பா முரசு**
**மரணந்தவிர்ந்தேன் என்று அறையப்பா முரசு**

*ஜீவசகோதரி செல்லம்மா அவர்களின் புரிதல்:*

**கோடாயிதக்கூர் வாக்கியம் எண் 48 :** அளவுக்கு மிஞ்ஞினால் அமுதமும் நஞ்சு என்பது பழமொழி. எந்த ஒரு பொருள் மீதும் அளவிற்கு அதிகமான ஆசை கொண்டால் மனம் எனும் வயிறு கோளாறு அடைகிறது. அதை சரி செய்ய ஆசானின் னாத மருந்தை செவி மூலம் உட்கொள்ள வேண்டும். வெண்நோய் எனப்படும் பிறவிப்பிணியை போக்க ஆதி மார்க்க னீதி அவை ஒன்றே வைத்தீஸ்வரர் இருக்கும் வைத்திய சாலையாக இருக்கிறது.

*ஜீவசகோதரர் ஜெய்குமார் அவர்களின் புரிதல்:*

உலகில் நவ (ஒன்பது) என்பதின் பயன்பாடுகள்:
நவசக்திகள், நவதீர்த்தங்கள், நவஅபிஷேகங்கள், நவரசம், நவமணிகள், நவதிரவியங்கள், நவலோகம், நவதானியங்கள், நவகுண்டங்கள், நவக்கிரகதலங்கள், நவபாஷாணம், நவதுர்க்கா, நவசக்கரங்கள், உடலின் நவதுவாரங்கள், உடலின் ஒன்பது சக்கரங்கள் என இருக்கிறது. நவகிரகங்கள் அவரவரிடத்திலே உள்ளது என்பதையும் பெரியோர்கள் அருளியுள்ளார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

**நவகிரகங்களின் தமிழ் பெயர்கள்:**

1. சூரியன் - கதிரவன்
2. சந்திரன் - சோமன்
3. செவ்வாய் - நிலமகன்
4. புதன் - அறிவன்
5. குரு - சீலன்
6. சுக்கிரன் - கங்கன்
7. சனி- காரி
8. ராகு - கருநாகன்
9. கேது – சென்நாகன்

காலச் சக்கரமென்னும் ஒன்பது கிரகங்களும் மனிதனுள் நுழைந்து கொண்டு நடத்தும் செயலை சாலை ஆண்டவர்கள் ஆதிமான்மியத்தில் அருளியுள்ளார்கள். நவகிரகங்களின் தன்மை அவரவரிடத்தில் விளங்குவதை ஆசானின் அனுக்கிரகத்தால் அறியக் கூடியதாக உள்ளது.

**குருபெருமான் அருளமுத வர்ஷிப்பு:** மூன்றாவது கிரகமாகிய நாமிருக்கும் பூமி, தசாபுத்தியின் பொழுது பத்தாவது கிரகமாகிய **நான்** மற்ற ஒன்பது கிரகங்களுள்ளும் நுழைந்து செய்யும் செயலை அறிவதே மெய்க்கல்வி. மெய் அறிவைப் பெற்றவர்களுக்கு கிரகம் அற்று போகும் செயல் இன்னதென தெரியவரும், எல்லா கிரகங்களுக்கும் தலையாக இருக்கும் சூரியனை தன்வசம் ஆக்கிய பெரியோர்களே ஞானசூரியன். மனம் எனும் குதிரையை கவனமாகக் கையாண்டு அறிவாக மாற்றும் கல்வி மெய்ஞானத்தில் பழக வேண்டிய ஒன்றாக உள்ளது என்ற அமுதவர்ஷிப்புடன் அவை இனிதே நிறைவேறியது.

**03-07-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி**

*ஜீவசகோதரர் கௌதம் அவர்களின் வேதப் பகிர்வுகள்:*
**வீடு:** மனிதனிடம் அழியாத னித்தியமான புகழுடம்பும், அழிகின்ற அனித்திய தூல உடம்பும் வைத்துப் படைக்க பெற்றிருப்பதால் னாம் இந்த அனித்திய உடலில் இருக்கும் போதே சர்வமும் அறிந்து கருணை கடலாக இருக்கும் மெய்க்குரு பிரானின் திருவருட்பெருந்துணை கொண்டு னித்திய உடலாகிய சொந்த வீட்டில் குடியேற வேண்டும். இதையே நமது ஆண்டவர்கள் தரணியில் இல்லாத ஒரு தனிச் செயற்பதியில் **அந்ந மெய் னீதிகரம் - எல்லையெங்கும் ஆன பரி சுத்தமாயிருக்கும் குடிகள்** என அருளியுள்ளார்கள்.

**அறம்:** புண்ணியத்தின் உருவாக வருபவரே ஞான குருபெருமான். அவர்களுடைய ஜீவ கங்கையில் இருந்து வரும் அள்ள அள்ள குறையாத பேரின்ப னாதத்தை செவி வழியாக பருகினால் பிணி, பயம், துயரம் யாவும் அறவே நீங்கும். மேலும் வர்ணனைக்கு எட்டாத அளவுகடந்த அழகுடைய உயிர்ஒட்டு எனும் அறச்செயலில் நம்மைப் பழக்கி வைப்பார்கள்.

**உன்னதம்:** னாம் இப்பொழுது இருக்கும் இடமாகிய ஆதி மார்க்க னீதி அவை எனும் பாரதூரமான இவ்வெல்லையில் ஆசான் அவர்களின் கருணையால் இவ்வுலகில் வேறெங்கும் கிட்டாத உன்னதமான னிஜனிதி லாபகர அனுபவச்செயலைபழகி வருகிறோம் என்பது சத்தியம்.

**னாதம்:** நம்மிடத்தில் னாதம் இருந்தால்தான் குருபிரான் அதை எழுப்ப முடியும். இளமையிலேயே ஞானத்தை அடைய வேண்டும் என்பதையே **இளமையில் கல்** என பெரியோர்கள் கூறியுள்ளனர். இளமையில் எளிதாக



Copyright © AMNA Trust, Chennai

பெறக்கூடிய ஞானத்தை, வயது முதிர்ந்த காலத்தில் எளிதாகப் பெறுவது கடினம். இதற்காகவே மெய்ஞானிகள் குருகுல வாசத்தை ஏற்படுத்தி வைத்தார்கள்.

**னினைவு:** மனம் போனபடியே ஓடாமல், ஆசானின் அறிவின் வழியாக பிரம்மவித்தை செயலை பழகி, எதார்த்த னன் மனத்தினராக வைராக்கியமாக இருந்தால் னம் னினைவுக்கு னினைவாகவும், பார்வைக்குப் பார்வையாகவும், குருபிரான் அவர்களே னம்மிடத்தில் அரூப வடிவாக இருப்பதை அவர் அறிவிக்க நாம் அறியலாம். அவர் வந்து னம் னினைவென்னும் ஆசனத்தில் அமர்ந்த பிறகு தான் உள்ளமாகிய மதி வளரும் பூவனத்தில் ஜீவ ஊற்று எழும்பி சுதந்திர வாழ்வளிக்கும் உத்தியோவனத்திற்குள் னாம் குடியேறி வாழமுடியும். **அன்னவர்- மன்னவர்:** குருபிரான் மண்ணுலகில் ஜீவபண்டிதராக அன்னவராகவும், விண்ணுலகில் கற்ப கோடி காலத்தை ஆளும் ஞானபண்டிதராக மன்னவராகவும் அருள்பாலிக்கிறார்கள்.

**னித்திய னன்மை:** னாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும் னன்மை-தீமை உண்டு. இறை செயலிலோ னித்திய னன்மை ஒன்றுதான் இருக்கும் என்பதை ஒவ்வொரு காலத்திலும் வரும் அவதார மூர்த்திகளின் செயல் அனுபவமாக அவர்கள் அருளிய வேதத்தின் மூலமாக அறியலாம்.

**அரிது:** அழிகின்ற பொய்ப்பொருளை எளிதாகப் பெறலாம். ஆனால் அழியாத மெய்ப்பொருளை பெறுவது அரிதிலும் அரிது. இதை **காத்து உள்ளபோதே தூத்திக்கொள்** எனும் பழமொழிக்கேற்ப மெய் ஆசான் அவர்களின் அறிவான வார்த்தைகளை கேட்க கேட்க னம் அறிவில் பூரிப்பு உண்டாகி, அவரின் இரக்கத்தால் னித்திய செயலை பழகி, னித்திய அனுபவத்தைப் பெற்று கோடி சூரிய பிரகாசமாக விளங்ஙும் மெய்ப்பொருளை னாம் பெறலாம் என்ற உரையாடலுடன் அவை னிறைவேறியது.

**07-07-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

இறைவனை அறிய தடையாக இருக்கும் நம் மனதை அறிவாக மாற்றி ஜென்ம சாபல்யம் அருள்பவர் குருபிரான். இதுவே நவகிரகங்களின் ரகசியம்.

**வான்மதிக் கொரல் திருவாக்கியம் எண் : 72** அருனடைப்பாதம் னோவ அப்பரம்பொருள் உயிரைப் பற்றியும், ஜீவனை பற்றியும் அருளுகிறார்கள். தேகத்தின் அவசியத்தையும் ஜீவனே பஞ்ஞாட்சரமாக, காயத்ரியாக, கலிமாவாக உள்ளதையும், பிராணன் பிரணவத்தினால் இயங்குவதையும், இவற்றை உயிர்பிக்கும் பொருளாக ஜீவன் விளங்குவதையும் அருளுகிறார்கள்.

**காலந்நாட்டிய காரணப் பா பாடல் எண் : 34** **சீரிய மதங்கள் எல்லாம்**... என்ற பாடலுக்கு ஜீவசகோதரி லாவண்யா அவர்களின் புரிதல்: நம்முள் மதம் எனும் அகங்காரம் மற்றும் பல கோடியான எண்ணங்கள் உள்ளதையும், தங்கள் பட்டயமாகிய வாளாயுதத்தால் அவற்றை களைந்து மின்னல் கிரணமாகிய ஜீவதேகம் கொண்டு வித்தில்லா வித்தின் மூலம், அடி முடி

*தன் தேசிகரது னாமத்தைக் கீர்த்தித்தல் அனந்நராகிய சிவனது கீர்த்தனமே யாகின்றது.*
*தன் தேசிகரது னாமத்தைச் சிந்நித்தல் அனந்நராகிய சிவனது சிந்நனமே யாகின்றது.*
*~ குரு கீதை*



Copyright © AMNA Trust, Chennai 

நடுவாக உள்ள மனுமகன் வருகையை நம்மை காணச் செய்வதுடன் பிரம்மவித்தை மூலம் எமனை சிவனாக மாற்றுகிறார்கள்.

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய ஆசைப்பத்து பாடல் எண் (1 - 10)** ஜீவசகோதரி பூர்ணிமா அவர்களின் புரிதல்: நித்திய அறிவை அறிய விடாமல் தடுப்பது மனம். குருபெருமான் மூலம் நரனை மனுவாக மாற்றி, பிறவாமை நிலை பெறுவதைக் குறித்தே பதிகங்களாக உள்ள 10 பாடல்களும் பாடப்பெற்றுள்ளது. *குருவே சிவனென கூறினன் நந்தி* எனும் திருமந்திர பாடலுக்கேற்ப ஜீவனாக இருப்பதை சிவமாக ஆக்குபவர் ஆக்கியோன். அவர்களே குருபிரான்.

**தேவாரம் - ஆவூர்பசுபதீச்சரம் பாடல் எண் 5: இதனையுஞ் சடையார் விடையார்**... என்ற பாடலுக்கு ஜீவசகோதரி சண்முகப்பிரியா அவர்களின் புரிதல் : தன்னுயிர் போல் பிற உயிரை நேசிக்கும் ஊர் ஆவூர். அன்பே சிவமாகிய சிவன், சடையராக, விடையரெனும் விடுதலையாகிய முத்தி அளிப்பவராக உள்ளார். நம் பிறவிப்பிணி மாற்றி கைலாயம் சென்றுவர பழகும் செயலே ஆவூர்பசுபதீச்சரம். *குருவின் அமுத மொழிகள்: சடையர் என்பது சிவனின் நாமம். அவரவரின் சொத்தாகிய சடையெனும் சந்திர-சூரிய-நட்சத்திரங்கள் உள்ள ஞான ஆகாயப் பெருவெளியை சீராக்கி கங்குல் பகலற்ற இடத்தில் நம்மை ஏற்றி வைப்பவரே சடையன். ஜீவனின் ரகசியமே பசுபதீச்சரம்.*

**சிவானந்த போதம் :** வள்ளலார் போதம் என்பதை ஆறு அந்தங்களாக அருளியுள்ளார். போத நூல் கொண்டு போதிப்பவரே போதனாச்சாரியார், ஞானாசரியர், ஆசரியர்.

**நூல் பயன்:** இந்நூலில் உள்ள பாடல்களின் மூலம் கேள்வி கேட்பதும் பதில் சொல்வதும் **அறிவு** வடிவாக விளங்கும் ஆசானாகும். முதலில் பிறவி எடுத்ததின் பலன் பற்றி அறிவிக்கின்றது. முக்தி என்பது மனிதனுக்கு மட்டுமே ! ஜீவன்முக்தி அடையவே பிரம்மப்பொருளானது மனுத்தலையில் உள்ளது. நித்திய சொர்க்கப்பதி வாழ்வைக் குறித்தே வேதங்கள் கூறுகின்றன. இறைவனின் கையேடாகிய விதியால் அவரவர் வினைக்கேற்ப தேகம் உண்டாகிறது. சஞ்சலமனதை சீர் செய்யவே சரியை, கிரியை உண்டாக்கப்பெற்றது. குருபிரான், இந்த அழிவுடலாகிய பிரளயத்திலிருந்து நின்றதோர் பிரளய அதிசயத்தை காண வைக்கிறார்கள். வேதங்களைப் படிப்பதால், அர்ஜுனனுக்கு கிட்டியது போல் விஸ்வரூப காட்சி யாருக்கும் கிட்டுவதில்லை. பரத்துடைய வாழ்வை சீடன் சாராமல் அழி உடலையே தான் என்றெண்ணி உயிர் விடும்போது வினை வழி நுழைவதையும் குருபிரான் அறிவிக்கிறார்கள். வினையை விதைக்கும் மனதினால் புல், பூடு, கணங்கள், பல்விருகம், பாம்பு, வல்லசுரராக இருந்த நரனை சங்காரம் செய்து, சாகாக்கல்வி மூலம் மனுவாக மாற்றி கிரகக்கோள்களை விலக்கி அனுக்கிரகம் செய்கிறார்கள். அரிதிலும் அரிதான மானிடச்சட்டை எடுத்த நாம் ஒரு பெரியோரை சார்ந்து, நல்வினை-தீவினை அறிந்து, தேவ பிறப்படைந்து, வினை அறுக்கும் பிரம்மவித்தையைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

*நவக்கிரக சேத்ராடனம் பற்றி ஜீவசகோதரர் விஜயகுமார் அவர்களின் புரிதல்:*

குருபிரானுடன் ஞானத்தமிழ் பெற்ற மக்கள் ஜூன் மாதம் 25, 26 தேதிகளில் நவக்கிரக ஸ்தலங்கள் சென்று வந்த நிகழ்வுகள்: நம் சிரசில் விளங்கும் நவக்கிரகங்களை ஆசான் அருளால் அறியலாம். ஜென்ம சாபல்ய சாப விமோசனம் பெறுவதை விவரிப்பதே நவக்கிரக கோயில் விசேஷம். நவ கிரகங்களுக்கும் வாகனம், வர்ணம், நவரத்தினங்களும் உண்டு. பத்தாவது இடத்தில் உள்ள தலைவனாகிய மனம் திரும்பினால் ஒன்பது கிரகங்களும் அவன் சொல்படி கேட்கும். நரனை சங்காரம் செய்து மனுவாக மாற்றி கிரகஸ்தனாக ஆசான் ஆக்கிவைக்கிறார்கள். சாகாக்கல்வியும், மரணமிலாப்பெருவாழ்வும் ஆதி மார்க்க நீதி அவையின் அங்கத்தினர்களின் செயலாக உள்ளது.



Copyright © AMNA Trust, Chennai 

*நவக்கிரக சேத்ராடனம் பற்றி ஜீவசகோதரி தபேஸ்வரி அவர்களின் புரிதல்:*

நவக்கிரக ஸ்தலங்களின் தலவரலாறு, மூலவர், தாயார் பற்றிய விவரங்களைக் கூறி, கோயில் தத்துவங்களை குருபிரான் கருணையினால் காலச்சக்கரத்திற்கு உட்பட்ட மனம் கடந்து கங்குல் பகலற்ற இறைவன் இருக்கும் இடம் சேர்க்கும் குருவின் பாதம் பணிவோம்.

*நவக்கிரக சேத்ராடனம் பற்றி ஜீவசகோதரர் வடிவேலன் அவர்களின் புரிதல்:*

**காலக்கி ரகங்ஙள் சூழ்ந்நவங்ஙே**
**கோளரி வாளாகி னின்றவரே**

அகத்தில் கிரகங்களை அஸ்தமிக்கச் செய்யும் செயலை புறத்தில் கோயில்களில் உள்ளதையும், கும்பகோணம் - சாகாத்தலை எனும் கும்பம் கோணத்தில் உள்ளதையும் அருளினார்கள். காலச்சக்கரமானது புதுப்பிக்கப்பெற வேண்டி இருப்பதையும், புதுப்பிக்கப் பெறப்போவதையும், ஆறாம் அறிவை அறிந்த பின்னரே அறிய முடியும். மூலவர் ஸ்தானத்தில் கேதுவாகிய மனம் இன்றி, நல்ல மனமாகிய ராகு இருப்பதே மேன்மையான நன்மை என்பதை தாயின் மிக்காங்கருணையுடன் குருபிரான் அருளினார்கள். வாயுணவற்ற தூலம் சாவது போல், புகழுடம்பு பெற்றவன் பெற்றவரிடத்து செவியுணவு பெறாவிடில் புகழுடம்பு போய்ப் பொய்யுடம்பாம் மகனே உஜார் என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.



***திரு. சாலை ரவி அப்பா அவர்கள்***
***நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை***

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:** *சாலை தமிழ்* - முன்னே துவர்க்கும் பின்னே இனிக்கும் பாஷையில் அதன் ஏழு நிலைகள் கடந்து, இரண்டு சேர்ந்து நவநீதமாகிற நிலையும், நபுசு சிபத்துக்களின் நிலையும் தேரையர், ஔவையார், தொல்காப்பியர், அகத்தியர், வள்ளல் பெருமான் அருளிய சான்றுகளுடன் தமிழ்க்கடவுள் முருகன் மூலம், தமிழின் ரகசியமும் சொல்லியுள்ளோம். தமிழின் ஒரு பகுதியே நவக்கிரக கோள் ரகசியம். கிரகங்களை தூளாக்கிய நிலை கை கொண்டவர்களே கிரகஸ்தன். வேத சாட்சியாக, வேத லட்சணத்தோடு, பரிசுத்த ஆவித்தெய்வம் பரம்பொருள் மெய்வழி சாலை ஆண்டவர்களின் திருவடிகளை போற்றி வணங்கி அவர்களின் திருவடிப் பெருமையை முன்வைத்தே ஆதி மார்க்க னீதி அவை நடைபெறுகிறது என அருளி அவையை நிறைவு செய்தார்கள்.

**09-07-2022 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்**

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

**பக்ரீத்:** பக்ரீத் பண்டிகை என்பது இஸ்லாமிய மக்கள் புனித ஹஜ் பயணத்தை முடிக்கும் தியாகத் திருநாளாகும். நபி இப்ராஹிம் தன் மகனையும், சைவ சமய சிறுதொண்டர் தன் மகனையும் இறைவனுக்கு பலியிட முனைந்த தத்துவம் என்பது, வினைகளை விதைக்கும் அழி அவா கலியனாகிய மனதை பலியிடும் செயலாகும்.


Copyright © AMNA Trust, Chennai

**ஐந்து கடமைகள்:** 1.தொழுகை - மெய்வணக்கம் 2. ஜகாத் - தர்மம் செய்தல் 3. குர்பானி – பலியிடுதல் 4. நோன்பு - பத்தியம் 5. ஹஜ் யாத்திரை- புனித பயணம்.

**ஆறு நம்பிக்கைகள்:** 1. இறைவன் ஒருவன் உண்டு 2. அவர்தம் சிபாரிசுக்குரிய தீர்க்கதரிசிகள் உண்டு 3. அடியார்கள் உண்டு 4. வேதம் உண்டு 5. சொக்கம், நரகம் உண்டு 6. தீர்ப்பு நாள் உண்டு.

இந்த ஆறு நம்பிக்கைகளும், ஐந்து கடமைகளும் இஸ்லாமியருக்கு மட்டுமல்ல, மனுத்தலை அனைவருக்கும் உரியது என்பது வேதத்தீர்ப்பு.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் 97:** மன இருளாகிய இருதயத்தின் இருளை கிழித்து அதில் சிவன் எனும் வாடாத தீபத்தை ஏற்றும் அரும்பெரும் செயலைச் செய்பவர் குருபிரான். குருவின் நாதமாகிய அறிவை முன்வைத்து நம் மனதை பின் வைத்து நடந்தால், அஞ்ஞானம் அணுகாத தெளிந்த உள்ளத்தோடு மனப்பாரமற்று, கவலையற்ற மெய்ஞ்ஞான வாழ்வு வாழலாம். ஏனெனில், மனக்கவலையே உடலாகிய பூமிக்கு பாரமாக உள்ளது. இதையே சத்தியவேதத்தில் *வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்* என அருளப்பட்டுள்ளது.

**காலந்நாட்டிய காரணப் பா பாடல் எண் : 35 ஏறி மின்னலி யங்ஙிடும் போலவாய்...** எனத் தொடங்கும் பாடலுக்கு *ஜீவசகோதரி லாவண்யா அவர்களின் புரிதல்* : மழை வரும்முன் மின்னல் தோன்றுவது போல், நம்மை கவர்ந்து செல்ல காலன் வரும்முன் ஒளியாகிய ஜீவதேகத்தில் குடியேற்றி வைப்பவரே குருபிரான். மெய்குருவானவர் மின்னல் போல அரை நொடிக்குள் மலமகற்றும் தீட்சை அளித்து, எமன் கையில் இருந்து தப்புவித்து சிவன் கையில் ஆக்கும் பிரம்மவித்தைச் செயலே சாவருமுன் சாகப்பழகும் சன்மார்க்க செயலாகும்.

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய ஆசைப்பத்து பாடல் எண் 1: வைப்பு மாடென்றும் மாணிக்கத் தொளியென்று...** எனத் தொடங்கும் பாடலுக்கு *ஜீவசகோதரி பூர்ணிமா அவர்களின் புரிதல்* : வைப்பு என்பது நிதி. சிவநிதியாகிய அமானித செல்வத்தை புலன்வழியில் வீணாக்கி, வாழ்நாளைப் போக்கி, உலக மாயையில் வீழ்ந்தவனை, குருபிரான் தன் பெருங்கருணையால் மீட்டு ஒப்பில்லா இறைதிருவடியில் சேர்க்கிறார்கள்.

**குருபெருமான் வர்ஷிப்பு:** நரனாக இருந்தவனை அதிசயப் புதிய மனிதனாக ஆக்கி, ஓசை கொண்ட நடனத்தால் மனுஈசன் ஆகும் செயலே உலக அதிசயத்துக்கெல்லாம் அதிசயம். பூவில் மணம் போல், பாலில் நெய் போல், விறகில் தீ போல் சூட்சத்தில் சூட்சமாக தன்னுள் இலங்கும் மாமணி ஜோதியன், அவரவர் நாமமாக வீற்றிருக்கும் இறைபொருள், அது தான் தான் என உணர்பவன் இறைநிலை பெற்றவன். தூங்கும் போது புற நினைவற்று உள் ஒடுங்கும் சுகம்போல் தூங்காமல் தூங்கி புற நினைவற்று மனம் லயமாகி தாய்மடியாகிய திருவடியில் தஞ்சமடைந்து, மனம் சும்மா இருப்பதே தன்னையறிதல் என்பதாகும்.

**தேவாரம் - ஆவூர்பசுபதீச்சரம் பாடல் எண் 6: குற்ற மறுத்தார் குணத்தினுள்ளார்...** எனத் தொடங்கும் பாடலுக்கு ஜீவசகோதரி சண்முகப்பிரியா அவர்களின் புரிதல் : புலன்வழிப் பற்றி ஓடி வயது வீணாவது குற்றம். மூன்றாவது கண்ணாகிய அகக்கண்ணைத் திறந்து வயது வாழ்நாளை மீட்கும் புண்ணியச் செயலில் ஆக்கி வைப்பவர் குருபிரான்.

**குருபெருமான் வர்ஷிப்பு:** நம் குற்றம் மறந்து குணமாகக் கொள்ளும் குருபிரானே சிவமாக்கும் அன்பின் ரகசியத்தை அறிவிப்பார்கள். நம்மிடத்தில் மூன்றாவது கண்ணாகிய நெற்றிக் கண்ணைத் திறக்கும் குருபிரானே நெற்றிக் கண்ணராகிய சிவபெருமான்.

**சிவானந்த போதம்:** மனிதர்கள், பார்ப்பதற்கு மனுத்தோற்றத்தில் இருந்தாலும் குணத்தால் கல், மரம், நீர்வாழ் ஜாதி, பறவை, விலங்கு என



Copyright © AMNA Trust, Chennai

பலவகையாக இருக்கிறார்கள். எண்ணம் பல கோடியாய் விரிந்து பல கோடி பிறப்பு எடுக்க வைக்கிறது. மனம்-வாக்கு-காயம் இம்மூன்றில் ஆணவம்-கன்மம்-மாயை எனும் மும்மலங்கள் மயக்கத்தை உண்டாக்கி, பிறவிச் சுழலில் சிக்கவைக்கிறது. ***முந்தைய ஜென்மம் முந்தைய மனம் என்பது ஆண்டவர்கள் திருவாக்கு.*** மனதின் மூலம் உண்டாகும் பிறப்பாகிய வினையை அறுக்க வந்ததுவே அமரன் எனும் தோற்றமாகும். மெய்குருபிரான் நமது மனக்கண் பூட்டைத் திறந்து, மெய்வணக்கம் மூலம் மனம் அலையாத அறச்செயலைப் பழக்கி, வினையை அறுத்து பேரின்ப வீட்டில் குடியேற்றி வைக்கிறார்கள். தெளிவு குருவின் திருமேனி காண்டல், திருவார்த்தை கேட்டல், திருனாமம் செப்பல், திருவுரு சிந்தித்தல் என்பது வினையறுக்கும் செயலைக் குறிப்பதாகும்.

ஐம்புல நுகர்வால் கீழ்நோக்காக புறத்தில் பற்று வைக்கும் மனமே பேய் அறிவு. ஐம்புல நுகர்வால் அகமுகமாக மேல்நோக்காக ஐம்புலக்கதவை அடைக்கும் செயலே பேரறிவு. மனுதோற்றத்தில் வரும் வானவராகிய குருபிரானின் பொருளாகிய வாக்கின் மூலம் னீதியெனும் நெற்றிக்கண் திறந்து, பிறப்பறுத்து, பிறவாமை பெற வேண்டும் என அறிவாகிய ஆசான் மனமாகிய சீடனுக்கு கூறும் உபதேசமே சிவானந்த போதம்.

**இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு** எனும் திருக்குறளுக்கு ஏற்ப இன்று இத்தேவ செய்தியானது ஆதி மார்க்க னீதி அவையின் மூலம் மக்களுக்கு வர்ஷிக்கும் பரிசுத்த ஆவி தெய்வத்தின் பொற்பாதம் போற்றி குருபிரான் அவையை னிறைவு செய்தார்கள்.

**10-07-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. மணிமொழி மஞ்சுநாதன்**

**அந்த னாளில் அணைத்தெனை யாட்கொண்டு**
**விந்நை வீசும்வி ரிகதிர் ஏற்றியே**
**கந்நம் வீசுங்ங லாபமெ னவந்த**
**தந்நை தாயேத னிகையென் னாதரே**

என்ற தோத்திரப் பாடலை தொடர்ந்து *ஜீவசகோதரர் கௌதம் அவர்களின் புரிதல்:* னாள் என்பது காலத்திற்குள் அடக்கம். காலக் கிரகங்களால் சூழ்ந்துள்ள நமது வயது வாழ்நாளை மீட்டுத்தந்து, காலம் இல்லாத இடத்தில் ஏற்றி, கோள் அரி வாளாக நின்று வழிநடத்தும் அறிவு வடிவே ஆசான். **னாள் அது ஒன்று போல் காட்டி உயிர் ஈறும் வாள் என உணர்வார் பெறின்** எனும் திருக்குறளுக்கு ஏற்ப, மெய்ஆசான் அருளால் மனம் அடங்கும் பிரம்மவித்தை செயலை பழகினால், வரும் னாட்கள் எல்லாம் நலநாளான திருனாளாகும்.

திருவை அறிந்து திருவடி நிலையை அடைந்து, திரு எனும் இமையா நாட்டில் குடியேறி வாழும் மெய்ச்செயல் கொண்ட குருபிரான் அவர்களின் பெருங்கருணை, பேரருள் பேரிரக்கமே நம்மை வைகறை ஜீவ வாழ்வில் ஏற்றி வைக்கிறது. அறியாமையில் சென்ற வீணான னாட்களை ஆசான் அவர்கள் மீட்டுத் தந்து, வீணது வாகிடாமல் மேலவரிடத்தில் சாரச்செய்து ஊண்சுவை இருதயத்தில் உறைந்த னன்னிலமும் காட்டி, போன னாள் மீண்டங்கேறச் செய்து பேரின்ப வடிவத்துடன் நம் ஊனங்கள் அனைத்தும் தேய்ந்து நமது புகழை வானம் பாயச் செய்கிறார்கள்.

**சென்றனாட் சென்றிட் டாலும் செல்லுனாட் சென்றி டாது**
**னன்றுள னாளே யின்னாள் ஞானனாளெனத்தேர்ந் நுள்ளம்**

என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**விந்தை (அதிசயம்) :** நம்முள் ஒரு தலைமுறை காலம் இருந்து நம்மை வாழவைத்து கொண்டிருக்கும் அழியாத பொருளாக வித்தில்லா வித்தாக



Copyright © AMNA Trust, Chennai

என்றும் பத்து வயதான கன்னியாக விளங்கும் அறிவெனும் அமானிதப் பொருளை முச்சுடராக நம்முள் காண்பதுவே அதிசயம்.

**வைப்பு (னிதி):** னிதி என்பது அழியாத னித்திய செல்வம். இதை ஆண்டவர்கள், *அரண் புகு சதுர்மறையிலே அமைந்த கேள்விகள் அது அத்தனைக்கோர் வைப்பென்றமைந்த* என அருளுகிறார்கள். ஆசான் அவர்களின் ஒரு மொழி கீதை நமக்கு செவிச் செல்வமாக பேரின்பத்தை அருளும் னீதி நிறைந்த பரம்பொருளாக, னித்திய னிதியாக, வேதமாக, கிரந்தமாக, ஓங்கார நாதமாக, வித்தியாதத்துவமாக, அமானிதமாக எதற்கும் முதலான பெருனிலை வைப்பாக இருப்பதையே ஆண்டவர்கள், *முன்னாள் யானிம் முதல் அறியாமல் பன்னாளந்தோ பாரினிலடிமை* என அருளியுள்ளார்கள். குறைக்க முடியா சேம னிதியின் குடி வீடேற அறிவு, அறியாமையை விளக்கி என்றும் அழியாத அறிவை நம் தலையில் துலக்கி வைப்பவர்களே குருபிரான். ஆசான் அவர்களின் அடையாளம் அவர்களின் அருளமுத னாதமே. அதுவே ஒவ்வொரு மனுத் தலையிலும் நமசிவாயமாக உள்ளது. சிவமயப் பொருளே ஜீவனாக திருச்சிற்றம்பலப் பொருளாக உள்ளது. அந்த னாதம் இன்று நம் ஆதி மார்க்க நீதி அவையில் நித்தமும் நம் அனைவரையும் தேவனாதத்தில் திளைக்க வைத்து மெய்உணர்வுடைய மக்களாக ஆக்கி வருகிறது.

**கவனம்:** நமது கவனம் புறத்தில் மனமாக அறியாமையிலும், ஆசான் அவர்களின் கவனம் அகத்தில் அறிவாகவும் கவனாதியாகவும் உள்ளது. அந்த அறிவே னபுசாக உள்ள மனதை திருப்பி, சிபத்தெனும் அறிவின் மீது கவனம் பாயவைத்து நம்மை மாறாதிருக்க வந்த மறையோன் சொரூபமாக, அழியாச் சிறப்புடைய ஆண்டோன் சொரூபமாக, என்றும் இருக்க வந்த ஈசன் சொரூபமாக ஆக்கி வைக்கிறார்கள். கவனக்குளிகை கொண்டே ஆன்றோர், பெரியோர், தேவர்கள் யாவரும் அன்னம், மயில், வாசி என்ற குதிரை ஏறி கைலாயம், வைகுண்டம், பரமண்டலம், மெகராஜ் என்ற நிலைகளை அடைந்தார்கள் என ஆண்டவர்கள் வேதத்தில் அருளியுள்ளார்கள்.

**குணம்:** *பாய்மன வீட்டில் பேய் குடி இருக்கும் .* கீழ் நோக்கமாகச் செல்வதே நீருக்கு ஒப்பான மனதின் குணம். பஞ்சு பூதங்களுக்கும் உள்ள குணம்| நம் அகத்தில் எப்படி உள்ளது என உணரவைக்கும் ஆசானே முக்குணம் கடந்த சொற்குணா உற்பரனாக னிர்குணாலங்கிர்தராக விளங்குபவர். ஒரு மொழி கீதையின் உற்பனத் தாயகமாக வந்து குணம் குடி கொண்டங்கேறும் வாழ்வில் நம்மை எழுதாத எழுத்தால் ஒரு னான்கதை இருத்தி ஓதச் செய்து, மறுபிறப்பாளனாக ஆக்கி பிறவாமை எனும் பேரின்பத்தை அருள்கிறார்கள். வாழும்போதே வைகுண்டமெனும் மெய்குண்டம் காணும் மெய்ச்செயலே கொடியேற்றம். புண்ணியத்தின் உருவான ஆசானிடத்தில் நம் ஐம்புலன்களும் அடங்கும் செயலே ***ஐம்மணிப் பொதிகை.***

**இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு**

இருவினையும் அறியவைத்து நாம் ஏன் பிறந்தோம், நம் கதி முடிவில் என்ன ஆகிறது என ஆய்ந்து தேடுபவனே மனு, இதை தேடாதவனே னரன். அந்த னரன் மனுவாகி தேவனாகும் செயலையே **தேவராய்ப் பிறக்கத் தேர் ஐந்து மந்திரம்** என *அறிவு அறி பாடத்தில்* ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**நம்பிக்கை:** ஆசான் அவர்களின் வாய்மையே அழிவில் இருந்து நம்மைக் காக்கும் நம்பிக்கை. ஈமான் எனும் ஆறுவகை நம்பிக்கையை கைக்கொண்ட அவர்கள் நமக்கு போதிப்பது நன்னம்பிக்கை வைப்பு எனும் பாவ விமோசன திருமந்திரம். பாவத்தின் சம்பளம் மரணம். அம்மரணமில்லா பெருவாழ்வே புண்ணியம். புராதனம் கண்ட புண்ணியத்தின் உருவாகிய மறைமொழி மாந்தரின் நிறைமொழியே நம்மை புண்ணிய உருவாக்கி வைக்கும். ஆசானின் அருளுமுதம் உண்ண உண்ண நம்மிடமுள்ள முச்சுடராகிய ஜீவ குழந்தை வளப்பமுற்று வளர்கிறது. சாவருமுன்



Copyright © AMNA Trust, Chennai

சாகப்பழகும் பிரம்மவித்தை செயலில் நம்மைப் பழக்கி, எங்கும் நிறைந்த அழியாத இறைபொருளாகிய ஒன்றை நம்முள் காட்டித்தரும் சாயுச்சிய அரசராகிய குருபெருமான் திருவடிகளைப் போற்றி வணங்குவோம்.

**10-07-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்**

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

**துப்புரவாளர்:** துப்பு என்பது இரகசியம் (உளவு). மனிதனின் அகமிய வாழ்க்கை பயணத்தின் உளவு அறிந்தவர்களே ஆசான். ஆசானின் பொற்பாதம் பணிந்து அவர்கள் அருளும் உளவுகளின் படி நடந்து அகமுகமாக பயணித்தால் நம் அறியாமைகள் அகன்று அறிவுத் தெளிவு உண்டாகும்.

**னவக்கிரகம் :** னவக்கிரக கோள் மாற்றும் னாத சோதிடராகிய ஆசானின் அருளமுதமே இல்லற தர்மத்தை உணர்த்தி கிரகஸ்தன் என்ற மேலான உன்னதத்தில் ஏற்றி வைக்கும். னவக்கிரகத்தின் இரகசியத்தை உணர்த்தும் ஞான முறையீடு பாடல் :

**மவுன மாமணி மாடத்துள் ளேறவும்**
**லவண மணிமந்ர அவுஷதம் கொள்ளவும் ....**

லவண என்பது னவக்கிரகங்களை குறிப்பதாகவும், ஒன்பது வகை உப்பின் இரகசியமாகவும், ரசவாதம் எனும் விஷத்தை அமிர்தமாக மாற்றக் கூடிய செயலாகவும் இருப்பதால் மணிமந்ர அவுஷதம் என கூறப்பெறுகிறது. நவக்கிரகங்களில் பாம்பாக கருதப்படும் ராகு, கேது காலனின் கையகமாகும். ஒன்பது கிரகங்கள், பனிரெண்டு ராசிகள், இருபத்தேழு நட்சத்திரங்களாக இறைவன் வடிவமைத்ததின் சூட்சம னிலைகளை நம்முள் அறிவித்து செயலாக்கி வைப்பவரே அனுக்கிரகன் - குரு.

**புல்லும் பூமியு லகுள்ள னாளெலாம் ...** எனத் தொடங்கும் குருஸ்தோத்திரப் பாடலைத் தொடர்ந்து *ஜீவசகோதரர் மகேஷ் அவர்களின் புரிதல்:*

*குருபகவான் மந்திரம் :*

**குரு பிரம்மா குரு விஷ்ணு**
**குரு தேவோ மகேஸ்வரஹ**
**குரு சாஷாத் பரப்பிரம்மா**
**தஸ்மை ஸ்ரீகுருவே நமஹ**

பிரம்மா = நான் முகன் ; விஷ்ணு = தண்ணீர் அம்சம் ; மகேஸ்வர = வாயு தத்துவம் ;
பரப்பிரம்மா = பரமாத்மா என இவையனைத்தையும் மனிதனின் இருதயத்தில் அறிய வைப்பவரே குரு. இம் மெய்ச்செயலை *தேடிவ ரும்பொருளே – யாவர்க்கும் தெய்வத்தி ருவுளமே...* என்ற தெய்வத்தேடு கூடகம் பாடலில் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**உபதேசம் :** உபதேசம் பெற்றான் என்றால் ஜீவதேக தெரிசனம், விஸ்வரூப தெரிசனம் பெற்றான் ஈசனுடைய தேகம் பெற்றான் என்றே பொருள் என அருளப்பெற்றிருக்கும் தெய்வ வாக்கிற்கிணங்க, ஜீவ பண்டிதராகிய ஆசானின் உபதேசத்தை பெற்று ஜீவதேக இரகசியங்களை அறிந்து, இக்கடத்தை னீக்கி அக்கடத்துள் ஆகும் பிரம்மவித்தை செயலை பழகித் தேர்ந்தவர்கள் அடையும் பெரும் பலனே விஸ்வரூப தரிசனை. அத்தெய்வீக தரிசனையை அளிப்பவரே ஆசான்.



Copyright © AMNA Trust, Chennai

ஆசானின் **னா** ஆடினால் மட்டுமே பேரின்பம் அளிக்கக்கூடிய பிரணவ நாட்டிற்குள் சென்று பேரின்பத்தை பெற முடியும்.

**அந்நமுள்ள பிரணவத்தை யறிய வென்றா**
**லன்னாடு சென்றுவரு மாசான் வேண்டும்**

**மனம்பூத்த திருமேனி மதிபூத்து வொளிர்னாவும்...** எனத் தொடங்கும் குருமணி மாலை தோத்திரப் பாடலைத் தொடர்ந்து *ஜீவசகோதரி புன்னகை அவர்களின் புரிதல்:*

**அதிசயம் :** அதிசய புதிய மனிதன் நீ என்ற தெய்வவாக்கின்படி, இறைவனை தன்னுள் அறிவதற்கான சக்தியினை தனிச்சீதனமாகப் பெற்றவன் மனிதன். கடவுளை யார் என்று அறிவதற்கும் கடவுளை வணங்குவதற்கும், கடவுளாகவே ஆவதற்கும் தகுதி உள்ளவன் மனிதன் மட்டுமே. ஞானம் என்னும் பரமபத நிலையை அறியும் சக்தி உடையவனாக படைக்கப்பட்டவன் மனிதன். மனு ஈசனாக வரும் குருபிரான் இரக்கம் கொண்டு நம்மை சீடனாக ஏற்றுக்கொண்ட பிறகே அதிசய புதிய மனிதன் நாம் என்பதை உணர முடியும் என்ற பகிர்தலுடன் அவை னிகழ்வுகள் இனிதே னிறைவு பெற்றது.

## 14-07-2022 ~ வியாழக்கிழமை சபை
## தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

**வான்மதிக் கொரல் திருவாக்கியம் எண் : 75** ஒருவர் அன்றாடத் தேவைக்கென பொருள் ஈட்டுவது போல் ஆண்டவர்கள் நமக்காக தவத்திற்கு சென்று ஊண், உறக்கம், னாசிக்கு வெளியே மூச்சு ஓடாத தவநிலை பெற்று நம் பாவங்களை அகற்றி புண்ணியத்தை அருள்கிறார்கள்.

**னாசிவெளி யேமூச்சு**
**ஓடாத்த வத்தாலே**
**மறலிவெருண் டோடுகின்ற**
**வான்குலத்தி லேபிறந்து**
**வாழ்வாய்சி ரஞ்ஞீவியாய்**
**வரைந்நேன் பெருமகனே** என்ற ஆசீர்பாதமும் வழங்கி இருக்கிறார்கள்.

**காலந் நாட்டிய காரணப்பா பாடல் எண் 30 - மழைதனைக் காட்டு மின்னல்...** எனத் தொடங்கும் பாடலுக்கு *ஜீவசகோதரி லாவண்யா அவர்களின் புரிதல் :* மழை வரும் முன் மின்னல் தோன்றி மறைவது போல் மறையாமல், ஆசான் அவர்களின் அமுதனா வர்ஷிப்பானது உலக மக்களுக்கு பிரம்மவித்தை செயலை போதித்து மாறாது மறையாது நிலைத்து விளங்குகிறது. இதனை மின்னல் கிரணமாகிய ஜீவதேகத்தைக் காட்டித் தருகிறவர்கள் உனக்குக் காட்டித் தந்து, பெறுகிற வண்ணம் னீ பெற்று, அதனுள் னாள்தோறும் னுழைந்து னுழைந்து பழகுவதே சன்மார்க்கம் என திருமெய்ஞ்ஞானக் கொரலில் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். னிலைத்த வான் முகடாகிய மெய்வழியெனும் மேட்டில் ஏற்றி வைக்க கூப்பிடுமாம் மின்வீசி கொடியின் உச்சியாக விளங்கும் ஆசானின் னாதமே என்றென்றும் நிலைத்து மக்களுக்கு ஞானச் செல்வத்தை வாரி வழங்குகிறது.

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் – அதிசயப்பத்து - முக்தி இலக்கணம் பாடல் எண் : 2 நீதி யாவன யாவவையும் நினைக்கிலேன்...** எனத் தொடங்கும் பாடலுக்கு *ஜீவசகோதரி பூர்ணிமா அவர்களின் புரிதல் :* இறைவன் வகுத்த நீதியின் படி மனிதன் அன்றி மற்ற எண்பத்திநான்கு



Copyright © AMNA Trust, Chennai

நூறாயிரம் ஜீவபேதங்களும் வாழ்கின்றன. னீதியெனும் பொருளானவன், னீதி னிறைந்த பரம்பொருள் என்றெல்லாம் மனுவை வேதம் கூறினாலும், ஆறறிவு கொண்ட மனிதன் தன் நீதியாகிய கடமையை அறியாமல் இருப்பதை,

**பரமபத வாழ்வினுக்கே**
**பாரில் படைத்த மனு**
**இதைவிட்டு னாறிச்செத்து**
**எறிதீட்டாய்ப் போறாயே**

என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். அழிஅவா எண்ணத்தால் துன்பமாகிய னரகத்தில் இருந்து நம்மை மாற்ற சிவசக்தி பாகனாக வரும் குருபிரானிடம் சரணடைந்து நம் சொந்த தேகத்தில் குடியேறி ஆனந்தத்தில் அதி ஜெயத்தில் திளைத்து வாழ்வோமாக.

**திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம் – திருஆவூர் பசுபதியீச்சரம் பாடல் எண் : 7 நீறுடை யார்நெடு மால்வணங்கு...** எனத் தொடங்கும் பாடலுக்கு *ஜீவசகோதரி சண்முகப்பிரியா அவர்களின் புரிதல் :*

**திருநீறு:** *கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில் என திருமந்திரத்திலும், ஒரு தெய்வ ஆசானின் பிரம்மப் பிரகாசத் தீ, உன் பாவங்களை சுத்திகரித்து எமன் எல்லையில் வெற்றி காணச் செய்வதே விபூதி* என கோடாயிதக்கூரில் ஆண்டவர்களும் அருளியுள்ளார்கள்.

சடை என்பது ஆகாயப் பெருவெளியாக நம் அங்ஙக் குலங்களை ஆண்டு அரசு செய்து கொண்டிருக்கும் நினைவாகிய ராஜாவைக் குறிப்பதாகும். அதன் கோணலை மாற்றி னேர்மையில் ஆக்குகின்ற அறிவு ரூபக மந்நிரியே ஆசான். சிவபெருமான் சடையிலுள்ள பிறை, நட்சத்திரங்கள், கங்கை என்பதின் அகமிய ரகசியங்களை ஒரு மெய் ஆசான் மூலம் அறிந்து கொள்ளலாம். அவாவுடன் தாவும் மனதிற்கு மெய்யறிவு உதயம் காட்டி அகவிளைவில் குடியேற்றி வைக்கும் அசானின் திரு னா னடனமே பசுபதி யீச்சரமாக உள்ளது.

**சிவானந்த போதம்:** மனிதரிலும் பறவையுண்டு, விலங்ஙுண்டு, கல்லுண்டு பாடலைத் தொடர்ந்து –

*ஜீவசகோதரர் சங்கர்:* கோவில்களில் மயில், கருடன், காகம், அன்னப்பறவை, குதிரை, சிங்கம், புலி, பசு, மூஞ்ஞூறு போன்ற உயிரினங்கள் தெய்வ வாகனங்களாக உள்ளன. இவை பல்வேறு குணங்கள் கொண்ட மனிதர்கள் இருப்பதையும், இன்னும் பல மெய்ஞான உண்மைகளை உணர்த்தவும் இருக்கிறது என்பதை, ஒரு தெய்வ ஆசானின் அருள் வர்ஷிப்பின் மூலம் அறியலாம். காட்டிற்கு ராஜாவாக சிங்கம் விளங்க காரணம் அதனுடைய கர்ஜனையே. அது போல வானவராகிய சற்குரு பிரானின் னாதம் மக்களிடத்தில் முழங்கி அரசாட்சி செய்து தேவர்களாக மாற்றும் அரிய திருச்செயலைச் செய்கிறது எனும் பகிர்வுகளுடன் அவை நிறைவுற்றது.

### 16-07-2022 ~ சனிக்கிழமை சபை
### தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

**இணங்ஙிய சுபாவம் பார்த்து என்னிரு தயத்தினுள்ளே...** என்ற தோத்திரப்பாடலுடன் அவையானது இனிதே துவங்கியது.

*ஜீவசகோதரர் சங்கர்:* இணங்ஙிய சுபாவம் என்பது குருபிரானின் திருனோக்கிற்கு சீடன் இணங்ஙி நடக்கும் செயலாகும். ஜீவகுருவினிடத்து சீர்குளிர் காய்வோன் னிலையில் னின்று பழகும் சீடனுக்கு ஆறும் ஐந்தும்



Copyright © AMNA Trust, Chennai 

பதினோறு கடமைகளான, ஈமான் கோட்டையின் இருப்பறிவித்து, மெய்வணக்கத்தின் உன்னதத்தை உணர்த்தி துறவறம் என்ற பெருனிலையாகிய மனதை துறந்து வாழ்வதற்கான உளவையும் ஆசான் அருளுகிறார்கள்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண் - 98 :** கிருஷ்ண பரமாத்மா யுகந்தோறும் வருவேன் என்று கூறிய சத்திய வாக்கின்படி, இப்பூவுலகில் அவதரித்து நம்முன் வந்தாலும் தேகத்தை வைத்து அடையாளம் காணமுடியாது. அப்பரம்பொருளின் திருச்செயலை வைத்தே பகவான் என்பதை உணர முடியும். அப்படியான பிரம்மவித்தை செயல் நிகழும் எல்லையே குருக்ஷேத்திரம். மனதிற்கும் அறிவுக்கும் இடையில் நிகழும் மகாபாரதப்போரில் கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனருக்கு காட்டிய விஸ்வரூப தரிசனையானது நிகழ்ந்து கொண்டிருக்கும் குருக்ஷேத்திர எல்லையே *ஆதி மார்க்க னீதி அவை* என்பதற்கு அவையின் அங்கத்தினர்களே சாட்சி.

**காலந் நாட்டிய காரணப்பா பாடல் எண் 37 - சுத்த சத்திரியன் வீரம்...** எனத் தொடங்கும் பாடலுக்கு *ஜீவசகோதரி லாவண்யா அவர்களின் புரிதல் :* புலன் ஐந்தும் வென்றார் தம் வீரமாம் வீரம் என்ற வேத வாக்கின்படி, புலனுக்கு தலைவனாகிய மனதை போரிட்டு வெல்பவனே சத்திரியன் - வீரன். பிரம்ம சொரூபராகிய ஆசானே சத்திரியன் வடிவாக வந்து நம் அறியாமைகளை வெட்டி வீழ்த்தி சாயுச்சிய பதத்தில் ஏற்றி வைக்கிறார்கள்.

**சத்திரியன் போல்வடிவுத்**
**தோற்றமுன்னால் காண்பீர்**
**சாயுச்சிய பிரம்மமெனப்**
**பின்தெரிவீ ரம்மே**

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் - அதிசயப்பத்து பாடல் எண் : 3 முன்னை என்னுடை வல்வினை போயிட ...** எனத் தொடங்கும் பாடலுக்கு *ஜீவசகோதரி பூர்ணிமா அவர்களின் புரிதல் :* வல்வினைகளை அகற்றும் ஆசானின் அமிர்த வர்ஷிப்பை பற்றக்கூடிய செயலை உணர்த்துவதே அதிசயப் பத்தாகும். வள்ளல்பிரான் திருஅருட்பாவில் அருளியதாவது, கடவுள் சமூகம் அணுக்கள் னிறைந்ததாகவும் எட்டு அடுக்குகளாகவும் உள்ளது. ஒவ்வொரு அடுக்குகளாக இறங்கி வரும் போது தேவப் பிறப்பு, மனிதப்பிறப்பு என அவரவர் வினைக்கேற்ப தேகம் அளிக்கப்படுகிறது. குருபிரானின் அருட்கடாட்சத்தால் நம் வினைகள் நீங்கியவுடன் பிறவிச் சூழலிலிருந்து விடுதலை பெற்று பிறவாமை அடைகிறோம்.

**திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம் – திருஆவூர் பசுபதீச்சரம் பாடல் எண் : 8 வெண்டலை மாலை விரவிப்பூண்ட...** எனத் தொடங்கும் பாடலுக்கு *ஜீவசகோதரி சண்முகப்பிரியா அவர்களின் புரிதல் :* பிரம்மாவின் ஐந்தாவது தலையை கொய்து சூடிக்கொண்டவராகிய குருபிரான் நம் மீது இரக்கம் கொண்டு நான் எனும் அகங்காரத்தை வெட்டி வீழ்த்தி புழுத்தலையை வைரத்தலையாக மாற்றி வைக்கிறார்கள் என்பதையே இப்பாடல் உணர்த்துகிறது.

*ஜீவசகோதரி கல்பனா :* **விண்ணு மண்ணும் கதிர்மதியு மின்பனி தாரகையும் ...** என தொடங்கும் பாடலைத் தொடர்ந்து, இறைவன் படைத்த படைப்புகள் அனைத்தும் நம் தூலத்தின் சம்ரட்சணைக்காகவும் ஜீவனின் வளர்ச்சிக்காகவும் உதாரணம் காட்டி அறிவு புகட்டுவதற்காகவே படைக்கப்பெற்றது என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். உத்தம கீதை - விலங்கு, பறவை, ஊர்வனம், ஜலம் வாழ் ஜந்து, தருக்கினம் அனைத்தும் நமக்கு குருவாக நின்று பாடம் கற்பிக்கிறது. ஓரறிவு முதல் ஐயறிவு வரையிலான ஜீவராசிகளுக்கும் அவற்றின் குணம், குறி, செயல்களுக்கு ஏற்ப பல வகைகளாக படைக்கப்பெற்றுள்ளதின் னோக்கமாவது மனிதன் ஆறறிவின் சிறப்பை உணர்ந்து மேலாம்பரமான வாழ்க்கை அடைவதற்கே ஆகும்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரி ஜீவிதா :* **னவரத்தினங்களின் சிறப்பு :** உலகில் ஆயிரக்கணக்கான கற்கள் இருந்தாலும், னவரத்தினங்களே மிகச் சிறப்பு வாய்ந்ததாகவும், இறைவனுக்கு சாற்றும் ஆபரணங்களாகவும் உள்ளது. அவைகளாவன,

*சூரியன் - மாணிக்கம்*
*சந்திரன் - முத்து*
*செவ்வாய் - பவளம்*
*புதன் - மரகத பச்சை*
*வியாழன் - புஷ்பராகம்*
*வெள்ளி - வைரம்*
*சனி - நீலம்*
*ராகு - கோமேதகம்*
*கேது – வைடூரியம்*

பிரம்ம பிரகாச சாலை ஆண்டவர்கள் **பொங்கு மாங்கடற் சூழுலகமும் புவனமோ ரீரேழுமே...** எனும் மெய்ம்மண ஞானம் பாடலில் னவரத்தினத்தின் சிறப்பை அருளியுள்ளார்கள்.

**கல்லால மரம்: கல்லாலின் புடையமர்ந்து னான் மறை ஆறு அங்கம் ...** என தொடங்கும் பாடலைத் தொடர்ந்து, கல் என்பது அசைவற்றது, ஆலம் என்பது உடல், மரம் என்பது ஓரறிவு. அசைவற்ற பரம்பொருளாகவும், சைவத்திருமேனியாகவும், ஓரறிவாகவும் விளங்கும் குருபிரான் அமர்ந்திருக்கும் இடமே கல்லால மரம். கல்லால மரத்தின் கீழ் அமர்ந்திருந்த ஆதிபரமகுரு ஶ்ரீ தட்சணாமூர்த்தியே இன்று ஆதினாயகராக வந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

*ஜீவசகோதரி லாவண்யா :* உலகில் பலவகைப்பட்ட ஜீவராசிகள் இருக்கின்றன. அவற்றின் குணங்களை வைத்து பல வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. காக்கை - பகிர்ந்து உண்ணும் சிறப்புடையது. கழுகு - கூர்மையான பார்வை கொண்டது என மாறுபட்ட குணங்களுடன் ஓரறிவு முதல் ஐயறிவு வரையிலான ஜீவராசிகள் படைக்கப்பெற்றுள்ளது. அசைவற்ற குணக்குன்றாக விளங்கும் ஆசான் நம் முக்குணங்களை னிர்க்குணமாக மாற்றி னித்தியனாக படைக்கிறார்கள்.

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

**சிவானந்த போதம் பாடல் - பாடல் எண் : 10 - மனவாக்குக் காயந்நான் மருவும் செய்கை ....**
மனோ வாக்கு காயத்தால் வினை உண்டாகிறது. பூவில் மணம் ஒட்டி இருப்பது போல், மனம்-வாக்கு-காயத்தில் வினை ஒட்டி இருக்கிறது. எனவே தான் மனதை செலுத்துவதில் மிகுந்த ஜாக்கிரதை வேண்டும் என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். மறலியிடம் கொண்டு சேர்த்து பிறவியில் னுழைக்க காத்திருக்கும் வினையை போக்கும் வல்லபம் ஆசானின் திருக்கரத்தில் உள்ளது.

**சென்மந்நோறும் செய்த கன்மங்னடைத் தேற்றவந்த**
**சன்மார்க்க ரென்னாசான் சீர்பாதம் யான் மறவேன்** என்ற தெய்வத் திருப்பாடலுடன் குருபிரான் அவையை இனிதே னிறைவு செய்தார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

**17-07-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமா தியாகராஜன்**

*ஜீவசகோதரர் கௌதம் அவர்களின் வேதப் பகிர்வுகள்:*

**ஆத்தாளாய் வந்நெனக்கு அமுத மூட்டி**
**அணைத்தடிமை கொண்ட என்றன் அம்மா அம்மா...** எனும் தோத்திரப் பாடலைத் தொடர்ந்து,

**ஆத்தாள்:** ஆ+தாள் எனும் தாய் தான் நம்மை ஒரு தலைமுறை காலம் ரட்சிக்கிறாள் என்பதை அறியாமல், புறமாக ஓடும் மனதிற்கு அடிமையாய் உள்ளோம். பரமாத்ம சொரூபராக வரும் ஆசான் சொந்த வீடாகிய நம் ஜீவனை நம்மிடத்தில் காட்டி, அதன் மேல் நம் கவனம் பாய வைத்து அதில் வாழ வைக்கிறார்கள்.

**அக்ரஹாரம்:** ஜீவனாகிய அகரத்தை அறிந்தவர்களின் இருப்பிடமே அக்ரஹாரம். கரத்தால் திரிக்கபடாத பூனூல் அணிந்திருப்பவர்களே பிரம்மத்தை அறிந்த ஆசான். மும்மலம் எனும் ஆணவம், கன்மம், மாயை மூன்றும் ஆசானின் வாக்காகிய தீயால் கருகும் பொழுது முச்சுடர் தோன்றும். இதனை ஆண்டவர்கள் **மும்மலம் கருக முச்சுடர் தோன்றும்** என அறிவு அறி பாடத்தில் அருளியுள்ளார்கள். முகம் என்ற நடுக்கரு, தீன்முகம், பதிமுகம் என்பது நாம் நிலைக் கண்ணாடியில் காணும் முகமல்ல, அது அவரவருள் இருந்து ஆட்சி செய்யும் பத்துவயது கன்னியாக அம்மைபாதமாக இருக்கிறது.

**அத்வைதம்:** சைவப் பொருளான ஜீவனிலிருந்து வரும் அசையும் பொருளாகிய மனம் எனும் தாவுகின்ற குரங்கு குணம் கொண்டுதான் நாம் இவ்வுலக வாழ்க்கை வாழ்கிறோம். வந்தவேதமாகிய ஆசான் அவர்களே அவரவருள் ஏகபாத மூர்த்தியாக, ஆத்தாளாக உள்ள வேதப்பொருளை அறியவைத்து, அலையும் மனதை அறிவாக மாற்றி சைவ நிலையில் இரண்டறக் கலக்கச் செய்து, துவைதமாக உள்ள நம்மை அத்வைதமாக மாற்றுகிறார்கள். தொந்தி கணபதியாக, மணி வயிறாக, மூலாதாரமாக இருக்கும் ஜீவனின் உசும்புதலால் பஞ்ஞுபூதங்களும் சேர்ந்து அதன் துணை கொண்டே இத்தேகத்தை கட்டுகிறது. அதுவே பஞ்ஞுபூத தலையரசனாகவும், சர்வத்துக்கும் தாய் குடிலாகவும், சர்வ சத்துக்களுக்கும் பெட்டகமாகவும் உள்ளது.

**கோடாயிதக்கூர் :** ஆசான் இன்றி கல்வி வீடு பதம் காணமுடியாது. கூரான குருவருளாகிய ஆசானின் அறிவைக் கொண்டே நம் அஞ்ஞானக்கிழங்கானது அறுக்கப்பட்டு மெய்யறிவு தந்து மெய்யில் நம்மை குடியேற்றி வைக்கிறார்கள் என்ற பகிர்வுகளுடன் அவை நிறைவுற்றது.

**17-07-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. பானுமதி குமரேசன்**

**ஜலாலெனும் கடலும் ஜமாலெனும் கடலும் ...** என்ற குருமணி மாலை தோத்திரப் பாடலைத் தொடர்ந்து, *ஜீவசகோதர் ராஜமகேஷ் அவர்களின் புரிதல்:*

**பற்று (Attachment ):** உலகத்தில் உள்ள பலவகைப் பற்றுகளில் அசலான பற்று எது என்பது ஓர் மெய்ஆசானை அடைந்த பிறகுதான் நம்மால் அறிய முடிகிறது. இதற்கு சான்றாக, ஆதிமான்மியம் - ஜீவ சிம்மாசனப்பருவத்தில்

*அசலைக் காணீர் - விட்டுவிட்டீர் - அசல்த் தேகம் எடுத்திருக்க அதை விட்டுவிட்டு னகல்த் தேகத்தை னம்பி - னகல்க் கல்வி னவின்று - னகல்ப்*



Copyright © AMNA Trust, Chennai

*பட்டம் பெற்று னகல்ப் பொருள் வாழ்வினுக்கு னகல்த் தொழில் புரிந்து னகல்த் தெய்வத்தை னாடி - னகல்த் தவம் செய்து - னகல் இன்பத்தினை னுகர்ந்துகொண் டிருக்கும் னகல் உலகீரே - அசல் வாழைப்பழத்தை னீக்கி விட்டுவிட்டு - மரத்தினால்ச்செய்து சாயம் தீட்டியுள்ள னகல் பழத்தினை எடுத்து உண்ணுவோமா பிறவியரே - உண்ணவே மாட்டோம் - ஆனதினாலேதான் னான் என்னுடைய உன்னுடையதுமாகிய அசல்த் தெய்வத்தைக் காட்டி - அசல் பேசி - அசல் விருப்பம் தந்து - உங்களை என்னுடைய அசல் உலகத்துக்கு அசல் வாழ்வுபெற அழைக்க வந்நிருக்கிறேன் - இது என்னுடைய அசலான வார்த்தை - இதை அல்லத்தட்டுவீரேல் - ஓர் அரக்கன் வந்து உன்னை அவமானத்தி லாக்கி அலகையாக்க வருகிறான் - வந்நும் இருக்கிறான் - னான் சொல்கின்ற இது அசலே - இப்படிக்கி - னான் யார் தெரியுமா - னான்தான் மெய்வழி னாதன்* என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**நாட்டுப்பற்று :** அசலான னாடாகிய ஜீவதேகத்தில் குடியேறி வாழும் வாழ்வே அசலான நாட்டுப்பற்று ஆகும். இதையே, **பண்ணாகி யருங்ங்முதம் பொழியும் னாடு, பரமகுரு என்னாசான் பகர்ந்ந னாடு** என்று மெய்வழி னூல் பாடலில் அருளியுள்ளார்கள்.

**மொழிப்பற்று :** தமிழ் என்பது மொழி அல்ல. தமிழ் ஜீவனின் இரகசியம் ஆகும். தன் ஜீவன் மீது வைக்கும் பற்றே மெய்யான மொழிப்பற்று.

**உணவுப்பற்று:** ஆசானின் னாவிலிருந்து வரும் அருளமுத வர்ஷிப்பாகிய உணவை செவி மூலம் அருந்துவதே மெய்யான உணவுப்பற்று.

**இயற்கைப்பற்று:** நம்மை இயக்குகின்ற உள்ளமாகிய கையே இயற்கை. அதை பற்றுவதே இயற்கைப்பற்று.

**குடும்பப்பற்று:** ஆசானின் னினைவாகிய சபையெனும் குடும்பத்தில் கூடி வாழ்வதே குடும்பப்பற்று. அதுவே உலகப்பற்றுகளிலிருந்து நம்மை விலக்கி பிறவாமைக்கு வழிவகுக்கும்.

**பொருள்பற்று:** பொருள் என்பது ஆசானின் திருவாக்கு. அதை பற்றுவதே பொருள்பற்று.

**பற்றிய பற்றாய்ப் பரந்நுல கெங்ங்ம்**
**பற்றியும் பற்றிலா தோங்ஙிப்**
**பற்றியும் பற்றாப் பத்தியுற் றவர்க்குப்**
**பற்றிலா திடம்பற்றும் பற்றே**
**பற்றைவிட் டகன்று பற்றியே தேர்பின்**
**பற்றும்பே ரெழுதுங்ஙோல் பலனே**
**சுத்தனிர்க் குணமாய் லாஞ்ஞனை யிலங்ங்ம்**
**சூல்முகம் மதுமதிக் கடலே**

ஏகனாயகனாகிய இறைவன் ஒருவனே அகத்திலும் புறத்திலும் நீக்கமற எங்கும் நிறைந்து யாதொன்றின் மீதும் பற்றில்லாதவனாக இருப்பவன். இதனை அறிவுஅறி பாடத்தில், *எங்ஙும் நிறைந்த இறை பொருள் ஒன்றே* என்றும், கோடாயிதக்கூரில் *எது உன்னை கவ்விப் பிடித்திருக்கிறதோ அதுவே உன் தெய்வம்* என்றும் அருளியுள்ளார்கள். பெரியோர்கள் தாமரை இலை தண்ணீர் போல் உலக வாழ்க்கையில் பற்றியும் பற்றாமலும் இருப்பார்கள். சர்வத்தையும் படைத்து காத்து, அழித்து வருகின்ற வஸ்துவே நான் எனும் உணர்வாக, ஓங்காரமாக உள்ளது. அதுவே அவரவருள் இருக்கும் கலிமாப்பொருள் ஆகும்.

**பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு** **( திருக்குறள் )**



Copyright © AMNA Trust, Chennai 

மனம் அற்ற நிலையில் பிறக்கும் குழந்தை ஒவ்வொரு உணர்வாக பெற்று மனம் உண்டாகி சார்ந்ததின் வண்ணமாகிறது. ஓர் மெய் ஆசானின் துணை கொண்டு மனதை அகநோக்கமாக மாற்றும் போது புறப்பற்றானது ஒவ்வொன்றாக அகல்கிறது. இதுவே விதி எழுத்தை மதி எழுத்தாக்கும் செயல்.

**சன்யாசம்:** முக்குணங்கள் அற்றதே நிர்க்குணம். இவ்வுலகப் பற்றெல்லாம் விட்டு பற்றற்றானாகிய ஆசானின் துணைகொண்டு நிர்க்குணமாக வாழ்வதே சன்யாசம்.

*ஜீவசகோதரர் கிரகதுரை அவர்களின் புரிதல்:*

**தேடல்:** உயிரினங்கள் அனைத்திற்கும் *துக்க நிவர்த்தி சுகப்பிராப்தி* எனும் நோக்கம் ஒன்றே தேடுதலாக உள்ளது. மனிதனுக்கு தரப்பெற்றுள்ள ஆறாவது அறிவின் நோக்கம் மெய்யான குருவைத் தேடி அடைவதே. இதையே ***அறிவு ஒளிர ஆசானைத் தேடு*** என்றும், ***இருதயம் விளங்க இறைகுரு தேடல்*** என்றும் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். இதை அறியாமல் மனிதன் அழியக்கூடிய பொருட்களையே தேடி வாழ்நாளை புலன்வழி பற்றியோடி வீணாக்குகிறான். இதனை சிவவாக்கியர், **ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த ஜோதியை, நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்துபோய்....** என அருளியுள்ளார். ஓர் மெய்க்குருவை சந்தித்த பின்தான் அவர் நம்மை மனுவாக மாற்றுகிறார். தாய் வயிற்றிலிருந்து பிறந்து, பின் ஒவ்வொரு பிறப்பாக மாறி ஆறாவது பிறப்பாகிய அறிவுப்பிறப்பு எடுத்தபிறகு, ஏழாம் பிறப்புடலம் எடுத்து இறைவனை காண வேண்டும்.

*தேடல் - தேடு+அல். அல் என்னும் இருளாகிய இறைபொருளை தேடியடைந்து பேரின்பம் காண்பதே மனிதனின் தலையாய கடமையாகிறது.*

*ஜீவசகோதரர் பழனிகுமார் அவர்களின் புரிதல்:*

**அண்ட ராலும றியவொண் ணாத்திரு**
**அண்ட ரண்டப கிரண்டம் பாய்ந்துமே**
**அண்ட மோரணு வினுள்ளே காட்டிய**
**தொண்ட ருள்ளத்தொ டுங்கும்த னியரே**
**(குரு ஸ்தோத்திரம்)**



***திரு. சாலை ரவி அப்பா அவர்கள்***
***நிறுவனர்: ஆதி மார்க்க நீதி அவை***

அண்டத்தில் நிறைந்திருக்கும் இறைவன் ஓர் அணுவாக நம்முள் விளங்குவதை, ஓர் மெய்குருபிரான் நரனாகிய நம்மை மனுவாக மாற்றி தேவபதத்தை அடையும் உபாயத்தை அறிய வைத்த பின்னரே, திருவாகிய இறைவனை நாம் தரிசிக்க முடியும். இதனை வள்ளல் பெருமான் திருஅருட்பாவில் **நான் ஆன்மா, பசு, சிற்றணு வடிவினன்** என குறிப்பிடுகிறார். அவ்வாறு சர்வத்திலும் வியாபித்திருக்கும் இறை வஸ்துவை ஓர் அணுவினுள் விளக்குகிறார்கள். இறைவன் அண்டத்தில் படைத்த மதி, கதிர், மின், பனி, தாரகை, அவணி, ஆகாயம், மூன்று உலகங்களாகிய சொர்க்க, மத்திய, பாதாளம், பூமி பதினான்கு, மலை, கடல், வனம், ஆறு, அருவி, ஆயிரத்தெட்டு அண்ட சராசரங்கள், எழுவான், படுவான், பதினெண்ணாயிரம் ஆலங்கள் - இவை யாவும் ஒரு மனுத்தலையில் விளங்குவதை சூட்சுமமாக விளக்கி அருளுகிறார்கள். மேலும் ஆதிமான்மியத்தில் குருவும், நானும் ஒன்று எனும் அத்வைத நிலையில் நம் உயிரானது பாதுகாக்கப்படுகிறது. குரு வேறு நான் வேறு என்ற துவைத நிலையில் உயிரானது பறிபட்டுபோய் விடுகிறது என அருளப்பெற்றுள்ளது.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் கணேஷ்வரன் அவர்களின் புரிதல்:*

உடலெடுத்த நோக்கம் ஆன்மாவிற்கு தெரிந்தாலும் பிறந்தவுடன் மறந்து விடுகிறது. நமது விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்ட ஆன்மா, தனது நோக்கங்களை நிறைவேற்ற முற்படும்போது மனதின் ஆசைகள் குறுக்கிடுகின்றன. நமக்குள் இருக்கும் ஆற்றலையும், ஆன்மாவின் நோக்கத்தையும் அறியாமல் வீணாவதை கோடாயிதக்கூர் வாக்கியம் எண் 106ல் மனிதன் ... *அந்த ஏழாவது பிறப்பில் பிறக்கவில்லையென்றால், இவனுக்காகப் படைத்த பொருள்கள் அவ்வளவையும் வீணாக்கிய பாவம் இவன் தலையில் வந்து விழுகிறது ...* என குறிப்பிடுகிறார்கள்.

*ஜீவசகோதரர் பிரபு அவர்களின் புரிதல்:*

நம்மிடத்தில் பிரம்மமாக உள்ள மெய் அறிவாகிய இறைவனின் ரகசியங்களை அறிவதற்கு நம்மிடமுள்ள அமானிதப் பொருளாகிய ஆறாவது அறிவை ஒரு மெய் ஆசானின் இரக்கத்தால்தான் அறிய முடியும். இறைவனை அறிய வேண்டியது மனிதனுக்கு மட்டுமே கடமையாகவும், விதியாகவும் வைக்கப்பட்டுள்ளது. கடவுளை நம்புகின்றவர்களின் உரை கற்பனையாகவும், நம்பாதவர்களின் உரை அதை உறுதிப்படுத்த முடியாத நிலையிலும் உள்ளது. மனிதனுள் இருக்கும் ஆறாவது அறிவாகிய அமானிதப் பொருளின் மேன்மையை குருவின் துணை கொண்டு உணர்ந்தால் வேதநூல்களின் பொருளறிந்து இறைவனை உணரலாம். அறிவிருக்கும் தலத்தை அறிவதே விஸ்வரூப தரிசனையாகும். ஆசானின் வருகையே பிடரிக்கண் திறக்கும் காலம். பிடரிக்கண் கொண்டு ஜீவனை தரிசித்தால் பிறவாமை பெறலாம் என்ற பகிர்தலுடன் அவை நிறைவுற்றது.

**21-07-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

**மறை விதி கண்ட மார்க்கண்டேயர் தீர்க்கதரிசனம் -** தீர்க்கதரிசனம் என்பது அவரவரின் ஜீவனாக உள்ளது. நம்முடைய இந்த குழப்பமுற்ற உலகை தெளிவிக்கவே நம்முள் "நானாக" இருக்கும் தத்துவத்தில் ஏற்றி வைப்பதற்காக (அ+உ) அவ்வை தாரமாக கொண்டு மெய் குருபிரான் அவதரிக்கிறார்கள். ஆண்டவர்கள் சுத்த அறிவு வடிவு என்பதை அஷ்டாங்க யோகத்தின் மூலமாக உணரும்போது நாமும் சூக்குமம் என்ற அறிவு நிலையாகிய இல்லறத்தைப் பெறலாம். இச் செயலையே

**சுவைஒளி ஊறுஓசை நாற்றமென் றைந்தின்**
**வகைதெரிவான் கட்டே உலகு.** என திருவள்ளுவர் பிரான் அருளியுள்ளார்

**வான்மதிக் கொரல் வாக்கியம் எண் 74:** நினைவு தான் முக்தி அளிக்கும் பூமி. கடுமையான பசி வந்த நேரத்திலும் நமக்கென மெய்யான தவச்செயலுடைய ஓர் மதமும், ஊரும் உண்டாக்கிக் கொள்ள வேண்டும் என்ற காரமான எண்ணம் ஆண்டவர்களுக்கு தோன்றியது. இறப்பை நோக்கி பயணிக்கும் நம்மை அதிலிருந்து மீட்கும் செயலுடையதே **மறலி கைதீண்டா சாலை ஆண்டவர்கள் மெய்மதம்**. ஆண்டவர்கள் அறிவு வடிவு என்பதை அறியும் போது நாம் மெய்மதத்தில் ஆகிஇருக்கிறோம் அவர்களை தூலம் என்று நினைத்தால் அதிலிருந்து விலகியவர்களாக ஆகிறோம்.

*எவருடைய போதரணுவாகிய ஒன்று ஸம்ஸார ஸமுத்திரத்திற்கு அணைபோலாகின்றதோ அத்தேசிக நாதரை நித்தியம் உபாசிப்போம்.*
*~ குரு கீதை*



Copyright © AMNA Trust, Chennai 

**காலந் நாட்டிய காரணப் பா - பாடல் எண் - 34** **பஞ்ஞணை யெழுச்சி யென்று...** எனத் தொடங்கும் பாடலுக்கு ஜீவசகோதரி லாவண்யா அவர்களின் புரிதல் : நம்முள் நெடுங்காலமாக தூங்கும் "நான்" எனும் மூலப்பொருளை எழுப்புவதற்கான பாடலே திருப்பஞ்ஞணை எழுச்சி. வஞ்ஞுப்புலன் சதியால் அவரவர் ஜீவனை அறியாத நம்மை அமானிதம் என்னும் சீர் கொண்டு, மறுபிறப்பு, னாள், தன்பெரு வெளியாகிய சாலை, இவற்றின் சிறப்பை உணர்த்தி எமனச்சத்தை விலக்குபவர் மெய்க்குருபிரான். இறைவனின் நிலையை பெற்றவர்களே உறங்கா விழிப்புலகின் அரசர்கள்.

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்: அதிசயப்பத்து -பாடல் எண்: 4 "பித்தனென்றென்னை"** எனத் தொடங்கும் பாடலுக்கு ஜீவசகோதரி பூர்ணிமா அவர்களின் புரிதல் : ஒரே செயலை மீண்டும், மீண்டும் செய்பவன் பித்தன். நம்முடைய காரண தேகமான "நான்" என்பது ஒத்த பொருளாக உள்ளதை பெரியோர்கள் அறிவித்து, பித்தத்தை தெளிவித்து நித்திய சொர்க்கத்தில் நம்மை ஏற்றிவைக்கிறார்கள் இவ்வாறாக நம்மை ஆக்கி வைக்கும் குருபிரானின் னாதமே அதிசயமாகும். இச் செயலையே.

**பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்**
**செம்பொருள் காண்பது அறிவு**
**ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்**
**செத்தாருள் வைக்கப் படும்**

என திருவள்ளுவர் பிரான் அருளியுள்ளார்

**தேவாரம் ஆவூர் பசுபதியீச்சரம் பாடல் எண் 9** **மாலும் மயனும் வணங்கி தேட** எனத் தொடங்கும் பாடலுக்கு ஜீவசகோதரி சண்முகப்பிரியா அவர்களின் புரிதல்: சிவனெனும் ஒளியை புறத்தில் தேடுவது அறியாமை .பிறப்பு இறப்பற்ற ஒளியாக துலங்கும் ஆசானின் னாதம் மூலமே பதியான சிவபெருமானை அறியலாம். இதனையே **அறிவு ஒளிர ஆசானைத் தேடு** என ஆண்டவர்கள் அருளுகின்றார்கள். திரு னடனம் புரியும் ஆசானின் திரு னாவாகிய ஆவூரான திருவிழாவில் நாமும் கூடிக் கொள்வோமாக.

**அறு புரி னூல் பற்றிய** ஜீவசகோதரி ஹேமா தியாகராஜன் அவர்களின் புரிதல் : ஆண்கள் அணியும் பூனூல் பெண்களுக்கு ஏன் இல்லையெனில் நம்மை ஆட்கொள்ளும் குருபிரான் ஒருவரே பிரம்மத்தை அறிந்த பிராமணராகிய ஆண். சீடர்களான மற்ற எல்லோரும் பெண். சீடன் என்ற பெண்ணாகிய நம்முள் இருக்கும் பிரம்மத்தை வெளிப்படுத்த ஆசானாகிய ஆண் வேண்டும்.

**குருபிரான் வர்ஷிப்பு :** சற்குருபிரான் ஒருவரே ஆண். **நான்** என்ற சொல்லுக்கு பாலினம் கிடையாது. முப்புரி னூல், அறுபுரி னூல் என்பது இடகலை, பிங்கலை சுழிமுனை, அறுசுவை பற்றிய தவநிலை ரகசியமாகும். ஆறு ஆதாரம், அறுபடைவீடு அகரமுதல் அறிந்தவர்களே அறுபுரி னூலை அணிய தகுதி உடையோர்.

**சிவானந்த போதம்**

**தேகமுக்தி:-** உடலாகிய மனமெனும் தேகம், முக்தி அடைவது. ஜீவமுக்தி. காரண தேகமாகிய நான் எனும் ஆன்மா ஜீவமுக்தி அடைவது, எக்கோடி காலத்திற்கும் நித்திய நன்மை அளிக்கக்கூடிய செயலுடைய திருவசனமாக இருக்கும். இந்த சுவிசேஷ நற்செய்தியையே லாஞ்ஞனை இலங்கும் முத்திரையாக ஆண்டவர்கள் அருளுகின்றார்கள். சிவானந்த போதத்தில் கூறப்பெற்றுள்ள மெய் என்பது அழியாத ஆன்மா. சடத்திற்கு ஆதாரமாக இருப்பது ஆறு ஆதாரமாகிய உடல். நான், கவனம் எனும் அந்தகரணத்தின் துணையின்றி சரீரம் இயங்குவதில்லை. **மனம் திரும்புங்கள் பரலோக ராஜ்ஜியம் சமீபமாக இருக்கிறது** என்பது முக்தி அடைய வேண்டிய மனதையே கூறப்பட்டுள்ளது.



Copyright © AMNA Trust, Chennai 

**மலர் மணம் போல் ஒரு ஜென்ம மயக்கத்தால் இனமாக்கும்** முந்தைய ஜென்மம் என்பது முந்தைய மனம். ஆறு அறிவுக்கு காரணமான மனம், நான் எனும் காரண தேகத்தின் மூலம் வளர்ச்சி அடைகிறது.

**தனவாக்காய் பிரம்மாவும் சிருஷ்டி செய்ய** வாக்கு என்பது படைப்பு கடவுளாகிய பிரம்மா. செல்வத்துள் எல்லாம் தலையாகிய செவிச்செல்வமே தனமாகிய வாக்கு. ஆதியில் ஈசனின் கையில் இருக்கும் டமரகத்தின் சப்தமாகிய "ஸ்ரீ" என்ற எழுத்திலிருந்து பிரம்மா உண்டாகினார். " வேதம் என்பது பழகி அடைவதன்றி, படித்து அடைவதல்ல. முத்தி என்ற சொல்லை படித்தால் பொருள் தெரியாது. பொருளன்றி சொல் இல்லை. பொன்னெனும் பொருளன்றி பொன்னெனும் சொல்லால் பயனில்லை.

**பொன்னால் பிரயோசனம் பொன் படைத்தார்க்கு உண்டு பொன் படைத்தோன்**
**தன்னால் பிரயோசனம் பொன்னுக்கு அங்கு ஏது உண்டு அத் தன்மையைப் போல்**
**உன்னால் பிரயோசனம் வேணதெல்லாம் உண்டு உனைப் பணியும்**
**என்னால் பிரயோசனம் ஏது உண்டு காளத்தி யீச்சுரனே** **(பட்டினத்தார்)**

என அருளி குருபெருமான் தோத்திரப் பாடலுடன் அவையை இனிதே நிறைவு செய்தார்கள்

**23-07-2022 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்**

**னடந்நறியாப் பெருங்னாட்டில் னல் வழியீ தெனவியந்து னயந்து காட்டி** என்ற தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை மலரச் செய்தார்கள்.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் – 99 :** மனம், வாக்கு, காயத்தால் எட்ட முடியாத அழியாப் பொருளாகிய வல்லப வஸ்துவோடு உறவாடிக் கலந்து, அதில் லாப நஷ்டம் தெரிந்து, மும்மூர்த்திகரம் பெற்று வந்த பெரியோர்கள்பால் நம் மனஅறிவை தத்தம் செய்து அவர்கள் அறிவை முன்வைத்து நடப்பதே மெய்வழி ஆகும்.
எதற்கும் முதற் பொருளாகி அழிவில்லா மெய்ப்பொருளாக, மனிதனுள் ஆறாவது அறிவாக விளங்கும் தனிச் சீதனப்பொருளை அறிந்தவனே மறுபிறப்பாளன், தேவன். **அறிகின்ற அறிவே அறிவென்று அறிவாய் (அறிவு அறி பாடம்).**

கோவில் வழிபாட்டில் குருக்கள் கொண்டு வரும் தீபாராதனை ஜோதியை நாம் வணங்கும் செயல், அசலாக நம்மிடத்தில் உள்ள அறிவு ஜோதியை வணங்குவதற்கான எடுத்துக்காட்டாகும்.

**காலந் நாட்டிய காரணப்பா பாடல் எண் 39 - இன்ன ணம்பல காரிய காரணம்...** எனத் தொடங்கும் பாடலுக்கு *ஜீவசகோதரி லாவண்யா அவர்களின் புரிதல் :* காரணம் இன்றி காரியமில்லை. நாம் பிறந்த காரணம் தன்னை அறியும் காரியத்திற்கே. பிறப்பால் அனைவரும் னரனே. *அரிது அரிது மானிடராதல் அரிது மானிடராயினும் கூன் குருடு செவிடு பேடு நீங்கிப் பிறத்தல் அரிது* என்பது ஔவையார் திருவாக்கு. கண்ணிருந்தும் குருடனாக காதிருந்தும் செவிடனாக ஊனமாக இருந்த நாம் மெய்க்குருவின் துணை கொண்டு கண்ணும் காதும் னேர்பெற்ற மனுவாகி பண்ணுலாப் பதமாகிய தன்னை அறியும் காரியத்தை முடிக்க வேண்டும்.
**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:** புலன்களின் வழியாக ஆணவம், கன்மம், மாயை விளைகிறது. வாயினில் னாயும், னாசியில் வண்டும், மதுசெவிதனில் விஷப்பாம்பும், ஈயணைந்திடும் கண் இபுலீசன் வீடாக அனீதமாக இருந்ததை ஆசான் தன் மலர்க்கை கொண்டு னீதம் ஆக்கி கண்ணும் காதும் னேர் பெற்ற மனுவாக ஆக்குகிறார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்: அதிசயப்பத்து - பாடல் எண்: 5** **பரவு வாரவர் பாடுசென் றணைகிலேன்...** எனத் தொடங்கும் பாடலுக்கு ஜீவசகோதரி பூர்ணிமா அவர்களின் புரிதல் : ஞானம் பெற்றிட பெரியோர்கள் பட்டபாடு ஈடு இணையற்ற ஒன்று. ஐம்புலன்களால் உலகப் பாட்டில் அலையும் செயல், அருங்கோடை பாலைவனம் கானகத்திலகப்பட்டு அடிமை பரந்நோடிப் பரிதவித்தது போலாகும். அப்படியான நேரத்தில் சிவபெருமானாக வந்த குருபிரான் அருளமுதளித்து களைப்பகற்றி விடுதலையெனும் முத்தி நிலையில் ஆக்கி வைக்கிறார்கள்.

**தேவாரம் திருஆவூர் பசுபதியீச்சரம் பாடல் எண் 10: பின்னிய தாழ்சடை யார் பிதற்றும்...** எனத் தொடங்கும் பாடலுக்கு ஜீவசகோதரி சண்முகப்பிரியா அவர்களின் புரிதல்: சமண சாக்கியர்களான ஜைனர்கள் நிர்வாணம், உயிர்க்கொல்லாமை, அஹிம்சை என்பதின் அகமியச் செயலை அறியாமல், ஆடையின்றி இருப்பது நிர்வாணம், உயிர்களைக் கொல்லாதது கொல்லாமை, ஈ எறும்புக்கு தீங்கு செய்யாதது அஹிம்சை என பிதற்றித் திரிவதுண்டு. நம்பிய தன்னுயிர் தற்கொலை செய்யாதது கொல்லாமையாக, மனம் அலைபாயாமல் பாதுகாக்கும் அறச்செயல் அஹிம்சையாக சைவமாக, மனதின் பற்றற்ற னிலையே நிர்வாணமாக, இருப்பதை குருபெருமானின் ஓசை கொண்ட நடனத்தால் அறிந்து அடையும் இடமே ஆவூர் பசுபதியீச்சரமாக உள்ளது.

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:** ஒவ்வொரு காலத்திலும் வரும் செயலுடைய மதத்திற்கு மற்ற மதங்களால் எதிர்ப்பு உண்டாகிறது. சர்வ மதங்களும் ஒடுங்கியிருக்கும் திருவடிப்பேறே திருச்சிற்றம்பலமாக இருக்கிறது. **வந்ந பல மந்நிரப்ப லனனைத்தும் தன்திடத்துள் ளாண்டபனி மேரு பாதா (ஆடலங்ஙன்னி)**

**சிவானந்த போதம்:** வேதம் படிப்பதால் முக்தி கிட்டாது. மெய்க்கல்வியின் செயல், *வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்* எனும் எழுதாத எழுத்தை ஓதுவதாக உள்ளது. ஆசானின் திருவடிப்பேறே முக்திக்கு மூலமாக, திருவடிஞானமே முக்திக்கான வழியாக இருப்பதை *தன்னை அறியும் அறிவே தகும் அறிவு, பின்னறிவு எல்லாம் பேயறிவு* என திருமூலர்பிரானும் அருளியுள்ளார். **அறிவே தெய்வம்** என்கிறது வேதம். வல்லபமான வஸ்துவாகிய அறிவே தெய்வமாக, மனிதனுள் சிற்றணுவாக இலங்குகிறது. அதை குருமுகமாக **அனுபவத்தால் அறிக** என வள்ளல்பெருமானும் அருளுகிறார்.

**வாழு மாலய னுருத்திர னிந்திரன்** எனும் செயலுடைய நாமங்கள் குறிப்பது யாதெனில்,
**இந்திரன்:** இந்திரியத்தின் ரகசியம் (படைத்தல் - பிரம்மா)
**மால்:** உடலைக் காக்கும் தண்ணீர் (காத்தல்)
**ருத்திரன்:** உண்ணும் உணவை அழித்து உடலுக்கான சத்துக்களாக மாற்றும் சூட்சாதி சூட்சமாக மனித உடலுக்குள் விளங்கும் தத்துவங்கள். (அழித்தல்)

ஒருவர் செய்த பாவ புண்ணியம் இன்னொருவருக்கு உண்டு என்பது மூடர்களுக்கு உண்மையை உணர்த்திட பெரியோர்கள் எடுத்து வைத்த உளவு ஆகும். வேதவியாசர் அருளிய மகாபாரதத்தில் வரும் விஸ்வரூப தரிசனம் என்பது, பகவானின் உபதேசத்தை மக்களிடத்தில் சேர்ப்பதற்காக வேண்டியே. வினை விதைத்தவனும் தினை விதைத்தவனும் விதைத்ததையே அறுப்பான். அவரவர் வினையை அவரவர்தான் அனுபவிக்க வேண்டும். பொறியை புலன் வசத்தில் போக்கினால் மனம் புறத்தில் அலைந்து அலகைத் தேகம் எடுக்கிறது. **பாழிலே மனதை விடார் பரம ஞானி** எனும் னிலையை பழகி வருவதே மெய்வழி குருமார் சொல்லும் மேல்நோக்கம் ஆகும். தேகம் உள்ளவரை பிறப்பும் இறப்பும் ஒழிவதில்லை. மெய்ஆசானின் பூ மலர்த் தாள் சரணடைந்து, அறிவின் வழியில் நின்று சாதித்து, வினையறுத்து பிறவாமை பெறும் ஞானத்தின் உச்சநிலையே சிவானந்த போதத்தில் அருளப்பெற்றுள்ளது. **புலனுக்கா ளாக்காமற் காக்கும் - தெய்வப் புண்ணியன் பூமலர் சரணம்சஞ்ஞீவி** எனும் பரிசுத்த ஆவி தெய்வத்தின் பொற்பாதத்தை வணங்கி குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

**24-07-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

*ஜீவசகோதரர் கௌதம் அவர்களின் புரிதல்:*

**அறியானை அறியவைத்து...** என தொடங்கும் பாடலின் புரிதலாக, கற்பனையான விஷயங்கள் மறப்பதும் அனுபவத்திற்கு வரும் விஷயங்கள் என்றும் மறவாமலிருப்பதும் சிற்பியின் கைவண்ணத்தில் உண்டான, கல்லில் வடித்த சிலை அழியாமல் நிலைத்திருப்பது போல், **ஹஃகான** மெய் ஆசானால் கடவுள்நிலையை உணர்ந்து பழகிய அனுபவம் நம் உள்ளத்தில் என்றென்றும் நிலைத்திருக்கும். அறிந்து கொள்வது என்பதும் தெரிந்து கொள்வது என்பதும் வெவ்வேறு நிலைகளாகும். பழக்கத்தினால் அறிவதே புரிதலாகும். கோவிலில் உள்ள சிலைகளைப்பற்றி தெரிந்து வைத்துள்ளோமே அன்றி அவற்றின் தத்துவ ரூபங்களை அறியவில்லை. இறைவன் படைத்த தத்துவ ரூபமான மனிதனைப் பற்றியே சிலை வடிவங்களும் அதன் சன்னதங்களும் அறிவிக்கின்றன.

**கொடியேற்றம்:** திருவிழா, சுதந்திரதினம், போரில் வெற்றி இவைகளின் அடையாளமாக கொடி ஏற்றுவதுண்டு. புறத்தில் கொடியேற்ற கயிறு, கம்பம், இடம், கொடி, ஏற்றுபவர் தேவைப்படுவதுபோல், அகத்தில் கொடியேற்ற புலன்களிலிருந்து விடுதலை பெறவேண்டும். மனம் போகும் போக்கில் போனால் நமக்கு சுதந்திரம் கிட்டாது. இதனை ஆண்டவர்கள் *பாய்மன வீட்டில் பேய் குடியிருக்கும் பேரறிவடிமையங்ஙாகும்* என அருளியபடி, மனம் போன போக்கில் போகாமல், னன்னிலமாகிய மகாமகசூக்கான இருதயத்தில், ஓம் எனும் உணர்வெனும் கம்பத்தில், சரமென்ற கயிற்றில் மின்வீசிக் கூப்பிடும் கொடியின் உச்சி ஆடையிலே எனை மணந்த மணவாளராகிய குருபெருமான் திருவருளைப் போற்றி வணங்குவோம்.
**வேதம்:** குருபெருமான் திருஆலவாயில் நின்று ஆடும் முத்தி நடனமே வேதம். பேசரும் பெரும் பொருளாகவும், பஞ்ஞாட்சரமெனும் சூக்குமப்பொருளாகவும் விளங்கும் கடவுளைக் காட்டுபவரே மெய்குருபிரான்.

**மௌன வைப்பின் வகை விரித்தே யெனைக்**
**கவனம் பாய்ந்நிட வைத்தெனையாட்கொண்டு**
**தவனம் தீர்த்த தனிகையரின் சுதன்**
**மௌன தேசிக மார்க்கனன்னாதரே**

என்ற பாடலின்படி மனமானது ஒரு மெய்குருவின் முன்னிலையில் கவனம் பாய்ந்து மௌனமாகிறது. வித்தில்லா வித்தாகிய அவரது னாதமே நரனை மனுவாக்கி தேவபதத்தில் ஆக்குகிறது. இதை,

**னானிலந் னனிலே இங்ஙு**
**நரசென்ம மெடுத்தோ ரெல்லாம்**
**வானவ ராவ தற்கு**
**மக்களா குவதென் றோரா**
**ஆணவ இடும்பி லேறி**
**அறமெலிந் நுருக்கு லைந்நு**
**காணுமூர் வனம்ப றவை**
**காலிகா உரைசெய் வீரே**

என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். பஞ்ஞுகோசத்து உடலில் ஒன்றான ஆனந்த உடலை அடைய பருஉடலை சரியாக பராமரித்தல் வேண்டும். ***உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்*** என்ற திருமூலர்பிரானின்


Copyright © AMNA Trust, Chennai

கூற்றுப்படி, ஜீவதேகமாகிய உள்ளப்பெருங்னோயிலை அடைய, மனமானது உருக்குலைந்து போகாமல் இருக்க ஆசானின் நாத அமிர்தத்தைப் பருகி, ஆறாவது அறிவால் ஆசான் சொல்படி கேட்டு கவனத்துடன் ஊனுடம்பை பாதுகாத்து ஜீவன் கண்டு ஜென்ம சாபல்யம் அடைவோம்.

**காலச்சக்கரம்: கோடாயிதக்கூர் வாக்கியம் எண் 253 :** னாம் கனவு கண்டது உண்மை என்பதற்கு அறிகுறியாக, தேகத்தில் அடையாளம் தெரிகிறது. னாம் அங்ங கண்ட காட்சிகள், னம்முள்ளே இருக்கும் காலச்சக்கரம் தன்னைக் காட்டி மறைப்பதால் உண்டாகிறது. கண்ணுக்கு தோற்றமாகாத சூட்சும வஸ்துவே, கிளைகளும் விழுதுகளும் இலைகளும் கொண்ட பெரிய ஆலமரமாக ஒரு சிறிய வித்தினுள் உள்ளது. இன்னும் மயிலின் னிறம் அதன் முட்டைக்குள் அடங்ஙியிருப்பதுபோல், அண்ட சராசர முழுதும் நம்மிடத்தில் இதய காலச்சக்கரத்திற்குள் அணுவாக அடங்ஙியிருக்கிறது. இதை அறிவிக்கவே இறைவன் இடையிடையே கனவை உண்டாக்கிக் காட்டுகிறான். இவ்வுண்மையை நமக்குள் னேருக்குனேர் அறிகிறபோது நாம் மனுஈசன்; அறியாவிட்டால் மனுனீசன்.

**சென்றனாட் சென்றிட் டாலும் செல்லுனாட் சென்றி டாது**
**னன்றுள னாளே யின்னாள் ஞானனாளெனத்தேர்ந் நுள்ளம்**
**என்றுள னாய னுக்கே யிணையொரு னாளில் லாதாற்**
**குன்றில்வாழ் பவன்பே ரின்பம் கொள்ளுத லெவர்க்கும் வேண்டும்**

என்ற பாடலின் படி ஞானத்தாயின் கருணையால்தான் நாம் ஞான பாதையில் சென்று குன்றேறி பேரின்ப வாழ்வு வாழ முடியும் என்ற பகிர்வுகளுடன் அவை நிறைவுற்றது.

**28-07-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஶ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்**

**பூமியின் பாரந் நீர்க்கப்**
**புதுப்புது னாமம் பூண்டு**
**னேமியர் மேனா ளெல்லாம்**
**னிலத்தினி லுற்றதே போன் ...**

என்ற தோத்திர பாடலைத் தொடர்ந்து குருபிரானின் அமுத வர்ஷிப்புடன் அவையானது இனிதே துவங்கியது.

**வான்மதிக் கொரல் - திருவாக்கியம் எண் : 77**

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்**

எனும் இத்திருக்குறள் ஒன்று மட்டும் நிறைவேற வேண்டும் என்று ஆண்டவர்களிடம் பிறவியர் கேட்க அதற்கு *ஆண்டவர்கள்,* இறைவனிடம் சேர வேண்டுமெனில் ஓர் சன்னதம் பெற்ற பாரவான்களை அடைந்து, அவர்களின் பேரிரக்கம் நம் மேல் பாய்ந்து, நாம் யோக்கியன் என அவர்கள் நம்மை ஏற்கும் பொழுதே *இறைவன் அடி சேரும்* செயல் நடக்கும். காலனாக இருக்கும் எமனிடமிருந்து தப்பி காலத்தை தன் வசமாக்குதற்குரிய ரகசியத்தை அறிய வேண்டும்.

**காலந் நாட்டிய காரணப்பா பாடல் எண் 40 - பேயும் னாயும் பிசாசும் அறிந்நிடா ...** எனத் தொடங்கும் பாடலுக்கு *ஜீவசகோதரி லாவண்யா அவர்களின் புரிதல் :* ஞானம் என்பது பேயாகவும் நாயாகவும் உள்ள குணம் கொண்டவர்களால் அறிய முடியாது.
ஆசான் தாயாகவும் நாம் சேயாகவும் இருந்து பழகி வரும் போதுதான் அறிய



Copyright © AMNA Trust, Chennai

முடியும். நம்மிடத்தில் எமனாக இருப்பவனை சிவனாக மாற்றி எமபயத்தை கடந்து வாழும் சிவராஜ வாழ்க்கையே ஆடி அமாவாசை வாழ்க்கையாகும்.

*ஜீவசகோதரர் தாமோதரன் :*
முருகப்பெருமான் அகத்திய முனிவருக்கு உபதேசித்தது காசிகாண்டம். அதன் பின் துவாபரயுகத்தில் வேதவியாசரால் வேத புராணங்கள் வாயிலாக குரு சீடனுக்கு உபதேசிப்பதாக உள்ளது. ஒவ்வொரு யுகத்திலும் வரும் பாரவான்களின் னாமம் வேறாக இருந்தாலும் செயல் ஒன்றுதான். அவர்கள் முன்னிலையில் நாம் செல்லும் போதுதான் விந்தியமலை போன்ற நம் மனம் மேருமலை போன்ற அறிவாக மாறி எண்டிசைக்கும் னானென முன்னிற்கும் பஞ்ஞாட்சரத்தில் குடியேறி வாழ்வதற்கான வழியாகும். இதுவே காசிப்புனலில் மூழ்கி கரை ஏறி காசியில் வாழும் வாழ்வாகும்.

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் - அதிசயப்பத்து பாடல் எண் : 6 முன்னை எண்ணிலேன் திருநாம அஞ்செழுத்தும் ...** எனத் தொடங்கும் பாடலுக்கு *ஜீவசகோதரி பூர்ணிமா அவர்களின் புரிதல் :* நமசிவய எனும் ஐந்தெழுத்து மந்திரத்தை அறியாமல் இருப்பதே ஏழ்மை. அனைத்து செல்வங்களுக்கும் தலையாக உள்ள ஆசானின் னாதம் நம் செவியில் பாயும்பொழுது நம்முடைய ஏழ்மை நீங்கி என்றும் குறையாத பணக்காரராக ஆகிறோம். மனமாக இருந்து பிறவி சுழலில் இருக்கும் நம்மை அறிவு வடிவாக மாற்றுகின்ற ஆசான் அவர்களே அதிசயம்.

**திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம் – திருஆவூர் பசுபதியீச்சரம் பாடல் எண் : 11** எண்டிசை **யாரும் வணங்கியேத்தும் எம்பெருமானை...** எனத் தொடங்கும் பாடலுக்கு *ஜீவசகோதரி சண்முகப்பிரியா அவர்களின் புரிதல் :* புறஉலகில் சூரியன் வந்ததும் வெளிச்சம் வருவது போல், அகஉலகில் நான் எனும் பொருளே வெளிச்சமாக உள்ளது. இதனை நம் தெய்வம் அவர்கள் **எண்டிசைக்கும் னானென முன்னிற்கும் பஞ்ஞாட்சரமே...** என அருளியுள்ளார்கள். பஞ்ஞாட்சரமாகிய ஜீவேசப்பொருளை அறியவைக்கும் ஆசான் இருக்கும் இடமே திருஆவூராக உள்ளது.

**திருஆவூர் பசுபதியீச்சரம் பாடல்களின் தொகுப்பு :** புலன் வழி போக்கிய வயதை மீட்டுத்தரும் செயலை கைக்கொண்டவர்களே புண்ணியராக, முத்தராக, கங்கையை தன் திருமுடியில் சூடியவராக, திங்கள் உலாவும் சடையினராக, நெற்றிக் கண்ணும் திருநீறும் கொண்ட ஓர் மெய்க்குருபிரானாக வருகிறார்கள்.

*ஜீவசகோதரி கல்பனா:*
மனிதன் தனிச் சீதனமாக வாங்கி வந்த அமானிதம் எனும் அறிவின் பேரின்பத்தைப் பற்றி அறிவாகிய குருபிரான், மனமாகிய சீடருக்கு உபதேசிப்பதே சிவானந்த போதம். நாம் வாழும்போதே அனுபவிக்கும் சொர்க்கப்பதி ஆசானின் திருவடி. அதுவே நம்மை பேரின்பத்தில் சேர்க்கும். மனதின் மூலம் நம் மூச்சானது துண்டாடப்படுவதே பாவமாக உள்ளது. அத்தகைய மனதை குருபிரான், தன் ஓரெழுத்து மாத்திரைக்கோல் கொண்டு திறந்து, வினையறுத்து, யோகதேகத்தில் குடியேற்றி, னினைவென்னும் சொர்க்கலோகத்தில் உள்ள பேரின்பத்தை அடையும் செயலை உரைப்பதே சிவானந்த போதம்.

*எவருடைய அனுக்கிரக மாத்திரத்தினால் சோகமும் மோகமும் னாசமாகின்றனவோ, அந்த ஸ்ரீ தேசிகேந்திரராகிய பரமாத்மாவிற்கு னமஸ்காரம்.*
*~ குரு கீதை*


Copyright © AMNA Trust, Chennai

**சிவானந்த போதம் - குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு :**

**அவரெல்லா மிருக்கவிப்போ துன்னை யேம**
**னழைத்துவிடி லியாது செய்வா யழகு னெஞ்சே...**

நமக்குள் இருக்கும் னித்தியப் பொருளான மெய்ப்பாலை அறியவே வயது வாழ்நாள் தரப்பெற்றுள்ளது. அவரவர் னாமமாக உள்ள மெய்ப்பாலை அறிந்து வாழ்வதே எமபயம் கடந்த னித்திய வாழ்வாகும் என அருளி ஆசான் அவையை னிறைவு செய்தார்கள்.

**30-07-2022 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஶ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**தாகமும் தணியான் தன்னுயிர் அறியாத் தரித்திர கொடும் பதிதன் ...** என்ற ஞானமுறையீடு பாடலுடன் அவை இனிதே துவங்கியது.

**ஜீவசகோதரர் சங்கர் :** மனிதனின் மோகமாகிய தாகம் தணியாத வரை, மனமானது தீங்கின் வசத்தில் சென்று தன்னுயிரை அறியாத தரித்திரனாக மாற்றி விடுகிறது. தனிப்பெரும் கடலாக வரும் தவசியாகிய குருபிரான் நம் மோகத்தையும் தாகத்தையும் தணித்து ஜீவனை சந்தித்து வணங்கக்கூடிய வந்தனத்தை கற்பித்து ஏகனாயகனாகிய இறைபொருளில் இரண்டறக் கலக்கச் செய்து காவற்பாடு அளிக்கிறார்கள்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண் – 100 :** ஜீவன் ததும்பி னிதம் அலையாமல் பாதுகாக்கும் செயலே அறம் என தெய்வம் அருளியதற்கிணங்க, பொன் அறம் பிறந்த பீடபூமியாக, அறிவிருக்கும் தலமாக, மதிவளரும் பூவனமாக, தண்டகாரண்யமாக, ஒலிவாமலையாக, னின்றிலங்கும் மெய்குருபிரானின் னாதமானது னம் செவிகளில் னுழைந்து பொன்னரங்கமாகிய சொந்த பூமியில் குடியேற்றி பேரின்ப பெருவாழ்வு அளிக்கிறது.

**காலந் நாட்டிய காரணப்பா பாடல் எண் 41 - கல்லும் முள்ளு மிக்காலம் உணர்ந்நிடா ...** எனத் தொடங்கும் பாடலுக்கு *ஜீவசகோதரி லாவண்யா அவர்களின் புரிதல் :* கல், முள் எனும் ஜடப்பொருள்கள் காலத்தை பற்றி அறியமுடியாது. ஆனால் காலத்தின் உன்னதத்தை உணரக்கூடிய சக்தி பெற்று மானிடச் சட்டை தாங்கி வந்தும் மனதளவில் கல், முள் போன்ற குணங்களை உடையவர்களாக இருப்பவர்களும் காலத்தின் இரகசியம் அறியாத மூடர்களாக, மாக்களாக அல்லற்படுகிறார்கள். காலத்தை கைக்கொண்டு காலாதீத எல்லையை அடைந்த பெரியோர்கள் அவதரித்து வந்து, காலம் கடந்த பொருள் இலங்கும் சாலை வளனாட்டில் குடியேற்றி மெய்வழியில் வாழ வைக்கிறார்கள்.

**திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம் - சீர்காழி வேணுபுரம் திருவரலாறு :** ஜீவசகோதரி சண்முகப்பிரியா அவர்களின் புரிதல்: வேணுபுரம் - மூங்கில் வனம். ஓரறிவு புல் வகையை சார்ந்தது. வித்தில்லாமல் விளையக் கூடியது. திருஞானசம்பந்தர் அம்பிகையிடம் ஞானப்பால் அருந்திய மெய்ச்செயலானது இன்றளவிலும் குருபிரானிடம் சீடர்களாகிய நாம் ஞானப்பால் எனும் யோக உணவை செவி வாயிலாக அருந்திக் கொண்டிருப்பதை உணர்த்துவதாகும்.

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

**சிவானந்த போதம் :**

**காய மன வாக்குத்தான் தளர்ந்த போது**
**கருத்தழிந்து உறுதியற்று பாசம் மீறி**
**னேய பந்ந மாய்கையினிற் பற்றிக் கொண்டால்**
**னெற்றிக்கண் படைத்தவர்தான் னிலைப்பிப்பாரோ**



Copyright © AMNA Trust, Chennai

**மாயமே ஆன விந்நக் காயந் நானும்**
**வல்லமையோ டெத்தனை நாள் வாழுமோ சொல்**
**காயமது னிலையல்ல வென்று முன்னோர்**
**கண்ணினொளி மழுங்நு முன்னே கதியுற்றாரே**

காயம், மனம், வாக்கு தளர்ந்த பிறகும் பாசம் என்ற மாயையில் சிக்கிக் கொண்டால் னெற்றிக்கண் படைத்த குருபெருமானாலும் நம்மை காப்பாற்ற முடியாது. ஆகையால் அழிந்துபோகிற னிலையற்ற இத்தேகம் இற்று விழும் முன், அறிவுக் கண்ணின் ஒளி மழுங்நும் முன், அழியாத் தேகமாகிய அறிவுதேகத்தில் குடியேறி சிவகதி அடைய வேண்டும் என அருளிச் செய்து ஆசான் அவையை னிறைவு செய்தார்கள்.

**31-07-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கடேசன்**

**இப்புவியோர் ஓதுமறை உபனிடத இதிகாசம் எல்லாம் ஓர்ந்நும்**
**தப்பிதமாம் அர்த்தங்ஙள் தனிற்ப்புகுந்து தயங்ஙவெல்லாம்**
**ஒப்பரிய மதிக்கிரண மலையேறி ஓர்னிலையில் ஊன்றிப் பார்க்க**
**செப்பரிய மேம்பாடாம் மெய்வழியில் சேர்ந்நிடுவீர் ஜகத்தினோரே**

என்ற சாலை ஆண்டவர்களின் ஆரம்பப் பிரச்சார பாடலுடன் அவை தொடங்ஙியது.

*குருகொண்டல் அவர்களின் ஆசீர்பாதத்துடன் ஜீவசகோதரர் கௌதம் அவர்களின் பகிர்வுகள்:*

உலக மக்கள் யாவரும் அவரவர் மதத்திற்கு ஏற்றவாறு ஆலயம் செல்வது, விரதம் மேற்கொள்வது, காவடி தூக்குவது என முன்னோர்கள் ஏற்படுத்திய சடங்கு சம்பிரதாயங்களை சிரத்தையுடன் செய்வதன்றி அதன் உண்மை நிலையை அறிய முயற்சிப்பதில்லை. மேலும் தன்னறிவில் சாய்ந்து தான் பக்தி மிகுந்தவன் என்ற தவறான அர்த்தங்களில் புகுந்து சிலை வழிபாடே போதும் என்ற னிலையில் னிற்கின்றனர். மனிதன் மரணமிலாப் பெருவாழ்வு பெற்று அசலான கடவுளை அடைவதற்காக உண்டாக்கப்பெற்ற னகல் அடையாளங்களே கோவில்களும் அதிலுள்ள சின்னங்களும் என்பதை மெய்க்குருபிரான் இரக்கத்தால் ஒப்பறிய மதிக்கிரண மலையேறி ஊன்றிப் பார்க்கும் பிரம்மவித்தையைக் கற்று, செப்பரிய மேம்பாடாகிய மெய்வழியில் சேர்ந்த பின்புதான் அறிய முடியும்.

**பிரம்மவித்தை :** தோற்றமில்லாமை எனும் அரூப வடிவமாகிய அறிவு வடிவாக இறைவன் இருப்பது போல் எமனும் மனம் எனும் அரூப வடிவாக நம்மிடத்தில் இருக்கிறான். ஜீவன் அவாவோடு தாவும் போது மனமாகிறது என்ற தெய்வத் திருவாக்கிற்கிணங்க, சிவனாகவும் எமனாகவும் நம்முள் விளங்கிக் கொண்டிருக்கும் மனதின் இரகசியத்தை பிரம்ம சொரூபராக வரும் குருபெருமான் பிரம்மவித்தையின் மூலம் அறிவித்து அழியாப்பதியில் குடியேற்றி வைக்கிறார்கள்.

**அறம்:** மனம் ததும்பி னிதம் அலையாமல் பாதுகாக்கும் செயலே அறம். ஆசானின் அருளால் அறத்தின் செயல் அறிந்து மெய்ப்பொருள் பெற்று பேரின்ப வீட்டில் குடியேறும் வாழ்க்கையே மெய் வாழ்க்கை.

**செவி உணவின் சிறப்பு:**

**செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்**
**அவியினும் வாழினும் என்**



Copyright © AMNA Trust, Chennai 

என்ற திருக்குறளின் படி, ஆசான் அருளும் செவிச்சுவையை உணராதவர்கள் விலங்குகளுக்கு ஒப்பான ஐயறிவு நுகர்ச்சியில் கிடந்து துன்புறும் அறிவற்றவர்கள். ஆசானின் அருளமுதத்தை செவியில் பருகியவர்களோ மனிதன், தேவன் என்ற பதத்திற்கு ஆளாகிறார்கள் என வேதம் அருளுகிறது.

**அண்டமும் அதிபா தாளம்**
**அகிலமோ டமரர் மற்றும்**
**கண்டனால் யோனித் தோற்றம்**
**கணிக்கொணா உடலோ சங்கம்**
**தொண்டெழு மனிதன் சுத்தத்**
**துறையிரு தயத்தி லன்றி**
**விண்டெங்கும் வெளியா காத**
**இறைவனை இறைஞ்சு வோமே**

என்ற தெய்வப் பாடலின் படி, மனிதனின் சுத்தத்துறை இருதயத்தில் இருக்கும் இறைவனை வெளியாக்கும் வல்லபம் பெற்றவர்களே குருபிரான். அவர்களின் னாதமே மனிதனுள் இருக்கும் இரகசிய பெட்டகத்தைத் திறந்து காட்டி இறைபொருளை தரிசிக்க வைக்கிறது.

**சிவ சிவ என்கிலர் தீ வினையாளர்**
**சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்**
**சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்**
**சிவ சிவ என்னச் சிவகதி தானே.**

வினைக்கு காரணமாகிய மனஓட்டத்திற்கு ஏற்ப மூச்சின் ஓட்டமும் இருக்கும். ஆசானின் அனுக்கிரகத்தால் நம் வினைகள் அறுபட்டு, கதியின் சூட்சும நிலைகளை உணர்ந்த பிறகே சிவகதி எனும் பெருனிலையை அடைய முடியும். இக்கடத்தை னீக்கி அக்கடத்துள் ஆக்கும் மோட்சத்தை நமக்கு அருள் பாலிக்கும் குருபிரானின் பாதம் போற்றி பணிவோம் என்ற புரிதலுடன் அவை நிறைவேறியது.

**31-07-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்**

**அங்கத்தினர்களின் பகிர்வுகள்:**

*ஜீவசகோதரி இன்பலதா:*

**வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி...** என்ற திருத்தாண்டகம் பாடலைத் தொடர்ந்து, ஒரு தலைமுறை காலம் நம்மை தாங்கிக் கொண்டு இருக்கும் ஜீவனை தன்னுள் அறிவது மனிதனின் கட்டாயக் கடமையாக உள்ளது. மனிதனிடத்தில் உள்ள ஜீவாத்மா-பரமாத்மா எனும் நிலைகளையும், கனவு காணும் இடம், உறங்கும் இடம், அறுசுவை ஒளிக்கும் இடம் ஆகியவற்றை அறிய கட்டாயம் ஒரு மெய்குரு வேண்டும். அவரது அருளால் அறிவுக்கண் திறக்கப்பெற்று நம் சொந்த தேகத்தில் குடியேற்றி வைக்கிறார்கள். ஜீவ ஆவியை ஊதியே மனித பிறப்பு உண்டானது என்கிறது சத்திய வேதம். ஆசானின் அருளால் ஏழாம் பிறப்பு எடுத்து நரனாகிய நாம் மனுவாகிறோம். நம் சொந்த தேகத்தில் குடியேறி பேரின்ப வாழ்வு அடையவே நாம் வந்தோம். மனிதன் ஜீவனாகிய அறிவை கொண்டு ஆன்மாவை அறியும்போது ஜீவாத்மா ஆகின்றான்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் சங்கர்:* ஆறாம் பிறப்பு நம் மனம் மூலமாகவும், ஏழாம் பிறப்பு குருவின் முகத்தில் பரிசுத்த ஆவிகொண்டு பிறப்பதாகவும் உள்ளது. நம்மிடத்தில் உள்ள னீதியெனும் மெய்ப்பொருளை கைக்கொள்வதே வாழ்க்கை. அதுவே நம் கடமை. தோற்றம் இல்லாத னரன் என்பவன் மனிதன்- தேவன் என தோற்றத்திற்கு வந்து தெய்வம் என்ற தோற்றமில்லாமைக்கு ஆக வந்தவன். நம்பிக்கையும் மெய் வணக்கமுமே, ஒருவரை அந்த மெய்ச்செயலில் ஏற்றி வைக்கும்.

*ஜீவசகோதரி நாகமணி:*

**பரவிரதாச் சாரியென்று மேசமயாச் சாரினானென் றேவரும்வே டத்தாருரைத்த ...** என்ற ஐம்மணிப் பொதிகை பாடலைத் தொடர்ந்து, காய மன வாக்கினால் நாம் செய்யும் தவறுக்கேற்ப இறைவனால் தேகம் தரப்படுகிறது. வினைகள் தீர எண்ணம், சொல், செயல் இவை மூன்றினாலும் நன்மை செய்து இறைவனை மீண்டும் அடைய வேண்டும். ஆசானின் வாய்மையே திருமேனியாக, வித்தில்லா வித்தாக, னாதமாக உள்ளது. அதுவே நம்மிடம் உள்ள தீமையாகிய பாவத்தை போக்குகிறது. ஆவிக்குரிய சிந்தனையே நித்திய ஜீவனும் சமாதானமுமாய் இருக்கிறது என சத்தியவேதம் கூறுகிறது. மனம் அலைவதால் நித்தம் மரணம் நிகழ்கிறது. அதை அலையாமல் பாதுகாத்து மரணத்தை வென்று நித்திய ஜீவனை அடையலாம்.

*ஜீவசகோதரர் சங்கர்:*

மெய்வணக்கம் என்பதனை திருமூலர் பிரான் திருமந்திரத்தில் அஷ்டாங்க யோகமாக கூறி வைத்துள்ளார்கள்.



***திரு. சாலை ரவி அப்பா அவர்கள்***
***நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை***

**ஏமம்:** நமது உடற்கூறின் ரகசியங்களை அறிவது.

**இயமம்:** உடற்கூறின் ரகசியங்களை அறிந்து அதன்மூலம் மேன்மையில் ஆகிக் கொள்வது.

**ஆசனம்:** முக்கோண சக்கரத்தில் குரு சொன்ன ஆசனமிட்டு அமர்வது.

**பிரத்தியாகாரம்:** ஐம்புலக் கதவை அடைக்கும் பேரறிவை ஆசான் பேரிரக்கத்தால் அறிவது.

**பிராணாயாமம்:** நம்மை உயிர்ப்பிக்கும் பிராணனை வீணாக்காமல் தேக்கும் செயல்.

**தாரணை:** கவனம் சிதறாமல் மன ஓட்டத்தை கவனிக்கும் பெருநிலை வைப்பு.

**தியானம்:** குருவின் திரு உருகொண்டு மனதை இரட்சிக்கும் அக்கினியில் நிலை நிறுத்தும் செயல்.

**சமாதி:** ஆதியுடன் கலந்து சமம் ஆகின்ற செயல்.
இதனை வள்ளல் பெருமான், நான்கு நிலைகளாக ஏமசித்தி, சாகாகல்வி, தத்துவ நிக்கிரகம் செய்தல், கடவுள் நிலை அறிந்து அம்மயம் ஆகுதல் என அருளியுள்ளார்கள். இதனையே திருவள்ளுவரும் அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் என அருளியுள்ளார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் கணேசன்:*

நம் உயிராகிய ஏழ்னிலைக் கம்பத்தை சிதைவில்லாமல் காப்பதே பூண் எனும் பூணூல். காசி என்பது நம்மை காக்கும் சிவமாகும். கங்கா ஸ்நானம் என்பது ஆகாய கங்கையாகிய ஆசானின் அமிர்தவர்ஷிப்பில் மூழ்கி புண்ணியம் அடைவதாகும் என்ற பகிர்வுகளுடன் அவை நிறைவுற்றது.

## இசை வகுப்புகள்
## தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்

### 03-07-2022 ~ ஞாயிற்றுக்கிழமை

**அழியாப்பதி குடியேறிய...** என்ற தோத்திரப் பாடலுடன் இசை வகுப்பு மலர்ந்தது. தொடர்ந்து முரீதுச்சுருக்கம் காப்பு செய்யுளான,

**பெருவறம் தாங்ஙித் துறவறம் பாய்ந்து**
**பெற்றதைப் பெற்றபே ரின்பக்**
**குரவர்கண் ணகத்தே வாழ்பதி யரசிக்**
**குருமுகம் மதுவெனும் கொழுந்நின்**
**பரம்பரை யுவந்ந முரீதெனும் சுருக்கம்**
**பகருதற் காதியின் பாதம்**
**னிரைரிரை காப்பா யெமக்கெடுத் தளிப்போர்**
**னீடுனீ டூழினின் றுலவும்** என்ற பாடலும்,

**கலிமாவெ னும்பெரு முத்தொன்றி லங்ஙியே**
**காணுதின் சானுக்குள்ளே அது**
**காணுவிந் நுவினிற் கூடவே வந்நுக**
**ருக்கூட கத்துக்குள்ளே அதைக்**
**கண்டவர் தாமூமீன் றேகமண் தீண்டல்ஹ**
**ராமென்ற துவேதம் எனக்க**
**துரைத்தது வேபோதம் ஆதம் பாதம்**
**னிறைனாத மதனா (கலிமா)**

என்ற பாடலும் பாடுவதற்கான பயிற்சி வழங்கப்பெற்றது.

### 10-07-2022 ~ ஞாயிற்றுக்கிழமை

**தாகந் தீர்த்தத னிப்பெருங் ஙடலேயென்...** என்ற குருஸ்தோத்திரப் பாடலைத் தொடர்ந்து,

**னெடும்விரி புவனந் தன்னில்**
**னரஜென்ம மெடுத்தோம் னெஞ்சுத்**
**திடும்பகற்றி மக்க ளாகி**
**எறிப்பின் தேவ ரானோம்**
**இடும்பறா னரஜென் மத்தே**
**இருந்நிளைப் பவர்க்கு மீட்பு**
**திடந்நரும் தேடு கூடம்**
**தேவரே னடம்செய் வோமே** என்ற பாடலும்,



Copyright © AMNA Trust, Chennai

வாரும் உலகீரே - செயற்றுறை
தேரும் புவியோரே

வருமொரு பெருமொழி
குருனெறி முறைவழி
திருவள ரிறையருள்
பெருகப்பெ ருகும்னிதம் - வாரும்

தரையில்ன ரஜெனனக்
குறயறுந் நிடமனு
திறலுறுந் நவத்துறை
தேவர்ன மவரென - கூவும் திருமறையன்
பனிப்படா - னாவு தருமுரையே

அருளுமெய் வழிக்குடி
திருவளர் குருகுல
அறமணி முனிவர்கள்
அனந்நர் ரிஷிகள்தேவர் - ஆன னிலைப்பேறே
தனித்தனி - ஆண்டபெரும்பேறே

தரையில்ன ரராத்தோன்றித்
தேவரா கவந்நோரே
தேரைவாய்ப் பட்டவண்டு
தேனுண்ப துபோலான - வாரும்

னரஜென னமெடுத்தன்
னரகிலி ழிந்நிடாது
அரியமெய் வழியடைந்
நாளுந் நேவரென - வாரும்

கலைகள்க மழுகின்ற
பழமறை மனுமகன்
ஒலிவாம லையினின்ற
னிலைவழிப் படியிங்ஙு - னேசந் நருமிறைவன்
பளிச்சென - ஓசை வாமலையோன் -

என்ற தெய்வத்தேடுகூடகம் பாடலும் பாடுவதற்கான பயிற்சி வழங்கப்பெற்றது.

**31-07-2022 ~ ஞாயிற்றுக்கிழமை**

ஆறிரு சமயத்திற்கும் அறிவுரை தெய்வ மாகி .. என்ற தோத்திரப் பாடலைத் தொடர்ந்து, வாரும் உலகீரே ... என்ற தெய்வத்தேடுகூடகம் பாடலும்,

இனிக்கதி யில்லை யென்னும்
யுகத்தவச் சாலை யான
தனிப்பதி உதயம் செய்துத்
தேவமெய்க் குலமுண் டாக்கிக்
கனிமொழி மாது மக்கள்
காண்பவர் வியந்து னோக்கப்
பனிமதி மங்கை பங்ஙன்
பரமரைப் பார்ப்பீ ரம்மே என்ற பாடலும்



Copyright © AMNA Trust, Chennai

**னானிலந் நனிலே இங்ஙு**
**னரசென்ம மெடுத்தோ ரெல்லாம்**
**வானவ ராவ தற்கு**
**மக்களா குவதென் றோரா**
**ஆணவ இடும்பி லேறி**
**அறமெலிந் நுருக்கு லைந்நு**
**காணுமூர் வனம்ப றவை**
**காலிகா உரைசெய் வீரே**

என்ற பாடலும் பாடுவதற்கான பயிற்சி வழங்கப்பெற்றது.

## குரு வாழ்க! குருவே துணை !!

*எவருடைய அனுக்கிரகத்தைப் பெற்று, அதனால் மகத்தாகிய அக்ஞானம் னீக்கப்படுகின்றதோ அந்த ஸ்ரீ தேசிகேந்நிரருக்கு அபீஷ்ட சித்தியின் பொருட்டு னமஸ்காரம்.*
*~ குரு கீதை*



Copyright © AMNA Trust, Chennai

**ஜூலை மாத நிகழ்வுகள்:**

| தேதி | நிகழ்வுகள் |
|---|---|
| **30-07-2022** | ஜீவசகோதரர் திரு. கணேசன் அவர்கள் அடக்கம் அடைந்தார்கள் |





Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2022 ஆகஸ்ட் மாத அவை நிகழ்வுகள்


Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் வர்ஷிப்பு

ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே, எதார்த்த நன்மன சற்சன மக்களே, 14வது இதழாக மலர்ந்துள்ள இம்மாத மின்னணு சஞ்சிகை, 18-அவை நிகழ்வுகளையும், 3-இசை வகுப்பு நிகழ்வுகளையும், தன்னகத்தே கொண்டுள்ளது. சிறப்பு நிகழ்வாக நேர்முகத்தில் நடைபெற்ற சிவகாசி, தூத்துக்குடி அவை நிகழ்வுகளும் மற்றும் சென்னை காணொளி காட்சியின் சிறப்பாக கிருஷ்ண ஜெயந்தி தினத்தில் வரலாற்று சான்றுகளுடன் பரமாத்மாவின் சரித்திர குறிப்புகளும் பகவத் கீதையின் சாரம்சங்களும், பாரதப்போர் மற்றும் அதில் நிகழ்ந்த விஸ்வரூப தரிசனை பற்றியும், விநாயகர் சதுர்த்தி சிறப்பு அவை நிகழ்வுகளும் இவ்விதழில் விவரிக்கப் பெற்றுள்ளன. மிகவும் போற்றக்கூடிய விஷயமாக உத்தேசமாக 100 நிமிட நேரம் நடைபெற்ற ஒரு அவை நிகழ்வின் சாரம்சத்தை, அதன் மையக் கருத்து மாறாமல் ஐந்து முதல் ஏழு நாட்களில் எத்தனையோ இடர்களுக்கு இடையிலும் தொகுத்து வழங்கும் மக்களின் மகத்தான முயற்சியும், அதனை நேர்த்தியாக, சஞ்சிகையாகக் கட்டமைக்கும் அதற்கான பாடுகளும், ***வேதாந்நத் தெளிவிறுத்துப் பாகுபடத் திரட்டி வைத்தனபோன் மதியமுத கலைக்ஞான போதம்*** என்றும் ***பாற்கடலை காய்ச்சி வடித்தெளித்திட்ட வேதாந்தம்*** என்றும் கூறுதற்கு இணையாக உள்ளது. போற்றுதலுக்குரிய தொகுத்து வழங்கும் செயலுக்குரிய நன்மக்கள், பரம்பொருளாகிய பரிசுத்த ஆவி தெய்வத்தின் முழு ஆசீர்பாதமும் கிடைக்கப்பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனின் திருவடிகளை வேண்டுகிறேன். பேரனைத்தும் பெற்ற பெருமானின் பெருமையைப் போற்றி புகழ்ந்து பேசுவதே நாம் பெற்ற பெரும் பேராகவும், வாய்ப்பாகவும் இச்சஞ்சிகையின் நோக்கமாகவும் உள்ளதேயன்றி, நிச்சயமாக நமது தற்பெருமை பேசுவதற்கல்ல. ***தளிரிலைபூங் நாய்பழமாய்ச் சொரிந்ந பாதம்*** என ஆண்டவர்கள் அருளியுள்ளது போல், எத்தனையோ இடர் கடந்து ஒரு விதையிலிருந்து தோன்றி பாதுகாப்புடன் வளரும் ஒரு செடியின் தளிர், இலை, நிலை கடந்து, மொட்டாகி, பூவாக மலர்வது போன்றே, இந்த சஞ்சிகையானது மலர்ந்து உங்கள் கைகளில் தவழ்கிறது. மாறாத மெய் மணத்துடன் வரும் இதனை மக்கள் நுகர்ந்தும், பார்த்தும், படித்தும், பிறவா நெறி பெற்று, ஆண்டவர்களின் திருப்புகழை அறிக்கை செய்வதற்குரிய அடியவர்களாகத் திகழ வேண்டும் என பரிசுத்த ஆவித்தெய்வத்தின் திருவடி போற்றி வேண்டுகிறேன்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

*இந்நத் தூல தேகத்திலுள்ளவர்கள் பரமாத்வாவைக் காண முடியாது. ஆனால் பரமாத்மா தூலமெடுத்து வந்து இத் தூலத்திற்கு அப்பால் உள்ள ஜீவாத்மாவை அறிவிக்க அறிய முடியும். பரமாத்மாவிற்கு மூச்சு ஆடாது. மூச்சு ஆடிக் கொண்டிருப்பது ஜீவாத்மா. ஜீவாத்மாவின் மூச்சு அடங்குவது பரமாத்மாவைச் சார்ந்த னிலையில். இதற்கு ஜீவாத்மா தன் உடல் பொருள் ஆவியைப் பரமாத்மாவிற்குத் தத்தம் செய்து, அது தன்னுடைய உடல் என்று ஆன பிறகுதான் ஆகும்.*

***~ சாலை ஆண்டவர்கள்***



Copyright © AMNA Trust, Chennai

**04-08-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**வான்மதிக் கொரல் வாக்கியம் எண் -78**

**பவக்கடல் தவிக்கும் மாந்நரைக் கரைசேர்**
**பருமரக் கலங்ஙிடைத் தனபோல்...**

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**
எந்நக் காலத்தும் பழுதுபடாத மகா கனங்ஙொண்ட தெய்வ என்ஜின் காருண்ய மெய்மேனி தாங்ஙிவந்நு, மெய்வழி என்னும் கப்பலை அலுப்பயர்வு பாராது இரவுபகல் இழுத்துச்சென்று, தன்னை அண்டி அடைந்ந பல ஆயிரக்கணக்கான மக்களை, பவக்கடலாகிய பிறவிக் கடலினின்றும் தப்புவிக்கின்றது. சீர்காழியில் உள்ள சட்டநாதப் பெருமானாகிய, அம்மையப்பனே திருஞான சம்பந்தருக்கு ஞானப்பால் வழங்கிய தோணியப்பர். அவரே மக்களை மரண குளிரிலிருந்து மாற்றும் பேராற்றலான அத் தோணியாக உள்ளார்.

*ஜீவசகோதரி லாவண்யா :*
**காலந் நாட்டிய காரணப் பா பாடல் எண்- 42: சாலை ஐயறன் சோலினாப் பைதன்னை**
சர்வ மதங்களின் உயிராணித் திருச்செயலாகிய மறலி கை தீண்டாமை என்பதும், அழிவில்லா நித்திய தேகத்தில் புகுத்தாட்டி வைப்பதும் மெய்வழி சாலை ஆண்டவர்களின் மறலி கைதீண்டா மெய்மதமாக உள்ளது. குருபிரானின் ஞானாகாயப் பெருவெளியான சுத்த நினைவிலிருந்து வரும் சொல்லொரு பொருளினால் நம்மையும் மேன்மையான நிலையில் ஏற்றி வைக்கிறார்கள். தங்களின் கோடாயிதத்தால் நம்முள் இருக்கும் சொர்க்க, மத்திய, பாதாளத்தைக் காட்டி மனதை அறிவாக மாற்றி அதன் மூலம் சஞ்ஞித, பிராரர்த்த, ஆகாமியம் எனும் மும்மூலம் கடந்து ஐம்புலக் கதவை அடைக்கும் பேறறிவை அருளுகிறார்கள். வள்ளல் பெருமானின் **நல்ல மருந்து இம்மருந்து சுகம் நல்கும் வைத்தியநாத மருந்து** எனும் கூற்றிற்கு இணங்க மெய் மகத்துக்களின் நல்லாசியை பெறுவோம்.

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு :**
மெய் உணர்வு தைப்பதால் தெளிவான புரிதல்களும், சொல் வன்மையும் நம்மிடத்தில் உண்டாகும். இவ்வுலக வாழ்வில் சகல விஷயங்களை அனுபவித்தாலும் தண்ணீர் மேல் தாமரை இலை போல், புளியம்பழ ஓடு போல் வாழ்வதற்கு பழகிக் கொள்ளுதல் நலம். சப்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி என்பது, பொய் உடம்பின் உள்ளே மெய் உள்ளதுபோல் சப்தத்திநுள்தான் நிசப்தம் உள்ளது. இயற்கைக்கு ஒத்து இயல்பாக வாழ்வதே நலம். சூரியபகவான் உத்திர திசையிலிருந்து தெக்ஷிணதிசை நோக்கி பயணம் தொடங்கும் மாதமே ஆடிமாதம். ஆண்டாள்மங்கை அவதரித்த மாதமும், (18ஆம்) ஆடிபெருக்கு, வரலட்சுமி நோன்பு, மாரியம்மன் கூழ்வார்த்தல், ஆடி அமாவாசை என பல சிறப்புகள் கொண்ட ஆடி மாதத்தை ஆண்டவர்கள் **கொடுங்கலி னீதீனடவு ஆனி ஆடி** கலியை அழிக்கும் நாளாக வருவது ஆனி, ஆடியில் என அருளுகிறார்கள்.

*ஜீவசகோதரி சண்முகப்பிரியா :*
**தேவாரம் திரு வேணுபுரம், பாடல் எண்-01 வண்டார் குழலறிவையோடு பிரியா வகை**
வண்டார் குழல் என்பது ஆசானின் அருளமுத வர்ஷிப்பு. ஆறுஆதாரம், நான்மறை ரகசியம் அறிவதே அறிவாகும். இதையே **ஒரு மொழியில் னான் மறையும் அங்கமாறுமே துலங்ங** என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். ஆசானின் னாத ஒலி நம் அறியாமையை அகற்றி அறிவு வடிவாக்கி மனதை சிபத்தெனும் மேல் நோக்கமாக்குகிறது


Copyright © AMNA Trust, Chennai

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

திருவடியாகிய நற்றாளின் ரகசியத்தை மெய் மகத்துக்கள் வந்து அறிவிக்கும் போதுதான் நம்மால் அறிந்து கொள்ள முடியும். ஜீவன் தன்னுடைய சொந்த மூலவள நாட்டில் போய் ஒடுங்கி சிவனாகும் செயலை இறைவன் நமது தூக்கத்தில் காட்டுகின்றான். தூக்கம், கனவு, விழிப்பு, பேருறக்கம், உயிர்ப்படங்கல் எனும் அவஸ்தை கடப்பதே அசைவற்ற நிலையாகும். காலச் சக்கரத்தின் ரகசியமே கனவு. அங்கத்தினர் குல வலு எழில் பா: பாடலில் அங்கம் என்பது ஆசானின் இரக்கத்தால் ஆறாவது அறிவு இன்னதென அறிந்து அங்கத்தில் உஜூது நடை கண்டு சுவாசம் ஒடுங்கும் நிலையாகும். எமனணுகா சாயுச்ய நிலையும் மெய்க்கல்வி என்பதும் இதுவேயாகும்.. **தேங்வி வந்திங்கேங்விய மதங்களுக்கு ஓங்வியே விழிப்பளித்த ஒ குபேரா... *குபேரன்*** - அறியாமை எனும் இருளகற்றி, மூன்றாவது கண் திறந்து வெளிச்சம் வந்த நிலையாகும்

**சிவானந்த போதம் - காயமன வாக்குத் தான் தளர்ந்த போது கருத்தழிந்து** *என தொடங்கும் பாடல்*

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

மூன்றாவது கண்ணொளி பெறாவிட்டால் நாம் விழிக்குருடனாகவே இருப்போம். இறைவன் மனிதனுக்கு தந்த வல்லமையான *மெய்ப்பொருள் சுமையை* என்பதை அறியாவிட்டால் அரிதாகிய மானிட ஜென்மம் எடுத்தும் பலன் இல்லை என குருவானவர் அறிவிக்க, அப்படியானால் திருவடி அடைவதற்கு வழி கூறுங்கள் என சீடன் கேட்க, **முந்தி பரிபூரணமாய் முக்தி அடைந்தவர்கள் சிந்தை மகிழ்ந்தோதும் சிவ நூலை** என பாடலைத் தொடர்ந்து, சிவனூல் பிராணனைக் குறிப்பதும் அதனைப்பகுத்து என்பது, *இடவலம் சுழினை எழுந்தறு கோணத்தில் இட முரீதாகும்* இடம், வலம், என்றிருந்தாலும் இடமாகிய அறிவு தான் முரீதாக உள்ளது.

**துறந்தவர்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வான் என்பான் துணை.** மனதை துறந்தவனே துறந்தவனாகும். இல்வாழ்க்கை என்பது *இல்லறத்தின் அகண்ட முடிச்சுடர் தேகத்தில் இருப்பவர்க்கு னவக்கிரக அதிகாரங்கள் செல்லாது* என இரண்டாம் காண்டம் செய்யுளில் ஆண்டவர்கள் அருளியுள்ளதும் கூர்ந்து நோக்க வேண்டிய ஒன்றாகும்.

**சீடன்** - முத்தியை மட்டும் பேசும் நூல்கள் உள்ளதா என வினவ?
**ஆசான்** - பெரியோரின் திருனாவில் இருந்து அஞ்ஞனமாய் நவின்ற மொழியாக பிரம்மபிரகாசமாக திருவடியின் ரகசியம் வெளியாகிறது. முத்தி என்னும் விடுதலை அளிக்கவரும் ஆசானின் வர்ஷிப்பானது நமது அக இருளை அகற்றும் பிரம்மப்பிரகாச வித்தில்லா வித்தாக உள்ளது. *வல்லபமான கலைகள் திரண்டு வரும் ஒரு பெருங்விரணம், முத்தி மழை பொழியும் முகில் வண்ணர் வந்தார், உம்பர் தொழும் கழல் உடையார் வந்தார் தாமே,* என்பதற்கு இணங்க அவர்களே நம்மைத் தேடிவந்து இரக்கத்தால் எடுத்துரைக்க வருகிறார்கள். மேலான நற்கதிக்கு நம்மை ஆளாக்கி, நமக்குள் இருக்கும் ஈசனை, தேனுக்குள் புதைந்திருக்கும் இன்பத்தை போல் அறியலாம் என அருளிச் செய்து அவையை இனிதே நிறைவு செய்தார்கள்.

**06-08-2022 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**உய்ய வேயெனக் கும்முல குய்யவே**
**செய்ய வென்றுதி ருவடி தந்நவர்**
**அய்ய னென்குரு அப்பன்த னிகையர்**
**துய்ய னென்குல தெய்வமென் தேவனே**

என்ற தோத்திர பாடலுடன் அவை இனிதே துவங்கியது.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் சங்கர்:*

உலகம் உய்வதற்காகவும், திருவடி ஞானத்தை பெற்று மக்கள் பேரின்ப பெருவாழ்வு வாழ்வதற்காகவும் ஆண்டவர்கள் பெருங்கருணை பேரிரக்கம் கொண்டு இப்பாடலை அருளிச் செய்துள்ளார்கள்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண்-101**

மனிதன் தவிர்த்து மற்ற ஜீவ பேதங்களுக்கு இருளைக் கண்டு பயம் இல்லை. இதன் காரணத்தை எமனுடைய வாடை அடிப்பதால் மனிதனின் உள்ளத்தில் பயமும் பேடித்தனமும் உண்டாகிறது, என்ற தெய்வ வாக்கியத்தின் மூலம் அறியலாம்.

**எமபயத்தை தாண்டாத**
**எவ்வாழ்வும் வாழ்வல்ல**
**எமபயத்தை கடந்நிடிலோ**
**எவ்வாழ்வும் வாழ்வாகும்**

காலாதீத செயலை கைக்கொண்டு வரும் குருபிரானிடத்தில் சற்பாத்திரனாக இருந்து பிரம்மவித்தை செயலை பழகித் தேர்ந்தவர்களுக்கே காலனென்ற பயங்கள் காணாமல் போகும் என வேதம் கூறுகிறது.

*ஜீவசகோதரி லாவண்யா :*

**காலந் நாட்டிய காரணப்பா - பாடல் எண் : 43 தேச மெங்ஙும் சிறந்நு செழிக்கவே....**

மனிதனின் தலை தென்திசையை குறிக்கிறது என வள்ளல்பிரான் அருளியபடி, தென்னாடுடைய சிவத்தை அறிந்து என்னாட்டிற்கும் இறைவனாக வரும் குருபிரானின் அமுத னாவிலிருந்து வரும் ஓசை கொண்ட னடனமே னம் தலையை செழிக்கச் செய்து மனு ஈசன் என்ற பதத்தில் ஏற்றுகிறது.

*ஜீவசகோதரி பூர்ணிமா :*

**ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் - அதிசயப் பத்து பாடல் எண்-07 பொத்தை ஊன் சுவர் புழுப்பொதி**

புறத்தோலெங்கும் புழு அழுக்கு மூடி என்ற சிவபுராணப்பாடலின் படி, அனித்திய ஆக்கை குடிலாகிய இத்தேகம் பொய் என்பதை உணர்த்தி இத்தேகத்துள் *மறைந்துள மாமணி ஜோதியாகிய* மெய்யை மெய்ப்பிக்கும் குருவின் திருச்செயலே அதிசயப் பத்தாகும்.

*ஜீவசகோதரி சண்முகப்பிரியா :* **திரு ஞானசம்பந்தர் அருளிய தேவாரம் (திருவேணுபுரம்) பாடல் எண்-02 படைப்பு னிலை யிறுதிப் பயன்பருமையொடு நேர்மை**

வஞ்சு புலன்களுக்கு தலைவனாகிய மனதை அறவழியில் பழக வைத்து அறிவாக மாற்றுவது ஆசானின் வாய்மை. அவ் வாய்மைக்குள் ஆகிக் கொண்டவர்களின் பொய் மலக்குற்றங்கள் அனைத்தும் நீக்கப்பட்டு எண்ணம், சொல், செயல் யாவும் மேல்னோக்கமாக மாறும் என்பதை உணர்த்துவதே திருவேணுபுரத்தின் சிறப்பாகும்.

*ஜீவசகோதரர் சங்கர் :* **சிவானந்த போதம் : (முத்தி னிலை)**

விழிப்புலகேற்றும் விமலராகிய ஆசானின் னாதம் னம் செவிகளில் னுழைந்த பிறகே, நாம் வாழும் இந்த உலக வாழ்க்கை னிஜமல்ல என்பதையும், முத்திக்குரிய செயலை பழகி தேர்வதன் மூலமே விழிப்புலகில் குடியேற முடியும் என்பதையும் உணர முடியும். தோற்றமுடையவை அனைத்தும் அழிந்துவிடும். தோற்றமில்லாமை எனும் அரூப வடிவமாகிய அனாதிப்பொருள் அழியாதது என்பதை அறிவிக்கும் வழியே மெய்வழி. ஐவழி விளைவுக்கும் அப்பாலுள்ள அம்மெய்வழியில் நம்மை வழிக்கூட்டி னடத்தி முத்தியை அளந்து கொண்டிருக்கும் னம் குருபிரானின் திருவடி போற்றி பணிவோமாக!



Copyright © AMNA Trust, Chennai 

**07-08-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவசாரி சபை**
**தொகுப்பு: ஶ்ரீ. கிருஷ்ணமூர்த்தி**

*ஜீவசகோதரர் கௌதம்* : ஒவ்வொருவரிடமும் மனம் என்பது கீழ்நிலையாகவும், அறிவு என்பது மேல்நிலையாகவும் உள்ளது. ஞான செம்மல்கள் தங்கள் பேரிரக்கத்தால் மேலாம் பதமான அறிவு சொரூபத்தை அறியவைத்து நம்மை ஒழுக்க நெறியில் அமர வைக்கிறார்கள். பரிபூரண வாழ்கை வாழ்ந்து கொண்டிருக்கும் குருபெருமானிடத்திலிருந்து வரும் னாதமே வேதமாக இருக்கிறது. அதனைப் பருகும் மனுவின் ஜீவனானது வலுவேறி பரிபூரண நிலைக்கு ஏற்றப்பெறுகிறது.

மூலமந்திரம் சொல்லும் முன் **முத்திபூர்ணம்** எனவும், மாலை வணக்கத்தில் **முத்திலோக சித்திபூர்ணம்** எனவும், இரவு வணக்கத்தில் **உத்தியோவன சித்திகானகம்** எனவும், ஜீவப்பிரயாணமான பிம்பம் இருக்கும் எல்லையில் **முத்திலோகம்** என உச்சரிப்பதும் ஆண்டவர்கள் அருளியுள்ள வணக்க முறைகளாகும்.

ஒன்று முதல் ஐயறிவு உயிரினங்களுக்கு தாங்கள் உடலெனும் கூட்டில் சிறைப்பட்டுள்ளதை அறியும் ஆற்றல் இல்லை. அதை அறியும் ஆற்றலுள்ள ஆறு அறிவுள்ள மனிதன், தான் அதிலிருந்து விடுதலை பெறும் நினைப்பின்றி இருப்பதை மாற்றி, முத்தி மூலப்பண் ஆரமணியை அறிந்த ஞானிகள், அவனை விடுதலையாகிய வீடுபேறு அடையச் செய்கிறார்கள். அறிவை அடிப்படையாக வைத்தே இந்து (சந்திரன்) சமயம் என்ற பெயர் உண்டானது. பூரணமாகிய அறிவிலிருந்து பூரணத்தை எடுத்தால் எஞ்சி இருப்பது பூரணமே என்பதனை ஆண்டவர்கள், **நித்தியனும் நித்தியத்திற்கே படைத்தான்** என அருளியுள்ளார்கள்.

நாளும் கோளும் அறிந்தவரே தமிழன். உயிரின் ரகசியமாகிய இதனை தொல்காப்பியரின் சீடரான கணியன் பூங்குன்றனார் **யாதும் ஊரே யாவரும் கேளீர்** எனக் கூறியுள்ளார். ஆசான் அருளும் அறிவு விளக்கத்தால் சீடனின் அறியாமை விலகி அறிவு விளக்கம் பெறுவதே *நின்றதொரு பிரளயம்* ஆகும்.

தேவத்தன்மை பெற்றவர்கள் தன்னை அண்டி வந்தவர்களை னரனிலிருந்து மனுவாக்கி தன்னைப் போன்றே தேவத்தன்மையில் ஆக்கி வைக்கும் செயலையே சத்திய வேதத்தில், *அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். (யோவான் 1:12)* என கூறப்பெற்றுள்ளது. குருபெருமானின் திருக்கயிலாயப் பரம்பரையாக வாழையடி வாழையாக வரும், அவர்களின் சொந்த மக்களாகிய சந்ததிகளுக்கு அறிவிப்பதே பத்தியம் என்பதாகும்.

மனிதனிடத்தில் மூச்சின் ரகசியம் வயது வாழ்நாளாக, காலமாக, விதியாக, உணர்வெனும் கம்பமாக உள்ளதும், அதன் அசைவுக்கேற்ப மூச்சு இயங்குவதை உணர வைக்கின்ற செயலும் இன்று ஆதி மார்க்க நீதி அவையின் அங்கத்தினர்களுக்கு செயல் அனுபவமாக உள்ளது. நிறங்களற்ற இறைவன் அனைவருள்ளும், நிறங்கள் ஓர் ஐந்துடைய பஞ்ஞபூத தலையரசனாக இருந்து அருள் பாலிக்கிறார் என்ற உரையாடலைத் தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவுற்றது.

**07-08-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஶ்ரீ. தியாகராஜன்**

**ஓதுமறை வேதனெறி உண்மையாய் ஒழுகிவளர்** என்ற தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. **கல்லாலின் புடையமர்ந்து** என்ற திருவிளையாடல் புராணப் பாடலைத் தொடர்ந்து,



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரி அன்னலட்சுமி:* வேதமாக பிரம்மமாக இருக்கும் நான்முகனை, அவரவர் முகத்தினில் அறிவதற்கே பெரியோர்கள் அருளிய வேதங்கள் யாவும் உள்ளது. ஆசான் திருமேனியாக, அறிவாக, வேதமாக இருப்பது ஆசானின் னாதமே. அதன் மூலமே நம் அறிவுக்கண் திறக்கப்பெற்று, தன்னையறியும் தவச்செயலை அறிய முடியும்.

*ஜீவசகோதரி பொன்பிரியா:* விஷ்ணுவின் சன்னதங்களாக, சங்கு, சக்கரம், கதை, பத்மம் உள்ளது. சங்கு நம்மிடம் சப்தம் பொதிந்துள்ள இடமாகவும், சக்கரம் ஜீவனின் இருப்பிடமாகவும், கதை கதியாகவும், பத்மம் காரண தேகத்தின் ரகசியமாகவும் உள்ளது.

*ஜீவசகோதரி வாசுகி:* ஐம்புலன் வழியே புறத்தில் அலையும் மனம் ஒரு மெய்க்குருபிரானின் னாதத்தை செவியில் கேட்டு உணர்கையில் சைதன்யமாகி, பொருட்காட்சியாகி, னிலையாகி, பிரம்மமாகிறது. குருபிரானின் பெருங்கருணையினால் இந்த செயலானது நடைபெறுகிறது.

*ஜீவசகோதரி தீபா முருகேசன்:* ஆறு அறிவு இருந்தும் ஐயறிவு நுகர்ச்சியிலே வாழும் நாம் ஆறாவது அறிவின் வல்லபத்தை ஆசானின் னாதம் மூலமே அறிய முடியும்.

*ஜீவசகோதரர் முனியாண்டி:* ஆதி னூரானியை தன்னில் அறிந்தவர்களே *ஆண்பிள்ளையான ஆண்குரு.* அவர்களின் ஓர் மொழி கீதையே வந்த வேதம்.
நாம் செய்யும் நகல் வேலைக்கு வரும் அசலான னரகத்தை தவிர்க்க ஆசானின் னாதத்தை செவியில் கேட்க வேண்டும். **சத்திய வேதத்தில்** *காது உள்ளவன் கேட்க கடவன்* என அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் பாண்டி:* னரரை மக்களாக்கி, மக்களைத் தேவர்களாக ஆக்கும், தடையற்ற முழு தீரமாகிய மெய்க்கல்வி, எதார்த்த தேவகுருவின் னாதமே. அதுவே அறியாமையுள் இருக்கும் அறிவை அறிய வைத்து மறுபிறப்பிலாக்கி தேவராய் பிறக்க தேரைந்து மந்நிரம், தேவ ரகசியம் தேடு உன் னுடம்புள் என்பதை அறிய வைக்கிறது.

*ஜீவசகோதரர் சுந்தரவடிவேல்:* இருதயம் என்பது கழுத்துக்கு மேலே இருக்கிறது என்பதும், அறம் என்பது எடுத்துக் கொடுத்தாலும் குறையாத செல்வத்தை உடையது என்பதும், ஞானத்திற்கு தேவை வைராக்கியம் என்பதையும் *ஆதி மார்க்க னீதி அவைக்கு* வந்த பின்னரே ஆசானின் னாதம் மூலம் அறிந்து கொண்டேன்.
*ஜீவசகோதரி அஞ்ஞனா:* ஆசானின் வாய்மையே ஞானத்திற்கான நுழைவு வாசல். ஆசானின் வாய்மைக்குள் ஆவதுதான் உன் வேலை எனவும், ஆலயம் புகுதல் அழிவில்லா வாழ்வு எனவும், சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். ஆன்மா லயமாகும் இடம் ஆலயமாகவும், கொடிக்கம்பம் உணர்வாகவும், பலிபீடம் அறியாமையை பலியிடும் இடமாகவும் இருக்கிறது. மனிதன் தன்னை அறியும் ஒரே நோக்கத்திற்கெனவே பெரியோர்கள் கோயில்களை உண்டாக்கினர்.

*ஜீவசகோதரர் பொன்செல்வம்:* மனம் அடங்கி இருப்பதுவே அடக்கம் என்பதை பெரியோர்களின் பேரிரக்க கருணை கொண்டே தெரிந்து கொள்ள முடியும். வந்த வந்த ஞானிகள் யாவரும் உடல் கடந்து அதனுள் இருக்கும் உயிரைப் பற்றியே அருளுகிறார்கள், ஆசானின் னாதத்தைக் கொண்டே மனதின் சலனங்களை அறிய முடிகிறது.

*ஜீவசகோதரர் பழனிசெல்வராஜ்:* பொய்யை பொய்யென்று ஒப்புக் கொள்வதே ஞானத்தின் முதற்படி. காலமாக இருக்கும் உலகத்தைக் கடந்த ஆசான் அவர்களே காலத்தின் ரகசியத்தை அறிவிக்க முடியும். காலம் மூன்றும் கண்டது உபதேசம் என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். நம்மிடத்தில் உணர்வு அறிவாகவும், உணர்ச்சி மனமாகவும் இருக்கிறது. ஆசானின் னாதத்தை செவியில் உணரும்போது உணர்வில்


Copyright © AMNA Trust, Chennai

மேலோங்கி அறிவாகவும், உணர்ச்சியில் இருக்கும் போது மனமாக அறிவற்ற நிலையிலும் இருக்கிறோம்.

*ஜீவசகோதரி பாலஅபிராமி:* குரு பிரானின் கட்டளைக்கிணங்கி ஓர் நினைவாய் அவர்கள் பழகித்தரும் செயலை கவனத்துடன் செய்து வந்தால் இறைவனின் திருவடியை அடையலாம்.

*ஜீவசகோதரர் சங்கர்:* இந்த மெய்ஞ்ஞான சிவராஜபாட்டையில் உள்ள மக்களின் அறிவு, ஓர் மொழி கீதையான ஆசானின் வாய்மையால் கூராகிறது. அழிகின்ற இக்கடமாகிய அறியாமையில் இருக்கும் வரை துக்கமும், அக்கடத்துள் ஆகும்போது துக்க நிவர்த்தியும் உண்டாகிறது.

**குருபிரான் அருளமுத வர்ஷிப்பு:**
இந்த உலகில் நாம் இருப்பது நிஜம் அல்ல, போவதுதான் நிஜம் என்பதனை அறிந்தவர்களாக *ஆதி மார்க்க னீதி அவையின்* மக்கள் இருக்கிறார்கள் என்ற ஆசீர்பாத உரையுடன் அவை இனிதே நிறைவுற்றது.



***திரு. சாலை ரவி அப்பா அவர்கள்***
***நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை***

**11-08-2022 ~ வியாழக்கிழமை ~ சிவகாசி சிறப்பு சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்**

**பரமனே வுருவெ டுத்துப்**
**பாரிடைக் குருவாய் வந்த...** என்ற தோத்திரப் பாடலைத் தொடர்ந்து,

**குருபிரான் அருளமுத வர்ஷிப்பு:**
மதியை விட்ட குறையால் உண்டான விதியாகிய குறையை வெல்லுவதே மதி. விண்ணாகிய ஜீவனை தொட்டு மண்ணாகிய தேகத்தை விடுவதே மதியாக உள்ளது என ஆண்டவர்கள் மெய்ம்மணஞானத்தில் அருளியுள்ளார்கள்.அவரவர் ஜீவன் மீது வைக்கும் அன்பே நிஜமான அன்பாகும். அத்தகைய ஜீவனே சிற்சபையாக, னானாக, னாமமாக உள்ளது. ஜீவனை அறியும் ரகசியத்தை நமக்கு அறிவித்து அதில் இரண்டற நம்மை கலக்கச் செய்பவர்களே மெய்க்குரு பிரான்.

ஞானத்தின் முதற்படியாக உள்ள வைராக்கியத்தினால் அலைந்து கொண்டிருக்கும் மனதை அலையவிடாமல் பாதுகாப்பதே ஞானத்திற்கான வழி. நமது மனமாகிய கண்ணாடியில் படிந்துள்ள மாசுகளை நீக்கி, அதில் அறிவெனும் ஜோதியை ஆசான் ஏற்றி வைக்கிறார்கள். அறுசுவையின் ரகசியத்தை அறிந்த திரு ஆறூரான் ஆலவாய்ச்சூலில் நாம் பிறந்து, அவர்களின் னாத தொனி கொண்டு ஓர் னினைவாக நாம் ஊன்றி நிற்கும் போதே

*குரு வசிக்கும் இடம் காசி க்ஷேத்திரம். அவரது பாதோதகம் கங்கை. குருவானவர் சாக்ஷாத் விசுவேசுவரன். அவர் வாக்கிலிருந்து வரானின்ற பிரம்ம னிச்சயம் தாரகமாம்.*
*~ குரு கீதை*


Copyright © AMNA Trust, Chennai

முக்தி கிடைக்கும். இத்தகைய செயலைக் குறித்தே, நினைக்க முக்தி, பார்க்க முக்தி, இறக்க முக்தி, என புண்ணிய ஸ்தலங்களை னகலாக எடுத்து வைத்துள்ளார்கள்.

அறியாமையெனும் இருளில் அலைந்து கொண்டிருக்கும் மனதை, சும்மா இருக்க சுகம் என்னும் நிலையில், நம்மை எழுதாத எழுத்தாக மாற்றி வைப்பவர்களே ***மௌனகுரு.*** அறியாமை என்னும் இருள் சூழ்ந்த நம் பாவமனம், ஆசான் முன்னிலையில் அறிவு என்னும் மாணிக்கமாகும் செயலை ஆண்டவர்கள்,

**னாளுக்கு னாட்கொஞ்சும் கொஞ்சும்–கெட்ட**
**னாரிய ராசைவே றாக்கும்சஞ் ஜீவி**
**பாலுக்குள் மோரைவிட்டதுபோல்-பதம்**
**பார்த்துக்க டைந்துனெய் யாக்கும்சஞ் ஜீவி**

என ஆனந்நக் களிப்பில் அருளியுள்ளார்கள்.

அறிவு என்பது நம்மிடம் எவ்வாறு எப்படி உள்ளது என்பதை அறியாமல் மனதை அறிவாக எண்ணி பல இன்னல்களில் மாட்டிக்கொள்கிறோம். இதனையே திருவள்ளுவர் பிரான்

***தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்***
***மனக்கவலை மாற்றல் அரிது*** என அருளியுள்ளார்.

தனக்கு உவமையில்லாதான் தாள் என்பது நம்மிடம் அறிவாக உள்ளதை அறிவித்து, நம் மனக்கவலையை மாற்றி ஆனந்த உடலான அறிவுடன் நம்மை ஐக்கியமாக்கி வைப்பவர்களே மெய்ஆசான்.

பிரபஞ்ஞத்தின் ஒட்டுமொத்த ரகசியமும் வைத்துப் படைக்கப் பெற்றுள்ள மனிதன் தன்னை அறிந்து, இறைவனின் எண்ணத்திற்கு இலக்காகி நின்றால் இறைவன் வேறு, தான் வேறு அல்ல என்பதை உணரலாம். இதனையே ஆண்டவர்கள்

**விண்ணுமண்ணும் கதிர்மதியு மின்பனிதா ரகையும்**
**விளங்குவன மலைகளுடன் விரிந்நகுலா சலங்ஙள்**
**எண்ணமடங் ஙாதசரா சரங்ஙளுயிர் யாவும்**
**இதுவிதுக்கு மிப்படியென் றிருந்நரசா ளிறைவன்...**

என மெய்வழி னூலில் அருளியுள்ளார்கள்.

ஓர் மெய்க்குருபிரான், அனித்தியமாகிய நம் அழிவுடலின் உள்ளே இருக்கும் அழியாத பேரின்ப தேகத்தை, நாம் அடையாவிடில் மீளா நரக இருளில் சிக்கிக்கொள்வோம் என்பதை எச்சரித்து னித்திய பேரின்ப வாழ்வில் நம்மை குடியேற்றி வைக்கும் மெய்ச்செயலையே திருவள்ளுவர் பிரான்

***அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை***
***ஆரிருள் உய்த்து விடும்*** *என அருளியுள்ளார்.*

தன்னையறிதல் என்பது அவரவர்களின் னாமத்திற்குரிய பொருளை அறிவதே ஆகும். அதுவே அறிவிருக்கும் இடம். அந்த இடத்தில் குடியேறி வாழ்வதே தன்னை அறிய தனக்கொரு கேடில்லாத வாழ்வாகும் என்ற அமுதமொழிகளுடன் அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai

## 12-08-2022 ~ வெள்ளிக்கிழமை ~ சிவகாசி சிறப்பு சபை
## தொகுப்பு: ஸ்ரீமதி. பவானி மணிமாறன்

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

**இணங்கிய சுபாவம் பார்த்து என்னிரு தயத்தினுள்ளே** எனும் தோத்திரப் பாடலைத் தொடர்ந்து, மனிதனின் அடையாளம் அவனுடைய வாக்குதான் எனவும்,

**உய்ய வேயெனக் கும்முல குய்யவே**
**செய்யவென்று திருவடி தந்நவர்...**

எனும் பாடலில், உலகம் உய்ய திருவடி பெற்றது என்பது தன் இருதயமாகிய உலகம் உய்ய திருவடியாகிய அறிவைப் பெற்றதேயாகும் மெய்வழியை உணர்ந்தவரின் கடமை அதை பிறருக்கு உணர்த்த வேண்டியதாகும். ஐம்புலன்களையும் இயக்கும் ஆறாவது அறிவு பகுத்தறிவல்ல என்பதை தன்னை உணர்ந்த பெரியோர்களே அறிவிக்க முடியும். பகுத்தறிவின் தன்மை மற்ற உயிர்களிடத்தில் இருந்தாலும் தன்னை அறியும் பகுத்தறிவு மனிதனைத் தவிர வேறு உயிர்களுக்கு இல்லை. உயிர் இருக்கும் வரை அதை நாம் கவனிப்பதும் இல்லை அழியாமல் பாதுகாப்பதும் இல்லை. எத்தனையோ இறப்பை பார்த்தாலும், நாமும் ஒரு நேரம் இறப்போம் என்ற எண்ணம் வராமல், நாம் மட்டும் நெடுங்காலம் உயிருடன் இருப்போம் என எண்ணுவதே அதிசயம் என யக்ஷனுக்கு தர்மர் போதிக்கிறார். பட்டினத்தாரும் ***செத்த பிணத்தை கண்டு இனி சாகும் பிணங்கள் ஏன் அழுகின்றது கச்சி ஏகம்பனே*** என்கிறார்.

*ஜீவசகோதரர் விஜயகுமார் :*

நன்மை என்பது பெரியோர்களை தஞ்சும் அடைந்து அறிவாகிய மெய்யை அறிவதும், தீமை என்பது அதை அறியாமல் அகலுவதுமாகும். ஆதி மார்க்க னீதி அவை செயலாகக் கொண்ட மூலமந்நிரம், பாதபூஜை, மகாசங்கல்ப மந்நிரம், நம் ஒவ்வொருவரின் உயிருக்கான விஷயமாக உள்ளது. உயிராணித் திருவசனமாக ஆண்டவர்கள் அருளியுள்ளது, நம் உயிரின் இருப்பிடம் நமக்கு தெரியாததால் காலனிடத்தில் அதை பறி கொடுக்கிறோம். அது போலவே அறிவிருக்கும் தலம் அறியாததால் நம் ஆவி வீணே போகிறது. அதை நமக்கு அறிவுறுத்தவே பெரியோர்கள் வருகிறார்கள். சர்வ மதங்களின் அடிப்படை **மறலி கை தீண்டாமை** என்பதாகும். மறலி எனும் எமன் தீண்டாத மெய் மதமே **மரணமில்லா பெருவாழ்வு** என்கிறார் வள்ளலார். மரணம் என்பது தேகத்திற்கன்றி, அதிலுள்ள ஜீவனுக்கு அல்ல. நான் இவ்வுடல் அல்ல என அறிவதே நன்மை. அறியாமைக்குள்தான் அறிவாகிய நன்மை உள்ளது. **மனமது செம்மையானால் மந்திரம் ஜெபிக்க வேண்டாம், மனம் திரும்புங்கள் பரலோக ராஜ்ஜியம் சமீபமாயிருக்கிறது** இந்த வாக்கியங்களின்படி மனம் இருக்கும் இடத்தை அறிய வைத்து நமது மூன்றாவது கண்ணை திறப்பித்து இறைவனை நமக்குள் தரிசிக்க வைப்பவரே மெய்யான குருபிரான்.

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

**தீதும் நன்றும் பிறர் தர வாரா** என்பது னாவுக்குள் இருந்தே வருகிறது. மனம் பேதலிக்கும் போது தீமையாகவும், நிதானமாக அறிவின் தன்மையை சாரும்போது நன்மையாகவும் உள்ளது.

*ஜீவசகோதரர் பொன்செல்வம் :*

இதுவரை என்னுள் வார்த்தையாக இருந்த மெய்வழி என்பது பெரியோர்களை சந்தித்த பின்தான் வாழ்க்கையாக மாறியுள்ளது. மெய்வழிச் சாலையில், தற்சமயம் அடக்கமானவர்களை பிரமிப்பாக பார்த்த விஷயம், நகல் என்பதையும் அதைத் தாண்டிய அசல் என்ன என்பதையும், செயலாக ஆதிமார்க்க னீதி அவைக்குள் வந்த பின்பே அறிந்து கொண்டேன். வேதத்தில் செயலில்லாத வாசகமே கிடையாது என ஆண்டவர்கள் அருளியுள்ளதின் நிஜத்தை குருபிரான் என்னிடத்தில் செயலாக்கி வைத்த பின்னரே அறிந்து கொண்டேன்.



Copyright © AMNA Trust, Chennai

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

ஔவை குறளில் வீடுபேறு, திருக்குறளில் அறம், பொருள், இன்பம், வீடு என்றுள்ளதில் உடம்பாகிய இவ்வீட்டில் குடியிருக்கும் நான் என்பதின் நாமமே அவரவரின் பெயராக உள்ளது. மெய், வாய், கண், செவி, மூக்கு என்றுள்ளதில் மெய் என்பது மாறிக் கொண்டே இருக்கும் நம் தேகம் அல்ல. என்றென்றும் மாறாமல் இருப்பதே மெய்யாக உள்ளது. சத்திய வேதத்தில் உள்ள *சுவிசேஷ நற்செய்தி* என்பதனை செயலாக மாற்றுவதே அறிவு.

**அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
**ஆரிருள் உய்த்து விடும்**

என்ற திருக்குறளின்படி மனம் அடங்குவதே அமரர் என்ற தேவனிலையாக உள்ளது. மேலும்

**வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றல்லது**
**வேண்டவாம் வேண்ட வரும்**

என்ற திருக்குறளின்படி மனம் பிறவாமை வேண்டும் என்பதே இதன் பொருளாகும். சரீரம் எனும் சரிந்து போகிற தேகத்துள் இருக்கும் நான் எனும் தன்னையறிவதே மனிதனின் கடமை. பொய்யான அழி உடலுக்குள் அழியாத மெய் உள்ளது. சர்வ வல்லமை படைத்த உலகத்தையே தாங்கும் சாமியை பார்த்து தனக்கு இது வேண்டும் என நினைக்கக் கூடிய பொருளே அவரவரின் தலைக்குள் னாமமாக, சாமியாக உள்ளது. மந்திரம் வாயில் சொல்வது அல்ல, அது இறைவன் இருக்கும் இடமாக உள்ளது. அதில் குடியேறி வாழும் வாழ்வு, ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர்களின் செயலாக உள்ளது என குருபிரான் அருளி, தோத்திரப் பாடலுடன் அவையை இனிதே நிறைவு செய்தார்கள்.

**13-08-2022 ~ சனிக்கிழமை ~ சிவகாசி சிறப்பு சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்**

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடிகளைப் போற்றி வணங்கி, **ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்று ஈசருடன் ஞான மொழி பேசும் முகம் ஒன்று...** எனும் திருப்புகழ் பாடலைத் தொடர்ந்து, ஆதி பரமகுரு முருகப்பெருமான் காலத்திலிருந்து விளையாடிய ஞானமானது இன்றளவும் நம் கைகளில் வந்து ஞானமொழி பேசி விளையாடிக் கொண்டிருக்கிறது. மெய்ப்பயணமானது வாழையடிவாழையாக வருகின்ற திருக்கூட்டத்தின் மூலம் எக்காலத்திலும் நின்று விளையாடும். ஈசனுடன் ஞானமொழி பேசும் முகம் என்பது ஞானத் தந்தையான சிவபெருமானாகிய குருபெருமானுடன் பேசிய முகமாகும். சூரனான செய்வினையோன் னெடுநாட்கலியை அறிவெனும் வேல் கொண்டு வதைத்து வள்ளி தெய்வானையான சித்தி புத்தியை கைக்கொண்டு ஆதி அருணாசலமான ஞான சூரியனாக வந்த குருபெருமானையே இப்பாடல் குறிக்கிறது.

**வினாயகர் அகவல்** ***கோடாயுதத்தால் கொடுவினை களைந்தே*** . கொடு வினையாகிய மா ரணமான மரணத்தை வெல்லக் கூடிய செயலுக்காகவே முத்தி பூர்ணம் என மூலமந்திரத்தை பார்த்து சொல்லிப் பழக வேண்டும் ***நாதர் முடிமேலிருக்கும் நல்ல பாம்பே உனக்கு நச்சுப் பல்லை வைத்தது யார் சொல்லு பாம்பே...*** நல்லபாம்பு என்பது ஆறாவது அறிவை அறியாதவன் உயிரை போக்கும் நச்சுப் பாம்பாகவும், ஆறாவது அறிவை அறிந்தவன் உயிரை காக்கும் சரமதுவே சமரச சன்மார்க்க பஞ்ஞாட்சரமான குண்டலிப் பாம்பாக உள்ளது.


Copyright © AMNA Trust, Chennai

**கொடி**- முருகப்பெருமானே சேவல் கொடி கொண்டவர். ஜீவசுதந்திர செயலுக்காகவே **கூப்பிடுமா மின் வீசி கொடியினுச்சி** என ஆண்டவர்களும், போகர், வள்ளலார் எனப் பல ஞானிகளும் மணிக்கொடியை பற்றி அருளியுள்ளார்கள்.

**சிவானந்த போதம்**:

*ஜீவசகோதரர் சங்கர்* : ஆசானின் திருவாக்கால் வினைப்பயனும், பிறப்பு இறப்பின் ரகசியமும், வினைவழியே தேகம் எடுப்பது சுகம் அல்ல என உணர்ந்து அரனது திருவடி நிழல் அடைகிறது ஒன்றே சுகம் என அறிந்து ஆசை கொண்டாலும், குடும்பத்தினரை தனியேவிட்டு வர மனம் பரிதாபப்படுவதாக **சீடன்** கேட்க,

**ஆசான்**: அவரவருக்குள் ஜீவனாக விளங்கிக் கொண்டிருக்கும் சிவனே துணையாக உள்ளது என அருளுகிறார்கள். அவரவர் தலையிலிருந்து காத்துக்கொண்டிருக்கும் சிவனே தவறு செய்யும் போது எமனாகவும், தவறு நீங்கும்போது சிவனாகவும் விளங்குகிறான். மாயமாகிய காயமெனும் இத்தேகத்தையே நான் என நினைப்பதே அறியாமை. அறிவு இல்லாத நிலைக்கே மாயை என பெயர். காய மன வாக்கு தளர்ந்து **வாசனை கேள்வி யிருகண் வாயெவைக்கும் வல்லமை யளிக்கும் அக் கண்ணின் ஒளி மங்கும் முன்னே...** தன்னுள்ளே இருக்கும் கதியை அறிந்து கைவசமாக்கி நல்ல கதி நிலை அடைய வேண்டும்.

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

குடும்ப சூழலில் இருக்கக்கூடிய மக்களுக்கு ஞானத்தின் உன்னத உச்சநிலையை அறிவிக்கக்கூடிய நூல் சிவானந்த போதம். வீடு மனைவி மக்களை தவிக்க விட்டு போவதல்ல ஞானம் எனவும், மனிதனுடைய குணங்களின் மூலம் பல பிறவிகள் ஏற்படும் நிலையும், அதை மாற்றக்கூடிய அறிவைத் தந்து குடும்பமென்னும் காமலி தேகத்தில் உழன்று கொண்டிருப்பவர்களுக்கு சிவதேகத்தின் ரகசியத்தை அறிவித்து, அதற்குத் தடையாக இருக்கின்ற மும்மல வேரினை முறித்து வட்டாக்கி அதையே முச்சுடராக மாற்றி, பிறப்பறுத்து சிவமாக்கி வைக்கும் செயலே இந்நூலின் பயனாகும்.

இளமை, செல்வம், ஆக்கை, இவையாவும் நிலையாமை ஆகும். இளமையிலேயே ஞானநிலை அடைந்தவன், நிழல் கனி தரும் மரம் போல் மற்றவர்களுக்கு பயன் தருபவனாக இருப்பான். இதனையே ***இளமையில் கல்*** என ஔவையார் அருளியுள்ளார்கள். காய மன வாக்கு கருத்தழிந்து தேகம் மாறி, கண்ணொளியான அறிவின் ஒளி மழுங்கிப் போய் முதுமையில் இருப்பவனை நெற்றிக்கண் படைத்தவராயினும் காப்பாற்ற முடியாது. நெற்றிக்கண் என்பது மூன்றாவது கண்ணாக, ஒளி மிகுந்த இருதயமாக, மங்காத திருநீறு பூசும் இடமாக உள்ளது.

**னெத்திப்பு ருவத்திடைச் சத்திச் சத்தர்தொழு**
**முத்தி கைஇபலித சுத்தப்ப ழமைக்கிழ-முனிவோரே** ***(பூரண வண்ணப்பா)***

முத்தி கை பலிதமாவது மெய்த்தொழுகையால் தான்..அதை நமக்கு சொந்தமாக்கித் தரவல்லவர் னெற்றிக்கண் படைத்தவர். ஆண்டவர்கள் காரிடிஎமன், வஞ்ஞமறலி, கரிக்கிடாயன், கூற்றன், உருத்திரன், நடுவன், காலன், அலகை என எமபயம் பற்றி அதிகமாக அருளியுள்ளார்கள். பயம் வந்தால்தான் பக்தி வரும். வேத நூல்களைப் படிப்பதால் எமபயம் போகாது. அறிவுருவான குருபெருமான் சிவன் என்னும் வாடாத தீபத்தை நம்தலையில் ஏற்றி வைக்கும் போதே எமபயம் மாறும். கிருமி கோடிகளால் சூழப் பெற்ற இத்தேகம் இற்று விழுமுன் பேரின்பத்தை புசிக்க வாரும் ஜெகத்தீரே என்னும் வசந்த அழைப்பு என்றும் மங்காது.

தீர்க்கதரிசனச் செயல் கைக்கொண்டேறி வருகின்ற கிரந்நம் எனவும் அழிவிலா னித்திய பூரண மேம்பாடுகளனைத்தையும் கையில் வரவழைத்துத் தரும் கிரயத்தையுடையது இந்நக்கிரந்நம் எனும் நூற்பயனை அனுபவிக்கும் செயல் அறிந்த மக்களாக ஆதிமார்க்க னீதி அவை மக்கள் உள்ளனர்.

மறைவிதி கண்ட மதிவானரசு மார்க்கண்டேயர் தீர்க்க தரிசனம்: ***குழப்பமுற் றிருக்கிற இந்ந உலகத்தைத் தெளிவிக்கப் போகிறார்...*** குழப்பமுற்றிருக்கும் தன்னுலகத்தை தெளிவித்தபின், குழப்பமுற்றிருக்கும் உலகத்தை



Copyright © AMNA Trust, Chennai

தெளிவிப்பதற்கான தீர்க்கதரிசன திருவார்த்தைகள் என்றும் மாறாது, மறையாது, மங்காது இருக்கும் வார்த்தைக்குரிய செயலை அறிந்து, நம்பி வந்த மக்களைத் தெளிந்த அறிவு கொண்ட மக்களாக ஆக்கி, வாழ்வாங்கு வாழ்வு வாழ வைப்பதே ஆதி மார்க்க னீதி அவையின் நோக்கமாகும் என குருபிரான் அருளி அவையை நிறைவு செய்தார்கள்.

**14-08-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்**

**குரு கொண்டல்** அவர்களின் ஆசீர்பாதத்துடன்,
*ஜீவசகோதரர் கௌதம்:*

***காணுமூச் சடக்கி விழியது முருட்டிக் கபாலமும் திறந்நவர் கோடி*** என்ற புலத்திய மகாமுனிவரின் பாடலுக்கு ஆண்டவர்கள் மூலபண்டாரப் பருவமதில் அருளியதாவது, மூச்சை இழுத்து அடக்குவதானது னரக வாதிகளாகிய பாவியர்களுக்கேற்ற குறுக்குவழிப் பிரயாணம், இது சரிதான் என கூறியிருக்கிறார்கள். போலி பாசாண்டியர்களின் தவறான வழி காட்டுதலால் மடிந்தவர்கள் கோடி. ஆக மெய்யான சிவானுபவம் பெற்ற ஆசானின் வாக்கிற்கும் னோக்கிற்கும் இணங்கி இருக்க அவர்கள் னம்மை சரியான சரி னிலையில் ஏறென்று ஏற்றி வைப்பார்கள்.

**மரணம்**: மரணம் என்பது இந்ந உடலை விட்டு உயிர் வெளியேறுவது அல்ல, மனதின் தேவையற்ற செயலால் வெளியேறும் மூச்சால் னாம் நித்தமும் மரணித்துக்கொண்டு இருப்பதே மரணம். கீழ் னோக்கான எண்ணங்களால் வீணாகும் மூச்சை மேல் னோக்காக மாற்றி மரணபயம் மாற்றி வைக்கும் வாணி னாட்டில் நம்மை கொண்டு சேர்ப்பவரே மெய்யான குருபிரான். இதையே ஆண்டவர்கள் ஆதி மெய் உதய பூரண வேதாந்நம்-முரீதுச் சுருக்கத்தில்,

**மாறாக வோடுகின்ற மனத்தை மைந்நா**
**மரணபய சவுக்குக் கொண்டு மாறி மாறி...** என அருளியுள்ளார்கள்.

மரண பயத்தை போக்குகின்ற சவுக்காகிய ஆசானின் னாதமே னம்மை எமபயத்திலிருந்து காத்து இரட்சிப்பதாக உள்ளது.

**விபூதி** : வெற்றி தருகின்ற பூப்போன்ற தீ என்பதே விபூதி. அதுவே ஆண்டவர்களின் திருவாக்காக உள்ளது. எல்லாவற்றையும் சுட்டுத்தீய்த்து, ஹிம்சித்து, சுத்தமாக்கி அவற்றின் உருவை மாற்றித் தன் மயமாக்குவது தீ. ஆனால் ஒரு தெய்வ ஆசானின் பிரம்மப் பிரகாசத் தீ நம்மை சுட்டுக்கொளுத்தி ஹிம்சியாது பூப்போல் னின்று நம் பாவங்களையெல்லாம் சுத்திகரித்து எமன் எல்லையில் வெற்றி காணச் செய்யும் விபூதியாக உள்ளது. இதையே திருமூலர் பிரான்,

***கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை***
***மங்காமல் பூசி மகிழ்வரேயாமாகில்***
***தங்நா வினைகளும் சாரும் சிவகதி***
***சிங்காரம் ஆன திருவடி சேர்வரே...*** என விபூதியின் சிறப்பை இப்பாடலில் அருளியுள்ளார்.

**பள்ளி** : **பள்ளியையும் மெய்ப்பால் தந்ந வள்ளலை...** இறைவன் குடிகொண்டிருக்கும் இடமாகிய பள்ளியில் பயில ஓர் எதார்த்த தேவகுரு வேண்டும். அவரின் அருளன்றி கல்வி வீடுபதம் காண முடியாது. ஆசானின் அருளமுதத்தைக் கேட்டு செயலை பழகியே இறைவன் இருக்கும் பள்ளியை னாம் அடையமுடியும்.

**சிற்றின்பம்** : ஐம்புலன்களின் வழியாக நாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் அனைத்தும் சிற்றின்பமே.



Copyright © AMNA Trust, Chennai

**பேரின்பம் :** புலன், பொறிகளுக்கும் அப்பால் உள்ள இறைவனை ஒரு ஆசானின் திரு னோக்கிற்கிணங்கி மெய்யான வழியில் சென்று மெய்யாகக் கண்டு இரண்டற கலப்பதே பேரின்பமாகும். இந்த உலக வாழ்வில் ஒட்டி ஒட்டாமல் இருக்க வேண்டும். தாமரை இலை நீர் போல, புளியம்பழ ஓடு போல, **ஒட்டி ஒட்டாதே உடம்புள் ஓங்கும் பஞ்ஞாட்சரமாக** விளங்கும் அறிவாகிய சிவனுடன், அசைந்து கொண்டிருக்கும் மனமாகிய சக்தியானது சேர்ந்து அசையாதிருக்க வேண்டும்.

**தொண்டர் :** பழமைக்கும் பழமையான சிவரஸ்தாவின் வழி கூடி னடப்பவரே தொண்டர் . ஆசான் என்பவர் அடியானுக்கு அடியானாகவும், ஔ அகர ஆசனமாகவும் மதிச்சுமையை சுமந்து வருகிறார். ***அரிது அரிது மானிடராதல் அரிது, மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்*** என்பதனை அறிய வைக்கும் குருபாதம் போற்றி குடியோங்கி வாழ்வோமாக.

**14-08-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ தூத்துக்குடி சிறப்பு சபை**
**தொகுப்பு: ஶ்ரீ. ஜெய்குமார்**

**குருபிரான் அருளமுத வர்ஷிப்பு:**

***மனம் திரும்புங்கள் பரலோக இராஜ்ஜியம் சமீபமாக உள்ளது*** என்பது கொடுத்தாலும் குறையாது, மேலும் மேலும் பெருகி னம்மை பேரானந்தத்தில் ஆழ்த்தக்கூடிய அறத்தைக் குறிக்கும் வாசகமாகும். முப்பாலின் ரகசியங்களாக அறம், பொருள், இன்பம் என திருக்குறளிலும், அலிபு, லாம், மீம் என திருக்குரானிலும், பிதா, சுதன், பரிசுத்தஆவி என சத்திய வேதத்திலும் அருளப் பெற்றுள்ளது. ***ஆதியிலே வார்த்தை இருந்தது அது தேவனிடத்தில் இருந்தது*** என்பதும், ***வாய்மையே வெல்லும்*** என்பதும் ஆசானின் னன்னாதமாகிய பரிசுத்த ஆவியைக் குறிப்பதேயாகும். சர்வ மதங்களின் குறிக்கோள் கற்றலின் பயனாகிய இறைவனின் நற்றாளை அறிவதுவேயாகும். வினைக்கேற்ப அமையும் மனித வாழ்வில் கொடுப்பதும், கெடுப்பதும் இறைவனின் செயலல்ல. இந்நிலவாழ்வாகிய தன்னை அறியாத அறிவனைத்தும் பேய் அறிவு என்பதே ஞானிகளின் கருத்து.



***திரு. சாலை ரவி அப்பா அவர்கள்***
***நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை***

உலகிலுள்ள பல வர்ணங்களையும், அறுசுவையையும் மனிதன் அனுபவிப்பதற்கென்றே இறைவன் படைத்துள்ளது போல், பெரியோர்கள் தான் தரிசித்த அசலான கோடி சூர்ய பிரகாச இறைசக்தியை வேதனூல்கள் மூலமாகவும், கோவில்களில் நகல் வடிவ சிற்பங்களாகவும் வெளிப்படுத்தி உள்ளனர். நகலை அசலாகக் கருதும் மாக்களின் அறியாமையை அகற்றவே இறைவன் இவ்வுலகில் அவதாரங்கள் எடுத்து அருள் பாலிக்கின்றார்.

*ஜீவசகோதரர் கோபி:* ஐந்து அறிவு இன்னதெனக் கூறும் மனிதனுக்காக இறைவனால் வழங்கப்பெற்ற தனிச்சீதனமாகிய ஆறாவது அறிவை இப்பிறவியிலேயே ஆசான் அருளால் அடைதல் வேண்டும். எண்ணரிய பிறவிதனில் அரிதாகிய மானிடப் பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ ஏதுவருமோ அறிகிலேன் என தாயுமானவர் மனிதப்பிறப்பின் சிறப்பை அருளியுள்ளார்கள்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் பழனிவேல்:* அழியாத தன்மை கொண்ட ஜீவனே காலாக, பாதமாக, விளங்கும் சூட்சுமத்தை குருபிரானின் இரக்கத்தால், அறியாமை அகன்று அறிவாக மாறி அறிந்து கொண்டேன் என்ற பகிர்தலைத் தொடர்ந்து, தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை னிறைவு செய்தார்கள்.

**18-08-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**அரியானை அறிய வைத்து அந்நணனா**
**யெனைப் பிரட்டிப் பிறப்பித்து பிறப்பித் தாரும்**
எனும் தோத்திரப் பாடலைத் தொடர்ந்து,

**வான்மதிக் கொரல் திருவாக்கியம் எண்-79**

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**
ஆண்டவர்களின் மந்திர சந்ததியில் வந்து மறுபிறப்பு பெற்ற அனந்நகிகள் சர்வ மூலமந்திரங்களையும் நிரூபணையாக தங்கள் உள்ளத்தில் கண்டுகளித்தவர்கள் என்பது, பஞ்சாட்சரம், அஷ்டாட்சரம், ஜீவன் எனும் ஒரே பொருளை கைகொண்டவர்கள் என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். ஆதி மார்க்க னீதி அவையின் மக்கள் அதே செயல் நிருபணையை கைகொண்டிருப்பதும் எல்லாம் வல்ல பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருசெயலேயாகும்

*ஜீவசகோதரி லாவண்யா :* **அறிவு அறிவு பாடம் -**

**ஆதி துணை ஆதியே துணை**
**ஆதியை அறிய குருவே துணை**
**தந்நைதாய் கடமை தான்மற வாதே**
**ஆதி மூலமே அதிசயச் சத்தி**
**வேதம் ஓதுதல் மெய்வழி தொடர...**

ஆதி புள்ளியாகிய அமானிதத்திலிருந்து உருவானதே உலகம் **ஆதி னூரானியைத் தன்னில நிந்தவர் ஆண் பிள்ளை யாணிமுத்தே (ஞானமுறையீடு)** முதலில் உருவான ஆதி அசல் புள்ளிதான் நாம் சீதனமாக பெற்று வந்த அமானிதப் பொருளாக ஹயாத்தாக, ஜீவனாக உள்ளது. இது நம் ஊனக்கண்களுக்கு மறைக்கப்பட்டு ஒரு பளிங்கு மாளிகையினுள் குடியேறி இருக்கிறது. அவ்வாறான ஜீவதேக மாளிகையின் திறவுகோல் பிரம்ம சொரூபியான ஆசானின் திருக்கரத்தில் உள்ளது. குருபிரான் ஆதி மூலமாக அவ்வைக் கண்ட அதிசய சத்தியாக உள்ளார்கள். மெய்வழியைத் தொடர அன்றாடம் வேதத்தை ஓதாமல் ஓத வேண்டும். *போகாப்புனல் மேல் வீற்றிருக்கும் பிரம்மமுடி சாகாத் தலை.* மனதினுடைய ரகசியமாக விளங்கும் போகாப்புனல் மேல்தான் இறைவன் வீற்றிருக்கிறான். கருடன், மூஞ்ஹுறு, என கடவுளர்களின் வாகனமாக இருப்பதே போகாப்புனல். மறுபிறப்பு பெற்று இதன் செயல் தெரிந்து பிரம்ம ரகசியத்தை அறிந்தவனே பிராமணன்.

*ஜீவசகோதரி சண்முகப்பிரியா :* **தேவாரம் திருவேணுபுரம், பாடல் எண்-03**- ***கடந்தாங்கிய கரியையவர் வெருவ வுரிப்போர்த்து***
மெய்க்கல்வி என்பது நற்றாளாகிய திருப்பாதத்தை தொழுது எமன் அச்சத்தைப் போக்குவதாகும். இதனை **வஞ்ஞப்புலன் சதிக்கும் மறலி செய்யும் வாதனைக்கும் அஞ்ஞுதெனது நெஞ்ஞும் உமதடி நிழலை தந்நருளும்** என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். படம் தாங்கி என்பது நல்ல பாம்பு படம் எடுக்கையில், அதில் உள்ள நாமம், வேர்மேலும் தலைகீழ் ரகசியத்தை உணர்த்துவதாகும் நடை எனும் ஒழுக்கம், விடம் எனும் விஷம் நீக்கி உயிரைக் காப்பதாக உள்ளது.



Copyright © AMNA Trust, Chennai 

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு**:

வேணு என்பது மூங்கில். அதில் காற்று புகுந்து னாதம் வரும் விஷயமே வேணுகானம். ஆசானின் னாதத்தால் நம்மிடம் உள்ள விஷத்தை அமுதாக மாற்றும் செயலே திருவேணுபுரம் ரகசியமாகும்.

*ஜீவசகோதரர் விஜயகுமார் :* **ஆதியாகமம் - புதிய ஏற்பாடு**

6000 வருடத்திற்கு முற்பட்டதாக கூறப்பெறும் ஆதியாகமம், நோவா தீர்க்கதரிசி மூலமாக முதன் முதலில் எழுதப்பெற்றது. பாபிலோன் போருக்குப் பின் இஸ்ரேலில் உள்ள கல்தேயா, யூதேயா நாட்டில் தொழுவத்தில் பிறந்த கர்த்தரை, நட்சத்திரங்களின் வழிகாட்டுதல்படி தீர்க்கதரிசிகள் கண்டார்கள். ஞானியரல்லாதோர் மொழி மாற்றம் செய்த இவ்வேதம் பொய்யும் மெய்யும் கலந்ததாக உள்ளது. மெய்வழி ஆண்டவர்கள் அருளியுள்ளதோ **பொய்யும் மெய்யும் பிரித்துனக்கு ஓதிடும் மெய்ன்னிலைப்போத மென்ற விதாகுமே** எனவும், **பாற்கடலை காய்ச்சி வடித்து தெளித்திட்ட வேதாந்நம் ஆதி மெய் உதய பூரண வேதாந்நம்** என்பதாகவும் உள்ளது.

**ஸ்ரீ** எனும் சப்தத்திலிருந்து உண்டான பிரம்மாவே படைப்புக்கர்த்தா, மகாலட்சுமி அம்சம் கொண்ட அவர் மகாவிஷ்ணுவிடமிருந்தும், மகாவிஷ்ணு சிவபெருமானின் டமரக ஓசையினின்றும் உண்டானவர்கள். இதுவே ஆதியிலே வார்த்தை இருந்தது என்பதாகும். அழிந்து போகும் தேகத்தினுள் அழியா நித்திய தேகத்தை மறுபிறப்பு மூலம் அறியலாம் என்பது யோவான் அவர்களின் சுவிசேஷம். ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தை காணமாட்டான் என்று மெய்யாக மெய்யாகவே உனக்கு சொல்லுகிறேன். (வேதாகமவசனம்)

**சிவானந்த போதம்**:

**துறந்நார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்நார்க்கும் இல்வாழ்வான் என்பான் துனண..** இல்வாழ்வான் (இறைவன்) துணை எனில், னூல் சாட்சி பார்த்து ஓதினாலே முத்தி நிலை பெறலாமே என **சீடன்** வினவ?

**ஆசான்**-**யாவரிருக்கு னிலையதனை யவர்க்கே யதனி னையமற...** மூவர் என்பவர் படைத்தவர், காத்தவர், அழித்தவர். மேலும் ரிஷிகள், தேவர்களாக இருந்தாலும் அவரவருள் அறிவாக நின்றிலங்கும் கண்ணொளி போல் பெரியோரின் னாவினின்று அஞ்ஞனமாக வந்த சொன்னயனக் கலையே மேலான முத்தி நிலைக்கு கூட்டிச்செல்லும் என அருள

**சீடன்**-அப்படியான முத்தி நிலை மட்டும் பேசும் னூல் உள்ளதா? என வினவ

**ஆசான்**-**தேக மெடுத்ததுவும் சிந்நை யடைத்ததுவும்...** தேகம் எடுத்து நீ வாழ்ந்த வாழ்வு அனைத்தும் கனவு என்பதையும், நாம் இத்தேகமென நினைப்பது, நனவின்றி கனவாகவே முடியும் எனக்கூறும் னூல் இருந்தால், அதனைப்பார் என அருள

**சீடன்**-அப்படியான னூலை பார்த்துச் சந்தேகமின்றி அறியாமை, அறிவு பற்றி தெரிந்து கொள்ள முடியுமா என வினவ

**ஆசான்**-**அறிவுக்கே சாட்சிகொண்டு னூலைப் பேசி...** நான் இந்த தேகமல்ல என்பதை உணர்ந்து அகத்தை நோக்கு. மெய்யை மெய்யாகவே ஆக்கிக் கொள்வதே மூலமந்திரமாகும். அழியாத பொருளை அறிவிக்கும் பொருளாக அவரவருள் கடவுளாக விளங்குவதை அறிய பிரம்மவித்தையை பழகித் தேறவேண்டும் என அருள

**சீடன்-**இதை அனுபவிக்க பிறர் சகாயம் வேண்டுமா என வினவ?

**ஆசான்**-**புகர் சமயமாகின்ற பல சமயம் தன்னிலே...** புகர் சமயம் எனும் அறுவகை சமயத்தை அடையும் புத்தியை மனிதனைத் தவிர வேறு எந்த



Copyright © AMNA Trust, Chennai

ஜீவராசிக்கும் இறைவன் வைக்கவில்லை. னூலைப் படிப்பதால் பிறவி நோய் போகாது என அருள|

**சீடன்-**பிறவி நோய் தீர பெரியோரை சாரவும் வேண்டுமோ என்று வினவ ?

**ஆசான்-பெரியோரை சாராமல் அன்பு செய்து பேசிடாமல்....** அரியவற்றுள் அரிது பெரியோரை பேணி தமராகக் கொளல். பெரியோரை அடையாளம் காண ஆண்டவர்கள் **அங்ஙமதில் இதனை எல்லாம் ஓரிடத்தில் பேசும் அன்னவரே ஜகதகுரு வென்றறி யலாமே** என அருளியுள்ளார்கள். சாவருமுன் சாகப் பழகும் பிரம்மவித்தையே உயிர்ப்படங்கல். இதனை அரி அயனும் புறத்தில் தேடினதால் கிடைக்கவில்லை. ஜீவன் தான் சிவன் என்பதை அறியாமல் செய்த வழிபாடு அனைத்தும் வீணே என ஆசான் அருள

**சீடன்**-தெளிந்த பெரியோர்கள் ஜகத்தில் இருந்தால் அவர்களைக் கண்டு தரிசிக்கலாமா என வினவ?

**ஆசான்-தெளிந்த துறவி இகந்தனில்...** பிராரர்த்த, சஞ்ஞித, ஆகாமிய மூவினைகளையும், அந்தகரண அனுபோகத்தையும் அறிந்து தெளிந்தவர்களே பெரியோர். இழிநிலை கொண்டோரையும் மேல் நிலைக்கேற்றும் கருணாமூர்த்தியரை செயலை வைத்தே அடையாளம் காண வேண்டும்.

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு**:

அருவுருவான னாதம் மூலம் நம்மை சிவபதவிக்கு ஆளாக்குபவரே பெரியோர். நம் எல்லோரையும் சேர்த்து வைக்கும் ***மெய்வழி ஆண்டவர்களின் திருவாக்கே மந்திரம்***. நல்லுள்ளத்துடன் எதார்த்தத் தேடுதல் கொண்டவருக்கு இத்திருவாக்கியம் செயலுடன் கிடைக்கும் இடம் இறைதிரு அருளால் தெரியவரும் என்பது உண்மை என அருளி, தோத்திர பாடலுடன் அவையை நிறைவு செய்தார்கள்

**20-08-2022 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஶ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**சொல்லவொண்ணாத பல்லாயிரம் கோடியண்டம் படைத் தாங்ஙாங்ஙு...** என்ற சோடச நிலை பாடலுடன் அவை இனிதே துவங்கியது.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர்-திருவாக்கியம் எண் :102**

ஒரு யோக்கியன் மற்றும் போக்கிரி இவர்களின் நிலை மெய்ஞானத்தில் எப்படி உள்ளது என்பதையும், குருபிரான் இவ்விரு குணத்தை உடையவர்களையும் தன் சீடர்களாக ஏற்று பக்குவத்திற்கேற்ப பிரம்மவித்தையில் பழகச்செய்து மெய்ஞ்ஞானம் அருள்வதையும் ஆண்டவர்கள் இத் திருவாக்கியத்தில் அருளியுள்ளார்கள்.

சுருதி மாதா லயம் பிதா என்பதை உணர்ந்து, ராகம் தாளத்தோடு தெய்வ பாடல்களை தொனி கொண்டு இசைக்க வேண்டும் என்ற ஆசானின் அறிவுரைப்படி, *ஜீவசகோதரி கோமதி*, **அருங்ஙோடை பாலைவனம் கானகத்தில் அகப்பட்டு...** எனும் ஞான அகவல் பாடலுக்கான ராகம், தாளம், சுருதியுடன் இனிமையாகப் பாடினார்.

*ஜீவசகோதரி லாவண்யா* : **அறிவு அறி பாடம் –**

**சத்தியன் ஆனால் சாதிமான் ஆகுதல்.... அறிவென்று** என்ற பாடலுக்கு அவர்களின் புரிதல்- உயிரான பிராணனின் இரகசியம் அறிந்து அத்வைதமெனும் சாயுச்சிய நிலை பெற்றவர்களே சத்தியன் என்பதை ஆண்டவர்கள்,



Copyright © AMNA Trust, Chennai 

**அழிதுயர் மரணந் நன்னை**
**அனுபவித் தறிந்து வந்து**
**அருளுவ னவன்றன் கையில்**
**சனதங்ங ளிலங்ங னின்று**
**சாற்றுவன் சாயுச்சி யோனே**

என *ஆதிமான்மியத்தில்* அருளியுள்ளார்கள். சுத்த சைதன்ய னாதரின் சொல் ஒரு பொருளில் னின்று மெய்யுணர்வு மேலோங்கி தன் தன் மதத்தின் உட்பொருளை அறிந்து அறிவு வடிவாக வாழ்வோமாக.

*ஜீவசகோதரர் விஜயகுமார்* : **சத்திய வேதம் (புதிய ஏற்பாடு) யோவான் தீர்க்கதரிசனம்**:

*திருவசனம்-01* ஆதியில் தேவனிடத்தில் வித்தில்லா வித்தாக இருந்த வார்த்தையே னம்மை னரன் என்ற னிலையிலிருந்து மாற்றி மனிதன், தேவன் என்ற மேன்மைக்கு உயர்த்துகிறது.

*திருவசனம்-02* ஆதியிலே தேவனோடு இருந்தார் என்பது, நாம் உடலெடுப்பதற்கு முன் ரோஸ்மீதாக்குடைய காலத்தில், ஏதேன் தோட்டத்தில் இறை சமூகத்தில் இருந்ததை குறிக்கிறது.

*திருவசனம்-03* சகல உயிர் ஜீவனிலும் ஆடும் பாதமாக சிரசில் வீற்றிருக்கும் தேவனாலே சர்வமும் படைக்கப் பெறுகிறது.

*திருவசனம்-04* னானே உலகிற்கு ஒளியாக இருக்கிறேன் என்பதன் உண்மைப் பொருளை தன்னையறிந்த பெரியோர்களே அறிவர்.

*திருவசனம்-05* கூரிய இருள் வஸ்துவானது, அறிந்தவர்களுக்கு பிரகாச ரூபமாகவும், அறியாதவர்களுக்கு இருளாகவும் இருக்கிறது.

**கிருஷ்ண பரமாத்மாவின் திருஅவதார மகிமைகள் பற்றி** *ஜீவசகோதரர் வடிவேலன் -*

**வாவிண் மேகக் குடைச்சைவ மேனியர்**
**கோவரத்ன குடைக்கொடைக் கொண்டலென்**
**தாவி னின்றென் றனிகைய ரருளினாற்**
**பாவ னீங்ஙப் பலன் பளிங் ஙானதே** **(குரு ஸ்தோத்திரம்)**

வாய் திறந்து ஆலங்ஙாட்டி, கோவரத்ன குடை ஏந்தி, தன்னை அண்டியோரை பேரின்ப பெருவாழ்வில் வாழ வைத்துக் கொண்டிருக்கும் மாயகிருஷ்ணனாம் பாலகிருஷ்ணனாகிய எம் குரு பெருமானுக்கு பணிவான னமஸ்காரம்.

5252 வருடங்களுக்கு முன்னால் தெய்வ குழந்தையாக பிறந்து, தன் குறும்பான பிள்ளைப்பருவம், கல்வி, வாலிபம், காதல் பருவம் கடந்து, தேவனிலை பெற்று தன்னை சார்ந்த மக்களுக்கு குருவாக அவதாரம் தாங்கி வந்த பரமாத்ம சொரூபரின் வாழ்க்கை வரலாறே *கோகுலாஷ்டமி எனும் கிருஷ்ண ஜெயந்தி.*

*பகவான் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் வாழ்க்கை வரலாறு* பற்றிய சில சான்றுகள் :

1) கிருஷ்ணர் 5252 ஆண்டுகளுக்கு முன்பு மதுராவில் பிறந்தார்.
2) பிறந்த தேதி-ஜூலை 18, 3228 (கி.மு)
3) மாதம்-சிரவண மாதம்
4) நாள்-அஷ்டமி திதி
5) நட்சத்திரம்-ரோகிணி
6) கிழமை-புதன்



Copyright © AMNA Trust, Chennai

7) நேரம்-இரவு 12.00 மணி
8) தந்தை-தாய் பெயர்-வசுதேவர்-தேவகி
9) வளர்ப்பு தந்தை-தாய் பெயர்-நந்தா-யசோதா
10) வயது-ஸ்ரீ கிருஷ்ணர் 125 ஆண்டுகள், 08 மாதங்கள் மற்றும் 07 நாட்கள் வாழ்ந்தார்.
11) குருக்ஷேத்திர போர் நடந்தபோது கிருஷ்ணருக்கு 89 வயது.
12) மகாசமாதி அடைந்த நாள்-பிப்ரவரி 18, 3102 (கி.மு)

ஒருமொழி கீதை கொண்டு, பகவனின் உபதேசமும், பவம்அழி விஸ்வ ரூபமும், தகவகாண்டீபமும், தருகுவததற்கென பார் குருவாக நமக்கும் வாய்த்த பரமனின் பாதம் பணிந்து பலன் பெறுவோம்.

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு: சிவானந்த போதம்**

***சீடன்-*** தெளிந்த பெரியோர்கள் எவ்விடத்திலிருப்பார்கள் என்றும் அவர்களைக் கண்டு தெரிசிக்கலாமா என சீடன் கேட்க

***ஆசான்-*** தெளிந்த பெரியோர்கள் கல்பெனும் குகைக்குள் வீற்றிருப்பார்கள் என்றும், இழிந்த பேர்களின் விளங்காத பங்கவுடலையும் தங்க உடலாக மாற்றி வைப்பார்கள் என வேதசாட்சிகளுடன் ஆசான் அருளிச் செய்தார்கள்.

***சீடன்-*** இகத்தில் சஞ்சரிக்கும் பெரியோர்களுக்கு இடர் வராதோ என சீடன் கேட்க

***ஆசான்-*** ஐந்து அவத்தைகளில், துரிய, துரியாதீத, எல்லை சென்றவர்களுக்கே இவ்வுலக வாழ்வு கனவென்பதை உணரமுடியும். அப்படி உணர்ந்து இக வாழ்வில் சேற்றிலுள்ள பூச்சியைப் போல், புளியம்பழ ஓடு போல் வாழும் அப்பெரியோர்களை அவர்களின் வாக்கு வல்லபத்தையும், செயலையும் கொண்டே அடையாளம் காணமுடியும். அவர்கள் திருமணம் புரிந்து குடும்பத்தோடு வாழ்ந்தாலும் மாசற்ற வல்லவராக வாழ்வார்கள் என ஆசான் அருளிச் செய்து அவையை இனிதே னிறைவு செய்தார்கள்.

**21-08-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. பானுமதி குமரேசன்**

**அருவுருவா யெனையாண்ட விண்ணின் பாதம் .... தமிழின் காப்பே** என்ற தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரி லலிதா:* **ஆதிமான்மியம், ஜீவசிம்மாசனப் பருவம் - பக்கம் – 281** *இவ்வாறாகப் பழம்புராதன... ஜெனிப்பிக்க வேண்டி.*

**குருவும் நானும்:** *நான்* என்பது ஒளியாக, ஜோதியாக, பாதனிலையாக, குருவெனும் பாதமாக, பாதமெனும் குருவாக, பூரணமாக உள்ளது. முன்னாதி காலந் துவங்கி வந்த வேத கர்த்தர்கள் எதிர்பார்த்திருந்த மெய்வழிச் சாலை ஆண்டவர்கள் குறித்த னிறை தீர்க்க தரிசனத்தின் அகமிய செயல்களாகிய எழுதாமறை, அழியாத மவுனரகராகம், ஓங்கார வரிவாடை, குறி, கோடு, ஜீவாவி வீதிக்கோடோடி வந்த மதிப்பாதையின் சிறப்பை நமது குருபெருமான் விளக்கி அருளியவற்றை வேத சாட்சிகளுடன் அவையில் பகிர்ந்ததைத் தொடர்ந்து,

*ஜீவசகோதரர் சங்கர்:* எழுதாத எழுத்தின் இரகசியங்களை எடுத்து சொல்வதே மெய்க்கல்வியாகும். **னாதமது விளைந்தவர் பேர் னாதனாகும்.** *பேர்* எனும் ஒருவரின் னாமமே னாதமாக, தெளஹீது எனும் வித்தில்லா வித்தாக உள்ளது.



Copyright © AMNA Trust, Chennai

இதனை ஆண்டவர்கள், வேதத்தில் *நான் யார் தெரியுமா? நான் தான் மெய்வழி னாதன்* என்றும் குறிப்பிடுகிறார்கள். நான் எனும் காரண தேகத்தின் இரகசியமே மெய்வழி னாமமாக இருக்கிறது. இதனை மெய்மண ஞானத்திலும்,

**னாத லட்சணம் னாதன் லட்சணம்**
**னாதன் வாய்மையின் லட்சணம்**
**னாத தேகத்தின் லட்ச ணம்பவ**
**னாச மாகிடும் லட்சணம்** என அருளியுள்ளார்கள்.

எல்லா சுருதி கிரந்தங்களையும் உள்ளடக்கிய வேதமுடி என்பதே அலிபு-லாம்-மீமாக, உடல்-உயிர்-ஆன்மாவாக, ஆலம்-ரூஹு -ரூஹானியாக உள்ளது. அலிபு எனும் உடலாக இருக்கும் மனமே சர்வத்தையும் தன்னுள் அடக்கிய அறிவாகவும், னாதமாகவும், கவனமாகவும், இறை பொருளாகவும் நின்று செயல்படுகிறது.

**னடுவன்:** எதற்கும் முதற்பொருளான மனமே கீழ்நோக்கமான எண்ணங்களாகிய னபுசிற்கும், மேல்நோக்கமான எண்ணங்களாகிய சிபத்திற்கும் காரணமான நடுவனாக உள்ளது. ***னடுவுனிலை கண்டார்க்கு னமனில்லை*** என்கிறது திருமந்திரம். னடுவுனிலை கண்டவர்களே மெய்வழி குருமார்கள் எனும் இலட்சத்து இருபத்து நான்காயிரம் னபிமார்கள், 63 னாயன்மார்கள், 27 தீர்த்தகர்கள், 12 ஆழ்வார்கள் ஆவர்.

ஒருவனை னரன், மனிதன், தேவன் என அடையாளம் காட்டுவது அவரவரின் வாக்குதான். பெரியோர்களின் திருனாவிலிருந்து வரும் அமிர்த வர்ஷிப்பானது மனிதர்களை மகான்கள் ஆக்கும் மந்திரமாக உள்ளதையே, **னாவிற்கு பெரிதாக உலகம் இல்லை** எனக் கூறப்பெற்றுள்ளது. சரிகை ஒழுக்கமே தன்னை அறியும் தவமுறையில் ஒருவனை ஏற்றி வைக்கும்.

**கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதுஇன்றேல்**
**புண் என்று உணரப்படும்.** **(திருக்குறள்)**

மன ஒட்டத்தின் ரகசியத்தை மெய்ப்பொருளின் மூலம் அறிவதே மெய்வழியின் உச்சனிலையாகும். குருபிரானின் சொற்கடங்கா வளஞ்னுரந்த சொற்கேட்டு நடக்கும் மனமானது னிலையாகி, காட்சியாகி, பிரம்மமாகும் செயலே மூச்சுலயமாகிய மனோலயம். மந்திரம் எனும் வீடாகிய சிவவெளியில் நுழைந்தால் நாம் சர்வ மூல மந்திரங்களையும் அறிந்து கொள்ளலாம். ஜீவனாகிய நான் என்பவனை மனமாகிய கண்ணாடி மூலம் அறிவதுவே தன்னையறிதலாக, கிரியையாக உள்ளது. சர்வ நாமங்களுக்கும் உரியவராக நாம் இருப்பதை அறியும்போது யோகமானது தொடங்குகிறது. ஜீவனைக் கண்டு ஜென்மசாபல்யம் அடைகின்ற செயலே ஞானமாகும்.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* **அறிவு ஒளிர ஆசானைத் தேடு.** இத்தேகமே நாம் எனும் அறியாமை இருளில் மூழ்கி இருக்கும் நமது அறியாமையை, தூலம் கடந்து நிற்கும் மெய்க்குருபிரானின் அறிவுப் பிரகாசத்தின் மூலம், நம்மையும் அவர்களின் அறிவுப்பிரகாச நிலைக்கு உயர்த்துகிறது. ஞானிகள் யாவரும் வேண்டிய *பிறவாமை* அடைவதற்கான வழியை ஆண்டவர்கள் *அமுத கலைக்ஞான போதத்தில்,*

**தானேதான் பழுதில்லாத் தேகம் வேண்டும்**
**தன்மைதரும் சரிகையதி னொழுக்க வேண்டும்**
**ஆணான மெய்ஞ்ஞானக் குருவே வேண்டும்**
**அரைனொடிக்குள் மலமகற்றும் தீட்சை வேண்டும்**
**தேனானா அன்பதிகம் வேண்டும் னாளும்**
**தெய்வபதித் தேவர்கோன் தெரிய வேண்டும்**
**பானமெனும் காமதே னருந்ந வேண்டும்**
**பதறாமற் பரமபதம் வேண்டி னாடே** என அருளியுள்ளார்கள்.



Copyright © AMNA Trust, Chennai 

பழுதுடைய நமது தேகத்திலுள்ள பழுதுபடா தேகத்தை, சரிகை ஒழுக்கத்துடன், ஆணான மெய்க்குருவின் துணை கொண்டே அடைய முடியும். இந்திரியங்களால் செய்யும் பஞ்ஞுமா பாதகங்களாகிய,

1) ***கொலை*** - தன்னுயிராகிய ஜீவனை அறியாமல் நித்தம் தற்கொலை செய்வது.
2) ***களவு*** - நம்முடைய வயது, வாழ்நாளை இந்த உலகப் பாட்டிலேயே களவு கொடுப்பது.
3) ***கள்*** - உலக போதை எனும் மாயையின் வசத்தில் மாட்டிக் கொண்டிருப்பது.
4) ***காமம்*** - தேகத்தின் மூலம் அனுபவிக்கூடிய சகல விதமான சிற்றின்பங்கள்.
5) ***பொய்*** - இந்த பொய்யுலக வாழ்வே சதமாக எண்ணி வாழ்வது, என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**பொய்யின்ப உணர்ச்சி மெய்யுணர்வு கொல்லி (அறிவு அறி பாடம்).** ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களாகிய நம் அனைவருக்கும் மெய்யுணர்வை ஊட்டி பஞ்ஞுமா பாதகங்களிலிருந்தும், அனித்தியத்தில் இருந்தும் விலக்கி, அறிவுக்கண் திறப்பித்து னித்திய வாழ்வில் நம்மை நிலைத்து வாழ வைத்துக் கொண்டிருக்கும், குருபிரானின் பாதம் பணிவோமாக.

**21-08-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. மணிமொழி மஞ்சுநாதன்**

**குருபிரானின் அருளமுத வர்ஷிப்பு:**

ஆதி மெய் உதய பூரண வேதாந்தம் நூல் பாடல்களின் மெய்விளக்கங்களையும், அதன் ராகத்தையும் உணர்ந்து படித்துப் பழகி வர மெய்யின் மேன்மை அவரவரிடத்தும் விளைந்து விளைவேறி வரும், மேலும் ***ஸ்ருதி மாதா லயம் பிதா*** என்பதை உணர்ந்தும், பதம் பிரித்து பாடலின் பொருள் உணர்ந்தும் படிக்க வேண்டும். ***மார்க்க மொழி கீதங்கள்*** நூலின் தோத்திரப் பாடல்கள் அனைத்தும், உயிர் மூச்சின் ரகசியமாக, தன்னிலக்கணம் உணர்த்தல் எனும் செயலாக உள்ளது. தன்னை அறியும் மெய்ச்செயல் ஒன்றே *ஆதி மார்க்க னீதி அவையின் நோக்கமாகும்.*

ஒலியே ஒளியெனும் பிரகாசமாக உள்ளது. ஆசான் அவர்களின் வாய்மையாகிய னாதமே, சீடனின் மனக்கண் திறப்பித்து சதாசிவத்தை காட்டுகிறது. **ஓசை ஒலி யெலாம் ஆன ஒத்தையாய் என்னாளும் உள்ள**, சுயம்பிரகாசப் பொருளாக அறிவு உள்ளது. ஆசான் அருளால் அறிவுக்கண் எனும் மூன்றாவது கண்ணாகிய தேவரகசியம் உள்ஞானக்கண் கொண்டு காணும் பஞ்ஞாட்சரமாக உள்ளது. ஆசானிடத்தில் அருட்ஜோதியாய், னாதமாய் நின்று விளங்கும் அதன் துணை கொண்டு உன் *உள்ளமாகிய மகா மகசுக்கான இருதயத்தை பிரகாசமாக கண்டு அதன் மீது உன் அன்பு சாய்ந்து மூச்சானது ஒரு நிலையில் நிலை பட னின்று வணங்கும் வணக்கமே மெய் வணக்கம்* என *ஆண்டவர்கள்* அருளியுள்ளார்கள்.

தேவரகசியம் தேர்ந்த னன் னெறியோர் தேவர்கள் என்று திருமறை தீர்ப்பு. பிறவிச் சூழலில் வாழ்பவர்கள் மனிதர்கள், பிறவா னெறியில் வாழ்பவர்கள் தேவர்கள். அறுசுவை அறிபவன் மனிதனும். அறுசுவை கொண்டொளித்த இடம் அறிந்தவர்களாக, செவியில் சுவை உணர்ந்தவர்களாக, இருப்பவர்கள் தேவர்கள். இறைவனின் சன்னதம் பெற்ற சன்னதப் பாரவான்கள் யுகயுகந்தோறும் வானனாட்டில் இருந்து இறங்கி வந்து மறைபொருளான பாதத்தின் ரகசியத்தை வேதமாக இறக்கி அருள்கிறார்கள்.

> *குருசேவையே கயை யெனப்படும். அவர் தேகம் அங்ஙுள்ள அக்ஷயமான வடவிருக்ஷமாம். அவர் பாதம் (கயையிலுள்ள) விஷ்ணு பாதமாம். அங்ஙுத் தத்தஞ்ஞெய்து கொடுக்கப்பட்ட மனம் வியாபகனிலை யடைந்நதாம்.*
>
> *~ குரு கீதை*



Copyright © AMNA Trust, Chennai

ஜலத்தினில் அக்னி உருவாய் உள்ள பிரகாசப் பொருளை, ஃ எனும் பிரம்மத்து அருளொளிப் பெருக்கால், ஆசான் அரை நொடிக்குள் மலமகற்றும் தீட்சை கொண்டு நமது அறுவகைப் பாய்ச்சல் கொண்ட மனதின் கீழான தன்மையை தம் னாத வல்லபத்தால் மேலான நிலையில் ஏற்றி வைக்கிறார்கள்.

**என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்தது இல்லையே**
**என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்து கொண்ட பின்**
**என்னிலே இருந்த ஒன்றை யாவர் காண வல்லரோ**
**என்னிலே இருந்திருந்து யான் உணர்ந்து கொண்டேனே**

என சிவவாக்கியரும் அறிவின் மேன்மையை அருளியுள்ளார்.

ஆசான் அவர்களின் ஓர் எழுத்து மாத்திரைக் கோல் கொண்டே அறியாமையில் உள்ள மனமாகிய ஜலத்தை சுண்டச் செய்து அதில் உள்ள அக்கினியை காண முடியும். முப்பாழாக உள்ள இருள் வெளி ஒளி என்பதை, திரளிருள் தீய்த்தெறியும் தேசிகேந்திரரின் திருவடி பணிந்து அவர்களின் பொற் கிண்ணத்து மதுபான அருளமுதத்தைப் பருக பிறவிப்பிணி எனும் மரணபயம் தீரும்.

முகம் கிழக்கு, முதுகு மேற்கு, கால் வடக்கு, தலை தெற்கு, என வள்ளலார் அருளியுள்ளார். நற்சிலம்பின் ஓசையே திசை என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். வேதாந்தத் திசை னாத வெளியே நினைவெனும் ஆகாயமாக, கங்குல் பகல் அற்ற இடமாக, ஓதும் சாகாத்தலை வேகாக்காலாக, எழுதாத எழுத்தாக உள்ளது. எண்டிசைக்கும் னானென முன் னிற்கும் பஞ்ஞாட்சரப் பொருளை என் முகத்தில் காட்டி தந்த, திசையில்லா தவத்து ஜீவமுத்தரின் நோக்கம், பசுவாகிய ஆன்மா பாசமாகிய மனதோடு சேராமல் பதியாகிய இறைவனோடு சேர்ந்து பசுபதி ஆக வேண்டும் இதனை

**பதிபசுபாசம் எனப் பகர் மூன்றில்**
**பதியினை போல் பசுபாசம் அனாதி**
**பதியினைச் சென்று அணுகாப் பசுபாசம்**
**பதி அணுகிற் பசுபாசம் நில்லாவே**

என திருமூலர் பிரானும் அருளியுள்ளார் என்ற பகிர்வுகளுடன் அவை இனிதே நிறைவுற்றது.

**25-08-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்**

**சத்திய வான்மதிக் கொரல் திருவாக்கியம் எண்: 80, 81:** உயிர் குடியிருப்புக்கு னாமம் ஆலயம். உடல் குடியிருப்புக்குப் பெயர் விடுதி, வீடு. **ஆலயம் புகுதல் அழிவிலா வாழ்வு தன்பெரு ஆலயம் தனித்த னற்றவம்** என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். **உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம் (திருமந்திரம்).** ஆன்மா லயமாகும் இடமே ஆலயம். னாமமாகிய பெயர் என்பது அவரவரின் ஆத்மனாகிய ஜீவனெனும் உயிருக்குத்தான். மனிதனின் கடமையாகிய உயிரைக் காணும் செயலில், ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களாகிய நமக்கும் நமது சற்குருபிரான், உயிரைக் காணும் செயலில் ஏற்றி, எமனணுகா ஜீவிய வாழ்வில் வாழவைத்துள்ளார்கள்.

*ஜீவசகோதரி லாவண்யா:* **அறிவு அறிபாடம் பாடல் எண் 11 - 15**

**மும்மலம் கருக முச்சுடர் தோன்றும்.** ஆணவம்-கன்மம்-மாயை என்ற மும்மலங்கள் ஆசானின் னாத ஜூவாலையில் கருகி ரவி-மதி-சுடரெனும் முப்பாலாகிறது. **மா-**தவத்தின் மீது இச்சை கொண்டு அதற்கான செயலில் மாறாது வைராக்கியத்துடன் நின்று வைகறை பொழுதில் ஜீவ வாழ்வில் ஏறி உடம்பின் நற்பயனாகிய உயிரெனும் மதியை அறிந்து வாழ்வதே வாழ்வு. அழியா வாழ்வில் நம்மை ஏற்றி வைத்த தென்றமிழ்



Copyright © AMNA Trust, Chennai 

அரசராக தென்னாடுடைய சிவனாக விளங்கும் நமது சற்குருபிரானின் திருவடி போற்றுவோம்.

*ஜீவசகோதரி பூர்ணிமா:* **மாணிக்கவாசகப் பெருமான் அருளிய திருவாசகம் - அதிசயப்பத்து - முக்தி இலக்கணம்-பாடல் எண்-08: நீக்கி முன்னெனை.**

நிலா வகை குரம்பை எனும் நம் அழிஉடல் குற்றங்களை நீக்கி ஆசான் தன் திருநோக்கின் மூலம் தீட்சை கொண்டு அரைநொடிக்குள் மலமகற்றும் செயலினை ஆண்டவர்கள்,

**தானேதான் பழுதில்லாத் தேகம் வேண்டும்**
**தன்மைதரும் சரிகையதி னொழுக்கம் வேண்டும்**
**ஆணான மெய்ஞ்ஞானக் குருவே வேண்டும்**
**அரைனொடிக்குள் மலமகற்றும் தீட்சை வேண்டும்** என அருளியுள்ளார்கள்.

அணுவிற்கணுவாகவும் அண்ட பிரம்மாண்டமாகவும் உள்ள அறிவாகிய சுடர்சோதியை நம் சித்தத்தில் ஏற்றி நம்மையும் ஆண்டு கொண்டதை அதிசயமாக காண்கிறேன்.

*ஜீவசகோதரி சண்முகப்பிரியா:* **திருஞான சம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகம் முதல் திருமுறை - திருவேணுபுரம் - பாடல் எண்-04: தக்கன்றன சிரமொன்றினை...**

சிவபெருமானை யாகத்திற்கு தக்கன் அழைக்காமல் அவமானபடுத்தி, ஆணவத்தில் வீரபத்திரனிடம் மடிந்தது போலின்றி, நம் ஆணவம் நீக்கி சிவனாகிய குருபிரானின் திருவாய்மொழி கொண்டு ஜீவச்சுடர் வளர்க்கும் யாகத்தை தன்னுள் நித்தமும் பழகி புண்ணியம் சேர்க்க, தோகை விரித்து ஆடும் மயில்போல், ஆசானின் வேணுபுர னாதத்தால் நம் மனம் பூரிக்கும்.

**சிவானந்த போதம்:**

***சீடன்:*** ஜெகந்தனில் வரும் விபரீதங்கள் உண்டோ?
***ஆசான்:*** பெரியோர்கள் அவதாரம் செய்து வருகின்ற காலங்கள் தோறும் உண்டாகும் இடைஞ்ஞல்களை அவர்கள் தங்கள் வல்லமையால் முறியடித்து, மெய்ஞ்ஞான பாட்டையை நடத்தி வருகிறார்கள்.

***சீடன்:*** பெரியோர்களின் சாதி பார்க்கலாமா?
***ஆசான்:*** உடலையும், செய்தொழிலையும் வைத்து முன்னோர் வகுத்த சாதிகளை பார்ப்பது அறியாமை. அறுசுவை அனுபவிப்பதிலும், ஜீவனிலும் சாதி வேற்றுமை இல்லை.
ஆண்டவர்கள் சாதியைப் பற்றி, **சத்தியன் ஆனால் சாதிமான் ஆகுதல், சாதிகுலம் பாராது தானிருந்ந தெய்வம்,**

**ஆதி மார்க்க னாத னீதி**
**சாதி பேதம் தீர்த்த சேதி - சமரச**

**தேக முள்ள வரைக்கும் னீங்னா**
**ஏக பேத சாதிச் சண்டை**
**போக ஐம்பத் தாறு சாதி**
**பேதம் சமத்து வமதிங் ஙான**

**சாதிமா னென்றுசொல்லித்**
**தரணிதனி லேபிறந்து**
**சாதிகெட்ட பாவிஎமன்**
**தன்கையில் சிக்கிவிட்டால்** என அருளியுள்ளார்கள்.


Copyright © AMNA Trust, Chennai

***தன்னை அறிந்து சிவமான சாதி, எமனிடம் சிக்கிய இழிந்த சாதி, சாதி இரண்டொழிய வேறில்லை*** என ஔவையாரும் கூறியுள்ளார் என்ற பகிர்வுகளைத் தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

**27-08-2022 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்**

**தனித்த நற்றலைமை பெரும்பதி யரசை...** எனும் தோத்திரப் பாடலைத் தொடர்ந்து,

*ஜீவசகோதரர் சங்கர்:* தனித்த நற்றலைமையான பெரும்பதியரசெனும் சிவபெருமானாகிய குருபெருமானே எல்லாக் காலங்களிலும் அறிவுரு தாங்கி வருகிறார்கள். ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலத்தால் மூடப்பட்டுள்ள நம் ஜீவனை, நமது மூன்றாவது கண்ணைத் திறப்பித்து முச்சுடராக மாற்றுகிறார்கள். ஆசானின் மலர்க்கையானது சீடனின் மனதில் பூங்காரம் போல் காரமாக தைத்து பிறவிப்பிணி மாற்றும் மெய்வழித் துணை ஔஷதமாக உள்ளது. கணிக்க முடியாத அவர்களின் திருமுகம் கலிமாவெனும் பெருமுத்தாக, னிறை னாதமாக, நெய், தேன், பழம், பால், அன்னம் எனும் தெவிட்டாத தெள்ளமுதமாக உள்ளது.

**கோடாயிதக் கூர்-திருவாக்கியம்-103** : இக, பர லட்சணத்தை கற்று தேர்ந்தவர்கள், ஜீவ வழிபாடாகிய நேர் வழிகாட்டி சிவலோக பதவி அருளும் செயலுக்கு வையகமும் வானகமும் ஈடாகாது. அவர்கள் பால் நாம் வைக்கும் வஞ்சகமற்ற எதார்த்த ஒட்டுதலே அவர்களின் இரக்கத்தை சம்பாதிக்கும் ஞானச் செயலாகும்.

*ஜீவசகோதரி லாவண்யா:* **அறிவு அறி பாடம்-ஆலயம் புகுதல் அழிவிலா வாழ்வு..**
ஆன்மா லயமாகும் தன்பெரு ஆலயமாகிய ஜீவகுகையில் மனம் அலையாத அறச்செயல் பழகி, மூச்சுலயமாகிய மனோலயம் கைக்கொண்டு அழிவிலா வாழ்வைப் பெறலாம். ஆசான் தன் அருளால் காட்டும் அகத்தில் ஏறி நபுசெனும் மனதை சிபத்தெனும் அறிவாக மாற்றி வாட்டமற்ற வழிகை ஏறி தன்பெருவெளியான சாலை வளநாட்டில், முத்தி எனும் வீட்டில் உறுமதி ஓங்கி வாழலாம்.

**குருபெருமான் வர்ஷிப்பு:**
திரு ஒரு உரு தாங்கி குருவாக வந்து மதினா மூலம் திருவெனும் இமையா நாட்டில் தன் னாதத்தால் குடியேற்றிப் பழக்கும் போது மனம் திரும்பி அறிவாக மாறும் செயலையே **திருமதி ஆட்சி உறுமதி ஓம்பும்** என அருளுகிறார்கள்.

**பள்ளியையும் மெய்ப்பால் தந்த வள்ளலை** என்ற குரு ஸ்தோத்திரப் பாடலை, ராகம் தாளத்துடன் குழந்தைகள் சிவா கவி இருவரும் சிறப்பாகப் பாடினர். எள்ளளவும் இடையும் விடாது யோக உணவு, ஜீவ உணவு கிடைத்துக் கொண்டே இருக்கும் வேத பாடல்களை, மூச்சு வாங்குமிடம், விடுமிடம் அறிந்து, ஸ்ருதி மாதா, லயம் பிதா, எனும் ராகம் தாளத்துடன் படிப்பதே சிறப்பு சேர்க்கும்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **சத்தியவேதம் -யோவான் சுவிசேஷம் (வாக்கியம் 6 - 10 )**
எல்லா காலங்களிலும் தீர்க்கதரிசிகள் வருவது பற்றி திருமறைகளில் கூறியுள்ளது போல், தேவனால் அனுப்பப் பெற்று மனுத்தோற்றத்தில் ஈசனுடைய செயலைப் பெற்று வந்த மனு ஈசன் யோவான்.அவர் "நான்" என அவரவரிடத்தில் வழியாக உள்ள ஜீவனை விசுவாசிக்கும்படி சாட்சி கொடுக்க வந்தார்."நான்" எனும் மெய்யான ஜீவ ஒளியே மனிதனைப் பிரகாசிக்க வைத்து உலகத்தை உண்டாக்கிற்று. அதுவே ஐம்புலன்களுக்கு ஒளி கொடுக்கும் ஜீவனாக, அறிவாக, சிவனெனும் வாடாத தீபமாக உள்ளது. இதை அறிந்தவனே தேவன்.


Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் அருளமுத வர்ஷிப்பு:**

அறியாமை என்னும் இருளை நீக்கும் மெய்யான ஞானஒளி அவரவரின் சுத்த இருதயத்தில் பிரகாசிக்கிறது. குருபிரானால் முறைசங்கார அனுக்கிரகம் முடித்து மனுவாய் மாற்றப் பெற்றவனே மனிதன். மற்ற யாவரும் மனுத்தோற்றத்தில் உள்ள நரனே. அவரவரின் தன்னுலகை அறிய வைத்த குருபிரானே உலகத்தை உண்டாக்கியவர். சர்வ மூலமந்திர நிரூபிகராகிய பரிசுத்தஆவி தெய்வத்தின் பரிபூரண ஆசியால் சமரசம், சமத்துவம் உணர்ந்த ஆதி மார்க்க னீதி அவையின் மக்களுக்கு சத்திய வேதம், திருக்குறள் என்ற சர்வவேதங்களின் செயலும் ஒன்றுதான் என்பது தெரியும்

**சிவானந்த போதம்:**

கலங்கரை விளக்காக உள்ள இந்நூலில் **குருவில்லா வித்தை பாழ்** என்பதை இதன் ஆசரியர் சாட்சியுடன் விளக்குகிறார். குருபிரானின் திருவடிகளில் சரணடைந்தே ஞானம் பெறமுடியும் என்பதும், *மாணிக்க சுவாமிகளின் குரு-அம்பலவாண தேசிகர்* என்பதும் இந்நூலில் அருளப்பெற்றுள்ளது. பெரியோர்களை ஜாதி குலம் குறித்துப் பேசுவது பாவம் என அறியாமல் ஆண்டவர்களின் குலம் குறித்து இழிவாகப் பேசிய கலெக்டருக்கு ஆண்டவர்கள் உத்தரமாக அருளிய பாடலைக் கண்டு தான் செய்த தவறை உணர்ந்து வருந்தி ஆண்டவர்களைத் தரிசித்து மன்னிப்புக் கோரினார். பெரியோரைப் பித்தர் என இகழ்வோர்கள் ஆணவ இடும்பிலேறி அறம் மெலிந்து உருக்குலைந்து வினை வசப்பட்டு நரகில் விழுவார்கள். உடல் உள்ளபோது பெறுவதே சொர்க்கமும் நரகமும். நரனுடைய அகமெனும் நரகமாகிய மனதால் பொறியைப் புலன் வசத்தில் போக்கும் செயலிலிருந்து மாற்றி னிலைனிற்கா மனந்நன்னை னிறுத்தி அறச்செயலில் ஆக்குபவரின் சிவானந்த போதம் நம்மை சிவமாக்கும் என்ற குரு பெருமானின் அருளுரைகளுடன் அவை இனிதே னிறைவுற்றது.

**28-08-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்**

*ஜீவசகோதரி பொன்லக்ஷ்மி* : **பவக்கடல் தவிக்கும் மாந்நரை கரைசேர்** எனும் பாடலைத் தொடர்ந்து, காருண்ய மேனி தாங்கி வந்து பிறவியாகிய கடலிலிருந்து தனது உரிமைப் பொருளாகிய மக்களின் ஜீவாத்மாவை தப்புவித்து நித்திய பூரண பேரின்ப உலகில் சேர்த்து இரட்சிப்பதுவே பரமாத்மாவின் செயல் என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். அனித்தியத்தில் இருந்து மாறி நித்திய பொருளைக் கைப்பற்றுபவருக்கே **அனந்தன்** என்ற னாமம் தரப்பெற்றது. னித்திய தேகமாகிய பஞ்ஞாட்சரமே அஷ்டாட்சரம், பிரணவம், கலிமா என்பதாகும். அதை இதய ஆசனத்தில் சந்திக்கும் பிரம்மவித்தை செயலைச் செய்து வைப்பவரே மெய்யான குருபிரான்.

*ஜீவசகோதரி அருணா* : பிரணவத்தின் இருப்பிடமே பிராணனின் பிறப்பிடம். நாம் மனிததேகம் எடுப்பதற்கு முன் தந்தையின் விந்தாகவும், தாயின் சுரோணிதமாகவும் இருந்தோம். அதற்கு 48 நாள் முன் இரத்தமாகவும், அதற்கு இரண்டரை நாழிகை முன் உணவாகவும் அதற்கு முன் உணவு தருகின்ற புல் பூண்டாகவும் இருந்தோம். வினைக்கேற்ப உண்டாகிய பிணி, மூப்பு, பயம், துன்பம் கொண்ட இந்த அசுத்த தேகத்தோடு நாம் இறைவனின் சன்னிதிக்கு செல்ல முடியாது. நரனாகப் பிறந்து மனிதனாகி, தேவனாகி, தெய்வமாகி, நித்திய வாழ்க்கை வாழவே மனிதனிடத்தில் அறிவு மாணிக்கம் தரப்பெற்றுள்ளது. ஆயுதம், நெருப்பு, தீண்டாத நித்திய தேகமாகிய ஹக்கீகத்து முகமது எனும் தலத்தை அடைந்தவர்களுக்கே நித்திய பேரின்பம்.கிடைக்கும். ஜீவகாருண்ய ஒழுக்கம்

*குருவின் வடிவத்தைத் தினமும் ஸ்மரித்தல் வேண்டும். குருவின் னாமத்தை எப்போதும் ஜபித்தல் வேண்டும். குருவினுடைய ஆக்ஞையைச் செய்ய வேண்டும். குருவுக்கு அன்னியமானவற்றைப் பாவிக்கலாகாது.*

*~ குரு கீதை*



Copyright © AMNA Trust, Chennai

கொண்டே இதனைப் பெற முடியும் எனவும், ஆணவம், கன்மம், மாயை என்கிற மும்மல பந்தத்தால் ஒன்றுபட்டு அறிவு இழந்த ஆன்மாவெனும் பசு பதியுடன் சேரவேண்டும் எனவும் வள்ளலார் அருளியுள்ளார்.

ஒரு மரத்தின் வித்தினுள் இலை, கிளை யாவும் பொதிந்திருப்பது போல் நமக்குள் இருக்கும் பரமவித்தாகிய தௌஹீது என்னும் தெய்வீக வித்திற்குள் நாம் உகக்கும், வெறுக்கும், பொருட்களும், பாதாள உலகம் ஏழும், சொர்க்கம் எட்டும், முக்காலமும், கோடானு கோடி அதிசயங்களும், மிக நுண்ணிய வடிவில் திடமுடன் ஓர் அணுவில் அணுவாய் திரண்டு கிடக்குது என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். கருவுக்குள் செல்லும் விந்தினிலுள்ள னாதமாகிய அறிவே, தேகத்தை படைக்கும் சக்தியாக,சோதிக்க முடியாத ஆவி ரூபமாக உள்ளது. இதனை **விந்நதனில் னாதம் னின்று விளங்நு னிலை எங்நே** என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

பேரின்பம் அனுபவிக்கும் ஒரே நாட்டத்துடன் வருகின்ற குண்டலித் தாயாகிய அதுவே உடலின் சர்வ இயக்கங்களுக்கும் காரணப்பொருளாக, ஜீவனாக, உணர்வாக, அமானிதமாக, சூக்குமமாக, னாம ரூபமற்ற னாத னாதாந்தமாக உள்ளது. னாதம் விளைந்த னாதன் அருளால் காலத்தின் ரகசியத்தை அறிந்து, இறைவனின் காருண்ய நாட்டத்தில் கலக்கும் போது னவக்கிரக கோள்களின் ஆதிக்கம் அற்று காலம் இல்லாமல் போகிறது. இதனை **னவக்கிரக கோள் மாற்றும் னாதசோதிடனா னிற்பர்** என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். ஆண்டவர்களின் அருளுக்குள் நுழையும் போது பாவம் சங்கரிக்கப்பட்டு, மனம் அறிவாக மாறுகின்றது. கங்காளனால் பூசப்பெறும் மங்காத பிரகாசமான நிஜ விபூதிக்கே மனிதனை ஈசனாக்கும் சக்தி உள்ளது. பத்தி கொண்டு பத்தியமுடன், ஜீவகுகை தோறும் வீற்றிருக்கும் மருவில்லா குகனை அறிந்தால் பிறவி மாய்ந்து நாமும் சிவமாய் வாழலாம்.

*ஜீவசகோதரி தபேஸ்வரி:* காசி என்பது காக்கும் சிவனாகவும், திருவடியாகவும், நெருப்பு வடிவமாகவும் உள்ளது. காசியிலுள்ள இறைவன் விஸ்வநாதன். நந்தி பகவானின் ஜீவ சமாதியும் இங்குதான் உள்ளது. விஸ்வமாகிய உலகத்தை உய்ய வைக்கும் னாதமே விஸ்வனாதம். அகிலத்தை ஆட்சி புரியும் தாயாக விசாலாட்சி தாயார் உள்ளார்கள். சப்தத்தை பொதிந்துள்ள ஆகாயத்தின் அம்சமாக உள்ள நமது செவியே தேவயோனியாக, சதாசிவத்தை காட்டக் கூடியதாக உள்ளது. ஜீவனுக்கு உணவளித்து, சக்தி கொடுத்து, பாவம் நீக்கி காக்கும் அன்னபூரணித் தாயை ஆண்டவர்கள் **ஆத்தாளாய் வந்நெனக்கு அமுதமூட்டி** என அருளியுள்ளார்கள். புலன் வழி போகும் காலமெனும் வயதை மீட்டு காலனிடமிருந்து நம்மை காக்கும் கடவுளாகிய காலபைரவரே நம் பிறப்பெனும் பேதமை நீக்கி சிறப்பெனும் செம்பொருளைக் காண வைக்கும் அறிவாக விளங்குகிறார்.

*ஜீவசகோதரர் சங்கர்:* தேகமுக்தியும், ஜீவமுக்தியும் மனிதனுக்கே. அகத்தில் உள்ள இறைவனை காட்ட வல்ல குருவே, காட்டானாக உள்ளார். னீதி எனும் பொருள் ஆனவன் மனு. நடுநிலையாக அறிவாக உள்ள னீதியையும், ஆறுஆதாரம், அறுசுவை உணர்த்தும் இடத்தையும் அறிந்து மெய் வணக்கத்தின் மூலம் சிவன் இருக்கும் காசிக்கு தினமும் சென்று வருதல் வேண்டும். ஆகாய கங்கையில் மூழ்கி பாவம் நீங்கி புண்ணியம் கைக்கொண்டு, திரிசூலமாகிய காலம் கைப்பற்றி ஓர் அறிவாம் கற்பக விருட்சம் கண்டு, ஜீவன் பிரகாசிக்க, பிறவாமை பெற்று, தன்னை அறிந்து வாழும் வாழ்க்கையே மெய்வாழ்க்கை. பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருனாமத்தை அறிக்கை செய்வதற்கான அறிவிலும் அருகதையிலும் நம்மை ஆக்கி வைத்த குருவைப் போற்றி குடியோங்கி வாழ்வோம் என்ற பகிர்தலுடன் அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai

**30-08-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவசாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி.ஹேமலதா தியாகராஜன்**

*ஜீவசகோதரர் கௌதம்:*

**ஆகாயம்:** வெளியுலகத்தில் ஆகாயமானது சூரியன், சந்திரன், நட்சத்திரம், நிறம், ஒளி, ஒலி என அனைத்தையும் தன்னகத்தில் அடக்கி அசைவிலா குன்றாக உள்ளது போல், அகமியத்தில் நமக்குள் விளங்கும் ஆகாயத்தை அறிந்து, அதில் பழகும் செயலை ஆதி மார்க்க னீதி அவையின் மூலம் ஆசான் நம்மிடத்தில் பரிசாக வழங்குகிறார்கள்.

**வினாயகர்:** பவச்சேறான வினையில் கால காலமாக உழன்று கொண்டிருக்கும் நம்மை விடுவிக்கும் ஆசான் அவர்களே **வினாயகர்.**

**கணபதி:** கண்+அ+பதி - ஓர் மெய்குருபிரான் அவர்களே அகரப்பொருளான மூன்றாவது கண்ணை சுட்டிக்காட்டி, சொல்லக ஜோதியால் நம் வினைகளை அறுக்கிறார்கள். அவர்களின் திருப்பாதத்தை இமைப்பொழுதும் நீங்காமல் இருக்க வேண்டியதின் அவசியத்தை, ஆண்டவர்கள் பாதபூஜையில் *தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்களுக்கே நமஸ்காரம்* என அருளியுள்ளார்கள்.

**அறம் :** நம் அறியாமையை போக்கி, அறிவைத் துலக்கி வைக்கும் ஆசானைப் போற்றி பணிவதுவே அறம். அறம் என்பது இல்லாதவர்களுக்கு கொடுக்கும் குறைகின்ற பொருளல்ல.

**காலாதீதன் :** மனதின் வினையால் காலத்தின் அதிபதியான காலனின் பிடியில் வாழும் நம்மை காலம் அற்ற வைகுண்டம், கைலாயம், மெஹராஜ் எனும் இடத்தில் குடியேற்றி வைப்பவர்களே காலாதீதனாகிய ஆசான்.

**அருள் :** யுகாந்தநாட்டுச் செல்வமாகிய குருபிரானின் அருளாகிய பெருங்கருணையே அறிவாக, முக்தியாக உள்ளது. இதனை ஐவகைத் தொழில் கொண்டு ஆசான் நம்மிடத்தில் அருளும் செயலானது –

1) நம் மனதின் அறியாமையை சங்காரம் செய்யும் போது அழித்தலாகவும்,
2) அறியாமையை அழித்து, குறைக்க முடியாத சேமனிதியை வழங்கி, நிலைனிற்கா மனந்தன்னை நிறுத்தி வைக்கும் போது காத்தலாகவும்,
3) ஆசான் தன் ஆலவாய் சூல் கொண்டு நரனிலிருந்து மனுவாக மாற்றி பிறக்க வைப்பது படைத்தலாகவும்,
4) மறக்க வேண்டியதை மறக்க வைத்து மறைபடா தரிசனையில் நம்மை ஆக்கி வைப்பது மறைத்தலாகவும்,
5) அனித்திய உடலை மண்ணில் வைக்கும் வரை நடந்து கொண்டே இருப்பது அருள்வதாகவும் உள்ளது.

**கற்பம் :** கயிலைபிரான் சன்னிதியிலுள்ள கற்பம் என்பதே ஆசானின் நாதமாக, ஏழ்நிலை கம்பமாக, கலிமாவாக, அவரவர் சொந்த வீடாக உள்ளது. அதுவே நம் செவிவழி நுழைந்து நம்மை அறியாமை எனும் சோகத்திலிருந்து மாற்றி அறிவெனும் கற்பக மரமாகிய அசோகத்தில் ஆக்குகிறது.

*ஜீவசகோதரர் சங்கர் :*
**பஞ்ஞபூதங்கள்**: நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் பஞ்ஞபூதங்கள் நம்மிடம் ஐம்புலன்களாகவும் அதன் தலைவனான மனமே பஞ்ஞபூத கணங்களுக்குப் பதியான கணபதியாகவும் உள்ளது. நீரில் தோன்றி நீரில் மறையும் மனித வாழ்வின் தாத்பரியமே, நீரில் மண்ணைக் குழைத்து செய்யும் விநாயகர்


Copyright © AMNA Trust, Chennai

சிலையை மீண்டும் நன்னீரில் கரைப்பது. அதுபோல் நம்மிடத்தில் மனமாக உள்ள விநாயகரை நன்னீராகிய திருப்பாற் கடலில் கரைக்கும் பொழுதுதான் நம் பிறவி முழுமை அடைகிறது என்ற பகிர்வுகளைத் தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

**31-08-2022 ~ புதன்கிழமை ~ வினாயகர் சதுர்த்தி சிறப்பு சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**குருபிரான் அருளமுத வர்ஷிப்பு:**

பிரம்ம பிரகாச மெய்வழிச்சாலை ஆண்டவர்களின் பெரும் கிருபை ஆசீர்பாதத்தினால் ஞானமும், தவநிலை ரகசியங்களும் அவர்கள் விதைத்த விதை மூலம் நமக்கு எளிமையாக கிடைக்கின்றது. **திருவளர் திருவே ஷெய்குகள் ஷெய்கே...** பாடல்.
**தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்** என்பதே ஜீவ முத்தர்களின் நோக்கம். ஞானத்திற்கான திரு வார்த்தைகளையே பெரியோர்கள் மனுமுளை துவங்கிய காலந்தொட்டு ஓயாது, ஒழியாது, அயராது, ***கடல்முரசின் கரை கடத்திக் காட்டும் பஞ்ஞாட்சரம்...*** போல் முழங்கிக் கொண்டே இருக்கிறார்கள். தோற்றமும் முடிவும் இல்லாத சுயம்பிரகாச, முழுமுதற் கடவுளாக, பிரணவ சொரூபியாக, நெற்றிக்கண் படைத்த விநாயகர் தத்துவமே குருவின் தத்துவம். ***பாலும் தெளிதேனும்*** என்ற பாடலில் சங்கத்தமிழ் மூன்றும் தா என ஔவையார் துதிக்கிறார். பஞ்ஞாட்சரமாக, அடி முடி னடுவின் ரகசியமாக மனித உயிருக்கும், ஆன்மாவிற்கும் உள்ள தொடர்பாக உள்ள தமிழெனும் அறிவாகிய ஜீவனை, தேரையர், சகல ஜாதி குல மத பாஷையினருக்கும் தேவை என அருளுகிறார்.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* சதுர்யுகத்தையும் கைக்கொண்டு வருகிறவர், செடிகளுக்கான விதை போல உலக உயிர் உற்பனத்திற்கான வித்தாக இருப்பவர். ஃ என்பது ஆறாம் அறிவாக, மூன்றாவது கண்ணாக நின்று விளங்குவதை அறியும் போது அகரமுதலாகிய விநாயகர் பெருமானை தெரிந்து கொள்ளலாம். அவரே வித்தில்லாவித்தாக னாத பொருளாக ஞான ஆகாய பெருவெளியில் குரு பெருமானாக குருபிரம்மா, குருவிஷ்ணு, குருதேவோ, மகேஸ்வர, குருசாட்சாத் பரப்பிரம்மம் என்ற ஐந்து நிலைகளாக வான நாட்டிலிருந்து இறங்கி, பரு, மன, வளி அறிவு, ஆனந்த உடலாக குரு பெருமானிடத்தில் வெளிப்படுகிறார். சீதக்களப செந்தாமரை பூம்பாதமாக பல இசை பாடும் மலர்ப் பாதமாக, அவரவர் உள்ளத்தை அதிக தெளிவுபடுத்தி காட்டும் தெய்வக் கண்ணாடியாகிய குருபெருமானின் துணைகொண்டு அஷ்டாங்க யோகத்தின் மூலம் அனுபவத்தால் அறியலாம்.

**குருபிரான் அருளமுத வர்ஷிப்பு:**

சாவருமுன் சாகப்பழகும் முழு தத்துவ ரகசியத்தை உள்ளடக்கி கொண்டிருப்பவர் கணங்களுக்கு அதிபதியாகிய கணபதி. ஆத்மனிடத்தில் உள்ள சுவை, ஊறு, ஒளி, ஓசை நாற்றம் என்ற ஐந்தும் பஞ்ஞபூத தத்துவமாக உலகமாக உள்ளது. பாவங்களுக்கும், வினைக்கும் காரணம் மனம். நவக்கிரக செயல்களினால் புத்தி (நிச்சயிப்பது) சித்தி (உறுதி செய்வது) நிலை குலைந்து தசாபுத்தி உண்டாகி வினைகளுக்கு காரணமாகி உண்டான இப்படைப்பை அழிக்க வல்லவனே மனு.






Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரி ஜீவிதா எழுதி - ஜீவசகோதரி பானுமதி வழி மொழிந்தது:*

*விநாயகரின் மூன்று நிலைகள்-* தத்துவநிலை, குருபெருமான் நிலை, கடவுள்நிலை. தத்துவம் கடந்த குருபெருமானின் ஓரிதழ் சீதக்களப செந்தாமரை பூம்பாதமே சிவமயப் பொருளாக, விநாயகர் தத்துவத்தை நம்முள் விளங்க வைக்கிறது. மெய்வழி ஆண்டவர்களும் **தத்துவம் கடந்த தயாநிதி கடலே..** என அருள்கிறார்கள். பிரம்மத்தை தனது முகத்தில் கொண்டிருக்கும் குருவே, மேலான விநாயகப் பெருமானின் தத்துவ வடிவம். காட்டுவதற்கு வந்த காட்டானைத் தத்துவமே ஆனமுகம்.

*ஐங்கரன்-* சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், நிக்கிரகம், அனுக்கிரகம் என்ற ஐந்து தொழிலுக்கு அரசனாகி அருள் பாலிக்கும் திருச்செயலை உணர்த்துவதாகும்.

*அபயக்கரம்-*எமபயத்தில் இருந்து நம்மை காக்கும் முத்திரைக்கரமாகும். **வந்ந வேதம் வரைந்ந அபயத்தினால்** என ஆண்டவர்கள் அருளுகிறார்கள்.

*அஸ்தம்-*நவக்கிரகத்தில் சிக்கித் தவிக்கும் நம்மை மீட்கும் செயல்.

*வரதமுத்திரை-*வரதன் குருவாக வந்து அருளும் அனுக்கிரக செயலாகும்.

*பூரணம்-* நபுசு சிபத்தினை உணர்த்தும் வக்ரதுண்டமாக தத்துவ ரூபமாக நம்மை பூரணன் ஆக்க அவதரித்து வரும் குரு பெருமானின் செயல்களை விளக்குவதாகும்.

*அமுதகலசம்-*அமுதம் சிந்தும் தமிழின் உயிர் நிலையை உணர்த்துவதாகும்.
தத்துவம் கடந்த பரம்பொருளை தத்துவத்தின் மூலம் அறிவிக்கும் விநாயகராகிய குருவின் திருவடிகளை போற்றி வணங்குவோம்.

**குருபிரான் அருளமுத வர்ஷிப்பு:**

குருவின் சிறப்பை சொல்வதே விநாயகர் தத்துவம். ஐந்து கரத்தின் செயலை, பொறிவாயில் புலனாகிய ஐந்தவித்தான் என அருள்கிறார்கள். சத்தியவேதமும் ஆவியில் பிறந்தவனுக்கு மறு பிறப்பில்லை என்கிறது. பிறவாமையின் ஒட்டுமொத்த குறியீடே பிள்ளையார் சுழி. உயிரெழுத்தின் ரகசியமான **உ** எழுத்தினை பிரிக்கவும் உடைக்கவும் முடியாது. இறை தமிழின் பாரதூரமான சிறப்பை உணர்த்துவதே தமிழ் எழுத்துக்கள். இறைவனைப் பற்றி பேசக்கூடிய சலிப்பற்ற வார்த்தைகளையே பெரியோர்கள் எழுதாத எழுத்தாக அருள்கிறார்கள். ஆறறிவின் ரகசியத்தை உள்ளடக்கி அறிவு வடிவாக இருப்பது வக்ரதுண்டம். வினைகளை அகற்றுவதால் விநாயகர் என்றும், கணங்களுக்கு நேசன் என்பதால் கணேசன் என்றும், ஏகவியாழனாக குருபகவான் ஆனதால் ஞானசூரியன் என்றும் செயலுக்கான நாமங்களைக் கொண்டிருக்கும் இவரை வணங்கும் முறையாகிய தோப்புக்கரணம் செவிச்செல்வத்தின் சிறப்பை உணர்த்துவதாகும்.

***செவியில் சுவை உணரா வாயுணர்வின் மாக்கள்***
***அவியினும் வாழினும் என்*** என திருவள்ளுவர், அறியாமையை சாடுகிறார்.

சர்வமும் தானாக **நான்** எனும் ஜீவனாக, தன் எனும் ஜீவகுகையில் வீற்றிருக்கும் பொருளாக நின்று விளங்குபவரே விநாயகப் பெருமான்.

***வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றல்லது***
***வேண்டாமை வேண்ட வரும்***

மனித வாழ்க்கையின் மூன்று ரகசியம், **விதி, மதி, இறைவன்**. வினைக்கேற்ப இறைவன் கொடுக்கும் தேகம் வினை முடிந்தால் பிறவாமையாகிறது என்பதை.அறிந்தவர்கள்



Copyright © AMNA Trust, Chennai 

துக்கம் துயரத்தில் இருந்து விடுபடுகின்றனர். பிள்ளையார்சுழியாக விளங்கும் அவரவர்களின் தேள் கொடுக்காம் குலதெய்வத்தையும்

***தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன்***
***மெய்வருத்தக் கூலி தரும்***

என்பதையும் உணர்ந்தவர்களே ஆதிமார்க்க நீதி அவையின் அங்கங்கள். அம்மா என்ற வார்த்தைக்கும் தாய் அன்புக்கும் நிகரானது இவ்வுலகில் வேறேதும் இல்லை. எனினும் அதற்கும் மேலான தாயாகி, தந்தையாகி நிற்பவனே இறைவன் என்பது அறிவுள்ள மக்களுக்கே தெரியும். நம் அனைவரையும் கூட்டி வைத்த அன்பெனும் விசேஷம் அவரவர் அறிவு, உயிர், ஆன்மா சார்ந்த ஒன்றாக அவரவர் உள்ளத்திலே உதயமாகி ஞானமூர்த்தியாக ஞானசூரியனாக வினைதீர்க்கும் வினாயகராக விளங்குகிறார் என்ற அருள் வர்ஷிப்பை தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே நிறைவுற்றன.

## இசை வகுப்புகள்
## தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்

**07-08-2022 ~ ஞாயிற்றுக்கிழமை**

**வந்ந வேதம் வரைந்ந பயத்தினால்** என்ற தோத்திரப்பாடலைத் தொடர்ந்து,
தெய்வத் தேடு கூடகப் பாடலான,

தேடிய லுத்தஎன்றன்
வான்பதித் - தேட்டுப்பி றவியரே

கூடினாம் தென்றிசைத்
தேடிவ ருகையில்
வாடையொ ருதெய்வ
வாசங்நா ணுதிங்ஙே - தேடி

மனிதச்சட் டையிட்டவான்
பாடியூர் வனங்ஙாலி
பிணிக்கப்பெற் றிருக்கின்ற
பேயினங் ஙட்க்கிடை - தேடி

மனிதப்புற் பூடுகள்
மலங்ஙல்க் கரடுமுட்கள்
சனிப்பொறி யரவுவாழ்
சதளங்ங ளுக்கிடை - தேடி

**னரனாவந் நதுமக்கள்**
ஆய்வானோ ராகவென்
றறியாப்பக் கிவிஷங்ங
ளதற்கிடை யினிலின்னாள் - தேடி

என்ற பாடல்கள் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப்பெற்றது.



Copyright © AMNA Trust, Chennai

### 21-08-2022 ~ ஞாயிற்றுக்கிழமை

**முன்னுருதங்குர சிக்குல மாமணி** என்ற தோத்திரப் பாடலைத் தொடர்ந்து, தெய்வத் தேடு கூடகத்திலிருந்து **வானெலாம் சிறப்போனாகி** என்ற பாடல் ***மோஹன*** ராகத்திலும் அடுத்து **மாங்கனிச் சோலையில்** என்ற பாடல் ***சஹானா*** ராகத்திலும் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப்பெற்றது.

### 28-08-2022 ~ ஞாயிற்றுக்கிழமை

**அண்ட ராலும றியவொண் ணாத்திரு** என்ற குருஸ்தோத்திரப் பாடலைத் தொடர்ந்து, தெய்வத் தேடு கூடகத்தில் இருந்து **கண்டவரில்லை என்று** என்ற பாடலும் **அண்டர் தம் பதிகை** என்ற பாடலும் ***முகாரி*** ராகத்தில் விருத்தமாகப் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப்பெற்றது.

## செல்போன் பயன்பாடுகளும் விளைவுகளும்

இன்றைய நவீன வாழ்வின் மிக அவசியமான செல்போனின் நன்மை தீமை பற்றி, ஆதி மார்க்க நீதி அவையிலுள்ள மக்களும், குழந்தைகளும் அறியவேண்டியது மிக மிக அவசியமாகும் என்ற குருபிரானின் உத்தரவின் படி, கைபேசியின் நன்மை தீமைகள் பற்றி ஜீவசகோதரர் சரவணகுமரன் பகிர்ந்தது -

**நன்மைகள்-** அறிவுக்கான தேடல், பணபரிமாற்றம், உலகெங்கும் உடனடி தொடர்பு, அவசர உதவி, பாதுகாப்பு, வழித்தடம் அறிதல்.




**தீமைகள்-** காது இரைச்சல், கண்களுக்கு சேதம், தலைவலி, மூளை புற்றுநோய், இதய பிரச்சனைகள், நினைவாற்றல் இழப்பு, உயர்மன அழுத்தம், தூக்கமின்மை, மனச்சோர்வு, பிறரை பற்றிய அக்கறையின்மை.

**கட்டுபடுத்தும் முறைகள்-**

1. ஓய்வு நேரத்தில் மட்டும் செல்போன் உபயோகிப்பது.
2. ஒரு நாளில் குறிப்பிட்ட நேர வரம்புடன் பயன்படுத்துவது.
3. படுக்கையறை மற்றும் வாகனம் ஓட்டுகையில் செல்போன் தவிர்ப்பது.
4. தேவையற்ற செயலிகளின் (Apps) பயன்பாட்டை தவிர்ப்பது.

செல்போன் உபயோகத்தால் உடல், மனம், பண ரீதியான பல சிக்கல்கள் வருவதை அறிந்து பயனற்ற செய்திகள் மூலம் நம் அருமையான நேரத்தை வீணடிப்பதைத் தவிர்க்க, ஒரு நாளில் நாம் கைபேசியை பயன்படுத்தும் நேரத்தை கட்டுப்படுத்தும் செயல்பாடு கூகுளில் **Digital Wellbeing** எனும் செயலி இருப்பதும், அதன் செயல்முறை குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

*குருவின் முகத்தில் பிரம்ம மிருக்கின்றது. அது அவரதருளால் அடையப்பெறுகின்றது. ஆகவே, மறதியில்லா னினைவோடு எப்போதும் குருவைத் தியானித்தல் வேண்டும்.*

*~ குரு கீதை*



Copyright © AMNA Trust, Chennai

**குழந்தைகளுக்கான செல்போன் பயன்பாட்டு வழிமுறைகள் :**

குழந்தைகள் கல்விக்காக செல்போன் பயன்படுத்தும் னிலை கட்டாயமாகிவிட்ட இன்றைய காலகட்டத்தில், பெற்றோர்கள் மிகுந்த கவனத்துடன் செயல்பட்டு குழந்தைகளை வழினடத்த வேண்டும். ஒவ்வொரு னாளும் எத்தனை மணி நேரம் குழந்தைகள் செல்போன் உபயோகிக்கிறார்கள், எவ்வித செயலிகளை பயன்படுத்துகிறார்கள், சரியான தகவல்கள் மற்றும் காணொளிகள் மட்டுமே காணப்பெறுகிறதா என்ற பல நிலைகளை கண்காணித்தல் அவசியமாகும். அந்த வகையில் பெற்றோர்களின் செல்போன் மூலமாகவே குழந்தைகளின் செல்போன் பயன்பாடுகளை எப்படி கட்டுப்படுத்துவது, சரியான தகவல்கள் மட்டுமே சென்றடைவதற்கான அமைப்புகளை மேற்பார்வையிடுவது, வயதிற்கேற்ப பாதுகாப்பு முறைகளை னிர்ணயிப்பது, குழந்தைகள் வெளியில் செல்லும்போது அவர்களின் பாதுகாப்பை நாம் இருக்குமிடத்திலிருந்தே அறிந்து கொள்வதற்கான வழிகாட்டு முறைகள் என பல பயனுள்ள தகவல்களை விரிவாக விளக்கினார்.

**குருபெருமான் வர்ஷிப்பு:**

நம் மனம் வேதம் ஓதுவதற்கு விரும்புகின்ற செயல் நல்லது, அதன்றி நம் கவனத்தை அதிகம் ஈர்க்கும் மற்ற யாவும் தீமையே என்பதில் உஷாராக இருக்க வேண்டும். காலத்தின் நன்மையையும், மதிப்பையும் உணர்த்துவதற்காகவே இந்த விழிப்புணர்வு செய்தி என அருளினார்கள்.

*தனது (பிரம்மசரியாதி) ஆசிரமம், தனது (பிராமணாதி) ஜாதி, தனது கீர்த்தி, வளம் என்னுமிவ் வெல்லாவற்றையும் முற்றிலும் விட்டுக் குருவையே செவ்வையாய் ஆசிரயிக்க வேண்டும்.*

*~ குரு கீதை*



Copyright © AMNA Trust, Chennai

## ஆகஸ்ட் மாத னிகழ்வுகள்

**ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர்களின் அழைப்பை ஏற்று நமது குருபிரான் சாலை ரவி அப்பா** அவர்கள் ***11, 12, 13-08-2022*** ஆகிய தேதிகளில் **சிவகாசி** மற்றும் **14-08-2022** காலை **சத்திரப்பட்டி** ஆகிய இடங்களில் எழுந்தருளி அங்கத்தினர்கள் மற்றும் எதார்த்த னன்மனத்தினர் அனைவருக்கும் அருளமுத அருள் வழங்கினார்கள்.







**14-08-2022** பகல் தூத்துக்குடி அருகில் **வைப்பார்** - *செய்யது சம்சுதீன் தர்ஹா விஜயமும்*, மாலை மற்றும் **15-08-2022** காலையிலும் **தூத்துக்குடி** அங்கத்தினர்களிடையே எழுந்தருளி யுகாந்த னாட்டுச் செல்வமாகிய அருளமுதத்தை வழங்கினார்கள்.





Copyright © AMNA Trust, Chennai

**28-08-2022** ஞாயிற்றுக்கிழமை காலை சீடர்களுடன் **கோவளம்** - *தமீம் அன்சாரி தர்ஹா விஜயமும்*, **31-08-2022** புதன்கிழமை காலை ஜீவதம்பதியர் *கிரிதரன் - புனிதா* அவர்களின் அழைப்பை ஏற்று அவர்களின் இல்லம் எழுந்தருளி அருள் செய்தார்கள்.




**31-08-2022** புதன்கிழமை மாலை ஆதி மார்க்க னீதி அவை அலுவலக திறந்த வெளி மாடியில் **வினாயகர் சதுர்த்தி விழா சிறப்பு அவை** நிகழ்வும், அதனைத் தொடர்ந்து, பங்கேற்ற அனைவருக்கும் ஆதி மார்க்க னீதி அவையின் செயலாளர் **திரு. மணிவண்ணன்** அவர்கள் இரவு உணவு வழங்கினார்கள்.



## வாழ்த்துமடல்:

**31-08-2022** அன்று சிவகாசியை சேர்ந்த நமது அங்கத்தினர் ஸ்ரீமதி. சாந்தினி சுரேஷ் அவர்களின் புதல்வி திருவளர்ச்செல்வி **S. கீர்த்தனா** மற்றும் திருவளர்ச்செல்வன். **M.பிரசாந்த்** அவர்களின் திருமணம் நடைபெற்றது. ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர்களின் சார்பாக மணமக்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.





Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2022 செப்டம்பர் மாத அவை நிகழ்வுகள்


Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் வர்ஷிப்பு



*திரு. சாலை ரவி அப்பா அவர்கள்*
*நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை*

ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே, எதார்த்த னன் மன சற்சன மக்களே, 15வது இதழாக உங்கள் முன் உதயமாகியுள்ள இம்மாத மின்னணு சஞ்ஞிகையின் அம்சமாக மக்களுக்கு பயனுள்ள, இதில் அடங்கியுள்ள திருவார்த்தைகளும் அதனைத் தொகுத்து வழங்கிய மக்களின் புரிதல்கள் மேன்மை பெற்றிருக்கும் விதமும் நேர்த்தியாக தொகுத்து வழங்கப் பெற்றுள்ளன. எமபடரடிபடு கோடாயிதக் கூர் திருவாக்கியங்கள், அறிவு அறிப்பாடம், சத்தியவேதம், சிவானந்த போதம் இவையாவும் ஆதிதலைப் பாடமாக ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களுக்கு நடத்தப் பெற்றுள்ளது.

இந்த இதழில் சிவகாசி அவையின் சிறப்பு நிகழ்வுகளாக புண்ணிய பாவங்களுக்கு காரணமான எண்ணம் பற்றி ஜான்சிராணி, அறிவு, பாதம் பற்றி அறிய ஆதி மார்க்க னீதி அவையின் அங்கமாக வேண்டும் என செந்தில், மரண வறுமையை மாற்ற வல்லவர் பற்றி சண்முகப்பிரியா, காலத்தின் சிறப்பு பற்றி மகிமா, நான் என்பது பற்றி ஸ்ரீமா, ஓங்காரத்தை உணர்ந்தவனின் உன்னதம் பற்றி சுமதி, அழியாத ஆன்மாவை அறிவதே மனஅமைதி என சருபா, வள்ளல் பிரானின் நாத மருந்து பற்றி செஜிதா, நான் என்பது குடியேறும் இடமாகிய சொந்த வீடு பற்றி ரிஷி, சீர்மேவும் மெய்ஞானம் பற்றி ஆர்த்தி, ஆராவமுதாகிய ஒப்பிலி வள்ளல் பற்றி கனகத்தாய், காட்சியெலாம் எனக்களித்த கருணை வேந்தே என்ற பாடல் சிறப்புடன் பிரக்ஞானா பிரம்மம், அகம் பிரம்மாஸ்மி, தத்துவமசி, அயம் ஆன்மா பிரம்மம் என்ற வேத மகா வாக்கியங்களின் அறிதற்கரிய விளக்கங்கள் பற்றி சித்ரா, மெய்யான ஜீவசுதந்திரம் பற்றி சோலையப்பன், உயிருள்ள போதே அழியாப் பதியில் குடியேறுகின்ற செயல் பற்றி கார்த்தி, நவகிரக கோள்கள் பற்றி கல்பனா, மகாளய அமாவாசை பற்றி குமார், நான் எனும் அமானிதத்தை அறியும் தன்னை அறியும் செயல் பற்றி சங்கர் ஆகியோரின் மேலான புரிதலுடனும் மிகச் சிறப்புடனும் இந்த இதழில் வெளியாகியுள்ள விஷயங்கள் நன்மக்கள் கவனித்து பயன் பெற வேண்டிய ஒன்றாகும். மற்றொரு சிறப்பாக கணேசன் என்பவரது நாற்பதாம் நாள் ஆன்ம சஞ்சார உரிமைக் காட்சியும் கொண்டாடப் பெற்றது.

சத்துவாச்சாரி அவை நிகழ்வில், சமத்துவ ஞானம் வரச் செய்பவரே மெய்குரு எனவும், பேசரும் பெரும் பொருளெனும் பெறக்கூடிய பொருளையும், நரன், மனு, தேவன் எனும் நிலைகள், எழுவகை தோற்றம், ஓணம் பண்டிகை சிறப்பு, இவற்றை அறிவதற்கான அறிவை அருளும் குருபிரானின் சிறப்பு பற்றி கௌதம் பேசிய விதமும் சிறப்பான ஒன்றாகும்.

**ஓங்காரத் தொனியான, பரவிரதாச்சாரி, ஆறிரு சமயத்திற்கும், என்னமோவென்று** என்ற பாடல்களுடன் நான்கு இசை வகுப்புகளும் சேர்த்து 15 அவை நிகழ்வுகளுடன், இழைக்க இழைக்க ஒளி விரிக்கும் கசிதம்



Copyright © AMNA Trust, Chennai

போல ஏற்றம் மிகு தமிழால் ஆக்கப் பெற்றுள்ள இந்த சஞ்சிகையை பார்த்து மக்கள் யாவரும் தன்னையறியும் மரணமிலாப் பெருவாழ்வின் சிறப்பையெலாம் பெற, எல்லாம் வல்ல பரிசுத்த ஆவி தெய்வம் பரம்பொருள் பிரம்மப்பிரகாச மெய்வழிச் சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி வணங்குகின்றேன். நமஸ்காரம்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

*இந்த உடலானது அழியும். ஆனால், னித்தியப் பொருளான உயிர் அழிவதில்லை. னித்திய உடல் ஒன்றை அந்த உயிர் எடுத்துக்கொள்ளுகிறது. இந்தப் பிரம்மவித்தையின் பெரிய ரகசியங்ஙளைத் தெரியத்தான், தெரிவிக்கத்தான் கோவில்கள் உண்டாயின. உண்மையான ஒரு தேவ புருஷனைச் சந்நிக்க வைக்கத்தான் எல்லா ஏற்பாடுகளும் உண்டாயின. தெய்வீக புருஷர்கள் தூலத்திலே வருகிறார்கள். அக்காலத்திலே அவர்களை அடைந்து, அதிரகசிய பிரம்ம வித்தையின் பெரிய செயலுக்குத் தலைப்படுங்ஙள் என்று வேதங்ஙளும், உபநிஷத்துகளும், தீர்க்கதரிசனங்ஙளும் அறைகூவி அழைக்கின்றன. அவ்வாறு வந்த பெரியோர்கள் கையகத்தில் தான் எல்லா ஆசீர்பாதங்ஙளும் அடங்ஙியிருக்கும். எமனுடைய கொடூர கோர முகத்திலிருந்து தப்புவிக்கின்ற சக்தியை அவர்கள் தங்ஙளைச் சார்ந்நவர்களுக்குத் தந்நு விடுகிறார்கள். அப்போது ஜீவ உலகம் என்ற மூச்சு ஓடாது, அப்படியே அமைந்நு விடுகிறது. இதை யாராலும் செய்ய முடியாது. அந்ந ஜீவசக்தி யார் கையிலும் இல்லை. இதுதான் ஜீவப் பிரயோசனம். இது வாயினால் சொல்லிட்டுப் போகிறதல்ல. இதோ இங்ஙே செய்துகாட்ட னிற்பது.*

***~ சாலை ஆண்டவர்கள்***



Copyright © AMNA Trust, Chennai

## 03-09-2022 ~ சனிக்கிழமை சபை
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

**குருபிரான் அருளமுதம்:**
தெய்வத் திருவுளத்தை அளப்பதற்காகவும், தாம் அரும்பாடுபட்டு பெற்ற மெய்யை னல்லெண்ண கூட்டாளர்களுக்கு வழங்கிட தேடிவரும் பொருளாக குருபிரான் அவதரித்து வருகிறார்கள்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண் : 104**
உடல், பொருள், ஆவியை குருபிரானிடத்தில் தத்தம் செய்பவருக்கே தூலம் கடந்து நிற்கும் நீதியெனும் மெய்ப்பொருள் தரிசனை கிட்டும். தன் சுருதி யுக்தி முயற்சியால் எவராலும் எக்காலத்தும் மெய்யை அடையவே முடியாது என்பது வேதத் தீர்ப்பு.

*ஜீவசகோதரி லாவண்யா :*
**அறிவு அறி பாடம்: அரசை இகழாது அகிலத்தில் வாழ்வாய் ...**
மனிதனின் புலன்களாகிய ஆட்சியர்களையும், அவைகளை வழிநடத்தும் அரசனாகிய மனதையும் தாழ்ச்சியாய் கூறாமல், சீரஞ்ஞீவியாகிய அமானிதத்தை அறிந்து அகிலத்தில் வாழ வேண்டும். இவ்வுடம்பெடுத்ததின் பலன் தன்னையறியவே என்பதை உணர்ந்து, செத்திடமும் பிறந்திடமும் இனி சாகாது இருக்குமிடமும் தன்னுள் அறிந்து அத்வைத நிலையை பெற்றவர்களே இயற்கை கடவுளுடன் ஒன்றி வாழ்வார்கள். அப்படியான வாழ்வினை னாமும் பெற குருவருளை வேண்டுவோம்.

ஆசானின் அறிவுரைப்படி ராகம், தாளம், சுருதியுடன் ஐம்மணிப்பொதிகையில் அருளப்பெற்றிருக்கும் **பரவிரதாச் சாரியென்று மேசமயாச்சாரி னானெனன் ...** எனும் தெய்வப் பாடலை *ஜீவசகோதரிகள் சஹானா - சாதனா* இருவரும் இனிமையாக பாடினார்கள்.

*ஜீவசகோதரர் விஜயகுமார் :*
**சத்தியவேதம் : யோவான் சுவிசேஷம் - ( திருவசனம் 11-15 )**

**திருவசனம் – 11 :** பெரியோர்கள் உற்ற பொருளாகிய ஜீவனை தன் கைப்பந்தாக பெற்று வரும் மெய்ச்செயலையே இத்திருவசனத்தில், தனக்கு சொந்தமானதிலே வந்தார் என்றும், பெருங்நருணை கொண்டு சொந்தமாகிய மக்களுக்கு மெய்யை அளித்தாலும், அவர்களில் பலர் ஏற்பதில்லை எனவும் அருளியுள்ளார்கள்.

**திருவசனம் - 12 :** அறிவானவர்களை உண்டாக்கும் சொல்லே னாமத்தின் அடையாளம். னவமான பாஷைகளை பேசும் னாதரை அடையாளம் கண்டு ஏற்றுகொண்டவர்களே தேவனுடைய பிள்ளைகளாக அதிகாரம் பெற்றவர்கள்.

**திருவசனம் – 13 :** பரிசுத்த ஆவியினால் சீதக் களப செந்தாமரை பூம்பாதம் கொண்டு னரன் என்ற பிறப்பிலிருந்து மனிதனாகவும் தேவனாகவும் மறுபிறப்பில் பிறக்க செய்பவரே தேவன்.

**திருவசனம் - 14 :** மனுஷ குருவானவர் மகாமந்திரத்தை உனது காதில் உபதேசிக்கிறார். தெய்வ குருவோ ஆத்மாவுக்குள் சைதன்யத்தை செலுத்துகிறார் என்ற இராமகிருஷ்ண பரமஹம்சரின் உபதேச மொழியின் படி, மா அம்சம் பொருந்திய குருவின் வார்த்தையே மகிமையிலும் மகிமையானது.

**திருவசனம் – 15 :** பிந்தினோர் முந்தினவராவர். முந்தினோர் பிந்தினவராவர் என்ற வேத வசனப்படியும், புத்த பகவான் தீர்க்க தரிசனத்தில் உனக்கு



Copyright © AMNA Trust, Chennai 

முன்பிறந்த தோன்றலவர்களை மரியாதை செய்யுங்கள் என்ற திருவாக்கின் படியும், பல ஜென்மங்களாக மெய்யை தேடி வருபவர்களை மேன்மையானவர்களாக ஏற்றுக்கொண்டு அன்பு செலுத்த வேண்டும்.

**குருபிரான் அருளமுத வர்ஷிப்பு - சிவானந்த போதம் :**

**சீடன்:** சாஸ்திரத்தின் பொருளைத் தெளிவாகத் தெரிந்து கொண்டால் போதாதோ? ஆசான் ஆக்கினைக்கு உட்பட்டு தொண்டு செய்ய வேண்டுமோ என சீடன் கேட்க -

**ஆசான் :**

**தொடர்ந்துமே சென்றார் பின்னே**
**தொன்பழ வினைகை விட்டே**
**அடர்ந்துதன் ஆசான் ஒன்றே**
**அருட்கதி யெனவே மாண்டார்**

ஆசான் தன்னை போலவே ஞான சூரியனாக சீடனையும் ஆக்குவதற்கே தன்னோடு அழைத்து செல்கிறார்கள். மனஉறுதி, வைராக்கியத்துடன் குருவின் உபதேச மொழிகளை கேட்டு அறிவுத் தெளிவு பெறுபவர்களுக்கு ஞானம் எளிதாக கிட்டும்.

**சீடன் :** சிவானந்த போதத்தை அடைய வெகு பிரயாசையாய் இருக்கிறதே. குருசமூகத்தில் தொண்டு செய்துதான் முக்தி அடைய வேண்டுமோ ? என கேட்க -

**ஆசான் :** விடியளவும் உபதேசம் னடைபெற வேண்டும். குருபாரம்பரியமாக வருபவர்களே, நம் அழி உடலுக்குள் இருக்கும் அழியா பொன்னுடலைக் காட்டி, இறை திருச்சன்னதிக்குள் கூட்டிச்சென்று சிவானந்தமாகிய னித்தியானந்தத்தை அனுபவிக்கச் செய்கிறார்கள்.

**சீடன் :** ஞான ஆசரியரிடத்தில் அனுக்கிரகம் மட்டும் பெற்றுக்கொண்டால் போதாதோ? சாத்திரமும் பார்க்க வேண்டுமோ என கேட்க -

**ஆசான் :**

**சொல்லுமிவன் சொற்படி கிரகம் கேட்கும்**
**சுருதி விதி கடந்த கிரகஸ்தன் னாமே**

புலனுக்கும் பொறிக்கும் தலைவனாக செயல்படும் புத்தி, மனதிற்கு அடிமையாகும்போது கிரகத்தின் பிடியில் சிக்கிக் கொள்கிறது. சாத்திரத்தையும் ஜோதி இருக்கும் இடத்தையும் அறிந்தவராகிய னாத ஜோதிடரே, கிரகத்தின் வல்லமை அணுகூட அணுகாமல் சங்கரித்து, நம்மை காத்து மெய்ஞ்ஞான வீட்டில் குடியேற்றி வைக்கும் அனுக்கிரகன், கிரகஸ்தன், குரு.

*குருவை அனன்னியமாய்ச் சிந்திப்பவர்க்குப் பரமானந்நம் எளிதிற் பெறத்தக்கதாம். ஆதலால் எல்லா முயற்சியாலும் குருவின் ஆராதனை செய்க.*

***~ குரு கீதை***


Copyright © AMNA Trust, Chennai

**04-09-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்**

**குன்றாத பேரருளின் மணியே** என்ற தோத்திரப்பாடலுடன் அவை மலர்ந்ததை தொடர்ந்து,

*ஜீவசகோதரி ஜான்சிராணி :*

**எண்ணுகின்றனல் லெண்ணம னைத்தையும் ...**
**வண்ண ஞானசித் தர்காலம் வந்நதே** **(காலந் நாட்டிய காரணப் பா)**

**எண்ணம் :** மனிதனின் சுத்தத்துறை இருதயத்தில் அன்றி வேறு எங்கும் வெளியாகாத இறைவனை இறைஞ்சுவோம் என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். மிடிமை நீக்கி சத்திய ஒட்டுதலில் சதா நம் எண்ணம்-சொல்-செயல் மூன்றினாலும் நன்மை செய்தால் ஞானத்தை அறியலாம். நமது எண்ணம் பல கோடியாய் விரிந்திடாமல் குருபிரானின் எண்ணத்திற்கு ஒரே னேராக இணங்கி இருப்பது ஒன்றே பிறவா நிலை பெறுவதற்கான வழி.

*ஜீவசகோதரர் செந்தில் :*

**திருமெய்ஞ் ஞானக் கொரல் வாக்கியம் எண் – 43**

மெய்யான அறிவு, பாத ரகசியம் இவற்றையும், தெரியாததை தெரிந்து கொள்ளவும் ஆதி மார்க்க னீதி அவையின் அங்கமானால் தெரிந்து கொள்ளலாம். நமது பிறப்புக்குக் காரணமான வினை, மனதின் மூலமாகவும் அதனால் மூச்சும் இயங்குகிறது. கண்ணும் காதும் நேர் பெற்ற மக்களே இந்த சாகாக்கல்வியை பழக முடியும்.

*ஜீவசகோதரி சண்முகப்பிரியா:*

நமது கோபம் எனும் கொடிய விஷப்பாம்பே, நம் புண்ணிய செயல்களை அழிக்க வல்லது. அறியாமையில் இருப்பவர்களை அறிவில் ஏற்றுபவர்களே சித்தர்கள். ஆசானின் னாத மருந்தை செவியின் மூலம் உட்கொண்டால் மாரணம் எனும் ஆறாத வடுவாகிய மரண வறுமையை வெல்லலாம். நவக்கிரக கோளரிவாளராகிய குருபிரான் அவர்களே தலைவிதியான மரண வறுமையை மாற்ற வல்லவர்கள்.

**மாத வன்றவ மருந்நொன் றிருக்கு**
**வாங்கு வாருமே**
**மரண வறுமை தீருமே** **(வாத கற்பம்)** என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரி மஹிமா:*

***காலத்தின் சிறப்பு:*** வருடம், மாதம், நாள், மணி, நிமிடம், நொடி, நாழிகை, ராசி, நட்சத்திரம், பாதம், பகல், இரவு இவையனைத்தும் உள்ளடக்கியதே காலம்.
***ஆதியாகமம்:*** வானம் என்கிற ஆகாயவிரிவில் உண்டான சுடர்கள் காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் காட்டும் அடையாளங்களாக இருக்கக்கடவது என்றார்.
காலமறிந்த குருபிரான் தன் செவ்வாயின் னாதம் கொண்டு நம் அறியாமையை அகற்றி அறிவைப் புகட்டி னரனை மனுவாக்கி பின் தேவராக்கும் செயலையே அறுவடை, சங்நாரம் என அருளுகிறார்கள்.

*ஜீவசகோதரி ஸ்ரீமா:*

நான் எனும் அமானிதத்தை அறிவதுவே அறிவாகும். சப்தரூபமாகிய **நான்** எனும் அகங்காரத்தால் வினையும், அதனால் பிறப்பும் நிகழ்கிறது. எண்ணங்களால் உண்டாகும் மாயை எனும் மனமே பாவத்திற்கான காரணம். கூரான குருவருளால் மாறாக ஓடுகின்ற மனதை வைராக்கிய மணிக்கம்பத்தில் இறுக்கி கட்டும் போது மனம் பிரம்மமாகிறது.



Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் அருளமுதம்:** வாழ்னாள் என்பது அழியாப் பொருளான மெய்ப்பொருளை அறிவதற்கே. இதனை கவலை, பிணி, பயம் கொண்ட துக்க உடல் நாம் அல்ல எனும் அறிவைப் பெற்ற பிறகே அறிய இயலும். நான் எனும் அமானிதப் பொருளை அறியும் தன்னையறிந்த மக்களாக எல்லோரும் விளங்க வேண்டும் என ஆசீர்பதித்து தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

**04-09-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி**

**சிரந்நனியே உடல்வேறு பிரித்துப் பார்த்து**
**சிவஞான சிவபுரத்தோர் செழிப்புங் ஙண்டேன்...** எனும் தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

*ஜீவசகோதரர் கௌதம்:*

எழுவகை தோற்றத்தில் இல்லாத நரனாகப் பிறந்த நாம், ஆறாவது அறிவை அறிந்து, ஏழாம் பிறப்புடலம் எடுத்து, வினைப்பயன் தீர்ந்து, மனுவாக மாறுவதற்கான மாபெரும் செயல் செய்பவர்களே மெய்குருபிரான். ஒரு மெய்குருபிரானின் வாய்மையாகிய னாதமருந்தை, செவிவாயிலாக நாம் அருந்தும் போது அலைபாயும் தெளிவற்ற நம் மனமானது பூரித்து சுத்த சைதன்யாமாக மாறுகிறது. இதனையே சத்திய வேதத்தில் ***வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்*** என கூறப்பெற்றுள்ளது.

னீதித் தலையரசராக விளங்கும் குருபிரானின் பொற்பாதங்களை சரணாகதி அடைந்தோர் யாவரும் வினையிலிருந்து விடுபட்டு ஒர்குலமாக வாழும் திருச்செயல் நிகழும் இடமாக ஆதி மார்க்க னீதி அவை விளங்குகிறது. பஞ்ஞபூதங்களையும் உண்டாக்கிய அவ்வசையாப் பொருளே உலகில் உள்ள சர்வ அசைவிற்கும் காரணமாகவும், அதுவே ஒரு உருதாங்கி குருபெருமான் வடிவுடன் அவர்களின் வாய்மையாக எக்கோடி காலத்திற்கும் அழியாத, பிறந்ததினி இறவாத பேசும் பஞ்ஞாட்சரமாக, னாத மாமணியாக ஒலித்துக் கொண்டே இருக்கிறது. மக்களின் மனோ வாக்கு காயங்களுக்கு எட்டப்படாத வல்லப மெய்யை பச்சை மாமலை மேனி, பவளச் செவ்வாய் போல் விளங்கும் அச்சுதராகிய ஆசானே, காய மன வாக்கினை கடக்கும் அதி வல்லப பிரம்மவித்தைச் செயலை நம் தலையில் பதிப்பித்து னித்தியமாகிய மெய்யை மெய்யாக்குகிறார்கள்.

ஆசானின் னாதமருந்தே மருத்துவத்தால் தீர்க்க முடியாத பிறவி நோயாகிய வென்னோய் எனும் மரண வறுமையை தீர்க்கவல்ல ஒரே மருந்து. னாமம் எனும் னாதத்திற்குரிய மந்திரப் பொருளைக் கைக்கொண்டு இப்பூமியில் ஓவாது வந்து பிறந்து கொண்டே இருக்கும் பெரியோர்களைத் தேடி அடைவதற்கென தரப்பெற்றதே மனுவுக்கான அறிவு. படைத்தான் படைப்பனைத்தும் மனுவுக்கே என்பதை நாம் உணரவே கர்த்தராகிய குருபெருமான் யுகந்தோறும் யுகந்தோறும் வருகிறார்கள் என்ற பகிர்வுகளைத் தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

**08-09-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமா தியாகராஜன்**

**வஞ்ஞ மில்பர மார்த்தத வத்தினர்**
**அஞ்ஞ லென்னும றைக்கிழ வள்ளலென்** என்ற தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.



Copyright © AMNA Trust, Chennai 

**குருபிரான் அருளமுதம்:** - புலன், பொறிகளுக்குள் வஞ்ஞுமும், அவற்றின் தலைவனாக மனமும் உள்ளது. வஞ்ஞுகமற்ற அறிவு ரூபகமாக உள்ள ஆசான் அவர்களே நம் வஞ்ஞுக மனத்தை அறிவாக மாற்றுகிறார்கள்.

**வான்மதிக்கொரல் திருவாக்கியம் எண்: 82-** உயிர் எழுத்துக்கள் பனிரெண்டும், அதனுள் மனிதன், ஈசன், பிராணன், பிரணவசொரூபி, முருகப்பெருமான் பற்றிய ரகசியத்தையும் தத்துவங்களையும் தன்னிடத்தில் கொண்டதுவே **சாலைத்தமிழ்**.

**செவி**:

**தோடுடைய செவியன் விடை**
**யேறியோர் தூவெண்மதி சூடிக்**
**காடுடையசுட லைப்பொடிபூசிஎன்**
**உள்ளங்கவர் கள்வன்** **(திருவாசகம்)**

*குருவும் சிவனும் ஒன்றே. இறைவன் நம்மிடத்தில் வைத்துள்ள பிரம்மப்பிரகாசப் பொட்டாகிய தோடு என்பதனை அறியக்கூடியதே செவி.* பரமனே வுருவெடுத்துப் பாரிடைக் குருவாக வந்து உயிர் எனும் மேலான பொருளை நம்மிடத்தில் காட்டி அருள்கிறார்கள்.

**பிரளயம்:**

**ஆமனு என்றதோ ரடிமுடி**
**னடுவணை அச்சர மாமுதற்கு**
**அக்கக் காகவே சிக்கலில் லாமலே...**

ஃ எனும் பிரம்மத்தை ஃ ஆகவே சிக்கல் இன்றி அறியும்போது நின்றதொரு பிரளயமாகிறது. மனக்கண்ணாடிக்குள் இருக்கும் முச்சுடருள் சுழியாகிய முனையைக் கண்ட பின்பே நம்மை நாம் அறிய முடியும். இசை என்பதின் ரகசியம் சுவாச நடையை சீராக எங்கு தொடங்கி, எங்கு விட வேண்டும் எனும் பிராண ரகசியமாக உள்ளது. இத்தகைய ரகசியச் செயல் பொதிந்துள்ளதே ஆதி மெய் உதய பூரண வேதாந்தப் பாடல்கள்.



*திரு. சாலை ரவி அப்பா அவர்கள்*
*நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை*

**ஓணம்**: திருவோண நட்சத்திரத்தில் மகாபலி சக்கரவர்த்திக்கு திருவடி தீட்சை நடந்த சிறப்பே ஓணம் பண்டிகை தினம். இச்செயலையே ஆண்டவர்கள், **அரக்கி அரக்கர் விலக்கித் துலக்கி ஆக்கும் அனந்நர்கள், குறைக்க முடியாச் சேம னிதியின் குடிவீ டேறவே** என அருளியுள்ளார்கள். **சி** எனும் னெருப்பாகிய சிவமே ஜலத்தினில் அக்கினி உருவாய் விளங்கும் ஜீவனின் ரகசியமாக உள்ளது.

*ஜீவசகோதரி லாவண்யா* : **னினைப்பும் மறப்பும் னிலைப்பிடம் காணல் வானவர் ஆக மறுபிறப் பெடுப்பாய்** **(அறிவு அறி பாடம்)** அண்ட பகிரண்டமெலாம் விளங்கும் நம் மனக்கண்ணாடியில் படிகின்ற மெய் ஆசானின் னாதமே, **நான்** எனும் பொருளை அறிகின்ற தேவரகசியச் செயலாகிய தன்னை அறியும் தேவப்பிறப்பில் நம்மை ஆக்குகிறது.

*ஜீவசகோதரி பூர்ணிமா* : **அதிசய பத்து-பாடல் எண்-09**:- **உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர்எழுதரு நாற்றம்போல்...** அனித்திய அழி உடலிலுள்ள



Copyright © AMNA Trust, Chennai 

அழியாத சீர்மணம் மிக்க உறுபொருளையே, *பற்றிய பற்றாய் பறந்துலகெங்கும் பற்றியும் பற்றிலாத* ஒன்றாக ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். *பூவினிற் கெந்தம் பொருந்திய வாறுபோற் சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது* என திருமூலர் பிரானும் அருளியுள்ளார். நிலையற்ற பொருள் மேல் நாம் கொண்ட பற்றினை மாற்றி, நிலையான அறிவைப் பற்றிட வைக்கும் குருவின் அடிநிழலில் நாம் கூடிக்கொள்வதுவே அதிசயம்.

**குருபிரான் அருளமுதம்: சிவானந்த போதம்:**

**சீடன்** : சற்குருவினிடம் உபதேசம் மட்டும் பெற்ற பின், பெரியோர்கள் தங்களின் அனுபவங்களை கூறி வைத்துள்ள நூலின் பொருளை அறிவு ஏற்குமோ? என கேட்க -
**ஆசான்** : மெய்க்கல்வி என்பது கல்லாரும் கற்றவரும் பழகித் தேர்வது. ஆசான் நம் இருதயத்தில் நாட்டும் உபதேச கல்வியை நாம் பழகிவர, அதுவே நம்மை பூரணமாக்கும்.
**சீடன்** : ஞான அனுபோகம் பெற்ற ஒருவர் கூறும் ஞானத்தை, தன்னை அறியாதவர்கள், மனம் சம்மதிக்க ஏற்பரோ?
**ஆசான்**: உண்ணும் உணவின் சுவை உணர்வது போன்றே, செவி உணவின் சுவையை, அனுபவத்தால் அறிக என வள்ளல் பிரானும், **தூங்கிக் கண்டார் சிவலோகமும் தம் உள்ளே** என திருமூலரும் அருளியுள்ளனர்.
**சீடன்**: மெய்ப்பொருளின் பிரகாசம் அவரவர்கள் கண்டு களிப்பதுதானே?
**ஆசான்** : னரன் எனும் நிலையில் உள்ளவர்களால் ஞானத்தை அறியமுடியாது. மெய்யாக வரும் ஆசானிடம் தஞ்ஞமடைந்து அவர்களின் இரக்கத்தால், மறுபிறப்பு பெற்றால் தெளிவான அறிவுடன் வாழலாம்.
**சீடன்**: அவரவரும் தனித்தனியே சுகமடைவதாயிருக்க, பெரியோர்கள் ஒருவரையொருவர் சார்ந்து ஆனந்நம் கொள்வது எங்ஙனம்?
**ஆசான்** : தூரதிருஷ்டி எனும் மூன்றாவது கண்ணின் ரகசியம் அறிந்த பெரியோர்கள், தங்களுக்குள் அளவளாவும் பேரின்பத்தை சாதாரண உலக மக்களால் அறியமுடியாது.
**சீடன்**: நாம் சாத்திரங்ஙள் சரியை முதலாகிய முத்தொழிலும் முடித்து ஞானம் பெற்ற பின்னர்தானே ஞானாசரியர் கிருபாகடாஷம் தேவை?
**ஆசான்** : வீணர்களை விட்டு விலகி, சாயுச்சிய ஆசானிடம் நாம் சரணடையும் போது ஜீவனைக் காணும் பேரின்பமாகிய ஜென்மசாபல்யத்தை அருள்கிறார்கள் என்ற பகிர்வுகளைத் தொடர்ந்து, குருபிரானின் அருளமுதத்துடனும் தோத்திரப் பாடலுடனும் அவை நிகழ்வுகள் நிறைவுற்றன.

**10-09-2022 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்**

**னேருரைதம் பிஸ்மில்லா ஹிர் ரஹுமா னோடும் ...** என்ற பூரணப் புதையல் காப்பு பாடலுடன் பரிசுத்த ஆவி தெய்வத்தின் பதம் பணிந்து அவை நிகழ்ச்சிகள் மலர்ந்தன.
ஆதி மார்க்க னீதி அவை அங்கத்தினரான கணேசனின் மங்களகரமான 40 ஆம் நாள் ஆன்ம சஞ்ஞார உரிமைக் காட்சி சிவகாசியில் குருபெருமான் முன்னிலையில் சிறப்பாக நடந்தேறியது.

**குருபிரான் அருளமுதம்:**
**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - திருவாக்கியம் - 105:** ஜீவனைக் கண்டு சொல்பவனின் சொல் னித்தியமாகவும், அதை காணாதவனின் சொல் அனித்தியமாகவும் இருக்கும். கலிமாவெனும் பெரு முத்தானது **காணு விந்நுவினிற் கூடவே வந்து கருக்கூட கத்துக்குள்ளே** விளங்குவதைக் கண்ட மெய் குருவின் அருளால் அஞ்ஞானம் அகன்று, தன்னை அறிதல் எனும் ஆறாவது அறிவை அறிந்து பிறப்பு இறப்பற்ற நித்திய ஜீவன் கண்ட


Copyright © AMNA Trust, Chennai 

ஜென்ம சாபல்யகுலமாவதற்கே ஆதி மெய் உதய பூரண வேதாந்தம் அருளப்பெற்றுள்ளது.

*ஜீவசகோதரி லாவண்யா :*

**அறிவு அறி பாடம்:** **தூல வாழ்க்கையைத் துச்சமாய் எண்ணி ....** எனும் பாடல்.

தூல வாழ்வை துச்சமாகவும், ஜீவ வாழ்வை உச்சமாகவும், எண்ணுவதற்கான அறிவுப் பிரகாசத்தை உள்ளத்தில் ஏற்றி வைப்பவரே இறைகுரு. அவரது அருளால் நம் மூன்றாவது கண்ணாகிய அறிவுக்கண் திறக்கப் பெற்று இரண்டெனும் வாசியையும், தலையாகிய சாகாத் தலையையும் அறிந்து, அறிவு தேகத்தில் குடியேறி, கொம்பு எனும் னாதம் முழங்கும் செயலையே **கொம்பு முளைத்திருக்கும் குடியேறினோர்க்கு** என அருளுகிறார்கள்.

**குருபிரான் அருளமுதம்:**

தூல உடலெனும் மனதின் போக்கை துச்சமாக எண்ணி அறிவின்வழி சென்றால் ஜீவவாழ்க்கை திடமாகும். தலை இரண்டு கண் மூன்று எனும் உபதேச ரகசியம் பெற்றவன் மறுபிறப்பு பெற்றவன். சொன்ன தலையாகிய வாயும், கேட்ட தலையாகிய காதும், இரண்டு தலையாகவும் மூன்றாவது கண்ணாகிய அகக்கண் **அக்கக்காகவே சிக்கலில்லாமல்** மனமாக மாறாமல் அறிவாகவே இருப்பதுமாகும். மனம் நபுசாக மாறி பாதாளத்தில் கீழே இறங்காமல் சிபத்தெனும் அமானிதமாகிய அறிவாக மேலேறும் செயலே சவம் சிவமாகும் கொம்பு முளைத்திருக்கும் செயலாக பாதனிலை ரகசியமாக உள்ளது.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:*

**சத்தியவேதம் : யோவான் சுவிசேஷம் - ( திருவசனம் 16-20 )**

பரிபூரணம் என்பது எழுதாத எழுத்தென்னும் ஏகனாயக தத்துவாதீதப் பரிபூரணப் புராதனப் பொறுப்பாக, ஆசானின் கிருபை என்னும் உஜூதின் மூலம் பெறக்கூடிய செயலாக உள்ளது.

**நியாயப்பிரமாணம் : நான்** என்பதே வழியாக, சத்தியமாக, ஜீவனாக, அவரவரிடத்தில் கர்த்தராக இருப்பதை அறிக்கை செய்த யோவானின் தீர்க்கதரிசனத்தை, மெய்குருபிரானின் அருளால் தன்னிடத்தில் அறிந்து கொள்வதே நியாயப்பிரமாணம் நிறைவேறும் செயலாகும். **கு** எனும் இருளிலிருந்து மாறிக்கொண்ட குமாரனே தேவனை வெளிப்படுத்த முடியும்.

**குருபிரான் அருளமுதம்:**

அவனியெங்கும் அமிர்தவர்ஷிப்பை அருளும் அண்ணலின் அருள்னாவே தேயா னிலமாக உள்ளது. *வானத்துக்கு மேலே கையை உயர்த்தி இனி காலம் செல்லாது என்றார்* என்பது உள்ளமாகிய கையை மேல் நோக்கமாக அறிவாக உயர்த்தினால் காலம் செல்லாது என்பதாம்.

**தேடரிய வேதியரென் னையன் றன்னைத்**
**தினமகலா திருந்நுமடி பிடியாய் னின்றேன்**

**ம்** என்ற ஊமை மூலமே தாய் மடியாக திருவடியாக உள்ள ரகசியத்தை அறிந்தவர்கள் தேவத்தன்மை பெற்றவர்கள். **ஃ** எனும் பிரம்மத்து அருளொளிப் பெருக்கால் **கு** எனும் இருளிலிருந்து மாறிய குமாரர்களே தேவனின் பிள்ளைகள்.

**சிவானந்த போதம்:**

**சன்யாசி யானதிலும் மூடருண்டு சமுசாரம் செய்வதிலும் ஞானியுண்டு**

தன் மேல் எச்சமிட்ட கொக்கை தவ ஆணவத்தால் எரித்த கொங்கணவருக்கு தாமதமாக யாசகமிட்ட வள்ளுவரின் இல்லத்தரசி வாசுகி அம்மையார், அவரின் கோபம் கண்டு *கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா* என்றதும், குடிசையுள்ளிருந்த வள்ளுவர், தன் ஞான திருஷ்டியால் உப்பின் ரகசியம்



Copyright © AMNA Trust, Chennai

அறியவந்த கொங்கணவரின் நோக்கமறிந்து ***துப்பு கெட்ட நாய்க்கு கொஞ்சும் உப்பு அள்ளிப் போடு*** என்றதையும் கேட்டு தன் ஆணவமழிந்து இவர்கள் சம்சாரி ஆனாலும் ஞானி என வணங்கிச் சென்ற கதையை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

இல்லறத்தில் இருந்து கொண்டு ஞானாசரியரின் அனுக்கிரகத்தால், ஓயாத் தொழுகையறிந்து கிரகம் அஸ்தமித்த கிரகஸ்தனாகி கங்குல் பகலற்ற சொந்த வீட்டில் குடியேறி வாழும் நிலையே தேவனிலையாகும். சற்குருவிடம் தீட்சை பெற்றும் முழுமையடையாமல் சற்குருவை குறை சொல்லி தானே இனி ஞானம் பேசலாம் என பிரம்ம ராட்சஸனாகப் போன சீடர்களும் உண்டு. புலித்தோல் போர்த்திய பசு புலியாகாது. குண்டலி கீழிருந்து மேலேறுதல் என்பது மெய்ஞானத்தில் நபுசிலிருந்து சிபத்தாக மேலேறும் அகமிய ரகசியமாக உள்ளது. ஆணுக்கும் பெண்ணுக்கும், அறிவு, குணம், நேசம், நிறம் யாவும் ஒன்றே. விவேகமுக்தி அடைந்தவர்கள் பெண்களிலும் உண்டு. சஞ்சலத்தை விட்டு சற்குருவின் தாள் பணிந்து சரணடைவதே முக்திக்கான வழி. ஆண்டவர்களின் மூத்த திருக்குமாரரான ஸ்ரீலஸ்ரீ சாலை யுகவான் அவர்கள் அருளிய **சிவனே நீயாகும்** என்ற நூலில், காய மன வாக்கினால், அவரவர் செய்த வினையை அவரவர்தான் கடக்க வேண்டும் என்பதை சிவானந்த போதத்தை சாட்சி வைத்து அருளியுள்ளார்கள் என அருளி குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

### 11-09-2022 - ஞாயிற்றுக்கிழமை - சத்துவாச்சாரி சபை
### தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

பேரின்ப கடலின் நன்முத்துக்களைத் தொடுத்து நம் தலை செழிக்க வழங்கும் குரு கொண்டலின் ஆசீர்பாதத்துடன் அவை உதயமாயிற்று.

*ஜீவசகோதரர் கௌதம்* :
மனிதர்களின் பேதம் நீக்கி சமத்துவ ஞானம் தானே வரச் செய்பவரே சமத்தராகிய மெய்குரு. காமீல்களின் னோக்கம் தன்னை னாடி வந்த னரனை மனுவாக்கிப் பின் தேவராக்குவதே. மெய்யான மெய்னிலையில் அவர்கள் நம்மை ஏற்றி வைக்கும் எல்லை திசையற்ற அவ்வெல்லையே பரவெளியாகவும், கங்குல் பகலற்ற இடமாகவும் இருப்பதை, ஆண்டவர்கள், மெய்வழி னூல் பாடலில்

**இடமதுவும் னிச மென்றாற் பொறிக ளோடா**
**திருந்து விடு கோடியொளி காந்நி வீசும்** என அருளியுள்ளார்கள்.

**வாடாத தீபமதை யறிந்தே யேற்றித்தேளடா தேட்கொடுக்காங் குல தெய்வந்நான்** என **சுப்ரமணியர் ஞானம் 500 ல்** அருளப்பெற்றுள்ளது.

அறியாமை என்னும் இருளில் னபுசாக உள்ள மனதை, அறிவெனும் சிபத்தாகிய வாடாத தீபத்தில் ஏற்றிடும் மெய் ஆசானை சேராதவர்களே,"

**குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்**
**குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்**
**குருடும் குருடும் குருட்டு ஆட்டம் ஆடிக்**
**குருடும் குருடும் குழிவீழு மாறே** என்கிறது திருமந்திரம்.

**சொந்த தேகம்**: *நமது ஊனக் கண்களால் அறிய முடியாத அனாதிப் பொருளான நம் சொந்த தேகமே மூலமந்நிரம், பஞ்ஞாட்சரம், அஷ்டாட்சரம், பிரணவம், கலிமா, என்பதாகும். அதைப் புனற்றுறைக் கோயிலாக இதயாசனத்தில் போய்ச் சந்நிப்பதையே வேதம் பிரம்ம வித்தை என்கிறது.*

அழிவிற்கே இழுத்துச் செல்லும் மனதை அறிவாக மாற்றுவதே ஆசானின் அருளமுதம். மனிதனின் தனிச்சீதனமாகிய அமானிதமெனும் அறிவானது, ஒரு



Copyright © AMNA Trust, Chennai

குரு கொண்டலின் உளவின் படி, எண்ணம் சொல் செயல் மூன்றினாலும் நன்மையே செய்து வர அழியாத நித்திய செல்வமாகிறது. வள்ளுவர்பிரான் அருளியுள்ள செவிச் செல்வமாகிய ஆசானின் அருளமுதமே நம் தலையைக் காக்கும் தலையான செல்வமாக, னம்மை ஐயறிவு னுகர்ச்சியிலிருந்து மாற்றி ஆறாவது அறிவை அறிய வைத்து எமன் எல்லையில் வெற்றிக்காணச் செய்யும் ஆயுதமாக உள்ளது. தொலையாத செல்வமும், துன்பமில்லா வாழ்வும் பெறுவதற்கான வழி ஆசானின் அருள் ஒன்றே

**தொலையாத நிதியமும் கோணாத கோலும்**
**ஒருதுன்பமில்லாத வாழ்வும் துய்ய நின்**
**பாதத்தில் அன்பும் உதவி பெரியதொண்ட**
**ரொடு கூட்டு கண்டாய்** **(அபிராமி அந்தாதி)**

**குருகீதை** - எவருடைய அனுக்கிரகத்தைப் பெற்று, அதனால் மகத்தாகிய அஞ்ஞானம் நீக்கப்படுகின்றதோ அந்த ஸ்ரீதேசிகேந்நிரருக்கு அபீஷ்ட சித்தியின் பொருட்டு னமஸ்காரம். எவருடைய அனுக்கிரக மாத்திரத்தினால் சோகமும், மோகமும் னாசமாகின்றனவோ, அந்த ஸ்ரீதேசிகேந்நிரராகிய பரமாத்மாவிற்கு னமஸ்காரம், என்ற பகிர்வுகளை தொடர்ந்து தோத்திர பாடலுடன் அவை நிறைவுற்றது.

## 11-09-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

**குருபிரான் அருளமுதம்:**

அஞ்ஞனம் என்பது மை, மீம், முகம்மது, புள்ளி, மெய், அமானிதம் என வேதத்தில் அருளப்பெற்றுள்ளது. விஞ்ஞானத்தில் ஒளியும் மெய்ஞானத்தில் ஒலியுமே(னாதம்) மிக வேகமானது. **ஓசையொ லியெல்லாம் ஆனவரே ஒத்தையா யென்னாளு முள்ளவரே …** என்ற பாடலின்படி ஓசையும், ஒலியும் ஒரே பொருள். தேகத்தில் **நான்** என்பது வெளிச்சப் பொருளாகவும் ஓசை என்பது இறைவனின் சாயலாகவும் உள்ளது.

*ஜீவசகோதரி சுமதி:*

**ஓங்ஙா ரத்தொனி யானக பாலத்தேசிறு வழியறியார்**
**ஆங்ஙா ரங்நொண் டேமணி யாட்டியலுத்தோ டிச்சலித்து...**

என்ற ஞானமுறையீடு பாடலைத் தொடர்ந்து, ஓங்ஙாரம் (ஓம்) - அகர, உகர, மகார, விந்து, னாதம் எனும் ஐந்தும் உள்ளடங்கியதே **ஓம்** எனும் ஓங்காரம். சர்வமும் அடங்கும் **ம்** என்பதே ஊமை மூலம். **உ** எனும் சிவமயப் பொருளே பஞ்ஞாட்சரம். ஐம்புலன்களில் ஒன்றான மெய்யை உணர்த்தும் ஆசானின் னன் னாதத்தையே, **உய்ய என் உள்ளத்துள் ஓங்காரம் ஆய் நின்றமெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே!** என மணிவாசகப்பிரான் அருளியுள்ளார். மனம் போன போக்கில் சென்று மெய்யறிவை அறியாமல் அறியாமையே அறிவு என எண்ணி வாழ்வதே ஆங்ஙாரம். மனிதனின் சாங்ஙாலம் எனும் இறுதிக்காலம் (சாவுங்ஙாலம்) அவன் வாழ்நாளாகிய வயதெனும் காலத்தினுள்ளும், காலம் கிரகத்தினுள்ளும் இருப்பதை அறியாதவனே காலக் கிரகத்தினுள் சிக்கி அழிகிறான்.

*ஜீவசகோதரி சருபா:*

அழிதேகத்திலுள்ள அழியாத ஆன்மாவை அறிவதே மன அமைதி. அசைவற்ற சுத்த நினைவாகிய, அகம் எனும் ஆன்மாவின் தேவரகசியச் செயலை தீர்த்தமாகிய தேசிகரின் வாசகத்தால் அறிவதையே, **கொண்டல் வாய்மையைக் கேட்கக்**



Copyright © AMNA Trust, Chennai 

**கேட்கவென் கோதெ லாங்குடி யேகுனாள்** என சாலை ஆண்டவர்களும், **அகத்தூய்மை வாய்மையால் காணப்படும்** என வள்ளுவரும் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரி செஜிதா:*

**நல்ல மருந்திம் மருந்து - சுகம்**
**நல்கும் வைத்திய நாத மருந்து.**

**அருள்வடி வான மருந்து - நம்முள்**
**அற்புத மாக அமர்ந்த மருந்து**
**இருளற வோங்கும் மருந்து - அன்பர்க்கு**
**இன்புரு வாக இருந்த மருந்து. (- நல்ல )**

**சஞ்சலந் தீர்க்கும் மருந்து - எங்குந்**
**தானேதா னாகித் தழைக்கும் மருந்து**
**அஞ்சலென் றாளும் மருந்து - சச்சி**
**தானந்த மாக அமர்ந்த மருந்து. (- நல்ல )** **(வள்ளல் பெருமான்)**

பிறவிப்பிணி தீர்க்கும் மெய் ஆசானின் னன் னாதமாகிய **இம்**மருந்தே புண்ணியர்களின் நெற்றிக்கண் திறந்து, அஞ்ஞான இருள் நீக்கி, இன்பம் நல்கி, காலனை காலால் உதைக்கும் கருத்தறிவித்து சத்து, சித்து, ஆனந்நமான ஆதியாக அனாதியாக உள்ளது.

*ஜீவசகோதரர் ரிஷி:*

**நான்** என்பது வந்து குடியேறும் இடமாகிய, தன் சொந்த வீடடையும் வழியை அறிவித்து வாழ்நாள் வீணாகாமல் காப்பதே ஆசான் அருளும் பிரம்மவித்தை செயல். **ஓர் அறிவாய் விளங்கும் தெய்வம் தான் தானாகி** என ஆண்டவர்கள் அருளியபடி ஓரறிவிலிருந்தே உயிரினங்கள் யாவும் தன் வாழ்வைத் தொடங்குகின்றன. வேத னா கொண்டு வேதியர் அருளும் அறம், பொருள், இன்பம் எனும் வீடுபேறு அடையவே மனிதனுக்கு உன்னத அறிவு தரப்பெற்றுள்ளது. எல்லோரும் ஓர் குலம் எனும் எண்ணம் வந்த ஒருவன் அடையும் கயிலாய பிராப்திக்கான செயலைச் செய்யவே சாலையும் னாமும் வந்நோம் என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**தெளிந்நிடும் அச்ச மெல்லாம் தேசிகர் வைப்பே யொன்றில்**
**அழிந்நிடாச் சூக்கு மத்துள் ளடங்கினீ பார்க்கப் பார்க்க**
**விளங்கிடும் தேக னான்கும் வேதனா வமுதம் சிந்நும்**
**களங்கமில் ரவியோ கோடி கைவசம் கயிலை வீடே (மெய்ன்னிலைப்போதம்)**

**குருபிரான் அருளமுதம்:**

மெய் எனும் இருளாகிய சொந்த வீட்டில் இருப்பவர்களே பொய் எனும் வெளிச்சத்தைக் காண இயலும். **தனக்குவமை இல்லாதான் தாள்** என்பதே திருவடி எனும் இல்லறமாக உள்ளது.

*ஜீவசகோதரர் சங்கர்:*

நம் அறிவின் லட்சணமாக உள்ள **நான்** எனும் பொருளை அறிய வைக்கும் ஆசானின் னாதமே தேகம் எனும் தொனியாக, பொருளாக, மலையாக உள்ளது. **எந்நெந்நக் காலத்தும் எவ்விடத்தும் வந்நென்முன் னிற்குமலையொலியே** என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். வினையால் உண்டாகிய அறியாமையின் மொத்த உருவமாகிய இவ்வுடலினுள் அறிவாகிய ஜீவனை ஆசானின் கிருபையால் காண்பதே தன்னையறியும் செயல்.



Copyright © AMNA Trust, Chennai

**வாஞ்ஞாலிப் பழம்புலமை மன்னரொரு**
**புடைசூழ்ந்து வயங்ஙா னிற்ப**
**ஆஞ்ஞாலிக் குலத்தலைமை மதிவல்லார் ...** **(ஆடலங்ஙன்னி)** என்ற பாடலுடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்

**15-09-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**குருபிரான் அருளமுதம்:**

**அந்நமே சிந்நை பதிந்ந சந்நன கந்நங்ஙமழும்...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. ஐம்புல நுகர்வின் மூலமாக அழியக்கூடிய உலகப் பொருட்கள் மீது உள்ள நமது பந்தத்தை ஆசான் நமக்கு அறிவுறுத்தி அதிலிருந்து நம்மை விலக்குகிறார்கள்.

*சற்சன நன்மக்களாகிய புதியவர்களின் சந்திப்பின் போது ஆசானிடத்திருந்து மலர்ந்த சுவிசேஷங்கள்:* வேதம் சொல்லும் மெய்ப்பொருளை வேதசாட்சியாக செயலாக்கி வைப்பதே ஆதி மார்க்க னீதி அவை. சதுர்யுகங்கள் கடந்த மூலமந்திரத்தை கண்டு சொல்வதற்கான வழியை ஆசானின் இரக்கத்தால் அறியலாம். அறுவகை சமயங்களான சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணாதிபத்யம், கௌமாரம், சௌரம் என்பவை சிவன், மகாவிஷ்ணு, சக்தி, கணபதி, முருகன், சூரியன் எனும் அறுவகை சமயங்களை வழிபடுவதாக உள்ளது. இறைவனை அறியும் அறிவே தன்னை அறியும் அறிவாகவும் அதைப் பற்றிய சொல்லும், அதற்கான பொருளையும் குருபிரானின் இரக்கத்தால் அறிய வேண்டியது மனிதனின் கட்டாயக் கடமையாக உள்ளது.

**வான்மதி கொரல் வாக்கியம் எண் 83:**

**காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது** **(திருக்குறள்)**

என்ற குறளின் படி, பேசரிய உபதேச இரவில் பெற்ற மெய்ப்பொருளின் மேன்மையை காலம் செல்லச் செல்ல உணர்கின்ற செயலுக்கு ஈடாக உலகில் எதுவுமில்லை. அறிவு வடிவாக உள்ளவரின் முன்னிலையில்தான் நம் அறியாமை தெரியவரும். ஔவையார் கூறிய **அணுவைத் துளைத்து ஏழ்கடலை புகுத்தி குறுகத்தரித்த குறள்** அனைத்தும் செயலாக உள்ளது போலவே, இறைஞானம் அவரவர்க்கும் செயல் அனுபவமாக உள்ளது. இதனை திருமந்திரத்தில், தாய் தன் தாம்பத்ய சுகத்தை மகளிடம் கூற இயலாததற்கு ஒப்பாக கூறப்பெற்றுள்ளது. எக்காலத்திலும் மாறாத பொருளான மெய்யே அவரவர் நாமமாக உள்ளது. *கௌதுல் ஆலம்* அவர்களின் மெய்வணக்கம் பற்றிய எச்சரிப்பில் இருதயத்தை பிரகாசமாக கண்டு மூச்சானது ஒரு நிலைபட நின்று வணங்குவதே மெய்வணக்கம் என அருளப்பெற்றுள்ளது. அவரவர் உருவத்தினை அதிக தெளிவு படுத்தி காட்டும் தெய்வ கண்ணாடியாக இருப்பவர்களே குருபிரான். எண்ணரிய பிறவி எடுத்த மாயக்கூத்தாகிய இத்தேகத்தில் அறிவெனும் தூய ஞானச் சுடரை ஏற்றி வைக்கும் பதம் நமக்கு நிஜமாக வேண்டும்.

*ஜீவசகோதரி லாவண்யா :*
**அறிவு அறி பாடம் - அருட்பதி தேட இருட்குடி ஓடும் ... இருதயம் விளங்கு இறைகுருதேடல்**
குருபிரானின் அருளமுத வர்ஷிப்பை செவிமடுப்பதே நம் அறியாமை எனும் இருள் விலகுவதற்கான ஒரே வழி. ஜோதிப் பொருளான அனாதியாகிய ஆதினூரானியை தன்னில் அறிவதே னீதியான நன்னெறியாக உள்ளது. நம் இருதயத்தை பிரகாசமாக மாற்ற வல்ல இறை குருவைத் தேடுவதே நம் கடமையாக உள்ளது. அமானிதமெனும் அறிவாகிய சீரை


Copyright © AMNA Trust, Chennai

நம்மை அறிய வைத்த குருகொண்டலின் ஈகை இரக்கத்தையும் என்றும் மறவாதிருக்க வேண்டும்.

**குருபிரான் அருளமுதம்:**

ஐவழி விளைவுக்கு அப்பால் உள்ளதே மெய்வழி. நான் எனும் அறிவாக நம்மை உண்டாக்கி, நம்முள் இருக்கும் நித்திய மெய்ப்பொருளை புராதனமான னாதத்தின் மூலம் அறிவதே தன்னையறிதல். கலியுகத்தை தர்மயுகமாக ஆக்கிக் கொண்டவர்களே தவம் செய்ய தகுதியானவர்கள்.

*ஜீவசகோதரி பூர்ணிமா:*

**மாணிக்கவாசகர் அருளிய அதிசயப்பத்து பாடல் எண் 10 : இருள் திணிந் திட்டதோர் வல்வினைச் சிறு குடிலிது**

சர்வ படைப்பிற்கும் காரணமாக விளங்கும் அனாதிப் பொருளை மெய்வழி ஆண்டவர்கள் **ஆக்கியோன் அந்த வல்லிருள்ளுள்ளிருந் நூக்கியே வெளியாக்கிய னாள் தலை** என ஆதி மான்மியத்தில் அருளியுள்ளார்கள். ஜீவனாகிய சிற்றம்பலப்பொருளை அறியவிடாமல் கீழ் நோக்காக இழுத்துச் செல்லும் மனதின் மும்மலப் பிடியிலிருந்து நம்மை மீட்கும் செந்தீயான வாக்கு வல்லபம் கொண்ட மெய்ஆசானின் பாதம் பணிவோமாக.

**குருபிரான் அருளமுதம்:**

புலன்வழி பற்றியோடி பொய் நெறியாகிய சலிக்க வைக்கும் உலக அதிசயங்களின் பிடியிலிருந்து ஆசான் நம்மை மீட்டு மெய்நெறியில் ஆக்கி பேரின்ப வடிவத்துடன் போன நாட்கள் மீண்டங்கேறுவதே அதிசயம். எக்காலத்திலும் உள்ள வேதம், நான், பரிசுத்தஆவி இவற்றை பரிசுத்த ஆவியினால் அறிந்து பிறவா நெறி பெறுவது நலம்.

*ஜீவசகோதரி சண்முகப்பிரியா:*

**திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம் பாடல் எண் 05 திருவேணுபுரம்: நாணாவித வுருவான மையாள் வான ணுகாதார்**

உலகப்பற்றினால் நிலையாத நம் மனதின் குணங்களால் அசுரனாகி, ஆணவம் கன்மம் மாயை என்ற அனீதியில் உள்ளோம். மும்மலம் கருகினால் மாறாத னீதியான முச்சுடர் தோன்றும் என மெய்வழி ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். சத்திய வேதத்தில் கூறியுள்ள ஜீவனாகிய **நான்** என்ற வழியை அறிவதே தன்னை அறிதல். ஆசானின் னாதமாகிய வேணுபுரமே அறிவிருக்கும் தலத்தில் நம்மை ஆக்கி வைக்கிறது.

**குருபிரான் அருளமுதம்:**

**சிவானந்த போதம்: இன்னமின்னம் பிறவிதனில் பிறத்தல் நன்றோ ...**

கோயில்கள், சடங்குகள், சம்பிரதாயம், இறை வழிபாடு எல்லாம் உணர்த்துவது பிறவாநெறி எனும் முக்தி அடையவே. எமன் அணுகாத சத்திய சாயுச்ய நிலையருளும் மெய்மதத்தில் சேர்ந்து ஆகி, தேகம் உள்ள போது இறப்பு ஒழிப்பதுவே முத்தி பாலிப்பு. மனதின் வினையினால் உண்டாகும் பிறப்பை அறுக்கும் செயலுக்கே பிரம்மவித்தை எனப் பெயர். வினை அறுக்கும் நித்தியானந்த பிரம்ம சொரூபம் அவரவர் நாமத்தினுள் உள்ளது. *சப்தமும் கலையும் பொதிந்த ஜீவனாகிய கண்ணாடி காட்டும் நம் தேகம், மனம் அடங்கும் போதே பிம்பமாகிறது.* இவற்றை மனமாகிய சீடனுக்கு அறிவாகிய ஆசான் அருள்கிறார்கள்.

மெய்வழிச் சாலையின் வணக்க முறைகளாகிய எக்காளம் ஊதுதல், துந்துமி இசைத்தல் போன்ற யாவும் அகமியத்திலுள்ள அசலை நினைவூட்டும் நகலாகும். உண்மை உணர்ந்தவர்கள், பிரளயத்தில் தப்பியவர்களாகவும், மற்றவர்கள் கள்ளர் குகையில் வாழும் சபிக்கப்பட்டவர்களாகவும் இருப்பர். மெய்வழிச்சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்தினால் ஆர்வமுள்ள மக்களின் தாகம் தீர்க்கும் தடாகமாக ஆதி மார்க்க



Copyright © AMNA Trust, Chennai

நீதி அவை எக்காலத்திலும் நின்று விளங்கும் என குருபிரான் அருளி, தோத்திரப் பாடலுடன் அவையை நிறைவு செய்தார்கள்.

**17-09-2022 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**புல்லும் பூமியு லகுள்ள னாளெலாம் ...** என்ற குருஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர் :*
புல், பூமி, உலகு அனைத்தும் மனிதனுக்குள் சுருட்டி மடக்கி வைக்கப்பட்டிருக்கும் காலமாகிய வாழ்னாளுக்குள் அடங்கியுள்ளது. குருபிரான் அருளால் காலத்தின் இரகசியத்தை தன்னுள் உணர்ந்த பிறகே எல்லை காணமுடியாத பேரின்ப பெருவாழ்வு பெற்று னித்தியனாக வாழ முடியும்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண் : 106**
மெய் குருபிரான் னம்மை சீடனாக ஏற்று மறுபிறப்பு பூமியில் படைத்து அதில் விதைத்த வித்தில்லா வித்தானது முளைத்து தளிர், இலை, பூ, காய், பழமாவதற்காக பருவம் தவறாது வான்மழையாகிய அமுதவர்ஷிப்பை பொழிந்து கொண்டே இருக்கிறார்கள். இறைவனின் அருட்கடாட்சத்தால் ஆறு பிறப்புகள் வரை மாறி மாறி வந்த னம்மை, ஏழாவது பிறப்புடலமாகிய மகா உன்னத தேவப்பிறப்பில் பெற்றெடுத்து வேத வழியில் கடமை தவறாதவர்களாய் வாழ வைக்கிறார்கள்.

*ஜீவசகோதரி லாவண்யா :*
**அறிவு அறி பாடம்** - **உற்றதே குருவிடம் ஓதிடல் வேண்டும்..... ஐயத்தை விட்டு அறிவதை அறிவாய்** உற்ற பொருளாகிய ஜீவனுக்குரிய வாழ்க்கையை குருவிடம் ஓதிடல் வேண்டும். அழி சரீரத்தின் மீது ஆசை வைக்காமல் தூங்காமல் தூங்கும் பிரம்மவித்தை செயலை பழகுவதே உயிருக்கு ஆணியாகும். கால கால காலங்நடந்த காரிருள் காருண்யமே எங்கும் னிறைந்த இறைபொருளாக ஏகாட்சரமாக னின்றிலங்குகிறது. பிராணனின் அடையாளமாக ஓடிக்கொண்டிருக்கும் உயிர் மூச்சை வீணாக்காமல் காப்பதில் ஏழைக்கு ஏழையாய் இருப்பது னன்மையாகும். இம்மெய்ச் செயல்களை நமக்கு அருளும் குருபிரானிடம் ஐயமாகிய சந்தேகத்தை விட்டு தெளிவான அறிவைப் பெற வேண்டும்.

இசையின் மேன்மையை உணர்த்துவதற்காகவும், தெய்வ பாடல்களை ராகம் தாளத்துடன் பாடுவதன் சிறப்பை அறிய வேண்டியும், ஒவ்வொரு வாரமும் குருபிரான் அருளிய படி, இன்றைய தினம் அவையிலுள்ள சிறு வயதினர்களுள், மதுமிதா மற்றும் ராகவன் இருவரும், **காவ லான புராதன வேதியர் ...** என்ற குருஸ்தோத்திரப் பாடலை இனிமையாகப் பாடினர்.
*ஜீவசகோதரர் விஜயகுமார் :*
**யோவான் தீர்க்க தரிசனம் - (திருவசனம் 21:26 வரை)**
**திருவசனம் - 21: 22** னான் - வாழ்வளிக்கும் உணவு, உலகின் ஒளி, வாசல், ஆயன், உயிருக்கு உயிர், வழி, உண்மை, திராட்சைக் கொடி என்ற திருவசனங்களின் மெய்ப்பொருளை குருவின் இரக்கத்தால் தன்னையறிந்த பிறகே விளங்கிக்கொள்ள முடியும்.

*குருவின் வதனத்தினுள்ள வித்தை குருவினிடத்துச் செய்யும் பக்தியினாலடையப் பெறுகின்றது. மூன்றுலகத்தின்கண்ணுள்ள தேவரிஷி பித்ருக்கள் மானிடரென்போர் இதனைத் தெளிவாய்க் கூறுவோராவர்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

**திருவசனம் : 23** தேவனுடைய சாயலான னாதத்தொனியே சீடனின் செவிகளில் னுழைந்து னரன் என்ற னிலையிலிருந்து மனு, தேவன் என்ற பெரும் பதங்களுக்கு உயர்த்துகிறது.

**திருவசனம் : 24** எல்லா பரிசேயர்களும் மாய்மாலக்காரர்கள் அல்ல. நிக்கோதேவு, கமாலியேல், அப்போஸ்தலனாகிய பௌல் போன்ற பரிசேயர்கள் னீதியுடையவர்களாக நேர்மையான மனிதர்களாக வாழ்ந்தனர்.

**திருவசனம் - 25 : 26** வித்தில்லா சம்பிரதாயம் மேலும் இல்லை கீழும் இல்லை என்பது போல், னடுப்பொருளாகிய உயிர் இல்லாமல் எவ்வித சம்பத்தும், வாழ்வும், ஞானமும் இல்லை. னடு அறிந்த னாயகன் இரக்கத்தால் ஞானஸ்தானம் பெற்றவர்களால் மட்டுமே உயிரின் இரகசியத்தை அறிந்து னீதிமான்களாக னிலை பெற்று வாழ முடியும்.

*ஜீவசகோதரர் சங்கர்:*
**சிவானந்த போதம் :**
**சீடன் :** குடும்பச் சேற்றில் சிக்கி வீணுக்கு உழைத்த னான் சிலனாள் தேக சௌக்கியமின்றி இருந்தபோது எனைச் சார்ந்து னான் தேடிய பொருளை மட்டும் இச்சித்து, ஏவல் பணிவிடையில் வெறுப்புற்ற சத்துருவாகிய பேய்க்கூட்டங்களை விட்டு, காயம் தளராமுன் சிவன் திருவடி அடைவதற்கு னீர் சொன்னபடி சத்தியமாய் னடப்பேன் என பணிந்து சொல்லவும்.

**ஆசான் :** குடும்ப கோரம் என்ற தலைப்பில் வள்ளல்பிரான் அருளியபடி, அந்தகரண கூட்டத்தின் தலைவனாகிய மனம், ஐம்புல னுகர்வின் மூலம் அலைந்து கொண்டிருக்கும் போது, நம் தேகம் சௌக்கியமின்றியும், ஆசான் அருளால் மனம் அலைவற்று அசையா னிலையாகிய அறிவு வடிவாகும் போது சிவனடி சார்ந்தும் மகிழ்கிறது.

**சீடன் :** தங்கள் வாக்கால் னான் தெளிந்து, பேதமையற்று சர்வ பணியும் அறுத்து விட்டேன். இதனை மேலும் தெளிவாய் அருள வேண்டுமென கேட்க -

**ஆசான் :** உன் முன் ஜென்மமாகிய முந்தைய மனமே அறுவகைப் பாய்ச்சலுடன் அதிவேகமாக சுழன்று பிறவி எடுப்பதற்கு காரணம். பிறப்பறுக்கும் பிஞ்ஞகனாகிய குருபெருமான் அருளால், சுத்த னெஞ்சமுடன் மானாபிமானமெனும் உலகப் பற்றற்று, குற்றெழுத்தை னீக்கி உற்றெழுத்தை ஓதி உணர்ந்து உரைப்படி வாழ்ந்து திருவடி பேறு பெற்று எக்காலத்தும் இன்புற்றிருக்கலாம் என்ற பகிர்வுகளைத் தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை இனிதே னிறைவுற்றது.

**18-09-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. மணிமொழி மஞ்சுநாதன்**

**பேசரும்பெ ரும்பொருளைப் பேசரும்வா சகங்நொண்டு**
**பேசியளிக்கின்ற பெருமான்** எனும் முரீதுச் சுருக்கம் பாடலுடன் அவை மலர்ந்தது.
*ஜீவசகோதரர் கௌதம்:*

பேசரும் பெரும் பொருள் நம்மிடம் **ம்** எனும் ஊமைமூலமாக ஆன்மாவாக ஃ எனும் பிரம்மமாக விளங்கும் னித்திய பொருள். அழியாத ஆன்மாவின் செயலை, மனம் அடங்கும் செயலை கங்குல்பகல் அற்ற இடத்தில் நினைவென்னும் ஆகாயத்தில் ஓர் அறிவாய் னின்று வணங்கும் மெய்வணக்கத்தை நம் குருபிரான் ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினராகிய நமக்கும் அருளியுள்ளார்கள். னீர் னிலைகளில் உள்ள பாசிக்கு ஒப்பான மனதின் கசடுகளை ஆசானின் வாய்மையாகிய கோடி சூரிய பிரகாசமான வடவையனல் எனும் ஞானாக்கினி தெளிந்த அறிவாக மாற்றுகிறது. சுட்டெரிக்காத பூப்போன்ற


Copyright © AMNA Trust, Chennai

தீயாகிய விபூதி எனும் ஆசானின் வாய்மையாகிய பஞ்ஞாட்சரத்தை அவர்களின் பெருங்கருணையால் நாம் அணிந்து கொள்வதையே, இடப்பாக ஆசாரக் கண்ணி பாடலில்

**பஞ்ஞாட் சரமேனி படிந்நகுல தெய்வமதை**
**னெஞ்ஞாராக் கண்டுதொழ னீணிலத்தில் வாச்சுதிங்ஙே**
என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

குற்றம் என்பது நம்மிடம் மாசுள்ள மனமாக, பாவமெனும் காலமாக, ஐம்புல னுகர்வினால் உண்டாகிறது. மனம் பூத்த திருமேனி மதி பூத்து ஒளிர்னாவும் வள்ளலாகிய ஆசான் அவர்களின் னாதமே னம் குற்றத்தை போக்கும் கோடாயிதமாகிய வாளாயுதம். அதன் மூலம் நம் கொடுவினை களைந்து, மாயாப் பிறவி மயக்கம் அறுத்து, நபுசாகிய அவித்யா பாதத்தை சிபத்தெனும் வித்யாபாதமாக மாற்றி பரலோக ராஜ்ஜியத்தை நம் சமீபமாக்கி புண்ணியமாகிய மரணமிலாப் பெருவாழ்வை வழங்குகிறார்கள்.

**அண்டபகி ரண்டமெலாம் தொண்டரித யத்தின்மனக்**
**கண்ணாடிக் குள்ளிருந்ந காரணத்தை யான்மறவேன்** **(இடப்பாக ஆசாரக் கண்ணி)**

மனதை அறிய உடல் கண்டு உயிர் வழி பற்றி ஆன்ம வீடு அடைவதுவே னித்திய வழி.

**உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்**
**உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று**
**உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே** **(திருமந்திரம்)**
என்பது திருமூலர் வாக்கு.

**புறந் தூய்மை நீரால் அமையும் அகந்தூய்மை**
**வாய்மையால் காணப் பெறும்** **(திருக்குறள்)**

ஆசானின் வாய்மையாகிய அருளால் நமது அகம் தூய்மையாகி கலிமாவெனும் பூரண நிலையை அறிய ஏதுவாகிறது. ஆதியாய் விளங்கும் ஜோதியே சுயம் பிரகாசமாகும். ஆசான் அருளால் அண்டராலும் அறியவொண்ணாத் திருஅண்டரண்ட பகிரண்டம் பாய்ந்து, அண்டம் ஓர் அணுவினுள்ளே இருப்பதை, அமானிதம் எனும் சீதனம் பெற்று வந்த மனு ஒருவனே கற்று உணரமுடியும். னால்வகை யோனியில் ஒன்றான சினையில் பிறந்த னமது னரப்பிறப்பை மாற்றி மனுவாக்கி, தேவனாக்கும் செயலிலேற்றி, அணுவுக்கணுவாய் அண்ட பிரம்மாண்டமாய் னினைவுட் பதியும் னாத மின்னுடலாக, போகாப்புனல் மேல் வீற்றிருக்கும் பிரம்மமுடி சாகாத்தலையாக விளங்கும் னித்திய ஜீவனை, நம் உள்ளத்தில் காட்டித் தந்த னிர்க்குணராகிய னம் ஆசானின் பொற்பாதங்களை என்றென்றும் னினைவிலிருத்திட அவர்களின் ஆசீர்பாதத்தை வேண்டுவோம்.

**18-09-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. பானுமதி குமரேசன்**

**குருபிரான் அருளமுதம்:** :-ஞானத்தைப் போதிக்கும் தகுதி கொண்ட யோக்கியமான பெரியோர்களே தான் பெற்ற பேரின்ப னிலையை உலகிற்கு எடுத்தியம்பும் வல்லமையுடன், தன் மதிப்பளுச்சுமையை மாற்றுவதற்கென, நம் சிட்டைப் பிடித்த தேவாதி தேவனாக, நம் கொண்டையைப் பிடித்த குருஈஸ்பரனாக வருகிறார்கள்.


Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரி ஆர்த்தி* :

**சீர்மேவு மெய்ஞ்ஞான தெய்வச்சி ரோன்மணியைப்**
**பாரோர் புகழ்ஞான பண்டிதரை யான்மறவேன்**

எனும் இடப்பாக ஆசாரக்கண்ணி பாடலைத் தொடர்ந்து, சீர் எனும் அமானிதமே திருவடி இரகசியமாக, இடப்பாகமாக, ஆசாரக்கண்ணியாக விளங்குகிறது. ஏழு அணுக்கோர்வையே தெய்வச் சிரோன்மணியாக உள்ளது. பாரோர் புகழ்ஞான பண்டிதர் அருள்கின்ற மெய்ஞானம், சீராகிய அறிவுடன் சேர்ந்து பிறவிப் பெருங்கடலாகிய வினைகளில் இருந்து நம்மைப் பாதுகாத்து சன்மார்க்கராகிய ஆசான் அருளிய ஜென்ம சாபல்ய வாழ்வில் ஏற்றி வைக்கிறது.

*ஜீவசகோதரி கனகத்தாய்* :

**அப்பனை நந்தியை ஆரா அமுதினை... பெறலாமே (திருமந்திரம்).**
இறைவனை இன்னான் என அறிந்த ஓர் மெய்குருபிரான் துணை கொண்டே மெய்ஞானத்தை அடைய இயலும். **அறிகின்ற அறிவே அறிவென்று அறிவாய்** ஆறாவது அறிவு இன்னதென அறிந்து, அறியாமையை அறிந்தகற்றி, வினை அறுத்து, இறைவனை உணர்ந்த பிறகே பிறவாமை பெறமுடியும்.

**மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய் தொடங்கினோர்க்கு**
**ஓர் வார்த்தை சொல்லும் சற்குருவும் வாய்க்கும் பராபரமே (பராபரக்கண்ணி)**

மனிதன், தான் தேடும் இறைவனை அடையத் தடையாக இருக்கும் மாயையாகிய அவன்தன் மனமது செம்மையானால் தடை நீங்கி இறைவனைக் காணலாம். மெய்குருபிரான் வாய்த்த ஒருவன் கற்ற கல்வியின் பயன், இறைவனின் னற்றாளாகிய பாதமெனும் பிள்ளையார் சுழியைத் தொழுவதேயாகும்.

*ஜீவசகோதரி விஜயசித்ரா* :

**காட்சியெலாம் எனக்களித்த கருணை வேந்தே** என்ற தோத்திரப் பாடைலத் தொடர்ந்து, ஒவ்வொரு மனுவுக்குள் இருக்கும் கடவுள் என்ற பரம்பொருளே பிரம்மம். **ஆதிமான்மியம் - பக்கம் - 06**- *ஆண்டவர்கள் ஆதியோதயத் தலைப்பருவத்தில்,* உவமானத்திற்கு எட்டப்படாத மேம்பட்ட அரூப வடிவத்தில் உள்ள பிரம்மக்குன்றை **13** நிலைகளாகவும், பக்கம் -101-ல், அதன் பல்வேறு நிலைகளையும் னாமங்களையும் அருளியுள்ளார்கள்.

வாசனை, கேள்வி, இருகண், வாய் எவைக்கும் வல்லமை அளிக்கும் அக்கண்ணாக விளங்கும் பிரம்மமே, சகல உயிர் ஜீவனிலும், தானாக விளங்கும் சுயம் பிரகாசமாக, சர்வ நாமத்திற்குரிய நான் என்பதாக உள்ளது. ஓம் என்ற குற்றமற்ற பரம்பொருளே பிரம்மம்.-(தாயுமானவர்).
**1) பிரக்ஞானா பிரம்மம், 2) அகம் பிரம்மாஸ்மி, 3) தத்துவமசி, 4) அயம் ஆத்மா பிரம்மம்**. என பிரம்மம் நான்கு வேதமகா வாக்கியங்களாக உள்ளது. *சாவாது பிறவாது தனி முதலாய் இருந்த னான்* எனும் பிரம்மத்தை, ஒரு மெய் குருபிரானின் துணை கொண்டு மெய் வணக்கம் மூலமே அறிய இயலும். இதனை வள்ளலார், *நான் பசு, ஆன்மா, சிற்றணு வடிவினன்* என்றும், *ஒத்ததறிவான் உயிர் வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்,* என திருவள்ளுவரும் அருளியுள்ளார்கள்.

**நினைவெனும் பிரம்மம்**: சொர்க்கலோகம் கட்டப்பெறும் இடமாகிய னினைவெனும் ஆகாயத்தில் காலமெலாம் தீமையை ஏற்றுவதே னரகம். தீர்ப்பு னாளாக நின்று விளங்குவதும் அவ்விடமே. மனம், அறிவாக சுத்தனினைவாக மாற கலைமகள் வாசம் செய்யும் நமது னாவை னீட்டி, அகட்டி, வேதனாவாக வளர்க்க வேண்டும் என்பது ஆண்டவர்கள் திருவாக்காகும்.



Copyright © AMNA Trust, Chennai 

**சகுனபிரம்மம்**: முத்தொழிலுக்கு காரணமாகவும், தூக்கம் விழித்து மனம் எனும் சக்தியாக புறத்தில் அலையும்போதும் உண்டாகும் சகல குணங்களே சகுனபிரம்மமாகிறது.

**னிர்க்குண பிரம்மம்**: சுத்த னிர்க்குணமாய் தானாய் இருக்கும் பிரம்மம் தன்னிலே அடங்கி தொழிலற்று இருப்பதே னிர்க்குண பிரம்மம். இருங்குணம் எனும் இருந்த குணமே ஒருங்ஙது சமைந்த ஈடில்லா ஐக்கியப் பதியாக அசைவற்ற குணக்குன்றான னிர்க்குண பிரம்மம்.

**ஃ எனும் பிரம்மம்**: அகரமெனும் எண் பொருள் அவரவர் வினைப்படி, தந்தை, தாயிடத்தில் தொடங்குகிறது. **தன் அகரப்பொருள் கை கொண்டோர் தேவராகும். ஃகனைக் கண்டு அகரத்தில் ஆகுதல், ஃ எனும் பிரம்மத்து அருளொளி பெருக்கால்** என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். மூன்றாவது கண்ணாக, அறிவுக்கண்ணாக, உயிர்த் தமிழின் இரகசியமாக, முப்பொருள் கோல விளக்கமாக, பஞ்ஞகோசம், பஞ்ஞபீஜம், பஞ்ஞாட்சரமாக விளங்குவதே ஃ எனும் பிரம்மம்.

**விரைபிரம்மம்**:விநாயகர் அகவலில் வரும் விரைகழலாகிய திருவடியெனும் ஆதம் பாதத்தை குருவானவர் நம் முகத்தில் வைத்துப் படைக்கும் செயலையே, *தெய்வத் தேடு கூடகம்* பாடலில்

**தரைதனில் னரராய்த் தோன்றித்**
**தாம்கெதி அடையா தோரை**
**முறைசங்ஙா ரனுக்கி ரகம்**
**முடித்துமே மனுவாய் மாற்றி**
**விரைபிரம்மம் அவர்மு கத்தில்**
**வைத்துமே படைத்துப் பின்னும்**
**மறைபடாத் தேவ ராக்க**
**வந்நனர் உலகுக் கம்மே** என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**விராட்பிரம்மம்** *(விஸ்வபிரம்மம்): காணுவது விராட் பிரம்ம வைப்பினாலே*.......எனவும், *விராட்னிலை ஏற்றும் வித்தகா போற்றி* எனவும், அருளியுள்ள சாலை ஆண்டவர்கள் விராட் பிரம்ம தவனிலையெனும் னித்தியத் தவமாகிய கன்னி விராட்தவத்தில் னிலைத்து உள்ளார்கள்.

**கூடஸ்தபிரம்மம்**: **னற்று ணைற்றாள் சித்தரிக்கு ரத்திபெற்ற**
**முத்திரைக்கூ டஸ்தரட்ண - ரேறே மேடியா** எனவும், **பிரம்மஸ்த கூடத்துப் பிரம்மஅ ரூபனே...** எனவும் ஆண்டவர்கள் அருளியுள்ள, கூடஸ்தபிரம்மமே நான்முகனாக, பிரம்மாவாக சர்வத்தையும் படைக்கும் அகங்காரமாக உள்ளது.

**பரப்பிரம்மம்:** உருவம் அழிவுள்ளதும், அருவம் அழிவற்றதாகவும் உள்ளது. அருவமாகிய அழியாப்பொருளை அறியக்கூடிய னிலையே பரப்பிரம்மம். தெளிந்த உயிர் சிவமாகி பிரம்மானந்தத்தில் வாழும் அறச்செயல் மூலமே பரமபத முத்திச் செயலை அடையமுடியும்.

**அசைவற்ற குணக்குன்றாம் பிரம்மம்**: அசைவற்ற ஒன்று, அசைய வைக்கும் னாத உடம்பாக, அவரவரிடத்தில் தன் தன் மதமாக, தன் பெருவெளியாக, உதயப்பொருளாக, ஆதி வஸ்துவாக, னீதியாக, அசைவற்ற குணக்குன்றாக உள்ளது.

**சாயுச்யபிரம்மம்**: **சத்தியம் திரண்ட சாயுச்யக் கடலே சகலகு ணானிதிக் கடலே....** மெய்குருவாக, கல்யாண கோலத்தில் னின்று இரட்சிக்கும் மதினா வேந்தரே, நாலாம் பதமாகிய சாயுச்யபதம் எனும் சாயுச்யபிரம்மத்தில் நம்மை ஆக்கவல்லவர்கள். வினை அறுக்கும் பிரம்மவித்தை செயல் கொண்டு தம்மை அண்டிவரும் சீடர்களுக்கு



Copyright © AMNA Trust, Chennai 

அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரமாக குருவானவர் தர்மத்தை வாரி வழங்குகிறார்கள்.

*ஜீவசகோதரர் சோலையப்பன்:*
நாம் அடையும் ஜீவசுதந்திரமே மெய்யான சுதந்திரமாகும். **கொடியேற்றம்** :- இடம்- மனிததேகம், ஆள் - மனம், கம்பம் - உணர்வு, கயிறு - மூச்சு, கொடி -ஆசானின் திருவாக்கு. ஒரு மெய் ஆசானின் திருவாக்கின்படி மனித தேகத்தினுள் மூச்சு லயமாகிய மனோலயம் என்கிற பிரம்மவித்தை செயலை பழகி வெற்றிக் கொடியாகிய சுதந்திரக் கொடி ஏற்றுவதே ஜீவசுதந்திரம்.

**குருபிரான் அருளமுதம்: சு - தந்திரம்**.
**தன்னையறிந்து இன்பமுற வெண்ணிலாவே**
**ஒரு தந்திரம் நீ சொல்லவேணும் வெண்ணிலாவே... (அருட்பா)** சு - என்ற சூட்சாதி சூட்சுமமாக விளங்கும் மந்திரப்பொருளை ஆசான் மூலம் உளவறிந்து தன்னுடையதாக ஆக்கிக் கொள்வதே சுதந்திரம்.

*ஜீவசகோதரர் கார்த்திகேயன்* :- அழியாப்பதி குடியேறிய னாயகம் என் குருவின் மொழியாம் படி, அழிவுடலாக இருக்கும் மனதை, அழியாத அறிவுடலாக மாற்றி பந்தத்திலிருந்து விடுதலை பெறுவதே முக்தியும், மோட்சமும் ஆகும். காலமெனும் வாழ்னாள் நம் கைவசமானால் ஜீவசுதந்திர வாழ்வு வாழலாம்.

**22-09-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்**

**குருபிரான் அருளமுதம்:**
**வான்மதிக் கொரல் திருவாக்கியம் எண் : 84**
**ஐய்யங்கார் :** ஐந்தொழில் கைக்கொண்டவரும், வினைகளை வேரறுப்பவரும், னாசிக்கு வெளியே மூச்சோடாத தவநிலை பெற்றவரும், ஈசனின் ரூபம் தாங்கி வரும் சற்குரு பிரானாகிய ஐயனின் திருவடியை சரணடைந்த மக்களுக்கே (ஐயன் + கார்=ஐயங்கார்) என்ற னாமம் வைணவ பெரியோர்களால் சூட்டப்பெற்றது. இது போன்றே பிராமணர் முதல் சக்கிலி வரையான அனைத்து னாமங்களும் உயரிய நோக்கத்திற்காகவே உண்டாக்கப் பெற்றதாகும்.
**னாசி :** இருள் நாசமாகும் இடமே னாசி. இதுவே பிரகாசப்பொருள், ஜோதி, அறிவு, னாசிமுனை, சுழிமுனை என அனேக னாமங்கள் கொண்டது. சீடனின் அறியாமையை அகற்றும் ஆசானின் னாதமே ஜோதி என்ற இரகசியத்தை, ஆண்டவர்கள் மெய்வழினூலில், **ஜோதியென்ற னாசிமுனை பாழ்போகாது தொடர்ந்து தின மறுவாசி கூட்டி ஏறு** என அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரி லாவண்யா:*
**அறிவு அறி பாடம்: ஒரு னற்றாளே உயிர் மெய்யறிவு...** சற்குருபிரானின் இரக்கத்தால் னற்றாள், பாதம், திருவடி என்ற மெய்யறிவு நிலைகளை நம் உள்ளத்தில் கற்கும் கல்வியே மெய்க்கல்வி. சர்வத்திலும் னின்றாடும் குஞ்சித பாதத்தை, ஏழ்னிலைக் கம்பமாய் மூன்றுலகத்திலும் ஊடுருவி னிற்கும் அந்தத் திருப்பாதத்தைத்தான் ***னற்றாள்*** என்றார்கள். இதனை வள்ளுவர்பிரான்
**கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்** என கூறியுள்ளார்கள்.

**அறியோம் னற்றாள்கள் குருவாழ்க, குருவே துணை** என நம் முன்னோர்களும் அருளியுள்ளார்கள். புத்தேள், தேள்கொடுக்காம் குலதெய்வம், படாச்சரம் பாதநிலை இரகசியங்களை தெய்வமவர்கள், **பூஞ்ஞாலை இளம்பழனப் புத்தேளைத்தொழுதாடல் புனைந்ந சீரே** என ஆடலங்நன்னி பாடலிலும், **இலஞ்நுழி சுழித்து ஏகமாய் விம்மிஎழுந்நன எழுத்திலா தெழுத்தின்** என ஞானச்சங்நு பாடலிலும் அருளியுள்ளார்கள்.


Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரி சண்முகப்பிரியா :*

**தேவாரத்திருப்பதிகம் - திருவேணுபுரம் பாடல் எண் : 06**

**மண்ணோர்களும் விண்ணோர்களும்...** ஐயறிவு நுகர்ச்சியால் உடல் தேவையே சதமெனவும், மூவாசை மற்றும் மும்மலத்தில் சிக்கி பிறவிச்சூழலில் உழலும் மண்ணுலகோரை தோணியப்பனாக வரும் குருபிரான் இளவாளை மீன்களாகிய சீடர்களுக்கு ஆறாவது அறிவை அறிவித்து பிரம்மவித்தை செயல் மூலம் ஒட்டி ஒட்டாதிருக்கும் பஞ்ஞாட்சர மேனியாகிய சூக்குமதேகத்திலேற்றி விண்ணாட்டு வித்துக்களாக எடுக்கின்றார்கள்.

**குருபிரான் அருளமுதம்: சிவானந்த போதம் -**

**சீடன் :** தங்ஙள் வாக்கைக் கொண்டு னான் தெளிந்த விதத்திலே என் பேதமை நீங்கி, சர்வ பணியும் அறுத்து விட்டாலும், இன்னும் தெளிவாய்க்கூற வேண்டும் என கேட்க –

**ஆசான் :** சுத்த னெஞ்னுடன் சற்குரு மலரடி தொழுது, மான அபிமானம் என்ற உலகப் பற்றை விட்டு, ஆசான் சொல்படி கேட்டு குற்றமற்ற திருவடியை பண்புடன் பணியவேண்டும் என்ற பகிர்வுகளைத் தொடர்ந்து, குருபிரானின் அருளாசியுடன் அவை இனிதே நிறைவுற்றது.

**24-09-2022 ~ சனிக்கிழமை சபை**

**தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்**

**குருபிரான் அருளமுதம்:**

வேதங்கள் புகழும் ஞானபோதனை என்பது மெய்யறிவு பெற்று அகத்தில் குடியேறி வாழும் பேரின்ப வாழ்க்கையே ஆகும். பிறப்பு, பிறவாமை, பேரின்பம், சொர்க்கம், இறைவன் இன்னதென அறிந்திட முதலில் அறிவு வேண்டும்.

**அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்**
**என்னுடைய ரேனும் இலர்** **( திருக்குறள் )**

**ஆடலங்ஙன்னி:** **வாஞ்ஞாலிப் பழம்புலமை மன்னரொரு** என்ற புத்தேளான திருவடிப்பெருமை பற்றிய பாடல் இது. திருவடிக்குள் உள்ள மந்திரப்பலனை ஆசானின் அருள் மூலமே பெற முடியும். உற்ற பொருளான ஜீவனுக்கு ஜாதி, மதம், குலம், கோத்திரம் இல்லை. அவரவரிடத்தும், சர்வ நாமத்திற்கும் உரிய உற்ற ஒரே மெய்ப்பொருளாகிய **நான்** என்பதனை அறிவதே தன்னையறியும் ரகசியமாக உள்ளது.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் திருவாக்கியம் - 106 ன் தொடர்ச்சி.**

செத்தால் எக்கோடிகாலத்திற்கும் நரகம் எனவும், இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ எனவும் அருளப்பெற்றதின் ரகசியம் மரணத்திலிருந்து தப்பும் உளவைத் தேடி வரவேண்டும் என்பதற்காகவே. நியாய, அநியாய மரணம் என்பது நம் உயிருள்ள போதே அடைவதாகும். நாம் செத்துக் கொண்டே இருப்பதை உணர்ந்து, அடக்கமெனும் இறவாமைக்கான செயலை மடக்கிப் பிடித்து, ஏழாம் பிறப்புடலமான எழிற் பொன்னுடம்பெடுத்து ஏகாம்பரப்பதம் பெறுவதே கைலாயப் பதவியாகும். மரணத்தை அனுபவித்து திரும்பி வந்து அருளுபவரின் முத்திரைக்கரத்தில் அறியாமையை அகற்றக்கூடிய சர்வ சன்னதங்களும் இலங்குகின்றன.

**பனுவலும் பாட லாலும்**
**பகர்ந்நவிற் பனங்ங ளாலும்**
**அனுபவித் தறியீர் னீவிர்**
**அழிதுயர் மரணந் நன்னை**
**அனுபவித் தறிந்து வந்து**
**அருளுவ னவன்றன் கையில்**



Copyright © AMNA Trust, Chennai

**சனதங்ங ளிலங்ங னின்று**
**சாற்றுவன் சாயுச்சி யோனே.** **(ஆதி மான்மியம்)**

*ஜீவசகோதரி லாவண்யா :*
**அறிவு அறி பாடம்** - **அறன் பதவிக்காய் ஆனதிவ் வுடம்பு...** உள்ளமாகிய மகா மகசூக்கான இருதயத்தைக் காட்டும் அழியாப்பதி குடியேறிய நாயகமான மெய்குருவின் அருளமுதம் பருகி, மெய்ப்பொருள் மெய்ப்பயன் அறிந்து, நீதிவழி சென்று, மெய்யறிவு பெற்று, ஜீவன் கண்டு நித்திய தேகமான தங்கஉடலில் குடியேறி வாழ்வதே பொற்பதவியான அறன் பதவியாகும்.

**குருபிரான் அருளமுதம்:**
அறிவு வடிவான ஆசானவர்கள் அரண்புகு சதுர்மறைகளின் அத்தனை ரகசியங்களையும் நம் அகத்தில் துலங்கவைத்து, அறிவு வடிவாக நம்மை ஆக்குகிறார்கள்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:*
**யோவான் தீர்க்க தரிசனம் - (திருவசனம் 27:30 வரை)** பாவத்தின் சம்பளம் மரணம். அறியாமை எனும் பாவத்தை அறிக்கை செய்பவனை, அவனுடைய தன்னுலகம் அறிய வைத்து, மரணத்திலிருந்து ரட்சிக்கும் பாதனிலை அறிவிப்பவரே சர்வசன்னதங்களும் பெற்ற, முன் பின்னற்ற, இறப்பு பிறப்பற்ற ஏகநாயகனாக, இரட்சகராக வந்த தேவ ஆட்டுக்குட்டியாவார்.

**குருபிரான் அருளமுதம்:**
சத்திய வேதத்தில் *எனக்குப் பின்னிருந்தவரே, எனக்கு முன்னிருந்தவரும், என்னிலும் மேன்மையானவர் என்பது, முன் பின்னற்ற முழுமுதலாகிய நாயகமான ஆசானையும், அவர்களின் இரட்சிக்கும் பாதத்தையே, பாதரட்சைகளாக அதனைத் தொடவும் தான் அருகதையற்றவன்* எனவும் அருளுகிறார்கள்.

**சிவானந்த போதம்:**
ஆசானின் புறத்தோற்றத்தைக் கண்டு நிந்திக்காமல், மான அபிமானம் விட்டு சற்குரு மலரடி வணங்கி தன் குற்றமாகிய பாவத்தை, ஞானாக்கினியில் பொசுக்கி, சுத்தநெஞ்சத்துடன் பற்றுக்குப் பற்றான திருவடியைப் பண்புடன் பணிந்து நித்திய வாழ்வை பெறவேண்டும்.
***வாள் வேணுமா? உறை வேணுமா? எனில், வாள்தான் வேண்டும். உறையான உடலைப் பார்க்காதே*** என கபீர்தாஸர் அருளுகிறார்.

***ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்***
***கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்***
***அவர் கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே***

என திருனாவுக்கரசர் அருளுகிறார். ஆசானை வெறுக்காமல் மனம் வெறுத்து நின்றால் வெல்லாமல் போவதில்லை மெய்ஞானத்தை என்பது ஆண்டவர்கள் திருவாக்கு. **ஓம் நமசிவய** எனும் அட்சரத்தை உச்சி, கண், வாய், மூக்கு, புருவமத்தியென சற்குரு திருவடியில் தானழுத்தி, சச்சிதானந்த உருவை நினைவில் பதித்து ஆசானின் உளம் களிக்க இருப்பதுவே நேரான சரண தீட்சையாகும். இதனை அந்தரத்துந்துமி முழங்கும் ஓரிதழ் தாமரையின் னாத மார்க்கமாக அறிந்துணர்ந்த மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர் என அருளி தோத்திரப்பாடலுடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.


Copyright © AMNA Trust, Chennai

**25-09-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்**

**ஆரணம் கடந்த பூரணக் கடலே ... அன்பர்க ளகங்குளிர் கடலே** என்ற தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரி கல்பனா :*

மனிதன் மட்டுமே நவகிரக கோள்களின் பிடியில் சிக்கி அதன் தோஷ னிவர்த்திக்காக கோவில்களுக்கு செல்கிறான். சாலை ஆண்டவர்கள் அருளிய தென்திசையின் கைலாய அவுஷதத்தை உண்பவர்களுக்கே தோஷம் நீங்கும். அஞ்ஞான அறியாமை என்னும் இருளே தோஷம் என வள்ளலார் அருளியுள்ளார். மெய்யான குரு பார்வை கொண்டு மனிதனை தேவனாக மாற்றும் செயலே தோஷம் நீக்குவது. பிராணன் இருக்கும் கோணத்தில் கும்பத்தை அறிவிக்கும் தலமே கும்பகோணம். பாவம் தீர்க்கும் கோடாயிதமாகிய தேசிகரின் திருவாக்கே மகாமகக் குளத்தீர்த்தம். கோளரிவாளராகிய ஆசான் அவர்களே 12 ராசிகளிலும் உள்ள ராகு கேதுவின் ஆதிக்கத்தை நீக்க வல்லவர். கோள்களின் பிடியிலுள்ள தேகத்தில் மனமாகிய சூரியனைக் கொண்டு 12 மாதம் 12 ராசிகளும், மதியாகிய சந்திரனைக் கொண்டு 27 நட்சத்திரங்களும், அவரவர்களின் ஜாதகமாக உள்ளது.

சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள **ஆக்கி யோனந்த வல்லிரு ளுள்ளிருந் நூக்கி யேவெளி யாக்கிய னாள்த்தலை** என்பதை அறியும் சக்தி பெற்றவன் மனு ஒருவனே. தந்தையின் நினைவிலும் தாயின் கருவிலும் கூடிவந்த நம் வினைத்தொடர், காலத்துக்கு அதிபனாகிய காலன் வசம் உள்ளது. காலம் நம் கைவசமானால் எமன் நம் கைவசம். கிரகங்களின் பிடியிலிருந்து குருபிரான் நம்மை விடுவிக்கும் செயலே அனுக்கிரகம்.

நவக்கிரகங்களை அஸ்தமிக்க செய்து, ஜீவசிம்மாசனத்தில் அமர்கின்ற செயலே நவராத்திரி கொலுவின் தாத்பர்யம். நம்மிடமுள்ள அரக்கி, அரக்கர் குணம் விலக்கி சங்காரம் செய்து, கிரகங்களின் பிடியில் சிக்காமல் காப்பாற்றி, பிரம்மம் என்பதை நமது முகத்தில் படைத்து, கிரகங்களை மறைத்து ஏக ராசியாக மாற்றி, கயிலை நாட்டில் குடியேறும் வரை அருள்வதே ஐங்கரனாகிய ஆசானின் ஐந்தொழிலாக உள்ளது. மெய்க்கல்வி பழகி மகா மகசூக்கான இருதயத்தை பிரகாசமாகக் கண்டு அதன் மீது அன்பு சாய்ந்து மூச்சானது ஒரு நிலையில் நிலைபட நின்று வணங்கும் மெய்வணக்கமே காலன் அணுகாத இடம்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:*

உலக வாழ்வு தாண்டி, ஒரு வாழ்வு உண்டு என்பதை உணர்த்தவே மகாளய அமாவாசை தின பித்ரு பூஜை. மனம் கொண்டு அனுபவிக்கும் சலிக்கின்ற சிற்றின்பத்தை, அறிவு கொண்டு அனுபவிக்கும் சலிக்காத பேரின்பமாக மாற்றும் வல்லபம் கொண்டவரே ஜீவபண்டிதர். 96 தத்துவங்கள் கொண்ட மனித உடலில் உள்ள மும்மலங்களே குடும்பகோரமாக, நித்திய பேரின்பம் அடைய தடையாக உள்ளது என வள்ளலார் கூறியுள்ளார். சும்மா இருப்பதுவே சுகம். சும்மா என்பது சர்வமும் ஒடுங்கும் சுழிமுனையாக உள்ளது.

அமானிதத்தின் நிலைகளாக, *கலை* ஜீவகலையாகவும், *காலம்* முக்காலங்களாகவும், *நியதி* முச்சுடராகவும், *வித்தை* பிரம்ம வித்தையாகவும், *புருடன்* ஆறுமுகமாகவும், *மாயை* எழுவகை திரைகளாகவும், *ராகம்* வித்தில்லா வித்தாகவும் உள்ளது.

ஈஸ்வர நம்பிக்கை இல்லாததே மனித துன்பத்திற்கு காரணம் என ராமகிருஷ்ண பரமஹம்சர் கூறியுள்ளார். இறைவனின் அருட்கொடையாக இயற்கையும், *நான்* கொண்டு செய்வது செயற்கையாகவும், இருள் னாசமாகுமிடம் னாசி முனையாகவும் உள்ளது.

*ஜீவசகோதரர் சங்கர்:*

நமது வயது எனும் வாழ் நாளாகிய காலத்தை அறிந்து பாதுகாக்கும் செயலே மரணமிலாப் பெருவாழ்வு. அமானிதமெனும் பஞ்ஞாட்சர மந்திரத்தை அறிய



Copyright © AMNA Trust, Chennai

வைத்து சிவராஜ பாட்டையில் நம்மை நடத்தும் குருபிரானின் செழுஞ்ஞீதள மனோ னோக்கிற்கிணங்கி செவ்விய வழி கண்டு ஜென்ம சாபல்யம் பெறுவோம்.

**29-09-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**குருபிரான் அருளமுதம்:**

**அளவிலா வெகு காலம் இப்பூமியில்...** என்ற குரு ஸ்தோத்திரப் பாடலுடன் அவை னிகழ்வுகள் இனிதே மலர்ந்தன. நவராத்திரி பூஜைக்கான சீர்மிகு காலம் இது. மெய்னிலை கண்டாசான் எங்ஙெங்கும் உண்டு என்பதற்கான சாட்சி அல்குனைனிலிருந்து வந்த தனிகை மணிப்பிரான் அவர்களே. கல்வி, செல்வம், வீரம், முப்பால், மும்மூலம், முப்பாழ், முச்சுடர் என்ற அகமிய ரகசியங்களின் மேலான நிலையில் வெற்றி பெற்று வரும் ஒரே திருமேனியரைப் பற்றி பேசுவதே நவராத்திரி. ஒரு மெய்க்குருபிரானின் இரக்கத்தாலும், ஆசீர்பாதத்தாலும் அவரிடம் மெய்க்கல்வியை அறிந்து உணர்ந்தவரால்தான் பூரணத்தை பிறருக்கு வழங்க முடியும். மனிதன் அறிய வேண்டிய ஒரே கடமையாக உள்ள மெய்யைப் பற்றியே சர்வகாலத்திலும் வந்த வேதங்களும் பெரியோர்களும் பேசுகின்றனர்.

**வான்மதிக் கொரல் வாக்கியம் எண் 85:**
சண்டாளன் என்பவனும், யோக்கியன் என்பவனும் இந்த மனித தேகத்திலேயே உள்ளார்கள். குருமார்களின் அடையாளம் அவர்களின் செயலன்றி உருவமல்ல. ஒருவன், நரனா, மனிதனா, தேவனா என்பதற்கான அடையாளம் அவரவர் வாக்கில் உள்ளது.

**அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம்**
**எண்ணிலி கோடி தொகுத்திடுமாயினும்**
**அண்ணல் அறைந்த அறிவறியாவிடில்**
**எண்ணிலி கோடியும் நீர் மேல் எழுத்தே** **( திருமூலர் )**

*ஜீவசகோதரி லாவண்யா :*
**அறிவு அறி பாடம் : மெய்குரு வாலே விளங்குவா யென்றும் ... குரு மனத் திணக்கன் பெரும்பத வீடோன்.**

**மவுத்தாம் தகுத்தின் வகையறி வித்து**
**மகத்துக்க ளிருப்பின் வரிசையும் காட்டி**
**உம்முல் விளங்கு முயர்னிலை காட்டித்**

என ஞானஅகவலில் ஆண்டவர்கள் அருளியுள்ள படி, மெய்குருபிரான் அவர்கள் அறிவித்த பின்னரே நாம் இவ்வுலகிற்கு வந்த காரணம் அறிய முடியும். ஆணான மெய்ஞான குருவைப் பெறாதவன் தன் ஜீவதேகத்தில் குடியேறி வாழ தகுதியற்று மீண்டும் பிறவிச் சூழலில் சிக்கிக் கொள்கிறான். சற்குருபிரானின் செழுஞ்ஞீதள மனோ னோக்கத்திற்கு இணங்காதவர்கள் செவியில் சுவை உணரா மாக்களாகவும், இணங்கியவர்கள் செவியில் சுவை உணர்ந்த மக்களாகவும் உள்ளனர்.

**குருபிரான் அருளமுதம்:**

***உம்முல் என்பது குரானின் பெயராகும்***. அற்புதமான குரான் காட்டும் உயர் நிலை, நம் தலையில் இருப்பதை பெரியோர்கள் அறிவிக்கின்றார்கள். பொங்கல் பண்டிகையின் அகமிய ரகசியம், இடறுரும் இறுதி நாளில் நம் முகத்தில் மகிழ்ச்சி பொங்க வைக்கின்ற செயலாகும். நாகரீகம் என்பது மெய்ஞானத்தில் தான் உள்ளது. ஓசை ஒலியெலாம் ஆனவராக ஒத்தையாய்

*குகாரம் அந்நகாரமாம். ருகாரம் (அதனை விழுங்கும்) தேஜஸெனப்படுகின்றது. அக்ஞானத்தை விழுங்கும் பிரம்மம் குருவே; சம்சயமில்லை.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

என்னாளும் உள்ள இறைவனை, ஆசானின் னாத ஓசையானது சீடனின் செவியில் புகுந்து ஒளியாகி அறிய வைக்கின்றது.

*ஜீவசகோதரி சண்முகப்பிரியா :*

**தேவாரம் திருவேணுபுரம் பாடல் எண் - 08 : மலையான் மக எஞ்சல்வரை யெடுத்தவ்வலி யரக்கன்**. யாவருக்கும் பொதுவான சிவமாகிய அறிவை தனக்கு மட்டும் சொந்தமாக்க விரும்பும் இராவணனின் செயல், அறியாமையை குறிப்பதாகும். சர்வ உலகத்திலும் பலசாலியான எமனை வெல்லும் பலம் கொண்ட பகவானின் செயல் மெய்க்கல்வியாகவும், ஜீவனை பற்றிய அறிவாகவும் உள்ளது. கலையாரோடு என்பது ஆறு ஆதாரமாகவும், சுருதி தொகை என்பது தூல சூக்கும காரண மகாகாரணம் என்ற நான்கு தேக ரகசியத்தை குறிப்பதாகவும் உள்ளது. இதனை ஆண்டவர்கள் **ஒருமொழியி னான்மறையும் அங்கமாறு மேதுலங்ங** என **ஐம்மணிப் பொதிகை** பாடலில் அருளியுள்ளார்கள்.

**குருபிரான் அருளமுதம்: சிவானந்த போதம்: காயமன வாக்கினால் அடைந்த கன்மம்** எனும் பாடல் -
வாடை மனவாக்கினுக் கெட்டாத வல்லபத்தை, மாயுமுன்னே மாய்ந்து கலை பாய்ந்தவர்கள் கண்டபின் பகர்வது உண்மை உண்மையே. உண்மை உணராமனிதர் யான் அமைக்கவில்லையென ஓதிவரும் அவ்வேத பாடமானது வேதாந்த தெளிவிறுத்தி பாகுபாட திரட்டி வைத்தன போல் மதியமுதகலைக்ஞான போதமாகவும், அமுத கலையானது விண்ணாகவும், விண்ணானது சுழிமுனையாகவும், விளங்கும் நிலையை எல்லாம் சுருக்கி கண்ணான நூலாகும் குருமுறாதி என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு** **( திருக்குறள் )**

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க நல்வினை, தீவினை இரண்டும் அகற்ற வேண்டும்.

*ஜீவசகோதரர் சங்கர் :*
காயமாகிய பொய்யைக் கொண்டே நாம் மெய்யை உணர வேண்டியவர்களாக உள்ளோம். நிலைத்துப் பார் நீ என்பது, அசைவற்ற நிலையில், அவரவர் உள்ளத்தினை அதிக தெளிவுபடுத்தி காட்டும் தெய்வக் கண்ணாடியாகிய மெய்க்குருபிரானிடம் நிலைத்து நிற்கின்ற செயலாகும். மாயையின் தாக்கத்தால் பெரியோர்களை சாதாரண மனிதரென எண்ணி நழுகிடாமல் அவர்களின் னாதமாகிய அறிவுக்கு செவி கொடுப்போம்.

**சீடன்:** ஆசானிடம் இணக்கமாக நடக்கும் வழிகளை கேட்க -
**ஆசான்:** பாடல் - **வஞ்ஞனை சூது பொய் கபடம் நீக்கி** வஞ்ஞனையான மனம் மூலம் ஏற்படும் சூது கபடம் நீக்கி, இக உலக இச்சை விட்டு மெய்ஆசான் கருணையினால் பிரம்மவித்தை செயல்பழகி நம்மைத் தாங்கும் திருவடியை துணிவு கொண்டு சேர்ந்திடலாம்.

**சீடன்:** நிரந்தரமாய் இருக்கும் பெரியோரிடம் சர்வத்தையும் விட்டிருந்தால் வயிற்றுப் பசிக்கு என்ன செய்வது என வினவ?
**ஆசான்:** பாடல் - **எத்தனை நாள் வாழ்ந்தாலும் இடறே சொல்வார்** பிறந்ததினி யிறவாது பேசும் பஞ்ஞாட்சரமாக உள்ள பெரியோர்களின் திருவாக்கே என்றும் நிரந்தரமாக இருப்பது. அழியுலக அவா விட்டு முப்பொருளாகிய உடல் உயிர் ஆன்மாவை ஒரு பொருளாக தனித்துப்பார். இதனை ஆண்டவர்கள் **தௌஹீது காமீல்** பாடலில் **சொல் மூன்று அட்சரம் ஒரே அட்சரம்... சொல்லுமீ மென்றதிலே சூட்சம்சு பஹானி** என அருளியுள்ளார்கள்.

துப்புரவாக நம்முள் துலக்கும் ஆசானாக திருவடியாக இருப்பவரே தலைமேல் சுமந்து வரும் பெருமானாக இருக்கிறார்கள். அப்பேர்க்கொத்த பரம்பொருளை அறிய வைக்கும் பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருனாமத்தை வேத சாட்சியாக அறிக்கை செய்வதற்கான அறிவையும் அருகதையும் சக்தியையும் எல்லாம் வல்ல இறைவன்



Copyright © AMNA Trust, Chennai

நம் எல்லோருக்கும் அருள வேண்டும் என்ற பிரார்த்தனையைத் தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

## இசை வகுப்புகள்
## தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்

### 04-09-2022 ~ ஞாயிற்றுக்கிழமை

**ஓங்காரத் தொனியான...** என்ற தோத்திரப் பாடலைத் தொடர்ந்து, தெய்வத் தேடு கூடகத்திலிருந்து **கண்டவ ரில்லை என்று...** என்ற பாடலும் **அண்டர்தம் பதிகை விட்டு ...** என்ற பாடலும் ***நாதநாமக்ரியை, மோகனம், முகாரி*** ஆகிய மூன்று ராகங்களிலும் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்றது.

### 11-09-2022 ~ ஞாயிற்றுக்கிழமை

**பரவிரதாச்சாரி...** என்ற தோத்திரப் பாடலைத் தொடர்ந்து **அண்டர்தம் பதிகை விட்டு ...** பாடல், ***மோகனம்*** மற்றும் ***தோடி*** ராகத்திலும் **கண்டவ ரில்லை என்று...** என்ற பாடல், மோகனம் மற்றும் முகாரி ராகத்திலும் **புலன்வழி பற்றியோடி** என்ற பாடல் ***நாதநாமக்ரியை*** ராக விருத்தத்துடன் பாடுவதற்கான பயிற்சியும் அளிக்கப்பெற்றது.

### 18-09-2022 ~ ஞாயிற்றுக்கிழமை

**ஆறிரு சமயத்திற்கும் ...** என்ற தோத்திரப் பாடல் ***மோகன*** ராகத்திலும், தொடர்ந்து **அந்நேமே சிந்தை பதிந்த** என்ற பாடலை குரு பிரான் அவர்கள் ***மோகன*** ராகத்தில் படித்துக் காட்டிய பின் **கண்டவ ரில்லை என்று...** என்ற பாடலும் **புலன்வழி பற்றியோடி** பாடல் *விருத்த நடையிலும்*, **செத்திடமும் பிறந்திடமும்...** என்ற பாடலும் **சுழியாகிய முனைகண்டபின்** என்ற **திருஞான தமிழிசை** பாடல்களும் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப்பெற்றது.

### 25-09-2022 ~ ஞாயிற்றுக்கிழமை

**என்னமோ வென்று...** என்ற தெய்வத் தேடுகூடகப் பாடல் ***முகாரி*** ராக *விருத்த நடையிலும்*, **மெய்ப்பொருள் அடைக்கலப்பா** மற்றும் **ஆதி பராபர பூரணமே** பாடல்களும் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப்பெற்ற பின், குருபிரானின் வழிகாட்டுதலுடன் பல பாடல்கள் ***முகாரி*** ராகத்தில் விருத்தமாகப் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப்பெற்றது.

*குகாரம் இருளாம். ருகாரம் அதனைக் கெடுப்பதாம். அந்நகாரமாகிய இருளைக் கெடுப்பதாயிருத்தலால் குருவெனப்படுகின்றது.*

***~ குரு கீதை***




Copyright © AMNA Trust, Chennai

# செப்டம்பர் 2022 மாத னிகழ்வுகள்

ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர்களின் அழைப்பை ஏற்று நமது குருபிரான் சாலை ரவி அப்பா அவர்கள் **06-09-2022** தேதியிலிருந்து **09-09-2022** தேதி வரை சிவகாசியில் எழுந்தருளினார்கள்



**07-09-2022:** ஜீவசகோதரர் கிரகதுரையின் இல்லத் திருமண வைபவத்தில் கலந்து கொண்டு மணமக்களை ஆசீர்பதித்தார்கள்





Copyright © AMNA Trust, Chennai

**09-09-2022:** அடக்கம் ஆன ஜீவசகோதரர் சாலை கணேசன் அவர்களின் நாற்பதாம் நாள் ஆன்ம சஞ்ஞார உரிமைக் காட்சியின் நிகழ்வுகளை குருபிரான் நடத்தி வைத்தார்கள்.





Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2022 அக்டோபர் மாத அவை நிகழ்வுகள்



Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் வர்ஷிப்பு

ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே, நவம்பர் மாதம், பதினாறாவது இதழாக உதயமாகும் அக்டோபர் மாத மின்னணு சஞ்ஞிகையானது, பதினைந்து அவை நிகழ்வுகளையும் மூன்று இசை வகுப்பு நிகழ்வுகளையும் கொண்ட இரத்தின சுருக்கமாக, தேவாமிர்த தெளிவாக உங்கள் கைகளில் தவழ்கிறது. பரிசுத்த ஆவி தெய்வத்தின் அருளாசியுடன் உலக மக்களுக்கு பாற்கடலை காய்ச்சி வடித்து தெளித்திட்ட வேதாந்தம் போன்று அவையின் நிகழ்வுகளான சுவிசேஷ நற்செய்திகளை சுருங்கச் சொல்லி நித்தியமாக கொண்டு சேர்க்கும் திருப்பணியை சிரமேற் தாங்கி அரும்பெரும் முயற்சி செய்த மக்களாக விஜயகுமார், கல்பனா விஜயகுமார், ஜீவிதா வடிவேலன், கவிதா வெங்கட், ஹேமா தியாகராஜன், தியாகராஜன், ஜெயக்குமார், கிருஷ்ணமூர்த்தி, குமரேசன், பானுமதி குமரேசன், அருணா சுதர்சன், மணிமொழி மஞ்சுநாதன், கவிதா-திருத்தணி ஆகியோர் உள்ளனர். நிகழ்வுகளின் சிறப்புகளாக விழிப்புணர்வு அவையாக விளங்கும் சத்துவாச்சாரி அவையை முன்னின்று நடத்தும் கௌதம், ஆயுத பூஜை தினத்தை முன்னிட்டு உலகிலுள்ள எவ்வித ஆயுதங்களுக்கும் மேலான, நிகரற்ற, விஞ்ஞானம் கொண்டு விளங்க முடியாத, தவ ஏற்றத்தால் விளைகின்ற னாவாஸ்திரத்தினுள் உள்ள வஜ்ராயுதத்திற்கு ஈடானது எதுவும் இல்லை எனவும், இறைவனின் திருக்கரத்தில் சன்னத முத்திரைகளாக இலங்கும் ஆயுதங்களே மனிதனின் அறியாமையை வெட்டி வீழ்த்தக் கூடிய ஒன்றாக உள்ளது எனப் பகிர்ந்ததும் சிறப்பான ஒன்றாகும்.

06-10-2022 வியாழக்கிழமை நிகழ்வாக, குரு கொண்டலின் திரு அவதார திருநாள் விழா என்பது சீடனின் இதய மாளிகையில் நடப்பதன்றி புற உலகில் நடைபெறும் விழா அல்ல. **துப்புரவாக உன்னுள் துலக்கும் ஆசானை போற்றி** என்ற தெய்வத் திருவாக்கின் படி துப்புரவாக அவரவருள் துலங்கும் நாளே அவதார திருநாள். நாம் அறியாமையில் இருந்து அறிவு நிலைக்கு ஆளாகின்ற அனைத்து நாளுமே அறிவின் திருவுருவாக வரும் அண்ணல்களின் அவதாரத் திரு நாளாக உள்ளது. **இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க** என்பதனை காலக்கணக்கின் ரகசியத்துடன் வைத்து நம் கடமையை நினைவூட்டும் வண்ணம் இறைவனை எப்படி நினைக்க வேண்டும் என மணிவாசகப்பிரான் சிவபுராணத்தில் அருளியதை ஒப்பிட்டு, அருண் கம்பராஜன் கூறிய விதமும், **நான்** என்பதின் சிறப்பை என்னில் நீயும் உன்னில் என் வார்த்தைகளும் நிலைத்திருந்தால் இரட்சிக்கப் பெறுவாய் என்ற சத்திய வேதத்தின் திரு வார்த்தைகளுடன் ஒப்பிட்டு, அவையின் செயலாளர் மணிவண்ணன் கூறிய விதமும், அறிவின் இலட்சணமே அவதார புருஷர்களின் அடையாளம் எனவும், 10 அவதார நிலைகளும் அவரவரிடத்திலும் அகமிய செயல்களாக உள்ளது என சங்கர் கூறிய விதமும் அன்றைய தினத்தின் சிறப்பாகும்.

பதினைந்து அவை நிகழ்வுகளின் ஒட்டுமொத்த ரத்தினச் சுருக்கமானது, ஒவ்வொரு மனுவின் கடமையும் மரணமிலாப் பெருவாழ்வை பெற வேண்டியது ஒன்றே. அதனை மறந்த மனிதனுக்கு கடமையை நினைவூட்டி நிறைவேற்றவே, வேதங்களும் திருக் கோயில்களும் ஆகம விதிகளும் வந்தன. அதனை அகப்புற சான்றுகளுடன் எடுத்துரைக்கும் எல்லாம் ஏல வல்லவர்களும் புல்லும் பூமி உள்ள நாள் வரை இவ்வுலகிற்கு வந்து கொண்டே இருப்பார்கள் என பிரம்மப்பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் ஆசீர்பாத ஒலிவாயுரை அருளியுள்ளார்கள். அவர்களின் செவ்விய வழியை பின்பற்றி எவ்வித குற்றமுமின்றி, மனிதனிடத்தில் உள்ள தன் குற்றத்தை உணர்த்தி அதை மாற்றுவதற்குரிய நிலைப்பாடுகளே பிரதி மாதமும் ஆதி மார்க்க னீதி மொழி எனும் மின்னணு சஞ்ஞிகையாக உதயமாகிறது.



Copyright © AMNA Trust, Chennai

**வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது**
**வேண்டாமை வேண்ட வரும்.**

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க மக்கள் யாவரும் மரணம் இலாப் பெருவாழ்வாகிய பிறவாமை பெற்று வாழ்வாங்கு வாழ்வு வாழ வேண்டும். எக்காலத்திலும் மாறாத நித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சர்வ வேதங்களும் சர்வ மதங்களும் ஜாதி குல கோத்திரங்களும் மூல மந்திரங்களும் வந்தது என்பதனை வாய்ச்சொல்லன்றி செயலாக ஆக்கி வைக்கும் அவையாக திகழ்வதே ஆதி மார்க்க நீதி அவை. எண்ணொணா எல்லா சித்தி முத்திகளும் பெற்று விளங்கும் பரிசுத்த ஆவி தெய்வம் பரம்பொருள் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் திருவருளால் நடக்கும் இந்த அவையானது, அவர்களின் அருள் பாலிப்புடன் மேலும் மேலும் சீர் சிறப்புடன் சிறந்து விளங்க அவர்களின் திருவடி போற்றி வணங்கி வேண்டுகிறேன்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க நீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

*உலகத்தில் கல்யாணம் இல்லாமலிருந்நால்தான் ஞானம் வரும் என்று எண்ணுகிறார்களே! ஏன்? அப்போது, மகாவிஷ்ணு அதாவது சரவக்ஞ கண்ணபிரான் அவர்கள் திருமணக் கோலமாகத்தானே இருந்நார்கள். அர்ஜுனனுக்கு உபதேசம் வழங்நினார்கள். ஞானத்தை அடைவதற்குக் கல்யாணம் கூடாதென்றால் ஞான தாதாவான கண்ணபிரானவர்களை இவர்கள் இகழ்கிறார்களா? அறியாமையினால் அப்படி எண்ணுகிறார்கள். இகபோக சம்பத்துடனே கூடிய மெய்விளைவு சிவபோகச் செல்வக் குபேரர்கள் இருக்கக் கூடாதா? னிஜமான ஞானம் என்றால் அதை எது வந்நு தடுக்கும்? எமனும் கண்டு னடுங்நுகிற மெய்ஞ்ஞானத்தின் முன்னிலையில் எது வந்நு குறுக்கிடும்? னிஜமான ஞானமென்றால் அப்படித்தானிருக்கும்! மனைவி, மக்கள், தேசாதிபத்தியம், புகழ், ஊண், உறக்கம் முதலிய யாவற்றையும் துறந்நாலும் ஒரு மெய்க் குருபிரான் இல்லை என்றால் இந்ந மெய்ஞ்ஞானம் கிட்டாது. ஒரு பத்தினித்தனத்துச் செயலுடைய தேவ குருபிரானவர்கள் வாய்த்தால், தேசாதிபத்தியம், மனைவி மக்கள், சம்பத்து, உலகப் புகழ்ச்சி எது இருந்நாலும் இந்ந மெய்ஞ்ஞானத்தை வந்நு தடுக்காது.*

***~ சாலை ஆண்டவர்கள்***



Copyright © AMNA Trust, Chennai

**02-10-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா (திருத்தணி)**

**ஆயுத பூஜை சிறப்புகள்**

*ஜீவசகோதரர் கௌதம்:* நிராயுத பாணியாக வரும் அவதார மூர்த்திகள், மனிதர்களின் அறியாமையை அகற்றி அறிவுடன் வாழ வைப்பதற்காக தங்களின் தவ ஏற்றத்தால், இறைவனிடம் பெற்று வரும் முத்திரை சன்னதங்களே ஆயுதங்கள். அவரவரிடத்திலும் அறிவு எனும் சமயோசிதமே ஆயுதமாக விளங்குகிறது. மனிதனின் அகஉலக ஆயுதங்களாக நினைவு, எண்ணம், நான், மனம், கவனம் ஆகியவையும் புறஉலக ஆயுதங்களாக ஐம்புலன்களும் உள்ளன.

பொது நடத்தரசாக சர்வ உயிர்களிடத்திலும் விளங்கும் ஆன்மா எனும் இறை பொருளை, தன் ஜீவனை அறியும் தன்மை பெற்ற ஜீவாத்மாவாகிய மனிதன் ஒருவனே அறிய முடியும். ஜீவாத்மாவானது பரமாத்மாவை அறிந்திட மெய்ஆசானிடத்தில் உள்ள ஆவிடை எனும் தேவயோனியில் பிறக்க வேண்டும். ஆசானின் திருநாவின் மூலமாக, சீடனின் செவியினுள் நடக்கும் சிவபோகத்தால் அறிவுத் தெளிவான ஞானக்குழந்தை பிறக்கும். மனமாக இருந்த ஒன்று அறிவெனும் ஜீவ குழந்தையாகிய முச்சுடர் வனப்பேறி யவ்வனம் அடைகிறது

ஆசானிடத்திருக்கும் கோடாயிதமே நரனை மனுவாக்கிப் பின் மறைபடாத் தேவராக்கும் வல்லபம் பெற்றது. சர்வ சன்னதாலங்ஙிர்தரான மெய்வழிச் சாலை ஆண்டவர்களே, யாவரும் பெற்றறியாத கிள்னாமம் எனும் சன்னதத்தை தங்கள் திருக்கரத்தில் தாங்ஙி வந்தார்கள்.காருண்ய தலமாக விளங்கும் தோற்றமில்லாமை எனும் குடையிருட் கோளமே ஆசான் இருக்கும் தலம். முத்தாபமாகிய ஜெக மிருக அபாயம், ரோக தரித்திரியம், இடரிடும் கடை நாள் இவை மூன்றும் குருகுல வாசத்தால் தீர்கிறது. பண்படாத நிலமாகிய சீடனின் மனதைப் பண்படுத்தி வித்தில்லா வித்தை விதைக்க வரும் சொல் ஏர் உழவரே மெய்ஆசான்.

தன்னை அறிந்து வணங்கும் மெய்வணக்கத்தின் செயலை, தம்மை நாடி வரும் மக்கள் யாவர்க்கும் அழியாத அறிவெனும் ஆயுதம் கொண்டு நின்றோர்கள் நிலையறிந்து நமது குருபிரான் ஆதி மார்க்க னீதி அவையின் மூலமாக வாரி வழங்குகிறார்கள். வீரப்பிரம்மம் அவர்களின் தீர்க்கதரிசனங்களைத் தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

**06-10-2022 ~ வியாழக்கிழமை ~ திருஅவதாரத் திருநாள் சிறப்பு சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**குருகொண்டல் அவர்களின் அவதாரத் திருநாள்**
**இடம்:** வி.என்.எஸ்.அரங்கம், அண்ணா நகர், சென்னை.

**அங்ஙம திடத்தி லைம்புலக் கதவை**
**யடைக்கும்பே ரறிவெனக் கருளி** எனும் *குரு மணிமாலை* தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் உதயமாயிற்று.

**குருபிரான் அருளமுதம்:**
அங்கம் எது எனத் தெரிந்து ஐம்புலக் கதவை அடைப்பதை அறிய வேண்டும். **னேயமுள ஐம்புலனாற் சூழ்ந்த துன்பம் னீக்குதற்கு முறையிதுதா னிலைத்துப் பார்னீ.** கன்மமாகிய வினை தீர ஐம்புலன் அடங்க வேண்டும். மெய்ஞானம் என்பது வாழ்ந்து பார்க்க வேண்டிய


Copyright © AMNA Trust, Chennai

வாழ்க்கையே அன்றி வேதத்தைக் கேட்டு, படித்து, உருப்போடுவதல்ல. எதார்த்தமாக மெய்ஞானத்தை தேடுகின்ற மக்களன்றி மற்றவர்களின் நிலை, இரும்பு அடிக்கும் இடத்தில்
ஈ-க்கு என்ன வேலை என்பது போல் நாட்டமின்றி இருக்கும்.

*ஜீவசகோதரர் அருண்:* **இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க** என்ற காலக்கணக்கின் அவசியத்தையும், பிறவாமை பெறும் கடமையையும், ஒரு மெய்குரு பிரானைத் தேடி அடைந்து அவர் அருளால்தான் மனுவானவன் பெற முடியும். மெய்ஞானத்தில்தான் விஞ்ஞானமேயன்றி, விஞ்ஞானத்தில் மெய்ஞானமில்லை. **னடந்நறியாப் பெருங்னாட்டில் னல்வழியீ தெனவியந்து னயந்து காட்டி** அருளும் சற்குருநாதரின் பாதம் பணிவோம்.

*ஜீவசகோதரர் மணிவண்ணன்:* னித்திய மெய்ப் பொருளாகிய **நான்** என்பதை அறிய வைப்பவர்களே மெய்க் குருபிரான். **என்னில் நீயும் உன்னில் என் வார்த்தைகளும் நிலைத்திருந்தால் இரட்சிக்க பெறுவாய்** எனும் சத்திய வேதத்தின் சுவிசேஷ நற்செய்தி நிஜமாகுமிடமே ஆதி மார்க்க னீதி அவை. நம்மிடம் அறியாத, புரியாத, விளங்காத, கல்லாத, அறியா"மை"யாக இருந்தவற்றை அறிவுடை"மை"யாக ஆக்கி மெய்வழி மார்க்கத்தில் அறமாகிய இல்லறத்தையும், மச்சம் காட்டி அச்சம் தவிர்த்து, நீர் நிறைந்த தடாகமாகிய மார்பில் வாழும் மீனையும், செயல் வடிவில் அனுபவ அறிவாக அறியவைத்து எனையாண்ட என் குருவிற்கு நமஸ்காரம்.

*ஜீவசகோதரர் சங்கர்:* அவதார புருஷர்கள், தான் பெற்ற அறிவின் இலட்சணத்தை நம் தலையில் ஏற்றி நாம் அதை உணரும் போதுதான் அவர்கள் அவதார புருஷர்கள் என்பதையும், எக்காலமும் நிகழும் பத்து அவதாரங்களையும் நம்மால் அறிய முடியும்.

**உறங்குவது போல் சாக்காடு உறங்கி**
**விழிப்பது போல் பிறப்பு** **(திருக்குறள்)**

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க நாம் தினமும் பிறந்து கொண்டே தான் இருக்கிறோம்.

**சேர்க்கவும் மெய்வழி தேசமெல் லாமுமே**
**சீருரை பாஷையெலாம்**
**தீர்க்கதெ ரிசிகள் பூமிபுல் லுள்ளனா**
**ளெல்லாம்வ ருவதுண்டு** **(ஞான முறையீடு)**

அவ்விதமான ஒன்று மலர்வதால் உலகில் உள்ள அத்தனை உயிர்களும் மலர்கின்றன. சியாமளமெனும் சின்மயத்தின் சிறப்பை, சிந்தையில் இருத்திட தயாளகுணம் கொண்ட தன்னிகரற்ற தந்தையாக வந்து, தியானத்தில் தினம் தினம் நம்மை திளைக்க வைத்து, வியாழமெனும் வேழமாம் குருவின் திருவுருவாகி, வியாழனாகிய இன்னாளில் அவதாரத் திருநாள் காணும் அண்ணலின் பொற்பாதம் பணிந்து அடியவர்களாகிய நாங்கள் ஆசீர்பாதம் வேண்டுகிறோம்.

**குருபிரான் அருளமுதம்:**

பிச்சுலகோர் மெச்சுகின்ற பேதையர்கள் மாற வேண்டுமென, ஜீவகாருண்யம், **அருட்பெருஞ்ஜோதி தனிப்பெரும் கருணை** எனும் தாரக மந்திரத்தை உலக மக்களுக்கு வழங்கிய பகுத்தறிவு பகலவன் வள்ளல்பிரான் அவர்கள், **தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே, எனக்கு ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே** என தன்னை அறியும் அவசியத்தை உணர்த்தியுள்ளார்கள். சமரச சுத்த சன்மார்க்கம் ஒன்றே



Copyright © AMNA Trust, Chennai 

தழைத்தோங்கும் என்ற சத்தியவான் வாக்கின்படி இதனை உணரும் நாளில் அவதாரமானது ஒவ்வொருவரிடத்திலும் நிகழ்வதை ஆதி மார்க்க னீதி அவையின் மக்களே அறிவர்.

**வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்களே நீங்கள் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்** என்ற சத்திய வேதத்தின் சுவிசேஷ நற்செய்தியை செயலாக்குவதே பெரியோர்களின் அவதார நோக்கம். மெய்வழி ஆண்டவர்களும் **அருங்கோடை பாலைவனம் கானகத்தி லகப்பட்டு அடிமைபரந் தோடிப்பரி தவிக்கும் போது** என்றும், **களையா றிடுங்களையா** என்றும் அருளியுள்ளார்கள். மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா அவர்களின் ஆசீர்பாதத்தால் நற்செய்திகளான சுவிஷேசத்தை உங்கள் முன்னால் வழங்கும் வாய்ப்பு பெற்றேன் என அருள்செய்து, இன்று பிறந்தநாள் காணும் அருண், மோனிஷா தம்பதியினரின் குழந்தைகள் - *அருண்மணி (எ) சித்தார்த்தன், கவனமணி (எ) நிரஞ்ஞன்* இருவரையும் **தாயளித் திட்ட செல்வம் தந்நைய ரளித்த செல்வம்** என்ற குரு ஸ்தோத்திரம் பாடலுடன் குருபிரானும் அவையிலுள்ள அனைவரும் வாழ்த்த அவை நிகழ்வுகள் இனிதே நிறைவுற்றது.

**08-10-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்**

**குரு கீதை:** ஆனந்ந சொரூபமும், ஆனந்நத்தைச் செய்பவரும், பிரசன்னரும், ஞான சொரூபரும் தனது தன்மையோடு கூடியவரும், யோகீந்நரரும், யாவராலும் துதிக்கப் பெறுபவரும், பவரோக வைத்தியருமாக விளங்கும் ஸ்ரீமானாகிய குருவை னித்தியம் யான் னமஸ்கரிக்கின்றேன். குருவின் ஆசீர்பாதத்துடன் அவை நிகழ்வுகள் உதயமாகின.

*ஜீவசகோதரர் கௌதம்:*

னகல் வடிவாக உள்ள அசலான தத்துவங்கள்: கோவில்களில் பூஜிக்கப் பெறும் கற்சிலைகளும், மரத்தாலான உருவங்களும், னிஜமான இறைவனைக் காண்பதற்காக உருவாக்கப்பெற்ற தத்துவமேயாகும். னிஜமான இறைவனை அவரவருள் காட்டித்தரும் வல்லமை பெற்றவரே மெய்குருபிரான். ஆண்டவர்கள், திருமெய்ஞ்ஞானக் கொரல் வாக்கியத்தில் - *நான் உன்னுள் ஒரு தலைமுறை காலம் குடியேறி இருக்கிறேன், நீ என்னைத் திரும்பிப் பார்க்க மாட்டாயா என மனிதனுள் குடியேறி இருக்கும் ஈசன், வேதத்தில் கேட்பதாகவும், ஆனால் மனிதனோ தான் படைத்த நகல் வடிவையே தெய்வமாக எண்ணி வணங்குவதுடன், தன்னுள் குடியேறியிருக்கும் தான் அறியாத ஈசனையும், நகலை வணங்கச் செய்யும் பாவமே இவனை மீளா னரகில் தள்ளுகிறது. சர்வ படைப்புகளிலும் உன்னத படைப்பான மனிதனைவிட உன்னதமான ஒன்றாகிய அறிவு, மனிதச்சட்டை தாங்கி ஒரு ரூபமாக வருவதே தெய்வமாகிய ஆசான். அவரே சர்வ பாவங்ஙகளையும் போக்கி எமன் எல்லையில் வந்து னின்று னம்மைக் காப்பவர்* என அருளியுள்ளார்கள்.

**சத்தியவேதம்:** என்னைக் கண்டடைகிறவன் ஜீவனைக் கண்டடைந்து, கர்த்தரிடத்தில் தயவையும் பெறுவான். என்னை வெறுத்து விரோதமாகப் பாவம் செய்பவனோ, தன் ஆத்மாவைச் சேதப்படுத்தி மரணத்தையே சார்வான்.

**சைவம்-அசைவம்:** மனமானது சலனப்படாமல், மயங்ஙாமல், அலையாமல் அறிவாக இருப்பதுவே சைவமாகும். அப்படியின்றி அசைந்து கொண்டே இருந்தால் அசைவமாகி

*குகாரம் குணாதீதமாம், ருகாரம் ரூபாதீதமாம். குணரூபங்ங ளில்லாததா யிருத்தலால் குரு வென்று கூறப்படுகிறது.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

எண்ணம் பல கோடியதாய் விரிந்து எமனிடம் சிக்கி விடுவோம். ஆசான் அவர்களின் அருளால் தன்னை அறியும் செயலே சைவம். இதனையே, அகப்பேய் சித்தர் அவர்கள்

**சைவமானதடி அகப்பை**
**தானாய் னின்றதடி**
**சைவம் இல்லையாகில் அகப்பை**
**சலம் வருங் கண்டாயே**

**சைவம் ஆருக்கடி அகப்பை**
**தன்னை யறிந்த வர்க்கே**
**சைவ மானவிடம் அகப்பை**
**சற்குரு பாதமடி.** என அருளியுள்ளார்கள்

**வித்தில்லாவித்து:** வித்து னாயகமாகிய ஆசானின் வித்தில்லா வித்தாகிய னாதமே, தேவ வித்தாகிய னரனின் செவியில் நுழைந்து அவனை மனுவாக்கிப் பின் தேவராக மாற்றுகிறது. **வித்தில்லா வித்து விதைக்க வந்த முத்திவித்தான முதற்கொழுந்தே...** என தனது ஆசானின் மேன்மையையும், அவர் மூலமாக மெய் உணர்வு பெற்று அறிவுப்பிறப்பு பெறுவதையே **ஆனவித்தின் னாதமது உன் உடம்பதாகும்** எனவும் மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**பஞ்ஞாட்சரம்:** பிரகாசப்பொருளாக னம் அகத்தில் காணும் பஞ்ஞாட்சரமே நாம் காணும் மலை, கடல், அருவி மற்ற தோற்றங்களையும் அறிவிக்கும் உலகாக, சகல உயிர் ஜீவனில் னின்று ஆடும் குஞ்ஞிதபாதமாகவும் உள்ளது. தெளிந்த சிந்தையுடனும், நிலைத்த புத்தியுடனும், வாழ்வாங்கு வாழ்வு வாழ மந்திரசயனத் தேரோன் குருபிரானின் பொற்பாத கமலங்களைப் போற்றி வணங்குவோம்.

**09-10-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்**

**னம்பிய தன்னுயிர் தற்கொலை செய்வான் னமசிவ இருப்பறியான்...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

மனிதனின் ஒவ்வொரு சுவாச விரயத்திலும் னிகழ்வதுவே மரணம். பிறவாமையே மரணமிலாப் பெருவாழ்வாகிய சமரச சுத்த சன்மார்க்கம் என வள்ளல்பிரான் அருளியுள்ளார்கள். அழி தேகத்திலுள்ள அழியாத சுத்த, ஞான,பிரணவ தேகங்களை அடைவதே சுத்த சன்மார்க்கம்.

*ஜீவசகோதரர் பழனிவேல்:*

**வினைப்போகமே யொரு தேகங்கண்டாய். (பட்டினத்தார்).** ஐயும், கிலியும், சவ்வும் என்ற மூவினைகளே மும்மூலங்களாக உள்ளது. வினையின் முதல்வனாகிய மனதின் மூலமாக உண்டான விதியே காலமாக உள்ளது. நல்வினை, தீவினை அற்ற னிலையே பிறவாமைக்கான வழி. நான் என்ற உணர்வின் மூலமே மனமும் முக்குணங்களும் உண்டாகிறது. அதில் ரஜோ, தாமச குணங்கள் கடந்து சாத்வீக னிலையை அடைய வேண்டும்.

*ஜீவசகோதரி பத்மாபதி:*


Copyright © AMNA Trust, Chennai

ஆன்மா பிறப்பு இறப்பற்றது. சைவ அசைவ நிலைகள் மனதைப் பொறுத்தே உள்ளன. மனிதனுள் வாடாத தீபமாக ஒளிரும் சிவமே அசைவுற்று சக்தி எனும் ஜீவ மூச்சாக மாறி அவரவர் வினைக்கேற்ப வீணாகி மரணம் உண்டாகிறது. அன்பே உருவான அடி-முடி-நடு கண்ட ஒரு மெய் ஆசானின் கையகத்தில் ஆகுவது ஒன்றே மரணம் தவிர்க்கும் வழி. மெய் குரு பிரானின் ஒரு சொல்லால் தன்னை அறிந்து சிவமான சாதியே சாதிமான்கள். காலத்தின் ரகசியமே அக புற சமயங்களாக உள்ளது.

*ஜீவசகோதரர் சரவணகுமரன்:*

மறுபிறப்பு, மரணமிலாப் பெருவாழ்வு, உயிர்த்தெழுதல் என்பதின் சான்றாக, தேவன் தம்முடைய குமாரனை விசுவாசிக்கிறவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அன்பு கூர்ந்தார் எனவும் மரித்தேன், ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன் ஆமென். நான் மரணத்திற்கும் பாதாளத்திற்கும் உரிய திறவு கோல்களை உடையவராயிருக்கிறேன் எனவும் சத்திய வேதத்தில் கூறப்பெற்றுள்ளது. இதனை சாலை ஆண்டவர்கள், **வானவர் ஆக மறுபிறப் பெடுப்பாய்** எனவும்,

**தரைதனில் நரராய்த் தோன்றித்**
**தாம்கெதி அடையா தோரை**
**முறைசங்கா ரனுக்கி ரகம்**
**முடித்துமே மனுவாய் மாற்றி**
**விரைபிரம்மம் அவர்மு கத்தில்**
**வைத்துமே படைத்துப் பின்னும்**
**மறைபடாத் தேவ ராக்க**
**வந்நனர் உலகுக் கம்மே** எனவும் அருளியுள்ளார்கள்.

வேத சான்றுகளின் படி மறுபிறப்பு என்பது உடலுள்ள போதே ஆசானின் அருளால் ஆறாவது அறிவு இன்னதென அறிந்து, ஏழாம் பிறப்பாகிய தேவப்பிறப்பை அடைவதாகும்.

**ஏழ்பிறப்பு னித்தியத்தில்**
**இருந்நாள வந்நமன்னோ**

**ஏழாம் பிறப்புடலம்**
**எடுக்காமல் போவாயேல்**

**பேராப்பெரு னட்டமுடன்**
**பொணமென்ற பேரும் வரும்** எனவும் சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.
மாண்டது அறியாமையாகவும், மீண்டது அறிவாகவும் உள்ளது.

*ஜீவசகோதரர் கோபிநாத் :*

இன்ப துன்பங்களுக்கு உடன்பட்ட உடம்பு எனப்படுவது பரு, மன, வளி, அறிவு, ஆனந்தம் எனும் இவைகள் அழிதேகம், சூக்குமம், பிராணன், கவனம், கங்குல் பகலற்ற இடம் எனும் பஞ்ஞகோச உடல்களாக உள்ளது. பேரின்பம் அனுபவிக்க வந்த மானிட வடிவை,

**அறன் பதவிக்காய் ஆனதிவ் வுடம்பு**
**அழியா மோட்சத்திற் காயெடுத் திவ்வுடல்**
**உற்றமெய்க் குருவால் உள்ளுடம் பறிவாய்**
என அறிவு அறி பாடத்தில் சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**உயிருறும் உடலையும் உடலுறும் உயிரையும் அயர்வறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி** என அருட்பாவில் அருளப்பெற்றுள்ளது.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரி செல்லம்மாள்:* **கோடாயிதக் கூர்.வாக்கியம் எண்:195**
மனிதனின் செயல்களுக்கு மனமே காரணம். மனம் அவாவுடன் தாவும் பொழுது சார்ந்ததின் வண்ணமாகி, முக்குணமாகி, வினையாகி பிறப்பு உண்டாகின்றது.

*ஜீவசகோதரர் மாதவன்:* குருவின் சத்தத்திற்கு செவி கொடுப்பவனே பிறவிப் பணியில் இருந்து மீள இயலும்.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:* **உலவுனீ டாழி யுயிர்முத லெவையு ... தன்பயன் முரீதென்பர் விண்ணோர் (முரீதுச் சுருக்கம்)** நம் தலையெழுத்தாகிய விதியை மாற்ற வல்ல முரீதெனும் மதி கொண்டு வாழ்வதே சிறப்பு. இறைவனின் கையேடாகிய விதியை மனிதனைத் தவிர மற்ற ஜீவபேதங்கள் யாவும் மீறாமல் வாழ்கின்றன. மனிதனிடத்தில் வினையால் உண்டாகும் விதியை, ஆசான் அருளால் மதியால் வெல்லும் திறனை தனிச்சீதனமாக இறைவன் அளித்துள்ளான். மனிதன் புறத்தில் இருளை விட்டு வெளிச்சத்தை நாடுவது போல், ஆசான் அருளால் அறியாமையெனும் இருளகற்றி தன்னுள் இருக்கும் அறிவைத் தரிசிக்க வேண்டும்.

**விதிபோலே யாகு மென்று**
**விளம்பிவாய்ப் புலம்பும் பேய்காள்**
**விதிபோலே யாகு மானால்**
**வேதமும் வேலை யேனோ**
**மதியுனக் கெதற்கு ஈந்நான்**
**வயிறுவளர்ப் பதற்கோ கூட்டில்** என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் வளவன்:* நான் உணர்ந்த மெய்வழி : **வேதம் ஓதுதல் மெய்வழி தொடர...** வந்த வேதமாகிய ஆசான் மூலம் ஓதுகின்ற பிரம்மவித்தை செயல் பழகி, மெய்வழியை தொடருவதால் அறிவு ஒளிர்கின்றது. அறியாமையை அறிவிப்பதே ஆறாவது அறிவு. ஐம்புல நுகர்வால் உண்டாகும் நஷ்டத்தை லாபமாக மாற்றுவதே மெய் வணக்கம்.

*ஜீவசகோதரர் சிரஞ்ஜீவி:*

**அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே**
**அன்பெனும் குடில்புகும் அரசே**
**அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே**
**அன்பெனும் கரத்தமர் அமுதே**
**அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே**
**அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே**
**அன்பெனும் அணுவுள் ளமைந்தபேர் ஒளியே**
**அன்புரு வாம்பர சிவமே.** **(வள்ளல்பிரான்)**

ஆசான் னம் மீது வைக்கும் அன்பே னம்மை சிவமாக்கும்.

*ஜீவசகோதரர் சங்கர்:*
*பிச்சை ஆண்டவர் திருப்பா:* வீடாகிய இந்த தேகத்தினுள் அறியாமையாகிய, மாறாத கசப்பு (பித்தம்) என்னும் இருளை ஆசான் அவர்கள் பிய்த்து எடுக்கும் செயலைக் குறிப்பதே பிச்சை எடுப்பது. னரன் எனும் மண்ணிற்குள் புதைந்திருக்கும் மனுவை மீட்பதே மாண்ட மனுவை மீட்டெடுக்கும் செயலாக உள்ளது என்ற பகிர்தலைத் தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai 

**13-10-2022 ~ வியாழக்கிழமை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமா தியாகராஜன்**

**தாகந் நீர்த்தத னிப்பெருங் நடலேயென்**
**மோக மோட்டிமு டித்தத வசியே**
**வேகங் நாட்டிவி ளக்கிய வேதியா**
**னாக வல்லியென் னாயகா போற்றியே**

என்ற குரு ஸ்தோத்திரம் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
சரம் அதுவே சமரசம். அதுவே சக்தி. அத்தகைய சமரச நாயகனே நாகவல்லியின் நாயகன்.

**அதிசயம்:** மனிதனால் உருவாக்கிய படைப்புகளைக் காண்பதும் கேட்பதும் அதிசயமல்ல, மனிதனின் நவதுவாரங்கள் வழியாக உயிராகிய காற்று வெளியாகாமல் இருப்பதே அதிசயம். என்றும் புதியவனாக இருக்கின்ற இறைவனை அறிவதற்காக மனிதனிடத்திலுள்ள தனிச் சீதனமாக விளங்கும் அமானிதம் அதிசயம். அதனை நம்மிடத்தில் அறிய வைக்கும் ஆசான் கிடைப்பது அதிசயம். அவரருளால் நரன் மனிதனாகி மனிதன் தேவனாவது அதிசயம்.

**பிறவிப்பிணி:** மனதைப் பழகும் கல்வியாகிய அனுபவக் கல்வி உணர்வின் மூலம் வருகிறது. இவ்வுலகில் வாழும் சகல உயிர்களிலும் மனிதன் ஒருவனே அறிவை அறியும் ஆற்றல் பெற்றவனாக இருக்கிறான். அதனை அறிந்தவனே இறைவனை அறிந்து பிறவிக்கடல் கடக்க முடியும் என்பதனை வள்ளுவர் பிரான் –

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேராதார்** என அருளியுள்ளார்.

**எமனை அணுகவிடாது காக்கும் சத்திய பரிசுத்த வான்மதிக் கொரல் திருவாக்கியம் – 86 :**
தாயின் வயிற்றில் நம்மை உண்டாக்கிய னீதியான அறிவே மூலமந்திரம், கலிமா, பஞ்ஞாட்சரம், அஷ்டாச்சரம், பிரணவம், காயத்திரி. மனிதனின் இதயலோகத்தில் உள்ள அதனை அறியாதவர்களே கல்லாதவராக எழுவகை தோற்றத்திலும் சேர்க்கப்படாத னரனாக உள்ளனர். அறிவு வடிவாக வரும் ஆசான் அவர்களே, நரனை மனுவெனும் அறிவு வடிவாக மாற்றுகிறார்கள். இதனை சாலை ஆண்டவர்கள், **என் பேரெடுத்து என்வடிவு மாற்றி - உன் பேரு வைத்து உன் வடிவம் தந்ந - உத்தம சுத்த உறுதி னாயகமே** என ஆதிமான்மியத்திலும், **அறிவு ஒளிர ஆசானைத் தேடு ; அறிகின்ற அறிவே அறிவென்று அறிவாய்** என அறிவு அறி பாடத்திலும், அறிவின் வழி என்பதே மெய்வழி எனவும் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரி லாவண்யா :*

**பொய்ப்பொருட் பாடோன் மெய்ப்பொருள் மேவான்**
**பொய்யின்ப உணர்ச்சி மெய்யுணர்வு கொல்லி...** **(அறிவு அறி பாடம்)**

பொய்ப்பொருளின் நுகர்ச்சியால் நம்முள்ளிருக்கும் மெய்ப்பொருளை அறியாதிருப்பதை, **னம்பிய தன்னுயிர் தற்கொலை செய்வான், னமசிவ இருப்பறியான்** என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். அத்தகைய மெய்ப்பொருளான உயிரை, அழியாப்பதி குடியேறிய னாயகமான ஆசானின் வாய்மையால்தான் அறிய முடியும்.
*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:*
திருக்குறள் 1330 குறள்களாகவும், அதிகாரத்திற்கு 10 குறள் என 133 அதிகாரங்களும், அறம், பொருள், இன்பம் என மூன்று தலைப்பு கொண்டு இயற்றப்பட்டுள்ள இன்னூலுக்கு உலகப் பொதுமறை, பொய்யா மொழி, முப்பால் என பல்வேறு பெயர்களும் உண்டு. மெய்யை அறிவதற்கான இன்னூலை ஔவையாரும் **அணுவை துளைத்து ஏழ்கடலைப் புகுத்தி குறுகத் தரித்த குறள்** எனக் கூறியுள்ளார். சாலை ஆண்டவர்கள், இன்னூல் திருவின் னூல் எனவும்


Copyright © AMNA Trust, Chennai

னாதம் எனவும் திருவள்ளுவர் பிரான் தெய்வ மெய்கல்வி கலாசாலையில் தனக்கு முன் தேர்ச்சி பெற்றவர் எனவும் அவர் படைத்த குறளுக்கு முதன்மை தாயாதியர்கள் திருவடி சேரும் தேவர்கள் எனவும் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரி சண்முகப்பிரியா:* **தேவாரம் திருவேணுபுரம் பாடல் எண் 9 :**
**வயமுண்டவ மாலும்மடி காணாதல மாக்கும்...**

எல்லா உயிர்களிடத்திலும் **நான்** இருந்தாலும் மனிதனிடத்தில் அது தனிச் சீதனமாக ஏழு அணுக் கோர்வையாக மேல்நோக்கும் வித்தியாபாதமாகவும், கீழ்நோக்கும் அவித்தியா பாதமாகவும் உள்ளது. அதுவே வழியும், சத்தியமும், ஜீவனாகவும், ஜீவன் அவாவுடன் தாவும்பொழுது மனமாகவும் உள்ளது. **அண்ட பகிரண்டமெலாம் தொண்டரி தயத்தின் மனக்கண்ணாடிக் குள்ளிருந்த காரணத்தை** சிவனாக வரும் குருபெருமானே நம்மிடத்தில் அறிய வைத்து பிறவிச்சுழலில் இருந்து நம்மைக் காக்கிறார்கள்.

**சிவானந்த போதம்:**
**குருபிரான் அருளமுதம்:**

**சீடன்:** பெரியோர்களிடம் தொண்டு பட்டிருந்தால் வயிற்றுப் பசிக்கான வயனம் என்ன? என வினவ
**ஆசான் :** முப்பொருளை ஓர் பொருளாய் தனித்து பார்க்கும் சூட்சாதி சூட்சத்தை ஆசான் சீடருக்கு பழக்கிவைக்க, தன்னுள் பசியை மாற்றும் அமுதமானது தோன்றும் ரகசியத்தை அறிந்து பசிப்பிணியற்ற நிலை அடைவர்.

**சீடன்:** சிவ சொரூபத்தை பெற ஆசையுற்றவர்கள் ஆகாரத்திற்காக பொய், கபடத்துடன் இருப்பது ஏன்? என வினவ
**ஆசான் :** இறைவன் படைப்பில் எல்லா ஜீவ பேதங்களுக்கும் உணவு, இடம், துணை என்ற நெறி தவறாத தேடல் உள்ளது. ஆனால் மனிதன் மட்டும் தான் வந்ததின் கடமையறியாது பேராசையின் காரணமாக அழியும் பொருள்களையே தேடி அலைகிறான். நிஜமான பேராசை என்பது பேரின்பமாகிய சிவ சொரூபத்தை தேடுவதுதான் என குருபிரான் அருளி தோத்திரப் பாடலுடன் அவையை நிறைவு செய்தார்கள்.

**15-10-2022 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

வித்துனாயகமாக வரும் குருபிரானின் திருவடி சிறப்பும், வித்தில்லா வித்தின் இரகசியமும் பொதியப்பெற்ற **வித்ததில் மரமாய் மரமதில் வித்தாய் ...** என்ற குருமணிமாலை பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
**எமபடரடிபடு கோடாயிதக் கூர் - திருவாக்கியம் எண்: 107** எவராலும் ஜெயித்தற்கரிய எமனை தன் திருக்கரத்தில் அடக்கி ஆளும் தவ வல்லமை பொருந்திய ஆசான் அவர்களின் ஆசீர்பாதம் பெற்று, மரணமிலாப் பெருவாழ்வு வாழ வந்தவன் மனிதன் என்பதை உணர்த்தவே வான னாட்டிலிருந்து வேதங்கள் இறக்கப் பெறுகிறது.

*ஜீவசகோதரி லாவண்யா :* **அறிவு அறி பாடம் அமையும் விராட் பதி அறிந்நடைந் நோர்க்கு...**

*குகாரமாகிய முதலெழுத்து மாயாதி குணங்களை விளக்குவதாம். ருகாரமென்னும் இரண்டாவதெழுத்து மாயாமயக்கத்தினைக் கெடுக்கும் பர பிரம்மமாம்.*
***~ குரு கீதை***


Copyright © AMNA Trust, Chennai

பொன்மேனி மின் வீசும் புகழுடம்பை பெற்றவர்களே விராட் பிரம்மம். மாறா வயதுடைய கன்னி விராட் தவத்தில் ஆண்டவர்கள் அருள் பாலித்துக் கொண்டே இருக்கிறார்கள்.

**வேணும் விராட் பிரம்மமங்நே விளங்நும் பஞ்ஞாட்சரமே (ஐம்மணிப்பொதிகை)**

மெய்குரு பிரான் இரக்கத்தால் அறிவுக்கண் திறக்கப் பெற்றவர்களுக்கு, சத்துவங்கள் அனைத்தும் மனிதனின் அகமியத்தில் இருப்பது அகமுகமாக போதிக்கப் பெறுகிறது.

**விண்ணும் மண்ணும் கதிர்மதியும் மின்பனி தாரகையும்... (மெய்வழி னூல்)**

*ஜீவசகோதரர் விஜயகுமார் :* **யோவான் சுவிசேஷம்**

**திருவசனம் : 31** இஸ்ரவேல் என்பவர்கள் யாக்கோபின் பனிரெண்டு மகன்களின் வழித் தோன்றலாகிய பனிரெண்டு குலங்கள் பற்றிக் குறிப்பதாகும். **பிதா - சுதன் - பரிசுத்தஆவி** என்பது திரியேகத்துவம் வாய்ந்த ஒரே தேவனே அன்றி மூவர் அல்ல.

**திருவசனம் : 32** வானம் என்பது ஆகாயத் தத்துவமாகிய சப்தம். புறா என்பது பிச்சு அற்ற - வேகமாக பறக்ககூடிய பறவை. னம்மிடத்தில் வேகமாக செயல்படும் மனதை அறிவாக மாற்ற ஆதியானவர் சுத்த னினைவிலிருந்து உபதேசிக்கும் இரகசியத்தையே இத்திருவசனம் உணர்த்துகிறது.

**திருவசனம் - 33 : 34** புறச் சடங்கான நீர் முழுக்கினால் எவ்வித பலனும் கிட்டாது. மந்திர சயனத் தேரோனின் திருவாக்கு வல்லபத்தின் மூலம் ஞானஸ்தானம் அடைவதே பெரும் பலனாகும்.

**திருவசனம் – 35 : 36** ஆறறிவு உடலெடுத்து ஐயறிவு னுகர்ச்சியில் உழன்று கிடக்கும் னம்மை னல்வழியில் கூட்டிச் செல்லும் னல்ல மேய்ப்பனைத் தொடர்ந்து செல்வதன் மூலமே சத்தியவேதத்தின் மெய்மையை தன்னுள் உணர முடியும்.

**சிவானந்த போதம் : குருபிரான் அருளமுதம்:**

**சீடன் :** பெரியோர்களிடத்தில் பக்தி வைராக்கியத்துடனே னிமிட னேரமாகிலும் பிரியாமல் சரணாகதி அடைபவர்களுக்கு எந்தப் பதவி கிட்டும்? என கேட்க,

**ஆசான் : ஆசான் கிருபை மிகுந்ததனால் அந்தவுடல் போய் மறுவுடலில்...** ஆசான் கிருபையால் சொர்க்கபதியானது திறப்பிக்கப்பெற்று மாங்கல்ய கிரண விரிப்பானது அளிக்கப்பட்டு, உடலுள்ளபோதே புகழுடம்பில் குடியேறி வாழ்பவரே அனந்நர்கள். வேத வேதாந்தங்ஙளில் அனந்நர்கள் என்ற னாமத்தின் திருச்செயல் குறித்து சாலை ஆண்டவர்கள் அருளியவை :

- *அடக்கம் மடக்கிப் பிடிக்கத் தெரிந்தவர்கள் அனந்நர்கள்.*
- *அடியும் முடியும் னடுவும் கண்டு ஒள ஆனவர்கள் அனந்நர்கள்.*
- *அரக்கி அரக்கர் விலக்கித் துலக்கி ஆக்கக் கூடியவர்கள் அனந்நர்கள்.*
- *வேத விற்பனம் கடந்த மந்திரோற்பன்ன சூக்கும ஆரூர்ச்சுலாம் ஏற்று னிற்கும் சௌபாக்ய ஜெயசீலர்களே அனந்நர்கள் - அனந்நகிகள்.*
- *பிண்டம் பூந்து இனி பிறவாதவர்கள் அனந்நர்கள்.*
- *பாம்பு தன் சட்டையை உரிப்பது போல், இக்கடத்தை னீக்கி அக்கடத்துள் ஆகும் திருச்செயலை செய்பவர்கள் அனந்நர்கள்.*



Copyright © AMNA Trust, Chennai

**சீடன் :** பிறவிகள் பல எடுத்து நொந்திருக்கிற நான் இன்னும் ஓர் பிறவி பிறப்பனோ? முழுதும் பிறவாமலிருக்கிற மார்க்கம் உண்டோ? என கேட்க,

**ஆசான் : உடல் பொருள் ஆவியும் சற்குரு நாதருக்கே ...** எண்ணம், சொல், செயல் மூன்றும் மெய்ப்பாதையில் சரியாக இருத்தலே சற்குருநாதரிடம் சரணடைவதற்கான உளவாகும். சடத்திற்கு ஆதாரமாகவும், சர்வ சம்பத்தின் இருப்பிடமாகவும் இலங்கும் ஆகாயமாகிய நினைவு பரிசுத்தத்துடன் இருப்பதே பிறவாமைக்குரிய வழியாகும்.

**சீடன் :** முத்தி அடைவதற்கு நான் இத்தனை பிரயாசைப்பட வேண்டியது என்ன? தங்களிடம் சந்தேகமற்று தெளிவு கொண்டதன் லாபம் என்ன? என கேட்க,

**ஆசான் : சீவனே நீயாகும் அறிவும் நீயாம்...** சிவனாகிய குரு சீவனாகிய சீடனுக்கு உபதேசித்து, தாவுகின்ற செயலுடைய மனதை பிரம்மவித்தையின் மூலம் சிந்தையற்ற தனித்தலைமைப் பதியாக, அறிவு வடிவாக, பரத்திற்குரிய வித்தாக மாற்றி வைக்கிறார்கள் என்ற அருளமுத வர்ஷிப்புகளுடன் ஆசான் அவையை நிறைவு செய்தார்கள்.

**16-10-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்**

**என்ன காலமி றைவன்தி ருவருள்**
**பன்னெ டுங்காலம் பார்த்தனங் நேட்டிலை....** எனும் தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் தாமோதரன்:*
தீபாவளித் திருநாளாக உலக மக்கள் கொண்டாடுவது நரகாசுரவதம் என்பதை குறித்தே. அதிகாலையில் கங்கா ஸ்னானமும், புத்தாடை அணிதலும், இனிப்பு பலகாரங்களுடன், பட்டாசு வெடித்து மகிழ்வதும் அன்றைய தின சிறப்பாகும். மெய் உணர்ந்த மக்களுக்கு தீபாவளி என்பது ஒலி ஒளியாக விளங்கும் இறை தத்துவத்தை உணர்த்தும் நகலாகும். வண்ண மத்தாப்புகளின் ஒலியும் ஒளியும் ஒரு மெய் ஆசானின் வாய்மையெனும் ஓசை கொண்ட நடன ஒலியைக் குறிப்பதாக உள்ளது. அதுவே மக்களின் அறியாமையெனும் இருளகற்றும் ஒளியாக உள்ளது. தீபமாகிய ஜோதி எரிவதற்கான காற்றாகிய வளி இருப்பதை உணர்த்துவதே தீபாவளி திருநாள். அறிவாகிய தீபம் பிரகாசிப்பதற்கு வளியாகிய உயிர்க் காற்று அவசியம். தீர்த்தமாக வரும் ஜீவ கங்கையெனும் தேசிகரின் வாசகத்தில் மூழ்குவதே கங்கா ஸ்னானம். அதுவே பொதிகைத் தென்றலாக, பாவம் நீக்கிப் பிறவிப்பிணி மாற்றும் சஞ்ஞீவியாக உள்ளது.
ரூபமாக உள்ள இவ்வுடலின் உள்ளே, அழியாத ரூபமற்ற பொருளாக இருக்கும் தன்னை அறியும் நாளே தீபாவளித் திருநாள்.

*ஜீவசகோதரர் கணேசன்:*
**கிரகப்பிரவேசம்:** ஒரு குழந்தை, தாயின் கருவறையில் இருக்கும் வரை கிரகங்களின் பிடிப்பு இல்லாமலும், பிறந்து இவ்வுலக வாழ்விற்கு வந்ததும் கிரகங்களின் ஆளுமைக்கு உட்படுகிறது. ஆசானாக வருபவர், அதிலிருந்து நம்மை மீட்டு, கிரகங்களை அஸ்தமிக்கச் செய்யும் செயலே அனுக்கிரகம் ஆகும்.

*ஜீவசகோதரர் சங்கர்:*
கிரகப்பிரவேசம் எனும் புதுமனை புகுதலும், அதில் கோபூஜை செய்வது, கோலமிட்டு விளக்கேற்றி பால் காய்ச்சுவது, இவை யாவும் அசலை உணர்த்தும் அகமிய ரகசியங்களாக ஒரு மெய் ஆசான் மூலம் அறியக்கூடிய ஒன்றாக உள்ளது. அசையக்கூடிய காற்று, நெருப்பு, நீர், மண் ஆகியவை அசைவற்ற ஆகாயத்தின் கீழ் உள்ளது போன்றே நினைவெனும் ஆகாயத்தில்தான் சர்வ சம்பத்துக்களும் அடங்கியுள்ளன. ஒருவன் நரன், மனிதன், தேவர், எனும் அடையாளம் அவரவரின் நினைவெனும்



Copyright © AMNA Trust, Chennai 

ஆகாயத்திலிருந்து வாய்மையாக வெளிப்படுகிறது. தன்னை அறிந்த பெரியோர்களின் குற்றமற்ற சொல்லே வாய்மையாக உள்ளது. அதுவே நம் பாவம் தீர்க்கும் புண்ணிய கங்கை நதியாக, வித்தில்லா வித்தாக விளங்கும் ஆசானின் பாதமாக உள்ளது என்ற பகிர்தலைத் தொடர்ந்து குரு ஸ்தோத்திரத்துடன் அவை இனிதே நிறைவுற்றது.

**16-10-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி**

**குருபெருமான் அருளமுதம்:**

**ஓங்கார தொனியான கபாலத்தே...** என்ற ஞான முறையீடு பாடலுடன் அவை மலர்ந்தது. அறவலம் மற்றும் ஜீவ குகைதோறும் வீற்றிருக்கும் மறுவிலாக்குகன், இதன் ரகசியத்தை அறிய வேண்டியே புறத்தில் கோயில்கள், ஆலய வழிபாடுகள், மத சம்பிரதாய சடங்குகள், யாவும் னகலாக உண்டாக்கப் பெற்றுள்ளன.

*ஜீவசகோதரர் கௌதம் :*

ஓங்காரம் எனும் அகர, உகர, மகர, விந்து, னாதமாகிய ஐந்து நிலைகளை தன் கையகத்தில் ஆக்கிக்கொண்ட பெரியோர்களின் வாய்மையே ஓங்கார தொனியாக, நம்மையும் அதன் வடிவாக மாற்றும் வல்லபம் பெற்றது. ஓங்காரமே ஓம் என்பதாக உணர்வாக, ஊமையாக, ஓரறிவாய் விளங்கும் தெய்வமாக உள்ளது. ஓம் முருகா, ஓம்சக்தி, ஓம் நமோ நாராயணா என்பது உலக வழக்கு. கபாலம் என்பது **க** எனும் ஒன்றாகிய இறைவனை அடைவதற்கான பாலமாக விளங்கும் குருவாகிய கபாலி என்பதாகும். அவர் மூலம் அடையும் இலக்கே கபாலீஸ்வரர். இதனை **சின்னஞ்ஞிறு வாசல்சிதம் பரனடன மெங்கே** என்றும், **சின்னஞ்ஞிறு கால்வழியின் பாத வாழ்வைச் சேருதற்குக் குருவினிடமிதனைக் கேளே** எனவும் சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

உயர்ந்த சாதி என்ற அகங்காரம் கொண்டு அலைபவர்கள் சாங்காலம் என்ற சாகின்ற காலத்தில் தலையோட்டை உடைத்து அதுவே கபாலமோட்சம் எனும் அறியாமையில் வீழ்கின்றனர். புலன்களின் மூலம் செயல்படும் பொய் உணர்வுக்கு காரணமாகிய மனதை ஆசானின் னாதமே அகமுகமாக திருப்பி மெய் உணர்வாக மாற்றுகிறது. **நான்** என்பது அறியாதவர்களிடம் ஆணவ அகங்காரமாகவும், அறிந்த ஞானிகளிடம் ஜீவனாக, அறிவாக, ஆன்மாவாக, கடவுளாகவும் உள்ளது. இதனை,

**சீவனே னீயாகும் அறிவுனீயாம் சிவன்றானே னீயாகும் பரமுனீயாம் (சிவானந்த போதம்).**
***நானே* வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் (சத்தியவேதம்).**
**சாவாது பிறவாது தனிமுதலாயிருந்த *னான்* (பகவத்கீதை ).**
***நான்* ஆன்மா. பசு சிற்றணு வடிவினன். மேற்படி அணு கோடி சூரியப்பிரகாசமுடையது (திருவருட்பா)**

கோடி சூர்யப்பிரகாச ஜீவனை சற்குருபிரான் இரக்கத்தால் தன்னிடத்தில் கண்டவர்களே தேவர்கள் என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். தன் ஜீவனைக் கண்டு வணங்கும் மெய் வணக்கத்தை செயலாகக் கொண்டதுவே ஆதி மார்க்க நீதி அவை என்ற பகிர்தலைத் தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

**20-10-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**குருபிரான் அருளமுதம்:**
**வான்மதி கொரல் வாக்கியம் எண் 87:** பிறந்தது சவம் (பிரசவம் ) என்ற பொல்லாத பெயர் நீக்கி உன் உயிராகிய ஜீவனைக் குறிக்க சூட்டிய தேவ நாமத்தை உன் இதயாசனத்தில் தரிசிக்க வேண்டும். நமக்கு தேவையான


Copyright © AMNA Trust, Chennai

பொருள்களை, தேடித் தந்த நம் உயிராகிய பொருள், நம் தேகத்தில் எங்கே இருக்கிறது என்பதை ஏன் தேடவில்லை என ஆண்டவர்கள் வினவுகிறார்கள். மனிதனின் தேவைகளின் முடிவு, நித்திய மகிழ்ச்சியாக அவரவர் தலையில் உள்ளதை அறிவித்து செயலாக்குவதே *ஆதி மார்க்க னீதி அவை.* எதார்த்த தேடுதல் உள்ள மக்கள் தேடி அடைய வேண்டிய பொருளாகிய ஜீவனை அறிந்தால், சர்வத்தையும் அறிந்தவன் ஆகிறான் என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரி லாவண்யா:* **அறிவு அறி பாடம் - பாதாள உலகும் பகிர்ந்தறி உடலில் ... இது மூன்றுலகும் எண்ணியறி உன்னுள்.** கீழ்நோக்கம் கொண்ட மனமே பாதாள உலகம். நல்வினைகளால் மாசற்ற தேகமாகிய உடல் எடுப்பதே மானிடர் ஆகுதல் எனும் அரிய பிறப்பு. மூவுலகும் நம்முள் இருப்பதை ஆசான் அருளால் அறிவின் துணை கொண்டு அறியலாம்.

**குருபிரான் அருளமுதம்:** அடி முடி நடுவின் ரகசியமே சொர்க்க மத்திய பாதாளம். ஆசான் இரக்கத்தால் நடுவறிந்தால் அடியும் முடியும் அறியலாம்.

*ஜீவசகோதரர் வெங்கடேச முத்து:* **திருக்குறள்**

**அகர முதல் அவ்வெழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு**

அகரமாகிய இறைவனே சர்வத்திற்கும் முதலாக இருக்கிறான். அறிவின் முதல் மெய்ஞானமாகவும், அறியாமையின் முதல் மாறிக்கொண்டே இருக்கும் பொய்ஞானமாகவும் உள்ளது. மாறாத நித்திய முதலே அகர முதல் என்கிறார் திருவள்ளுவர்.

**குருபிரான் அருளமுதம்:** முதல்வனாகிய இறைவன் எனும் ஒர் எண் (1) சேர்ந்தால்தான் பூஜ்ஜியத்திற்கு (0) மதிப்பு. ஜீவனாகிய உயிர்முதல் அறிந்தவனே ஒத்தது அறிந்து உயிர் வாழ்பவன். திரு, திருமதி என்பதே மனுக்களுக்கு முதலாக உள்ளது.

*ஜீவசகோதரி சண்முகப்பிரியா:* **தேவாரம் - திருவேணுபுரம் நட்டபாடை - பாடல் எண் 10** : **மாசேறிய வுடலார மண் குழுக்கள் ளோடு தேரார்**

சமண மதத்தை விட சைவ மதம் புகழ் ஓங்க, மதுரையை ஆண்ட பூம்பாண்டிய மன்னன் உதவிய வரலாறு. மறலி கைக்கு உட்படும் சகல உடலும் மாசேறிய உடலே. பெரியோர்கள் காலத்திற்குப் பின் அவர்களின் செயலுள்ள மதங்கள் புறசடங்குகளாக மாறிவிடுகின்றன. கங்காளன் பூசும் கவசத் திருநீரே பிறவிப்பிணி தீரக்கும் னாத மருந்து.

**குருபிரான் அருளமுதம்:** அக சமயத்தை அறிந்தவர்களுக்கே புற சமயத்தின் உண்மை தெரியும். சர்வ மதங்களின் அடினாதம் மறலி கை தீண்டாமையாக உள்ளது. மனிதன் கண்டு அஞ்சுகின்ற இருளின் அச்சம் நீங்க அக வெளிச்சமாகிய அறிவுத்தெளிவு வேண்டும்.

**சிவானந்த போதம்:**
**உடலென்றால் சடாதார உடலேயாகும் உயிரான பிராணனே ஆவியாகும்**

சடத்திற்கு ஆதாரமாக இருக்கும் நினைவு தேகமே - ஞானதேகம், பிரணவதேகம், அறிவுதேகம், வைரமணித் தேகமாக ஆகாயத்திற்கு இணையான அழிக்க முடியாத வெட்ட வெளியாக உள்ளது. அந்தகரணங்களும் பஞ்சு புலன்களும் அசைவதற்கான வெளியும் அது கடந்த ஞான ஆகாய பெருவெளியையும் மெய் ஆசான் இரக்கத்தால் அறியலாம்.

**சீடன்:** உடல் பொருள் ஆவியை தத்தம் செய்து பெறவேண்டிய மெய்ஞானம் என்றால் என்ன? என வினவ,
**ஆசான்:** உடலின் ஆதாரமான நினைவு, உயிரான பிராணனான ஆவி, சிற்றம்பலப் பொருளான ஜீவன் இவற்றை மெய் ஆசான் அருளால் அறிவதே



Copyright © AMNA Trust, Chennai

உபதேசம். இவ்வுடம்பில் நாமிருக்கும் இடம், அறிவு வடிவான இறைவன் இருக்கும் தலமான கங்குல்பகலற்ற கைலாயம் என்பதனை அங்கத்தில் ஓரிடத்தில் அறிவிப்பவர்களே ***ஜகத குரு*** என மெய்வழி ஆண்டவர்கள் அருள்கிறார்கள். அப்படியான குருபதத்தில் இஷ்டம் வைப்பதே அன்பே சிவம் என அறியலாம்.

**சீடன்:** தீட்சை, னூல், குருசொல், சாதகம், முத்தி வீடு என்பது பற்றி சொல்ல வேண்டும் என கேட்க,
**ஆசான் : தீட்சையது னூலாகும் ...... பாரே** பிராணனே னூல், சரம் என்பதாம். எமன் எல்லையிலும் வெற்றி தரும் பொய் திவலையுமற்ற ஒரு மொழி கீதையாகவுள்ள சற்குரு சொல் உபாயமாகும். பிரம்மவித்தை செயல் பழகும் சாதகமே ஏணியாகும். சபை என்ற வெளியே வீடாக, நடராஜப்பெருமான் நடனமாடும் இடமாக உள்ளது. உயிர் நடனமான மூச்சு ஆடும் நடனத்திற்கு மேலான நடனம் இல்லை. காய மன வாக்கினால் நன்மையே செய்தால் பிறவிச் சூழலில் இருந்து தப்பலாம்.

**சீடன்:** மேலும் சற்குருவின் உளம் மகிழ்ந்து நான் கடைத்தேறுவதற்கு உபதேசம் அருள வேண்டும்.
**ஆசான் : அப்படியே செய்விப்போம் அழகு நெஞ்சே..... வணங்குவாயே**

**மனத்துக்கண் மாசிலான் ஆதல் அனைத்துஅறன்**
**ஆகுல நீர பிற** **(திருக்குறள்)**

சகல பாவங்களையும் தீர்ப்பது தேசிகரின் திருவாசகம். மனதில் மாசற்று இருப்பதுவே சூக்குமமாக, மேலான அறமாக உள்ளது. இதனை வசிஷ்ட மகாமுனிவர் ராமபிரானுக்கு நான், மனம், கவனம் என்பதை உபதேச ரகசியமாக யோக வாசிஷ்டத்தில் அருளியுள்ளார். அழிந்திடா சூக்குமத்தின் ரகசியம் அறிந்து அடங்கிப் பார்ப்பவனுக்கு மரணமிலாப் பெருவாழ்வு நிச்சயம் கைவரவாகும். ஆதி மார்க்க னீதி அவையின் மக்களுக்கு பரிசுத்த ஆவித் தெய்வத்தின் பரிபூரண ஆசீர்பாதத்தால் இவை கைவரவான செயலாக உள்ளது என்ற குரு பிரானின் அருளமுதத்தைத் தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

## 22-10-2022 ~ சனிக்கிழமை ~ தீபாவளி சிறப்பு சபை
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

**மாயக் கூத்தின்வ கையறி யாமல்யான்** எனும் குருஸ்தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை மலரச் செய்தார்கள்.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் 108 :** மனம் உருகி தெய்வத்திடம் வேண்டுவது அவரவர் உள்ளத்துள்தான் எனவும் நிறைவேறுமிடம் அவரவர் தலைக்குள்தான் என்பதை அறியாமல், நகல் வழிபாட்டையே பிரதானமாக எண்ணி **ஊனுக்குத் தேடியுண்டு வுறங்கிச் செத்த வுலுத்தருண்டு** என சிவானந்த போதத்திலும் அருளியுள்ளார்கள்.

**தீபாவளி சிறப்பு -** *ஜீவசகோதரர் வடிவேலன்*:
**நரகாசுரவதம் :** ஆசானின் அருள்ஜோதியால் நரகவுடல் வதம் செய்யப்பட்டு புண்ணிய உடலாக மறுபிறப்பு பெற்ற திருநாள்.



Copyright © AMNA Trust, Chennai

**பட்டாசு :** ஆசானின் னாதஒலி முழங்கி நம் அறியாமையைத் தகர்த்தெறிந்து அறிவின் ஒளியேற்றிப் பிரகாசிக்க வைக்கிறது.

**அதிரசம் :** கரும்புச்சாறு காய்ச்சி பாகுபட திரட்டிச் செய்து எடுத்த வெல்லம் - அதிரசம். அதுவே ஆசானின் னாதம். நம்மிடம் வித்தில்லா வித்தான எழுகணுக் கரும்பான அமானிதத்தை பாகுபட திரட்டி மதியமுத கலைக்ஞான போதமாக அருளுவதே னாதம்.

**புத்தாடை:** பாவ உயிருடலை மாற்றி, சுகவுடலாம் புத்தேளான புகழுடம்புள் புகுத்தாட்டும் செயலே புத்தாடை அணிதலின் நோக்கம்.



***திரு. சாலை ரவி அப்பா அவர்கள்***
***நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை***

**கங்கா ஸ்நானம்:** கங்காளனாகிய சிவபெருமான் குருபெருமானாக திருவுரு தாங்கி வந்து, ஜீவகங்கையை ஆகாய கங்கையாக அருளும் போது, நம் ஆடை நனையாமல் அங்கம் நனைந்து ஸ்னானம் செய்து, யோகம் பழகி அதன் மூலம் பாவம் நீங்கி, பிறவிப்பிணி நீக்கும் செயலே இத்திருநாள்.

**குருபெருமான் அருளமுதம்:** மெய்ஞ்ஞான தாகத்தை தூண்டுவதே தாகமுள்ள ஜலகங்கா நதி. சத்திய வேதத்திலும் **ஜீவத் தண்ணீருள்ள சுத்தமான நதி** எனவும், தாகம் உள்ளவனுக்கு ஜீவத்தண்ணீர் இலவசமாகத் தருவதாகவும் கூறப்பெற்றுள்ளது. தாகந்தீர்த்த தனிப்பெருங் நடலாகிய ஆசானைக் குறித்து *ஞானசூரியன் ஸ்ரீலஸ்ரீ சாலை யுகவான்* அருளிய திருப்பாடல் –

**ஜீவ கங்காவின் வான்பொதிகைத் தென்றல்**
**பாவம் நீக்கிப் பிறவிப்பிணி மாற்றும்**
**பூவனக்குகை தன்னில் நிலை நின்றார்**
**ஜீவனற்றுணை நம்குரு நாயகம்**

ஜீவகங்கையானது வான்பொதிகைத் தென்றலாக, கொண்டல் வாய்மையாக அமுதத்தைப் பொழிந்து தாகம் தீர்த்து பாவத்தைப் போக்குகிறது. உயிர்க்களிப்பின் வாய்மை ஜெயங்நொண்டேறி பிறவிப் பிணியை மாற்றக்கூடிய செயலே அகமிய ரகசியங்களை உள்ளடக்கியுள்ள திருநாள் திருவிழாக்களாக உள்ளது. மூன்றாவது கண்ணாகிய அறிவெனும் பிடரிக் கண் உணர்ந்த மக்களுக்கு, வேர் மேலும் தலைகீழுமான விஸ்வச்சுலா மரத்தின் ரகசியமே தீபாவளித் திருனாள் என்பது தெளிவாகத் தெரியும்.

*ஜீவசகோதரர் குமார் (பவானி - ஈரோடு மாவட்டம்):* தேடுதலுடைய சீடன் குருபெருமான் சொல்வதனை முதலில் நம்பாமலும், பின்னர் செயலுக்குள் ஆகி, அனுபவத்திற்கு வந்து, வள்ளல் பிரான் அருளிய **இயற்கை உண்மைக் கடவுள்** நிலை பற்றி உணரும்போது ஆசானின் வாய்மை அவனிடத்தில் தேனமுதாகத் தித்திக்கிறது.

*ஜீவசகோதரர் சங்கர்:* காற்று இல்லாமல் நெருப்பு இல்லை. அவரவரிடத்திலும் உள்ள ஆன்மஜோதி ஒளிர, புறத்தில் உள்ள விஷக்காற்றை அமுதக் காற்றாக மாற்றி நம்மை ஜீவிக்கச் செய்வது பிராணன். ஜீவனின் நிலை அறிந்த பரமார்த்த சொரூபராகிய குருபிரான், பிரம்மப்பிரகாச திருனாத ஒலியால் நமக்குள் அறியாமை இருளைப்



Copyright © AMNA Trust, Chennai

போக்கி, பிராணன் பிரணவம் எனும் செயல் நிலைகளை உணர்த்தி சித்தத்தில் அறிவுச்சுடர் ஏற்றி ஆன்ம ஜோதியை ஒளிரச் செய்கிறார்கள்.

**சிவானந்த போதம்: குருபிரான் அருளமுதம்:** தீட்சையானது பிராணனின் நிலையான நூலாகவும், நூல்விளக்கம் சற்குருசொல் உபாயமாகவும், பழக்கமான சாதகம் என்ற ஏணியின் மூலம் கவனம் என்ற முதலுடன் அடதிட தடாம்புயமான ஆசானின் திருக்கரம் பற்றிப் பிடித்து ஏறும்போது, மீண்டும் கீழே வழுக்கி பிறவிச் சுழலில் வீழாமல், சபை என்ற வெளியான பதிஞான முத்தி வீட்டில் சேர்க்கிறது. மைப்படியுங் நண்ணிபங்கன் குருவாய் வரும்போது, அவர்கள் துணையுடன் இருதயம் எனும் சிமிழியில் இருக்கும் கருமையான மெய்ம்மையை அறிந்து, வாதை உடலான துக்கஉடலை நீக்கி சுகவுடலான பேரின்ப உடலுக்குள் குடியேறி, செப்படி போல் வந்த ஜெனனம் நீங்கி பிறவாமை பெறலாம்.

*பிறவாமை நிலையுணர்ந்த அறிவுற்ற மாணாக்கன்:* ஆதி, அந்தம், அருட்கடல், அகண்ட முற்றஜோதி, சுகத்தைக் காட்டும் சித்தன், சுயம்பிற் பொங்கும் சுத்தன், பரம்போக சுந்தரமான ரகசியத்தை எனக்கு அளித்த நீதியே என குருவின் திருவடிகளைச் சரணடைந்து போற்றி வணங்குகிறான். ஆசானின் அறிவின் வழியான நீதிவழி பற்றித் தாவித் தொடர்ந்து, நன்னெறியெனும் பூரண நிலையான முழுமை பெற்று நாம் வாழவேண்டும் என பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடி போற்றி வணங்கி தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

**23-10-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. பானுமதி குமரேசன்**

**காவலான புராதன வேதியர்...** என்ற தோத்திரப்பாடலுடன் அவை நிகழ்வுகள் மலர்ந்தது.

*ஜீவசகோதரர் மகேஷ்குமார்:*
**மன்னு யிரனைத்தும் ... முதல்முகம் மதுமதிக் கடலே** **(குரு மணிமாலை)**

**முதல்** என்பது குஞ்ஞிதபாதமாக, ஜீவாதார ஆட்டமாக, ஜீவனாக இருக்கிறது. உயிரின் ரகசியத்தை குருமுகமாக அறிந்து னித்திய தேகத்தை அடைய வேண்டும் என்பதே னம் முதல் கடமையாகும். *காற்றுள்ள போதே தூற்றிக் கொள் (பழமொழி)* . வயலில் கதிரடித்து காற்றின் திசை அறிந்து தூற்றி விதை முதல் எடுப்பது என்பது, னம் உடலில் சுவாசமாகிய காற்று ஓடிக் கொண்டிருக்கும் போதே ஆசான் அவர்களின் வாய்மை கொண்டு நம்மிடத்திலுள்ள அறியாமை எனும் பதர்களைத் தூற்றி அன்னாட்டிற்குரிய வித்துக்களாக ஆக்கும் செயலைக் குறிப்பதாக உள்ளது.

னரனை மனுவாக்கி பின் தேவனாக்கும் திருச்செயலின் மூலம் தன் ஜீவனைச் சந்தித்து வணங்கும் மெய்யான வணக்கத்தை அவரவரிடத்திலும் ஆக்கி வைப்பதுவே ஆதி மார்க்க னீதி அவையின் செயலாகும். னம்முடைய வயது வாழ்னாளை வீணாக்கும் ஐம்புல நுகர்வின் தலைவனாகிய மனம் அலையாமல் பாதுகாப்பதே அறம் என்றும், மூச்சுலயமாகிய மனோலயம் என்றும், சுவாசம் உள்ளடங்குவது புண்ணியம் என்றும், அடங்காவிடில் பாவம் எனவும் வேதம் கூறுவதை னிரூபித்து, பிறவாமை எனும் முத்திச்செயலில் ஆக்கி வைக்கும் நிஜமான குருபிரானைப் பெற்றவர்களே குருகுலத்தோர்.

**குருபெருமான் அருளமுதம்:**

இறைவனின் படைப்பில் மேலான மனிதனின் உப்பு பாண்ட உடலில் ஒன்பது துளைகள் இருந்தும் அதன் வழியாக உயிர்க்காற்று வெளியேறாமல் உடலுக்குள் உலவுவதே மகா அதிசயம். அவரவரிடத்தில் தன் னாமமாக அமர்ந்து எல்லா இன்பங்களையும் அனுபவிப்பது எதுவோ அதுவே பேரதிசயம். **பண்ணாகி யருங்நுமுதம்..... சலிக்காத இன்ப னாடு** **(மெய்வழி னூல்)** சலிப்பை தரக்கூடிய



Copyright © AMNA Trust, Chennai

அனித்தியங்களை விட்டு, சலிப்பின்றி சதா னித்திய களிப்பில் இருக்கும் பெரியோர்களின் வாய்மை துலக்கத்தில் ஆவதே ஊக்கமாகிய தூக்கமாக, தூங்காமல் தூங்கி சுகம் பெறும் பேரின்பமாக உள்ளது.

*ஜீவசகோதரி புன்னகை:*

**அவ்வலில் தையி பான.......மதிக் கடலே** **(குரு மணிமாலை)**

அவ்வு = அ+உ எனும் சிவசக்தி பாகமே அர்த்தனாரீஸ்வரனாக, னான் எனும் மெய்ப்பொருளாக ஞான ஆகாயப் பெருவெளியில் இருக்கும் கூரிய இருள் வஸ்துவாக, இறைசூல், திரிசூலி, சத்தினி, ஹக்கீகத் முகம்மது, அருட்பெருஞ்ஜோதி, பேரொளிப்பிழம்பு, நூறொளி, சத்தினி ஹபீபு, ஹயாத்துல் கைபு, ஆத்ம மர்ம ஜலக்கடல், புனற்றுறைக் கோயில், இதய தடாகம் என பல்வேறு னாமங்களுடன் இலங்குகிறது. ஏகனாயகனாகிய இறைவன் சராசரப் பொருளாக விளங்குவதை ஆண்டவர்கள் ஆதிமான்மியத்தில் அருளியுள்ளார்கள். கடவுள் நிலை அறிந்து அம்மயம் ஆகும் செயலே ஞானசம்பந்தம். நிரந்தரமற்ற இவ்வுலகில் இருக்கும் போதே வினையறுக்கும் செயல் செய்து நிரந்தர உலகில் குடியேறி வாழ வழி காட்டும் குருபரனே வழித்துணை.

*ஜீவசகோதரர் சாலை கவனமணி:*

**தாகமும் தனியான்.... காவற் பாடது தேடுகின்றேன்** **(ஞான முறையீடு)**

மனிதனிடத்தில் அழியாத அவாவே தாகமாக இருக்கின்றது. தாவுகின்ற செயலுடைய மனமானது தன்னிறைவாகிய மெய்ஞானத்தை பெறாதவரை அவாவுடன் அலைந்து கொண்டே இருக்கிறது. ஓர் மெய்குருபிரானின் வாய்மைக்குள்ளாகி தன்னுயிரின் ரகசியம் அறிந்து, எமனிடம் இருந்து தப்புவிக்கும் செயலை பழகித்தேர்ந்து, முக்தி அடையும் நோக்கமே மெய்ஞான தாகம் ஆகும்.

*ஜீவசகோதரி வைஷ்ணவி:*

**அன்பு:** இவ்வுலகில் ஓரறிவு முதல் ஆறறிவு வரை உள்ள இறைவனின் படைப்புகள் அனைத்தும் அன்பினால் கட்டப்பட்டுள்ளது. தன் உணவு, உடை, இருப்பிடம் மற்றும் துணையைக் கடந்து அந்த அன்பு இல்லை. தேவப் பிறப்பு பெற்ற மனிதன் ஒருவனுக்கே மெய்யான அன்பாகிய தன் ஜீவனை அறிந்து சிவமாகும் ஆற்றல் உள்ளது. அன்பின் சிறப்பை புத்தரும், ***அன்பின் வழியது உயிர்னிலை*** என திருவள்ளுவரும், ***எம்மையே நினைந்தெழு, உன் மனத்தினை எம்மிடையே வை, எம்மையே நினைந்திரு நீ, மற்றெமக்கே பூசனை செய், எம்மையே குருவாகக் கொள், எப்போதும் இது செய்யில், நீ எம்மையே வந்தடைவாய், இது மெய்யே இது மெய்யே*** என கிருஷ்ண பரமாத்மாவும் அருளியுள்ளனர். நம்மை சிவமாக்கும் அன்பு கொண்ட குருபிரானின் அன்பிற்கு பாத்திரமாகி அருள் பெறுவோமாக.

*ஸாதகன் மனமகிழ்ச்சியுடன் குருவிற்கு ஆசனம், படுக்கை, வஸ்திரம், வாகனம், பூஷணம் கொடுத்தல் வேண்டும்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

**27-10-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்**

**குருபிரான் அருளமுதம்:**
**வான்மதிக் கொரல் திருவாக்கியம் எண் : 88**
**ஆதி:** ஆகின்ற தீ, சர்வத்தையும் ஆக்குகின்ற தீ, முதல் உற்பன நேரத்தில் உண்டான தீ, சர்வ வேத பீஜங்களாகிய மூலமந்திரப் பொருளாக விளங்கும் தீயே ஆதி. இதனைக் கைக்கொண்டவர்களே மகதி, சிவன், குருவாகிய அவதார மூர்த்திகள்.

**மதம்:** மதங்கொண்டு அடங்காது நிற்கும் புலன்களை அடக்கி ஆளும் மகா தவவல்லபமே மதம். இதனை முகப்பு பாவில் **தன் தன் மதத்தில் தவறா திருத்தி** எனவும், ஆதி என்ற அசல் புள்ளியில் அடங்கி அசையாதிருக்கும் நிலையே சைவம். ஆதலால் சைவமே ஆதி மதம் எனவும் சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரி லாவண்யா:* **மதிகதிர் உடுக்கள் வகையுன்னி லறிதல்.. (அறிவு அறி பாடம்)**
ஆசான் அருளால் மூவுலகும் மதி, கதிர், உடுக்கள் இவற்றை நம் உடலினுள் அறிவதே ஞானத்தின் முதல் நிலையாகும். ஆறு ஆதாரமும் அறுசுவை கொண்டு ஒளிக்கின்ற அகாரத்தையும் ஆசானின் துணையால் அறிந்தவனே தேவன். முச்சுடரை என்னுள் அறிய வைத்த குரு வாழ்க குருவே துணை.

*ஜீவசகோதரர் வெங்கடேச முத்து:*

> **அகரமுதல் அவ்வெழுத்தெல்லாம் ஆதி**
> **பகவன் முதற்றே உலகு** **(திருக்குறள்)**

நாம் ஜீவதேகம் எடுக்கின்ற ரோஸ்மீதாக்குடைய காலத்தில் இறைவனிடம் சீதனமாக வாங்கி வந்த அமானிதமெனும் ஆறாவது அறிவே முதல். முழுமுதலாக, முத்தொழிலின் முதல்வராக, மும்மூல வினையறுக்கும் விநாயகராக, வேத வேதியராக விளங்கும் சற்குருவை தேடி அடைவதே மனிதனின் முதல் கடமையாகும். ஞானத்தை அறிவிக்கும் ஆசானின் நாவும், அதைக் கேட்கின்ற சீடனின் செவியும் முதலாக உள்ளது. செல்வத்துள் தலையாகிய செவிச் செல்வத்தின் மேன்மையை உணர்த்துவதே காதைப்பிடித்து விநாயகரை வழிபடும் முறை. உணர்வே ஆத்மாவிற்கும் உடலுக்கும் முதலாக உள்ளது. மெய்உணர்வைப் பெறவே கோயில்களும், வழிபாட்டு முறைகளும் உள்ளன. எதார்த்த மனமே இறைவனை அடைவதற்கான முதல். அந்தகரணத்தில் ஒன்றான **நான்** முதலாக இருப்பதையே சாலை ஆண்டவர்கள் **எண்டிசைக்கும் னானெனமுன் னிற்கும்பஞ்ஞாட் சரமே** என ஐம்மணிப்பொதிகை பாடலில் அருளியுள்ளார்கள். இவை அனைத்தையும் அறிய வைக்கும் ஆசானின் னாதமே முதலாக உள்ளது.

*ஜீவசகோதரர் தியாகராஜன் :*
அழகுஅணி சித்தர் என்பதே நாளடைவில் மருவி அழுகணி சித்தராயிற்று. ஒரு சொல் கொண்டு இருவேறு பொருளாக இவர் அருளிய பாடல்களின் அழகான அணியின் சிறப்பே இவரது பெயரின் காரணம். நாம் புறத்தில் காணும் அனித்தியம் அழகல்ல. மனிதனின் அகத்தில் விளங்கும் அறிவுப்பொருளே நிஜமான அழகு. **அகத்தின் அழகு முகத்தில் தெரியும்** என்பதற்கேற்ப சித்தர்களின் தோற்றம் மாறினாலும் அவர்களின் அழகணி எனும் அறிவாகிய னாதம் என்றென்றும் ஒன்றாகவே உள்ளது.

**குருபிரான் அருளமுதம் : சிவானந்த போதம் :** னடுவறிந்த சீடனே தன் ஆசானை ஆதியே, அந்தமே அருமையான அருட்கடலே எனப் போற்றுகிறார். அருட்கடலாக அருட்ஜோதியாக ஜீவதண்ணீராக விளங்கும் ஆசானின்



Copyright © AMNA Trust, Chennai

அருளமுதமே மக்களின் பவச்சேற்றை உலர்த்தி பிறவிப்பிணியை தீர்க்கிறது. சத்தாகிய பிராணனையும், சித்தாகிய பிரணவத்தையும் அறிந்தடைவதே ஆனந்தம். தூங்காமல் தூங்கி சுகம் பெறும் அரிதுயிலின் அளவற்ற மேன்மையை அறிந்து அனுபவித்து நமக்கும் அறிவித்து அனுபவிக்க செய்த குரு வா'ஆழ்க!! குருவே துணை!! குருவைப்போற்றி குடியோங்கி வா'ஆழ்கவே!!

**29-10-2022 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**குருபிரான் அருளமுதம்:**

**எத்திய விருணீக் கத்விதக் கடலே**
**எனக்கருந் நுணைத் தனிக் கடலே...**
என்ற குருமணி மாலை பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண் : 109**
கனகமணி காமீலாக வரும் குருபெருமானின் திருவாய் மொழியானது, எழுகோடி சாஸ்திரங்கள் படித்தாலும் அறிய முடியாத உள்ளமை இரகசியங்களை, இன்னது இன்னதென தொட்டுக் காட்டி பிரம்மவித்தையின் மூலம் உணரச்செய்து, மனிதனை அழிவில்லாத முடிவில்லாத பொன்னுலகில் குடியேற்றி சிரஞ்ஞீவியாக வாழ வைக்கிறது.

*ஜீவசகோதரி லாவண்யா :* **அறிவு அறி பாடம்**
**தேவராய்ப் பிறக்கத் தேரைந்து மந்நிரம் ...** மனிதனை நல்வழியில் செலுத்திக் கொண்டிருக்கும் தேர் போன்ற பஞ்ஞாட்சரத்தின் இரகசியமே தேரைந்து மந்திரம். சுத்த சைதன்ய னாதரின் சொல்லொரு பொருளின் மூலம் துப்புரவாக அவரவருள் துலக்கும் ஆசானை அறிந்தவர்களே தேவர்கள் என்பது திருமறைத் தீர்ப்பாகும். னால் வகை யோனி, எழுவகைத் தோற்றத்தின் மெய் னிலைகளை ஆசான் அருள் மூலம் தன்னிடத்தே அறிந்து னன்னேர் வழியில் வாழ்வதே மனித உடல் எடுத்ததின் பிரயோஜனமாகும்.

*ஜீவசகோதரி சண்முகப்பிரியா :* **தேவாரம் - திருவேணுபுரம் பாடல் எண் : 11**
**வேதத் தொலியானும் மிகு வேணுபுரந் தன்னில்...** வேதத்தின் ஒலி னிறைந்ததே வேணுபுரம். **ஓரறிவாய் விளங்கும் தெய்வம் தான் தானாகி, ஓசை ஒளி அனைத்தும் அது பொதிந்ந தாகும்.** ஆசானின் குழலோசையாகிய னாதமே வேணு கானமாகவும், னாதம் விளையும் இடமே திருவேணுபுரமாகவும் னின்றிலங்குகிறது.

*ஜீவசகோதரர் விஜயகுமார் :* **யோவான் சுவிசேஷம்**

**திருவசனம் : 37** தன்னையறிந்த பெரியோர்களின் சிவா அனுபவம் மிகுந்த வார்த்தைகளைக் கேட்டு செயல்படுவதே ஞானமடைவதற்கான எளிய வழியாகும்.

**திருவசனம் : 38** ரபீ என்பதற்கு போதகர் என்று பொருள். போதக குருவின் திருனாத ஒலியே நம்மை மெய்வழி எனும் மேட்டில் ஏற்றி வைக்கிறது.

**படியினி லடியார் போதக குருவாய்**
**அடிபடி தீண்டா தாரண னாவும்** **(ஞான அகவல்)**

**திருவசனம் : 39** பெரியோர்கள் என்றென்றும் அறிவிருக்கும் தலத்திலேயே தங்கியுள்ளார்கள். ஆசான் திருப்பாதம் இலங்கும் பூரண எல்லையை அடைவதே பேரின்பமாகும்.


Copyright © AMNA Trust, Chennai

**எந்நனே ரத்திலும் சந்ரக லானிதி**
**என்முன்னி லேயிருக்க** **(ஞான முறையீடு)**

**திருவசனம் : 40** இயேசுவின் பனிரெண்டு தூதர்களுள் ஒருவரான அந்திரேயா - மீன்பிடி தொழில் செய்பவர். இயேசுபிரானை புதியவர்களுக்கு அறிமுகப்படுத்துபவர். இயேசுபிரான் அப்பங்களை பருகச்செய்தபோது ஒரு சிறுவனிடம் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் உள்ளது என கூறியவரும் இவர் தான், என்பதை இத்திருவசனத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**சிவானந்த போதம் : குருபிரான் அருளமுதம் :**

**தீட்சை முறையாகவே சரணஞ்செய்த செல்வனே...** குருகுல வாசத்தில் பனிரெண்டு வருடம் பழகித் தேர்ந்து பெறவேண்டிய மெய்ஞ்ஞானத்தை, தீட்சைகள் மூலம் தேவரகசியங்களாக கேட்பதன் மூலமே பெற்று விட முடியும் என எண்ணுவது அறியாமையே. மந்த பாக்கியனாக, தூய்மையற்றவனாக இருந்தால், தீட்சையின் உன்னதத்தையும், பெரும் பலனையும் அடையவே முடியாது என்பதை சாலை ஆண்டவர்கள் **குரு முறாதி**யில், **பாத்திரமா யுள்ள வென்றன் கோத்திரர்க்கே பகர்ந்நிடும் சொல் பலித்திடும் கை பலித்திடுமே** என அருளியுள்ளார்கள். ஆசானிடம் சற்பாத்திரனாக இருந்து சாகாக்கல்வியை பழகித் தேர்பவர்களால் மட்டுமே சாத்திரத்தின் பூட்டுகளை திறந்து அழியாச் செல்வத்தை அணிந்து கொள்ள முடியும் என அருளிச் செய்து ஆசான் அவையை னிறைவு செய்தார்கள்.

**30-10-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்**

**மாயக் கூத்தின்வ கையறி யாமல் யான்...** என்ற குரு ஸ்தோத்திரம் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கிரகதுரை :* விஞ்ஞானம் என்பது உடல் சார்ந்ததாகவும், மனிதனின் சௌகரியத்திற்காக படைக்கப்பட்ட னித்தியமற்ற பொருளாகவும், காரியமாகவும், ஆசையாகவும், மனமாகவும், முக்குணங்கள் நிறைந்ததாகவும் உள்ளது. மெய்ஞானம் என்பது இயற்கையாகவும் காரண அறிவாகவும், சைவப்பொருளாகவும், வித்தில்லா வித்தாகவும் உள்ளது. நமது வயது வாழ்நாள் வீணாகாமல் கிரகங்கள் அணுகாது காத்து அன்னம், மயில், வாசி கொண்டு கைலாயம், மெஹராஜ் செல்லும் வழியை காட்டி பழக்கி வைப்பவரே மெய்யான குருபெருமான். சைவம் என்பது அசைவற்ற ஆகாயமாகவும், அதன் உள்ளே நீர், நெருப்பு, காற்று, நிலம் ஆகியவை அசையும் அசைவப் பொருள்களாகவும் உள்ளது. அறிவு மாணிக்கம் கொண்டு ஆறாவது அறிவை அறிந்து, **ஐவழி விளைவின் அப்பாலாகிய செய்வழி காட்டி உய்வழி கூட்டும்** மெய்யான வழியில் பழகி மெய்ஞானம் அறிந்து இக பர வாழ்வில் இன்புற வாழலாம்.

*ஜீவசகோதரர் ராஜேஷ்:* மனதின் அசைவால் உணர்ச்சியும், பயமும் உண்டாகிறது. அசைவற்ற மனம் உணர்வாக மாறி மகிழ்ச்சியில் திளைக்கிறது. இந்த அழி உடல் தாண்டி அகமுகமாக உள்ளிருக்கும் நான் என்னும் பிரணவ பொருளே நம்மை இயக்கும் பிரம்மமாகவும் ஐம்புலன் வழியாக செயல்படும் மனமாகவும் உள்ளது. அது மெய்யறிவாக மாற குருவின் அருள் வேண்டும். இந்த அசலை நினைவூட்டவே கோயில்கள் உள்ளன.

*ஜீவசகோதரர் பழனிக்குமார்:* வேதம் என்பது நித்தியத்தை கற்பிப்பதற்காக இறைவனால் மனிதனுக்கு கொடுக்கப்பெற்ற பொக்கிஷம். மனிதனுக்குள் உள்ள நான்கு தேகங்களை எடுத்துக் கூறுவதே உபநிடதமாக, வேதமாக,



Copyright © AMNA Trust, Chennai

திருமந்திரமாக, திருக்குறளாக உள்ளது. மெய்யும் பொய்யும் பிரித்துக் காட்டும் வேதமே தூலம் ஆகும். ஆசானின் வாய்மை கொண்டு, உயிர் கணக்கு அறிந்து, கவனம் மேம்பட, ஐந்தெழுத்து மந்திரத்தை தேர்ந்து கைலாயம் செல்லலாம். உறைந்த பனியானது அசைவற்ற தன்மை கொண்டது. மனம் அலைவற்று பனிமலையாக வீடான வடமேருவாக ஐந்தெழுத்து மந்திரமாக மாறுவதற்கு குருபிரான் அருள் வேண்டும். குருபிரானின் நாதத்தை உணர்வதற்கு தேவயோனி வேண்டும். மனிதனிடத்திலுள்ள நாலு தேக ரகசியங்களை மெய்வழி ஆண்டவர்களும், வள்ளலாரும், வள்ளுவரும் அருளியுள்ளனர். நமசிவய தத்துவமும், ஆறு ஆதாரங்களும், அடி முடி நடுவெனும் வேத முடியினுள் உள்ளது.

*ஜீவசகோதரர் பிரபு:* நம்முள் விதைக்கப்படும் மெய்யறிவு சுடர் விட்டுப் பிரகாசிக்க வேண்டும். மெய்யறிவு என்பது தன்னை அறிந்து ஆசானின் அன்பைக் கொண்டு நித்திய ஆனந்தத்தை அடைவதற்கே.

**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிரும் தொழும்** **(திருக்குறள்)**

தன்னுயிரை கொல்லாமல் உடலாகிய புலால்தேகம் தானல்ல என்பதை உணர்ந்து வாழும் குருபெருமானின் நாதத்தை கேட்டு நம் மனம் அசையாமல் இருப்பதுவே சைவ நிலை.

*ஜீவசகோதரர் கணேஷ்வரன்:* தந்தையின் நினைவிலும், தாயின் கருவிலும் நம்மை கட்டிய பொருளே நம் முதலாக உள்ளது. குருவின் உத்தரவுக்கு கீழ்படிந்து மெய்ச்செயல் பழகும்போது அவர்கள் அன்பு நம் மீது சாய்ந்து நம்மை சிவமாக்குகின்றது.

*ஜீவசகோதரர் பழனி செல்வராஜ்:* பூரணமான புராதனர் குருபெருமானே. அவர்களின் திருமொழி கொண்டு நம்முள் இருக்கும் இறைவனை அறிவிக்க, நமது வயது வாழ்நாளின் பிரயோஜனத்தை அனுபவித்து அறியலாம்.

*ஜீவசகோதரர் சுந்தரவடிவேல்:* ஆசானின் நாத வல்லபத்தால் ஐம்புலன்களின் அஞ்ஞானக் கிழங்குகளை வேரோடு களைந்து உலக வாழ்வில் மனம் செல்லாமல் பாதுகாக்க வேண்டும்.

*ஜீவசகோதரர் காளிதாஸ்:* அறியாமையை விலக்கி அறிவைப் புகட்டி ஜீவதேகத்தினுள் நாள்தோறும் சென்று வர ஞான சூரியனாகிய குருபெருமான் காட்டும் வழியே சன்மார்க்கம் ஆகும். அதுவே பிரம்ம வித்தையான னிஷ்டையாகவும், அதன் பலன் கைலாய வீடாகவும் உள்ளது.

*ஜீவசகோதரர் சங்கர்:* புல்லாங்குழலின் பத்து துவாரங்களும், மனிதனின் அல்லற்படும் ஒன்பது வாசலையும் அது கடந்து யாரும் அறியா சிறு அறுகுநுனி வாசலைக் குறிப்பதாகவும், காலம் அறியும் செயலாகவும், வேணுபுரத்தின் ரகசியமாகவும் உள்ளது. பிறவாமை பெற்று பேரின்ப பெருவாழ்வில் நம்மைப் புகுத்தாட்டி வைக்கவல்ல ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களாகிய நாம், பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருநாமத்தை அறிக்கை செய்வதற்கான அருகதையுடனும் அறிவுடனும் திகழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.

**31-10-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. மணிமொழி மஞ்சுநாதன்**

**குருபிரான் அருளமுதம் :**

கூரிய குருவருளால் நம் குலம் தழைக்கச் செய்யும் குரு கொண்டலின் வேத னாதத்துடன் அவை உதயமானது. **தலையு டன்உடல் கால்கரம் வேறதாய்...** என்ற தோத்திரப்பாடலை தொடர்ந்து, விந்து னாதமாய் விளங்கும்


Copyright © AMNA Trust, Chennai

னினைவுட் பதியும் னாதமின் உடலே பிள்ளையார் சுழி, எழுதாத எழுத்து. ஒரு தேவகுரு சன்னிதியில் வேறு உடல் எடுக்கும் ஜீவக்குழந்தை வளர்ந்து வனப்பேறும் போதே தெய்வ குபேர பூவன வசந்த காலம் கைவரவாகும். செத்திடம், பிறப்பிடம், இனிச் சாகாதிருக்குமிடம், பஞ்சுபூதங்கள், மூன்றாவது கண், முச்சுடர், ஆறுஆதரம், அகாரம், இவற்றின் ரகசியத்தை பிரம்மவித்தை செயல் மூலம் னாதம் விளைந்த னாதர் சீடன் உள்ளத்தில் பதிப்பிக்கிறார்கள்.

**விசேஷம்:** ஆதிசேஷன் பள்ளி கொண்டுள்ள திருப்பாற்கடலில், னித்தமும் மூழ்கி ஒரு மொழி கீதையை செவிச்செல்வமாகப் பெற்று, பத்து வயதான கன்னி இருக்கும் தலத்தில் குடியேறி வாழ்கின்ற செயலாகும். **வா** ஆழும் கலையாகிய இதனையே நமசிவாய வா ஆழ்க, னாதன் தாள் வா ஆழ்க என சிவபுராணம் அருள்கிறது.

**சஷ்டி:** ஐந்து எழுத்து மந்திரத்தை தேர்ந்த தேவர்கள், னரனெனும் அசுரனை வதம் செய்து மனுவாக்கி, பின் சுரர் எனும் தேவனாக ஆக்கும் செயலே அசுரசம்ஹாரம். வளர்பிறையின் ஆறாவது நாளாக வரும் சஷ்டி தினத்தில் கஜமுகமாகிய மதம், சிங்கமுகமாகிய மோகம் என்ற அசுரர்களை சுப்ரமணியம் எனும் ஷண்முகத்தால் சம்ஹாரம் செய்வதே அசுரசம்ஹார செயலாகும். குருபெருமான் தன் கூரான அருளால் விவேகமெனும் வேல் கொண்டு அறியாமை அகற்றும் செயலை **கோளடா அசுரர்களைக் குலைத்துவிட்டேன், குவலயத்தில் வாசி மயில் ஏறித்தானே, வெட்டவெளிக் குள்ளிருந்து வெளிச்சமாகி, கூராகி அசுரர்களை மடிய வெட்டிக், குறிஎட்டிப் பார்த்தே யான் கூடினேனே** என முருகப்பெருமான் அருளிய யோக ஞானம் 500ல் கூறப் பெற்றுள்ளது.

**தரைதனில் னரராய்த் தோன்றித்**
**தாம்கெதி அடையா தோரை**
**முறைசங்நா ரனுக்கி ரகம்**
**முடித்துமே மனுவாய் மாற்றி ... (தெய்வத் தேடு கூடகம்)**

என மெய்வழி ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். ஆறு எனும் சஷ்டியின் ரகசியம் கந்தத்தினுள் உள்ளது. சிவானந்த போதத்தில் சடத்தின் ஆதாரமே உடலாகவும், பிராணன் ஆவியாகவும், ஜீவன் பொருளாகவும் கூறப்பெற்றுள்ளது.

**கந்தம்:** வாசனையின் ஊடகமாகிய காற்றின் தன்மையை அறியும் வல்லபம் பெற்றவன் மனிதன் ஒருவனே. அவரவருள் விளங்கும் தோற்றமில்லாமை எனும் அரூப வடிவமே ஐம்புல நுகர்வுக்கு காரணம். ஃ எனும் பிரம்மத்தை அறியும் போதே ஜீவனின் மெய்மணத்தை அறியலாம். நம் சுவாசத்தில் உண்டாகும் புல் மற்றும் மாமிச வாடைக்குத் தகுந்தபடியே எமனின் அதிகாரம் நம்மிடம் செல்லாததும், செல்லுவதுமாக உள்ளது. மனம் அடங்கும் செயலே வள்ளுவர் கூறிய **அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆறிருள் உய்த்துவிடும்** என்பதாம். சாவரும் முன் சாகப்பழகும் சாகாக் கல்வியை பழகும் வழியறிவிக்கும் சாயுச்சிய அரசராக வரும் குருபெருமானை சரணடைந்து சலிக்காத இன்ப நாட்டில் குடியேறி வாழலாம் என்ற பகிர்வுகளை தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai 

# இசை வகுப்புகள்

**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**09-10-2022 ~ ஞாயிற்றுக்கிழமை**

தோத்திரப் பாடலைத் தொடர்ந்து, ஆதி மார்க்க னீதி அவையின் **மார்க்க மொழி கீதங்கள்** நூலில் உள்ள **ஆமன் வித்தாதி யோதய...** என்ற தெய்வத் தேடு கூடகப் பாடல் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்றது.

**16-10-2022 ~ ஞாயிற்றுக்கிழமை**

தோத்திரப் பாடலைத் தொடர்ந்து, ஆதி மார்க்க னீதி அவையின் **மார்க்க மொழி கீதங்கள்** நூலில் உள்ள **ஆதி மான்மியம் - ஜீவ சிம்மாசனப் பருவம்** பகுதி ஓதுவதற்கான பயிற்சி அளிக்கப்பெற்றது.

**30-10-2022 ~ ஞாயிற்றுக்கிழமை**

தோத்திரப் பாடலைத் தொடர்ந்து, ஆதி மார்க்க னீதி அவையின் **மார்க்க மொழி கீதங்கள்** நூலில் உள்ள **ஆதி மான்மியம் - ஜீவ சிம்மாசனப் பருவம்** ஓதும் பயிற்சியை தொடர்ந்து, போற்றி அகவல் பாடல் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்றது.

குரு வாழ்க! குருவே துணை!

*குருவின் சன்னிதியில் னாணமின்றியவனாய்த் தீர்க்கத் தண்டமாக னமஸ்கரித்துக் கர்ம (காய)த்தினாலும், மனதினாலும், வாக்கினாலும் குருவை எப்போதும் ஆராதித்தல் வேண்டும்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

# 2022 - அக்டோபர் மாத னிகழ்வுகள்

**குருபிரான் அவர்கள் அக்டோபர் மாதம் கடப்பா அருகில் உள்ள ஶ்ரீ வீரபிரம்மேந்திர ஸ்வாமிகள் சன்னதி விஜயம். உடன் அங்ஙத்தினர்கள் மற்றும் எதார்த்த னன்மனத்தினர்**





Copyright © AMNA Trust, Chennai 

## 06-10-2022: குருகொண்டல் அவர்களின் அவதாரத் திருநாள்












Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2022 நவம்பர் மாத அவை நிகழ்வுகள்


Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் வர்ஷிப்பு



*திரு. சாலை ரவி அப்பா அவர்கள்*
*நிறுவனர்: ஆதி மார்க்க நீதி அவை*

ஆதி மார்க்க நீதி அவையின் அங்கங்களே, எதார்த்த நன்மன சற்சன மக்களே! **ஆதி மார்க்க நீதிமொழி** மின்னணு சஞ்சிகையின் நவம்பர் மாத 17வது இதழாக 13 அவை நிகழ்வுகள் மற்றும் இரண்டு இசை வகுப்பு நிகழ்வுகளையும் தன்னகத்தே கொண்டு, பத்து நபர்களால் சிறப்பாக தொகுக்கப்பெற்று இன்று உங்களிடையே மலர்ந்துள்ளது. இந்த நவம்பர் மாதத்தின் மிக முக்கிய சிறப்பு அம்சமாக மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா அவர்களின் அவதார திருநாள் திருவிழா சிறப்பாக சிவகாசியில் கொண்டாடப் பெற்றது. இந்த நன்னாளில் ஜீவ சகோதரர் சங்கர் தன் பிறந்த தினத்தை முன்னிட்டு அவையினரால் வாழ்த்தப் பெற்றதும், சமீப காலத்தில் வந்த சிவகாசி மக்களும் தான் உணர்ந்த மெய்ஞான நிலைகளை பேசியுள்ள விதமும் இச் சஞ்சிகையின் சிறப்பு அம்சங்களுள் ஒன்றாகும். லாவண்யா அவர்களின் முயற்சியால் ஒவ்வொரு வாரமும் இசை வகுப்பு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

சத்திய வேதத்தில் உள்ள யோவானின் சுவிசேஷங்கள் மிகவும் திறமாக விஜயகுமாரால் கூறப்பெற்று அதை சிரமேற் தாங்கி ஜீவிதா தொகுத்து அளித்துள்ள விஷயங்கள், ஒரு மதத்திற்கோ, ஜாதி, குலம், கோத்திரத்திற்கோ உரிய தனி வேதம் அல்ல. உலக மக்கள் யாவருக்கும் தேவையான அத்தனை நிலைகளும் உள்ளடக்கி பேசப்பெற்றுள்ள சத்திய வேதத்தின் அசல் செயல் இன்னதென மக்களிடத்தில் உணர்த்துவதே ஆதி மார்க்க நீதி அவையின் நோக்கமாகும்.

உலகம் முழுதும் *அகர முதல எழுத்தெல்லாம்* என பிழையாகக் கூறப்பெறும் வள்ளுவரின் அசலான **அகர முதல் அவ்வெழுத்தெல்லாம்** என்ற குறளிலுள்ள அகரமுதல், அவ்வுமுதல், ஆதிமுதல் குருபகவான் சிறப்பு, இவற்றை வெங்கடேச முத்து தொகுத்து அளித்துள்ள விதம் வருங்கால மக்களுக்கான ஒரு புதையல் என்பதில் சந்தேகம் இல்லை.

வசிஷ்ட மகாமுனிவரின் அருளால் இராம பிரான் பெற்ற யோக வாசிஷ்டம், இராமபிரானால் ஆஞ்சநேயருக்கு 1008 உபநிஷத்துக்களாக அருளப்பெற்று அதன் சுருக்கமாக உலகில் உள்ளதே 108 உபநிஷத்துகள். 108 என்பதின் சிறப்பு இன்னதென அறிந்த மெய்யறிந்த மக்கள் அதனை மிக அழகாக தொகுத்து வழங்கியுள்ளனர்.

ஒவ்வொரு ஞாயிறன்றும் சத்துவாச்சாரி அவை நிகழ்வில் மிகவும் சிறப்பாக கௌதம் ஒவ்வொரு தலைப்புகளில் பேசுவதையும், **தன்னிலை கண்டுணரு மெய்ஞான நாள்** என்பதின் விளக்கமாக தன்னிலை கண்டு உணரும் நிலைகள் பற்றிப் பேசியதையும், மக்கள் வியக்கத்தகும் வகையில் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளனர்.

பேசா மடந்தையாக இருந்த தியாகராஜன், உலகினர் அறியாமல் கூறும் அழுகணி சித்தரின் நிஜப் பெயராகிய அழகு அணி சித்தர் பற்றியும், அணியாகிய திருவடியின் சிறப்பை உணர்ந்து அதற்கு அழகு சேர்க்கும் அவரின் செயல் பற்றியும் பேசியுள்ளது மிகவும் சிறப்பு.



Copyright © AMNA Trust, Chennai

1596 கண்ணிகளாக ஓர் இரவில் தண்ணீரில் விளக்கேற்றி எல்லா மெய்ஞான நிலைகளையும் உள்ளடக்கி எழுதப்பெற்ற அருட்பெருஞ்ஜோதி அகவலை மிகவும் சிறப்பாக சிரஞ்ஜீவி பேசியதை மக்கள் தொகுத்து அளித்துள்ள விதமும் அருமை.

இத்தனை சிறப்புகளுடன் வெளியாகியுள்ள இந்த ஆதி மார்க்க னீதி மொழி மின்னணு சஞ்சிகையை மக்கள் யாவரும் படித்து பயன்பெற வேண்டும். எல்லாம் வல்ல பரிசுத்த ஆவித் தெய்வம் பரம் பொருள் பிரம்மப்பிரகாச மெய்வழிச்சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி வணங்கி, உங்கள் எல்லோருக்கும் இந்த ஆசீர்பாத பாத மலை நிலையானது கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்குடன் இந்த சஞ்சிகையானது வெளியிடப் பெறுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

*உலகத்தில் மக்களின் மனோ வாக்குக் காயங்ஙளுக்கு எட்டப்படாத வல்லபம் ஒன்று உண்டெனக் கூறுவது மெய். அதிவல்லப துல்லப பிரம்ம வித்தை என்பதுவே அது. அதன் சிறப்பினை எல்லா வேதங்ஙளும் அவ் வேதங்ஙளின் ரகசியங்ஙளாகிய வேதாந்நங்ஙளும் கூறிக்கொண்டு இருக்கின்றன. மக்கள் எல்லோரும் அதைப் படித்துக் கேட்டுச் சம்மதித்துப் பேசிக்கொண்டு மட்டும் அலைகின்றார்களே யல்லாது அதனைச் சந்நித்து எட்ட முடியவில்லை. அதற்கு ஆன ஆசையுமில்லை. அது எட்ட முடியாததாயிருப்பது ஏனெனில், மனுக்களின் மனதுக்கெல்லாம் எட்ட முடியவே முடியாத ஒன்றை எட்டிக் கைகொண்டிருப்பவரும், வாக்குகளுக் கெல்லாம் எட்டவே முடியாத ஒன்றை எட்டிக் கைகொண்டிருப்பவரும், காயங்ஙளுக் கெல்லாம் எட்ட முடியவே முடியாத ஓர் காயத்தை எட்டிப் பெற்றுக்கொண்டிருப்பவருமாகிய இம் மும்மூர்த்திகரமும் ஒருங்ஙு திரண்டு ஓர் மானிட ரூபகரமாக உள்ள ஒருவரைக் குருவாகப் பெறாத தோஷத்தினால்தான் என்று னிச்சயமாக உணருங்ஙள்.*

***~ சாலை ஆண்டவர்கள்***



Copyright © AMNA Trust, Chennai

**03-11-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**குருபிரான் அருளமுதம்:**
**வான்மதிக் கொரல் திருவாக்கியம் எண் 89 :** சாகாக்கல்வியைக் கற்று மரணமிலாப் பெருவாழ்வு வாழலாம் என்ற திருவாக்கியத்தைத் தொடர்ந்து, தன்னுடைய நாமத்திற்கான பொருளான உயிரை அறிதலே தன்னை அறிதல். பெரியோர்கள் அனைவரும் வேண்டுவது பிறவாமை. மரணமிலாப் பெருவாழ்வை உயிருள்ள போதே பெற்றதை **அருட்பெருஞ்ஜோதி ஆனேன் என்று அறையப்பா முரசு** என வள்ளலார் அருளியுள்ளார். மரணபயம் கடந்து வாழும் வாழ்வை அருளவே பெரியோர்கள் வருகிறார்கள்.

இறைவன் உண்டாக்கிய ஜாதி, மத, வேதங்களில் பேதமில்லை. மாலையில் மறைந்த சூரியனே காலையிலும் வருவது போன்றே, காலங்கள் தோறும் தொடர்ந்து வரும் பெரியோர்களின் அடையாளம் அவர்களின் வாக்குதான் அன்றி உருவமல்ல. இதையே **காதுள்ளவன் கேட்கக் கடவன்** என பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. ஏதும் இலாததிலிருந்து சர்வத்தையும் உண்டாக்குபவன் இறைவன். இறைவன் உண்டாக்கிய ஒன்றிலிருந்து தான் மனிதனால் மற்றொன்றை உருவாக்க முடியும். பரப்பிரம்மமாகிய நினைவில் இருந்து வரும் பிரம்மம் எனும் **நான்,** குணங்களுடன் சேர்ந்து சகுண பிரம்மமாகவும், குணங்கள் அற்ற நிலையில் நிர்க்குண பிரம்மமாகவும் உள்ளது. இன்னிலைகள் யாவும் மீண்டும் தன் மூலவள நாட்டில் ஒடுங்கும் நிலையே விராட் பிரம்மமாக உள்ளது.

அறிவுற்ற மக்கள் சாவருமுன் சாகப்பழகி, அழிந்திடா சூக்குமத்தில் அடங்கி, சாவின் உச்சமாகிய சாயுச்ய நிலையை அடைவதுவே வாழ்வாங்கு வாழ்வாகும். ஜீவகாருண்யம் என்பது பிற உயிர்கள் மேல் அன்பு வைப்பதும், பிற உயிர்களை கொல்லாமையும் அல்ல. தன் உயிரைத் தான் கொல்லாமையே ஜீவகாருண்யம் ஆகும். தியானத்திற்கான பொருள் அறிந்தால் மனம் ஒரு முகமாகும். திருக்குரானில் அலிபு-லாம்-மீம் எனும் வேதமுடியினுள் தன்னை அறியும் ரகசியம் அடங்கியுள்ளது. மனதின் இருப்பிடத்தை ஆசான் மூலம் அறிந்து, அதனை ஒலு எனும் சுத்தம் செய்து, அலையாமல் பாதுகாத்து நூரொளி பெறலாம். விளக்கு என்பது இறைவனாகவும், ஆன்மா அதன் பிரகாசமாகவும், தீபத்தின் வெளிச்சம் ஞானசபையாகவும், அதன் அசைவே நடனமாகவும் உள்ளதாக வள்ளல் பெருமான் அருளியுள்ளார். மேலும் அவர் அருளியுள்ள நான்கு விண்ணப்பங்கள் மூலம் படைப்பின் ரகசியம் நம் தலையில் உள்ளதை அறியலாம். பல கோடி நாமங்கள் கொண்ட இறைவனை, அறியாமையினுள் இருக்கும் அறிவைப் பெற்றே அறிய முடியும்.

*ஜீவசகோதரர் வெங்கடேச முத்து:*

> **அகர முதல் அவ்வெழுத்தெல்லாம் ஆதி**
> **பகவன் முதற்றே உலகு** **(திருக்குறள்)**

குருபெருமானாக வரும் விநாயகப் பெருமானே முதல்களுக்கெல்லாம் முதலாகிய அகர முதல்வன். பிள்ளையார் சுழி முதல் எழுத்தாக சாகாத் தலையாகவும், அகரப்பொருள் பஞ்ஞபூதம் மற்றும் சூரியன்-சந்திரன்-ஆன்மா என்ற எட்டு பொருளாகவும் உள்ளது. **தன் அகரப் பொருள் கைக்கொண்டவரே தேவர்.** அகரம் **நான்** எனும் பொருளாக இருப்பதை பெரியோரின் துணை கொண்டு அறியலாம்.

**குருபிரான் அருளமுதம்:** அகரம் அறியான் ஒன்றும் அறியான். அகரம் அறிந்தோன் அனைத்தும் அறிந்தோன். அசைவற்ற பரமார்த்த உகாரப் பொருளே, அசைவுக்கு வரும்போது ஜீவனாக, **நான்** எனும் அகரப் பொருளாகி, மனதுடன் சேர்ந்து நம்மை இயக்குகிறது. காலசக்கரம் பன்னிரண்டு ராசி நிலைகளில், உயிர் மூச்சின் கணக்காக உள்ளது.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் தியாகராஜன் :*

**மூலப் பதியடியோ மூவிரண்டு வீடதிலே**
**கோலப் பதியடியோ குதர்க்கந் தெருநடுவே ... (அழகு அணி சித்தர்)**

கலித்தாழிசை அறிந்தால் கலியன் என்ற நிலையில் இருந்து தேவன் ஆகலாம். மனுனீசன் அறிவை அறியும்போது, மனு ஈசனாகிறான். ஆதி மூலமே அதிசய சக்தியாக அமானிதமாக உள்ளது. மூவிரண்டு வீடு என்பது அறுபடை வீடாக, அறுபுரி நூலாக, நரகத்தை அறுக்க வல்ல ஆறுமுகமாக உள்ளது என மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் அருளியுள்ளார்கள்.

**குருபிரான் அருளமுதம்:**

அசைவற்ற நிலையிலிருந்து சர்வத்தையும் அசைவுக்கு கொண்டுவரும் ஆதிமூலமே மூலப்பதியாகி ஐந்தொழில் புரிகின்றது. ஆசான் அருளால் மூன்றாவது கண் திறப்பிக்கப் பெறும் போது சண்முகனும் நான்முகனும் சராசரப் பொருளனைத்தும் கொண்ட மகாசக்தியாக மனிதமுகம் இருப்பதை அறியலாம். தொடக்கமும் முடிவும் அற்ற இறைவனைக் குறிக்கும் சொல்லே கோலப்பதி. பத்து காற்றுக்களின் தலைவனான பிராணனைக் கெடுப்பது குதர்க்கமான மனமே. மூன்றாவது கண் திறப்பிக்கப் பெற்று உயிருக்கான ரகசியம் அறிந்து இறப்பொழிக்கும் பெருவாழ்வை இப்பாடலில் அருளியுள்ளார்கள்.

**சிவானந்த போதம்:**

**அறிவுற்ற மாணாக்கன் :** மெய்ஞானம் பெற்று தீட்சைகள் பல பெற்ற பின்னும் பலர் தொடர முடியாமல் விடும் காரணம் என்ன?

**ஆசான்:** இம்மை வாழ்வின் சுகத்தை எதிர்பார்த்து வந்தவர்கள், எதார்த்தமின்மையால் மறுவாழ்வின் மேன்மை அறியாது ஏமாற்றமடைந்து விட்டு விடுகிறார்கள். நாம் செய்த வினையே நமக்கு நல்வினை, தீவினையாக வருகிறது. **எதை விதைக்கிறாயோ அதையே அறுப்பாய்** *(பைபிள்).* இறக்கும் போது இவ்வுடலினுள் உள்ள அழியாத நித்திய உடலில் புகுந்து வாழும் மரணமிலாப் பெருவாழ்வைக் கற்பதே பிரம்மவித்தையாக குண்டலியாக உள்ளது. என்றும் அழியாத வேத வழி வாழ்வே தெளிவான வாழ்வு.

**ஆசான்:** **நிலமதனை சலத்தினால் சுத்தி செய்து .... பெருவிரலை பற்றிக்கொள் பேரின்பத்தே** . இந்திரிய ஒழுக்கம் மூலம் தேகத்தை சுத்திசெய்து நிராமய (நிறங்களற்ற) கணபதியை, ஜோதி என்ற ஆசானின் நாதம் கொண்டு மூன்றாவது கண்ணாகிய இதய லோகம் திறந்த பின் அறியலாம். இடம், வலம், சுழிமுனை, பெருவிரல் பதியின் ரகசியங்களை மெய்ஆசான் துணை கொண்டே அறிய இயலும். மனிதனை பிரகாசிக்க செய்யும் மெய்யான ஒளியாகிய **நான்** என்பதனை பரிசுத்த ஆவி தெய்வத்தின் பொற்பாதம் பணிந்து அறிவோம் என அருளி தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

## 05-11-2022 ~ சனிக்கிழமை சபை
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

**பள்ளியையும் மெய்ப்பால் தந்த வள்ளலை...** என்ற குரு ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**பள்ளியறை :** குருபிரானின் னாதம் மூலம் தூங்காமல் தூங்கி இறைபொருளோடு இரண்டறக் கலந்து சுகம் பெற்று வாழும் இரகசியத்தின் புற அடையாளமே கோவில்களில் இறைவன் உறையும் இடமாகிய பள்ளியறை.



Copyright © AMNA Trust, Chennai

**எமபடரடிபடு கோடாயிதக் கூர் - திருவாக்கியம் எண் : 110** – உடல், பொருள், ஆவி தத்தம் செய்து அடிமையாக இருந்து பெறவேண்டிய ஞானத்தை, எமனை தன் கைப்பாணமாக கொண்ட சாலை ஆண்டவர்கள் தங்கள் இரக்கத்தால் நீதி சட்டத்தை மாற்றி, மக்கள் இல்லறத்தில் இருந்து கொண்டே ஞானம் பெறுவதற்காக அருள் புரிந்துள்ளார்கள்.

*ஜீவசகோதரர் விஜயகுமார் :* **யோவான் சுவிசேஷம் –**

**திருவசனம் : 41** நான் உன் நடுவிலே வாசமாய் இருப்பேன் - நான் என்பது நடுப் பொருளாக, உயிராக சர்வ சம்பத்தையும் அனுபவிக்கும் கர்த்தாவாக நம்மிடத்தில் வாசம் செய்கிறது.

**திருவசனம் : 42** மூலமந்நிரம், பஞ்ஞாட்சரம், அஷ்டாட்சரம், பிரணவம், கலிமா, காயத்ரியின் இரகசியங்கள் பொதிந்திருக்கும் தெய்வ னாமத்தை நேருக்கு நேராக தரிசிக்க வைக்கும் தேவ குருபிரானின் சொல்லே சத்திய வேதம்.

**திருவசனம் : 43 & 44:** வடக்கு பாலஸ்தீனத்தில், இயேசு கடல் மேல் நடந்து அற்புதத்தை நிகழ்த்தினார் என்ற வசனமானது, ஜலம் உறைந்து பனியாகிய கடல் மேல் னடக்க முடிவது போல், ஜல வடிவாகிய மனம், ஆசான் னாதத்துள் உறைந்து அறிவு வடிவாகும் அகமிய இரகசியத்தை உணர்த்துகிறது.

**திருவசனம் : 45** தாவீதின் குமாரன் - னாத்தான்வேல். கடவுளின் நிலையை அறிவிக்கும் கர்த்தராகிய இயேசுவை கண்டதாக பிலிப், னாத்தான்வேலிடம் அறிவித்தான்.

**குருபிரான் அருளமுதம்:**

இயேசுகிறிஸ்து என்பதற்கு லோக ரட்சகன் என்பது பொருளாகும். இயேசுனாதர் பேசிய மொழி - அராமியா (அரபு). புதிய ஏற்பாடு சுரியானி (Syrian) சுழியானி பாஷையிலும், பழைய ஏற்பாடு ஹீப்ரு பாஷையிலும் எழுதப் பெற்றுள்ளது. இறுதி மெசியா வருவார் என்ற தீர்க்க தரிசனமானது, சத்திய வேதத்திலும் திருக்குரானிலும் கூறப்பெற்றுள்ளது.

**சிவானந்த போதம் :**

**ஆசான்: அன்புடனே யுடல் பொருளு மாவி மூன்றும்...** வினைகள் விளைந்து பிறப்பு உண்டாவதற்கு காரணமாகவும், அக - புற உலகிற்கு தொடர்புடைய னெருப்பாறு மயிர்ப் பாலமாகவும் னின்று விளங்குவது உணர்வு. ஆசானிடத்தில் உடல், பொருள், ஆவி தத்தம் செய்து ஓம் எனும் உணர்வாகிய மந்திரத்தை அறிந்து அடைந்தவர்க்கே பிறவாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வு கிட்டுகிறது.

**அறிவுற்ற மாணாக்கன் : அப்படியே பஞ்ஞசுத்தி பூசை செய்தேன்.... பெருவிரலைப் பற்றிக்கொண்டேன்....** பஞ்ஞசுத்தி, பெருவிரல் என்ற பரிபாஷைகள், குருமுகமாக அறியவேண்டிய தேவ இரகசிய செயலாகும்.

**ஆசான்: தத்துவமேயுடல் தானெனுமானது தன்னை யறிந்நிடு னீ ...** தத்துவங்களில் சிறந்த, மனித உடலாகிய தத்துவம் கடந்ந, தயானிதி கடலாக வரும் குருபிரான் தங்களின் பெருங்கருணையால் கற்பகமெனும் பெருனிலை வைப்பில் னம்மை ஏற்றி வைத்து, அறிவுக்கண் கொண்டு பிராணன் னீராகி திரண்டதைக் காணச்செய்து முத்தி எனும் சிவானந்தத்தை அளிக்கிறார்கள்.

**அறிவுற்ற மாணாக்கன் : அப்படியே போதிக்க முத்தி பெற்றேன்... அரியயனுங் ஙாணாத வடிவுங் ஙண்டேன் ...** அரி (மகாவிஷ்ணு) அயன்



Copyright © AMNA Trust, Chennai

(பிரம்மா) இருவரும் அடி முடியை புறத்தில் தேடியதால் கிடைக்கவில்லை. அகமிய நிலையாகிய கற்பக வாசியை ஆசான் அனுக்கிரகத்தால் அறிந்து, ஒன்பது வாசல் கடந்து பத்தாவது வாசலில் நுழைவதே அடி முடி கண்டு ஆனந்தம் பெறும் பரமானந்த வாழ்க்கை.

**ஞானியென்ற பெயர்களையே கண்டுகொள்ள...**

தரும ஞான சித்தராம் சாலை ஆண்டவர்கள் மெய்ன்னிலைப் போதம் எனும் பாடலில் ஞானியை கண்டு கொள்வதற்கான வழிவகைகள் அனைத்தையும் அருளியுள்ளார்கள். வாசனை கேள்வி இருகண் வாயெவைக்கும் வல்லமையளிக்கும் அக்கண் திறக்கப்பெற்று சிரவணமாகிய தலையின் இரகசியம் அறிந்து வணங்கும் மெய்வணக்கமே சச்சிதானந்தத்தில் தழைக்க வைக்கும்.

**வாழ்வு முதல் சம்பத்தை மதித்திடாமல்**
**மலைமேலே யேறின தோர் பறவை யானேன்...**

அசைவற்ற குணக்குன்றாம் பிரம்மத்துள் பொதிந்திருக்கும் அதிசயத்தைக் கண்டவரும், ஏழுலகும் மேலேழும் தன்னுள் அறிந்தவரும், ஏகாந்தத் தீவினில் இறங்கி எக்களிப்புடன் எங்கும் னிறைந்த அறிவாகார சொரூபராக விளங்கும் ஆசானின் சொல்லே னம் சந்தேகங்களை அறவே அகற்றி, பந்த பாசங்களைப் பாழாக்கி, எந்த னாளும் அழியாத ஏகாந்த வீட்டை சொந்தமாக்கும்.

**சந்நேக மாதிகளைச் சாராம லேயகற்றிப்**
**பந்நபா சங்களைப் பாழாக்கும் - இந்நனூல்**
**எந்நனா ளும்மழியா ஏகாந்ந வீடதனைச்**
**சொந்நமாக்கும் மெனவே சொல்.**

அழியாத வீடடைய வைக்கும் வாழ்க்கைப் பாடமாகிய சிவானந்த போதத்தின் நிஜச் செயலை நன்மக்கள் அனைவரும் பெறுவார்கள் என்ற ஆசீர்பாதத்துடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

**06-11-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்**

**எந்நை சுக்கிலாம் பரனாட்டில் வாழும்னாளில்...** என்ற தோத்திரப்பாடலுடன் அவை மலர்ந்தது.


**குருபிரான் அருளிய உபநிஷத்தின் உன்னதங்கள்:** இராமபிரான் ஆஞ்ஞனேயருக்கு அருளிய உபதேச ரகசியமே 1008 உபநிஷத்துக்களாகும். சகல உயிரினங்களும் நால்வகை யோனி ஏழுவகை தோற்றத்தில் இருந்தாலும், மனிதனின் மறுபிறப்புக்கான தேவயோனியே யோனியில் சிறந்தது. மூன்று கோடுகளாக இருக்கும் கங்காளன் பூசும் கவசத் திருநீறு ஸ்ரீமன்

*குகாரம் இருளாம். ருகாரம் அதனைக் கெடுப்பதாம். அந்நகாரமாகிய இருளைக் கெடுப்பதாயிருத்தலால் குருவெனப்படுகின்றது.*
***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

நாரயணனிடம் உள்ளது. தன்னைத்தான் வணங்கும் திருத்தலம் அவரவர் நெஞ்சுகத்தில் இருக்கிறது. அந்தர்யாமியாக இருக்கும் ஆன்மாவின் நிலைகளை தனித்தனியாக பிரித்துப் பார்ப்பதுவே பிரம்மவித்தை.



*திரு. சாலை ரவி அப்பா அவர்கள்*
*நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை*

**காலாக்னி ருத்ரோப நிஷத்:** முப்பட்டை விபூதி என்பதன் பொருள், இடம், அளவு, கோடு, மந்திரம், சக்தி, தெய்வம், கர்த்தா, பயன்யாவும் தத்துவ விளக்கமாக உள்ளது. அக்கினி ஹோத்திர பஸ்மமாகிய பொருளால் ஆன மூன்று கோடுகளில் முதல் கோடு அகாரமாக, ரிக்வேதமாக, ரஜோ குணத்தையும், இரண்டாவது கோடு உகாரமாக, யஜுர் வேதமாக, ஸத்வ குணத்தையும், மூன்றாவது கோடு மகாரமாக, சாம வேதமாக, தமோ குணத்தையும் குறிக்கிறது. இதனை முறைப்படி செயலாக அகத்தில் கொள்ளும் அறிவாளி மாபாதகங்கள் நீங்கி பிறவாமை பெறுவான்.

**மைத்ரேயீ உபநிஷத்:** தேகமே தேவாலயம். அதில் உறையும் ஜீவனே சிவன். நானே அவன் என்ற அத்வைத நோக்கே ஞானம். மனம் அலைவின்றி இருப்பதே தியானம். அதன் அழுக்கை நீக்குவதே ஸ்நானம். புலனடக்கமே பரிசுத்தம். உடல் காக்கும் உணவே பிரம்மாமிர்தம். அகங்காரமாகிய மகன், பொருளாகிய சகோதரன், மோகமாகிய வீடு, ஆசையாகிய மனைவி இவற்றை துறப்பவன் முக்தன். காரண தேகமே, அறிபவன், அறிவு, அறியப்படும் பொருள் கடந்து, குருவாக சர்வத்திலும் உறைபவனாகவும் போக்கு வரவு அற்றதாகவும் உள்ளது.

**ஸுபாலோபநிஷத்:** ஆதியில் பிறப்பற்று இருந்த ஆத்மா என்பதை ஸத்தியம், தானம், தவம், உபவாசம், பிரம்மசரியம், வைராக்கியம் இவற்றால் அடைய வேண்டும். ஆத்மாவின் உடலே மனமாயினும் மனம் அவரை அறியாது. சர்வ உயிர்களிலும் அந்தராத்மாவாக, ஒளி வீசும் தெய்வமாக ஒன்றாக இருப்பவரே நாராயணர்.

**க்ஷுரிகோபநிஷத்:** ஞானமாகிற க்ஷுரிகா எனும் கத்தியால் கருமத் தளை, களை வெட்டி, முக்திக்கு வழி காட்டி, பிறவா நிலைக்கு வழி கோலுகிறது. ஸுஷும்னா எனும் சிறந்த நாடியைக் காண்பவனே வேத ரகசியம் அறிந்து, பற்றற்று, சம்சார பந்தத்திலிருந்து விடுபடுகிறான்.

**ஸூர்யோபநிஷத்:** சூரியனிடமிருந்தே உலகிலுள்ள பொருள்கள் யாவும் தோன்றுகின்றன. அவனே கண்கண்ட பிரம்மம், விஷ்ணு, ருத்திரன். சூரிய ஒளியைக் கைமேல் பார்த்து ஜபிப்பவன் கொடிய மரண பயத்தை வெல்வான்.

*ஜீவசகோதரி அஞ்ஜனா:* சண்டீகேஸ்வர அம்சமான சுக்கிரன் நம்மிடம் வியாழனாக இருக்கிறார். செல்வத்திற்கான பொருளாகவும், ஆதியின் வார்த்தையாகவும், அறிவின் நிலை உணர்த்தி மெய்யான வணக்கத்தில் நம்மை ஏற்றி வைப்பது ஆசானின் னாதமே. அதன் மூலம் னித்திய பேரின்பத்தை அடையும் செயலே தன்னையறியும் செயலாக இருக்கிறது.

*ஜீவசகோதரி பொன்பிரியா:* னாவு: னா- அகரமாகவும், உ- உகாரமாகவும் இருக்கிறது. னா என்பது சரஸ்பதியான வாக்காக இருக்கிறது. னாவுக்குப் பெரியதாக உலகமில்லை. கலைவாணி குடியிருக்கும் உன் னாவை னீட்டி, அகட்டி, வேத னாவாக வளர்க்க வேண்டும் என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் முனியாண்டி*: கற்றவருக்கும், கல்லாதவருக்கும் மெய்க்கல்வியை ஒன்று போல் கற்பிக்கும் மெய் குருபிரானின் வார்த்தையை செவியில் கவனமாக கேட்கும்போது மெய்யான உணர்வு தைக்கிறது.

*ஜீவசகோதரர் கருப்பசாமி:* ஞானவழியில் நுழைந்தவுடன் தனக்கு எல்லாம் தெரிந்து விட்டது என்பது அறியாமையாகவும், குருவின் வாய்மையைக் கேட்க கேட்க நமக்கு எதுவும் தெரியவில்லை என்பது அறிவாகவும் இருக்கிறது.

*ஜீவசகோதரர் திருமூர்த்தி:* ஒரு மெய்யான செம்மல் மூலம் மனதை அறிவதும், அது கடந்து நான்கு தேகங்களை அறிந்து அதனுள் குடிபுகுந்து வாழ்வதும், தன்னுயிரை அறிவதும், குருவே தஞ்சும் என ஒரு நினைவாகும் போதே சாத்தியமாகிறது.

*ஜீவசகோதரர் சுந்தரவடிவேலன்:* விதையின் சங்காரத்திலிருந்து மரம் உண்டாவது போல், குருபிரான் தன் இரக்கத்தால் னரனை முறைசங்காரம் செய்து மனுவாக்கி பின் தேவன் ஆக்குகிறார்கள்.

*ஜீவசகோதரர் பாண்டியராஜன்:* வேதத்தில் கூறப்பட்டிருக்கும் அனைத்து வாக்கியம், பாடல்கள் யாவற்றையும் அகமியச் செயலாக நம்மிடத்தில் வைத்துப் பார்ப்பதையே பிரம்மவித்தை என பெரியோர்கள் அருள்கிறார்கள்.

*ஜீவசகோதரர் பழனிசெல்வராஜ்:* பஞ்ஞாட்சரம், அஷ்டாட்சரம், கலிமா, மூலமந்திரம் எனும் எழுதாத எழுத்தாக இருப்பதற்கெனவே படைக்கப் பெற்ற மனிதனின் ஆறாவது அறிவுக்கான கருவி குலம், இன்னதென அறிவிக்க வருபவர்களே மெய் குருபிரான்.

*ஜீவசகோதரர் பொன்செல்வம்:* ஆசானின் னாதத்தை கேட்கும்போதே வேதம் சமரசமாகிறது. மனுக்குலமே ஜாதியாகவும், அதைக் காக்க வந்த ஆசானே ஜாதிகளின் கர்த்தாவாக, வீணாகும் வாழ்நாளை மீட்டுத் தரும் கர்த்தராக இருக்கிறார்கள்.

குருபிரானின் ஆசீர்பாதத்தைத் தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவுற்றது.

**06-11-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா**

*ஜீவசகோதரர் கௌதம்:*

**தன்னிலை கண்டுணரும் மெய்ஞானனாள்** என்ற பத்தியத் திடம் காப்பு செய்யுளுடன் அவை மலர்ந்தது. நாளுக்குள்தான் சர்வமும் அடங்கியுள்ளது. மனிதரைத் தவிர வேறு எந்த ஜீவராசிகளுக்கும் நாள் நட்சத்திரம் காலம் கிடையாது. விதியை மதியால் வெல்லக்கூடிய ஆற்றல் மனிதரிடத்தில் மட்டுமே உள்ளது. மனதின் அடிப்படையில் செயல்படும் விதி என்பது இறைவனின் கையேடாக உள்ளது. **மண்ணிலே மயங்காதிரு மனமே** எனவும் **சாவு நிச்சயமாக வருகிறது மனுவே உஜார்** எனவும் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். காலமும் மனமும் ஒன்றாக உள்ளது. மண்ணாக இருக்கும் மனமே ஏதேன் தோட்டமாக உள்ளது. ஆசானின் நாதமாகிய இடத்தில் இறை பொருளாக விளங்கும் கவனத்தை, கவனத்துடன் கொண்டு சேர்ப்பதே மெய்உணர்வை பெறுவதற்கான வழி. மெய் எனும் இறை சொரூபமாகிய பரவெளி நிர்வாணமாக உள்ளது. புறத்தில் அலையும் மனமானது எப்பொழுது நம்மிடத்தில் அகமுகமாக திரும்புகிறதோ அப்பொழுதுதான் மூன்றாவது கண்ணாக மாறுகிறது.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் பார்த்திபன்:* அறியாதவர்களுக்கு **கு** எனும் அறியாமையாகிய இருளே, அறிந்தவர்களுக்கு வெளிச்சப் பொருளாக இருக்கிறது. அறியாமையினால் அகங்கார பொருளாக இருக்கும் **நான்** என்பதே அறிந்தவர்களுக்கு வழியும் சத்தியமும் ஜீவனுமாக உள்ளது. குருபிரானின் அருளமுதமே முக்குணத்தாலான ஒருவனை நிர்க்குணனாக மாற்றவல்லது.

*ஜீவசகோதரர் யுவராஜ்:* **தலையுடன் உடல் கால் கரம் வேறதாய்...** மனதின் தன்மையால் பிறவி சூழலில் சிக்கிய நம்மை ஒரு மெய்குருபிரான் அவர்களின் அருளமுதம் ஒன்றே பிறவாமை என்ற எல்லைக்கு ஏற்றி வைக்கும்.

*ஜீவசகோதரர் சீனிவாசன்:*

**கற்க கசடற கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்கு தக** **(திருக்குறள்)**

மனம் என்பது கசடாக உள்ளது. கசடை அறுக்கக் கூடிய கல்வி என்பது பழகக் கூடிய ஒன்றாக உள்ளது. ஓர் அறிவாக விளங்கும் **அவ்** எனும் கற்பகத் தருவைக் கசடற கற்ற பின்தான் நிலைத்து நிற்க முடியும்.

*ஜீவசகோதரர் மோகன்:* **குருவில்லா வித்தை பாழ்.** ஒரு மெய்குருபிரானின் அருளமுதமே அழியாத செல்வமாகிய செவிச் செல்வமாக உள்ளது.

*ஜீவசகோதரி மணிமொழி:* கொம்பு, தம்பூர், தாளம், வீணை, சங்கு முதலியன ஆசானின் நாத வல்லபத்தை உணர்த்தக்கூடிய பொருளாக உள்ளன.

*ஜீவசகோதரர் சங்கர்:* ஆசானின் பேரிரக்கமே நம்மிடத்தில் அவர்கள் கெணிக்கின்ற பத்தியமாக உள்ளது. சப்தம் பிறக்கும் தலமே பண் பிறக்கும் தலமாக உள்ளது. அதுவே ஆசானின் வாய்மையாக, பிறந்தது இனி இறவாத பேசும் பஞ்ஞாட்சரமாக உள்ளது என்ற பகிர்வுகளைத் தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

## 10-11-2022 ~ வியாழக்கிழமை சபை
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

**உய்யவே யெனக் கும்முல குய்யவே...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

**வான்மதிக் கொரல் திருவாக்கியம் எண் : 90** பிரம்மப் பிரகாச மெய்வழிச் சாலை ஆண்டவர்கள் சர்வத்தையும் துறந்த பரம ஏழையாகிய தன் குருகொண்டலை ஏழைக்கு ஏழையாகத் தொடர்ந்து, மெய்ஞ் ஞானத்தைப் பெற்று அறுபத்து ஒன்பது சாதிகளடங்கிய பல்லாயிரக் கணக்கான மக்களுக்கும் எமனணுகா தவ வல்லபத்தை வழங்கினார்கள்.

*ஜீவசகோதரர் வெங்கடேச முத்து :*

**அகர முதல் அவ்வெழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு** **(திருக்குறள்)**

நமது மூன்றாவது கண்ணை திறப்பித்து, முழுமுதற் பொருளாகிய அகரத்தை அருளும் குருபிரானே முழுமுதற் கடவுள். தோற்றமில்லாத அகரம், ஒரு உருதாங்கி தோற்றமாக வெளிப்படுவதே எழுதாத எழுத்தாகும். *மனிதனுடைய*



Copyright © AMNA Trust, Chennai 

*எண்ணத்தின் பிற்புறப் பிடரியில் நிறை நீதி யாசன பீடமிட்டிருந்து வரும் மகா மகான்மிய வஸ்து வித்ததனை எழுதாத எழுத்தென்றும் - ஓதாமலோதும் வேதமதென்றும், வித்தில்லா வித்தென்றும்* ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். வான் மழையால் வித்தில்லாது விளையும் புல், வாழை, மூங்கில், கரும்பு, காளான் போல, பெரியோர்களின் நாத மழையெனும் கொண்டல் வாய்மையால் தோற்றமில்லா வித்தாகிய நரன், மறுபிறப்பு பெற்று மனுவாக விளைந்து பின் தேவனாகிறான். வித்தில்லா வித்தாகிய ஆசானின் நாதம் நுழையக்கூடிய சீடனின் செவியே - முத்திக்கு வித்தான முதற் கொழுந்தாகும்.

*ஜீவசகோதரர் தியாகராஜன் :*
**அழகுஅணி** சித்தர் பாடல் : **மூலப்பதி யடியோ மூவிரண்டு வீடதிலே....**

**மூலப்பதி:** ஆறு ஆதாரத்தின் துணையோடு மூலவளநாட்டிற்கு போக்குவரத்தாக இயங்கும் **நான்** எனும் வெளிச்சப் பொருளே மூலப்பதி.

**கோலப்பதி:** **கோலமாஞ் ஜீவ கோள கோலத்துள் இருந்த மெய்ம்மை...** ஜீவனின் இரகசியமாகிய கோலப்பதியையும், கோலத்துள் இருக்கும் மெய்மையையும் ஆசானின் ஜீவத் தண்ணீராகிய நாதமே உணரச் செய்யும்.

**சாலப்பதி:** ஆசான் உபதேசத்தை கவனமுடன் கைக்கொண்டு சாமுன் சாகப்பழகி தன்பெரு வெளியாகிய சாலையம் பதியை அடையலாம்.

**மேலப்பதி:** பிரம்மவித்தை செயல் மூலம் அழிந்நிடாச் சூக்குமத்துள் அடங்ஙிப் பார்க்கப் பார்க்க, நான்கு தேக இரகசியங்களை அறிந்து அடையும் கயிலை வீடே மேலப்பதியாம்.

*ஜீவசகோதரர் சிரஞ்ஜீவி:*
**திரு அருட்பிரகாச வள்ளல் பெருமானின் திருவரலாறு :**
இயற்பெயர்: இராமலிங்கம்
பிறப்பு : 05-10-1823
இடம் : சிதம்பரம், மருதூர் மாவட்டம்
பெற்றோர் : இராமையா பிள்ளை - சின்னம்மை
திருமணம்: 1850 ஆண்டு, தன் 27 வயதில் அக்கா மகள் தனகோடி அம்மையுடன் திருமணம்.
சத்திய வேத பாட சாலை துவக்கம் : 1865 - வடலூர்.
30-01-1874 -ம் ஆண்டு 51வது வயதில் மேட்டுக்குப்பம் சித்தி வளாகத்தில் திருக்காப்பிட்டு கொண்டார்கள்.

**மகா மந்திரம் :**

**அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**
**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி**

**இயற்றிய நூல்கள் :**
- திரு அருட்பா ஆறு திருமுறைகள்
- ஜீவகாருண்ய ஒழுக்கம்
- மனு முறை கண்ட வாசகம்
- மும்மணிக் கோவை

**பதிப்பித்த நூல்கள் :**
- ஒழிவிலொடுக்கம்
- தொண்டை மண்டல சதகம்
- சின்மய தீபிகை



Copyright © AMNA Trust, Chennai 

**நிலையங்கள் :**
- சன்மார்க்க சங்கம்
- தரும சாலை
- சித்தி வளாகம்
- சத்திய ஞான சபை

*ஜீவசகோதரர் சங்கர்*: **சிவானந்த போதம்**

ஐந்து எழுத்தில் ஓரெழுத்தாகிய **சி** என்ற தீயாகிய திருவாக்கினை தங்கள் திருவாயினின்றும் போதமெனும் னாதமாக னவிலும் னாதனின் னாத னாதாந்தமே சிவானந்தம் அளிக்கும் சிவானந்த போதம். ஆணிப் பொன்னாட்டு அருந்தவச் செம்மலாகிய சீணிக்காத னெறி மாணிக்கவாசக வல்லாள கண்ட மன்னாவின் சீடர்களுள் ஒருவர் அருளிய இன்னூலின் பயன்: குறி எனும் இலக்கினை அடைந்து இலக்குமனனாக, இலக்குமியாக னற்கதியை திடமுடன் அடைந்திட னிர்குணராகிய கர்த்தரின் கணித்தற்கரிய கலங்நா னிதி வைப்பினை கருத்துடனே கவனமதில் இருத்தி கைலாசம் குடிபுகுவதற்கே!

**ஆசான்:** **ஆனனெஞ்ஞுமே யிமைப்பொழு தாகிலும்...** அருந்துறையாகிய தலையை அறிவிக்கும், ஒரு மொழியாம் குருமொழியே போதிமரம். அதன் கீழ் அமர்ந்து பெறும் ஞானமே, ஐம்புலத் தலைவனாகிய மனதின் வழி செல்லாதிருக்க செய்யும்.

**சீடன் :** இமைப்பொழுதும் எனைப் பிரியாமலிருந்த னீர் இப்போது எனை அன்னியமாகக் குறித்து, சொற்படி கேட்க சொல்வது ஏன் என வினவ,

**ஆசான்:** மனம் அலையாமல் பாதுகாப்பதே முத்திக்கான னெஞ்ஞுமாகவும், ஜீவன் முத்தர்களின் சொற்கேட்டு சம்மதிப்பதே ஆன னெஞ்ஞுமாகவும் உள்ளது.

**சீடன் :** பரத்துடைய வாழ்வு, பத்தினிலை பற்றி தெளிவாக அருள்புரிய வேண்டுமென கேட்க –

**ஆசான்:** உடல் னாம் என எண்ணி, உலக வாழ்வில் உணர்ச்சி வழி வாழ்ந்து உயிர் விடுகிறோம். அனித்திய உடலுள் இருக்கும் அழியாத னித்திய வீட்டில் ஆசான் அருளால் குடியேறாதோர், மீண்டும் வினை வழியில் நுழைவர்.

**சீடன் :** எமன் கையில் சிக்கி, அலகை தேகம் எடுப்பாய் என சொல்வதன் காரணம் என்ன என வினவ –

**ஆசான்:** தெய்வ வாக்கின்படி முந்தைய ஜென்மமாகிய மனம் மூலம் பல ஜென்மங்கள் நாம் எடுத்துக்கொண்டே இருப்பதை உத்தமர் மூலம் உணர்ந்த பின் தான் மானிடராகிறோம்.

**சீடன் :** மானிட தேகம் அருமையானது என்பதற்கான விபரத்தை அருள்புரிய வேண்டும் என கேட்க -
**ஆசான்:** னால் வகை யோனியிலும், எழுவகைத் தோற்றத்திலும், உன்னதமான மானிட தேகமென்பது, மறுபிறப்பு பூமியில் மாசற்ற மானிட தேகமெடுக்கும் மெய்ச்செயலின் இரகசியமாகும்.

**சீடன் :** மானிட தேகத்திலே பலவிதமாய் அருமையாகிய தேகம் உண்டோ என வினவ –

**ஆசான்:** மனித தோற்றத்தில் இருக்கும் னரன், ஒரு மெய்க்குருவின் இரக்கத்தால் மனுவாகிறான். மனுவான பின் தம்மைத் தாண்மைப்படுத்தி மண் போலானவனே மனிதருள் மனிதனானவன் என வேதம் கூறுகிறது.



Copyright © AMNA Trust, Chennai

**சீடன் :** தேகமெடுப்பது எவ்விதம் ? வினையென்பது ஒன்றோ இரண்டோ ?

**ஆசான் :** வினைக்கு காரணமான மனமே தேகமெடுக்க காரணமாகும். மேலேழு, கீழேழு உலகமாக, மெய், பொய்யாக இருக்கும் இருவினையில் ஒன்றான தீவினையை நொறுக்குவது கடினமே.

**சீடன் :** வினையினால் பல யோனிதோறும் புகுந்து ஜனன, மரணம் உண்டாவது எப்படியென கேட்க –

**ஆசான்:** காய மன வாக்கினால் செய்த கன்மமாகிய வினையால் பிறப்பு, இறப்பு உண்டாகிறது. சிருஷ்டிக்கும் பிரம்மாவின் தன வாக்காகிய டமரக ஓசையால், னரன் மாயையாகிய மன வலையில் சிக்கி பிறப்பு - இறப்பு என்ற உற்பனங்கள் உண்டாகிறது.

**சீடன் :** தேவேந்திர பதவி, பிரம்மப் பட்டம் அடைந்து சுகம் பெறுவது பற்றி வினவ –

**ஆசான்:** மனதின் மேல்நோக்கம் மற்றும் கீழ்நோக்கத்திற்கு ஏற்றவாறே பிறப்பு அமைகிறது. இதனின்றும் விடுபட, ஜீவனெனும் அறிவாகிய சிவனின் திருவடியே துணை என்பதை உணர்த்தவே புராணங்களும், வேதங்களும் படைக்கப் பெற்றுள்ளன.

**சீடன்:** மும்மூர்த்தியர் பட்டம், தேவேந்திரப் பதவி பெற்ற பின்னும் பூலோகத்தில் மானிட தேகத்தில் பிறப்பதுண்டோ என வினவ –

**ஆசான்:** முத்தொழில் புரியும் மும்மூர்த்தியரும், ஐந்தொழில் புரியும் ஆனமுகத்தினை அறிந்த வானவரும், உலகத்தவரின் புகழில் மயங்கும் போது மீண்டும் பிறப்பு உண்டாகிறது. குருவினிடத்தில் சரணாகதி அடைந்து முக்குணங்களற்று னிர்குணமாகினால் தேவதேவனுடைய திருவடியைக் கண்டு தரிசிக்கலாம்.

**குருபிரான் அருளமுதம்:** பிரம்மப் பிரகாச மெய்வழிச் சாலை ஆண்டவர்கள் அருளிய **மெய்ன்னிலைப் போதம்** எனும் அருட்கொடை, மனுக் குலத்திற்கான வரப்பிரசாதம். அறிவைத் தேடும் யதார்த்த உள்ளம் கொண்டவர்களுக்கு ஆண்டவர்கள் அருளிய அருட்பிரசாதம் அசலாக கிட்டும் என்ற ஆசீர்பாதத்துடன் ஆசான் அவையை னிறைவு செய்தார்கள்.

**12-11-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்**

குருவைக் காட்டிலும் உயர்ந்த தத்துவம், தவம், ஞானமொன்றில்லை. அப்பேர்ப்பட்ட ஸ்ரீ சத்குருவிற்கு நமஸ்காரம். **(குரு கீதை)**

*ஜீவசகோதரர் கௌதம் :*
**அச்சர மமைத்தோன் அறுந்துபோ னது கண்**
**டமைந்நதை யமைத்து அறைந்நதிக் கிரந்நம்...** என்ற ஆதி மெய் உதய பூரண வேதாந்தம் முகப்பு பாடலுடன் அவை மலர்ந்நது.

*பிரம்ம விஷ்ணு சிவவடிவமாகியவர் குரவன் ஒருவரே. இச் சகமுழுவதும் குரவனைவிட மிக மேலான தத்துவமில்லை. ஆதலால் குரவனைச் செவ்வையாய்ப் பூசித்தல் வேண்டும்.*
***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

**அறிவு மாணிக்கம்:** அறியாமை இன்னதென அறிவிப்பதே அறிவு. ஐம்புலனும் ஒடுங்ங்கி, அறிவை ஆகாரமாகக் கொள்ளுதலையே **அறிவதனைக் கொண்டு அறிவதனைக் காண்பது** என்பதாகும். மனு ஒருவனிடமே தனிச் சீதனமாகிய ஆறாவது அறிவு மனம் என்ற பெயரில் உள்ளது. அது மனமாக இருக்கும்வரை அறியாமையாக, னபுசு என்னும் கீழான ஏழு எண்ணங்களாக நம்மை அழிவில் தள்ளுகிறது. ஒரு மெய்ஆசானின் முன்னிலையில் மனமானது மறு பிறப்பு எடுக்கையில் அதுவே சிபத்தெனும் மேலான ஏழு எண்ணங்களாக, அறிவு மாணிக்கமாகப் பிரகாசிக்கிறது. குருவின் பேரிரக்கத்தால் நம் மனம் அறிவாக மாறும் செயலையே **மனம் திரும்புங்கள் பரலோக இராஜ்ஜியம் சமீபமாய் இருக்கிறது** என சத்திய வேதத்திலும், **நான் உன் ஜீவ னரம்பிற்க்கும் சமீபமாய் இருக்கிறேன், னீ என்னை அறியமாட்டாயா** என திருக்குரானிலும் கூறப் பெற்றுள்ளது.

**ஜீவப்பரிசு:** ஆதி மெய் உதய பூரண வேதாந்நம், வையகத்தையும் வானகத்தையும் சர்வ கால காலங்ஙளையும் சர்வ காலத்திற்க்குள் அடங்கிய அழிவிலா னித்திய பூரண மேம்பாடுகளனைத்தையும் கையில் வரவழைத்துத் தரும் கிரயத்தையுடையது இக்கிரந்நம். இந்நக் கிரந்நத்தில் செயலில்லாத வாசகமே கிடையாது. இச்செகத்து மனு மக்களுக்கு மெய்வழிச்சபையாரின் ஜீவப்பரிசு. வந்த வேதங்கள் அனைத்துமே ஜீவனுக்கான பரிசாக பெரியோர்களால் அருளப் பெற்றதேயாகும்.



*திரு. சாலை ரவி அப்பா அவர்கள்*
*நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை*

**வேதம்:** வேதம் ஆசான் திருமேனி. வேத விளக்கம் அவர்கள் திருவாக்கு. எழுதாமறை என்பது ரூபத்தில் வந்து னிற்கும் வந்த வேதமாகிய ஆசான் அவர்களே. அழிவதிலிருந்து அழியாததை அறிவிப்பதற்கே கோடானு கோடி வேதங்ஙளும், கிரந்நங்ஙளும், வேதாந்நங்ஙளும், பாஷைகளும் வந்நன.

**பிரம்மவித்தை:** இத்தூலத்தில் இருக்கும்போதே தெய்வத்திருனாடாகிய பிரணவ னாட்டிற்க்குப் போய்வரும் திருவிளையாட்டைப் பழக்கித் தருவதுவே மெய்க்கல்வி. சாகாக் கல்வியாகிய பிரம்மவித்தை செயலை செய்து வைக்கும் ஒரு மெய்ஆசானின் செழுஞ்ஞீதள மனோ னோக்கிற்கு இணங்ஙி, பிறவிப்பயனை அடைவோமாக என்ற பகிர்வுகளுடனும், தோத்திர பாடலுடனும் அவையை நிறைவு செய்தார்கள்.

**17-11-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**ஓங்ஙாரத் தொனியான கபாலத்தே …** என்ற ஞானமுறையீடு பாடலுடன் கார்த்திகை மாதம் முதல் நாள் அவை இனிதே மலர்ந்தது.

**வான்மதிக் கொரல் திருவாக்கியம் எண் : 177** ஜோதி என்பது அறிவுப்பிரகாசம் - ஜீவப்பிரகாசம். அறிவுக்கண் கொண்டு காணுவதே ஜோதி. மகரஜோதி என்பது அகமிய தேவ ரகசிய செயலை உணர்த்தும் புறச்சடங்காகும்.


Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் வெங்கடேச முத்து:*
**அகர முதல் அவ்வெழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு** **(திருக்குறள்)**

சாவாது பிறவாது தனி முதலாக இருந்த **நான்** - அகரப் பொருளாக, ஆண் பெண் அற்றதாக, நீதியாக, அறிவாக உள்ளது. எதற்கும் முதற்பொருளாகிப் பின் அழிவில்லா அப்பொருளை என மெய்வழி ஆண்டவர்களும், **நான்** உன் ஜீவ நரம்பிற்கு சமீபமாய் இருக்கிறேன் என நபிகள் நாயகமும், **நானே** சத்தியமும் வழியும் ஜீவனுமாய் இருக்கிறேன் என சத்திய வேதத்திலும் அருளுகிறார்கள்.

*ஜீவசகோதரி லாவண்யா :* **இராஜ சன்னியாசி னிலை - காமமுடிப் பீடம்குரு முகமாய்த் தன்னிற் கண்டு ...** கண்டம் கடந்து எமகண்டம் கடந்து, காம முடிப்பீடத்தை குருமுகமாய் தன்னில் கண்டு, மூச்சு ஓடாத தவனிலையைக் கைகொண்டவரே இராஜ சன்னியாசி. ராஜ அங்கத்தின் மூலம் குரு சீடன் பரம்பரையாக பழகிப் பெற வேண்டிய பெருநிலை வைப்பே இராஜ சன்னியாசி னிலை.

*ஜீவசகோதரர் தியாகராஜன் :* **அழகுஅணி** சித்தர் பாடல் - அழகுக்கு அழகு சேர்க்கும் அணியே பஞ்ஞாட்சரம் என்பதை ஆசானின் நாதம் மூலம் அறியலாம். ஓதாமல் ஓதும் செயலை ஆசான் துணையுடன் கற்றுத் தேர்ந்தால், சர்வ படைப்பின் அழகையும் அனுபவிக்க வைக்கும் ஜீவனின் இரகசியத்தை அறியலாம். இதுவே தன்னை அறிதலாகும்.

*ஜீவசகோதரர் சிரஞ்ஜீவி :* அருள் என்பது ஜோதியாக, பிரகாசப் பொருளாக, சுடாத தீயாக, புகையாத கனலாக உள்ளது. **அருள் ஒளி விளங்கிட ஆணவம் எனும் ஓர் இருளற என் உள்ளத்தில் ஏற்றிய விளக்கு** என வள்ளல் பெருமானும், **அருள் - யுகாந்த நாட்டு செல்வம்** என சாலை ஆண்டவர்களும் அருளியுள்ளார்கள். **கண்டர னீண்ட காட்சிக் காரணக் கடலினுள்ளே...** அறத்தின் உருவாக வந்த தன் ஆசான் தனிகைவள்ளலை ஜோதி மலையாகவே பார்த்து ஆண்டவர்கள் அருளை பெற்றார்கள்.

*ஜீவசகோதரர் சங்கர் :* **சிவானந்த போதம் -** நம்மை சிவமாக்கும் தன்னையறிந்த பெரியோர்களின் திருவாயாகிய பஞ்ஞாட்சரத்தின் ரகசியத்தை உணர்த்துவதே சிவானந்த போதம்.

**சீடன் :** வேத ஆகம புராண சாஸ்திரங்களால் என்ன பிரயோஜனம் என வினவ -

**ஆசான் :** மனுவின் தோற்றமும் ஈசனின் சக்தியும் கொண்ட புண்ணிய உருவான குருவை சார்ந்தால் இருவினைகள் அகன்று வாழலாம்.

**சீடன் :** ஒருவர் செய்த பாவ புண்ணியம் ஒருவருக்கு உண்டு என்பதின் விபரம் கேட்க -

**ஆசான் :** அவரவர் செய்த வினையினால் உண்டாகும் வியாதிகளை பிறருக்கு கொடுக்க முடியாததும், ஒருவரின் உயிர் மற்றவர்க்கு துணையாவதில்லை என்பதையும் வேத சாட்சியாக தெளிந்து கொள்வாயாக.

**சீடன் :** புராணங்கள் ஏன் பிறர் செய்த பாவ புண்ணியம் மற்றவர்க்கு உண்டு என பொய் சொல்கிறது என கேட்க -

**ஆசான் :** பாச பந்தத்தில் உழலும் மூடர்களுக்கு இப்படி சொன்னால் தான் நம்புவார்கள். அதோ கதியாகப் போகின்ற அவர்கள் நல்ல கதி பெற வேண்டுமாயின், இதனை நம்பாமல் முயற்சி கொண்டு பேதகமில்லா அறிவின் பலனை பெற விழைய வேண்டும். உலக மக்கள் மண், பொன், பெண் என்ற மூன்று



Copyright © AMNA Trust, Chennai

விஷயங்களுக்காகவே ஒன்று கூடி வாழ்ந்து கவலைக்கு ஆளாகி பிறப்பு இறப்பில் உழலுகின்றனர். இதை உணர்ந்து பெரியோர்களின் சீதக்களப செந்தாமரை பூம்பாதத்தை துணையாகக் கொண்டால், வினை வழியாக தேகத்தை விடும்போது சீராகிய ஓரறிவான இடம் சேர்ந்து வினையிலிருந்து மீளலாம்.

**குருபிரான் அருளமுதம்: கார்த்திகை மாத சிறப்பு**

**கண்ட சத்தியத் தீர்க்கத்த ரிசனம்**
**விண்ட திட்டம்வி ளங்ஙன டப்பது**
**பண்டை யூழிவி தியெழுத் தின்படித்**
**தண்டும் கார்த்திகை தொட்டுன டக்குமே**

**மாறாத சத்திய வாழ்வு வளர்ந்நிட, துஞ்ஞா வாழ்வு வரம் துலங்ஙும் பாரெங்ஙுமே, இருட்டில்லாச் சீர் வாழ்வு எங்ஙும் மங்ஙாதோங்ங, சத்தியச் செங்ஙோல் தழைத்தோங்ஙி வாழ்ந்நிட, உய்யும் சத்திய ஆட்சி ஓங்ஙிட வென்றூணி - வருதிதோர் கார்த்திகையே** என வருங்ஙால தீர்க்கதரிசனப் பிரவாகமாக பரம்பொருள் சாலை ஆண்டவர்கள் அருளிய பாடல் மூலம் கார்த்திகை மாதத்தின் சிறப்புகளை அருளிச் செய்து ஆசான் அவை நிகழ்வுகளை இனிதே நிறைவு செய்தார்கள்.

**19-11-2022 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்**

**அரியானை அறிய வைத்து...** என்ற னல்ல னாட் பிறப்பு காப்பு பாடலுடன் குருபிரான் அவையை மலரச் செய்தார்கள். ஒரு மெய்க்குருபிரானின் அருளமுத மொழிகளை செவிவாய் மடுத்து கேட்கக் கேட்க பொய்-மெய், அறிவு-அறியாமை இவற்றை பிரித்துப் பார்க்கும் அறிவான மெய்ன்னிலைப் போதத்தை ஒருவன் அறிகிறான்.

**விதை தேவனுடைய வசனம். விதைப்பவர் தீர்க்கதரிசி (சத்திய வேதம்).** விதை விழும் இடங்கள் வழிபாதை, கற்பாறை, முள் செடி, நல்ல நிலம். நல்ல நிலத்தில் விழுந்தவை ஒன்றுக்கு நூறாகப் பலன் கொடுக்கிறது. இதைக் **காதுள்ளவன் கேட்கக் கடவன்** என மூன்று முறை சப்தமிட்டுக் கூறினார். தேவ வசனங்களை கேட்டுப் பின்பற்றித் தொடர்ந்து வரும் சீடனின் அறிவின் நிலைகள் வாழைமரம், ஈரவிறகு, கரித்தூள், கற்பூரம், கந்தகம் என்ற நிலைகளுக்கு மாறி வருவதைக் காணலாம்.

**எமபடரடிபடு கோடாயிதக் கூர் - திருவாக்கியம் எண் : 111** - செத்தால் அமரன், தேவன் என்பது அறியாமையின் உச்சமாகும். செவியிற் சுவை உணர்வோர் தேவர்களாகவும் உணராதவன் நரனாக, மிருகமாகவும் உள்ளான். பாவமாகிய அசுத்தத்தை மாற்றி புண்ணியமாகிய பரிசுத்தத்தில் ஆக்குவதே மெய்வழி என்னும் மேடு.

**செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்**
**அவியினும் வாழினும் என்** என திருவள்ளுவர் அருளியுள்ளார்கள்.

**வேதமும் உயிர்கள் மெய்ப்பால் விளைவுமுத் தொழில்களெல்லாம்** தொட்டுக் காட்டப் பெற்று செவிச்சுவை உணர்ந்த மக்களாக, அறிவு நிலையாகிய மெய்வழி எனும் மேடு

*சகல வேதங்ஙளின் சிரோரத்தினமாய் விளங்ஙுகின்ற பாததாமரைகளை உடையவராயும், வேதாந்ந அர்த்தங்ஙளையெடுத்து னன்றாய்ப் போதிப்பவராயு மிருக்கிற குரவனைச் செவ்வையாய்ப் பூசித்தல் வேண்டும்.*

*~ குரு கீதை*



Copyright © AMNA Trust, Chennai

கண்டவர்களாக ஆதி மார்க்க னீதி அவை மக்கள் பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவருளால் ஆக்கப் பெற்றிருக்கிறார்கள்.

*ஜீவசகோதரி பவானி மணிமாறன்:* **மணி மந்ர அவுஷதம்**

லவணமாகிய உப்பு என்பதே மணிமந்ர அவுஷதம். நம் உடலிலுள்ள ஒன்பது வகை தாது உப்புக்கள் போல் புற உலகிலும் பலவகை தாது உப்புக்கள் உள்ளன. அறு சுவைகளில் ராஜசுவையாகிய உப்பு அதிகமானாலும், குறைந்தாலும் தீமையாகவும், சீராக இருந்தால் நன்மையாகவும் உள்ளது. முக்கால் பாகம் கடலால் சூழப்பெற்றுள்ள உலகம் போல் நம் உடலும் 70% உப்பால் கட்டப்பெற்றுள்ளது. அனீதமாக அழிவைத்தரும் நபுசாகிய மனதை, நலம் தரும் அழியாத சிபத்தெனும் அறிவாகிய நவனீதமாக மாற்றுவதே பெரியோர்கள் அருளிய ரசவாதமான பிரம்மவித்தைச் செயலாகும். மெய்வழி ஆண்டவர்கள் ஆதிமான்மியத்தில், **ஏ மனிதனே - உன்னுடைய இந்த உப்புப் பாண்ட உடலினுக்குள்ளே** எனத்தொடங்கும் திருவாக்கியத்தில் இதன் பிரம்மாண்டத்தை அருளியுள்ளார்கள். ஜல அம்சமான மனதை, ஆசானின் ஞானாக்கினியில் காய்ச்சி ஸ்படிகமான அறிவாக மாற்றுவதே ரசவாதம்.

**குருபெருமான் அருளமுதம்:** ஆண்டவர்கள் வாத கற்பம் பாடலில் நோய்கள் பற்றியும், அவுஷதம் எனும் மருந்து செய்யும் முறை பற்றியும், மரணவறுமை தீர்க்கும் மா தவ மருந்து பற்றியும் அருளியுள்ளார்கள். நவபாஷாணத்தை ஒன்றாகச் சேர்த்து அத்தி எனும் எலும்பால் ஆனதே நம் தேகம். இந்த அத்திமாபுரத்தில் வீற்றிருக்கும் பிரம்ம சொரூபமான ஆத்மாவை அறிய வேண்டிய கடமைக்காக தரப்பெற்றதே ஆறாவது அறிவு. வீண்மனுவை ஈசனாக்கும் அரும்பெரும் செயலே ரசவாதம்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:*

**யோவான் சுவிசேஷம் –** முதல் அதிகாரம் - திருவாக்கியம் (46 - 51)

நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை கூடுமா? நாகூர், நாமக்கல், நாஞ்சில், நாகமலை, நான்மாடக்கூடல், நாவலன் தன் பொழில் என்பவை பெரியோர்களின் திருநாவைக் குறிப்பதாகும். *அவனவன் தன் தன் அத்திமரத்தின் கனியை புசித்து சாகாமல் பிழைப்பீர்கள்* என்பது மெய்குருபிரான் மூலம் மறுபிறப்புப் பெற்று, ஜீவகாருண்யம் எனும் தன்னுயிர் வீணாகாமல் காக்கும் அறச்செயல் செய்வதாகும்.

**கு** எனும் அறியாமையில் இருந்து மாறி அறிவுப் பிரகாசம் பெற்றதால் தேவகுமாரன் என்ற நாமம் பெற்றார். *வானம் திறந்திருக்கிறதையும் தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் இது முதல் காண்பீர்கள் என்று மெய்யாக மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்.* ஆகாயமெனும் பரிசுத்த நினைவிலிருந்து பரிசுத்த ஆவியானது, பெரியோர்களின் திருவாய் மூலம் இறங்கி, தலையான செவிச்செல்வத்தை வழங்கி, மறுபிறப்பெனும் தேவப்பிறப்பில் ஆக்கி நீதிவழியான மெய்வழியில் வாழவைக்கிறது.

**குருபெருமான் அருளமுதம்:** *வானமே கேள் பூமியே செவி கொடு.* தேடுகிற உள்ளம் உள்ளவனுக்கு வாயுள்ள வானத்தையும் காதுள்ள பூமியையும் காணச் செய்வது என்பது ஆசான் மூலம் அறியும் உபதேச ரகசியமாக உள்ளது.

*ஜீவசகோதரர் சங்கர்:* **சிவானந்த போதம்:**

ஆசானின் திருவடி நிழல் அடைவது சுகம் என்றாலும் அவரவர் எண்ணங்கள் மூலம் வெளிப்படும் காமம், குரோதம், மோகம், லோபம், மதம், மாச்சரியம், டம்பம், பொறாமை என்ற அஷ்ட அவஸ்தைகளாகிய வாரிசுகள் அதற்குத் தடையாக உள்ளன. காய மன வாக்கு தளர்ந்து கண்ணொளி மழுங்கும் முன் குருபெருமானின் அருளால் மூன்றாவது கண்ணாகிய அகக்கண் திறக்கப்பெற்று நல்ல கதினிலை அடைய வேண்டும். பரிபூரணமாய் வந்த ஞானிகள் மூலம் ஓதாமல் ஓதக்கூடிய சிவ நூலை, மகாமகசூக்கான இருதயத்தில் பகுத்துப் பார்த்து, பேரின்ப நிலையான முத்தி நிலையை சிந்தை மகிழ்ந்து இருக்கும்போதே அறிந்து வாழ வேண்டும். அறிவின் திருவுருவான ஆதி னாயகம்



Copyright © AMNA Trust, Chennai 

அரசர் னாயகமான குருனாயகமே, தங்கள் னாவிலிருந்து பொழியும் அஞ்ஞன மையால் மூன்றாவது கண் திறந்து காட்டி நம்மை விழிப்புலகில் ஏற்றி வைக்க முடியும்.

*A.S.மகாலிங்கம் (பவானி - ஈரோடு):* வள்ளலார் அருளிய சன்மார்க்க மரபான மரணமிலாப் பெருவாழ்வின் செயல் விளக்கம் அறிய வைக்கும் இடமான ஆதி மார்க்க னீதி அவையை எங்களுக்கு அறிய வைத்தது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் தனிப் பெருங்கருணையே ஆகும்.

**குருபெருமான் அருளமுதம்:** கேட்பதும் கேளாததும் தரும் கற்பகத்தரு விருட்ச வித்தானது பெரியோர்களின் மூலமாக அருளப்பெறுகிறது. தன்னை அறிந்த மனுவே சர்வ வேதங்களின் ரகசியப் பொருளை அறிகின்ற சக்தி பெறுகிறான். மக்கள் யாவரும் மெய்உணர்வின் மூலம் மரணமிலாப் பெருவாழ்வு பெற்று வாழ, பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடி போற்றி வணங்கி தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

## 20-11-2022 ~ ஞாயிற்றுக்கிழமை~ சத்துவாச்சாரி சபை
## தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி

**கார்க்கும் ஞானக் கடல்வாய் மடுக்கவே...** என்ற ஞான முறையீடு பாடலுடன் அவை இனிதே உதயமானது.

*ஜீவசகோதரர் கௌதம்:* ஞானக் கடலாக வந்து எமனிடத்திலிருந்து மனுக்களை காக்கும் திருச்செயலை செய்து வைக்கும் ஆசானிடத்தில் செவி சாய்க்க வேண்டும். செவிச் செல்வமே தலையான செல்வமாக வள்ளுவர் பிரானும் அருளியுள்ளார்கள். ஆசான் தங்களின் பேரிரக்கம் கொண்டு அழியா செல்வத்தின் மூலம் பிறவிப்பிணியை நீக்கும் அரும்பெரும் செயலை, நம் தலையில் ஏற்றி வைக்கும் செயலையே சாலை ஆண்டவர்கள்,
**சிரித்துச் சிரித்துத் திருத்திப் பொருத்திச் சேம னிதிக்கணை**
**விரித்துப் பெருத்து இனித்து விடுதீ வீடும் விடிந்நதே** என அருளுகிறார்கள்.

இருளாக இருந்த வீட்டை சிவப்பிரகாச சுடரின் மூலம் பிரகாசமான வீடாக்குகிறார்கள். அகில உலக மக்கள் யாவரும் இச்செயலைப் பெற வேண்டும் என்பதே ஆதி மார்க்க னீதி அவையின் நோக்கம். தன்னையறிவதே ஒவ்வொருவரின் முதற் கடமையாக இறைவன் நம் தலைமேல் விதியாக்கி வைத்துள்ளான். வந்ந வேதமாக திருவுருத்தாங்கி வரும் குரு மகான்மியரின் அடினிழலில் தன் மனதைச் சாய்த்து இகழ்ச்சி புகழ்ச்சியை பொருட்படுத்தாமல், ஆசானின் னோக்கிற்கு இணங்கி னடத்தலே தன்னையறியும் தவமுறை எனவும், அறம் செய்தல் எனவும் வேதங்கள் குறிப்பிடுகின்றன. இதனையே,
**தன்னை அறிதலே இன்னில வாழ்வு** எனவும்,


*திரு. சாலை ரவி அப்பா அவர்கள்*
*நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை*

**உன்னையல் லாலென் உயிரிங்கில்லை**
**தன்னைய றிந்நது உன்னையையா** எனவும் சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

**தன்னையறிந் தின்பமுற வெண்ணிலாவே - ஒரு**
**தந்திரம் நீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே** என வள்ளல் பிரானும் அருளியுள்ளார்கள். நெடுங்கால வாழ்விற்குரிய செயலை குருபிரான் அருளிய நீதியின் மேல் சதா நினைவை வைத்து ஆசானின் அன்பெனும் பிடியில் ஒட்டியிருப்பதே மேன்மையான வாழ்வு. தன்னை அண்டி வரும் மக்களின் அலையும் மனப் பேயிடம் அடிமையாக இருக்கும் அறிவை ஆசான் தன் னாத வல்லபத்தால் மீட்டு சீராக்கி, அருளமுதத்தால் எமனணுகா சாவாவரத்தை பரிசாக அளிக்கின்றார்கள்.

ஜீவகுகைதோறும் வீற்றிருக்கும் மறுவிலாக் குகனைக்கண்டு வணங்கும் வணக்கத்தை னடமாடும் திருமேனி தாங்கி வந்து அவரவர் உருவத்தினை அதிக தெளிவுபடுத்தி பிரதிவிம்பமாகக் காட்டும் தெய்வக் கண்ணாடியாகிய ஒரு மெய்க் குருபிரானின் இரக்கத்தால் தான் அறிய முடியும் என்ற பகிர்வுகளை தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

**20-11-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. பானுமதி குமரேசன்**

**உத்யோவனக் காட்டிலே - மேமக்கள்**
**னித்யத்த வத்தேறும்**
**சத்தினி முன்பாக உத்தமர் தங்குலப் - பொங்கலோ பொங்கல்**
**(பானைப் பலிப் பாடல்)**

*ஜீவசகோதரி இன்பலதா:* ஆசானின் சென்னெறிச் சீர் உழவுகோல் எனும் ஒரெழுத்து மாத்திரைக் கோல் கொண்டு பண்படாமல் முட்காடாக இருந்த சீடனின் உள்ளத்தை பண்படுத்தி, உத்தியோவனமாக ஆக்கி னித்திய தவத்தில் ஏற்றி வைக்கிறார்கள். உத்தி ஓ வண்ணமாகுதல் என்பது ஆசான் திருமொழி கேட்டு வைராக்கிய சித்தம், திட நம்பிக்கையுடன், சாகாக்கலை பழகித் தேர்ந்து, அறிவு வடிவாக வாழ்வதாகும். எவருடைய வல்லபத்தையும் அடக்கி, மிதித்து ஏறுகின்ற அதிவல்லபமாகிய எமனுடைய வல்லபத்தை மீறிய யதார்த்த தெய்வபீடமாக திருமேனி தாங்கிவரும் குருபெருமானைச் சார்ந்து கொள்வதே வரமாதி வரமாகும்.

*ஜீவசகோதரர் சங்கர்:* மனித வாழ்விற்கு தகுதியற்ற காடாக இருந்த பாப்பனாச்சிவயல் இடத்தை, ஆண்டவர்கள் தங்களின் பெருமுயற்சி கொண்டு உத்யோவனக் காடாக மாற்றியது போன்றே அகமியத்தில் சீரில்லாமல் மன வழியில் சென்றவர்களை திருத்தி அறிவிருக்கும் தலமாகிய உத்யோவனத்தில் ஏற்றி வைக்கிறார்கள். யதார்த்த தேவகுரு துணை கொண்டு ஒருவன் மெய்யை அறியும்போது ஜீவாத்மா ஆகிறான். மெய்ப்பொருளுடன் இரண்டறக்கலந்து இறைனிலையை அடையும்போது பரமாத்ம னிலையை அடைகிறான்.

*ஜீவசகோதரர் கணேசன்:* வினாயகரை வழிபடும் போது இரு காதுகளை பிடித்துக்கொண்டு தோப்புக்கரணம் போட்டு வணங்கும் தாத்பரியம் என்னவெனில் - அறிவு சொரூபராகிய குருபிரானின் னாதமானது னம் செவிகளில் நுழைவதற்கு முதற்பொருளாக இருப்பது காது. சர்வத்திற்கும் தலையாகிய செவிச் செல்வத்தை உணரவைக்கும் காதுதான் முதல் என்பதை அறிவுறுத்த பெரியோர்கள் எடுத்து வைத்த முறையாகும். தன்னையறியும் இரகசியத்தை உணர்த்தும் மெய்யான மெய்வழி, பிடரிமார்க்கம் என்பதால் இரு கைகளையும் பிடரியில் வைத்து வணங்குகிறோம்.

*ஜீவசகோதரி சாந்தினி:* மனம் அசையாமல் அறிவு நிலையில் இருப்பது சைவம்.
அதுவே அசைவுற்று அலையும் போது அசைவம் ஆகிறது.


Copyright © AMNA Trust, Chennai

**சீவனே னீயாகும் அறிவும் னீயாம்**
**சிவன்றானே னீயாகும் பரமுனீயாம்**
**தாவுகின்ற செயலுடனே மனதென் றுன்னைச்**
**சாற்றியதோர் னாமமாம் சர்வசங்ஙை...** **(சிவானந்த போதம்)**

**குருபிரான் அருளமுதம்:** ஒருவன் தன்னை அறிந்தால் சர்வத்தையும் அறிந்தவனாகிறான். **தன்னையறியும் அறிவே தகும் அறிவு**. தன்னுடைய னாமத்திற்குரிய பொருளை அறிந்து, இறைவனுடன் இரண்டறக் கலப்பதற்கான வழிமுறைகளையே சர்வ சாதி, மத, வேதங்களும் மூலமந்திரங்களும் பறை சாற்றுகின்றன என அருளி, குருபிரான் தோத்திர பாடலுடன் அவையை நிறைவு செய்தார்கள்.

**24-11-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்**

**ஓதுமறை வேதனெறி உண்மையாய் ஒழுகிவளர்...** என்ற பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது. ஓதுவது என்பது அவரவரின் சுத்த திருவடியாக, எழுதாத எழுத்தாக, மறையாக, வேதமாக உள்ளதை தொழக்கூடிய செயலாக இருக்கிறது. அதற்கான னெறிகளாக சைவ, வைணவ, புத்த னெறி என மத னெறிமுறைகளை நம் முன்னோர்கள் உண்டாக்கியது அதில் நாம் யோக்கியனாய் நிலைத்து னித்திய மங்களத்தை அடையவே.

**வான்மதிக் கொரல் திருவாக்கியம் எண் : 91** அனித்திய காரியத்திற்கென உலகில் ஒரு எஜமானும் அவர் உத்திரவும் இருப்பது போல், ஒரு மெய்ஆசானின் தனிப்பெரும் கருணை கொண்டே நித்திய பரமபத வாழ்வின் பலனை, நித்திய தூலம் கொண்டு அனுபவிக்க முடியும். இதை அறியாத அறிவிலிகளுக்கு சிவன் என்பதே எமனாக மாறி நிற்கும்.

*ஜீவசகோதரி லாவண்யா:*
**காமீல்கள் னோக்கம் - உருமுர சறைந்து காட்டி யுன்னிதம் காட்டல் போலே...** பாடல்.
தன்னை அறிந்து ஓரறிவாய் நிற்பவர்கள் காமீல்கள். வந்த வேதமாகிய அவர்களின் நோக்கம், னரனை மனுவாகவும் அதிலிருந்து தேவனாகவும் மாற்றி பேரின்பம் அனுபவிக்கச் செய்வதுவே. **அருட்ஜோதி ஆனேன், அருளாட்சி பெற்றேன், மருட்சார்பு தீர்ந்தேன், மரணம் தவிர்த்தேன் என்று அறையப்பா முரசு** என வள்ளல் பெருமான் அருளியது போல், ஆசானின் னாதம் அருவுருவாக முழங்கி, அம்பலத்தில் ஆடும் ஈசனை அகமுகத்தில் காட்டி உள்ளும் புறமும் சிறக்க காலங்கள் தோறும் இவ்வுலகில் முரசு போல் முழங்கிக்கொண்டே உள்ளது. என் வயது வாழ்னாள், சிற்றம்பலப் பொருளான ஜீவனெனும் ஆன்மஜோதியின் ரகசியத்தை அருளால் அறிவித்த சற்குரு பிரானின் பாதம் பணிகிறேன்.

*ஜீவசகோதரர் வெங்கடேச முத்து:*
எதற்கும் முதற்பொருளாக விளங்கும் ஆதியில்தான் அகரமும் அவ்வும் உள்ளது. ஆதி என்ற தோற்றத்திற்கு முன் தோற்றமிலா அனாதியாக இறைவன் இருந்தான். அருட்பெருஞ்ஞோதியாகிய னூரொளிவென்னும் தெய்வீக ஏகரூபக் கிரணப் பிழம்பெனும் பெருந்நெய்வமாகிய பெருஞ்ஞோதியானது முதல் முதலாக **அது** என்ற னாமமும் **ஆதி** என்ற னாமமும் பிரகாசித்துக் கொண்டெழுந்து னின்றன என சாலை ஆண்டவர்கள் ஆதி மான்மியத்தில் அருளியுள்ளார்கள்.
ஆதித்தனாகிய ஆசானின் னாதமே சோதியாக இருந்து மக்களின் அறியாமையை அகற்றுகிறது. வேதமுடியாகிய அடி-முடி-னடு என்பதனை தன்னகத்தில் அறியாதவர்களே

**ஆதியைய றிந்நிடாத லீபுமீமு னூனும்சேர்த்து**
**ஆமீனென்று வாயிற்பேசுவார்**



Copyright © AMNA Trust, Chennai

**ஆதியா மில்மை யறிவதற்கே யன்றியிஃ**
**தோதும றைப்பயனொன் றில்,**

**ஆதினூ ரானியைத் தன்னில றிந்நவர்**
**ஆண்பிள்ளை யாணிமுத்தே,**

**ஆதியைத் திட்டவட்டமாய்த் தன்னிலறியார்**
**அருனரகின் விறகென்று ஊதிடுஞ்ஞங்நே**

**ஆதிதுணை ஆதியே துணை**
**ஆதியை அறிய குருவே துணை**
**ஆதி மூலமே அதிசயச்சத்தி**

என ஆதியின் சிறப்பை ஆதியே உடலெடுத்து வந்த சோதி சொரூபமாகிய சாலை ஆண்டவர்கள் பல நிலைகளில் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகு அணி** அணி என்பதற்கு வரிசை, சீர், ஒழுங்கு, அழகு, அணிகலன் என பல பொருள்கள் உள்ளன. பெரியோர்கள் தாம் அகத்தில் பெற்ற அறிவுனிலைகளின் அடையாளங்களை புறச் சின்னங்களாக அணிந்து வருகிறார்கள். சீராகிய அமானிதத்தை அழகுடன் வாக்குடைய வாணியாக அணிந்து வந்தவர்களே அழகு அணி சித்தரும் பெரியோர்களும்.

*ஜீவசகோதரர் சிரஞ்ஜீவி:* **அருட்பெருஞ்ஜோதி** அருள்+பெரும்+ஜோதி. அருள் என்பது யுகாந்த னாட்டு செல்வம். ஆசான் வாய்மையின் மூலம் செவிச்செல்வமாகிய அருட்செல்வத்தை பெற்று யுகவித்துக்களாக விண் நாட்டில் வாழும் செயலே அருட்பெருஞ்ஜோதியாகும். அகவல் என்பது அழைக்கும் செயலைக் குறிப்பது. 54 தலைப்புகளில் அருட்பெருஞ்ஜோதி அகவலை ஓர் இரவில் தண்ணீரில் விளக்கேற்றி வள்ளலார் எழுதியது என்பது அகமிய செயலாகும். அருட்பெருஞ்ஜோதி அகவல் அக புற தத்துவ ரகசியங்களை விளக்குவதாக உள்ளது என்ற பகிர்வுகளைத் தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

**26-11-2022 ~ சனிக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. மணிமொழி மஞ்சுநாதன்**

*ஜீவசகோதரர் கௌதம் :*
**கருப்பைக் கூடி கலந்த வினைத்தொடர்...** என்ற ஐம்மணிப் பொதிகை பாடலுடன் அவை இனிதே உதயமானது.

**சஞ்ஜீவி : வான வேதாந்நச் சஞ்ஜீவி - குரு வள்ளல்**
**கொடுத்த வாசுகியின் சஞ்ஜீவி**
சஞ்ஜீவி சடாமுடி மகுடராய் வரும் குருபிரானின் திருவருள், வினையின் காரணமாக மானிடச்சட்டை தாங்கி வந்து, பிறவி சூழலில் சிக்கித் தவிப்போரை மீட்டு, பிறவாமை எனும் னித்திய பேரின்ப வரமளித்து சிரஞ்ஜீவியாக வாழ வைக்கிறது.

**ஆறாவது அறிவு :** ஆசானின் ஆலவாய் சூலில் மறுபிறப்பு பெற்று ஜீவதேகத்தில் னுழைந்து, கோடி சூரிய பிரம்மப் பிரகாசனை தரிசிக்கும் ஆகம துலக்க அறிவே ஆறாவது அறிவு.



Copyright © AMNA Trust, Chennai

**வேதம் :** வந்த வேதமாகிய உன் ஆசான் ஏற்றி வைக்கும் அறிவின் நிலையிலிருந்து சற்றும் பிரளாது, ஓதாமலோதும் பிரம்மவித்தையின் மூலம் தூல, சூக்கும, காரண, மகாகாரண தேக இரகசியங்களை அறிந்து அடைவதே சென்ம சாபல்யமாகும்.

**வெளிச்சம் :** ஆறறிவு பெற்ற மனுவிற்கே புறத்தில் விளக்கின் வெளிச்சமும், அகத்தில் அறிவு எனும் ஆன்ம வெளிச்சமும் தேவை. *சாயங்நாலம் விளக்கின் வெளிச்சம் தேடும் மனு, சாவுங்நாலத்தில் எந்த விளக்கை தேடுவர்.* மெய்குருவின் னாதமே - சாவாது பிறவாது தனி முதலாக, புகையாத கனலாக, சுடாத தீயாக, சுயம்பிரகாசமாக, னித்திய சூரியனாக, ஜீவனாக, அறிவாக, னம்மிடத்தில் ஒரு தலைமுறை காலம் குடியேறி இருக்கும் **னான்** எனும் வெளிச்சப் பொருளை உணர்த்துகிறது.

**சப்தம்:** விலங்குகளுக்கு மனம் இல்லாததால் அதன் சத்தம் ஒன்றாகவும், மனுவிற்கு மனம் எனும் ஆறாவது அறிவு இருப்பதால் ராக ரகமான சப்தமாகவும், அவரவர் மன ஓட்டத்திற்கு ஏற்ப சப்தம் வெளிப்படுகிறது. குணங்களாலும் எண்ணங்களாலும் நல்லதே பழகி வர, சத்தமானது னாதமாக வெளிப்படுகிறது. எண்ணம், சொல்,செயல் மூன்றிலும் நன்மையே செய்து வர புண்ணியச் செயல் கைவரவாகும் என்பதை ஆண்டவர்கள், **எண்ணுகின்ற னல்லெண்ண மனைத்தையும்...** என்ற காலந்நாட்டிய காரணப்பா பாடல் மூலம் அருளியுள்ளார்கள்.

**இறை சூலி :** பத்து வயதான கன்னியாகிய உலக அன்னையைத் தன் சூலில் வைத்து வெளியாக்கி இன்னும் ஆக்கும் ரட்சிப்பிற்குரிய சத்தினி தாய், நம்மை அசுத்த தேகத்திலிருந்து மாற்றி, சுத்த தேகமாகிய அழியாத சுவர்ண பதிக்கு போக லாயக்குடைய மக்களாக ஆக்கி வைத்து இன்னும் ஆக்கவும் ஆக்கிக்கொண்டும் வரும் சுத்த சைதன்ய நாதரின் திருவடிகளை என்றென்றும் வணங்குவோம் என்ற பகிர்தலுடன் அவை நிறைவுற்றது.

## 29-11-2022 ~ செவ்வாய்க்கிழமை~ சிறப்பு சபை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

**மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா அவர்களின் அவதாரத் திருநாள்:**

மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா அவர்கள் ஆண்டவர்கள் திருச்சன்னிதி முன் கண்ணீர் மல்க பாடும் **அழியாப்பதி குடியேறிய னாயக மென் குருவின்...** என்ற தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை மலரச் செய்தார்கள்.



*மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா*

**குருபிரான் அருளமுதம்:**

அவத்தைத் தன் தாரமாகக் கொண்ட பெரியோர்கள் சிவபோகத்தால் நம் அறியாமையை நீக்கி அறிவை உணர வைக்கிறார்கள். அழியாப்பதி குடியேறிய குருனாயகத்தின் உள்ளத்தில் குடியேறி ஆகுகின்ற னாளே அவரவருக்குள் அவதாரம் நிகழ்ந்த திருனாளாகும். மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா, அசையா னிலையான விந்தை ரகசியத்தை அறிவித்து, ஓட்டாஞ்ஜல்லியாக இருந்த எனை ரசவாதத்தால் தங்கமாக மாற்றி, வள்ளல் பெருமான் அருளிய சின்மயம், சிவமயம், பரமபோகம் என்ற பல அரிய னிலைகளை இரக்கத்தால் எடுத்துரைத்து, என்னை ஆளாக்கி என் பாவங்களைப் போக்கினார்கள். என் பேரெடுத்து என் வடிவு மாற்றி - உன் பேரு



Copyright © AMNA Trust, Chennai

வைத்து உன் வடிவம் தந்ந உத்தம சுத்த உறுதி னாயகமான பரிசுத்த ஆவி தெய்வம், ஐயா மூலம் அளித்த ஞானத்தை எங்கு பேசினாலும், **நீங்நுறா னேர்மை யாளர் னினைவிலென் னாளும் னிற்பர்**. **உன்றிருப் பாதத் தாள்மலர் விட்டினியகலே னகன்றாலென் னுயிர்விடுவேன்**.

நிழல் போலும் பிரியாது ஆளும் குருவின் திருவடி விட்டு அகலாதிருக்கும் திருவடிப்பேறு பெற்றவர்களாக நம்மை ஆக்கிக்கொள்ள வேண்டும். அதற்கெனவே மலர்மிசை ஏகி மாணடி சேரும் படிப்பாக மூலமந்திரம், பாத பூஜை, மகா சங்நல்ப மந்நிரம் ஆகியவற்றை ஆதி மார்க்க னீதி அவை செயலாகக் கொண்டுள்ளது. ஓடும் சுவாசம் ஒடுங்குமிடத்தை அறியும் ஞானத்தை, **ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும் காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாளர்** என்கிறது திருமந்திரம். இதனையே ஆன்மாவிற்கு அமிர்த வர்ஷிப்பாக பெரியோர்கள் அருள்கிறார்கள். **நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்** என்றதின்படி அவரவரின் நாமத்தை அறிவதே தன்னையறிதல் ஆகும்.

இருகாலி விலங்குகளாக இருந்தவர்களை பிரித்தெடுத்து ஏறுருவாக, செவியிற் சுவை உணர்ந்தவர்களாக ஆக்கி வைத்த பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடியை என்னாளும் போற்றி வணங்குவோம். தேடுங்கள், தட்டுங்கள், கேளுங்கள் என்பது மந்திர வார்த்தையாகும். தேடுகின்ற பொருள் தெரிந்து தேடவேண்டும். சொல்லக விளக்காகிய ஜோதியின்றி, நெருப்பாலாகிய விளக்கால் அறியாமை இருள் விலகாது. நம் சித்தத்தில் சிவன் எனும் வாடாத தீபத்தை ஏற்றி, அது அணையாதிருக்க தூண்டு குருனாதரின் துணை வேண்டும். இருளில்வழி தெரியாத நம் இளம்பருவத்தில் அருள் விளக்காகிய அன்பெனும் அழியாத தௌஹீதை அன்பளிப்பாக அளிப்பவரே மெய்க்குருபிரான்.

அழியும் இப் பொய் உடலுள், அமாவாசியாக இருக்கும் மெய்யைக் கண்டவர்க்கு அது கன்சுல்மகபியா மையாக, உள்வாசிச்சிமிழியின் மையாக, அழியாத மெய்ப்பொருளாக உள்ளது. அழியாததைக் காண்பதே மூன்றாவது கண்ணாகும். முக்கண்ணனாக வரும் ஆசான் அருளால் அகக்கண்ணான மூன்றாவது கண் திறக்கப் பெறும்போது ஈசனின் வல்லபத்தையும் ஈஸ்வர சொரூபத்தையும் காணலாம். வினையால் வந்த இத்தேகத்தின் வினையை அறுக்கும் ஆயுதங்களான வேல், வாள், சூலம், சங்நு, சக்கரம், தண்டாயுதம், பராங்நுசம், சாட்டை ஆகியவை சன்னதங்களாக இறைவனின் திருக்கரத்தில் உள்ளது. முக்குணங்கள் கடந்து னிர்க்குணமான இறைனிலை பெற்றவர்கள் இறை சன்னதங்களை தங்கள் திருக்கரத்தில் வரமாகப் பெற்று அசுர குணம் பெற்றவர்களை சங்காரம் செய்து, சுரர்களாக ஆக்கிய திருநாளே அவரவருள் அவதாரத் திருனாளாகும். அப்படியான அவதாரமானது எல்லாக் காலங்களிலும் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது.

**தாயளித்திட்ட செல்வம் தந்தையரளித்த செல்வம்...** எனும் குரு ஸ்தோத்திரப் பாடலுடன் இன்னாளில் பிறந்தநாள் காணும், ஜீவசகோதரர் சங்கர் குருபிரானின் வாழ்த்தைப் பெற்றார். நாம் உணர்ந்த மெய்யை நம்மோடு பயணித்து கொண்டிருக்கும் மக்களுக்கு கொண்டு சேர்ப்பது நம் கடமை என குருபிரான் அருளி, னல்ல கதினிலை இன்னிலவுலகெங்நும் விளங்கச் செய்ய வேண்டி பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடி போற்றி வணங்கி அவையை நிறைவு செய்தார்கள்.



Copyright © AMNA Trust, Chennai 

## இசை வகுப்புகள்
## தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்

### 13-11-2022 ~ ஞாயிற்றுக்கிழமை

**பாதலந் நைத்தி டுமெய்ப் பாலறி வித்து ஆண்டோன்** என்ற குரு ஸ்தோத்திரம் பாடல் விருத்தமாகப் பாடுவதற்கான பயிற்சியும், தொடர்ந்து

**காவ லானபு ராதன வேதியர்**
**மேவ லானவ ரோதயென் னாதர்மேல்** என்ற பாடலும் அதனுடன் சார்ந்த முதல் 16 வரிகளும் பாடுவதற்கான பயிற்சியும் அளிக்கப் பெற்று அவை நிறைவுற்றது.

### 20-11-2022 ~ ஞாயிற்றுக்கிழமை

**வஞ்ஞ மில்பர மார்த்தத வத்தினர்**
**அஞ்ஞ லென்னும றைக்கிழ வள்ளலென்** என்ற குரு ஸ்தோத்திரம் பாடலைத் தொடர்ந்து, மார்க்க மொழி கீதங்களில் உள்ள குரு ஸ்தோத்திரம் பாடல்கள் அனைத்தும் தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை நிறைவுற்றது.

குரு வாழ்க ! குருவே துணை !!

*எவரை னினைத்தமாத்திரத்தால் ஞானம் தானே யுண்டாகுமோ, அத்தகைய குருவே சகல சம்பத்துக்களுமாவர். ஆதலால் குரவனைச் செவ்வையாய்ப் பூசித்தல் வேண்டும்.*
***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

# நவம்பர் 2022 மாத னிகழ்வுகள்

**25-11-2022** வெள்ளிக்கிழமை, பவானியில் இருந்து சன்மார்க்க மரபை சார்ந்த சகோதர, சகோதரிகள் குருபிரானை சந்தித்து நல்லாசி பெற்று மகிழ்ந்தார்கள்





Copyright © AMNA Trust, Chennai

**29-11-2022:** செவ்வாய்க்கிழமை சிவகாசியில் நடைபெற்ற குழந்தைசாமி ஐயாவின் அவதார திருனாளில் நமது குருபிரான் கலந்து கொண்டு ஜீவசகோதர சகோதரிகளுக்கு நல்லாசி வழங்கினார்கள்.



# ஆதி மார்க்க னீதி அவையின் 2022 டிசம்பர் மாத அவை நிகழ்வுகள்


Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் வர்ஷிப்பு

ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே, எதார்த்த நன்மன சற்சன மக்களே, ஆதி மார்க்க னீதி மொழியின் மின்னணு சஞ்சிகை, 2022ம் வருட இறுதியின் டிசம்பர் மாத பதினெட்டாவது இதழாக மலர்ந்துள்ளது. வருடத்தின் இறுதி என்றாலும் நமது பெருமான் பிரம்மப்பிரகாச மெய்வழிச் சாலை ஆண்டவர்கள்,

**வருடம்வ யதனைத்தும் மண்புவிக் காயிற்று**
**வருடமொன் றினிஇல்லையே - மேலும்**
**வரும்சந்ர பருதிக்கும் வருடங்ங ளிதுகடை**
**வருடமொன் றிலைசாவர்ணி**

**வளைந்நெடெக் காளம் சிங்ஙா - துந்நுமி**
**தொடர்ந்நெடுத் தடியும் சிங்ஙா.**

என தங்களின் **மெய்ஞானப் பகுப்பு பா** பாடலில் அருளியுள்ளார்கள். இதிலுள்ள செய்திகளை ஒட்டுமொத்தமாக சுருட்டி மடக்கி திரட்டி தனதிடத்து அடக்கி கொள்கையாகவும், கோட்பாடாகவும், குறியாகவும், குணமாகவும், அன்றாடம் நடக்கக் கூடிய நிலைகளின் தலையாக வைத்து செயலாக்கி வருவதே ஆதி மார்க்க னீதி அவை. ஆண்டவர்கள் அருளியுள்ளபடி இனி வருடம் ஒன்று இல்லை என்றாலும் 2022 என்பதை 2023 என மாற்றித்தான் எழுதுகிறோம். அப்படியே எழுதினாலும் மாறாதது நம் விதி எழுத்து. ஆண்டவர்கள் அருளிய தலைவிதி எழுத்தை மாற்றி எழுதக்கூடிய, வேத வேதாந்த ரகசியங்கள் அனைத்தையும் சாட்சியாக வைத்தே விதியை மாற்றி மதியை பதிப்பிக்கும் ஓர் அரும் பெரும் திருப்பணியை ஆதி மார்க்க னீதி அவை சிரம்மேற் தாங்கி செய்து வருகிறது. இதனை செயலாக தன்னிடம் உணர்ந்த, இந்த அவையின் அங்கங்களாகிய மக்களின் புரிதல்களே ஆதி மார்க்க நீதிமொழி எனும் மின்னணு சஞ்சிகையாக ஒவ்வொரு மாதமும் உதித்து வருகிறது. வயது வாழ்நாள் வருடத்தின் ரகசியமும், சந்திரனும் பரிதியும் ஒன்றான நிலைகளை எல்லாம் செயலாக உள்ளடக்கிக் கொண்டு உதயமாகி வரும் இம்மின்னனு சஞ்சிகையிலுள்ள விஷயங்களை மக்கள் வெறும் எழுத்தாக எண்ணாமல் அவரவரின் உயிரான ஜீவன் எனும் அறிவுக்கான ஒன்றாக எண்ணி ஆகிக் கொள்ள வேண்டும் என்பதே என்னுடைய மிக மிக மிக அன்பான வேண்டுகோளாகும். இதிலுள்ள எழுத்து வடிவங்கள் யாவும் எழுதாத எழுத்தின் ரகசியத்தை அறிய வைக்கும் ஒன்றாக, உருவத்தில் இல்லாத அருவத்தை, உருவத்தில் கொண்டு வந்து சொல்கின்ற மெய்ஞான நிலைகளை உள்ளடக்கியதாகும். எனவே எதார்த்த உள்ளம் கொண்டு இதனைப் பின்தொடரும் மக்கள் யாவரும் இதனைப் பார்த்து பயன்பெற பரிசுத்த ஆவி தெய்வத்தை வேண்டி வாழ்த்துகிறேன்.

நன்றி. நமஸ்காரம்.

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**


Copyright © AMNA Trust, Chennai

*"மவுத்தாகிய சாவு" னம் தலைமேலே காத்துக்கொண்டே யிருக்கிறது. அதை னம் வீரம் தடுக்குமா? பொருள் தடுக்குமா? உற்றார் தடுப்பாரா? பிராந்து எடுத்துச் செல்லும் குஞ்சுபோல் விழிக்கும் அந்நக்காலம் வரும். அவ்வாறு எமன்கையில் பறக்கப் பறக்க விழிக்கவா னாம் பிறந்நோம்? சாயுங்ஙாலம் னாலு மணிக்கெல்லாம் இருட்டு வரப்போகிறதென்று னாம் ஒரு விளக்கைத் தேடுகிறோம். சாவாகிய ஒரு பெரும் இருட்டு வரப்போகின்றதே. அதை ஒருவரும் எண்ணிப் பார்க்கிறார்களில்லையே! ஒருவன் தனக்குத்தானே உதவி தேடிக்கொள்ள வேண்டும். தன் தன் கையில் ஔடதம் வேண்டும். மனைவி கை னன்றாக இருந்நால் னமக்குப் பிரயோஜனமா? மனைவி மக்கள் முதலிய இவர்களெல்லாம் னமக்குத் துணை இல்லை. ஆகவே எவர் வந்நும் உதவமுடியாத அந்ந ஆபத்துக் காலத்தில் எமனுடைய அந்நச் சந்நிப்பு னேரத்தில் உதவக் கூடிய ஓர் சொந்நக்காரரை, ஓர் னேசரை அடைந்நு, இன்றே அவரை னம்மவ ராக்கிக்கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறோம். எந்ந ஒரு அறிவும், ஆயுதமும் எட்டித் தீண்டப்படாத அந்ந மகா மகா அருந்நலத்தில் வந்நு உதவுபவரை னேசித்துக் கொள்ளவேண்டு மென்கிறோம்.*

***~ சாலை ஆண்டவர்கள்***



Copyright © AMNA Trust, Chennai

**01-12-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்**

**தன்னே ழின்னபு சின்புற மேவுற**
**வீரபு ரப்புரமாய் ...** என்ற தோத்திர பாடலுடன் அவை நிகழ்வுகள் மலர்ந்தன.

**குருபிரான் அருளமுதம்:**

மெய்ஞ்ஞான வாழ்வைப் பெறுவதற்கான வழி என்பது வேதசாட்சியுடன் அதனை அருளும் சற்குருபிரானின் வாய்மையில் னம்பிக்கை வைத்து னடப்பதுவேயாகும். தூணாகிய கம்பத்திலிருந்து நரசிம்மர் வெளிவந்ததால், வைணவத்தில் அவருக்கு கம்பராஜன் என்றும் சைவத்தில் ஏகாம்பரன் என்றும் பெயர். உண்மை அறிந்தவர்களுக்கு இரண்டும் ஒன்றே.

**சமரசம் :** இறைவனின் சுத்தத் திருவடி பற்றித் தொழுது தன்னில் இறைவனை அறிந்தவர்களுக்கே, ரசமாகிய ***சுவாசம்*** சமமாகும் வித்தையாகிய சமரசமும் சமாதானமும் தெரியும். மனிதனின் சுவாசம் இடகலை, பிங்கலை, சுழிமுனை என வயதை போக்கும் குற்றமாக, வாளாக இருப்பதையே திருவள்ளுவர்,

**நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்**
**வாளென உணர்வார்ப் பெறின்** என்கிறார்.

சரமதுவே சமரச சன்மார்க்க பஞ்ஞாட்சரம் எனவும், சமரச வேதம் – சாலை அமரர்கள் னீதம் எனவும் சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**வான்மதிக் கொரல் திருவாக்கியம் எண் 92 :** கலிமாப் பொருளை அறியாதவன் கசப்பு வெளியாகி பாவி என்ற அடையாளத்துடன் சாகிறான். தன் ஜீவனைப் பார்க்க இச்சை இல்லாதவனுக்கு மெய்யை பற்றி பேசினால் புரியாது. அவரவரிடத்திலும் மிக முக்கியமான, தன்னால் காண இயலாத முகத்தை ஒரு தெய்வக் கண்ணாடி உதவியுடன் சந்திக்கும் செயலே சைவம், இஸ்லாம் என்பதாகும்.

*ஜீவசகோதரி லாவண்யா:* **காமீல்கள் னோக்கம்** பாடல் - **இசைமொழி காட்டிமேலா மின்பொருள் காட்டுவார்போல்...** நம்மிடம் உள்ள மின்பொருளாகிய அறிவை அறிவித்து மெய்யில் இசைக்கச் செய்வது ஆசானின் னாதமேயாகும். எல்லை திசையற்ற ஓர் இடமெனும் அறம் செய்வீடாகிய ஜீவன் இருக்கும் திசையையும், அதற்கான குறிகளை அகத்திலும் புறத்திலும் சந்திர, சூரிய, நட்சத்திர நிலைகள் யாவற்றையும் வெண்பிறை சூடிய ஜீவ முத்தராகிய ஆசானவர்கள் அருளி, அதற்கப்பாலும் ஏற்றி வைக்கிறார்கள்.

*ஜீவசகோதரர் வெங்கடேச முத்து:* அகரமுதல், அவ்வு முதல், எழுத்து முதல், ஆதி முதல், பகவன் முதல் என ஐந்தும் கைமுதலாக கொண்டதுவே முதல் திருக்குறள். ஞானதேகம், பிரணவதேகம், சுத்தஉடம்பு, அழியாதஉடம்பு, வானவர்மேனி, சர்வ மதங்களின் மூலமந்திர ரூபி, ஈரேழு உலகு, ஏகாட்சரம், ஏழ் கணுக் கரும்பு, முப்பொருள் கோல விளக்கம், வேதமுடி, அமானிதம் என விளங்கும் அகமிய ரகசியங்கள் யாவும் ஒரு மெய் குருபெருமானின் இரக்கத்தால்தான் அறிய முடியும். காமாட்சி அம்மன், பட்டினத்தார் இவர்கள் கையில் இருக்கும் கரும்பு உணர்த்தும் ரகசியமும் இதுவே.

**புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே**
**ஒப்புரவின் நல்ல பிற** என்ற குறளும்,

**இலஞ்ஞுழி சுழித்து ஏகமாய் விம்மி எழுந்நன எழுத்திலா தெழுத்தின்...** என சாலை ஆண்டவர்கள் அருளிய பாடலும் புத்தேளின் சிறப்பை குறிப்பதாக உள்ளது. சாகாத்தலை-வேகாக்கால்-போகாப்புனலாக உள்ள புத்தேள் என்பதனை சன்மார்க்க மரபு என்றும் இதை பெற்றவனே சாகாத சன்மார்க்கி என வள்ளல்பிரானும் அருளியுள்ளார்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகு அணி சித்தர்** பாடல்: **எண்சாண் உடம்படியோ ஏழிரண்டு வாயிலடி...** எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் என்பர். ஞான நிலை அறிந்த பெரியோர்களே சிரசில் ஒன்பது வாயிலை காட்டித்தர வல்லவர்கள். இதனை திருஞானத் தாழிசையில்,

**அல்லற்படு மோரொன்பது வாசற்பெரு வாசல்**
**ஆரும்மறி வார்கள்களறி யார்கள்ஒரு வாசல்** எனவும்

**ஒன்பது வாச லுட்தா ளிடவும்**
**ஐம்புலக் கதவை யடைப்பதும் காட்டி** எனவும்

ஞானஅகவல் பாடலில் சாலை ஆண்டவர்களும் அருளியுள்ளார்கள். நம் பஞ்புலன்களின் தலைவனாகிய மனம் அல்லலாக இருப்பதை அறிவாக, பொறிகளாக மாற்றினால் மகிழ்ச்சியாக வாழலாம்.

*ஜீவசகோதரர் சிரஞ்ஜீவி:* **திருஅருட்பா:** நமது அறியாமை அகற்றி ஞான அறிவை வழங்கும் ஆசானின் னாதமே ஆதி, சோதி, வித்தில்லாவித்து, **னா**ரதம், மதி**னா** என்பதாகும். இந்த தூலம் உள்ள போதே ஞானம் அனுபவிக்க வேண்டும். அருட்பெருஞ்ஜோதி அகவலில் நான்கு முறை அருட்பெருஞ்ஜோதி என கூறுவது நான்கு தேக ரகசியங்களை உணர்த்தும் ஒன்றாக உள்ளது. சோதியாகிய இறை வடிவமே திருவண்ணாமலை தீபமாக, கற்பூர தீபமாக, சாகாத்தலை, வேகாக்கால், போகாப்புனல் என்ற சோதி வடிவாகும். இப்படியான அருட்பெருஞ்ஜோதியை சன்மார்க்க மரபாக குருபிரான் மூலம் கண்டவர்களுக்கே தண்ணீரில் விளக்கேற்றி பெருமானார் அகவல் எழுதியது சத்தியம் என்பது துலங்கும் என்ற பகிர்வுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

## 03-12-2022 ~ சனிக்கிழமை சபை
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிராண இரகசியமுணர்த்தும் **அறுபுரி னூல் பிரானிலை யறியான்....** என்ற ஞான முறையீடு பாடலுடன் அவை நிகழ்வுகள் மலர்ந்தன. பிராணாம்பிகைத் தாயாகிய ஜீவனை தரிசித்த பெரியோர்கள், தன் னாத வல்லபத்தால் னம்மை மறுபிறப்பிலாக்கி, ஆறு படைவீடாகவும், அறுபுரி னூலாகவும், ஐந்தெழுத்து மந்நிரமாகவும் விளங்கும் இறை இல்லத்தில் குடியேற்றுகிறார்கள்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண்: 112** எமனுடைய பெலத்தை முறியடிக்கக் கூடிய ஆயுதத்தை தன் கைப்பந்தாகப் பெற்று வரும் மெய்ஞான செம்மல்களின் உத்தரவுக்கு இணங்கி னடந்து, வேத வழிப்படி வாழ்வதே அசலான சொர்க்கபதி வாழ்வு. இதன்றி தன் யோசனைப்படி னடப்பவர்கள் சாவு எனும் னரகக் குழியில் வீழ்கிறார்கள் என வேதம் கூறுகிறது.

*ஜீவசகோதரி லாவண்யா:* **காமீல்கள் னோக்கம்**: **சென்ற னாட் சென்றிட் டாலும் செல்லு னாட் சென்றி டாது....** னம் வயது வாழ் னாளானது, புலன் வழியாக அழிந்து கொண்டே இருக்கிறது. **புலன்வழி பற்றி யோடிப் போக்கியென் வயதை யெல்லாம்...** சாகாக்கலையின் மூலம் வாழ்னாளை மீட்டித் தந்து, மீண்டும் புலன்வழி அழித்திடாது காக்கும் புண்ணிய செயலை கற்பிப்பவரே குகன். ஜீவகுகை தோறும் வீற்றிருக்கும் மறுவிலா குகனின் திருவடியில்

*சம்சார விருக்ஷத்தில் ஏறியவர்கள் னரகமாகிய சமுத்திரத்தில் விழுகின்றார்கள். அவர்களெல்லோரையும் எவர் கரையேற்றுகின்றாரோ, அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.*
***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

சரணடைந்து, அவர்கள் பெருங்கருணை கொண்டு அருளுகின்ற அரும்பெரும் நிலைகளைப் பெற்று சாதிக்கும் னாளே ஞானனாள் - திருனாள்.

**குருபிரான் அருளமுதம்: அமுத கலைக் ஞான போதம். இரண்டாம் காண்டம்:**

பிரம்மோதய மெய்வழிச் சாலை ஆண்டவர்கள்,

**புகன்றது கேள் கலைக்ஞானம் இரண்டாம் காண்டம்**
**புதல்வரெந்நன் மாணவர்க்குப் புதைய லாகும்**

என்ற ஆசீர்பாதத்துடன், ஜெகத்திலுள்ளோர் இச்சை கொள்ள, பாற்கடலைக் காய்ச்சி வடித்து தெளித்து வேதாந்தமாக அருளியுள்ளார்கள். பராசுரர் புத்திரரான சுகப்பிரம்ம ரிஷி முதல், ஒய்சுல் கர்ணையாளரும், ஜனகாதி முனிவர்கள் நால்வரும் குரு தட்சிணாமூர்த்தியிடம் வாசிமலர் பாதம் போற்றி வாக்கிறந்த பூரணமாகப் பெற்ற மெய்ச்செயல், இன்றளவும் னிஜ ரூப தரிசனையாக னிகழ்ந்து கொண்டிருக்கிறது.

**காப்பான கள்ளிமுது காட்டி லாடும்**
**கால்கண்டு மகிழ்ந்து களி கூர்ந்து னாளும் ....**

கள்ளி எனும் விஷத்தை முறித்து அமுதமாக மாற்றிக் கொண்டவர்களே கள்ளிமுது காடன். அமுதம் சிந்தும் தமிழின் மூலம் செங்கமலத் தாயின் பாதம் போற்றும் பிரம்மவித்தையை குருமுகமாக பழகித் தேர்ந்து, சந்திரனும் சூரியனும் சேர்ந்து வளர்மதியானவுடன் னபுசுகளான மாயசத்திகள் மடிகிறது என்ற மெய்ச்செயலை உணாத்துவதே இத்திருப்பாடல்.

**காணரிய பெருங்காட்சி எனது ஆத்ம காமனாகிய குருவே...**

னின்றோர்கள் னிலையறிந்து கொடுக்கும் வள்ளலின் திருவடி கமலத்தில் வாழ்பவர்களின் குலமானது, சீர் சிறப்பு ஓங்கி னிற்கும் என்ற ஆசீர்பாதத்துடன், தன் உளமாகிய இறைவனை காப்பாக வைத்து இப்பாடலை அருளியுள்ளார்கள்.

**எந்நை சுக்கிலாம் பரனாட்டில் வாழும் னாளில் ....**

மனித பிறப்பின் உற்பன இரகசியம் உணர்த்தும் இத்திருப்பாடல், தந்தையின் எண்ணமாகிய சுக்கிலாம் பரனாட்டில் நெருப்பு வடிவாக இருந்த னம்மை தாயின் சுரோணிதப் பையில் விழச்செய்து, அழற்காற்று, துருசு அவஸ்தையால் 6,48,00,000 கணப்பொழுது நொந்து கொண்டிருந்த னம்மை காப்பாற்றி, மும்மலக் கணவாய் துயரிலிருந்து கடத்தி, தோன்றாத் துணையாக இன்றளவும் தொடர்ந்து னின்று இரட்சித்து கொண்டிருக்கும் எம்மானை தொழுவோமாக!

வள்ளல் பிரான் தனது ஆறாம் திருமுறை (வசன பாகம்) பெருவிண்ணப்பத்தில், ***பகுதிப் பேரணு உரு, பூதப் பேரணு உரு, பௌதிக பிண்ட வடிவு*** என்ற படினிலைகளாக பிண்ட உற்பத்தியின் இரகசியங்களை அருளியுள்ளார்கள்.

**மாசிலான் மறைப்படியும் எண்ணில் கோடி மந்நிரங்ஙள்...**

வேதமாமறைகளில் பொதிந்துள்ள மாசு மருவற்ற எண்ணில் கோடி மந்நிரங்களையும் ஒரு மொழிக்குள் வைத்து இரண்டெனும் வாசியின் வல்லபத்தை அருளி, னம்மை துக்க உடலிலிருந்து னீக்கி சுக உடலுக்குள் புகுத்தி பிறவா னெறி அளிக்கும் பிஞ்ஞகனாகிய குருபெருமானின் பொன்னடிகளை போற்றி வணங்குவோம்.

**எழில்பல கலைக ளிலகு செம் மலரே ...**

ஆசானின் ஓரிதழ் தாமரையாகிய செம்மலரானது, ஏழ்னிலைக் கம்பமாக னின்று விளங்கும் திருப்பாதத்தை அறிவிக்கும் மலையாக உள்ளது.

**திருவெனு மிமை யானா டுடையவர்... (குரு முறாதி)**

இமையா னாடெனும் பனிச்சிகர சலாசன பீடத்தில் ஏறிய பெரியோர்கள், புலன்களை பளிங்னெனும் தெய்வக் கண்ணாடியாக மாற்றிக்



Copyright © AMNA Trust, Chennai

கொண்டவர்களாகவும், மாணாக்கரின் உள்ளத்தை பண்படுத்தும் பரிசுத்தவானாகிய துளப வேந்தராகவும் னின்று விளங்குகிறார்கள். தன்னை சார்ந்த மக்களுக்கும் அறிவுக் கண்ணை திறப்பித்து தூங்காமல் தூங்கி சுகம் பெறும் பிரம்மவித்தை செயலை கற்பித்து சுகவிளைவு வீட்டில் குடியேற்றி வைக்கிறார்கள்.

**சுகவிளைவு வீடுடைய னீடு சபையோரே....**

சுகவடிவினரின் சுகம் னல்கும் வைத்திய னாத மருந்தாகிய செம்மை உரையானது, அவரவருக்குள் சொந்த தேகமாக, மூலமந்திரம், பஞ்ஞாட்சரம், அஷ்டாட்சரம், பிரணவம், கலிமா, காயத்திரியாக விளங்கும் சுக வீட்டை புகலிடமாக்கி னம் சிக்கல்கள் அனைத்தையும் தீர்க்கிறது. ஜெகமுழுதும் சாந்தி எனும் சலாமத்தாகிய சுகத்தில் சுகித்திருக்க வேண்டி, சாந்தி மூர்த்தியராம் சற்குரு பிரானின் சன்னிதியில் தொழுது போற்றி பணிவோமாக என்ற அருளுரைகளுடன் அவை இனிதே நிறைவுற்றது.

**04-12-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா கோபிநாத்**

**அவ்வலில் தையிபான உட்பொருளாய்...** என்ற குருமணிமாலை பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**

அகரமே அகதியத் என்பதாகும். அகரம் அறிந்தோன் அனைத்தும் அறிந்தோன். மனிதனிடத்தில்தான் அகமியமாக நான்கு தேகங்கள் உள்ளன. அகது-உகது-வாகிது என்பதே உடல்-உயிர்-ஆன்மாவாக உள்ளது. பிரணவ தேகமாகிய ஞானதேகம் அழியாத தேகமாக உள்ளது. சூக்குமத்தில் செயல்படும் ஆற்றல் உள்ள மனிதன் அன்றி மற்ற ஜீவபேதங்கள் யாவும் உடலோடு மட்டுமே செயல்படுகின்றன. மனிதன் தன் அசலான வேலை செய்வதற்கு தந்த அசலான வயதைக் கொண்டு நகலான வேலை செய்வதால் அவனுக்கு வருவது அசலான தண்டனையே. விதி என்பது உலகமாகவும், அது இறைவனால் உண்டாக்கப் பெற்றதாகவும் உள்ளது. நாம் காணக்கூடிய அனைத்திற்கும் வினை உள்ளது. வினை முதல்வனாகிய பிரம்மம் நம்மிடத்தில் மனமாக, அறிவாக, நானாக, கவனமாக நின்று விளங்குகிறது. ஒரு மெய் குருபிரானிடம் அறிவைப் பெற்ற பின்னரே தோற்றமில்லாமை எனும் அரூப வடிவத்தில் தான் சர்வமும் உள்ளதை அறிய இயலும். எல்லாம் எதன் மூலமாக உண்டாகி, காக்கப் பெற்று, மீண்டும் எதனுள் சென்று ஒடுங்குகின்றதோ அதன் பெயர் பிரம்மம். ஜீவாத்மாவின் ரகசியம் அறிந்தவனே பரமாத்மாவை அறிய முடியும்.



*திரு. சாலை ரவி அப்பா அவர்கள்*
*நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை*

*ஜீவசகோதரர் கௌதம்:* **மூச்சு லயமாகிய மனோலயம்...** ஒரு மெய் குருபிரான் கிட்டாத மூடர்களே மூச்சை இழுத்து விடுவது வாசி யோகம் என தவறாக எண்ணி வாழ்நாளை வீண்நாளாக்குவர். நெருப்பும் காற்றுமாக உள்ள மனமே புலன் பொறிகளுக்கு தலைவனாக உள்ளது. பூத பூதியங்களும் மனதிற்குள்தான் அடக்கம்.



Copyright © AMNA Trust, Chennai

மனிதனுக்கு மட்டுமே கொடுக்கப் பெற்றுள்ள தனிச் சீதனமாகிய ஆறாவது அறிவே அமானிதமெனும் மனம்.

**பஞ்ஞுபூ தமும்க டந்நுமே மெள்ளமுப் பாழையும் தள்ளியங்நே...** பஞ்ஞுபூதத்திற்கும் அப்பாற்பட்ட மனிதனிடத்தில் அதிசயப் பொருளாக விளங்கும் ஜீவனை அறிவதற்கு பிரதானமாக இருப்பது மூன்றாவது கண். ஒரு மெய் ஆசானின் னாதமாகிய வெளிச்சப் பொருள் மூலமாக அக்கண்ணானது திறக்கப்பெற்று பிரம்மத்தை அறிந்து பிரம்மமாகவே வாழ வேண்டும்.

*ஜீவசகோதரர் சீனிவாசன்:* **தேள் கொடுக்காம் குலதெய்வம்** என்பது ஏகாட்சரமெனும் குலதெய்வமாக உள்ளது என்ற பகிர்வுகளை தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

**04-12-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்**

**அரியானை அறியவைத்து அந்நணனா**
**யெனைப்பிரட்டிப் பிறப்பித் தாரும்** என்ற தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரி பொன்லட்சுமி:* னித்தியத்தை அறிய வைத்து மக்களுக்கு னிஜனிதி லாபகர வசந்த காலத்தை வழங்குவதே ஆதி மார்க்க னீதி அவை. இக்கடத்தினுள், யாரும் கண்டறியாத அக்கடத்துள் நம்மை ஆக்கி வைப்பவரே மெய்யான குருபிரான். அறுசுவைக்கு ஜாதி மத பேதமில்லை. இதை உணர்ந்து னித்திய உடலில் குடியேறி வாழவே இந்த தேகம் எடுத்துள்ளோம்.

**குருபிரான் அருளமுதம்:**

அறிவை அறிய வைப்பதுவே உபதேசம். அறிவு அறிந்தவர்களுக்கே வாய்மை துலக்கம் கைவரவாகும். தேகம் மண் தீண்டா முக்தி அளிக்கும் செயலுடையதும், இறைவனை அறியக்கூடிய ரகசியங்களை உள்ளடக்கிக் கொண்டு இருப்பதும், மெய்யையும் பொய்யையும் பிரித்துக் காட்டும் தூலமாக இருப்பதும், வந்த வேதமாகிய ஆசான் அவர்களே. அவரவரிடத்திலும் உயிர் மெய்யாகவும் உடல் பொய்யாகவும் உள்ளது.

*ஜீவசகோதரி அருணா:*

**வேதம்:** மா மறையாக, னான் மறையாக, சுயம் பிரகாச னித்திய ஆனந்த பிரம்ம சொரூபத்தை தன்னில் அறியவும், ஆதி, அனாதி, ஜோதி, அடி-முடி-னடு, அண்டம், பிண்டம், சாதிலிங்கம், சஞ்ஞீவி, கஞ்ஞா என்ற அனைத்தையும் அறிய வைப்பதும் வேதம். அதுவே வாலாம்பிகை பாதமாகவும் ஆசான் திருமேனியாகவும் உள்ளது. ஆசானின் வாய்மையே வேதத்தை அறிய வைக்கும் னாதமாகும்.

**வேதாந்தம்:** அசத்தை நீக்கி சத்தை தருகின்றதும், மனதை அறிவாக மாற்றும் யுக்தியை அருளுவதும், பிறவா நிலையை அருளுவதுமான ஜீவ முக்தர்களின் வாக்கே வேதாந்தம்.

**கிரந்தம்:** எமன் எல்லையில் வெற்றி தருகின்ற மெய்க்கல்வியாக இருப்பதும், முடிச்சு என்பதாக விளங்குவதுமே கிரந்நம். அறியோம் னற்றாள்கள், குரு வாழ்க குருவே துணை, ஹரி னமோத்வ சிந்நம் என்பதையே பிரம்மமுடி என அருளுகிறார்கள்.

**னற்றாள்:** ஒரு புள்ளியில் இருந்து தொடங்கி ஒரு தலை முறைக் காலம் தொடர்ந்து னின்று நம்மைக் காக்கும் திருவடியே னற்றாள்.

**னற்று ணைற்றாள்**
**சித்தரிக்கு ரத்திபெற்ற முத்திரைக்கூ டஸ்தரட்ண**



Copyright © AMNA Trust, Chennai 

**ரேறே மேடியா** (ஆடலங் ஙன்னி)

என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். சித்தரிக் குரத்தியான தாயே எல்லா உயிர்களையும் வழி னடத்தும் னற்றாளாக இருக்கிறார்கள். சிவபெருமானாகிய குருபெருமானின் வாய்மைக்குள் ஆழ்கின்ற போதே தன்னையறிந்து னித்திய வாழ்வில் குடியேற ஏதுவாகும்.

**குருபிரான் அருளமுதம்:**

ஆதி மெய் உதய பூரண வேதாந்நம்: ஆதியை முதலில் அறிந்த பின் தான் மெய் என்பது தெரிந்து உதயம் ஆகும். ஏக பராபரப் பொருளே பூரணம். ஆதி மெய் உதய பூரணத்தை உள்ளடக்கியது வேதாந்நம். னீதி எனும் பொருளை அறிந்தால் வேதாந்நத்தை அறியலாம். னன்மை, தீமை, பொய், மெய், இருப்பது, இல்லாதது இவற்றை அறிவிப்பதும், அறிவாக, ஜீவனாக, சிவனாக, இறைவனாக இருப்பதுமே னீதி. அதன் வழியே மெய்வழி. னீதி வழி பற்றி எல்லோருமே இந்த இன்பம் அறிந்து வாழ்ந்திட வேண்டும் என்ற ஆசானின் ஆசீர்பாதத்துடனும், தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவுற்றது.

## 07-12-2022 ~ புதன்கிழமை ~ திருக்கார்த்திகை தீப சிறப்பு சபை
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

**சத்திய மெய்வழிச் சபைச் சாலையைப்**
**பத்தி கொண்டு படைத்தின்னாள்...**

என்ற பாடலுடன் பௌர்ணமி தின அவை நிகழ்வுகள் மலர்ந்தன. அவரவரின் நாமமாக உள்ள **நான்** எனும் பொருளை அறிவிப்பதே வருங்கால தீர்க்கதரிசன பிரவாகம். அழல் உருவான இறைவனை மாறா அதிசயமாக நம்மிடத்தில் தீர்க்கமாக கண்டு, அறியாமை எனும் இருள் விலகி அறிவு பிரகாசமாக ஆகுவதே கார்த்திகை தீபமாகும்.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* திருவண்ணாமலை மகாதீபம் செம்படவர் எனும் பருவத ராஜகுலத்தினரால் பரம்பரையாக ஏற்றப்படுவது. பஞ்சபூதங்களில் ஒன்றான புறத்தில் காணும் நெருப்பு அருள் தரும் ஜோதி அல்ல. சுயம்பிரகாச நித்தியானந்த பிரம்ம சொரூபமே அழியாத அசலான தீபம். அடி-முடி-நடுவின் தத்துவ ரகசியமே மகாதீபம் ஏற்றும் செயல். அறிவுக்கண் கொண்டு காணும் சான்றோர்களின் சொல்லக விளக்காகிய ஆதி ஒளியெனும் மகாதீபம் மூலமே நம்மிடமிருக்கும் **நான்** எனும் பிரகாசப் பொருளை அறிய இயலும். நம்மை ரட்சிக்கும் சிவனை அறியாத போது அதுவே பட்சிக்கும் எமனாக மாறுகிறது. பரிபூரண எல்லையில் வாழும் பெரியோரை அண்டியவர்களே ஞானத்திற்கான தீர்க்கதரிசனப் பிரவாகத்தைப் பெறுகிறார்கள். கீழான நபுசுகள் ஏழில் பாழடைந்து கிடக்கும் சீடனின் மனம் ஊழித்தீப்பற்றி எரிந்து நீராகிறதும், உப்பு நீரால் கழுவப்படுகிறதும் என ஏழு நிலைகளில் ஆசானின் அருளமுதத்தால் இரட்சிக்கப் பெறுகிறது. மெய் குருபிரானின் அருளமுதமே நம் மும்மலம் தீர்த்து, காக்கும் தீயாக விளங்குகிறது.

**குருபிரான் அருளமுதம்:**

**சிற்ற றிவிற்**
**கற்றும்பய னற்றவர்க்குக் கற்பகத்த ருவெனவந்**
**நேவசந்ந வா** (ஆடலங் ஙன்னி)

சிற்றறிவிற் கற்றும் பயனற்றவர்க்கு கற்பகத் தருவென வந்த வசந்தமாகிய **குருபிரானின் வா** திறக்கவில்லை எனில் அறியாமை விலகாது. சுடாத தீயாக, புகையாத கனலாக, நமச்சிவாய எனும் பஞ்சாட்சரமாகிய அவர்களின் நெருப்பாகிய வாய்மையே நம்மையும் அதன் மயமாக்கி விபூதியெனும் பிறவா நெறிக்கான அடையாள சின்னமாக ஆக்குகிறது.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் குமார் :* மகரஜோதி, திருவண்ணாமலை தீபம் (இந்து மதம்), ஏழு அகல் கொண்ட விளக்கு வழிபாடு (கிறிஸ்தவம்), னூரொளி (இஸ்லாம்) என ஒளி வழிபாடு சர்வ மதங்களிலும் உள்ளது. அழியாத திருவடிகளில் நம்மை சேர்த்து வைக்கும் ஜோதியாக, அறிவுப் பிரகாசமாக மெய்ஆசானின் நாதமாக விளங்குவதே கார்த்திகை தீபமாக எமன் எல்லையில் நம்மை இரட்சிக்கும் ஒன்றாக உள்ளது. எண்டிசைக்கும் முன் நிற்கும் பஞ்சாட்சரமாகிய நான் எனும் மகாதீபமே, உணர்வு, மனம், கவனம் என்ற வெளிச்சப் பொருளாக உள்ளது. எம் திருவாக்காகிய தீயே, ஆதி எனும் ஆகின்ற தீயாக, மரண குளிரை மாற்றும் நீதியாக, வெற்றி தரும் விபூதியாக, சாவிற்கு எட்டி தீ வைக்கும் சாதியாக உள்ளதாக ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். ஒளி, ஒலி வடிவாக உள்ள இறைவனை அறிவிப்பதும் மெய்ஆசானின் நாதமே.

**குருபிரான் அருளமுதம்:**

அருளாகிய சொல்லெனும் ஜோதி படிந்திட அறியாமை இருள் பொடிந்திடும். மனுவுக்கன்றி ஐயறிவு ஜீவபேதங்களுக்கு வெளிச்சம் தேவையில்லை. அழியாத செயலை அறியவே மனமெனும் ஆறாவது அறிவு மனிதனிடம் உள்ளது. சுக வடிவினனாகிய இறைவனை அறிவதற்காக நாம் கொண்டிருந்த பக்தி எல்லாம் அறியாமை என்பது அறிவு வடிவான பெரியோரைச் சந்திக்கும் போதே புலப்படும். அருட்பெருஞ்ஜோதியான இறைவன் சூன்ய வடிவாக உள்ளான். வாசனை, கேள்வி, இருகண், வாயெவைக்கும் வல்லமை அளிக்கும் அஃகண்ணே ஜோதி வடிவாக பிரம்ம சொரூபமாக உள்ளது. ஆவிக்குரிய சிந்தனையே நித்திய ஜீவனும் சமாதானமுமாக ஆதி மார்க்க னீதி அவையின் மக்களிடத்தில் செயலாக இருப்பது பரிசுத்த ஆவித் தெய்வத்தின் பரிபூரண ஆசீர்பாதமாகும் என அருளி தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

## 10-12-2022 ~ சனிக்கிழமை சபை
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

**குருபிரான் அருளமுதம்:**

**பற்றிய பற்றாய்ப் பரந்துல கெங்கும்...** என்ற **குருமணி மாலை** பாடலுடன் அவை நிகழ்வுகள் மலர்ந்தன. சுத்த நிர்க்குணமான பற்றற்றான் பற்றே தன் போல் பிறரையும் தேவப் பிறப்பில் ஆக்குகின்ற வல்லபம் கொண்டதாகும். வாடாத தீபமாக வேர் மேலும் தலை கீழுமாக முத்தொழிலுக்கு அரசாக னின்றிலங்கும் நடுப்பொருளை ஒவ்வொருவர் உள்ளத்திலும் வைரங்களாகப் பதிப்பிக்கும் செயலே ஆதி மார்க்க னீதி அவையின் செயலாக உள்ளது.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண்: 113** ரக்ஷிப்புக்குரிய தேவ இரகசியச் செயலாக இங்கு அருளப் பெறுவதை உன் செவியில் வாங்கி சிந்தித்துப் பிறரிடம் பேசுவது தவத்தைக் காட்டிலும் அதீத உன்னதமானது. அனித்திய தேகத்திலுள்ள உன் னித்திய ஜீவனை அழி நரகிற்குப் போகாமல் காக்கும் செயலே ரக்ஷிப்பது.

*ஜீவசகோதரி லாவண்யா:* **தாயளித்திட்ட செல்வம்... (குரு ஸ்தோத்திரப் பாடல்)** தாய் தந்தை கொடுத்த புறவுலக செல்வமும், நாம் அவர்களுக்குத் தேடித் தரும் செல்வம், புகழ் யாவும் மாயை என ஒரு சற்குரு பிரானின் சன்னிதியில் அறிவைப் பெறும் போதே தெரிகிறது. தாயாகித் தந்தையுமாய் தாங்குகின்ற தெய்வமாக விளங்கும் குருபிரான் நான்மறைக்கு எட்டாத அமானிதமெனும் ஆறாவது அறிவைக் கொண்டு தன்னை அறியும் தவ முறையாகத் தந்த செல்வம் நீடூழி வா ஆழ வேண்டும் என ஆண்டவர்கள் தன் ஐயனிடம் பிரார்த்திக்கிறார்கள்.

> *குரவனே பிரம்மா, குரவனே விஷ்ணு, குரவனே மகேசுவரனாகிய தேவனாம், குரவனே ஏகமாகிய பரப்ரம்மமாம். (ஆதலால்) அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.*
>
> ***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் அருளமுதம்:**

நீ அளித்திட்ட செல்வமாகிய **சாயுச்சிய பதமே** நீடூழி வாழ்க எனப் போற்றுகிறார்கள். அழி பொருள் கொண்டு அழியாப் பொருளை வாங்க இயலாது. **அன்பெனும் பிடிக்குள் அகப்படும் மலையே, அன்பெனும் குடில்புகும் அரசே** தனிப்பெருங் கருணை கொண்ட குருபிரான், நம் யதார்த்த உள்ளம் பார்த்து அனித்தியத்தில் இருந்து நம்மை நித்தியத்தில் ஆக்குகிறார்கள்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **சத்திய வேதம்**

காலத்தின் கண்ணாடி வேதாகமம். அவரவருள் நீதியாக விளங்கும் ஆறாவது அறிவை வைத்து, நீதியான பிரளயச் செம்மல்கள் நடத்தும் செயலே பிரளயம். தோற்றத்திற்கு வரும் மாற்றத்திற்குரிய அனித்திய உலகு அழிவது பிரளயமல்ல. நன்னெறி மக்களை காலனிடமிருந்து தப்புவிக்கும் பிரம்மவித்தைச் செயலாக பெரியோர்கள் கைக்கொண்ட ஆயுதமே நீதியான பிரளயம். அழியாத் திருநாட்டில் ஆளும் திருவாக்கு கொண்டு பிறவிப் பெருங்கடலை கடத்தும் தோணியப்பராக மரக்கலனாக வரும் தீர்க்கதரிசிகளின் செயலை சத்திய வேதம், பிரளய கால நோவாவின் கப்பலாக உணர்த்துகிறது. பிரளய நீதி தெளிவுறுங் ஙோல்கையாக அவர்கள் கையில் வைத்திருக்கும் ஒரெழுத்து மாத்திரைக் கோல் என்பதனையே **பிரளய னீதி தெளிவுறுங் ஙோல் கை கொண்டிங்ஙுற்றவளே** என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். அறிவை அறிந்தவரிடத்தில் பிரளயம் லயமாகவும், அறியாதவரிடத்தில் லயமற்றும் உள்ளது. மனம் பிரம்ம லயத்தில் ஏறி நிற்பதுவே நீதியான பிரளயம்.

**குருபிரான் அருளமுதம்:**

**சொல்லால் அளப்பரிய சோதிவரை மீது**
**தூயதுரி யப்பதியில் நேயமறை ஓது**
**எல்லாம்செய் வல்லசித்தர் தம்மைஉறும் போது**
**இறந்தார் எழுவாரென்று புறந்தாரை ஊது** (ஆறாம் திருமுறை)

**நேயமறை ஓது** என்றது ஓதாமல் ஓதும் செயலாகும். இறந்தவர் எழும் செயலையே **சாவருமுன் சாகப்பழகிச் சாவதுவே சன்மார்க்கச் செயலென சாற்றும் வேதமே** என பூரணப் புதையலாக ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் சங்கர்:* **சிவானந்த போதம் தரும் சிவ அனுபவம்:**

*மனமாகிய சீடனின் கேள்விகளுக்கு அறிவாகிய ஆசானின் போதனைகள்:*

நான் இந்த உடல் அல்ல என்ற எண்ணமுடன், ஈசனின் சக்தியாகிய கவனம் மீது மனதை அலைவின்றி நிறுத்தி இரண்டறக் கலக்க வேண்டும். சிவமுடன் இரண்டறக் கலந்து மனம் தெளிந்து வினையற்று சிவானந்த ஜோதியாகி இருப்பவரே துறவி. அவர்களே எட்டிரெண்டும் ஒன்றாக, பதனமெனும் பாதுகாப்புடன் பட்சமெனும் அன்பு வைத்து சித்தத்தைச் சிவமாக்கும் சிவானந்த போதத்தை பெறமுடியும். சேற்றில் நடும் கம்பத்தை மணல், கல்கட்டி நிலை நிறுத்துவது போல், மனதை நிலை நிறுத்தவே வேத சாட்சி. தீர்க்கதரிசனமாகிய அவரவரின் ஜீவனைக் கண்டு பழகி கற்கும் சாகாக் கல்வியே சாஸ்திரமாகவும், அதை தன்னில் உணர்வதே சிவஞானமாகவும் உள்ளது. புலியின் வேகம் ஒத்த மனதினை, அது இருக்கும் சிறு பொந்தினுள் ஆசான் அருளால் நுழைந்து பார்க்க, வேதாளமாக இருக்கும், அதுவே வேதத்தின் ஆழமாக இருப்பதை அறியலாம். அவரவர் உருவத்தை அதிகத் தெளிவுபடுத்திக்காட்டும் தெய்வக் கண்ணாடி என்பது, வாதமெனும் காற்று ஆடியெனும் அசையா நிலையில் ஓரறிவாக விளங்கும் (வாதாடி முத்தர்கள்).



Copyright © AMNA Trust, Chennai 

**குருபிரான் அருளமுதம்:**

**சித்தமலம் அறிவித்து சிவமாக்கி எனையாண்ட**
**அத்தன் எனக்கருளியவா றார்பெறுவாரச் சோவே** என மெய்ப்பொருளில் ஆழம் கண்ட ஆசரியர் உரைக்கும் உபதேசமாகிய சிவானந்த போதத்தை தெளிவாகத் தெரிந்து நாமும் வீடடைவோமாக.

**அமுத கலைக் ஞான போதம். (இரண்டாம் காண்டம்)**

**சந்நிர வட்டச் சூடாமணி ..... உரை செய்வாரே**

அந்தர் மா முகம் கண்டோங்கும் அனந்தர்களே, பேரருளாளரின் திருச்செயலை உரை செய்திட முடியும். மங்கள நாயகனின் செந்தூரப்பொடியாகிய ஒலிவாயுரை கொண்டு மூன்றாவது கண் திறப்பிக்கப் பெற்ற மக்களுக்கே சந்திர வட்டம் எனும் அறிவின் பூரண நிலையாகி திருப்பாற்கடலில் ஜல ஆசனத்தின் மீது பள்ளி கொண்டிருக்கும் இறைவனை அறிந்து குடி வீடேற முடியும்.

**செய்ய வேவினா வெண்ணியே சூழ்சபை**
**அய்யன் பன்னகை ஆலடி போற்றியே**

மௌன மாமணி மாடத்தில் இருந்து பிரம்மம் வெளியாக்கிய சர்வத்திற்கும் மூலமான வாய் திறந்து ஆலம் காட்டும் ஓசை வடிவே ஆலடி. திசைகளற்ற நம் சொந்த தேகமாகிய வெளி எனும் வீடாகிய ஜீவனுள் நுழைந்து பழகும் சன்மார்க்க செயலில் ஆக்கி வைப்பதுவே ஆதி மார்க்க னீதி அவை. னமோ என்ற மோனநிலையை சாலை ஆண்டவர்களின் திருவடி நிழலில் பெற்ற குழந்தைசாமி ஐயா அவர்களின் இரக்கமே இன்று நம் அனைவருக்கும் வரமாகி நிற்கிறது என அருளி தோத்திரப் பாடலுடன் அவையை நிறைவு செய்தார்கள்.

**11-12-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமாபதி வெங்கட்**

**அண்டங்ங ளவனி யான வெப்பொருளுமரியனின் சூலினி லமைத்து...** என்ற குருமணிமாலை பாடலுடன் அவை மலர்ந்நது.

மேலான மோக்ஷம் பெற குருவின் மார்க்கத்தை பின்பற்றி பக்தி செலுத்த வேண்டும். குருவே பிரம்மா, விஷ்ணு, ருத்திர வடிவமாய் சங்ஙரிக்கின்றார் **(குரு கீதை).**

*ஜீவசகோதரர் கௌதம்:* நம் வயது வாழ்நாளை அழிக்கும் அறியாமை எனும் மனமாகிய சைத்தானின் கோரப்பிடியில் இருந்து நம்மை மீட்டு, நம் அறிவாகிய மாணிக்கத்தை முன்னும், மனம் பின்னுமாக வைத்து மறுபிறப்பில் ஆக்கி மனுவாகவும், தேவனாகவும் ஆக்க வல்லவர் மெய்குருபிரான் அவர்களே.

**நாளென ஒன்றுபோற் காட்டி உயிர்ஈரும்**
**வாளது உணர்வார்ப் பெறின்** **(திருக்குறள்)**

மனிதனின் ஆயுட்காலமாக இருக்கும் நாளே ஆயுளைக் குறைக்கும் வாளாக உள்ளது. சென்ற னாள் சென்றிட்டாலும் இனி செல்லும் னாள் சென்றிடாத னன்றுள னாளே ஞான னாள். அதுவே வேத சூரியன் விடிந்ந வேத வேதாந்ந ரகசியங்ஙளை வெளியாக்கிய முன் பின் அற்ற நாளாகவும், அஞ்ஞானக் கிழங்கு களைந்து மெய்ஞ்ஞான விருட்சம் னம் உள்ளத்தில் ஊன்றி வளர்ந்து நித்திய மகிழ்ச்சி பிறங்கும் னாளாகவும் உள்ளது. அத்திருனாளின் னீட்ச்சியை நாம் வீணாக்காமல் காக்கும் செயல் செய்பவரே மெய்ஆசான். தன்னறிவால் அறிய இயலாத அவரவருள் இலங்கி வழிநடத்தும் தூல ஆதி சூட்ச வித்தை அறிய அருள்பவரே மெய்ஆசான்.



Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் அருளமுதம்:**



*திரு. சாலை ரவி அப்பா அவர்கள்*
*நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை*

உலக மக்கள் அறியாத மேம்பாடாகிய இல்லறத்தை உரைப்பதே வேதம். தன்னையறிந்து இன்பமுறுவதே தனக்கு கேடில்லாத தேவரகசிய செயல். எண்ணுகின்ற எண்ணங்கள் யாவும் னல்லெண்ணங்களாக இருப்பதே நீதி. பண்டை நாள் வழியாக னால்வகை யோனி மூலம், எழுவகைத் தோற்றத்தின் முதலிடத்தில் உள்ள **அமரர்** என்பவரே தேவயோனியில் பிறந்து தெய்வப் பொருளை அறிந்தவர்.

*ஜீவசகோதரர் சங்கர்:* அழியாத வஸ்த்துவாக அறிவாக ஜீவனாக அவரவரின் னாமமாக இருக்கும் **நான்** எனும் பொருளைக் கண்டு அடைந்நவனே தன்னையறிந்த சாகாத னித்தியன். உறக்கம் இறப்பாகவும், விழிப்பு பிறப்பாகவும் இருப்பதை ஒரு மெய் குருபிரான் அருளால் அறிந்து, அழியாப்பதியில் குடியேறி வாழவும் வைராக்கிய சித்தமுடன் நடக்கவும் வழிகாட்டுவதே ஆதி மார்க்க னீதி அவை என்ற பகிர்வுகளுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

**11-12-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்**

**வேதகலைக் கதிபதி மாதுல ராகிய மன்னா மன்னோ வென்றும்...** என்ற பாடலுடன் அவை இனிதே உதயமானது.

*ஜீவசகோதரர் செந்தில்:* நுட்பமான தன்மை மற்றும் திறமையை உள்ளடக்கியதும், பிற உயிர்களிலிருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டுவதும், உடல் மற்றும் உள்ளத் திறனை ஒருங்கிணைத்து ஊக்குவிப்பதும் கலை. எழுத்து, கணிதம், மறை, நீதி, யோகம், இலக்கணம், மந்திரம், நாடி, இந்திரஜாலம், பரகாயம், சூனியம் இன்னும் பிற ஆய கலைகள் அறுபத்தினான்கையும் அறிவு வடிவாக வரும் ஆசானிடம் கற்றால் பிறவாமையை அடையலாம்.

*ஜீவசகோதரி ஜான்சிராணி:* மெய்க்குரு பிரானின் பிரணவ உபதேசமே நமசிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரம். பஞ்ஞாட்சரம், அஷ்டாட்சரம், பிரணவம், எழுதாத எழுத்து, காயத்ரி, கலிமா என்ற மூலமந்திரங்கள் மனிதன் தன் இதயாசனத்தில் வைத்து அறிய வேண்டிய பிரம்மவித்தையாக உள்ளது. குருவின் னாதத்தில் விளைவதே னாத பஞ்ஞாட்சரம். அடி-முடி-னடு இதில் நடுவாகிய **னான்** என்பதை அறிந்நால்தான் அடியையும் முடியையும் அறிய இயலும்.

*ஜீவசகோதரி ஷண்முகப்பிரியா:* விதியை மதியால் வெல்லக் கூடிய மனிதன் மதியை அறியாமல் விதி வசம் சிக்கி வீழ்கின்றான். திருவுருவாகிய ஆசானின் நாதமே விதியிலிருந்து நம்மை மீட்கின்றது. இதையே ஆண்டவர்கள்,

**னீதியெனும் பொருளான மனுக்கு லத்தை**

**னித்தியனும் னித்தியத்திற்கே படைத்தான்...** என்ற பாடலில் அருளியுள்ளார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரி மஹிமா:* மரண சம்பவத்திற்கு காரணமான ஆசைகளை உண்டாக்கும் மாயை ஆன்மா என்ற சூரியனால் அழிக்கப் படுகிறது. அச்சூரிய ஒளியே விந்து னாதமாக, சிவமயமாக, திருச்சிற்றம்பலப் பொருளாக உள்ளது. இதனை காகபுசுண்டர்பிரான் **தேளடா தேட்கொடுக்காங் குல தெய்வந்தான் சீவநிலை சிவநிலையும் அதுவேயாகி** என அருளியுள்ளார். தாய்க்கும் மேலான அன்புடன் னம்மை இரட்சிக்கும் குருபெருமானே குரமாதாக னின்று சத்திய தர்ம சாலையில் நாம் அடைய வேண்டிய இலக்கைக் காட்டி சாமுன் சாகும் வித்தையை அருள்கிறார்.

*ஜீவசகோதரி ஸ்ரீமா:* பூமி வடக்கு னோக்கிச் சாயும் காலமாகிய குளிர்காலத்தில், காற்றின் தன்மை அடர்த்தியாகி னீர்த்தன்மை குறைந்து வறட்சி உண்டாகிறது. **குளிர்கால மானாலோ குறம்பாடி வருவோம்** என குரவர்கள் பேசரும் பெரும் பொருளைக் குறம் பாடுகிறார்கள். பழிப்பு, மறுப்பு, கவலைகள் எல்லாம் மாற்றி வைக்கும் குருவானவர்களே குரவர்கள். ஆகாயத்திலிருந்து வெளிச்சப் பொருளெனும் ஜீவனாகிய **னான்** தோன்றி குடியேறிய செயலை சத்திய வேதத்தில் **நாசியிலே தேவன் சுவாசத்தை ஊதும் போது அவன் ஜீவனாக மாறுகிறான்** என அருளப் பெற்றுள்ளது.

*ஜீவசகோதரி தபேஸ்வரி:* நல்வினைக்கும் தீவினைக்கும் எதிர்வினை உண்டு. னாம் செய்யும் செயல்களே கர்மவினையாகி பிறப்பிற்கு காரணமாகிறது. மனிதனின் ஏழு பருவங்ஙளாகிய ஏழு பிறப்பும் செத்துப் பிறப்பதன்று. இதில் ஏழாம் பிறப்பு ஆசானின் னன் னாதத்தினால் மனுனீசன் மனுஈசனாக ஆகுவது. இதையே

**இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு** என்கிறார் வள்ளுவர்.

*ஜீவசகோதரி நாகமணி:* உலக காரியங்ஙள் னிலையற்றது. கீழ் உலகம் ஏழும் மனதைச் சார்ந்தும் மேல் உலகம் ஏழும் அறிவைச் சார்ந்தும் உள்ளது. மனிதனின் தனிச் சீதனமான அறிவாகிய அமானிதத்தை அறிந்நால் தேவனாகலாம். உடல் அழிவதும் உயிர் அழியாததாகவும் ஆன்மா உடல் உயிர் கடந்து, சர்வ சம்பத்தையும் உள்ளடக்கியதாக உள்ளது. அசையா நிலையில் இருக்கும் ஆன்மாவாகிய சிவம் அசையும் பொழுது சக்தியாகிறது. னினைவிலிருந்து வெளிப்படும் **னான்** என்பதே மனிதனை பிரகாசிக்கச் செய்யும் மெய்யான ஒளியாக உள்ளது.

**குருபிரான் அருளமுதம்:**

உலகில் உயிர் ஒன்றே நன்மை. னினைவென்னும் கையே வாழ்க்கை. இதையறிவதே தன்னையறிதல். திரு இருக்கும் இடத்தின் பெயர் பதி. ஆதலால் அத்தலத்தின் பெயர் திருப்பதி. மூன்றாவது கண் அறிந்தவர்களுக்கே தீர்க்க தரிசனத்தின் பொருள் புலப்படும். இதையே

**வெள்ளைகருப் பாமோ விடிந்நா லிருளாமோ**
**விள்ளாதே வேகாத கால்** **(ஞானக் கொரல்)**

என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். னீதி என்பதே வேகாக்கால். கறுப்பு வெள்ளை என்பது னிறமல்ல. அனைத்து நிறங்ஙளையும் உள்ளடக்கிய வெள்ளை னிறத்தை வெளியாக்கும் கறுப்பு னிறத்தை அளவிட முடியாது. மனதின் இரகசியம் அறிந்தால் னினைவை அறியலாம். உலக மற்றும் மனித உற்பனங்ஙள் வெள்ளை நிறத்தில் உதித்தாலும் வெள்ளை நிறம் உதிப்பது கருப்பில் தான் என குருபெருமான் அருளியதைத் தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை னிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai

**15-12-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்**

**தனித்தனற் றலைமைப் பெரும்பதி யரசைத்**
**தரும்புனற் றுறைசிங்கா சனரே...** என்ற பாடலுடன் அவை நிகழ்வுகள் மலர்ந்தன.
**வான்மதிக் கொரல் திருவாக்கியம் எண் 93:** சபை என்பது தெய்வமவர்களின் னினைவு. பிரம்மோபதேச தேவ ரகசியத்தை எக்காரணம் கொண்டும் எண்ணம் சொல் செயல் இம்மூன்றில் ஒன்றிலேனும் வெளியிடலாகாது. மெய்யை விட்டு தவறிவிட்ட பாவிகளோடு உறவு வைத்துக் கொள்ளும் சண்டாளத்தனத்தை விட்டு பரிசுத்த நினைவுடன் இருக்க வேண்டும்.

*ஜீவசகோதரி லாவண்யா :* **குரு ஸ்தோத்திரம்** பாடல்: **கையளித்திட்ட செல்வம் கரணங்க ளாலும் சூழ்ந்த...** ஓர் மெய்குருபிரானின் இரக்கத்தால் வயது வாழ்னாளை மீட்டுத்தரும் அமானிதத்தை செல்வத்திற்கெல்லாம் தலையாக உள்ள செவிச் செல்வத்தின் மூலம் நாம் அனுபவிக்கும் பொழுது, உலக செல்வங்கள் எதுவும் அதற்கு ஈடாகாது. பெரியோர்களின் வாய்மையாகிய செவிச் செல்வமே சிரஞ்ஜீவி வாழ்வுக்கான வழி.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:*

**கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்** **(திருக்குறள்)**

மெய்க்கல்வி பழகுவதாகவும், பொய்க்கல்வி படிப்பதாகவும் உள்ளது. மெய்க் கல்வியின் பயனை,

**தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குருவின் திருநாமம் செப்பல்**
**தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே**

என திருமூலர் பிரான் அருளியுள்ளார். உலக வாழ்விற்கு உதவும் பொய்க் கல்வி, அசலான னரகத்தையே தரும். மெய்க்கல்வியோ நம் அறியாமை அகற்றி, அறிவெனும் அழியாத னித்திய சுவர்க்கத்தில் குடியேற்றும். ஓர் மெய் ஆசானின் பேரிரக்கத்தால் நாம் கற்கும் மெய்க்கல்வியின் மூலம், நம் இதயாசனத்தில் விளங்கும் தெய்வ மலரில் நம்மை ஏற்றிவைக்கும் செயலே மலர்மிசை ஏகும் கல்வி என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். வள்ளலாகிய பெரியோர்களின் கோபுரவாசல் எனும் வாய்மைக்குள் நுழைந்து ஆழ்ந்தால் நற்றாளாகிய திருவடியை அறியலாம் என்பதனையே,

**சிற்ற றிவிற்**
**கற்றும்பய னற்றவர்க்குக் கற்பகத்த ருவெனவந்**
**நேவ சந்நவா**
**மற்ற கலை**
**கற்றறியி லக்கணமும் எட்டமுடி யாதஎல்லை**
**மேவ லுற்றவா** **(ஆடலங் நன்னி)**

என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **பஞ்சாயக்காரர் ஈரைந்து பேரும் தெய்வப் பதியிது என்கிறார் ஞானப் பெண்ணே (வாலைச்சாமி சித்தர்).**

**சுவை ஒளி ஊறு ஓசை நாற்றமென் றைந்தின்**
**வகைதெரிவான் கட்டே உலகு** **(திருக்குறள்)**



Copyright © AMNA Trust, Chennai 

ஐம்பொறிகளாக, பஞ்சாட்சரமாக விளங்கும் காரண தேகமே உலகாக உள்ளது. பஞ்சபூதங்களாக, உடல்களாக, கோசங்களாக, பீஜங்களாக, பீஜாட்சரங்களாக, பாத நிலைகள் என யாவும் ஐந்தாக உள்ளது. இறைவனின் நீதிக் கோட்டில் பிரளாது உயிர்களின் உற்பனத்திற்கு காரணமாக விளங்கும் பஞ்ஞ பூதங்களையும் குறிக்கும் மந்திரமே **நமசிவாய.** இறைவனின் னீதியாகிய நெறியறிய, பொய் மெய்யும் பிரித்துக் காட்டும் வேதமாகிய ஆசானின் அருள் வேண்டும்.

**குருபிரான் அருளமுதம்:**

நாம் மனிதன் என எண்ணி வாழும் இவ்வுலக வாழ்வு பொய் எனவும், கால் வழி பிறந்த அனைவரும் னரன் எனவும் வேதம் கூறுகிறது. னரனாக இருந்த நம்மை மெய் ஆசான் அவர்களே மனிதனாக்கி, நம் கடமை இன்னதென உணர்த்தி மரணமிலாப் பெருவாழ்வு வாழ அருள்கிறார்கள். தன்னுள் உள்ள **னான்** எனும் பொருளை அறிவதுவே தன்னை அறிதல். இதனை

**தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை**
**தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்**
**தன்னை அறியும் அறிவை அறிந்தபின்**
**தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே** என்கிறார் திருமூலர்பிரான்.

எதார்த்த உள்ளம் கொண்ட அனைவரையும் னீதி வழியில் நடத்தி நித்தியனாக்குவதே ஆதி மார்க்க னீதி அவையின் நோக்கம் என அருளி, தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

**17-12-2022 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**தரைதனில் னரராய்த் தோன்றி...** என்ற தெய்வத் தேடு கூடகம் பாடலுடன் அவை மலர்ந்தது.

அறிவிருக்கும் தலமறிந்து ஆயர்பாடிக் கண்ணபிரானின் திருவடி னிழல் சேரும் மெய் னிலைகளை திருப்பாவையில் **மார்கழித் திங்கள் மதி னிறைந்த னன்னாளாம்** என ஆண்டாள் னாச்சியார் அருளியுள்ளார்.

**எமபடரடிபடு கோடாயிதக் கூர் - திருவாக்கியம் எண் 114: னின்றதொரு பிரளயத்தின் அதிசயங்கள் னெடுங் ஙாலம் னீ இருந்நே காண வேணும்** மனதை லயமாக்கி மாறா அதிசயமாகிய அறிவுப் பிறப்பில் குடியேற்றவே பாரவான்கள் யுகந்தோறும் ஏழைக்கு ஏழை போல் வந்து ஏழ்பிறப்பு னித்தியத்தில் னம்மை ஏற்றி வைக்கிறார்கள்.

*ஜீவசகோதரி லாவண்யா:* **குரு ஸ்தோத்திரம் - சாதிக ளளித்த செல்வம் சமயங்ங ளளித்த செல்வம்...** சுத்த சைதன்ய னாதரின் திருவுளப் பாங்கிற்கு இணங்கி னடந்து தன்னை அறிந்தவர்களே சாதிமான்கள். **சாதி சமய சழக்கை விட்டேன் அருட் ஜோதியைக் கண்டேனடி....** என வள்ளல்பிரான் அருளியுள்ள படி, அறியாமையால் சாதி, சமய சழக்கில் சிக்கி இருந்த னம்மை ஞானத் தெளிவிலாக்கி னீதி வழுவா னெறி முறையில் னிற்க வைத்த ஆசானின் திருவடி போற்றிப் பணிவோம்.

*அக்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயுள்ளவனது கண், ஞானமென்னும் அஞ்ஞன சலாகையினால் எவரால் திறக்கப்பட்டதோ, அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.*
***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் விஜயகுமார் :* **சத்திய வேதம்** - *தாவீது னாயகம் மற்றும் சாலமன் தீர்க்கதரிசியின் திருச்செயல்கள் :*

யூதா னாட்டை சேர்ந்த ஈசாய் என்பவரின் 7-வது மகன் தாவீது, எபிரேய விவிலியத்தின் படி இஸ்ரவேல் அரசின் இரண்டாவது அரசராவார்.

**ஏசயா 55-ம் அதிகாரம் : முட்செடிக்கு பதிலாக தேவதரு முளைக்கும்...** ஆசான் தன் னாதத்தால், பண்படாத முட்செடிகள் நிறைந்த நமது உள்ளத்தை பண்படுத்தி ஓரறிவான தேவதருவாக மாற்றுகிறார்கள்.

**தேம்பாவணி வளன் செனித்த படலம் :** வாடாத மாலையெனும் தேம்பாவணியை இயற்றிய வீரமாமுனிவரின் காலம் 1710 முதல் 1747 வரை. இவர் தமிழ்நாட்டில் 37 ஆண்டுகள் சமயப்பணியும், தமிழ் பணியும் புரிந்தார். அம்பலக்காடு எனும் இடத்தில் அடக்கமானார்.

**தாவீது னாயகத்தின் சுவிசேஷ னற்செய்திகள் - சங்கீதம்:** *கர்த்தர் திரளான தண்ணீரின் மேல் னிற்கிறார்...* ஜலம் உறைந்து பனியாவது போல், ஜல வடிவாகிய மனம், ஆசானின் பரிசுத்த ஆவியால் ஜலம் சுண்டி திரளான அறிவு வடிவாகிறது. *சணல் வஸ்திரம் தரித்தவரும், ஆற்றின் தண்ணீரின் மேல் னிற்கிறவருமாகிய புருஷன்...* பிராணனின் இரகசியத்தை குறிக்கும் சொல்லே சணல் வஸ்திரம். **அச்சர மமைத்தோன் அறுந்து போனது கண்டமைந்நதை யமைத்து அறைந்நதிக் கிரந்நம்...** சணல், கயிறு, சரம் என னம்மிடம் போக்குவரத்தாக இருக்கும் அவ்வட்சரம் அறுந்து போகாமல் சேர்த்து வைப்பது ஆசானின் னாதமாகிய கிரந்தமாகும்.

*ஜீவசகோதரர் சங்கர் :*

**சிவானந்த போதம் - சீடனின் கேள்விகளும் ஆசானின் பதில்களும்:**

*ஆசானின் தயவால் முத்தொழிலின் லாபம் எளிதில் பெறலாமா? என வினவ,*

சாவின் உச்சமறிந்த ஆசானை பணிந்து மாயுட்சமெனும் பெருமாள்தல் பெற்று சாயுச்சமெனும் பராபரத்தை அடையலாம்.

*இல்லறத்திலிருந்து கொண்டே மெய்ஞானத்தைப் பெற்றும் மூடரானவர் உண்டோ? என வினவ,*

சம்சார வாழ்வில் ஞானிகளும், சன்னியாசி ஆனவரில் மூடரும் உண்டு. எனவே பெருஞ்ஜோதி ஆசானைப் பேணிக் கூடுவதே னன்மை.

*ஞானாசரியரின் அனுக்கிரகம் பெற்று முத்தி அடைவதிலென்ன லாபம்? என வினவ,*

12 வருடம் தொடர்ந்து வைராக்கிய சித்தத்துடன் இருக்கும் சீடனின் பக்குவத்தை ஆசான் சோதித்தே, தேவர்களும் மூவர்களும் காணாத திருவடியை தரிசிக்கும் உபதேசம் அருள்கிறார்.

*தீட்சை பெற்றும் ஆணவத்தால் பூரணமாகாமல் போவதுண்டோ? என வினவ,*

பேத எண்ணங்களால், குருபிரானை விட்டு விலகுவது இருட்காலமாகவும், ஆசான் அருளால் மூன்றாவது கண் திறக்கப்பெறுவது அருட்காலமாகவும் இருக்கும்.

*ஆசானை விட்டு விலகினாலும் விட்ட குறை முடியும்படி முக்தி அடைவரோ? என வினவ,*

எவ்வித விபரீதம் வந்தாலும் குருவின் திருவுளப் பாங்கிற்கு இசைந்திருந்தால் முத்தியும், மாற்றமானால் னரகிற்கும் ஆளாவான்.

*ஞானாசரியரிடத்தில் வஞ்சகமாக இருந்து ஞானம் பெற்று, தானே தெரிந்தது போல் பேசும் போலிகளுக்கு என்ன லாபம்? என வினவ,*

குருபிரான் ஆசீர்பாதம் இல்லாமல் வேடம் போடும் போலிகளும் அவனை அண்டியவர்களும் னரகில் வீழ்வர்.

*குருதுரோகியை நேசிப்பவர்கள் பெறும் லாபமென்ன? என வினவ,*



Copyright © AMNA Trust, Chennai

பால் இல்லாத மரத்தாலான பசுவும், நாகரத்தினம் இல்லாத தண்ணீர் பாம்பும் போல், குரு துரோகியை வணங்குவதும் முழு வியர்த்தமே.

*பெண்கட்கு ஞானம் இல்லையென்றும் புருடர்க்கு உண்டென்றும் சொல்வது எதனால்? என வினவ,*

பஞ்சபூதக் கலப்பிலுண்டான ஆண், பெண் னெஞ்ஞிலுள்ள வஞ்சும், குணம், னேசம், னிறம், உயிரில் பாகுபாடு இல்லையாதலால் பிறர் சொல் கேட்டு மயங்காமல் முன் வந்த வேதனூலை சார்ந்து பார்.



திரு. சாலை ரவி அப்பா அவர்கள்
நிறுவனர்: ஆதி மார்க்க னீதி அவை

*பேதை குணம் மாதர்க்கு அணிகலன் என ஔவையார் கூறியது ஏன்? என வினவ,*

வீண் ஜென்மம் எடுத்த யாவரையும் குறிக்கும் பேதைக்குணம் நீங்கிட, சராசரப் பொருள்களை ஒன்றாகக் காணும் சற்குருவை சார்ந்து பார்.

*ஐயம் தெளிந்தேன், மேலும் தங்கள் தயவால் அருள் புரிய வேண்டுகிறேன்.*

உன்னுள் உதிக்கும் நினைவு அதில் தெளிவு, உன் வாக்கு, செவி, கலை, சத்தம் இவை யாவும் உன்னுள் எங்கே என ஞானகுரு மொழிந்ததை நினைவில் கொண்டு சீர்தூக்கிப் பார்.

*குடும்பத்திற்கென வீணாக உழைத்தும், நோயுற்ற போது யாவரும் சலிப்புற்று, நான் தேடிய பொருளை மட்டும் நாடிய இப்பேய்க் கூட்டங்களை விட்டுக் காயம் தளராமுன் சிவன் திருவடி அடையப் பணிவேன்.*

சத்ருவாகிய பேய்க் கூட்டமென்பது அந்தகரணங்களாகும். உன்னுள் இருக்கும் உன் சொந்த வீட்டை அறியாவிடில் இரண்டுங் கெட்டான் ஆவாய்.

*பேதமையற்று சர்வ பணியும் அறுத்துவிட்டேன். மேலும் தெளிவுற அருள வேண்டுகிறேன்.*

உன் மான, அபிமான பற்று விட்டு, பக்தனாகி சற்குருவின் திருவடியே கெதியென பண்புடன் பணிவாயே.

*உலகோர் முன்னிலையில் குரு அசிங்விய ரூபமாக இருந்தாலும் பணிய வேண்டுமா? என வினவ,*

உலகத்தோரை பெரிதாக எண்ணுபவன் நிச்சயம் மெய்யை விட்டு னழுகி விடுவான். கிடைத்தற்கரிய சிவனின் திருவடி அடைய சற்குருபிரானின் திருவுளப்பாங்கிற்கு ஒத்து னடப்பாயாக.

*சற்குருவின் திருவடியில் சரணம் செய்வதற்கான மார்க்கம் என்ன? என வினவ,*

உணர்வுடன் னமசிவய எனும் பஞ்ஞாட்சர மந்திரத்தை ஆண்டவர்கள் அருளிய படி, **வாசிகா லுச்சி கண்டத்தின் வழியாய்...** இருதய மலர் விரிந்நெழும்பக்கூடிய செயலே னேரான சரண தீட்சையாகும்.



Copyright © AMNA Trust, Chennai

*ஆசானை காயத்தினாலும் மிகுதியாய் வணங்ங வேண்டுமா? என வினவ,*

காய மன வாக்கால் செய்த வினைகள் தீர ஒரே வழி, காய மன வாக்கும் ஆசானிடம் நிலைத்து நின்று வணங்குவதே.

*சற்குருவின் திருவுளத்திற்கு பாங்நாய் னடக்கும் மார்க்கம் அருள வேண்டுகிறேன்.*

உன் வஞ்ஞனை, பொய், சூது, கபடம், மான அபிமானம் நீக்கி துணிவுடன் திருவடியே கதியென, ஐயனின் நிழல் போல் தஞ்சமானால் தழைத்து வாழ்வாய்.

*வயிற்றுப் பசிக்கு வேண்டிய அன்னத்திற்கான வயணம் என்ன? என வினவ,*

எத்தனை கால உலக வாழ்வும் இடர்தான். எனவே பெரியோர்கள் கூறும் சச்சடியாகிய ஜனக்கூட்டத்தை விட்டு வேதமுடியாகிய முப்பொருளை ஓர் பொருளாக தனித்துப் பார். உன்னை காப்பதற்கு உன் தலைமேல் பெருமான் உண்டு.

*சிவசொரூபம் பெற ஆசையுற்றோர் ஆகாரம் கருதி பொய் வேடம் தரிப்பது ஏன்? என வினவ,*

யானைக்கும் எறும்புக்கும் உணவளிக்கும் இறைவனின் செயலறியாதோர் செயல் யாவும் மாயையே. உணவை ருசிப்பவரும், தேனையுண்டு ருசி கண்ட (திருடன்) திருவுடன் இருப்பவரையும், ஓரறிவாக னின்று கண்டவரே அறிவர்.

*பெரியோர்களை விட்டுப் பிரியாமல் சரணடைந்தோர் பெறும் பதவி என்ன? என வினவ,*

ஆசான் கிருபையால் உன் அழிவுடல் விட்டு உன்னுள் அழிவற்ற உடலில் குடியேறி, ஈசனைப் போற்றி பரமபதம் அடையலாம்.

*பிறவாமைக்கான மார்க்கம் என்ன? என வினவ,*

ஆசானிடம் உடல் பொருள் ஆவி தத்தம் செய்து, பிறப்பு ஒழியும் வரை அவர் ஏவலுக்கு இணங்கி நடந்தால் அரவமணிந்த ஈசனின் பதத்தைப் பெறலாம்.

*உடல் பொருள் ஆவி குருவுக்கு தத்தம் செய்தால் சீவன் சிவமாகும் என்ற தெளிவு கொண்டதன் லாபமென்ன? என வினவ,*

ஜீவன், சிவன், அறிவு, பரம் எல்லாம் நீதான். எனவே ஆசானை னாடி அவர் **னா**-ஆடிப்பாரே.

*உடல் பொருள் ஆவி மூன்றின் விபரம் அறிந்திட அருள வேண்டுகிறேன்.*

சடத்திற்கு ஆதாரமாகிய உடலாகிய மனதையும், உயிரான பிராணனெனும் ஆவியையும், ஜீவனாகிய அறிவெனும் சிற்றம்பலப் பொருளையும், குருவிடம் தத்தம் செய்து சத்தியமாக இருந்தால் பொறிகள் ஓடா இடத்தை உபதேசிப்பார்.

*தீக்ஷை, னூல், குருசொல், சாதகம், முத்தி வீடு பற்றியும் அருள வேண்டுகிறேன்.*

சற்குரு பிரானின் ஒரு சொல்லே தீட்சையாக, னூலாக, உபாயமாக உள்ளது. இது கொண்டு செய்யும் சாதகம் ஏணியாகவும், உன் னினைவெனும் வெளியே வீடாகவும் உள்ளது.

*சற்குருவினுடைய திருவுளம் மகிழும் உபாயம் அருள வேண்டுகிறேன்.*

மாயையாகிய மனதின் வசம் மயங்காமல், பிறவாமை பெற சிவானந்த போதம் தெளிந்து, மேலும் எமனை மயக்கும் அஞ்ஞன மையை உன் அகக் கண்ணில் தீட்டும், எம வாதனை தீர்க்க வல்ல குருவை வணங்குவாயாக.

*குருவினிடம் பாக்கியம் பெற வந்து விலகினோரும், நிலைத்து நின்று சாதித்தோரும் யாரென அருள வேண்டுகிறேன்.*



Copyright © AMNA Trust, Chennai

வைராக்கிய சித்தம் உள்ளோரே பூரண நிலை பெற்றவர். அகந்தையாலும், சாதகத்தில் தவறியும், சாத்திரமறிந்த பின்னும் உலக வாழ்வில் சீரழிந்தோரையும் னினைவில் கொண்டு முப்பொருள் தத்தம் செய்து சிந்தையற்று சிவமாகி வாழ்க னீயே.

*மனம் சிதறியோருடன் சேராது அடிமையெனை ஆட்கொண்டு அருள வேண்டுகிறேன்.*

உணர்வெனும் னிலமாகிய அக்கண்ணனை, தீர்த்தமாகிய தேசிகர் வாசகத்தால் னினைத்து, போதி மரத்தின் அழியாச் செல்வத்தை அர்ச்சனை செய்து, புகை தீபமாகிய உதயங்களை வலம் வந்து, வாமன அவதாரத்தைப் பற்றிக் கொண்டு பேரின்பம் பெறுவாயாக.

*தாங்கள் அருளிய பூசை செய்தேன், பரம்பொருளே மேலும் தீட்சை அருள வேண்டுகிறேன்.*

உடலாகிய தத்துவம், சித்தெனும் பிராணனாகிய ஆலவாயான் திருனீறு இவை கண்டு, கற்றறிய இயலா கற்பகத்தை கண்டு களிப்பதே சிவானந்த போத முத்தி னிலையாகும்.

தங்கள் போதனையால் முத்தி பெற்றேன். உலக வாழ்வை மதித்திடாமல், மலை மேல் ஏறிய பறவை (பரமாகிய ஔ எனும் ஓரறிவு னிலை) ஆனேன். உலகத்தோர் இழிசொல் கேட்டு வருந்தாமல், னரனெனும் னிலை மாறி மனிதனாகி, மேலான ஏழுலகும் னானாகி, ஏகாந்த தீவில் இறங்கி விட்டேன்.

நம் சந்தேகம் நீக்கி பந்தபாசம் பாழாக்கி, ஏகாந்த வீடதனை சொந்தமாக்கும் இன்னூல் வழி பற்றி, கால் வழி கண்டு களிப்புற்று செங்கோல் கை கொண்டால் சூல்முகமாகிய தாள் எனும் பாத வாழ்வில் சாதகமாய் வா ஆழ்ந்திடலாம்.

**குருபிரான் அருளமுதம்: அமுத கலைக்ஞான போதம் - இரண்டாம் காண்டம்:**

**இல்லறம்: (வினா - விடை)**

சற்குரு னாயகா! மகாமகத்துவம் பொருந்திய தேவரீர் தங்களின் சுவானுபவப் புதுமொழி கொண்டு இல்லறத்தின் பொருளை இன்னமும் விரிவாக எடுத்தருளப் பிரார்த்திக்கிறேன் - என் குரு ஈஸ்பரா.

வீடு பேறு, முத்தி பேறு எனும் இல்லறமே நம்மிடம் சுத்த உடம்பாக சூக்குமமாக இருப்பதை அறிவதே தன்னை அறிதல். குருபிரானிடம் னிஜமான அன்பு வைத்து அறம் செய்து பெறும் இல்வாழ்க்கையை திருவள்ளுவர்,

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது** என அருளியுள்ளார்.

**கலிவிருத்தம் : இன்னுமுரை யென்னுமொழி யேற்று மகிழ்வுற்றே...** ஆசானின் அமுதவர்ஷிப்பே னம் பாவம் போக்கி, பிறவிப்பிணி மாற்றி அழிவற்ற இல்லறத்தில் குடியேற்றி இன்புற வாழச் செய்கிறது.

**விருத்தம் : பெருங்ஙிரண அறுபுரி யினூலுமாகும்...** பிராண இரகசியமான அறுபுரினூல், பேரான ஆறு படைவீடு, ஈமான் கோட்டையெனும் னம்பிக்கை, பஞ்ஞாட்சரப் பொருளிடமாகிய ஐங்ஙாயம், பிறப்புக்கு காரணமாகிய சுக்கிலாம் பரனாடு, சத்து சித்து ஆனந்தமெனும் ரஜோ தத் சத், பூர்புவஸ்வரோம் எனும் மந்திரப் பொருள், பிரணவம், கலிமா, காயத்ரி இவற்றின் இருப்பிடமே இல்லறமாகும்.

**ஐந்நெழுத்து மூன்றெழுத் தெண்ணெழுத்துமாகும்...** ஓர்வகை, மூவகை, ஐவகை, எண்வகை இவற்றின் இரகசியமாக அறுசுவை கொண்டொளிக்கும் அகாரமாக, சிந்தையற்ற தனித்தலைமைப் பதியாக, தேசிகரின் திருனடனம் னிகழும் சித்திர பூஞ்ஞாவடியெனும் தில்லையாக, கோடி சூர்யப்பிரகாச விஸ்வமாக, னந்தி முதல் யுகங்ஙோடி வாழ்ந்தவர்கள் யாவர்க்கும் முதலாக இருந்த, னல்லறமாகிய



Copyright © AMNA Trust, Chennai

இல்லறத்தை உணர்ந்தவர்களே ஆதி மார்க்க னீதி அவையின் மக்கள் என்ற ஆசீர்பாதத்துடன் ஆசான் அவையை னிறைவு செய்தார்கள்.

**18-12-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ பவானி சிறப்பு சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. பானுமதி குமரேசன்**

**குருபிரான் அருளமுதம்:**

**னீதி னடவு ஆதிமூல நேரம்** எனும் பிரம்ம முகூர்த்த நேரமே வேத கர்த்தர்கள் அருளிய மகாமந்திரங்களெனும் அந்திப்பொழுதாக, இரவு பகலற்ற இடமாக, இரண்யவத நேரமாக உள்ள மெய்வணக்க நேரமாகும். சாத்வீக குணத்தின் மொத்த உருவாகத் திகழ்ந்தவரே சமரச சுத்த சன்மார்க்கத்தை அருளிய வள்ளல் பெருமான். மனிதனுக்கும் எமனுக்கும் உள்ள வழக்கில், இறப்பை ஒழித்தவனுக்கு எமன் என்பவன் தர்ம ராஜனாகவும், மற்றவர்களுக்கு எமனாகவும் உள்ளான். சமரசமே சத்திய ஞான சபையில் உள்ளோர்க்கு எமனின் வழக்கை வெல்லும் மரணமிலாப் பெருவாழ்வாக உள்ளது. னுதற்கண் எனும் அறிவுக்கண் ஓர் பெரியோரின் இரக்கத்தால் திறக்கப் பெற்றவனே சாகாத சன்மார்க்கி. இதனை **உற்ற மொழி யுரைக்கின்றேன் ... என் மார்க்க மிறப்பொழிக்கும் சன்மார்க்கந் தானே** என வள்ளலார் அருளியுள்ளார்.

**அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்**
**அஃதறி கல்லா தவர்** **(திருக்குறள்)**

என்ற குறளின் படி மெய்யறிவு பெற்ற எதார்த்த உள்ளத்தினர்க்கே மெய்ஞானம் வாய்க்கிறது. அவரவருக்குள் நீதியாக விளங்குவதே இயற்கை உண்மைக் கடவுள். நம்மை சிவமாக்கும் பெரியோரின் அன்பின் மூலம் ஜீவனின் ரகசியமறிந்து, அதன் மீது வைக்கும் அன்பே நம்மை சிவமாக்கும். அதுவே மரணமிலாப் பெருவாழ்விற்கான வழி.

*ஜீவசகோதரர் சங்கர்:* பவானி மக்கள், **ப** எனும் ஜீவன் மீது அவா கொண்டு நிலைக்க வந்தவர்கள். **குருவே சிவனெனக் கூறினன் நந்தி** என்பதற்கேற்ப இறை குருவாக வருபவர்களின் னாதமாகிய வாய்மையே, அருள் எனும் சொல்லக விளக்காக பெருஞ் ஜோதியாக விளங்குகிறது. சீடர்களின் மன நிலையறிந்து மெய்ஞான அறிவை வழங்குபவரே வள்ளல். **பசித்திரு, தனித்திரு, விழித்திரு** என வள்ளல் பெருமான் அருளியது அறிவில் பசித்திரு, மனதை விட்டு தனித்திரு, மூன்றாவது கண் திறந்து விழித்திரு எனும் அகமியச் செயலாகவும் ஜீவகாருண்யம் என்பது தன்னுயிரைத் தான் கொல்லாத சன்மார்க்கமாகவும் உள்ளது.

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு** **(திருக்குறள்)**

என்ற குறளின் படி எண்ணையும் எழுத்தையும் அறிந்தவர்களுக்கே உயிர் எனப் பெயர்.

**குருபிரான் அருளமுதம்:** புகழ்குலம் புழுக்குலம் எனவும், புறவினத்தான் - புற சடங்கு செய்பவர்கள். அகவினத்தான் - அகத்திலுள்ள மூன்றாவது கண்ணின் ரகசியம் அறிந்து வாழ்பவர்கள் என மனிதன் இரண்டு குலங்களாக இனங்களாக உள்ளான். **நல்ல மருந்திம் மருந்து - சுகம் நல்கும் வைத்திய நாத மருந்து** - **ம்** எனும் நாத மருந்தை உட்கொண்டால் நரை, திரை, மூப்பு, சாக்காடு அணுகா பேரின்ப முக்தி வீடடையலாம். அதுவே அகர முதல், அவ்வு முதல், ஆதி முதலாக, குரு பகவானாக, வேதத்தின் சிகரமாக இருக்கிறது. **ஆறறிவதுவே அவற்றொடு மனனே நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே** என தொல்காப்பியர் கூறிய ஆறாவது அறிவை ஒரு மெய் குருபிரானின் அருளால் அறிந்தவனே மனிதன்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் வடிவேலன் :* **ஆதிமுறைநெறி ....தூண்டிவிட்டார் (பொன்னரங்ங கொம்மி)** இருட்டிற்கென விளக்கை தேடும் மனிதன் இறப்பை தடுப்பதற்கான ஆறாவது அறிவெனும் அருள் விளக்கைத் தேடவில்லை. **தேடி சோறு நிதம் தின்று பல சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம் வாடி துன்பமிக உழன்று ... முன்னைத் தீயவினைப் பயன்கள் — இன்னும் மூளா தழிந்திடல் வேண்டும்** என பாரதியாரும், **உன் மனந்தான் கன்மனமோ வன்மனமோ... கரணமெலாம் கலங்க வரும் மரணமும் சம்மதமோ** என வள்ளலாரும் கூறுகின்றனர். புலன் பொறிகளுக்கு அடிமையாகி மரணத்தின் தன்மையை அறியாத நாம், அதை அறிந்தால் அதுவே சாந்தி நிலையாகிய சமரசமாகும். இறைவனை அறிவதற்கான அருளைப் பெற தேக, போக, ஜீவ சுதந்திரம் மூன்றையும் தன்னையறிந்த பெரியோரிடம் அர்ப்பணிக்க வேண்டும்.

*ஜீவசகோதரர் குமார்:* (பவானி) **அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை** என்ற அருட்பாவின் அகமிய ரகசியங்களை ஆதி மார்க்க னீதி அவையின் மூலமே அறியப் பெற்றோம். உடல், பொருள், ஆவி, ஜீவன் இவற்றின் உன்னதத்தை எங்கள் உள்ளத்தில் ஊன்றி உணர்ந்து இறப்பொழிக்கும் சன்மார்க்கம் இதுவே என்பதை உணர்ந்த மக்களாக இன்று வாழ்கிறோம்.

**22-12-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**சிரந்நனியே உடல்வேறு பிரித்துப் பார்த்துச்**
**சிவஞான சிவபுரத்தோர் செழிப்புங் ஙண்டேன்...**

என்ற பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

**வான்மதி கொரல் வாக்கியம் எண் 94:** நவநீதம் என்றால் புது வெண்ணெய் என்ற உலக வழக்கின் உண்மையான அர்த்தம். எளிதில் கெடும் தன்மை உள்ள வெண்ணையை, பலகாலம் கெடாத நெய் ஆக்குவது போல், அனீதத்தை நோக்கிப் பாயும் நமது ஒன்பது வாயில்களும் மெய்நெறியாகிய னீதத்தின்பால் பெரியோர்களாகிய நவனீத கிருஷ்ணனால் திருப்பப் பெறும் செயலாகும்.

*ஜீவசகோதரி லாவண்யா:* குரு ஸ்தோத்திரப் பாடல் **பாதலந் நைத்திடு மெய்ப் பாலறிவித்து ஆண்டோன்...** நீதியான என்றும் மாறாத செல்வத்தை அருளும் குருபிரானின் ஒரு மொழியாம் குருமொழி மெய்ப்பால் அறிந்தால் ஒரு கோடி நூற்களுக்கும் பொருளாகும். எம பயத்திலிருந்து நம்மை கடத்தாட்டி முத்தி நிலைக்கு ஆளாக்கும் குருபாதம் பணிகின்றேன்.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:*

**கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்.** **(திருக்குறள்)**

உலக வாழ்விற்கு பொய்க்கல்வியும், மெய் வாழ்விற்கு மெய்க்கல்வியும் வேண்டும். நரனாகிய நமது மும்மலம் நீக்கி மக்களாக்கி மக்களை தேவராக்கும் முழு தீரத்தை உடையது மெய்க்கல்வி. இதனை **பிச்சை புகினும் கற்கை நன்றே** என்கிறார் ஔவையார். கல்வி என்ற உண்மை பெட்டகம் ஏழு வகைப் பொருட்கள் நிறைந்ததாக உள்ளது. மெய்கல்வியை கற்றவர் மனுவாகவும் கல்லாதவர் நரனாகவும் உள்ளனர்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகு அணி சித்தர் பாடல் எண் 2: எண்சாண் உடம்படியோ ஏழிரண்டு வாயிலடி...** அகம் சார்ந்த நித்திய வாழ்வு வாழும் மனு என்பவன், மனதின் வழி செல்லாமல் அறிவின் வழி சென்று தேவபதத்தை



Copyright © AMNA Trust, Chennai 

அடைகிறான். உடம்பினுள் உள்ள பிரதான பொருளும் நவதுவாரத்துள் உயிர் அடங்கி இருப்பதும் பஞ்சாயக்காரரின் செயலும் இரண்டு உலகின் நித்திய பொருளும் அறியாத மனிதனை, எமன் வந்து பீடிக்கும் போது, நிலை நிற்கா மனதினை நிறுத்தும் உபாயம் தெரியாமல் போனேன் என வருந்தும் சீடனின் நிலையை இப்பாடலில் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் சிரஞ்ஜீவி:* **திருஅருட்பா :** கருவில் கலந்த துணையாக இருக்கும் பரமாத்மாவே நம் பிறப்பைத் தீர்மானிப்பது. எண்ணம், சொல், செயல் மூன்றையும் இயக்குவது அறிவெனும் உடம்பு. தூல, சூக்கும, காரண தேகத்தை உள்ளடக்கிய மகாகாரண தேகத்தையே வள்ளல் பெருமான், ஜோதியுள் ஜோதியுள் ஜோதி என்கிறார்கள். நாலு தேக ரகசியத்தை, சரியை கிரியை, யோகம், ஞானம் என்ற படிநிலைகளால் அறிந்து, அழியாத தேகத்தினுள் குடியேறும் செயலை நான்கு புருஷார்த்தமாக வள்ளல் பெருமான் அருள்கிறார்கள். பஞ்சபூதமும் கடந்து நிற்கும் இறைவனை பெரியோர்களின் அருளினால் அறிய வைக்கும் செயலே அருட்பெருஞ்ஜோதி.

**குருபிரான் அருளமுதம்:**

அலையும் மனதை அலையாமல் காத்து, ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால் ஐம்புலக் கதவை அடைக்கும் செயலே பேரறிவாகும். பூதல இடங்கள் என்பது ராப்பகலற்ற இறைவன் இருக்கும் இடமாக, அறிவு இருக்கும் தலமாக, நம் சொந்த பூமியாக உள்ளது. இல்மு எனும் மெய்க்கல்வி மூலமே தன்னை அறிதலெனும் வேதமுடியாகிய ஆன்மாவின் ரகசியம் அறிய முடியும். இருளன் என்று பெயர் கொண்ட இறைவனையே வள்ளல் பெருமான் துரியபதம் கடந்த பெரும்ஜோதி வருகிறார், சுக வடிவம் தர உயிர்க்கு துணைவர் வருகிறார் என்கிறார்கள். கடவுள் செயல் அறிந்தால் பிறவா நெறியிலும், அறியாவிடில் கருவாசலில் புகுவதாகவும் மணிவாசகப் பிரான் அருள்கிறார்.



***திரு. சாலை ரவி அப்பா அவர்கள்***
***நிறுவனர்: ஆதி மார்க்க நீதி அவை***

**அமுத கலைக்ஞான போதம் - இரண்டாம் காண்டம்:**

அரி அரனும் காணாத திருவடி ரகசியம் பற்றிப் பேசுவதே இல்லறம். **தனக்கு உவமை இல்லாதான் தாள்** என வள்ளுவப் பெருமான் போற்றுவதே திருவடி, அறுபுரிநூல், இல்லறம் என்பதாக உள்ளது. மறதி அற்ற நினைவெனும் ஆன்ம வீட்டினுள் குடியேறியவனே சாகாத சன்மார்க்கி. நாம் அனைவரும் சுக்கிலம் எனும் ஓர் குலத்தில் பிறந்தவர்கள். அவரவர் நாமம் கேட்டதும் முன் வந்து நிற்கும் **நான்** எனும் நம் சொந்த வீடே, புலன் பொறி இயங்க வைக்கும் ஜீவனாக, சத்தியம் என்பதாக, ஆண் பெண்ணற்ற ஒன்றாக உள்ளது. மனமற்று நான் எனும் உணர்வின் மூலம் தன்னுடைய மூல வளநாட்டிற்கு போய் வரும் செயலே மெய்வழி. ரஜோதத்சத் எனும் தாத்து சிபத்தின் ரகசியமே வளரமுதம், பிர்மாபூர்புவஸ்வரோம், அருட்பிரணவம், காயத்ரி, கலிமா, ஐந்தெழுத்து மந்திரம், சிந்தையற்ற தனித் தலைமைப்பதி என்பதாகும். அறம் செய்யும் வீடாகிய ஜீவனே இல்லறமெனும் நல்லறமாக உள்ளது. தந்தையின் மூச்சினுள்தான் மனிதனின் ஆயுள், அறிவு, அந்தஸ்து, ஆஸ்தியின் ரகசியங்கள் பொதிந்துள்ளன என அருளி தோத்திரப் பாடலுடன் அவையை நிறைவு செய்தார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

**24-12-2022 ~ சனிக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. மணிமொழி மஞ்சுநாதன்**

**அங்ங மதிடத்தில் ஐம்புலக்க தவை அடைக்கும் பேரறிவெனக்கருளி...** எனும் **குருமணிமாலை** தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:* சிற்றறிவு பொய்க்கல்வியாகவும், பேரறிவு மெய்க்கல்வியாகவும் உள்ளது. மெய் குருவின் இரக்கத்தால் அறிவை அறிந்தவர்களுக்கு, அங்கமானது 6 ஆக, மூலதாரமாக, ஐந்தெழுத்து மந்திரமாக, அங்கமதில் முதன் முதலாய் உதித்த பொருளாக உள்ளது. மெய் ஆசானின் பேரிரக்கத்தால் ஒரு மொழி கீதையெனும் பூட்டடங்கா சாவி கொண்டு நம் மூன்றாவது கண் திறப்பித்து உபனிடத வைப்பின் செயலை, யுகாந்த னாட்டு செல்வமாக அருளி, மெய்வழி எனும் சன்மார்க்க செயலில் ஏற்றி வைக்கின்றார்கள்.

மெய்ஆசானின் ஓசை கொண்ட முத்தியெனும் நடன மூல மணிப்பதத்தால் நம் அறியாமை அகற்றி, **வாசி** எனும் குதிரையில் ஏற்றி, வைகுந்தம், கைலாயம், மெகராஜ், தெய்வலோகம் எனும் அதி மகோன்னத நிலைகளில் கவனம் பாய்ந்திட வைத்து, அறிவு துலங்கச்செய்து பேரின்ப வாழ்வில் செல்வம் தங்கி குலமேம்பாடாகச் செய்கிறார்கள். அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கே பாதமாகிய வேதம் விளங்கும். அருபமாக விளங்கும் ஆறாவது அறிவை அறிந்தவர்களுக்கே ஐந்து அறிவு வரை உள்ள ஜீவபேதங்களை உணர்ந்து அறிய முடியும். **ஆறறிவதுவே அதனுடன் மனனே** என தொல்காப்பியரும், மனம் அறிவாகும் செயலை, **அறிந்தடைந்த உயிருடலம் தேவராமே** என ஆண்டவர்களும் அருளியுள்ளார்கள்.

**உய்யவே எனக்கும் உலகுய்யவே செய்யவென்று திருவடி தந்தவர்.** நம்மை மேலான நன்நெறியில் புகுத்தாட்டி, இருதய மலரில் குடியேற்றி, காலனை வெல்லும் திருவடி தருபவரே மெய் ஆசான். குருபெருமானின் அடையாளம் இறைவனின் சாயலே. அவர்கள் தங்களின் திருஆலவாய் திறந்து காட்டி நம் நாமத்திற்குரிய ஜீவனைக் கண்டு தொழச் செய்கிறார்கள். எழில் பொன்னுடம்பே என்னாளும் வாழும் அழியாத தேகமாக, குண்டலி சக்தியாக விளங்குகிறது.

*ஜீவசகோதரர் சங்கர்:* தன்னை அறியும் அறிவை அறிவதே ஆதி மார்க்க னீதி அவையின் நோக்கமாகும். எதார்த்த உள்ளத்துடன் குருபெருமானைப் பணிந்து சுத்த தேகத்தில் குடியேறி இறைவன் திருவடி அடைந்த ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர் சரவணகுமரன் நமது நினைவில் கலந்து நீங்காமல் நிலைத்துள்ளார்.

அருட்பெருஞ்ஜோதி என்பது ஆசான் அவர்களின் வாய்மையாக இருப்பதை வள்ளல் பிரான், **என் குருவான மருந்து, என் அறிவுக்கு அறிவான மருந்து, சுகம் நல்கும் வைத்திய நாத மருந்து** என அருள்கிறார். அது பஞ்சமாபாதகங்களில் இருந்து நம்மைக் காக்கிறது. ஆறாம் திருமுறை - குடும்ப கோரம் எனும் பகுதியில் வள்ளல்பிரான் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்கள் சத்ருக்களாக, பேய் கூட்டங்களாக இருப்பதாகக் கூறுகிறார். ஐந்தெழுத்தை ஓதும் பஞ்சபூத பாவிகள் அதிலுள்ள ஒரெழுத்தை அறியார்கள். ஐந்தெழுத்து மந்திரமே அவரவரின் ஜீவனாக, சொந்த மனையாக, பெருங்கவலை தணிக்கும் இல்லமாக உள்ளது. சதாசிவமாக விளங்கும் ஆசானின் அறிவு நிலையில் வைராக்கிய சித்தத்துடன் நின்றால் கங்காளன் பூசும் கவசத் திருநீறு மங்காது பூசி மகிழ்ந்து, பஞ்சாட்சர மேனி படிந்த குல தெய்வமதை னெஞ்சார கண்டு தொழலாம்.

இறைவனை நம் இதயாசனத்தில் காட்டித்தருபவரே ஆசான். அவர்களின் தவ வல்லபத்தால், நம்மையும் கோபுர தரிசனம் காண வைத்து நம் பாவம் போக்குகிறார்கள். அன்னாடு சென்று வரும் ஆசானின் அருளால் அழிந்திடா சூக்குமத்துள் அடங்கி நான்கு தேக

*அகண்ட மண்டலாகாரமான சராசரம் எதனால் வியாபிக்கப்பட்டிருக்கின்றதோ அந்தத் தத்பதம் எவராற் காட்டப்பட்டதோ, அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.*
***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

ரகசியங்களை அறியலாம். ஜீவன் கண்ட ஜென்ம சாபல்ய குலமாக, ஜாதி மனுக்குலமாக, நம்மை ஆக்கி அருள் பாலித்து கொண்டு இருக்கும் குரு கொண்டலின் திருவடி போற்றி வணங்குவோம் என்ற பகிர்வுகளுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

### 25-12-2022 ~ ஞாயிற்றுக்கிழமை ~ கிறிஸ்துமஸ் தின சிறப்பு சபை
### தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

**இணங்கிய சுபாவம் பார்த்து என்னிரு தயத்தி னுள்ளே...** எனும் தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபெருமான் அருளமுதம் :**

**நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன். ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்தைக் காண முடியாது** எனும் பொன் மொழிகள் இளம் தளிர்மேனியரான ஏசுபிரான் அவர்களால் அருளப்பெற்றுள்ளது. வானவர் தூதரான கிறிஸ்துமஸ் தாத்தா இறைவனின் கஜானா பொக்கிஷத்தை நமக்கு பரிசாகத் தருபவர். சத்திய வேதத்திலுள்ள சாலமன், தாவீது நாயகம் அவர்களின் தீர்க்கதரிசனங்களை, சாலை ஆண்டவர்கள் தன் மக்களுக்கு செயலாக வழங்கியுள்ளார்கள்.

**நினைவு அஞ்சலி:** ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர் சரவண குமரன், தன் தூல தேக வாழ்வை விட்டு, **தோன்றின் புகழோடு தோன்றுக** எனும் குறளுக்கேற்ப மறுபிறப்பு பூமியில் புகழோடு தோன்றி, பூர்வஜென்ம புண்ணிய பலன் கைக்கொண்டு புற உலக எண்ணங்களை அகமுகமாகத் திருப்பி, ஆசானின் அன்பகத்தில் குடியேறி, அன்பெனும் சிவமாகிப் பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவருளால் நம் நினைவென்னும் ஆகாயத்தில் சுடராக விளங்குகிறார். அன்னவரின் நினைவஞ்சலியை அவரது தந்தை பழனிவேல், ஜீவசகோதரர்கள், சங்கர், தியாகராஜன், தாமோதரன், வளவன் ஆகியோர் பகிர்ந்ததைத் தொடர்ந்து, நம் அவையின் காணொளிக் காட்சிக்கு வித்திட்டு அதன் மின்னணு சஞ்சிகை வெளியீட்டுக்கு உறுதுணையாக இருந்து தனது சரத்தை சமரசமாக்கிக் கொண்ட சரவண குமரன் ஆண்டவர்களின் திருவடியில் கலந்து, னீங்குறா னேர்மையாளராகி நம் நினைவில் என்னாளும் உள்ளார் என நமது குருபிரான் அவர்களும் தன் நினைவஞ்சலியைப் பகிர்ந்தார்கள்.

**ஏசுபிரான் அவதார சிறப்பு:**

**ஏசுனன் னாத ரெங்ஙள்**
**இருதயக் கனியாம் கன்னி**
**மாசிலா மூன்றாம் வேத**
**மாதவத் தரசர் கோனைப்**
**பாசடை மனத்தோர் செய்த**
**பழிக்கெலாம் பதிலி யற்ற**
**மாசறும் மார்க்க னாத**
**மகதியெம் முதயத் தேவே.** **(ஆதி மான்மியம்)**

இயேசுபிரானின் அவதாரமும் உதயமும் அவரவரின் உள்ளமாகிய மகா மகசூக்கான இருதயத்தைப் பிரகாசமாக கண்டு வணங்கும் செயலாக உள்ளது. அறிவு தான் அவதாரத்தின் அடையாளம்.

**வான்மதிக் கொரல் - திருவாக்கியம் எண் 121 :** சத்திய வேதத்தில் மரணத்தை அதிகமாக நினைப்பவர்களுக்கு ஞானகற்பம் உண்டாகும் என அருளப் பெற்றுள்ளது. மரணத்தில் இருந்து தப்பிக்கும் அறிவு மாண்புடைய மனிதனுக்கே உண்டு. அவர்களே முன் வந்த பெரியோர்கள் அருளிய வேதங்களையும் அதன் பொக்கிஷங்களையும் அனுபவிக்க முடியும்.


Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் விஜயகுமார் :* **சத்திய வேதம்:** இயேசுவின் பிறப்பு என்பது இருதயக்கனி எனவும் அதன் ரகசியம் பற்றி அதிகமாக திருக்குரான் வேதத்திலும் அருளப்பெற்றுள்ளது. இறைதூதரான ஜக்கரியாவின் உற்ற சீடர் இம்ரான், தன் மகவான மரியத்தை இறை பணிக்காக ஒப்புக்கொடுத்த செயலையும், வானவர் தலைவர் ஜிப்ரயீல், கன்னிமரியம் மூலம் ஈஸா நபி படைக்கப் பெறுவதற்கு இறைவனின் நாட்டத்தை அறிவித்ததையும், பத்து வயது கன்னித்தாயின் தேவசூலில் பரிசுத்தப் பிறப்பு பிறந்த குழந்தை பிறந்தவுடன் பேசுவதாகவும், துளசி மாடத்தில் ஸ்ரீ ஆண்டாள் பிறந்ததாகவும், சிவபெருமான் நெற்றிக் கண்ணிலிருந்து முருகப்பெருமான் அவதரித்ததாகவும் பெரியோர்கள் அருளியுள்ளார்கள்.

கிறிஸ்துமஸ் தின அலங்காரமாக -

**சுடர்விடும் நட்சத்திரம்** - அறிவுச்சுடரான அவதார புருஷரின் வருகையையும், காலத்தின் ரகசியத்தையும் ;
**கிறிஸ்துமஸ் மணி** - ஆசானின் னாத ஒலியையும் ;
**செடி அலங்காரம்** - **ஒரறிவாய் விளங்கும் தெய்வம்தான் தானாகி** எனும் நிலையையும்;
**மெழுகுவர்த்தி ஏற்றுதல்** - நானே உலகின் ஒளி என்பதையும் ;
**கிறிஸ்துமஸ் தாத்தா** - பழம் புராதனராகிய குருபிரானே பரிசாக வந்து, பரிசுப் பையான சோலினாப் பை திறந்து ஜீவப்பரிசு வழங்குதலையும் ;
**சிலுவை வடிவம்** - ரோமன் எழுத்தாகிய பத்து, பத்து வயது கன்னியையும் குறிப்பதாக உள்ளது.

**குருபெருமான் அருளமுதம்:**

**விண்ணிலங் கெழுந்து வீசுமின் னொளியே ...**
**இன்னிலை னூலின் செய்யுளு மமைந்த**
**திருபத்து னான்கும் காப்பே**

மாட்டுத் தொழுவத்தில் தேவகுமாரன் பிறந்ததை வால் நட்சத்திரம் மூலம் கண்டு கொண்ட தீர்க்கதரிசிகளின் செயல் கலிமாவின் அட்சரம், சிவமயப் பொருளான ஏகாட்சரம், உலகிற்கு ஒளி நானே என்பதை அறிகின்ற தன்னை அறியும் செயலாகும். திருக்குரானில் இறைதூதர் ஜக்கரியா, கன்னி மரியம் மற்றும் ஈஸா நபியின் பரிசுத்தப்பிறப்பு பற்றி அருளி இருப்பதை யாராலும் மறுக்க முடியாது. **மனம் திரும்புங்கள் பரலோக ராஜ்ஜியம் சமீபமாய் இருக்கிறது.** மெய்ப்பொருள் விடியத் தடையாக இருக்கும் மாயையான மனதைத் தெளிய வைத்து, அறிவில் குடியேற்றி வைக்கும் மெய்ச் செயல் செய்யவே அவதார புருஷர்கள் அனைவரும் வந்தனர். மும்மலம் கருகச் செய்து முச்சுடரான அறிவின் நிலையில் குடியேற்றி வைக்கும் மெய்ச்செயலை னோக்கமாகக் கொண்டதுவே ஆதி மார்க்க னீதி அவை என அருளி தோத்திரப் பாடலுடன் அவையை குருபிரான் நிறைவு செய்தார்கள்.

*பார்வதி! இந்த மனித தூலம் கிருமி கோடிகளால் சூழப்பட்டதும், துர்க்கந்தமுள்ள மலமூத்திரங்களுள்ளதும், சிலேட்டுமம், இரத்தம், தோல் மாமிசம் முதலியவற்றால் கட்டப்பட்டதுமாம். இதில் அபிமானத்தை விட்டுக் குருவைச் சரணாகதி யடையவேண்டுமென்பது பொருள்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

**29-12-2022 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்**

**ஆறிரு சமயத்திற்கும் அறிவுரை தெய்வமாகி...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் உதயமாயின.

**குருபிரான் அருளமுதம்:**

அகம் 6, புறம் 6 என்ற 12 சமயங்களின் தெய்வம் ஒன்றே. மதங்களின் தலையான மூல மந்திரத்தின் செயலை மக்கள் அறியவில்லை. அவரவர் இதயத்தில் ஈசன் விளைந்து விளங்கும் தினமே ராமநவமி, கிறிஸ்துமஸ், கிருஷ்ண ஜெயந்தி. வணக்கத்திற்குரிய ஞான சூரியன் உதயமாகுமிடம் தொண்டர்களின் உள்ளமே. ஈசன் விளைந்து விளங்கும் முகத்திற்கே எமன் அஞ்சுவான். சர்வ மதங்களின் அடினாதம் மறலி கைதீண்டாமையே. ஒரு மெய்ஆசானின் இரக்கத்தால்தான் இறப்பு, பிறப்பு, இறுதியில் வரும் சாவு இவற்றின் ரகசியம் நம்மிடத்தில் இருப்பதை அறியலாம்.

**வான்மதிக்கொரல் திருவாக்கியம் எண் 95 :** சர்வத்தையும் தன் வல்லபத்தால் விளைவித்தும், பரிசுத்த ஜீவப்பிரயாணம் ஆனவர்களைப் போஷித்தும், மற்றவர்களை அழிக்கவும் செய்யும் மண்ணின் தன்மை கெடாதிருக்க பாவிகளை கொளுத்துவது புண்ணியம் என்ற வேதவியாசரின் செயல், பெரியோர்களின் இரக்கத்தால் மெய்வழிக்குள் ஆகி நித்திய உடலைப் பெற்ற மக்களே அறிவர்.

**குருபிரான் அருளமுதம்:** உயிருடன் இருக்கையில் ஏழாம் பிறப்பு எடுப்பதே சொர்கபதி வாழ்வு. அறிவினை அறிந்தோர் ஆண்டவர்களின் வாய்மையுள் ஆகி நித்தம் நடக்கும் இறப்பிலிருந்து மீண்டு, இறவாமைக்குள் ஆகின்றனர்.

*ஜீவசகோதரி லாவண்யா:* **காவலான புராதன வேதியர்...** பாடல் **(குரு ஸ்தோத்திரம்)** வந்த வேதமாகிய ஆசானின் அபயத்தால் நம் அழிவாகிய புலன் வழியில் இருந்து மீண்டு, அறிவு வழி சென்று அறம் செய்ய ஏதுவாகும்.

**குருபிரான் அருளமுதம்:** மெய் மெய்யாக ஆகுவதே செயல். மனிதனுக்கு காவலாகிய அறிவை மெய்வழி ஆண்டவர்கள் **ஆறு ஆதாரம் அறுசுவையுடனே அறிவது உன்னுள் ஆசான் தன்னிடத்தே** என அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:*

**கற்றதனாலய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்** **(திருக்குறள்)**

எழுவகை பொருள்களால் நிறைந்த உன் நெஞ்சகமாகிய நடு வீட்டில் வைத்திருக்கும் புதையலான புராதன சொத்தாகிய நற்றாளைத் தொழ மெய்க்கல்வியைப் பழகி கற்க வேண்டும் என மெய்வழி ஆண்டவர்கள் அருள்கிறார்கள். திருவெனும் அட்சரத்திலுள்ள சாகாத் தலையின் சிறப்பை அறிவிக்கும் **ஒரு நற்றாளே உயிர்மெய் அறிவு** என மெய் ஆசானின் அருளால் அறிபவரே கற்றவர்.

**குருபிரான் அருளமுதம்: சிற்றறிவில் கற்றும் பயன் அற்றவர்க்கு கற்பக தருவென வந்தே வசந்த வா** நாம் பழகும் மெய்க் கல்வியே தன் உயிரை தன் பெட்டகத்தில் வைத்து பூட்டும் பேரறிவின் வழியாகிய மெய்வழி.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகு அணி சித்தர்** - பாடல் **முத்து முகப்படியோ முச்சந்தி வீதியிலே...** சுவாதி நட்சத்திர தின மழைத்துளியில் விளையும் நன்முத்து ஜீவனில் விளைவது போல், மெய் ஆசானின் நாதமெனும் துளி நம்



Copyright © AMNA Trust, Chennai

செவியில் விழுந்து, விளைந்து நாம் அழியாத முத்தாகிறோம். சிரசில் உள்ள முத்தை அறிந்தவர் ஜீவன்முத்தர். ஞானத்திற்கு முதல் வாசற்படியான கருமுத்து நம் இதய கோவிலாக உள்ளது.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* **கிறிஸ்துமஸ் தின நிகழ்வின் சிறப்பு உரை**

இறைவன் அருளும் நித்திய இன்பம் தேடாது அழி இன்பம் நாடுபவனே மனிதன். வைகுந்தம், கைலாயம், மெகராஜ் செல்வதற்கே தன்னை அறியும் இந்நில வாழ்வு என மெய்வழி ஆண்டவர்கள் அருள்கிறார்கள். ஆபிரகாம் பரம்பரையில் வந்தவர்களே யூதம், கிறிஸ்தவம், இஸ்லாம் என்ற சமயங்களை உண்டாக்கினர். கிறிஸ்துவின் பிறப்பை அறிவிக்கும் வால் நட்சத்திரம் - ஆறாம் அறிவு, மரம் - ஓரறிவு, பரிசு - குரு, 10 கட்டளைகள் - பஞ்ஞாட்சரம், பலிபீடம் - நரனை பலியிட்டு தேவனாக்கும் செயல், நல்ல மேய்ப்பர் - ஐந்தறிவு நரனை மேய்த்து ஆறறிவு மனிதனாக்குவது, ஆசரிப்புக்கூடம் - ஆவிக்குரியது, வெண்கல கழுவும் தொட்டி - ஆசானின் னாதம் கொண்டு சுத்திகரிப்பு செய்வது, பொன் விளக்கு - ஏழு அகல் கொண்ட அமானித ரகசியம் என்பதனை உணர்ந்து நித்திய மகிழ்ச்சியை அடைவதுவே கிறிஸ்துமஸ் தின கொண்டாட்டம் ஆகும்.

**குருபிரான் அருளமுதம்**: கர்த்தர் என்பவர் இறைவனை காட்டும் குருவாகிய சர்வேஸ்வரன். சர்வ வேதங்களின் அடினாதமாகிய மரணமிலாப் பெருவாழ்வு, ஆதி மார்க்க நீதி அவையின் செயலாக இருப்பது பரம்பொருள் பரிசுத்த ஆவி தெய்வத்தின் பரிபூரண ஆசீர்பாதம் என அருளி தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையின் நிகழ்வுகளை நிறைவு செய்தார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

## இசை வகுப்புகள்
## தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்

### 04-12-2022 ~ ஞாயிற்றுக்கிழமை

**னம்பிய தன்னுயிர் தற்கொலை செய்வான்**
**னமசிவ இருப்பறியான்**
**தம்பிரான் றவசிதி காம்பர னென்பான்**
**சைவனெ னச்சொல்வான்**
**கெம்பீர மாகவே யறுசுவை கெர்வக்**
**கேடர்கள் னேசம்விட்டே**
**தம்பிரா னேயா னும்மிடம் காவற்**
**பாடது தேடுகின்றேன்**

என்ற ஞான முறையீடு பாடலும், தொடர்ந்து குருஸ்தோத்திரம் பாடல்களும் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று இசை வகுப்பு நிறைவுற்றது.

### 11-12-2022 ~ ஞாயிற்றுக்கிழமை

அமுத கலைக் ஞான போதம் முதற் காண்டத்திலிருந்து -

**பரமனே வுருவெ டுத்துப்**
**பாரிடைக் குருவாய் வந்த**
**துறவலர்க் கரசே காமீல்**
**தொன்மறை புகழும் தேவே**
**அருனடைப் பாதம் னோவ**
**அடிமைக்கா யிரங்ஙி வந்த**
**மறைமணி ஞான வாழ்வே**
**மார்க்கனன் னாதா போற்றி**

**என்னமோ வென்று வும்மை**
**யெண்ணிவிட் டிருந்நே னின்னாள்**
**அண்ணலே அரசே அன்பே**
**அருங்ஙுல விளக்கே னாதா**
**என்னையாட் கொள்ளல் வேண்டு**
**மினிக்கணம் தாளே னையா**
**தன்னகம் துறந்த மூர்த்தி**
**தங்ஙுவ தெங்ஙே தன்னில்.**

என்ற பாடல்களும் அதற்குரிய ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று இசை வகுப்பு நிறைவுற்றது.

குரு வாழ்க ! குருவே துணை !!



Copyright © AMNA Trust, Chennai

# 2022 - டிசம்பர் மாத நிகழ்வுகள்

**07-12-2022 ~ புதன்கிழமை**

ஆதி மார்க்க நீதி அவை அலுவலகம் - நாயகன் இல்லத்தில் குருபிரான் முன்னிலையில் திருக்கார்த்திகை தீபம் ஏற்றி, சிறப்பு சபை நடைபெற்றது. அங்கத்தினர்களுக்கு இரவு உணவு வழங்கப்பெற்றது.







Copyright © AMNA Trust, Chennai

## 18-12-2022 ~ ஞாயிற்றுக்கிழமை

குருபிரான் பவானி (ஈரோடு) விஜயம். அருட்பிரகாச வள்ளலாரின் சன்மார்க்க சங்கத்தை சார்ந்த ஜீவப்பிறவியர்களுக்கு அருளமுத வர்ஷிப்பை வழங்கினார்கள். ஜீவப்பிறவியர்களுக்கு மதிய உணவு வழங்கப்பெற்றது.







Copyright © AMNA Trust, Chennai

**23-12-2022 – வெள்ளிக்கிழமை**

ஜீவசகோதரர் சரவணகுமரன் ஜீவப்பிராயணம் ஆன நாள்.





Copyright © AMNA Trust, Chennai

# 2022ம் ஆண்டு AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை அளித்தவர்கள்

கிரிதரன்
கிருஷ்ணமூர்த்தி
மஹிமா
குமரேசன்
மாதவன்
கோபாலகிருஷ்ணன்
முரளி (மிட்டபள்ளி)
கோபிநாத்
முருகன்
கௌதம்
மோகன்சித்ரா
சசிகுமார் (மிட்டபள்ளி)
ரமேஷ்
சபரீஷ்
ராஜமகேஷ்
சபிதா
ராஜு (மிட்டபள்ளி)
சரவணகுமரன்
ரிஷிவாஸ்
சாந்நினி
லதாஉதயசூரியன்
சிரஞ்ஞீவி
லலிதா
சிவகுமார் (மிட்டபள்ளி)
லோகநாதன் (மிட்டபள்ளி)
சீனிவாசன் (காஞ்ஞிபுரம்)
வடிவேலன்
சுந்தரவடிவேல்
வளவன்
சுந்தர்
வாசுதேவன்
செந்தில்
விமலா
செல்லம்மா
செல்வம்
வெங்கடேசன் (சென்னை)
தனராஜன்
ஜான்சிராணி
தாமோதரன் (சிவகாசி)
ஜித்தின்
தியாகராஜன்
ஜீவானந்நம் (சிவகாசி)
திருமுருகன்
ஜீவானந்நம் (காஞ்ஞிபுரம்)
நாகமணி
ஜெகதீஷ் (திருச்சி)
நாகலிங்கம்
ஜெயபிரகாஷ்
பழனிகுமார்
ஜெய்குமார்
பழனிசெல்வராஜ்
ஸ்ரீதுல்தாஸ்
பழனிவேல்
ஸ்ரீமா
பாண்டிராஜன் (ஆவடி)

AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்ங ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

Account Name: **Aathi Margha Neethi Avai**
Account Number: **50200047470073**
IFSC: **HDFC0000323**
Branch: **Mylapore**



Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு**: இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Shankar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Annual Issue ( 2022 )*